எழுகலை இலக்கியப் பேரவை



இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

பதுமம் பகர்வம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavahaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுடன்

19/7/15

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

பதிவும் பதிவும்



எழுகலை இலக்கியப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்
பதிவும் பகிர்வும்

❑

கை. சரவணன்
ந. மயூரரூபன்
சி. நிஷாகரன்
வேலணையூர் சுரேஸ்
முல்லைக் கமல்
ரீ.ரமணன்

❑

யூலை, 2015

❑

எழுகலை இலக்கிய பேரவை
யாழ்ப்பாணம்.

❑

ஓவியர் ரமணி

❑

நோபிள் பிறின்ரேர்ஸ்
யாழ்ப்பாணம்

❑

விலை 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவாய் நிமிர்ந்த

பு. சத்தியமூர்த்தி
ஆவரங்கால் சுதன்
எஸ். சுதந்திரன்
சி.சிவகரன்
ஜே. பயஸ்ராஜா

ஆகியோருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுரை



கை. சரவணன்



ந. மயூரரூபன்



சி. நிஷாகரன்

எழுத்து என்பது வெறுமனே எழுதுவதல்ல. உணர்வுகளைப் பிரதி செய்து இடம்மாற்றுவது என்பதை ஓரளவு நிறைவான வரை விலக்கணமாக கொள்ளமுடியுமென எண்ணுகிறோம். மேலும் எழுது கின்றவன் தான் சார்ந்த சூழல், சமூகம், என்பவற்றினூடாக இயைந்த வாழ்விலிருந்து பெற்ற, தொட்டுணர்ந்த பட்டுணர்ந்த நெருடல் களை நெறிபிறழாத வகையில் அழகியல் வரிவடிவமாக பதிவுசெய்தல் என்றும் கொள்ளமுடியும். "உண்மை எழுத்து அகவயமான உணர்வின் தூண்டுதலில் சகமனதுடன் தன்னுர்வுகளைப் பரிமாறுவதாக, அடையாள மிட்டுக்காட்டுவதாக அமைதல் வேண்டும்" என்கிறார்கள். இது சமூக நோக்கும், நுண்ணிய நோக்குதிறனும் மொழியை இயல்புகெடாது கையா ளும் திறனும் கைவரப்பெற்றவர்களால் மாத்திரமே சாத்தியப்படும்.

இவ்வாறான வகைப்பாட்டிற்குள் அடங்கக்கூடிய சிலருள் அமை தியான அதேவேளை தீவிரமான, சுயவிளம்பரம் பிடிக்காத ஒருவராக இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களும் இருந்து வருபவர். எண்ணற்ற கலையுலக வாரிசுகளை ஈன்றெடுத்த இணுவையூரின் மைந் தருள் இவரும் குறிப்பிடத்தக்க ஒருவர். மாணவனாக... எழுதுநராக... நிர்வாக உத்தியோகத்தராக... குடும்பத் தலைவனாக... என்ற சமூக நிலை யில் பல படிகளையும் தீவிர வாசகனாக, எழுத்தாளனாக, பத்திரிகை ஆசிரி யனாக சஞ்சிகையாசிரியனாக எனும் பங்கேற்புடன் வாழ்ந்துவருபவர்.

மேலும் இத்தகைய படிநிலைகள் அத்தனையையும் சத்தமின்றியும் ஆர்ப்பாட்டமின்றியும் தாண்டி இளம் எழுத்தாளர்கள் முன்னுதாரணம் கொள்ளக்கூடியவராக விளங்குபவர். தான் ஆற்றிய ஆற்றுகின்ற எந்தப் பணிக்கும் சொந்தங் கொண்டாடி புகழுக்கும் விருதுகளுக்கும் அலை யாத ஒரு துறவி. காலமாற்றங்கள் சூழல் மாற்றங்கள் போன்றன. தன்னையும் தன் எழுத்துக்களையும் சேதமுறுத்தக்கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் தனக்கென சுயகட்டுப்பாடுகளுடன் இயங்கும் இலட்சியவாதி.

கலை, இலக்கிய உலகில் எமக்கெல்லாம் நடைவண்டி தந்து செழுமைப்படுத்தி பிறரறியும்வகை செய்து இணைத்துநடந்துவருகின்ற அதே தவேளை, "இலக்கியத்தை ஒரு தொழிலாக ஏற்றுக்கொண்டு விடாதீர்கள்" எனும் சாமுவேல் ரெய்லர் கொலெரிட்ஜ் (Samuel Tayler Colleridge) எனும் அறிஞர் கூற்றை அடிக்கடி நினைவுறுத்தி கலை இலக்கிய வெளிக்கப்பால் உலகியல் இயங்கு வெளியில் பல்வேறு தராதரத்திலும் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்றளங்களிலும் சுயசிந்தனை, சுயபொருளாதார நிலைப்புள்ளி பற்றி சொந்தக்காலில் பிறர் தயவை எதிர்பார்க்கத் தேவையேதுமற்ற வாழ வழிகாட்டி எமது சுயம் நிறைந்த இருப்புக்கும் வாழ்வுக்கும் அதனாலெழும் நிமிர்விற்கும் காரணமானவர் என்பது பலரறியாதது. எனவேதான் இவரது வாழ்க்கைப் பயணத்தில் முக்கிய திருப்பத்தில் கால் பதிக்கும் இவருக்கு அனைத்து வழிகளிலும் இவரால் செழுமை செய்யப்பட்ட நாம் அவருக்குச் செலுத்தும் ஒரு சிறிய நன்றிக்கடன் முயற்சியாகவே இவ்வெளியீட்டைச் செய்ய முயன்றிருக்கின்றோம்.

இவரது குணஇயல்புகளையும் கண்டிப்பையும் நேரடியாக நன்கறிந்த நாம் "ஏற்றுக்கொள்வாரா? எதையெதையெல்லாம் காரண மாகக் கொண்டு மறுத்துவிடுவார்?" என்பதை இலகுவில் தீர்மானிக்க முடியாத நிலையிலும் இவர் தந்த துணிவுடன் இவரை அணுகினோம். வெளியிட அனுமதி கேட்டோம். வழமை மாறாத புன்முறுவல் மட்டுமே பதிலாக இருந்தது. "அண்ணை பதிவொன்று அவசியமில்லையா? மிக மிக இறுக்கமான சூழலில்கூட முழுமையாக எப்போதும் சுயரூபம், சுயநிலைப் பாடு தவறாமல் வாழ்கிறீர்கள். அதனால்தான்..." நாம் முடிக்கமுன்னரே "அப்ப உயிரோட வைச்சே கல்வெட்டா" முறுவலை உடைத்துச் சிரித்தபடி கேட்டார். தடுமாறிப்போனோம்.



முல்லைக்கமல்

படைப்பாளிகளிடம் ஆக்கங்களைப் பெறுவதற்கு அவர் கற்றுத் தந்த வித்தையை அவரை நோக்கிப் பிரயோகிக்க பலன் கிடைத்தது. இருப்பினும் நிபந்தனைகள் பல. "என்னை நன்றாகத் தெரிந்தவர் களிடம் மட்டும் பொய்ப்புகழுரைப்புகள், வாழ்க வளர்க கோசங்கள், மணிவிழா மணிவிழா நாயகன், மணிவிழா மலர்... என்றவாறான வார்த்தை யாடல்களின்றி பெறமுடிந்தால் அதிகம் பொருளாதார செலவு களின்றி மிகமிக அமைதியாக அடக்கமாக செய்யமுடியுமெனில் இதைப் பற்றி யோசிக்கலாம். செய்யலாம்" சொல்லிக்கொண்டிருக்கும்போதே "செய்வோம்" என்று தொடங்கினோம்.



வேலணையூர் சுரேஸ்

அவரது சம்மதம் மட்டுமே பெரிதாக இருந்தது. நிபந்தனைகள் ஒரு சுமையாக தடையாக இருக்கவில்லை. உண்மை நலிந்துவிடக்கூடாது என்பதில் நாமும் உறுதியுடன் முன்னெடுத்த இப்பணி இப்பதிவேட்டுடன் நின்றுவிடாது தொடர்வோம். இவரது அரவணைப்புடனான வழி காட்டுதலில்...



தே. ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








பொருளடக்கம்

நேர்காணல் 02

வழிகாட்டியோரும் சகபாடிகளும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ் 26
பேராசிரியர் இ. பாலசுந்தரம் 28
பேராசிரியர் சபா. ஜெயராஜா 30
பேராசிரியர் என். சண்முகலிங்கன் 33
பேராசிரியர் க. தேவராசஜா 35
திரு. ம. வ. கானமயில்நாதன்
(உதயன் பிரதம ஆசிரியர்) 37
திரு. பி. எஸ். பெருமாள்
(மூத்த ஊடகவியலாளர்) 38
சைவப்புலவர் சு. செல்லத்துரை 40
பேராசிரியர் வி. பி. சிவநாதன் 42
திரு. க. நடராஜா 44
திரு. எஸ். திருச்செல்வம் (கனடா) 45
கவிஞர் வே. பஞ்சாட்சரம் 47
பேராசிரியர் செ. யோகராசா 48
கலாநிதி ஆறுதிருமுருகன் 51
திரு. கே. ஆர். டேவிட் 53
திரு. சோ. தேவராஜா
(தேசிய கலை இலக்கியப் பேரவை) 61
டாக்டர் ச. முருகானந்தன் 66
திரு. ஆ. இரகுபதி பாலஶ்ரீதரன் 68
திரு. தி. திருநந்தகுமார் (அவுஸ்ரேலியா) 69
திரு. ந. சண்முகப்பிரபு 71
திரு. வ. க. பரமநாதன் (டென்மார்க்) 72
திரு. என். கணேசலிங்கம் 74
திரு. டேவிட் லிகோரி (மீரா பதிப்பகம்) 77
திரு. சு. ராஜன் (ஓவியர்) 78
இணுவையூர் பாஸ்கர் (அமெரிக்கா) 79
திரு. செ. செல்வராஜா 82
திரு. துரைஎங்கரசு 83
திரு. டானியல் சௌந்திரன் 85
திரு. ம. கதிர்காமநாதன் 87
திரு. வை. கதிரமலை
(சமூகசேவை உத்தியோகத்தர்) 89
திரு. ம. சந்திரபோஸ் (பொஸ்கோ) 91
திரு. எஸ். சீவரத்தினம்
(நிர்வாக அலுவலர்) 92
திரு. க. கமலேஸ்வரன்
(பிரதம கணக்காளர்) 94
திருமதி கோகிலா மகேந்திரன் 96
திரு. ச. நகுலேஸ்வரன் 100
திரு. வே. ஐ. வரதராஜா 102
கலாநிதி க. சிதம்பரநாதன் 104
திரு. ராஜநாயகம் பாரதி (பிரதம
ஆசிரியர், தினக்குரல் வாரவெளியீடு) 106
திரு. ச. ராதேயன் 108
திரு. வளவைவளவன் 111
திரு. என். கே. துரைசிங்கம் (பிரான்ஸ்) 115

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து வளர்ந்தவர்கள்

பேராசிரியர் வ.மகேஸ்வரன் 117
கலாநிதி எஸ். ரகுராம் 128
கலாநிதி க. ஸ்ரீகணேசன் 130
ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்
(பிரதம நூலகர்) 134
திரு. ந. லோகதயாளன்
(ஊடகவியலாளர்) 143
திரு. த. சிவகுமாரன் (முகாமையாளர்,
ஆசிரிய வள நிலையம்) 144
திரு.கை. சரவணன் (ஆசிரியர்) 147
வேலணையூர் சுரேஸ் 152
திரு. ரி. குமரன், திரு. ரி. அருட்குமரன் 155
திருமதி ச. கமலநந்தினி
(சுவிற்சர்லாந்து) 158
திரு. இ. அருணகிரிவாசன்
(பிரதி அதிபர்) 164
திரு. நாகசிவசிதம்பரம் (அதிபர்) 165
திரு. செ. செல்வகுமார் (கனடா) 166
திருமதி ஆதிலட்சுமி சிவகுமார்
(சுவற்சர்லாந்து) 168
திரு.சி. கதிர்காமநாதன்
(உளவளத்துணையாளர்) 170
செல்வி தி. சிதம்பரபாரதி 173
திரு. ந. மயூரரூபன் (அபிவிருத்தி
உத்தியோகத்தர்) 176
முல்லைக்கமல் (பிரான்ஸ்) 179
திரு. சி.பீஸ்மன்
(திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்) 183
திரு. சிவப்பிரகாசம் ராஜ்குமார்
(கனடா) 184
திரு. பு. சத்தியமூர்த்தி 187
திரு.வி.பி. யோசப்
(மொழிபெயர்ப்பாளர்) 189
திரு. தே. தவராஜசேகரம்
(பொதுச் சுகாதார பரிசோதகர்) 191
திருமதி காயத்திரி பயஸ்ராஜா
(ஊடகவியலாளர்) 193
திரு. அலெக்ஸ் பரந்தாமன் 194
திரு. ந. ஞானசூரியர்
(உளவளத்துணையாளர்) 198
திரு. ம. சாம்பிரதீபன் (லண்டன்) 203
திரு. சி. நிஷாகரன்
(மாகாண கல்வி அமைச்சு) 206
திரு. க. தே. புரட்சிதாசன்
(ஊடகவியலாளர்) 208

இணுவையூர்சிதம்பரதிருச்செந்திநாதன் சிறுகதைகளுக்கான முன்னுரைகள்

வெட்டுமுகம்
பேராசியரியர் நா. சுப்பிரமணியன் 212
எனனுடையதும் அம்மாவினுடையதும்
பேராசிரியர் கா. சிவத்தம்பி 217
மணல் வெளி அரங்கு
பேராசிரியர் சி. சிவசேகரம் 220

இணுவையூர் சிதம்பாதிருச்செந்திநாதன் எழுதிய முன்னுரை, அணிந்துரைகள்

முல்லைக்கமல் எழுதிய
மனமும் மனத்தின் பாடலும் 223
குழல் மொழிபெயர்த்த
களத்திலே வீழ்வோம் 230
தவராஜா சத்தியன் எழுதிய
செய்தித்துறை ஓர் பார்வை 237
கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய
நிதர்சனத்தின் புத்திரர்கள் 239
க.இரத்தினசிங்கம் எழுதிய
மண்ணின் வேர்கள் 243

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

❑

ஆறுதிருமுருகன்
போஸ்கோ
வ.க.பரமநாதன்
செ.செல்வகுமார்
ச.ராதேயன்
வி.பி.ஜோசப்
ஓவியர் ரமணி
கோபி
நோபிள் சிறி
கு.வித்தியா
மா.ஜோன்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

அவர்களுடனான

நேர்காணல்



நேர்கண்டவர்கள்:

கை.சரவணன்

ந. மயூரரூபன்

சி. நிஷாகரன்

வி. பி. ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்களின் அனேக பக்கங்களை அனேகர் பதிவாக்கியும், பகிர்வாக்கியும் வெளிவரும் இத்தொகுப்பில் அவர் சார்ந்த அகமன பட்டுணர் குறிப்புகளுக் காக அவரை அணுகினோம்.

ஒருவாறு உடன்பட்டபோது கால அவகாசம் போதியளவு அகப்படவில்லை. சிறுசிறு கலந்துரை யாடல்களாக கலந்துரையாடி தொகுத்தபோது இந்நேர்காணல் கிடைத்தது.

அவசரம், அவசியம், காலச்சூழல், இடநெருக்கீடு போன்ற புறக்காரணிகளின் நெருக்கடியினுள் ஒருவாறு தொகுத்ததே இது.

இது ஒருபோதும் முழுமையில்லை. அவரிடம் இருந்து பெறப்படவேண்டிய விடயங்கள் இன்னும் அனேகம் உள்ளன என்ற உண்மை உறுத்த பதிவாக்கியிருக்கிறோம். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளமுடியுமென்ற நம்பிக்கையே இப்போதுள்ளது.

நேர்கண்டவர்கள் சார்பில்
கை சரவணன்.

கை.சரவணன் :

கேள்வி: நீங்கள் எழுதத் தொடங்கிய காலத்தில் நீங்கள்கொண்டிருந்த இலக்கிய மதிப் பீட்டிற்கும் தற்போதைய நிலையில் கொண்டிருக்கும் மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசம் அல்லது ஒத்த தன்மை...

பதில்: எழுதத் தொடங்கிய காலத்தில் எல்லா எழுத்தாளருக்குமுள்ளது போன்ற எழுத வேண்டுமென்ற ஆர்வம் மட்டுமே இருந்தது. ஆரம்பத்திலிருந்த வாசிப்பும் ஒரு வகைப்பட்ட நிலையில் தான். உயர்ந்த இலக்கியங்கள் அப்படிப் பார்க்கேல்லை. சமூக ரீதியான சமூக சிந்தனையுள்ள கதைகள் எழுத வேண்டும் என்ற தொனிப் பொருளிருந்ததே தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. அதனால் தான் சமூக சிந்தனையில்லாத கதைகளை ஒரு காலத்திலும் எழுதவில்லை. எல்லாப் படைப் புக்களிலும் அதுதான் இருந்தது. அதனால் உயர்ந்த படைப்புக்கள் என்ற எண்ணப்பாடுகளிருக்கவில்லை. ஆனால் வளர வளர வாசிப்புகளினூடாகவும் கலந்துரையாடல்கள் மற்றும் கருத்துக்கள் விமர்சனங்களுக்கூடாகவும் தான் மாற் றங்கள் ஏற்பட்டன. ஆனால் ஆரம்ப அந்தத் தளம் அப்படியேதான் உள்ளது. படைப்பு மனரீதியாக அந்த நிலையில் தான் இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. மயூரரூபன்:

கேள்வி: நீங்கள் வளர்த்துக் கொண்ட என்று சொல்லும் போது நீங்கள் வளர்ந்த தளம் நீங்கள் எழுதத் தொடங்கிய சூழலுக்கும் இப்போ உள்ள சூழலுக்கும் இடையில் வித்தியாசமிருக்கிறது என்று நினைக்கிறேன். எழுதத் தொடங்கிய காலத்தில் நீங்கள் யதார்த்தமான மக்களுடைய பிரச்சினைகளை மக்களுக்கே சொல்கிற என்று சொல்லுகிறீர்கள். அப்படியாக இருக்கும் போது இசங்கள் கோட்பாடுகள் தத்துவங்கள் பற்றிய தங்களுக்கேற்பட்ட பாதிப்புகள் எப்படியானவை?

பதில்: இன்று வரை அது தொடர்பான எந்தப் பிரச்சினையுமே ஏற்படவில்லை. நான் என்னைக் கோட்பாட்டுக்குள் புகுத்த வேண்டுமென்றோ அது தொடர்பான அறிதல் புரிதல் எனக்கு இருக்க வேண்டும் என்றோ நினைக்கவில்லை. அது பற்றிய விளக்கம் ஒன்று இருக்க வேணும் என்கிற உணர்வு இருக்கிறது. ஆனால் அதனை படைப்பு ரீதி யாக சொல்ல வேணும் என்கிற சிந்தனையோ செயற்பாடுகளோ இருக்கவில்லை. நாங்கள் எந்த படைப்புக்குள்ளும் இந்தக் கோட்பாடு வரவேணுமோ அல்லது இதை தூக்கி நிறுத்த வேணுமோ அதைப் பற்றி தூக்கிச் சொல்ல வேண்டுமென்ற உணர்வு இல்லை. கதைக்கு எது தேவையோ அதைத்தான் செய்ய வேணும். சிலவேளை மறை முகமா ஏதாவது வந்திருக்கோ எனக்குத் தெரியாது. ஆனால் அப்படி நினைச்சு எந்தப் படைப்பையும் படைக்கிறேல்ல.

ந. மயூரரூபன்:

கேள்வி: உங்களுக்கு ஆதாரமான படைப்பு அல்லது படைப்பாளிகள் இருக்கிறார்களா? நீங்கள் வளர்ந்து வரும் காலப்பகுதியில் நீங்கள் அதிகம் விரும்பி அல்லது உங்களை பாதித்த மாதிரி ஏதாவது படைப்புக்கள் பற்றி கூறுங்கள்?

பதில்: எல்லாருடைய படைப்புகளையும் வாசிக்கும் ஆர்வமும் அக்கறையும் எப்போதும் உண்டு. என்னைக் கூட பாதித்தது என்றால் என். கே. ரகுநாதனின் ஒரு கதை இருக்கு. 'நிலவிலே பேசுவோம்' என்பது அதன் தலைப்பு எப்போதும் நினைச்சா ஞாபகம் வரும். அதே மாதிரி "பங்கர்வாடி" என்ற உருது நாவலொன்று. அது எத்தனையோ தரம் வாசித்து விட்டேன். முதல் Library இல் எடுத்து வாசித்தது இந்தியாவுக்கு போன வரிடம் சொல்லி வாங்கின்னான். நான் எத்தனையோ தரம் வாசித்தனான். அது மாத்திரமில்லை நான் சொல்லி எத்தனையோபேர் வாசித்தவர்கள் அது ஒரு இளைஞர் ஆசிரியர் நியமனம் பெற்று பின் தங்கிய கிராமத்துக்கும் போகிறார். போய் அங்கு படிப்பிப்பது. ஆடு மேய்க்கிறது இடையர் வாழுற கிராமம். அந்த நாவல் வாசிக்கிறபோது சாணகம், ஆட்டு மூத்திரம் எல்லாம் மணக்கும். அந்த Feeling இருக்கும். அப்படி ஒரு அற்புதமான நாவல். மற்றபடி எல்லாப் படைப்புகளுமே ஏதாவது ஒரு அனுபவத்தைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை.சரவணன்

கேள்வி: உங்களின் சமகாலத்தில் உங்களோடு எழுதத் தொடங்கிய எழுத்தாளர் என்று யாரைச் சொல்ல முடியும்?

பதில்: அப்படிப் பார்க்கேக்க கனபேர். டொக்ரர் முருகானந்தன், வடகோவை வரதராஜன், புலோலியூர் இரத்தினவேலோன், கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, தமிழ்ப்பிரியா,சுதாராஜ், காவலூர் ஜெகநாதன், இன்னும் பலர் உள்ளனர்.

சி. நிஷாகரன்:

கேள்வி: பேச்சு வழக்கிலே இப்ப இருக்கு. வெற்றிப் படைப்பாளர் அல்லது இத்தனை விருதுகளை வென்ற படைப்பாளர் என்று அப்படியான அறிமுகங்களுக்கூடாக படைப்பாளரை வகைப்படுத்தக் கூடிய தன்மைகள் இருக்கிறதா அல்லது அப்படிச் செய்யலாமா?

பதில்: விருதுகள் பட்டங்களுக்கூடாக படைப்புக்களை அறிமுகப்படுத்தும் தன்மையும் அல்லது குறிப்பிட்ட சிலரை வெற்றிப் படைப்பாளிகள் என்றோ அப்படி ஒரு வரையறைக்குள் கொண்டு போவது ஏற்புடையதா அல்லது சாத்தியமானதா? என்பது ஒரு நல்ல கேள்வி. விருதுகளுக்காகவோ பட்டங்களுக்காகவோ அல்லது மற்றவர்கள் போற்ற வேணும் எண்டதுக்காகவோ படைப்பு நான் படைக்கிறது மில்லை அப்படியான எதிர்பார்ப்பும் எனக்கில்ல. எனக்கு தோன்றுறதை என்னளவில எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்யுறதுக்கான அக்கறையும் கரிசனையும் இருக்கே ஒழிய மற்றவர்கள் பற்றி அக்கறையுமில்லை. சிந்திப்பதுமில்லை மற்றப்படி இலக்கியம் ஒரு ஓட்டப்போட்டியில்லை. நாங்கள் முன்னுக்கு வந்தது மற்றவை பின்னுக்கு வந்தது என்று சொல்லுறதுக்கு. படைப்பு ரீதியாக ஒவ்வொருவரின் அபிப்பிராயம் ஒவ்வொரு மாதிரி. அழகுக்கு இருக்கிற வரைவிலக்கணந்தான் படைப்புக்கும் கொடுக்கலாம். நான் பார்த்து அழகாக இருக்கெண்டு சொல்லுறத இன்னொரு ஆள் ஏற்றுக்கொள்ளோணும் எண்டில்ல. நான் ஒரு பெண்ணின் முகத்தைப் பார்த்து அழகெண்டு சொன்னால் இன்னொரு ஆள் நடையைப் பார்த்து அழகெண்டு சொல்வார். பாக்கிற முறைகள் அப்பிடி. ஒவ்வொருவர் விரும்பிற பல விஷயங்கள் இருக்கு. அப்ப நாங்கள் இதை மதிப்பீடு செய்யேலாது வரையறை செய்யேலாது. இது இப்படித்தான் என்று முடிவு கட்டேலாது. இது என்னுடைய அபிப்பிராயம். நான்நெடுக சொல்லுறனான். 40 பேருக்குள்ள முதற்பரிசு கொடுக்க வேணுமெண்டு சொன்னால் அதுக்குள்ள கூட எடுக்கிறவருக்குத்தான் முதற்பரிசு.

வி.பி.ஜோசவ்

கேள்வி: இலக்கியங்களுக்கான / படைப்புக்களுக்கான போட்டிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: போட்டி படைப்பாளிகளுக்கு ஒரு ஊக்குவிப்பை கொடுக்கலாம். இப்ப என்னெண்டு சொன்னால் ஆரம்ப கட்டத்தில் ஊக்கத்தை கொடுத்தாலும் முழுமையான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கிய மதிப்பீட்டுக்கு அது உதவாது. பாடசாலை மாணவர் மட்டத்தில் அது ஒரு உந்து சக்தியைக் கொடுக்கிறதுக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தலாமே ஒழிய ஒரு நல்ல படைப்பை கொண்டு வாறதுக்கு போட்டி வைப்பது பொருத்தமானது இல்லை.

கை. சரவணன்:

கேள்வி: உங்கட இளமைக் காலத்தைப் பற்றி நிறையச் சொல்லலாமென்று நினைக்கிறன். நீங்கள் எப்படி வாசிச்சியள் எப்படி எழுதினீங்கள் அதாவது உங்களுடைய உள் நுழைகை அதையும் இரண்டாக நோக்கலாமென நினைக்கிறன். அதிலயுமொன்று உங்கட வாசிப்புதளம் மற்றது எழுத்துத்தளம் அல்லது வெளிப்பாட்டுத் தளம். இதை யெல்லாம் எப்ப எழுதத் தொடங்கினீங்கள் எண்டு சொல்லுறது நல்லது. ஏனென்டால் அது இளந்தலை முறைக்கு கூடத் தேவைப்படும். வாசிச்சது எப்ப எழுதத் தொடங்கினது எப்ப?

பதில்: நான் நினைக்கிறன் 5ம் 6ம் வகுப்பு படிக்கிற காலத்திலை மன்னாரில இருந்தன். அடிப்படைக் காரணமெண்டு சொன்னா தகப்பனார் ஒரு all rounder. all rounder எண்டு சொன்னா நாடகம் நடிப்பார். வில்லுப்பாட்டுச் செய்வார். கதாப்பிரசங்கம் செய்வார். மன்னாரில ஒரு நாடகக் கலாமன்றம் இருந்தது. அதில எல்லா அரச ஊழியர்களும் இருந்தனர். அங்க சித்திவிநாயகர் கோயில் இருந்தது. அதையொட்டித்தான் மன்றச் செயற்பாடுகள் இருந்ததால் teachers, எல்லா officers, Doctors எல்லாரும் ஒண்டாச் சேந்து அந்த நாடகமன்றத்தை அமைத்தனர். அவர்கள் எல்லோரும் அமைச்சூர், கலைஞர்கள் எண்டுதான் சொல்லுறது. அப்ப அகில இலங்கை கலைக் கழகமெண்டொரு அமைப்பு இருந்தது. அதில் இந்த நாடகங்களைக் கொண்டு போய் மேடையேற்றி முதற்பரிசெல்லாம் பெற்றிருக்கினம். அதில அப்பா நடிக்கிறவர். அதுகளைப் பாக்கிறதால அந்தத் துறையில் interest கூட ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மன்னார் சித்தி இந்துக் கல்லூரியில் தான் படிச்சனான். 5ம் வகுப்பு படிக்கேக்க நாடகமொண்டெழுதி அப்ப சைவப் புலவர் செல்லத்துரைதான் வகுப்பாசிரியர். அவரைக் கொண்டுதான் மேடையேற்றினது. அப்படி அந்த அனுபவம். அப் பவே இந்த வாசிப்புப் பழக்கம் இருந்தது. பிறகு அப்பா யாழ்ப்பாணத்துக்கு இட மாற்றம் பெற்று வந்தார். நாங்களும் வந்தோம். சுன்னாகம் ஸ்கந்தாவில் படிப்பு. பாட சாலைக்கு Carல தான் போறது. அப்ப Car வரும் வரைக்கும் ஸ்கந்தாவில் முன் னுக்கு மண்டபத்தில நிற்பம். நிறையப் பேர் நிப்பாங்கள். ஒருத்தன் சித்திரக்கதை வைச் சிருப்பான் எல்லாம் சின்னப் பொடியள்தானே ஒரு ஆள் ராணிகொமிக்ஸ், இன் னொராள் சித்திரக் கதை, அம்புலிமாமா வைச்சிருப்பான் அதில மாறி மாறி வாசிக் கிறது. அப்ப எல்லாம் வாசிப்பம். பி.டி.சாமி மர்மக் கதைகள் எல்லாம் வாசிச்சிருக் கிறன். நல்ல கட்டுரைப் புத்தகங்கள், சிறுகதைப்புத்தகங்கள் எல்லாம் வாசிக்கி றனான். அப்பிடி வாசிக்க வெளிக்கிடேக்க பள்ளிக்குடத்தில சிவசம்புப் பண்டிதர் எண்டொருவர் தமிழ்படிப்பிச்சவர். அப்ப என்ர கட்டுரையள் நல்லா வரத் தொடங்கி விட்டுது. கட்டுரை நல்லாயிருக்கு என்று அவர் ஏனய மாணவர்களுக்கும் தூக்கிக் காட்டுவார். கட்டுரை நல்லா வரத் தொடங்கினவுடனே பிறகு அந்த வளர்ச்சி வந்து 1972ம் ஆண்டு என்ர 1வது சிறுகதை எழுதினான்.

கை. சரவணன்:

கேள்வி: சிறுகதையின்ர பேர்...?

பதில்: காதலோ காதல்... காதல் கதை. அது என்னண்டு சொன்னா கடிதத்தில தொடர்பு கொள்ளுகினம்... பிறகு சந்திக்கப் போனா இரண்டு பேரும் வயதான ஆக்களாயிருக் கினம்.. அதுதான் கதை பிறகு 74ம் ஆண்டு என்ர கதை வீரகேசரியில பிரசுரமானது. அப்ப வீரகேசரியில கதை பிரசுரமாகிறது பெரிய விசயம்.
தினகரன், சிந்தாமணியில் என்று எல்லாப் பத்திரிகைகளில் எனது கதை பிரசுரமானது. ஆனால் வீரகேசரியில் பிரசுரமாகவில்லை.

ந. மயூரரூபன்:

கேள்வி: குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். இப்ப வீரகேசரியில கதை பிரசுரமாகிறது பெரிய விசயமா சின்ன விசயமா?

பதில்: வாறன் சொல்லுறன். எல்லாமே அந்த நேரச் சூழல்தான் தீர்மானிக்கும். அப்ப கதை அனுப்பினால் கனகாலமா கதை பிரசுரமாகவில்லை. நேர போனால் வாரமலர் ஆசிரியர் பொன் இராஜகோபால் எனது கதையின் தரம் பற்றிக் குறிப்பிட்டவர் பிறகு மூர்த்தி என்டு ஒருவர் இருந்தவர்.. மூர்த்தி இந்தா இத ஒருக்கா பாரப்பா என்று அவரி டம் கதையைக் கொடுத்தார். பிறகு கதை பிரசுரமானது ஆனால் அது என்ர கதையா வரேல்லை. கதையின் தலைப்பும் மாற்றப்பட்டு கதையே வேற மாதிரி...
எனக்கெண்டா.. என்ர கதையெண்டு ஏற்றுக் கொள்ளுற மாதிரி அது இருக்கேல்லை. ஆனால் நான் விடேல்லை. பிறகு ஒரு கதையை எழுதி அனுப்பினேன். அதுவும் அதற்கு பிறகு பலகதைகள் வீரகேசரியில் பிரசுரமாயின. பிறகு என்ன நடந்ததெண்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கதைக்கு நடவடிக்கை எடுத்த அதே ஆசிரியர் சொன்னார் இனி வீரகேசரி தவிர வேற ஒண்டுக்கும் எழுதக்கூடாது எண்டு.

ந.மயூரரூபன்

கேள்வி: இதே நேரத்தில் கல்விச் சூழலில் பாடசாலையில் இலக்கியத்துக்கான ஊடாட்டம் எவ்வாறு உள்ளது.

பதில்: பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு பாடசாலைப் படிப்பினை விட தனியார் கல்வி நிலையங்களின் படிப்பு அதனைவிட Personal class எனப் போகின்ற புறச் சூழலில் பெற்றோரும் தமது பிள்ளைகள் கல்வியில் உயர்ந்த நிலை அடைய வேண்டுமென்ற அக்கறையுடன் இருக்கின்றனர். அதனால் கலை இலக்கியச் செயற்பாடுகளில் அவர்களுக்கு அக்கறை இல்லை.



பாடசாலைகளில் கூடுதலாக தமிழ்த்தின போட்டிகள், நிகழ்வுகள் என்பவற்றை மையமாகக் கொண்டு கலை இலக்கிய செயற்பாடுகள் சிறு அளவில் இருப்பதோடு அதைவிட பாடசாலையில் இருக்கும் இசை, நடன ஆசிரியர்களுக்கு ஏதாவது தொரு வேலை கொடுக்க வேண்டுமென்ற அளவிலேயே காணப்படுகிறது. அதனை மேம்படுத்தும் தொடர் செயற்பாட்டுக்கும் சூழல் இல்லை. இதற்கு தனியே பாடசாலைகளில் மட்டும் குறை சொல்ல முடியாது. அதற்கான புறச்சூழல் ஓரிடமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. நிஷாகரன்:

கேள்வி: நீங்கள் சொன்னதோடு இணைந்து. நீங்கள் வளர்ந்ததாகச் சொல்கிற வாசிப்புச் சூழல். இப்போதைய தலைமுறையில் எவ்வாறு மாற்றம் கண்டிருக்கிறது?

பதில்: இன்று computer, internet போன்றவற்றின் நெருக்கம் காரணமாக வாசிப்பு இன்று பிரச்சினையாக உள்ளது. சாதாரண பத்திரிகை வாசிப்புக்கூட இல்லை. அதை ஒழுங்குபடுத்துறதுக்கான மனோநிலையில் பெற்றோரும் இல்லை ஏனென்றால் அவர்களும் அதே நிலையில் தான் இருக்கிறார்கள். சமகாலத்தில் வளர்ந்து வருகிற தலைமுறை, குடும்பங்கள், பிள்ளைகள் ஒருகாலமும் நிரப்ப முடியாத பள்ளமாகவே போய்க்கொண்டிருக்கிறது.

வி.பி. ஜோசப்:

கேள்வி: இலக்கிய முயற்சி, வெளியீட்டு முயற்சி, வெளியீட்டாளருக்கும் சமூகத்திற்குமிடையிலான உறவு தனிப்பட்ட பொருளாதார நிலை என்பன மிக மோசமான நிலையில் காணப்படுகிறது. இதற்கு உங்களிடம் ஏதாவது மாற்றுத் தீர்வு உண்டா?

பதில்: எங்களுக்கு இப்போது, இப்போதைய சூழலில் அச்சு வெளியீடுகள் என்பன மிகச் சுல பமானதாகி விட்டன. அதுவும் ஒரு பாதிப்பு. நல்ல படைப்புக்கள் வைத்திருப்பவர் களுக்கு அதைக் வெளிக் கொண்டு வர முடியாது. வசதியுள்ளவர்களுக்கு படைப்பு விடயங்கள் குறைவானதாக இருக்கும். இதுவும் ஒரு பிரச்சினைதான்.
முன்னர், பத்திரிகைகள் சுய ஆக்கங்களுக்கும் தனிப்பட்ட முயற்சியில் எழுதுபவர்களின் ஆக்கங்களுக்கும் இடம் கொடுத்து வந்தன.
இப்போது பத்திரிகைகள், பக்கங்கள் நிரப்புவதற்காக இணையங்களில் வருகின்ற விடயங்களை எடுக்கின்றன. எங்கள் மண்ணுக்கு பொருத்தமில்லாத சூழலுக்கு பொருத்தமில்லாத விடயங்களை உட்புகுத்துகின்றன. இதனால் படைப்பாளிக்கும் பத்திரிகைக்குமான உறவு என்பது இப்போது பிரச்சினையாக இருக்கிறது. எப் போதும் பத்திரிகைக்கும் படைப்பாளிக்குமான உறவென்பது மிக நெருக்கமாக இருக்க வேண்டும்.
படைப்பாளியின் படைப்புகள்தான் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வரும்போது ஒரு உத்வேகம் வரும். அப்படியான புறச்சூழல் இப்போது இல்லை.

ந. மயூரரூபன்:

கேள்வி: ஒரு பத்திரிகையாளர் / பத்திரிகையின் ஆசிரியராக எழுதுவதற்கும் ஒரு படைப்பாளி யாக எழுதுவதற்குமிடையிலான வேறுபடுத்தல் / வேறுபடுதல்.

பதில்: குணாம்சம் ஒன்றுதான். பத்திரிகையாளராக சொல்லும் முறைக்கும் தனிப்பட சொல்லுகிற முறைக்கும் வேறுபாடு இருக்கும். பத்திரிகையாளராக சொல்கிறபோது சில விடயங்களைப் பொதுமைப்படுத்தி சில விடயங்களைச் சொல்லாமலும் சொல்லக் கூடியதாக இருக்கும். தனிப்பட அப்படி இல்லை. தனிப்பட்டவர்களைவிட பத்திரிகைகளுக்கு சமூகப் பொறுப்பு இருப்பதால் பத்திரிகை ஆசிரியர் மிகக் கவன-மாகச் செயற்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. நிஷாகரன்

கேள்வி: ஒரு படைப்பாளி ஒரு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் இருப்பது எந்தளவிற்கு சவாலானது?

பதில்: சுயமானசெயற்பாட்டுவேகங்கொண்டஒருபடைப்பாளிக்குஅதுதடைதான். ஆனால் எங்கள் புறச்சூழல் என்ன செய்கிறது என்றால் அதற்குரிய இடத்திற்கு பொருத்தமான ஒருவர் இல்லாத போது படைப்பாளி அதைச் செய்ய வேண்டி ஏற்படுகிறது.

வி.பி. ஜோசவ்

கேள்வி: ஆசிரிய பீடம் என்பது ஆக்க இலக்கியவாதிக்கு ஒரு கடிவாளமா?

பதில்: சில வேளைகளில் கடிவாளமாகவும் சில நேரங்களில் உந்து சக்தியாகவும் அமையும்.

கை.சரவணன்:

கேள்வி: இப்போது இன்னொரு விடயம், நீங்கள் ஒரு ஆசிரிய பீடத்திலிருந்து எழுதி வருகிறீர்கள். ஒரு படைப்பிலக்கிய வாதியாக ஒரு சிறுகதையோ, ஒரு கவிதையோ நீங்கள் எழுதுவீர்கள். அப்போது எழுத்து முறை ஒரு சம்பவத்தை உணர்ந்து கொள்கிற தன்மை நான் நினைக்கிறேன் ஒரே எழுத்து நடைக்குள். அல்லது ஒரே தன்மைக் குள்ளால் உணர்ந்து கொள்வதற்கு பிரச்சினையாக இருக்குமென்று நினைக்கி றேன்...?

பதில்: ஆசிரியர் என்ற வகையில் எங்களுக்குப் பெரும்பாலும் ஆசிரியர் தலையங்கம் தான் பிரச்சினையாக வரும். ஆசிரியர் தலையங்கம் ஒரு பொது விடயத்தை பொதுவாக எல்லோரும் விளங்க வேண்டும் என்ற ரீதியில் தான் எழுதுகிறோம். படைப்பு என்பது அந்தத் தளத்தில் தான் எழுத வேண்டும். படைப்பு அந்த படைப்பிற்குரிய குணாம்சம், மொழிநடை, அந்தச் சித்தரிப்புக்கள் எல்லாம் அதற்குரிய வகையில்தான் இருக்க வேண்டும். ஆனால் இதில் அந்த சித்து விளையாட்டுக்களை காட்ட முடியாது.

ந. மயூரரூபன்:

கேள்வி: ஒரு ஆசிரியர் தலையங்கம் நீங்கள் எழுதுகிறீர்கள் அந்த, ஒரு படைப்பாளிகளுக்குரிய சில முத்திரை இருக்கும் தானே...

பதில்: ஓம் அது அதற்குள் சில இலக்கியச் செழுமை வரப் பார்க்கும்.. கிட்டத்தட்ட ஒரு இலக்கியவாதி எழுதுகிற ஆசிரிய தலையங்கத்துக்கும் இலக்கியவாதியில்லாத சாதாரண ஆள் எழுதும் ஆசிரிய தலையங்கத்துக்கும் வித்தியாசம் வரும். ஆனால் அதில் பிரதானமான விடயம் பத்திரிகைகளில் நாம் முதலில் என்ன பார்க்க வேண்டும் என்றால், நாங்கள் போட்டு விட்டுக் குழம்புவது அதுதான் இது அவனுக்கு விளங்குமா? அதுதான் முக்கியம். நான் என்னுடைய கெட்டித்தனத்தைக் காட்டுவதல்லப் பிரச்சினை. எங்கள் எல்லோரிடமும் உள்ள பிரச்சினை என்னவென்றால் என்னுடைய கெட்டித்தனத்தை அங்கே காட்டலாமா என்று பார்க்கிறது. இது வந்து பொதுசனத்துக்கு விளங்க வேண்டும். அதுதானே முக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை எங்கேயென்றால் சமூகத்தில் அடிமட்டத்திலிருப்பவனிடத்தும் போகும். அவனுக்கும் இது விளங்க வேண்டும். அவன் பின்னால் இதனைக் கொண்டு போய் மொழி பெயர்க்க முடியாது.

சி. நிஷாகரன்:

கேள்வி: ஒரு படைப்பாளியின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு குணங்கள் என்பவற்றுடன் பொதுக் கொள்கை, பொதுக் கருத்து, பொதுச் செயற்பாடு எனும் தளங்களுள் இயங்குவது தொடர்பான தங்களது கருத்து நிலை யாது?

பதில்: ஒரு தனிப்பட்ட பிரச்சினை அல்லது விருப்பு வெறுப்பு படைப்பாக்கப்படக் கூடாது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அது உனக்கும் எனக்குமுள்ள பிரச்சினை. அதையே பொதுவாக்க முனையக் கூடாது. எனக்குள்ள தனிப்பட்ட குணம் வேறு. பொது நீதி, பொதுச் செயற்பாடு என்று வரும் போது தனிப்பட்ட ரீதியாக செயற்பட முடியாது. இவற்றைக் கவனத்தில் கொள்ளும் போதுதான் நிலைத்து நிற்க முடியும். நிமிர்ந்து நிற்க முடியும்.

கை. சரவணன்:

கேள்வி: ஒரு படைப்பாளி, அவரது எழுத்து அவரது கொள்கை எப்போதும் ஒரே தளத்தில் பயணிக்க வேண்டுமா? அல்லது சமாந்தரத்தள தெரிவுகளேதும் உள்ளனவா?

பதில்: அதேன்... அதேன்.. ஒன்றுடனொன்று தொடர்பு பட்டவை தானே?

ந. மயூரரூபன்:

கேள்வி: இதை மாறிநிற்கும் சூழ்நிலையை நீங்கள் அவதானிக்கவில்லையா?

பதில்: எங்களது சூழலில் அடிப்படை பிரச்சினை இதுதான். எல்லாமே அங்கீகாரம்-அங்கீகாரம்சமூகத்தில்முதன்மைநிலையைப்பெறுவது. சமூகத்தில்மதிப்புநிலையைப் பெறுவது அதுதான் இங்கு முதன்மையான பிரச்சினை. அதற்காகத்தான் அதற்கான துணைக் காரணங்கள் எனக்கான ஒரு நிலைப்பாட்டைப் பெறுதல், அதனை மேம்பாடடையச் செய்ய என்னென்ன செய்யமுடியுமோ அதைச் சேர்த்தல், என்ன? கோயில் நிர்வாகத் தலைவர், அந்த இது அல்லது சமாதான நீதவான், இலக்கிய வித்தகர், கலாபூஷணம் இப்போ இல்லாவிடில் பெயர் போடும் போது இலக்கிய வித்தகர் கலாபூஷணம்... எல்லாம் எதற்காக?

கை. சரவணன்:

கேள்வி: இங்கே, இந்த நீங்கள் குறிப்பிடுகின்ற அங்கீகாரம் பெயர், பட்டங்கள் எனும் தேவைகளுக்காகவே ஒருவர் இயங்குகிறார் என்றால் அந்த அங்கீகாரம் யாரால் யாருக்கு வழங்குவது? எந்தத் தகுதிநிலையில் இருக்கிறவர்களால் எந்தத் தகுதி நிலையிலுள்ளவர் பெறுவது?

பதில்: இது.. என்னவென்றால், ஒரு கிராமத்திலிருக்கின்ற நான் இன்னார் நான் என்னென்ன நூல்களை வெளியிட்டிருக்கிறேன், இன்ன இன்ன வேலைகளைச் செய்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக இலக்கிய தளத்தில் பல சேவைகள் செய்திருக்கிறேன் என நானே எழுதி அதை அந்தப் பிரிவு கிராம சேவையாளரிடம் கையொப்பம் பெற்று தொடர்ந்து பிரதேச செயலரிடம் சிபாரிசு பெற்று அதை உரிய திணைக்களத்துக்கு அனுப்பி அதன்மூலம் எடுக்கின்ற பட்டத்துக்கு என்ன பெறுமதி? உண்மையில் என்ன நடக்க வேண்டுமென்றால் இந்தக் கிராமத்தில் இப்படியொருவர் இருக்கிறாராம் என்று தேடி வந்து நீங்கள் இவ்வளவெல்லாம் செய்திருக்கிறீர்கள் என்று அறிந்திருக்கிறோம் உங்களை நாங்கள் பாராட்டப் போகிறோம் என்று செய்வதுதான் உண்மையான பாராட்டும் கௌரவமும் ஆகும்.

கை. சரவணன்:

கேள்வி: இவ்விடத்தில் பத்திரிகைத் துறையில் ஆசிரியராக இருந்த அந்த அனுபவத்தில் நீங்கள் சொன்ன மாதிரி மொழிக் கட்டிறுக்கம் வாய்ந்த படைப்புகள் அல்லது அந்தப் படைப் பாளிகளை ஒரு பத்திரிகையாசிரியர் என்ற வகையில் உங்கள் பத்திரிகையூடாக மக்களுக்குச் சொல்லத் தேவையான கருத்துக்களை சொல்ல வைப்பதில் நீங்கள் எடுத்துக் கொண்ட உத்தி...

பதில்: முதலாவது பிரச்சினையே இதனால்தான் வருகிறது. ஒரு உதவி ஆசிரியர் இருந்தார். நான்தானே கொண்டு வந்தது. சத்திய மூர்த்தி அரசியல் கட்டுரை எழுதுகிறானென்று அவரும் ஒரு அரசியல் கட்டுரை எழுதினார் அப்போ அதனை ஈழநாட்டில் போடவில்லை. அதன் மொழி நடையும் தலைப்பும் அப்படியே போட முடியாது. ஆனால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் எனக்கென்றால் நான் அவரைப் புண் படுத்தவும் விரும்பவில்லை. கொஞ்சம் "எடிட்" பண்ணி மாதமலரில் போட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அவருக்குப் பிடிக்கவில்லை. இது ஒரு பிரச்சினைதான். என்னென்றால் சிலது சிக்கல், பொது விதி பொதுச் செயற்பாடு என்று வரும் போது கனபேருடன் முரண் பாடுகள் வரும். எங்களுக்கு output தான் முக்கியம்.

ந. மயூரரூபன்:

கேள்வி: நீங்கள் முதற் சொன்னதற்கும் இந்த இடத்திற்கும் ஒரு முரண்பாடு தோன்றுகிறது அது என்னவென்றால், பத்திரிகை ஆசிரிய பீடத்திலிருக்கிற ஆசிரியர் தனக்கென்றொரு உறவு வட்டம் அல்லது ஒரு படையணி மாதிரியான ஒரு படைப்பாளிகளைக் கொண்ட ஒரு படையணியை உருவாக்கி வைத்திருக்க வேண்டும். அவ்விடத்தில் இவ்வாறான முரண்பாடுகள் வந்தால்... அப்படியும் வந்தால் அதை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம். இந்த முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாக உருவாகுமா...


பதில்: சத்தியமூர்த்தியைக் கூட சிலநேரங்களில் மாத்தியெழுதச் சொல்லுறது எனது பழக்கம். சத்தியமூர்த்தியை மாத்தி எழுதச் சொல்லலாம். அவன் உடனேயே மாத்தி எழுதுவான். எதையும் ஏற்றுக்கொள்கிற மனோபாவம் எல்லோரிடமும் இல்லை. திருப்பி ராஜ்ஜிடம் எழுதச் சொன்னால் அவன் ஒரே நேரத்தில் நிறைய எழுதுகின்றவன். விஞ்ஞானம், அரசியல் என்று எல்லாத்திலயும் எழுதுவான். ஸ்போட்ஸ் சுப்பரா எழுதுவான். அவனிட்ட திருப்பி கொடுத்தால் "ஓமண்ணை" என்று திருத்திப்போட்டு போய்விடுவான். அதனால் அவன் இன்றுவரையும் நிற்கிறான். என்னுடைய சுபாவம் என்னவென்றால் எட்டடி விழுந்தால் திரும்ப பதினாறடிதான் பாயவேண்டும். பொதுவாக சில பின்னடைவுகள் வந்திருக்கு... நான் என்னுடைய இலக்கில் பின்னடைந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் காசு, பணம், பொருள் சொத்துகளொன்றும் இல்லை. அதுவேறு விடயம். ஆனால் செயற்பாட்டு ரீதியாக என்னுடைய பொசிசன் ok". பிள்ளை எப்படி வரவேண்டும். மனைவி எப்படி வரவேண்டும், குடும்பம் எப்படி அமையவேண்டும், நான் எப்படி இருக்கவேண்டும் எல்லாம் ok. காசு, பணம், பொருள் அது வேறு விடயம்.

சி. நிஷாகரன்:

கேள்வி: நீங்கள் பத்திரிகை ஆசிரியராக இருந்த காலத்தில் பத்திரிகைதான் மட்டுமல்ல அச்சு மையிலிருந்து அச்சு ஈய அச்சு (பலத்த சிரிப்புடனிருக்கிறார்) எல்லாம் தட்டுப்பாடான விடயங்களை சேகரிக்கிறது என்பதிலிருந்து அதை உரிய காலத்தில் வெளிக்கொண்டு வருகிறது என்பதும் நினைத்துப்பார்க்க முடியாத ஒன்று. அதை இன்று சொன்னால் நம்பக்கூடிய காரியமும் அல்ல. இந்தக் காலப்பகுதியில் படைப்பாளிகளை உள்வாங்கி ஆக்கங்களைப் பெறுவது அதனை வெளிக்கொண்டு வருவது என்பது எவ்வாறிருந்தது. இத்தத் தடைகளை எவ்வாறு சந்தித்தீர்கள்?

பதில்: எனக்கொரு பழக்கமிருக்கிறது. தடைகளை நான் அப்படித்தான் பார்க்கிறேன். பூசணிக்காயுடன் சாப்பிடுவதும் நாங்கள் தான். இறைச்சி சாப்பிட்டாலும் நாங்கள் தான். வீட்டிலும் நான் இதைத்தான் சொல்வது. 1/2 றாத்தல் பாண் வாங்க 20 ரூபா இல்லாமல் கஷ்டப்பட்டிருக்கிறேன், மாங்குளத்தில் இருக்கும் போது நெருப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காய்ச்சல் வந்தது. டொக்ரருக்கு கனகராயன் குளத்தில் கடன் சொல்லிப் போட்டு மருந்து வாங்கிக் கொண்டு வந்தது. மோட்டார் சைக்கிள்ள அடி பட்டு விழுந்தொழும்பி சத்தி யெடுத்து... வரும் வழியில் மாங்குளம் சந்தியில் எங்கட மரு தனாமடத்து வாணிவிலாஸ் கடையில் காசில்லை என்று சொல்லி அவரிடம் காசு பெற்று வேறு கடையில் சோடா வாங் கிக் குடித்தது. சோடா குடித் தால் சத்தி நிற்கும். அப்படிக் கஷ்டப்பட்டனான். கஷ்டங்கள் எல்லாத்தையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். இருக்கிறவளங் களை வைத்துக் கொண்டு செயற்படுவதுதான். என்னுடைய "தியறியே" அதுதான். அப்ப நாங்கள் ஆதாரம் சஞ்சிகை அடிக்கேக்குள்ளே பேப்பரே இல்லை. ஒரு வழியும் இல்லை. என்ன கிடக்கு என்ற போது றோணியோப் பேப்பர் கிடக்கு என்றனர். ஆகவே அந்த "issue"வை றோனியோ பேப்பரிலை தான் அடிச்சனாங்கள். கோட்டுப் பேப்பர்.. அது எல்லாம் நாங்கள் அடிச்சனாங்கள். "புளொக்" செய்யிறதுக்கு ஆனந்தனைப் பிடிச்சு... மரக்கட்டை புளொக்தான் செய்தம். ஒரு இலக்கிய சஞ்சிகையின்ர முதலாவது பக்கமே மரக்கட்டை புளொக்தான். எதிர் காலத்தில் வெளிச்சம் வரப் போகிறதென்று நாலுவரிக் கவிதை எழுதுங்கள் என்று புதுவையண்ணரிடம் கேட்டு வாங்கி, உடனே ஆனந்தனிடம் சொன்னேன். இரண்டு உருவங்கள் இருட்டில் நடப்பது மாதிரியும் மேலே வட்டம் ஒன்று தோண்டி விடு என்று நிலவுக்கு. அப்போது கீழே கறுப்பு மேலே நீலம் அடித்து விட்டால் அந்த தோண்டிவிட்டது வெள்ளையாக இருக்கும். மரக்கட்டை புளொக்கில் செய்தனாங்கள். இருக்கிற வளங்களைக் கொண்டு ...

இன்னுமொரு உதாரணம் என்னவென்றால்.... முல்லைத்தீவில் இருக்கும் போது, "G.A சொன்னார் ஒரு நாடகம் போட வேணும்" என்று UNDPன்ர வறுமையொழிப்பு மாநாடொன்று நடக்கிறது. அதில் வறுமை என்றொரு நாடகம் திருகோணமலைக்கு கொண்டு போக வேண்டுமென்று சொன்னார். எனக்கு ஆட்களை ஒழுங்கு செய்ய வேண்டுமே.. நான் தனிய மினக்கெட ஏலாது. நான் ஒருவரிடம் போனேன். நீங்கள் இதை அறிந்திருக்க வேண்டும். அவரிடம் வறுமையொழிப்பு சம்பந்தமான நாடகம் போட வேண்டும் என்று சொல்ல உடனே, "எவ்வளவு செலவழிப்பீர்கள்" என்றுதான் கேட்டார். எனக்கு எப்படி இருந்திருக்கும்? நாங்கள் போடுவது வறுமையொழிப்பு... நாடகம் போடும் போது உனக்கு செலவு வரும் அது வேறு விடயம். நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குத் தேவை விடயம் முடிய வேண்டும். அப்போ சரி. கேட்டுப் போட்டுச் சொல்வோமென்று G.Aயிடம் போனேன். "அடேயப்பா உதுக்கொரு அலக்கேசனும் இல்லை" எந்த fundஉம் இல்லை. என்ன செய்யிறது? அவன் நிக்கிறான் "எவ்வளவு செலவழிப்பியள்?" என்று எனக்கு விசர் வந்திட்டுது. யதார்த்தம் இல்லாத ஆக்களை அடிச்சே துரத்த வேண்டும். எனக்கு ஒரு வழியும் இல்லை. கமலிடம் போனேன். நாடகம் உருவாக்க ஒருவர் வேணும் என்ற போது குமுழமுனை ஆசிரியர் உதயசீல னிடம் அழைத்துச் சென்றார். அவன் மண்ணுக்குரிய ஆள். காசு சிக்கல் என்ற போது பிரச்சினையில்லை செய்வம் என்றார்.ஒபீசுக்கு வந்துஆட்களைப் பிடிச்சம். மியூசிக்குக்கு வெளியில. ஒண்டுக்கும் காசில்லை. வீட்டில பழகினம். நாடகம் எங்கேயோ போட்டுது. "றிங்கோவில போட்டு எல்லோரும் புழுகித் தள்ளினார்கள். பின்னர் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் போட்டு அடுத்த கட்டமாக பங்களாதேஷ் போக இருந்தது. அதற்கிடையில் அரசியல் மாற்றங்களால் குழம்பியது. எல்லாம் எங்கள் செலவுகள் தான். சின்னச் சின்னச் செலவுகள் அனைத் தையும் செய்து முடிச்சாச்சு. என்னென்றால் நாங்கள் எப்பவுமே இருக்கிற வளத்தைக் கொண்டு தான் எதையும் செய்ய வேண்டும்.

நாங்கள் முதன் முதலில் மாங்குளத்தில் ஒரு ஓட்டைக் குடிசை, அதன் தாழ்வாரத்தில் தான் நாங்கள் வாழ்ந்தோம். அதற்குள் ஆறேழு குடும்பம். எங்களுக்கு மாத்திரம் முன் விறாந்தையில் படுக்கலாம். மழை பெய்தால் முழுக்க நனையும். ஒரு மேசையை வைத்து அதற்குக் கீழ்தான் சமையல். அதற்குள்தான் ஆறேழுமாதம் சீவித்தோம். இருக்கிற வளத்தை பயன்படுத்திக் கொண்டு வாழ வேண்டும். அதற்காக பெரிதாக தேடேலாது. இதுதான் யதார்த்தம்.

என்ன இருக்கோ .. மை,எழுத்து பிரச்சினை ஒருக்கா ஈழநாடு அலுவலகம் ஒரு இடம் அச்சகம் வேறு இடத்தில் இருந்தது. அச்சடிக்க வேண்டிய பக்கம் ஆயத்தம் அந்த matter எல்லாம் கட்டிகேசுக்குள் வைத்து நூலால கட்டிப் போட்டு அங்கேயிருந்து கொண்டுபோக வேண்டும். மணலுக்குள்ளால் முன்னே ஒருவன் வைத்திருக்க சைக்கிளில் உழக்கிக் கொண்டு வரும் போது மணல் சறுக்கி விழுந்து.... எழுத்து முழுதும் கொட்டுப்பட்டு.. அவ்வளவும் சேர்த்து அச்சுக் கோர்க்க மத்தியானமாகும். பின்பு திரும்ப "புறூவ்" OK பண்ணி வர... திரும்பிச் சேர்த்து அடிச்சு.. எவ்வளவு சிரமம்.

வி.பி.ஜோசப்:

கேள்வி: அந்தக் காலப்பகுதியில் இவ்வளவு நெருக்கடியான காலப்பகுதியில் புது நபர்களை உள்வாங்கி அவர்களுக்குரிய களங்களைத் திறந்து விட்டதற்கூடாக பல புது ஆளுமைகளை உருவாக்கியிருக்கிறீர்கள் அது பற்றி...

பதில்: எந்தச் செயற்பாடுகளையும் தனி ஒருவனால் செய்ய முடியாது. செய்யலாம் என்று பீத்திக் கொள்வதில் எந்த அர்த்தமுமில்லை. எப்போதும் குழுச் செயற்பாடுதான் திறமையாகவும் உச்சமாகவும் வரும். பல பேர் சேர்ந்து... அதில பிரச்சினைகளும் இருக்குது. சில விடயங்களில் தீர்மானம் எடுக்க முடியாமல் போகும். ஓரளவு நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டுக்கு வரலாம். ஒரு மையப் புள்ளியை வைத்துக் கொண்டு.. எப் போதும் நாங்கள் எங்கள் வேலையைச் சுலபமாக்குவதற்கு வேலையைப் பங் கீடு செய்ய வேண்டும். உதாரணமாக ஒரு பத்திரிகை என்று சொல்லும் போது அதில் பலவித சுவையுள்ள பல விடயங்கள் வரவேண்டும். கிட் டத்தட்ட ஒரே ஆளே பக்கம் நிரப் புவதில் கிட்டத்தட்ட எல்லாம் ஒண் டாகத்தான் இருக்கும். வித்தியா சமில்லாமல். மற்றது புது நபர்கள் எனும் போது அவர்களிடம் ஆர்வம் இருக்கும். வெல்ல வேணும் எண்ட அக்கறை இருக்கும்.

ஆர்வமுள்ளவர்களை உள்வாங்கி அவர் களை தட்டிக்கொடுக்கிறதில் எந்த கஷ்டமுமில்லை. அது அவர்களை ஊக்குவிக்கும். அவர்கள் வளர்ந்ததில் அது சார்ந்த அமைப்பும் வளரும்.



ந. மயூரரூபன்:

கேள்வி: அமைப்பு ரீதியாக இயக்குறதில் இருக்கும் சிக்கல்?

பதில்: எல்லாமே பொது நியதிக்குள் இயங்குவது என்ற எண்ணப்பாடு இருக்குமேயானால் பிரச்சினையில்லை. தன் நலன், தான் வளரவேணும், என்னை விட வளர்ந்துட்டான் அல்லது வளரக் கூடாது எனும் மனோபாவம் இருக்குமேயானால் பொதுச் செயற்பாடு ஒரு போதும் சாத்தியமில்லை.

ந. மயூரரூபன்

கேள்வி: எங்கள் பொது இயல்பு என்ன?

பதில்: யாரும் ஒரு நிலைக்கு வரும் வரைதான் கஷ்டப்படுவர். அந்த நிலைக்கு வந்த பின்னர் அதை தக்கவைக்கும் செயற்பாட்டுக்கு மாறுவர். அந்த நிலையில் தான் undercut வேலை செய்விக்கினம். தம்மை நிலைநிறுத்த ஏனையவர்களுக்கு குழி பறிப்பர். அதனால்தான் பொது விதியில இயங்குவது கஸ்டமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந. மயூரரூபன்:

கேள்வி: உங்கட எழுத்தில இப்போ மந்த நிலைகள் ஏற்பட்டுள்ளது. மந்த நிலைகளை ஏற்படுத்திய காரணிகள் என்ன? உங்களிட்ட தோன்றின சிந்தனைகள பிறரோட பகிர வேண்டிய செய்திகளை அதுகளை இந்த மந்த நிலையைத் தகர்த்து எப்பிடி வெளிக்கொண்டு வரப்போகிறீர்கள்?

பதில்: இப்ப கதைக்கிறது இதுதானே! தடைகளுக்கான காரணங்கள் சிலதுகளை நாங்கள் சொல்லக் கூடிய சூழல் இருக்கும். சிலவேளை சொல்ல நினைக்கிறதை சொல்லக் கூடிய சூழல் இல்லாமல் இருக்கும். இப்ப சொல்லக் கூடிய புறச் சூழல் இல்ல. அதை நாங்கள் பூடகமாக வேற விதமா சொல்ல வெளிக்கிட்டா அது சில வேளை போய்ச் சேர வேண்டிய ஆக்களுக்கு போய்ச் சேராத ஒரு பிரச்சினையும் வந்திடும். இப்ப நாங்கள் எழுதாம இருக்கிறதை வையுங்கோவன். எழுதாம இருக்கிறதுக்கான பிரதான காரணமென்ன. இந்தச் சூழல்ல நாங்கள் சொல்லாம இருக்கிறதுதானே. எங்கட.. எங்களிட்ட உள்ளார்ந்தமா இருக்கிறதை வெளிக் கொண்டு வாறதுக்கான புறச் சூழல் இல்லாமலிருக்கு. அதுதான் அடிப்படைக் காரணம். பிரதான காரணம் அதுதான். பிறகு 2வது காரணம் தான் குடும்பச் சூழல்.

வி.பி. ஜோசப்

கேள்வி: இதுபற்றி விளக்கமாச் சொல்லுங்கோ?

பதில்: இப்ப எங்கட படைப்புகளை எண்டு சொன்னா கூட ஒரு காலகட்டத்தில உதாரணமொண்டு சொல்லப் போனா நான் றேடியோவில கன நாடகங்கள் எழுதினான். பிறகொரு நாடகம் ஒலிபரப்பப்படேல்ல. ஒலிபரப்புறதுக்கு தடை என்னெண்டு சொன்னா நாடகத்தில் வேலை நிறுத்தம் தொடர்பான விடயம் வந்தது தான் காரணம். அப்ப Radio Ceylonல இப்பிடியான நாடகத்தை ஒலிபரப்ப மாட்டம் எண்டினம். அதோட நான் Radio Ceylon ல எழுதுறதை கை விட்டிட்டன். என்னெண்டு சொன்னா சில விசயங்களைச் சொல்லேலாத சூழல். விட்டாச்சு.. ஒரு காலச் சூழல் எப்பிடி இருந்தது எண்டா கொழும்பைத் தளமாக் கொண்டுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தன. அப்ப எல்லா வகையிலான கதையள் எல்லாத்தையும் பிரசுரிக்கிற சூழல்ல அவை இல்லை. எல்லா விஷயங் களையும் பிரசுரிக்க மாட்டினம். அப்ப அது ஒரு தனிய சமூகப் பிரச்சினை.. அரசி யல் பிரச்சினை அல்லது அரசியல் ரீதியான அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய விஷயங்கள் அதில வராது. ஆனா பிறகு எங்களுக்கொரு வாய்ப்பு வந்ததெண்டு சொன்னா எங்கட சூழலுக்குள்ள எங்களுக்குள்ள ஊடகங்கள் எங்கட கைகளுக்குள்ள வந்தது எங்கட கட்டுப்பாட்டுக்குள்ள வரேக்கதான் எங்கட கருத்துக்களை சரியா சொல்லிக் கொண்டிருந்தம். எப்ப அந்தக் கட்டுப்பாடு எங்கள விட்டுப் போச்சோ அதுக்குப் பிறகு திரும்பவும் ஒரு வெற்றிடம் வந்தது. இப்ப அந்த வெற்றிடம் முழுசாய் இருக்கெண்டு சொல்லேலாது. ஆனால் பூரணமான சுதந்திரம் இப்ப இல்லைத்தானே.

சி. நிஷாகரன்:

கேள்வி: நீங்கள்-இலக்கியம்-சமூகம் இந்த மூண்டையும் எப்பிடிப் பார்க்கிறியள்?

பதில்: சமூகத்தில் நான் ஒராள். என்னை இலக்கியம் வெளிப்படுத்துது. அதில இது மூண்டும் ஒண்டோட ஒண்டு தொடர்புபட்டது.

வி.பி. ஜோசப்:

கேள்வி: இலக்கியம் வெளிப்படுத்துறது என்கிறதை விளக்கமாச் சொல்லேலுமா?

பதில்: இலக்கியம் வெளிப்படுத்துறது எண்டு சொன்னா. எங்கட உணர்வு... உணர்வுதானே இலக்கியம்.. அப்ப அது.. அதுக்கும் எங்கட இதுக்கும் முரணாய் இருக்கிறது கஷ்டம். இப்ப வந்து நாங்கள் ...இலக்கியம் எண்டிறது ஒரு போதைவஸ்து அல்ல.. ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குப் பாவிச்சு அதில மிதக்கிறதுக்குரிய போதைவஸ்து அல்ல. குடிவகையோ எதுவோ அல்ல. அது ஒரு .. அது இயல்பா இருக்க வேணும். அதுக்கு நாங்கள் வேசங்கட்டேலாது. அல்லது ஓட்டப் போட்டி மாதிரி போட்டி வைக்கேலாது. அது எங்கட உணர்வு.. வாழ்க்கையில நாங்கள் பிள்ளையளைப் பார்க்கிற மாதிரி.. மனைவியைப் பார்க்கிற மாதிரி உணர்வு.. எங்கட உணர்வு என்ர கருதுகோள் அதுதான்.

கை. சரவணன்:

கேள்வி: இலக்கியத்தை நீங்கள் எப்பிடி நினைச்சு வைச்சிருக்கிறியள்?

பதில்: பாரதி சொன்ன மாதிரி சிறுமை கண்டு பொங்குகிற ஒரு இயல்பு படைப்பாளிக்கு இருக்க வேணுமெண்டு நான் நம்புறன். அந்த உணர்வு தான் எங்களுக்கு எப்பவும் செயற்பாடாயிருக்கும். இலக்கியத்தின்ர செல்நெறியும் அதுதானெண்டு நம்பிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை. சரவணன்:

கேள்வி: இப்போ தற்காலத்தில் எவ்வகையான இலக்கியப் பத்திரிகை தேவை எனக் கருதுகிறீர்கள்? சம காலத்திலிருக்கிற ஊடகவெளி என்பது ஒரு இலக்கிய காரனை ஒரு தரமான வாசகனை திருப்திப் படுத்துமளவில் இருக்கிறதா?

பதில்: என்னுடைய உணர்வுகள் பத்திரிகைகளுக்கும் நான் முதலில் குறிப்பிட்டது போல படைப்பாளிகளுக்குமான இடைவெளி என்கிறது அது இப்ப இருக்கு. எல்லாப் பத்திரிகைகளும் எல்லாப் படைப்பாளிகளையும் ஒன்றிணைக்கிற செயற்பாட்டில் ஒன்றிணைத்து அவர்களை மேலோங்கச் செய்கின்ற ஒரு செயற்பாட்டுக்கு வரவேண்டும். அப்பிடியானஒரு செயற்பாடுதானிப்பதேவையாகஇருக்கு. கோட்பாடுகளோ அல்லது இசங்களோ.. தத்துவங்களோ அதுவல்ல பிரச்சினை. சில பரீட்சார்த்த முயற்சிகளை செய்துகொள்ளப் பார்க்கலாம். இதை காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ற மாதிரி செய்து பார்க்கலாம். அது வேற விஷயம். அது வெற்றியளிக்கிறதோ என்னவோ என்று.. ஆனால் அடிப்படையை விட்டு நாங்கள் விலக முடியாது.என்ன அடிப்படை என்று சொன்னால் எங்கட பண்பாடு எங்கட கலாசாரம் எங்கட வாழ்வியல் நிலைப் பாடுகள் அதுகளை கொச்சைப்படுத்திற மாதிரியாகவோ அல்லது அதை கேள்விக்கு உட்படுத்துகிற மாதிரியாகவோ இருக்கேலாது. இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு நாங்கள் ஏதாகிலும் செய்து பார்க்கலாம். இதுக்கு படைப்பாளிகளும் பத்திரிகைகளும் இணைய வேணும்..

ந. மயூரரூபன்:

கேள்வி: இப்ப இந்த இடத்தில ஒரு கேள்வி கேட்கலாமென நினைக்கிறன். என்னவென்றால் இப்போ பின்நவீனத்துவம் என்கின்றது. எங்கட பண்பாடுகளுக்கு புறநடையாயிருக்கிற விசயங்களை மிக நுணுக்கமாயும் விரிவாயும் பார்க்கிற ஒரு களம் என்கிற ரீதியில் அப்படியான ஒரு வாசிப்புக்கூடாக அப்படியான படைப்புகள் வந்து கொண்டிருக்கு.. அப்போ.. அது தொடர்பாக எங்கட கலாச்சாரத்தில் நின்று நாங்கள் படைப்புகளை முன்னெடுக்க வேண்டும் என்கிற அந்த கருத்துக்கும் இந்த நிலைப்பாட்டுக்கும் இடையிலான..

பதில்: உருவம் பெரிதா உள்ளடக்கம் பெரிதா என்ற பிரச்சினை வந்தது. பிறகு அந்த கோட்பாடுகளை கொண்டு வந்து வைத்துக் கொண்டு அந்தக் கோட்பாடுகளை விலத்தி நிற்கிறதுகளைஅரைத்த மாவை அரைக்கிற... ஒரே... மாதிரி ஊறின ஒரே விதமான கதைகளை அல்லது வாராந்தப் பத்திரிகைக்கான கதைகள் அல்லது வாரவெளியீட்டுக் கதைகள் என்ற ஒரு கருத்தை முன்வைத்தார்கள். எங்கட மரபொன்றிற்கு எங்கட மரபுக்கு புறநடையான விசயங்களை நாங்கள் முக்கியமாகக் கொள்வதில்லை எங்கட சமூகச் சூழல் நாங்களிண்டைக்கு எங்கேயோ நிக்கிறம்.. whats up எண்டு அந்த நிலைமை வந்திட்டுது. ஆனால் எங்கட அடிப்படைக் குணாம்சம் அப்படியே இருக்கு. இன்றைக்கும் குற்றப்பட்ட பெண்ணை யாரும் மணஞ் செய்கிறதுக்குத் தயாரில்லை. ஆனால் என்னதான் தத்துவம் பேசினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணமென்று செய்யப் போகும் போது வெளிநாட்டில இருந்தாலும் எத்தனை லட்சம் காசு... வீடு... வளவு சாதி என்ன? என்ற - அந்த mentality மாறவேயில்லை. அதுகளில் மாற்றம் வந்திருக்குமென்றால் நாங்கள் உந்த புறநடையளைத் தூக்கிப் பேசலாம். புறநடை எனும் போது சமூகத்தில புறநடையாக சில விசயங்கள் நடக்குது. தமையன் சகோதரியை பழுதாக்குறது நடக்குது. தகப்பன் குடித்துவிட்டு வந்து மகளைப் பழுதாக்கிற சம்பவம் நடக்குது. இப்படி புற நடையான விடயங்கள் எக்கச்சக்கமாக நடக்கிது. இவைகளை இலக்கியமாக்கலாமா?


வி.பி. ஜோசப்:

கேள்வி: ஒரு பாதிக்கப்பட்ட ஒரு ஆளாலதான் அந்த எழுத்தை உச்சமாக எழுத முடியுமா என்கிற கேள்வி... உதாரணத்துக்கு இதை எப்பிடிச் சொல்லாமென்றால் ஒரு பெண் பாதிக்கப்பட்டால் அந்தப் பெண்தான் அதை எழுத முடியுமா? என்கிற ஒரு விஷயம்..

பதில்: படைப்பு படைப்பாற்றல் என்கிறது அது... படைப்பாற்றலென்பது பிறரது அனுபவங்களையும்தாங்கள்உள்வாங்கி அதைப்படைக்கிறதிலயும்அது இருக்கும். அப்பிடித்தான் அது அமைய வேணுமெண்டில்லை. ஆனால் நேரடியா அந்தாள் சொல்லேக்குள்ள சில வெளிப்படைத் தன்மைகள் வரப்பாக்கும். சிலவேளை... வெளிப்படையாக ஒரு கலைப் படைப்பாக அதை சொல்ல.. சில தடங்கல்கள் வரலாம். இதை வேற ஆள் சொல்லேக்குள்ள கலைப்படைப்பாக வரப்பாக்கும்.

ந. மயூரரூபன்:

கேள்வி: இப்ப சில விஷயங்களை கதைச்சுக் கொண்டிருக்கிறம்... இப்ப நீங்கள் சொல்ல வாற இந்த விஷயத்திலஒரு சம்பவத்தையோ ஒரு நிகழ்வையோ பதிவாக்க வெளிக்கிடும் போது ஒரு எழுத்தாளனுக்கு அவனுடைய படிப்பனுபவமா, வாசிப்பனுபவமா அவனுக்கு பெரியளவில கைகொடுக்கும்..அல்லது அந்த அவன் உள்வாங்கின சம்பவத்தை முழுமையாக வெளிக் கொண்டு வாறத்துக்கு அவனுக்கு எந்த விஷயம்.. இந்த மூண்டிலயும் எந்த விஷயம் கூடுதலாக கைகுடுக்கும்.....



பதில்: இது எல்லாம் தான். இப்ப ஒரு கறிக்கு எவ்வளவு உப்புப் போடுறது அல்லது புளி விடுகிறது என்கிறது இந்த Ratio கலக்க வேணும் என்றில்லைதான். எழுதேக்குள்ள தான் வரும். சரியான ஒரு படைப்பாளன் சரியான அளவில...சேர்த்துக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு எவ்வளவு தூரத்துக்கு அந்த படிப்பு, இலக்கிய அனுபவம், உலக அனுபவம் எண்டு இருக்கோ அந்தளவுக்கு படைப்பாற்றல் விரிவு பெறும். நாங்கள் ஆரம்பத்தில எழுதினதுக்கும் பிறகு பிறகு எழுதினதுக்கும் வித்தியாசம் என்னவென்றால் எங்கட படிப்பு மட்டம் எங்கட சமூக மட்டம் எல்லாத்திலயும் ஒரு விரிவு வரும். அது.. அதுக்கு மட்டுப்பாடு இல்லை. அது வந்து படைப்பை polish பண்ணும் devolope பண்ணும். பூடமாகச் சொல்லுகிறதுக்கு. கலைத்துவமாகச் சொல்ல கன விஷயங் களுக்கு உதவும். எல்லாமே தேவை. ஒன்டுமே மட்டுப்பாடில்லை.

ந. மயூரரூபன்:

கேள்வி: ஈழத்து இலக்கியத்தில பொதுவாயொரு ஈழத்துக்கு வெளியால கருந்து நிலையொண்டி ருக்கு என்னெண்டு சொன்னா... ஈழத்தில எழுதக்கூடிய ஆக்களெல்லாம் போரை வைச்சுக் கொண்டுதான் எழுதுகினம்.. அது இல்லாட்டி இவையிட்ட ஒண்டுமில்லை. போர்தான் அவைக்கு ஒரு இலக்கிய மதிப்பீட்டைக் கொண்டு வந்திருக்குது. எண்டொரு கருத்துநிலை இப்ப போய்க்கொண்டிருக்குது. இது தொடர்பான உங்கட அபிப்பிராயம் என்ன?

பதில்: இது தொடர்பா சொன்னால் போரும் போர் சார்ந்த வாழ்க்கையும் 30 வருஷமாயிருக்கு. 30 வருஷம் கடந்துகூட அதின்ர பாதிப்பிலயிருந்து நாங்களின்றும் விடுபடேல்லை. விடுபடாத சூழல்ல அதை நாங்கள் விட்டிட்டு பெரிசாச் சொல்றதுக்கு எங்களுக்கு வரவேண்டிய தேவையுமில்லைதானே. நாங்கள் எதுக்காகப் போரைத் தொடங்கினம்? எதுக்காக 30 வருஷம் போராடினம்? எதுக்காக? அது இன்னமுமே சரிவரேல்லை. அரசியல் ரீதியாக எதுகுமே எங்களுக்கு இன்னும் சரிவரேல்லை. அப்ப அது .. அந்தச் சூழல் எங்களுக்கு வந்துதானே தீரும்..

மீள்குடியேற்றமோ? இடம் பெயர்வு வாழ்க்கையோ இன்னமும் முடிவேயில்லை.

இப்ப அதின்ர தொனிப் பொருளைச் சொல்லேல்ல. அவங்கள் எதைக்கருதிச் சொல்லுகினம் எண்டு சொன்னால்.. இந்த இலக்கிய அந்தஸ்தைக் குடுக்கிறது வந்து இந்த விடயம்தான். இதைத் தூக்கி விட்டா அதுக்குள்ள இலக்கிய மெண்ணுற விசயம் இருக்காது. என்கிறதுதான். இப்ப எது பாடு பொருள்? எது அந்தச் சூழல்ல முதன்மை பெறுகுதோ அது அதுதானே அதின்ர தொனிப் பொருளாயிருக்கும்.. அதைத் தூக்க வேண்டிய தேவையும் வராதுதானே!

தொனிப்பொருள் என்றதை விட நான் சொல்லுறன் என்னண்டா இலக்கிய மதிப்பீடின்றிய ஒரு... புலம் பெயர்ந்த தமிழருக்குரிய அங்கீகாரம் கூட இந்த 30 வருஷ போரும் அதனால விளைஞ்ச நிகழ்வுகளும்தான் காரணம். போர் இலக்கியம் எதனால வந்தது? இண்டைக்கு வெளியில உள்ள எல்லாருமே எதை வைச்சுப் பிழைக்கினம்?

கை. சரவணன்:

கேள்வி: இலக்கியத்தில நடுநிலைமை எண்டொண்டு இருக்கா?

பதில்: நடுநிலையான விசயங்களுக்கு நடுநிலைதான். (சிரிப்பு) நடு நிலைமை எண்டொண்டு இருக்குமா? இருக்காது. என்ர கருத்தும் அதுதான். நடுநிலைமை என்கிறது வெறும் நடிப்பு. நடுநிலைமை என் கிறது நாங்கள் எல்லாருக்கும் நல்ல விதமாயிருக்கிறதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. நிஷாகரன்:

கேள்வி: இலக்கியத்தில நீங்கள் காணுகின்ற திருப்தி என்ன?

பதில்: சொல்ல நினைச்சதை சரியா சொல்ல முனைந்திருக்கிறம் என்கிறதுதான்.

கை. சரவணன்

கேள்வி: நீங்கள் உங்கட படைப்பு ரீதியாக திருப்திப் பட்டுக் கொண்ட படைப்பு....

பதில்: அது அந்த நேரத்திலதான் திருப்தியாயிருக்கும். அடுத்த கட்டம் திருப்தியின்மையாகப் போகும். அது.. உங்கட முதற் கதையை எடுத்துப் பார்த்தா இப்ப ஒளிக்க வேணுமெண்ட feeling வராதோ? வருமல்லோ... அதுதான். எங்கடை 15 வயதுப் படத்தை பார்த்தவுடன் எங்களுக்கே ஒரு மாதிரித்தானிருக்கும்... அது இயல்பு. இப்பிடித்தானே வெளிக்கிட்டு வரேக்க நான் வெளிக்கிட்டு Neet ஆத்தான் வாறன். திரும்பிப் போகேக்க வேற மாதிரித்தான் அழுது வடியிறமாதிரி. எப்ப.. எப்பவுமே எந்த விசயமெண்டாலென்ன அந்த நேரச் சூழல்தான். சிலவேளை நாங்கள் ஒரு மரத்துக்கு கீழே பத்து மணித்தியாலம் நிக்கிறம். என்னத்துக்கெண்டால் ஒரு பஸ்சைப் பாத்துக் கொண்டோ மோட்டர் சைக்கிளைப் பார்த்துக் கொண்டோ நிக்கிறம். பிறகு யோசிப்பம் 10 மணித்தியாலம் வீணா நின்டதெண்டுதான் சொல்லுவம்.. அந்த நேரம் அதைவிட எங்களுக்கு வேற வழியில்லை. ஒண்டுக்காக காத்திருக்கேக்க 10 மணித்தியாலங்கள் பெரிசில்ல. பிறகுதான் வீணாப் போச்சே என்கிறது. சில வேளை பேசிறது என்னண்டா அந்த நேரச் சூழல்தான். அந்த நேரம் அதைவிட வேற வழியில்லை. எப்பவும் சூழல் தான் எங்களைத் தீர்மானிக்குது.

வி.பி.ஜோசப்:

கேள்வி: உங்கட வாசிக்கிற இயல்பு மாறுபட்டிருக்கா? அல்லது ஆரம்பத்திலுருந்தது போலத் தான் இப்பவும் வாசிக்கிறியளா?

பதில்: முதல் எல்லாம் வாசிச்சனான். இப்ப கூடுதலா .. கட்டுரைப் புத்தகங்கள் தான் கூடுத லாக வாசிக்கிறனான். Library ல போனா கூட எடுக்கிறது கட்டுரை தான்.

கை. சரவணன்:

கேள்வி: உங்கட வாசிப்பு.. ஆரம்பத்தில பலதையும் வாசிச்சது எண்டு சொன்னாலும் கூட அதுக்குள்ள ஒரு சில பேர் புகழ் பெற்றிருக்கும் தானே..

பதில்: ஆரம்பத்தில அதென்னண்டு தெரியாது.. அதெல்லாம் எல்லாம் வாசிச்சது தான். சித்திரக்கதை.. அம்புலி மாமா.. ஆனந்த விகடன் ராணி கமிக்ஸ் எல்லாம வாசிச்சு.. பிறகு இலக்கிய ரீதியாக வெளிக்கிடேக்குள்ள.. சொல்லுவினம் தானே. ஜானகி ராமன், வண்ணதாசன்.. மாதவன்.. அப்பிடி.. அதெல்லாமே வாசிச்சு கொண்டு வந்தது.. கூட இலக்கியம்.. IPKF காலத்தில் மொழி பெயர்ப்பு நாவல்கள். சகலதும் வாசிச்சது. அப்ப வேற ஒரு பொழுது போக்குமில்லைத்தானே. யாழ்ப்பாண Library இல இருந்த முழுமொழிபெயர்ப்பு புத்தகங்களும் வாசிச்சன். இப்ப தொடர்ச்சியாக நெடுநேரம் வாசிக்கேலாது. அப்ப கனநேரம் வாசிக்கிறது. சில நேரம் 8 மணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கினா 11, 12 மணிவரைக்கும் தொடர்ச்சியா வாசிச்சுப் போடுறது. இப்ப அப்பிடி வாசிக்கேலாது. ஒவ்வொரு கிழமையும் weekly வெள்ளிக்கிழமை வந்தா கனவிசயம் செய்யிறதுதானே. இலக்கியப்பக்கம் செய்யிறது. மற்றது commernts அடிக்கிற பக்கம், "மதவடி" எண்டொரு பீஸ் செய்தனான். அது மாதிரி உள்ளத்திலயும் செய்தனான். வாகுலேயன் நாட்குறிப்பொண்டு, இலக்கியம், தொடர்கதை... அப்ப compulsary ஆக எழுத வேணும். மற்றது press போனனெண்டாலும் பக்கம் கட்டிக் கொண்டு போகேக்க சின்ன இடைவெளி வந்திடும். உடனே ஒரு குட்டிக்கதை எழுதி compuse பண்ணி போடுறது.

ந. மயூரரூபன்:

கேள்வி: உதோடதான் அண்டைக்குக் கேட்ட கேள்வியொண்டும் இருக்கு என்னண்டா எழுத்தாளர் - நிர்வாக உத்தியோகத்தர் - ஒரு குடும்ப தலைவர் என்கிற அந்த எல்லைகளை நீங்கள் எப்பிடி கையாண்டு கொண்டிருக்கிறியள். என்கின்ற விஷயம் இப்ப தொடர்ச்சியா நீங்கள் எழுதேக்க வேலைக்குள்ளயும்... தொடர்ச்சியான வாசிப்பு. எழுத்து என்கிற ஒரு பக்கம் அதோட இணைஞ்சதா ஒரு நிர்வாக உத்தியோகத்தர் என்கிற ஒரு பதவி.

பதில்: அது பழுவான ஒரு செயற்பாடு. நிர்வாக உத்தியோகத்தர் அது பின்னடியிலதான் வந்தது. முன்னடிக்கு அப்பிடிப் பிரச்சினை இருக்கேல்ல.. எழுத்தையும் வேலையையும் குழப்புறதில்லை. நான் பொதுவா நேரங்கிடைக்கிற நேரமெல்லாம் வாசிப்பன்.. ஓய்வு கிடைச்சா எப்பவுமே வாசிப்புத்தான் எப்பவும் என்னட்ட ஏதாவது புத்தகம் இருக்கும். இப்ப office ஆயிருக்கட்டும் Bus ஆயிருக்கட்டும்.. சின்னனிலையிலிருந்து பள்ளிக்குடத்தில Carக்கு நிக்கேக்க புத்தகம் வாசிச்சுஅப்பிடித்தான் பழகினது. அந்த நேரங்களை பாவிக்கிறது. மற்றது எனக்கொரு பழக்கமிருக்கு ஒரு வேலையை எடுத்தா செய்து முடிக்க வேணும். ஒரு வேகம் ஒண்டு இருக்கும். நேரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

ந. மயூரரூபன்:

கேள்வி: எங்களிட்ட இல்லாத விஷயம்...

பதில்: ம்....ம்..... (சிரிப்பு) அந்தப் பழக்கம் தப்பாது. நேரமெண்டா நேரம்தான். மற்றது வேலைகளைச் செய்ய ஆட்களை சேர்ப்பது பிறகு வேலைகளை அவங்களிடம் பகிர்வது எங்கட இளம் எழுத்தாளர்களை வைச்சு நான் இலக்கிய இதழ் செய்தேன். நிர்வாக வேலைக்கும் அதுதான். எங்களுக்கு ஆரார் ஓடுற குதிரை யெண்டு தெரியும்.. நான் கூப்பிட்டா டக்கெண்டு வந்திடுவினம்.. வேகமான ஆக்களிட்ட வேலையைக் கொடுத்தா பக்கெண்டு ஐஞ்சு நிமிசத்தில் அலுவல் முடியும். இப்ப mobile எல்லாம் வரும். உடன நான் என்ன செய்வதெண்டா ஒரு பத்திருவது பேரைக் கூப்பிட்டு இந்தா.. நீங்கள் தான் பொறுப்பு. நீ இதைப்பார் நீ இதைப்பார் அத.. போய்ப்பாத்தா எல்லா clean ஆக அந்தந்த இடத்தில ஆக்களிருந்து அலுவல் நடக்கும். கனபேர் வேலை களை ஏனையவர்களுக்கு பங்கிட்டுக் குடுக்கிறதில்லை. குடுக்க வேணும். பொதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பவும் என்னட்ட ஒரு team இருக்கும். அது முக்கியம். வேலையை பங்கிட்டுக் குடுக்க வேணும். அப்பதான் அவங்களுக்கும் ஒரு ஆர்வமிருக்கும். நாடகமொண்டு போட வெளிக்கிட்டம் சிறுவர் உரிமை தொடர்பான விடயம் right உடன அருட்குமரனைக் கூப்பிட்டு நாடகம் ஆயத்தம் ஆனால் நடிக்க ஆட்கள் வேணும். 40, 50 பேரைச் சேர்த்து செய்வதுதான் பிரச்சினை. ஒரு பொம்பிளைப் பிள்ளையும் நடிக்க வரமாட்டன் எண்டிட்டுது.. அதை நான் technic ஆகத்தான் கையாண்டனான். முதல் வரக்கூடிய ஒராளை வைச்சுக் கொண்டு பிறகு ஆட்களை சேர்த்தோம். பிறகு.. நடிச்சது 6 பேர் ஆனா நான் 15 பேரை எடுத்தனான். அவை ஒரு குழுவாக வந்தவுடன் எல்லாரும் மாறிவிட்டினம். ஆறு பேரும் தனிய எண்டு நினைக்க மாட்டினம். அப்ப எல்லாருக்கும் uniform. நடிச்சாயென்ன.. நடிக்காடியென்ன சேர்ந்த எல்லோருக்கும் uniform தைச்சாச்சு. நாடகம் Super ஆக வந்தது.

சி. நிஷாகரன்:

கேள்வி: சேகரித்தல் ஆவனப்படுத்தல் என்கிற விசயத்தில உங்கட செயற்பாடு எப்படியிருக்கு?

பதில்: (சிரிப்பு) என்ன சிக்கலெண்டு சொன்னால்.. நான் சின்ன வயதில இருந்தே பத்திரிகைகளில நல்ல கட்டுரை வந்தா அதை எடுத்து வைக்கிறது பிறகு அது புத்தகங்கள் வேண்டிற நடைமுறையால் மாறியது. பிறகு புத்தகங்கள் வாங்கேக்க நான் துறை சார்ந்த விசயங்களைத்தான் பாப்பன். முதல் முந்தி.. வசந்தத்துக்கு புத்தகப்பாசல் வந்து உடைச்சா முதல் பாக்கிற ஆக்கள் நாங்களாத்தான் இருக்கும்... அப்ப Account இல புத்தகம் வாங்கிறது சகல புத்தகமும் அதாவது பெண்ணியம் சம்மந்தப்பட்டது. விஞ்ஞானம்.. அதுகும் வாங்கினது.. சினிமா.. ஓவியம்.. அப்பிடி எல்லாம்... விஞ்ஞானமும்.. அதில பொருண்மிய விசயங்களில் கூட அக்கறை இருந்ததுதானே. சூழல் மாசடைகிறது. இயற்கை சம்பந்தப்பட்டதுகள். அதுகளில் நல்ல அக்கறை இருந்தது.. அந்த.. பொருளாதாரத்திலயும் கூடிய அக்கறையிருக்கு. இலக்கியம் எவ்வளவு அக்கறையோ அப்பிடி பொருளாரத்திலயும் அக்கறையிருக்கு அப்ப அந்தப் புத்தகங்களை வாங்கிச் சேகரிச்சது.. அப்ப என்னட்ட எல்லாமிருந்தது. இப்ப Library இல போய்ப் பாத்தா விசர் வரும். ஏனெண்டா அவ்வளவும் என்னட்ட இருந்தது. இப்ப நான் சிலதுகளை Library இல எடுத்து Photo copy எடுக்கிறது. புத்தகம் வாங்கக்கூடிய பொருளாதார நிலை இப்ப பிரச்சனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
அவர்களின் குடும்பம்

தந்தை



தம்பையா
சிதம்பரநாதபிள்ளை
(அமரர்)

தாய்



அன்னலட்சுமி
சிதம்பரநாதப்பிள்ளை

மனைவி



ராஜநாயகி
திருச்செந்திநாதன்
Administrative Officer
Devitional Secretariat,
Tellipalai

மகன்



தி. சிதம்பரசுப்பிரமணியன்
MEng (London)

மகள்



தி. சிதம்பரவானதி
Transport & Logistics
Management
Facultry of Engineering
University of Moratuwa.

மகள்




தி. சிதம்பரபாரதி
மாணவி

மகன்



தி. சிதம்பர நடராஜன்
மாணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(Phd(Edinburgh), D.Litt.(Hon.UJ)
தகைசார் நிறைவுநிலைப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



சிதம்பர திருச்செந்திநாதனைக் கண்டு பல ஆண்டுகளாகிவிட்டன. 1986 இல் இடம்பெற்ற அவருடைய முதலாவது வெளியீடாகிய 'என்றாவது ஒருநாள்" குறுநாவல் வெளியீட்டிலே பங்குபற்றி அந்நூலை வெளியிட்டு உரையாற்றிய நினைவு இன்றும் பசுமையாகவுள்ளது. அன்று அவருடைய நூல் வெளியீட்டிலே கலை இலக்கிய உலகில் சிறப்புப் பெற்ற பலர் பங்குபற்றினர். அதன்பின்னர் 1992 இல் அவருடைய 'வெட்டுமுகம்" 2002 இல் அவருடைய 'மணல்வெளி அரங்கு" சிறுகதைத் தொகுதிகள் வெளியீட்டிலும் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

இவராலே யாழ்ப்பாணம் இணுவில் மிகவும் பெருமையடைகின்றது. இணுவையூரைச் சேர்ந்த சிறப்புடையவர்களைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் இவருடைய பெயரும் அங்கு இடம்பெறும். ஒரு எழுத்திலே பின்வரும் குறிப்பினைப் பார்த்தேன். அதனை பார்க்குமிடத்து திருச்செந்திநாதனின் அடையாளத்தைக் காணலாம். இணுவில் பெற்றெடுத்து புகழ் பூத்தவர்களான இணுவில்சின்னத்தம்பிப்புலவர். இலக்கணஇலக்கியநூலாசிரியர், வி. தட்சணா மூர்த்தி - தவில் வித்துவான், இணுவில் வீரமணி ஐயர் - சாகித்திய கர்த்தா, நடன ஆசிரியர், க.சண்முகம்பிள்ளை, மிருதங்கக் கலைஞர், ஆர்.சிவலிங்கம் (உதயணன்) சிறுகதை, நாவல் எழுத்தாளர், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் - எழுத்தாளர், இணுவையூர் மயூரன் - எழுத்தாளர், வானொலிக் கலைஞர் என்போர் இணுவிலிற்குப் பெருமை தேடித் தந்தவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்திநாதன் சிறுமை கண்டு பொங்கும் இயல்புடையவர். அவருடைய கதைகள் இத்தகைய தன்மையுடையன. கதையைக் குறியீடாகக் கையாள்வதில் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளார். அவருடைய 'மணல்வெளி அரங்கு" நூல் பற்றிப் பேசும் போது அத்தொகுதியிலுள்ள 'தேவர்கள்" என்னும் கதையினை எடுத்துக்காட்டாகக் காட்டி அதிலுள்ள ஆசிரியரின் குறியீட்டுக் கையாட்சித் திறனை விளக்கியது 13 ஆண்டுகளின் பின்னரும் நினைவில் வைத்துள்ளேன். இத்தொகுதிக்கு மதிப்புரை எழுதிய பேராசிரியர் சி.சிவசேகரம் திருச்செந்திநாதன் எவ்வளவு சிறந்த எழுத்தாளராகியுள்ளார் என்பதைக் கூறியுள்ளார். அவ்வுரையிலிருந்து பின்வரும் பகுதியினை நோக்கலாம். 'ஒரு கிழவரின் உயிரைக் கொண்டு போகத் தயங்கித் தன் கடமை தவறுமளவுக்கு இளம் உயிர்களைப் பறித்துச் செல்லும் யமனிடமே குற்ற உணர்வு ஏற்படுகிறதை அழகாகச் சித்திரிக்கும்போதும் (காணாமற்போனவன்) மகனைப் பற்றிய நினைவில் உருவாகிற பிரமை ஒரு தாயை அவனது கல்லறையை நோக்கி அழைத்துச் செல்வதைக் காட்டும்போதும் (அம்மாவாக அல்ல) நாம் முன்பு அறிந்த ஒரு நல்ல சிறுகதையாளர் இப்போது தன் கதை சொல்லும் ஆற்றலை மேலும் விரிபுபடுத்தித் தனது தரிசனங்களை இலகுவாக நம்முடன் பகிர்வதை நாம் உணரலாம்.

தேசிய கலை இலக்கியப் பேரவைக்கு நாம் நன்றி கூறவேண்டும். அப் பேரவை சிதம்பரதிருச்செந்திநாதனின் எழுத்தார்வத்துக்கு பக்கத்துணையாக நின்று அவருடைய ஆக்கங்களையெல்லாம் வெளியிட்டு வந்துள்ளது. 'வெட்டுமுகம்' என்னுடையதும் அம்மாவினுடையதும் 'மணல் வெளி அரங்கு' என்னும் 3 தொகுதிகளையும் முறையே 1992, 1995, 2002 ஆகிய ஆண்டுகளில் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டது.

இது அவருக்கான ஒரு அடையாளத்தை வழங்குகின்றது. யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தைச்சார்ந்த மக்களின் வாழ்நிலைமைகளை இச்சிறுகதைகள் சித்திரிக்கின்றன. சொல்லுக்கும் செயலுக்குமிடையிலான மாறுபாடு, போலிப் பெருமைகள் போன்றவற்றை அம்பலப்படுத்துவதினூடாக நிஜவாழ்க்கை பற்றிய கேள்விகளை எழுப்புகிறார். இக் கதை ஆசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் என்று தேசிய கலை இலக்கியப் பேரவை அவரை அடையாளம் காணுகின்றது. தேசிய கலை இலக்கியப் பேரவை இவரை அடையாளம் காணுமுன்னர் இவருடைய ஊரைச் சேர்ந்த இளைஞர்கள் இனங்கண்டுள்ளனர்.

இணுவில் கலை இலக்கிய வட்டம்தான் 1986 இல் இவருடைய 'என்றாவது ஒரு நாள்' குறுநாவலை வெளியிட்டு வைத்தனர். திருச்செந்திநாதனுடைய வளர்ச்சியில் ஊடகக்காரர் பலர் கைகொடுத்து வந்துள்ளனர். வீரகேசரி பொன் இராஜகோபால், மல்லிகை ஜீவா, ஈழநாடு பெருமாள், ஈழமுரசு எஸ். திருச்செல்வம், ஈழநாடு வார ஆசிரியர் என். சபாரட்ணம் போன்றவரைக் குறிப்பிடலாம். அவர் இன்னும் பலரை இது தொடர்பாக குறிப்பிடலாம்.

திரு. சிதம்பரதிருச்செந்திநாதன் அறுபதாவது அகவையை அடைந்துள்ளார். அறுபதாண்டு அடைவுகளையும் அறுவடைகளையும் நாம் எண்ணிப் பார்க்கக்கூடிய நேரம் இது. பலருடைய வாழ்த்துக்களை பெறும் இந்த வேளையில் நானும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் அவருக்குத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்வடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
கனடா வளாகம்,
கனடா



திருவள்ளுவர் குறளில் கூறும் ஆழ்ந்த கருத்துக்கு அமைய, மனிதர் தாம் வாழும் சமூகத்தில் வெளிப்படும்போது, தாம் அச்சமூகத்திற்கு என்ன பணி செய்தோம் என்பதை முதலிற் கருத்திற்கொள்ள வேண்டும். அவ்வகையில் நண்பர் திருச்செந்திநாதன் அவர்கள் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழ்ச் சமூகத்திற்கும், கலை இலக்கியத் துறைகளுக்கும் தன்னால் இயன்ற பணிகளைச் செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் விரிவுரையாளராக நான் கடமையாற்றிய காலங்களில் இணுவை யூர் அறிஞர்களுடனும் கலை இலக்கிய நண்பர்களுடனும்மிக்கதொட்புகொண்டிருந் தேன். பேராசிரியர்கள் ப.சந்திரசேகரம், சபாஜெயராஜா, தேவராஜா மற்றும் ஆசிரியர் பஞ்சாட்சரம், இலக்கியவாதி சி. திருச்செந்தி நாதன் என அப்பட்டியல் நீண்டு செல் கிறது. அத்துடன் 'இணுவில் கலை, இலக் கிய இளைஞர் வட்டம் இணுவையூர் சி. திருச்செந்திநாதன் அவர்களின் "என்றா வது ஒரு நாள்..." என்ற குறுநாவல் வெளி யீட்டு விழாவை 12.07.1986 இல் அமெ ரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் மிகச் சிறப்பாக நடத்தியமையைக் குறிப்பிட வேண்டும். அவ்வெளியீட்டு விழாவில் அக்குறுநாவலை வெளியீட்டுரை செய்தவன் நான். அவ்வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றமை இன்றும் நினைவில் உள் ளது. அவ்விழா பேராசிரியர் ப. சந்திர சேகரம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றதோடு, முன்னாள் யாழ்ப்பாண நகர சபையின் ஆணையாளர் திரு.சி. வி. கே. சிவஞா னம் அவர்கள் அங்கு சிறப்புரை ஆற்றியதும் பசுமை நினைவுகளாக உள்ளன.

அரசுப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் திருச்செந்திநாதன் அவர்கள். இக்காலப் பகுதிகளில் அவரது பணிகள் பன் முகமாக அகலக் கால்பதித்திருந்தமையை நான் ஊடக வாயிலாக நன்கறிவேன். குறிப் பாக புதுக்குடியிருப்பில் "எழு கலை இலக் கிய பேரவை" ஒன்றை அமைத்து. கவி ஞர் முல்லைக்கமல், வேலணையூர் சுரேஷ், ஊடகவியலாளர் சத்தியமூர்த்தி முதலானோ ருடன் இணைந்து பல சமூகப் பணிக-ளில் ஈடுபட்ட ஒரு சமூகப்பற்றாளராக அவரை நான் பார்க்கின்றேன். அங்குள்ள இளைஞர்களுக்குக் கலைப் பயிற்சி, கவிதைப் பட்டறை, என்பனவற்றை நடத்தி வந்ததோடு, இளைஞரிடையே இலக்கிய ஆர்வத்தை ஊட்டும் வகையில் இலக்கியப் போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலக்கியப் படைப்பாளி என்ற வகை யில் சிறுகதை, குறுநாவல் என பல்வேறு இலக்கியப் படைப்புக்களுடன் ஈழத் தமிழ் இலக்கியத் தளத்தில் உலாவந்துகொண்டிருக் கும் திருச்செந்திநாதனின் படைப்புக்கள், தமிழ்மொழி வரம்பைத் தாண்டிச் சிங்கள மொழியிலும் அவரது சில சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகவும் அறி கின்றேன். அவ்வகையில் பொதுவான மனித நேயப் பண்பு அவரது படைப்புக்களில் வெளிப்பட்டு நிற்பதை உணர்ந்துகொள்ள லாம்.

சைவ மணங்கமழும் இணுவையம் பதியிலே பிரசங்கியார், நடிகர் எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட தந்தை சிதம்பரநாதனின் வாரிசாக, உத்தமபுத்திர னாகத் தோன்றியவர் திருச்செந்திநாதன் அவர்கள் தமிழ் உணர்வாளராகிய அவரது பிறவிப் பயனும், அவரது தோற்றமும் சமூகத்தால் போற்றப்படுகின்றன.

இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ் மக்களுக்கும் தொண்டு புரிவதற்கு இணு வையூர் முருகன் அவருக்கு நல்லருள் பொழிந்திட வேண்டி வணங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா ஜெயராசா



சமூக வினைப்பாட்டியல் (Social Activism) துறையிலே பன்முக எழுத்தாக்கங்களைப் படைத்து வருபவர் இணுவையூர் சிதம்பரதிருச் செந்திநாதன்ஒடுக்கப்பட்டோர், விளிம்புநிலையினர், சமூகநீதி கிடைக்கப் பெறாதோர் ஆகியோரைத் தமது அனுபவங்கள் வாயிலாகக் கலை இலக்கிய வெளிக்குக் கொண்டுவருபவர்.

பன்முக வெளியீட்டுத் தளங்களில் பன்முக ஆக்கங்களுடன் பெருந் தொகைப் படைப்புக்களை உருவாக்குவதற்கு நிறைந்த அறிகை மற்றும் அனுபவத்திரட்டல் (Schema) முக்கியமானது. அவர் உருவாக்கிக்கொண்ட பரந்த சமூக இடைவினைகளும், தளராத மன உழைப்பும், விதந்து குறிப்பிடப்படவேண்டியுள்ளன.

முரண்பாடான விசைகளுடன் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் சமூக இயங்கியலின் புரிதல் ஆக்க இலக்கியங்களை உருவாக்குதலுக்குரிய அடிப்படையாகின்றது.

சமூகத்திலிருந்து தன்னை அன்னியப்படுத்திக்கொள்ளாது ஆக்க விசை யுடன் தொழிற்படும் இவர் தமது அகவிரிப்பால் நுண்ணிய காட்சி அலகு களைப் புனைவுகள் வாயிலாக வெளிக்கொண்டுவரும் தனித்துவத்து டன் உறவாடுபவர். நாவல், சிறுகதை, மேடை நாடகம், வானொலி நாடகம், கட்டுரை இலக்கியம், திறனாய்வு என்ற பல தளங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுதல், பன்முக ஆற்றல்களுடனும் இதழியல் தொடர்புகளுடனும் நவீன தொடர்பாடற் கோலங்களுடனும் இணைந்த செயற்பாடு, அவையனைத்தோடும் உறவாடி வரும், ஆற்றல் இவருக்கு உண்டு. பன்மை நிலைகளில் எழுத்தாக்கங்களை மேற்கொள்ளல் இருவிதஒன்றிணைப்புக்களுடன் இணைந்தது.

"நெடுங்கோட்டு இணைப்பு" "குறுக்கு முக இணைப்பு" என்றவாறு இருவித ஒன்றிணைப்புக்களும் பாகுபடுத்தப்படும். நெடுங்கோட்டு இணைப்பு என்பது இவரின் எழுத்தாக்கங்களை ஆரம்பநிலையில் இருந்து முதிர்ச்சிவரை நோக்குதல். இது, "நெட்டாங்கு இணைப்பு" என்றும் கூறப்படும். 1970ஆம் ஆண்டுகளில் எழுதத்தொடங்கிய இவரது ஆக்கங்களில் கருப்பொருள் தெரிவிலும், கலாபூர்வமான சித்தரிப்புக்களிலும் "நெடுங்கோட்டு நிமிர்விசை" தொழிற்பட்டு வந்துள்ளமையைக் காணலாம்.

அந்த வளர்ச்சி சமூக நெருக்குவாரங்களுடனும், தமிழ்த்தேசியக் கருத்தியலின் தருக்கங்களுடனும், அக்கினிச் சிதறல்களுள்ளேநின்று, அன்னியப்படாது, மண்ணையும் மக்களையும் நேசித்த மகா அனுபவங்களுடனும் இணைந்தது.

கலைகளுக்குரிய நிச்சயமான சமூக நோக்கும் நொருங்குண்ட மனித மனங்களைக் கலைவெளிக்குக் கொண்டுவருதலும் அவருடைய ஆக்கங்களிலே தொடர்ச்சியான நீட்சியைக் காட்டுகின்றன. பட்டப்படிப்பிலே பெற்ற அறிவு நீட்சியும், நிர்வாகப் பணிக்காலப் பட்டறிவு நீட்சியும், அக்கினிப் பெருக்கோடு நிகழ்ந்த வரலாற்று நீட்சியும் இவரது ஆக்கங்களின் நெடுங்கோட்டு நிலைகளை வளம்படுத்தின என்று கூறலாம். அல்லது கூர்ப்பின் நிமிர்நிலைகள் என்றும் கூறலாம்.

குறுக்குநிலை இணைப்பு அல்லது அகலாங்கு இணைப்பு என்ற நிலைகளிலும் இவரது ஆக்கங்கள் நோக்கப்படக்கூடியவை. தமது சமகாலத்தைய எழுத்துக்களோடும், சமகாலத்தைய படைப்பாளிகளோடும் கொண்ட கலை ஊடாட்டங்களும், கலைப்பகிர்வுகளும் இவரது வளர்ச்சியின் ஒவ்வொரு காலகட்டங்களிலும், ஒவ்வொரு படிநிலைகளிலும் கூர்மையை ஏற்படுத்தியுள்ளன.

நெட்டாங்கு ஒருங்கிணைப்பு, அகலாங்கு ஒருங்கிணைப்பு ஆகிய இருபரிமாணங்களையும் வினைத்திறனுடன் பயன்படுத்திய வேளை தனித்த ஓர் இலக்கிய வகைமையுடன் மட்டும் கட்டுப்பட்டிருக்க முடியாத உளவியல் அழுத்த நிலைகளின் அனுபவங்களே இவரைப் பல்வகைமைகளைப் பயன்படுத்தும் ஆக்க நிலைகளை நோக்கி மேலெழச் செய்தது. புனைகதை நிலை புனைகதை சாராநிலை என்ற வடிவங்களில் இவரது எழுத்தாக்கங்கள் எழுகோலங்கொண்டன.

"என்றாவது ஒரு நாள்" என்ற குறுநாவலும், "முடிவல்ல ஆரம்பம்", "இருள் இரவில் அல்ல", முள்முடி மன்னர்கள்", "மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்" முதலாம் நாவல்களும், "வெட்டு முகம்", "என்னுடையதும் அம்மாவுடையதும்" "மணல் வெளியரங்கு" ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களும் புனைகதை நிலையிலும் சமூகநிலையிலும், இவரை ஆரவாரப்படுத்துகின்றன.

இவரின் புனைகதையாக்கல்கள் ஆழந்து நோக்கப்பட்ட அளவுக்கு புனைகதை சாரா எழுத்தாக்கங்கள் திறனாய்வுப்படுத்தப்படவில்லை. இன்றைய உலக நிலவரத்தின் படி புனைகதை சாரா (Nonfiction) எழுத்தாக்கங்களே. எல்லா மொழிகளிலும் அதிக வாசிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. அத்துறையிலேதான் அதிக நூல்களும் எழுத்தாக்கங்களும் வெளிவந்தவண்ணமுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சூழலிலே புனைகதை சாரா எழுத்தாக்கங்கள் பற்றிய விரிவான ஆய்வுகள், புனைகதைகளுக்கு வழங்கப்பட்ட அளவுக்கு இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை.

சிதம்பர திருச்செந்திநாதனது புனைகதை சாரா எழுத்தாக்கங்களும் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவில்லை. பல்வேறு இதழ்களின் ஆசிரியர் குழுவில் இருந்த வேளை அவர் எழுதிய கட்டுரைகளும் "இதழ்க் கீலங்களும்" (Column) புனைகதை சாரா எழுத்தாக்கங்களிலே முக்கியத்துவம் பெறுகின்றன.

நெருக்கீடுகள்மிக்க சமூக நிலைவரங்களின் மத்தியில், சமூக அறிவு, பொருண்மிய அறிவு, சூழல் நோக்கு, உடல் உளப் பாதுகாப்பு முதலியவற்றை முன்னெடுக்கும் எழுத்தாக்கங்கள் காலத்தின் தேவைகளாக முனைப்புக்கொள்கின்றன. புனைகதைகளால் மேற்கொள்ளப்படமுடியாத சமூகப் பணிகளைச் சிலசமயங்களில் அத்தகைய எழுத்துக்கள் வினைத்திறனுடன் மேற்கொள்கின்றன. புனைகதை சாராத் துறைகளில் திருச்செந்திநாதனுடைய பங்களிப்பு தனித்துவம் மிக்கதும் சமூகப் பயன்கொள் திறனுமுடையது.

கட்டுரை இலக்கியம் என்பது தனித்துவமுடைய ஒரு கலை வடிவம். பின் நவீனத்துவவாதத்திலே குறிப்பிடப்படும் அகவயம் (subjectivity) புறவயம் (Objectivity) ஆகிய வற்றை வேறுபடுத்தும் பிரிகோடுகளைத் தகர்க்கும் வடிவம். காலத்தின் பன்முகத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதும், தமிழ் தேசியக் கருத்தியலை வளம்படுத்தக் கூடியதும், எதிர்கால இலக்குகளை நோக்கி எறிவு செய்யக்கூடியதுமான இவரது கட்டுரையாக்கங்கள் பன்முகத் தலைப்புக்களிலே பல்வேறு புனைபெயர்களிலே எழுதப்பெற்றவை.

"புனைபெயர்புகல்" இதழியல் வளர்ச்சியோடு நிகழும் ஒரு முக்கியமான செயற்பாடு, திருச்செந்திநாதன் அவர்கள் பந்துவகையான புனைபெயர்களைத் தாங்கி தமது எழுத்தாக்கங்களை முன்வைத்தவர். இதழியலைப் பொறுத்தவரை ஏன் புனைபெயர்களில் எழுதுகின்றார்கள் என்பது முக்கியமல்ல எத்தகைய கருத்துக்களை அவற்றினூடாக முன்வைக்கின்றனர் என்பதுவே முக்கியத்துவம் பெறுகின்றன. திருச்செந்திநாதன் முன்வைத்த கருத்துக்கள் சமூகப் பெறுமானங்களுடன் தொடர்புபட்டிருந்தமையை அழுத்திக்கூறவேண்டியிருந்தது.

இதழியல் வளர்ச்சியோடு மேற்கிளம்பிய ஒரு வடிவம் இதழ்க்கீல எழுத்து. "பத்தி எழுத்து" என்றும் அது குறிப்பிடப்படும். தகவற்கையளிப்பு, தகவல் மதிப்பீடு, தகவல் தழுவிய கருத்து வினைப்பாடு (Discourse) முதலிய பல பரிமாணங்களைக் கொண்ட குறுங்கட்டுரை வடிவமே இதழ்க்கீலம். "இதழ்க்கீல எழுத்தாளர்" என்ற பிரிவினரும் இதழியல் வளர்ச்சியோடு தோற்றம் பெற்றுள்ளனர். சிதம்பர திருச்செந்திநாதன் தமிழ்ச்சூழலில் உருவான ஒரு நல்ல இதழ்க்கீல எழுத்தாளர்.

இவரது கலை ஆளுமையும் எழுத்தாளுமையும், ஆக்க நுண்மதியின் தனித்துவங்களுடன் இணைந்தவை. தொடர்ந்தும் எழுதத் தூண்டியவண்ணமிருக்கும். அவரது ஆளுமை விசை தொடரவும், வளரவும் எமது இனிய வாழ்த்துக்கள். நூலுருவில் வெளிவராத அவரது எழுத்துக்கள் தொடர்ச்சியான நூலுருவைப் பெறவேண்டியதன் முக்கியத்துவத்தையும் இவ்வேளையில் வலியுறுத்தவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட பேராசிரியர்,
கலாநிதி என் சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர்
தலைவர், சமூகவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வரலாற்றில் வாழ்ந்தும் அதனை தம் எழுத்தினால் வழிப் படுத்தியும் நிற்கும் எழுத்தாளர்கள் நம் போற்றுதற்குரியவர். சமூகப் பொறுப்புமிக்க எழுத்தாளர்கள் என இவர்களைக் கொண்டாடுகின்றோம். இந்த வகையில் எங்கள் காலத்தின் படைப்பாளியாக பெருமை பெறு-பவர் சிதம்பரதிருச்செந்திநாதன். அவரைக் கொண்டாடும் இந்த வேளை மகத்துவமானது.

திருச்செந்திநாதனைக் கொண்டாடுவது என்பது அவர் வாழ்வும் எழுத்தும் சொல்லிய பாடங்களைக் கொண்டாடுவதாக அமையும்.

சொல்லும் செயலும், எழுத்தும் வாழ்வும் என்றான மென்மையே திருச்செந்திநாதன் எமக்களித்த மிகப்பெரிய பாடம் என்பேன்.

"ஒருவன் எழுத்து, அவனது செயற்பாடு..., சமூகம் மீதான அவனது கரி சனை எல்லாவற்றுக்கும் நெருங்கிய தொடர்புஉண்டு. இவற்றில் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரித்துப்பார்க்கமுடியாது."

என்ற கருத்தியல் தெளிவு, இன்றுவரை எந்த இடரினும் தளராத அவரின் படைப்பு நெறியாகவும், வாழ்வு நெறியாகவும் பெருமை தருகின்றன.

தாம் வாழ்ந்த வாழ்வினையே மறுத்தும் பழித்தும் "தேடிச் சோறு நிதம் தின்னும்" மனிதரிடை திருச்செந்திநாதன் தனித்துவமாய் துலங்குகின்றான்.

பாரதி ஆதங்கப்படும்

'முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந்தேர்ந்த...'

காலக் கலைஞராக அவரது வாழ்வின் தரிசனம் எமக்கானது.

***

திருச்செந்தி நாதனின் படைப்புலகம் பன்முகத்தது. சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை விமர்சனம், இதழியல் என விரிந்த தொடுபரப்பில் பயணித்தபோதும் சிறுகதையே அவரது சிறப்புத்துறையானது.

காலத்தின் கதையை, அதன் வலிகளை, வல்லமைகளைப் பேசுதற்கு உகந்த ஊடகமாக அமைந்ததுடன் அவருக்கான அடையாளத்தை தருகின்ற துறையாகவும் சிறுகதை அமைந்ததெனலாம்.

திருச்செந்திநாதன் படைப்புகள் யாவும் எங்கள் சமூகவரலாற்றை, வாழ்வின் இயங்கியலை, மேம்பாட்டுக்கான இலக்குகளை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த இனவரைவியல் மூலங்கள் என்றால் மிகையில்லை. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் ஈழத்து கலை வரலாற்றில் தவிர்த்து விடப்படமுடியாத ஆளுமையாக அவரது எழுத்தும் வாழ்வும் மதிப்புப் பெறுகின்றன.

எழுபதுகளில் எழுத்துலகில் பிரவே சித்த திருச்செந்தி நாதனின் எழுத்துக்கள் யாவி னும் முரண்பாடுகளால் ஆன உலகின் இயற்கை, சுயவிசாரணையாகவும், சமூக விசாரணையாகவும், நுண்ணிய விவரணங் களாகவும் வெளிப்பட்டன.

காலங்காலமாக சமூகத்தில் நிலவி வரும் அகமுரண்பாடுகள் மேலாண்மை அவ லங்களோடு கூர்மையடைந்த புற மேலாண்மை அழுத்தங்களுக்குள்ளும் நசிந்து நலிந்த சமூக நீதியை வாழ்வுக்கான அர்த்தத் தினை மீட்டெடுத்தலினை அவாவிநிற்கும் இவரின் படைப்புகள் ஆரவாரமில்லாத அழகு கொண்டவை.

இந்த அழகின் ஆதார சுருதியாக அமைந் திருப்பது ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்ட உண்மைக்கு நெருக்கமான அவரது வாழ்க்கை என்றால் மிகையில்லை.

***

இந்த வாழ்வின் அழகுக்குப்பின்னால் தந்தை வழி முதுசமாக அவருக்கு வாய்த்த இள மைக்கால சமூகமயமாக்கம் கொண்ட இடம் முக்கியமானது.

'இணுவையூர் சிதம்பரதிருச்செந்தி நாதன்' என்ற நீண்ட முகவரியோடு எழுத்துலகில் இடம்பிடித்த திருச்செந்தி நாதனின் பெயருக்குள் இரண்டறக் கலந்து நிற்கும் அவரின் எந்தை இணுவையூர் த.சிதம்பரநாதன் பற்றி இங்கு குறிப்பிட முடியாமலிருக்கமுடியாது.

சிதம்பரநாதன் அவர்களுடன் அந்நாள் நாடக அரங்குகளிலும், கலை நிகழ்வுகளிலும் உறவாடிய, கலையாடிய கணங்கள் யாவும் இன்னமும் என் நெஞ்சிலே காக்கப்பட்டுள் ளன. அன்புகனிந்த, சமூக நேசிப்பு மிகுந்த அவ ரின் அகமும் முகமும் அப்படியே திருச் செந்திநாதனுக்குள் அங்கமாகிய வண்ணத்தை நீள நினைந்து நான் நயப்பதுண்டு.

மஹாகவி சொல்லிய அப்பனே மகனா கிய அற்புதம் அரசசேவையில் ஓர் ஊழிய னாக அமைந்த இருப்பிடை கலை யையே தன் வாழ்வாக கண்டவர் சிதம்பர நாதன். சமூக மேம்பாட்டுக்கான தொடர்பூட கமாக நாடகத்துடன் மரபுவழி கலைவடிவங் களான கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு என்ப வற்றினை பயன்படுத்தி நிறைவுகண்டவர். தந்தைவழி மைந்தனும் ஓர் அரச ஊழியன். அதேவேளை தந்தையைப் போலவே நெஞ் சுக்கு நெருக்கமான கலை வாழ்வையே தன் வாழ்வாக கண்டு நிறைபவர்.

இவ்வாறே ஒரு தொழிற்சங்கவாதியாக மனித சமூக உரிமைகளை - சமூக நீதியை காக்கும் பணியில் தன்னை ஆழ ஈடுபடுத் திக்கொண்டவர் இணுவையூர் சிதம்பரநாதன். அவ்வழி திருச்செந்திநாதன் வாழ்வும் சமூக விடுதலைக்கான உயிர்ப்புடன் இரண்டறக் கலந்தது.

***

சமூக விடுதலைக்கான இந்த உயிர்ப் பினை அவர் எதிர்கொண்ட சவால்களும் துயரங்களும் சாதாரணமானவை அல்ல. யதார்த்த வாழ்வின் இருப்பு முதல், கலை யும் பண்டமாகிய இன்றைய சந்தைக் கலா சாரத்தில் உண்மைப் படைப்பாளிகளின் இருப் புப் பற்றிய கவலைகள் வரை நிறையவே கொண்டிருந்தபோதும் வாழ்வின் மீதும் சமூகத்தின்மீதும் அவர் கொண்ட நேயம் குறைந்ததில்லை. அழகிய நாளையைப் படைக் கும் நம்பிக்கையில் தளர்ந்ததில்லை.

அவரது ஆரோக்கியமான இந்த கலைப் பயணத்தில் அவரது ஆளுமை நிழலில் வளர்ந்த விழுதுகளும் நண்பர்களும் இணைந்து எடுக்கும் மங்கலத்தில் இசைந் திடக் கிடைத்த இந்த வாய்ப்பில் பெரிதும் அகமகிழ்கின்றேன்.

'நல்லன எல்லாம் நிறைந்திட
நாதனே நீடு வாழி! என
எல்லையிலா அன்புடன்
வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் க. தேவராஜா
தலைவர் வணிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களின் மலருக்கு வாழ்த்து வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். என்னிடம் கல்விகற்ற அவர் பெற்றுவந்த ஒவ்வொரு உயர் நிலையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். வணிகத் துறைப் பட்டதாரியான அவர் அரசசேவையில் இணைந்துகொண்ட நாள்முதல் பொதுமக்களுக்கு ஆற்றிவந்த சேவைகள் பாராட்டப்படாமல் இருக்கமுடியாது. மூன்று தசாப்பதங்களுக்கு மேலாக உடுவில், யாழ். கச்சேரி, புதுக்குடியிருப்பு, கரைச்சி, தெல்லிப்பளை போன்ற பிரதேச செயலகங்களில் பொது முகாமைத்துவ உதவியாளராகவும் நிர்வாக அலுவலராகவும் பணிபுரிந்த அவரின் சேவைகள் பொதுமக்களால் பாராட்டப்பட்டவையாகும். மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம் கொண்ட அரச அலுவலராகப் பணிபுரிந்த அவர் நேர்கணியச் சிந்தனை கொண்டவராக விளங்கினார். தமிழ் தேசியத்தின் மீது அளவு கடந்த பற்றுக் கொண்ட அவர் அதற்காக உழைத்து வந்தமை யும் கண்கூடாகும். மொத்தத்தில் என்றும் சிரித்த முகத்துடன் பணியாற்றிய அரச ஊழியர்களின் வரிசையில் வைத்துப் பார்க் கப்படவேண்டிய ஒருவராக சிதம்பர திருச்செந்திநாதன் விளங்குகின்றார்.

திரு சிதம்பர திருச்செந்திநாதன் அவர் கள் மாணவனாக இருந்த காலத்திலிருந்தே சிறுகதை எழுத்தாளனாகத் திகழ்ந்தவர் என்பதனை நானறிவேன். அவரது சிறுகதை கள் வீரகேசரி, தினக்குரல், ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, சரிநிகர் போன்ற பல பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதனை காண முடியும். நல்ல சிறுகதை, நாவல், மேடை நாடகம், வானொலி நாடகம், விமர்சனக் கட்டுரைகள் என்பவற்றை ஆக்கும் பல்பரி மாணம்கொண்ட ஆளுமை இருப்பதே அவ ருக்குரிய தனித்துவமாகும். அவரது சிறு கதைகள் என்றுமே சமூகத்தைப் பிரதி பலிக்கும் பண்பினைக் கொண்டிருந்த காரணத் தால் பொதுமக்களால் விரும்பி வாசிக்கப்படு பவையாக அவர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன எனக் கூறினால் அது மிகையா காது. அதே போன்றே மேடை நாடகங்களும் வானொலி நாடகங்களும் சமூக சீர்திருத்த நாடகங்களாக இருந்தமையால் யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் மேடை யேற்றப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்க தாகும். இவரது சிறுகதைகளதும் மேடை நாடகங்களதும் தரமே அவற்றை சிங்களத் தில் மொழிபெயர்க்கவும் காரணமாக அமைந்ததெனலாம். மொத்தத்தில் நாடறிந்த உலகறிந்த எழுத்தாளராக வலம்வந்து கொண்டிருக்கும் திரு.சிதம்பர திருச்செந்தி நாதன் விளங்குவது எமக்கெல்லாம் பெருமை தருவதாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

திரு. சிதம்பர திருச்செந்திநாதன் அவர் கள் எமது சமூகத்தின் சீர்திருத்தவாதியாக இனம்காணப்பட்டவர் எனக் கூறுவதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை. அரச ஊழியராக இருந்துகொண்டே சமூகத் தில் இடம்பெறும் பல்வேறு அநீதிகளை எழுத்தாயுதத்தால் வெற்றிகண்ட பெருமை இவருக்குண்டு. பலர் தவறுகளைக் கண்டும் எதுவும் கூறாது மௌனிப்பதுபோல் இவர் இருக்கவில்லை. இதன் காரணமாகவே வெளி நாடுகளில் இவரின் கொள்கைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுகின்ற எழுத்தாளர் கூட்டம் இருப்பதனை அறிந்து உள்ளம் மகிழ்கின்றேன். லண்டனில் வாழுகின்ற சாம்பிரதீபன் உட்பட பல இலக்கியப் படைப் பாளிகளை தோற்றுவித்த இவர் தொடர்ந் தும் இலக்கியப்படைப்புக்களை உருவாக்கி வருவது பாராட்டுதற்குரியதாகும். மனம் கவர்ந்த அரச ஊழியராக, சிறுகதை எழுத்தா ளனாக, நாவலாசிரியராக, மொத்தத்தில் நல்ல இலக்கியவாதியாக சமூக சேவையாள ராக மிளிரும் அவரது பெருமைகளை எமது சமூகம் என்றுமே பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர் அரச சேவையில் இளைப்பாறியபோதும் சமூக சேவைகளில் மேலும் இணைந்துகொள்ளவேண்டும் என் பது அவரது ஆசிரியர் என்ற வகையில் எனது விருப்பமாகும். அவரது பல் பரிமாணம் கொண்ட பணிகளைப் பாராட்டு வதுடன் எதிர்காலத்தில் நல்ல உடலாரோக் கியத்துடன் குடும்பத்தினருடன் அவர் மகிழ்ச் சியாக வாழவேண்டுமென இறைவனை இறைஞ்சுவதுடன் அவரது சேவை தொடர எனது வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.வ. கானமயில்நாதன்
பிரதம ஆசிரியர்
உதயன்



எழுத்துத் துறையில் தாம் தடம் பதித்தது போன்று, இளைய தலைமுறையினரையும் அதன்பால் ஈர்க்கச் செய்யவேண்டும் என்ற பெருவிருப்பு உடைய மூத்த ஈழத்தமிழ் எழுத்தாளர்களில், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனும் ஒருவர்.

அரசசேவையில் முப்பத்துநான்கு ஆண்டுகள் பணி செய்த அவர், எழுத்துத் துறையில் இதுவரை நாற்பத்து இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளார். இன்னும் அதனைத் தொடரவேண்டும் என்ற இளமையுடன் செயற்படுகின்றார்; அதன்பால் மிடுக்குடன் மிளிர்கிறார்.

இத்துறையில் இளம் சந்ததியினர் பலரை ஊக்குவித்து வளர்த்ததிலும், இவருக்குப் பங்கு உண்டு. அவர்களில் பலர், புலம்பெயர் நாடுகளில் தமது எழுத்தாற்றலை மேன் மேலும் வளர்த்து, அங்கு தமிழைப் பரப்புகிறார்கள்.

இலக்கியத் துறை சார்ந்து பணியாற்றியதுபோன்றே, இவர் எமது பிரதேசங்களின் பொருளாதாரத்துறை உயர்ச்சி அடைவதனை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்ட "ஆதாரம்" பொருண்மிய சஞ்சிகை ஊடாக, அத்துறை சார் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கினார். இவரது இலக்கியம், பொருளியல் சார் படைப்புக்கள் உதயன், சஞ்சீவி, வீரகேசரி, ஈழநாதம், ஈழமுரசு வார மலர், அமிர்த கங்கை, எக்காளம் ஆகிய வெளியீடுகளில் பிரசுரமாகிய வேளைகளில், வாசகர்களை மிகவும் கவர்ந்தன. அந்த வெளியீடுகள் சிலவற்றில் இவர் இணைந்து பணியாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

இவர் சிறந்த நாடகவியலாளர் என்பதால், அவரது எழுத்தாற்றலின் வன்மைக்கும், கலைத்துறைசார் வாண்மைக்கும் 'பதிவும் பகிர்வும்' பெரும் மகுடம் சூட்டுகின்றது.

"வாழ்க்கைச் சிதறுகை ஏற்படுத்திய மனித நிலைச் சோகங்களை இவரது இலக்கிய உணர்திறன் மிகச் சுலபமாக இனங்கண்டு கொள்கிறது" - என்று மறைந்த தமிழ்ப் புலமையாளர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, முந்தைய வெளியீடு ஒன்றுக்கு வழங்கிய சிறப்புரையில் தெரிவித்திருப்பது இன்று கருத்தில் கொள்ளத்தக்கது.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் மற்றும் நாடகத் துறைகளில் சம காலத்தில் ஒளிர்பவர்களில் சிதம்பர திருச்செந்திநாதன் முன்னிலை வகிக்கிறார். அவரது பணி ஓய்வு நிலையிலும் தொடர்ந்து மிளிரட்டும்.

நூலாசிரியர் தமது பல்துறைசார் திறன்களையும் புடமிட்டு, மேன்மேலும் வளர்ந்து, எமது தமிழ்ச் சமூகத்திற்குத் தொடர்ந்து செழுமை மிகு தொண்டாற்றட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.எஸ். பெருமாள்

மூத்த ஊடகவியலாளர்



70களில் ஈழநாடு பத்திரிகையின் வாரமலர், ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் இளம் எழுத்தாளர்கள் பலருடன் எனக்கு தொடர்பு ஏற் பட்டுள்ளது. அவர்களில் பலரையும் நான் மறந்துபோய்விட்டேன். அதே நேரம் அவர்களில் சிலர் இன்னமும் என்னை மறக்காமல் இருக்கிறார்கள். அவர் கள் ஒருவராகவே அன்பர் திருச்செந்திநாதன் விளக்குகின்றார்.

ஏறக்குறைய 40 வருடங்களுக்கு பின்னரும் - அந்தப் பழைய தொடர் புகளை நினைவில் வைத்திருக்கும் அன்பர்களை சந்திப்பது அபூர்வம்.

முன்னர் சொன்னதுபோல் நான் மறந்துபோனேன் என்பதை விட அவர் களும் மறந்துபோனார்கள். சந்திக்க நேர்ந்தாலும் எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறதே என்பார்கள். நானும்கூட பத்திரிகை துறையின் இந்த 55 ஆண்டுகால அனுபவத்தில் எத்தனையோ பத்திரிகையாளர்களை சந்தித்திருக் கிறேன். பயிற்சியளித்திருக்கிறேன். உறவினர்கள்போல பழகியுமிருக்கிறேன். அவர்களில் அனைவரையும் நினைவில் வைத்திருப்பதென்பது சாத்தியமற்றது. ஒருசிலர் நினைவில் இருக்கிறார்கள். நான் அவர்களை கண்டு பழகிய காலத் தில் அவர்கள் இருந்ததைவிட வாழ்க்கையில் தொழில்முறையின் மாத்திர மன்று உடல் அளவிலும் மாறியிருப்பது முக்கிய காரணமாக இருக்கலாம். ஆனால் திருச்செந்திநாதனில் என்னால் மறக்கமுடியாத அம்சங்கள் பல இருக் கின்றனபோலும். ஒன்று முன்னரே குறிப்பிட்டதுபோல அவரது சிரிப்பு அதுமட்டுமல்ல அந்த காலத்துக்குப் பின்னர் வெகுகாலம் கழித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் சந்தித்தபோது உடனடியாகவே என்னால் அவரை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அத்துடன் எனது திருமணம் தொடர்பாக றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வினை அவர் நினைவூட்டியதுடன் அந்தச் சந்தர்ப்பதில் நாங்கள் அனுப்பியிருந்த அழைப்பிதழின் பிரதியையும் கையோடு கொண்டுவந்து காட்டினார்.

நான் முன்கூறியதுபோல் இளம் எழுத்தாளர்கள் பலருக்கு என்னால் களம் அமைத்துக்கொடுக்கமுடிந்தது. ஈழநாடு பத்திரிகை அந்த வாய்ப்பை வழங்கியிருந்தது. அவ்வாறான அனேகர் இப்பொழுதும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் எத்தனைபேருக்கு என்னையும் அவர்களின் ஆக்கங்கள் வெளிவருவதற்கு களமாக விளங்கிய ஈழநாடு வாரமலரையும் நினைவில் இருக்கும் என்று சொல்லமுடியவில்லை. அக்காலத்தில் அறிமுகமானவர்தான் திருச்செந்திநாதன் அவர்களும் அவரது ஆக்கங்கள் பலவும் ஈழநாடு வாரமலரில் வெளிவந்திருந்தன.

ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. ஒரு சிறுகதை பிரசுரத்துக்கென வந்திருந்தது. அதற்குமுன் அக்கதையின் ஆசிரியரின் ஆக்கம் எதுவும் எமது வாரமலரில் வெளிவந்திருக்கவில்லை. அழகான கையெழுத்தில் மிக அனுபவசாலிபோன்று அச்சிறு கதையை அவர் எழுதியிருந்தார். அக்கதையை குறிப்பிட்ட எழுத்தாளர்தான் எழுதியிருப்பாரோ என்ற எண்ணம் தோன்றியது. புதிய எழுத்தாளர் என்றால் அதில் நான் கைவைத்து திருத்தம் ஏதும் செய்யவேண்டியிருந்திருக்கும். அவ்வாறு எதுவும் இல்லை என்பதால் இக்கதையை அவர்தானா எழுதினார் என்பதை உறுதி செய்துகொள்ள விரும்பினேன். அதனால் அவருக்கு கடிதம் எழுதினேன். அந்த சமயத்தில் ஏற்கனவே எழுதி வந்த அன்பர்கள் சிலரிடம் அக்கதையின் ஆசிரியர் பற்றி உரையாடல்களின் போதுவிசாரிக்கலானேன். அப்படிவிசாரிக்கப்பட்டவர்களில் எமது காரியாலயத்துக்கு அடிக்கடி வந்து செல்பவராய் இருந்த திருச்செந்திநாதனும்ஒருவர். அந்தப்பெண்எழுத்தாளரைப்பற்றி விபரமாக அவர் கூறியிருந்ததுடன் குறித்த பெண் எழுத்தாளர் வேறு பத்திரிகைகளில் எழுதிவருவதுபற்றியும் கூறினார். அந்தப் பெண் எழுத்தாளர் வேறு யாருமன்று இன்று நம் நாட்டில் வெளிவரும் சகல பத்திரிகைகளிலும் தமது ஆக்கங்களை வெளியிட்டு வருபவரும் நாடறிந்த பெண் எழுத்தாளர்களில் ஒருவருமான கோகிலா மகேந்திரன் அவர்களே.

ஈழநாடு வாரமலரில் வெளியான அவரது சிறுகதை எது என்பது எனக்கு இப்போது நினைவில் இல்லை. ஆனால் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களுடன் பிற்காலத்தில் இலக்கிய தொடர்புகள் குறையவில்லை. அவர் எழுதி வெளியிட்ட சிறுகதை தொகுப்பு ஒன்றின் வெளியீட்டு நிகழ்வில் நானும் கலந்துகொண்ட நினைவு இருக்கிறது. பத்திரிகை தொடர்பாக நான் எழுதிவெளியிட்டிருந்த நூலின் வெளியீட்டு நிகழ்வில் என் அழைப்பின் பேரில் மகிழ்வுடன் கலந்துகொண்டார். பொன்னாடையொன்றும் தன்சார்பில் போர்க்கச்செய்து மகிழ்வித்தார்.

இவ்வாறு பல பெண் எழுத்தாளர்கள் வளர்வதற்கும் ஈழநாடு வாரமலர் களமாக அமைந்தது. நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் காரணமாகவும் இளைஞர்களின் போராட்டங்கள் காரணமாகவும் அப்பத்திரிகை இல்லாமல் போய்விட்டது. ஆனால் அதனால் வளர்ந்த திருச்செந்திநாதன் போன்றவர்கள் மறக்காமல் இருப்பது மகிழ்ச்சி தருவதாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர்
சு. செல்லத்துரை
ஓய்வுநிலை அதிபர்,
இளவாலை



ஒரு தாய்க்குத் தன் மகனைச் சான்றோன் என்று உலகம் போற்றுவதைக் கேட்பதை விடப் பெரிய இன்பம் வேறு எதுவும் இல்லை. அதே போல ஒரு ஆசிரியனுக்குத் தன்மாணவன். உயர்ந்த சாதனையாளன் என்று உலகம் போற்றுவதைக் காண்பதைவிடப் பெரிய பெருமையும் மகிழ்ச் சியும் வேறொன்றுமில்லை.

எனக்கு இந்தப் பெருமையையும் மகிழ்ச்சியையும் தந்துகொண்டு இருப்பவர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள். இவர் என்னிடம் அறுபது களில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்றவர். என் னைத் தன் ஆசிரியராக என்றும் நேசிப்பவர்.

இவருடைய தந்தையார் இணுவில் தம்பையா சிதம்பரநாதன் அவர்கள் பிறவிக்கலைஞர். "நிலத்தன்மை பயிர்க்குளதாகுமாம்" என்ற பாரதி யின் வாக்குக்கமையப் பிறந்த மண்ணான இணுவிலுக்குரிய கலைவளம் இயல்பாகவே வாய்க்கப் பெற்றவர்.

இனிமையாகப் பாடுவார். அழகாக நடிப்பார், வில்லிசை, கதாபிரசங்கம், நகைச்சுவை ததும்பும் பேச்சு, வீறாப்பான தொழிற்சங்கப் பேச்சு, முதலாம் கலைகளில் வல்லுநர். கம்பீரமான தோற்றப்பொலிவு, முகவசீகரம், எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடமும் பொருந்தக்கூடிய உடற்கட்டு, குரல்வளம் எல்லாம் வாய்க்கப் பெற்றவர். அறுபதுகளில் மன்னார்க் கலாமன்றத்தில் நாம் நிகழ்த்திய அத்தனை அரங்க ஆற்றுகைகளிலும், மன்னாரில் மட்டுமல்ல யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் தன் கலைத்திறனால் புகழ்பெற்றவர். எமக்கும் பெருமை தேடித்தந்தவர்.

தந்தை அறிவு மகன் அறிவு என்பார்கள் அதற்குப் பொருத்தமாகத் தந்தைக்கும், தான் பிறந்த மண்ணுக்கும் தன் ஈழத்தமிழ் இனத்துக்கும் பெருமை தேடித்தந்து கொண்டிருக்கிறார். ஆக்க இலக்கிய வானில் ஒளி விட்டுப் பிரகாசிக்கும் பெரு நட்சத்திரமாக விளங்குகிறார் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள்.

சிறுகதைகள், நாவல்கள், வில்லுப் பாட்டுகள், மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் முதலான பல்துறை ஆக்க இலக்கிய கர்த்தாவாகத் திகழும் இவருடைய ஆக்கங்கள் ஈழத்தின் அத்தனை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் இவரது கலை இலக்கியப் பணி எங்கள் மண்ணையும் மக்களையும் நேசித்து வாழவைக்கும் இலட்சிய தாகம் கொண்டவையாகத் திகழ்கின்றன.

1980இல் அரச பொது முகாமைத்துவ சேவையில் இணைந்த இவர் பல பதவி உயர்வுகளைப் பெற்று நிர்வாக உத்தியோகத்தராக இருந்து 2014.5.28 இல் ஓய்வு பெற்றவர். இவருடைய அரச நிர்வாக சேவை வடமாகாணத் தமிழரின் வாழ்வை வளம்படுத்த வாய்ப்பாக அமைந்தது. 2007 - 2009 காலகட்டத்தில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில்ஏற்பட்டபெரியபிரளயத்தில்அல்லலுற்ற மக்களுக்கு ஆறுதல் தருவதாய் இருந்தமை போற்றுதலுக்குரியது. தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஏற்பட்ட அல்லல்களுக்கு மத்தியிலும் மன உறுதியுடன் செய்த மக்கள் சேவையைப் போற்றாதவர்கள் இல்லை எனலாம்.

நெருக்கடிகள் பல நிறைந்த அரச சேவைக்கு மத்தியிலும் தனக்குரிய இலக்கியப் பணியைத் தளரவிடாது பட்ட துன்பங்களையே உரமாக மாற்றி இவர் செய்த படைப்புகள் காலத்தால் அழியாதவை மட்டுமல்ல காலத்தின் பதிவுகளாக நிலைக்க வல்லவை.

தான் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளியாக மட்டுமன்றிப் பல பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், மிக நெருக்கடியான காலகட்டங்களிலும் பணி செய்த பெருமை இவருக்கு உண்டு.

இதுவரை பல சிறுகதைத் தொகுப்புகள் நூலுருப்பெற்றிருப்பதும், சில சிறுகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதும் பலமேடை, வானொலி நாடகங்கள் பரிசுபெற்றிருப்பதும் பெருமைக் குரியன.

தான் கலை இலக்கியப் படைப்பாளியாக இருப்பதுடன் பலரை உருவாக்கிய பெருமையும் இவருக்கு உண்டு. நம் ஈழத்தில் மட்டுமன்றிப் பல புலம்பெயர் நாடுகளிலும் இவரால் உருவாக்கப்பட்ட கலை இலக்கியப் படைப்பாளிகள் இவர் பெயர் சொல்லித் தம் பெயர் விளங்க இலக்கியப் பணி செய்வது இவருக்குரிய விசேடமான தனித்துவமான பெருமை எனலாம்.

சிதம்பர திருச்செந்திநாதன், ஈழத் தமிழ் மண்ணிற்குக் கிடைத்த ஒப்பற்ற நன்மணியாக என்றும் நின்று நிலவுவார் என வாழ்த்துவதில் பெருமையும் மகிழ்வும் அடைகின்றேன். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வி.பி. சிவநாதன்
கலைப்பீடாதிபதி
பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் ஈழத்தின் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளில் ஒருவர். சிறுகதைகளும் நாவல்கள் சிலவும் எழுதி ஈழத்தமிழர்களின் விருப்பத்துக்குரிய எழுத்தாளராக இன்றுமுள்ளார். ஒரு மனிதன் ஒரு குடும்பம் ஒரு சமூகம் ஒரு கிராமம் ஒரு ஊர் ஒரு நகரம் ஒரு நாடு ஒரு தேசம் மக்கள் கூட்டம் இளைஞர்கள் தாய், தந்தை, அக்கா, தங்கை, தம்பி, காடு, மலை, ஆறு, குளம், குட்டை, தெரு திண்ணை, தெரு ஒழுங்கை, பூ மலர், மரம், செடி, கொடி எல்லாமே எழுத்தாளனுக்கு கருப்பொருளாகும். இவை எல்லாவற்றின் மீதும் திருச்செந்திநாதனின் பார்வைபட்டுள்ளது. இவற்றைவைத்து கதைகளை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளனின் பார்வையும் தரிசனமும் மானிடம் தழைக்க உதவ வேண்டும். அன்பும் காதலும் கருணையும் பாசமும் மகிழ்ச்சியும் துன்பமும் வெற்றியும் தோல்வியும் வாழ்வின் தரிசனங்கள் தான். இவற்றையே கதைகளாக்கி வாசகர்களை நிஜ உலகில் வாழ்கிறோம் என்பதை உணர்த்தியுள்ளார் வாசகர்களை வெறும் கனவுலகிலும் கற்பனையிலும் வாழப்பழகாமல் மக்களோடு மக்களாக வாழவிடுவதையே தனது படைப்பின் இரகசியமாக வைத்துள்ளார். இதற்கு சான்றுகளாக பின்வருவன உள்ளன.

குறுநாவலாகவுள்ள "என்றாவது ஒரு நாள்" நாவலாக எழுதப்பட "முடிவல்ல ஆரம்பம்", "இருள் இரவில் அல்ல", "முள்முடி மன்னர்கள்", "மீண்டும் புதிதாய் பிறப்போம்", என்பவையும் காலத்தின் பிறப்பாக்கமாகவுள்ளன. இங்கு இவை எழுதப்பட்ட காலம் சம்பவங்கள் இடம்பெற்ற பிரதேசம் முக்கியமானதாகவுள்ளது. இந்நாவல்களில் படைக்கப்பட்ட கதாபாத்திரங்களும் வார்க்கப்பட்ட விதமும் வளர்க்கப்பட்ட பாங்கும் அவருக்கேயுரிய பாணியில் அமைந்துள்ளன.

அவரால் எழுதப்பட்ட பின்வரும் சிறுகதைத் தொகுப்புக்களும் கவனத்தில் எடுக்கப்படவேண்டியவை. "வெட்டு முகம்" (1993) "என்னுடையதும் அம்மாவினுடையதும்" (1995) மணல்வெளி அரங்கு (2002) அத்துடன் இவரது சிலபடைப்புக்கள் சிங்களமொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக "மேன் மக்கள்" என்ற சிறுகதையைக் குறிப்பிடலாம்.

நண்பர் திருச்செந்திநாதன் எழுத்தாளராகவே எனக்கு அறிமுகமானவர். எனக்கு நாவல் சிறுகதைகள் வாசிக்கவிருப்பம் என்பதை புத்தக வெளியீடுகளில் பார்வையாளராக நான் சென்றபோது சந்தித்து உரையாடியதால் இருவரிடையேயும் பழக்கமேற்பட்டது.

பின்னர் அவரது நாவல் ஒன்றையும் சிறுகதைத் தொகுதி ஒன்றையும் மதிப்பிட்டு உரையாற்றும் சந்தர்ப்பத்தை எனக்குத் தந்தார். அவ்விதமாக ஆரம்பித்த தொடர்பு நட்பாகி பல இலக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

இக்கலந்துரையாடலில் அவரது சிறுகதைகள், நாவல்கள் பற்றி கடுமையான வாதப்பிரதிவாதங்களும் இடம்பெறுவதுண்டு. இவையே சிலவேளைகளில் அவரது கதைக்கு கருப்பொருளாய் அமைந்து விடுவதுமுண்டு. அமைதியும் கிராமியப் பண்பும் அவரிடம் மேலோங்கி இருந்ததால் மனிதநேயம் அவரிடமிருந்தது. எதைச் சொன்னாலும் கோபப்படமாட்டார் அமைதியாக பதிலளிப்பார். அழகுணர்ச்சி கருணை அன்பு பாசம் நிறைந்தவராக இருப்பதால் சிறுவர்கள் முதல் முதியோர் வரை அவரது வாசகராக இருப்பதை நான் அறிவேன். வன்னியில் கடமையாற்றும் காலங்களிலும் தனது எழுத்துப்பணியை கைவிடவில்லை.

மிக நோய்வாய்ப்பட்டு இருந்த காலங்களிலும் அவர் எழுதினார். இன்றும் எழுதுகின்றார். ஒரு எழுத்தாளனை அவனது படைப்பூடாகவே பார்க்கவேண்டும் எதிர்காலத்தில் அவர் படைத்த இலக்கியங்கள் அவரது பெயருக்கும் புகழுக்கும் சான்றாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசபை நடராஜர்
ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர்,
பன்னாலை, தெல்லிப்பழை



சிதம்பர திருச்செந்திநாதனைப்பற்றி எழுதும்போது அவரது தந்தை யார் சிதம்பரநாதனுடனான நட்பே எனக்கு நினைவில் வருகி றது. 1965களில் நானும் சிதம்பரநாதனும் யாழ்ப்பாண காணிப் பதிவகத்தில் சமகால உத்தியோகத்தர்களாகப் பணியாற்றி வந்தோம். அப்பொழுதெல்லாம் அவரின் தந்தை சிதம்பரநானின் நாடகங்களையும், பிரசங்கங்களையும் பேச்சுக்களையும் வானொலி மூலமாகவும் நேரடியாகவும் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு வாய்த்திருந்தது.

தந்தை எட்டடி பாய்ந்தால் தனயன் பதினாறடி பாய்வான் என்ற முதுமொழியை சிதம்பரதிருச்செந்திநாதன் நிலைநிறுத்தியவர். தந்தையைப் போலவே அவரது மகன் திருச்செந்திநாதன் தன் இளவயதில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியமனம் பெற்று முதலில் உடுவில் பிரதேச செயலகத்திலும் பின்னர் யாழ்ப்பாணம் கச்சேரியில் உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை ஓய்வூதியக் கிளை போன்றவற்றிலும் கடமைபுரிந்தார். இளவயதும், சுறுசுறுப்பான அவரது அணுகுமுறைகளும் பணிநேர்த்தியும் அங்கு வேலை செய்துவந்த எல்லோரையும் மிகவும் கவர்ந்திருந்தன. அக்காலப்பகுதியில் அவர் எழுத்துலகிலும் செல்வாக்குச் செலுத்தினார்.

தனது தொழில்மீது அவருக்கிருந்த விசுவாசம் அவருக்குப் பதவி உயர்வுகளை வழங்கிற்று. படிப்படியாகப் பதவி உயர்வுபெற்று பல கிளைகளில் பல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் கடமையாற்றினார். வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றி சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அவர் பணியாற்றுகையில் "இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற வள்ளுவன் வாக்குக்கமைய பலரிடமும் வேலைகளை பொருத்தமுறப் பகிர்ந்தளித்து வேலைசெய்வித்த திறன்கண்டு வியந்திருக்கின்றேன். ஒரே சமயத்தில் பல்வேறு செயல்களைக் கவனிக்கவும் புரியவும் ஆற்றல் பெற்றிருந்த இவரை அட்டாவதானி எனக் கூறுவது சாலப்பொருந்தும்.

இவர் 2014.05.28ம் திகதியிலிருந்து ஓய்வு பெறும்போது அங்கு பணிபுரிந்த அத்தனைபேருமே அவர்மீது வைத்திருந்த அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்தியிருந்தனர். அவரது வெற்றிடத்தை யாரால் நிரப்பமுடியும் என்றபொழுது அவரது மனையாளே அப்பதவிக்கு மிகப்பொருத்தமானவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஒரு கணவனின் பதவிப் பொறுப்பை அவரது மனைவி பொறுப்பேற்ற சம்பவம் நான் அறிந்தவகையில் இதுவே முதற்தடவை என எண்ணுகின்றேன்.

நேர்மை, கண்டிப்பு, கருணை, நேரந்தவறாமை முதலான சிறந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இணுவையூர் மைந்தன் சிதம்பர திருச்செந்திநாதன் மேன்மேலும் பல்லாண்டு சுகதேகியாக வாழவேண்டும் மக்கள் சேவகனாக விளங்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர்
'தமிழர் தகவல்' – கனடா



சமூக வாழ்க்கை என்பது எப்போதும் ஒரே தன்மைவாய்ந்ததாகவும், மாற்றத்துக்கான முயற்சிகள் அற்றதாகவும் அமைவதில்லை. சமூக வட்டத்தினுள் எப்போதும் இடைவிடாத அசைவியக்கம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும்.

சமூகத்தின் பாரம்பரியங்கள், நியமங்கள், ஆதர்சங்கள், விழுமியங்களுக்கேற்ப இவை அமையுமாயினும், இனம்சார் பண்பாடுகளுக்கமைய தொடர்ச்சியாக இவை இடம்பெறுவதை சமூக அசைவியக்கத்தின் (Social mobility) ஊடாக நோக்குகையில் அவதானிக்கலாம்.

நண்பர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் இந்த மலருக்கு இச் செய்தியை வரைகையில், அவர் தமிழ் எழுத்துலகில் ஆற்றிய பணி - குறிப்பாக சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம் என்னும் பரப்புகளில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் ஆற்றிய அரும்பணி போன்றவற்றை நினைத்துப் பார்க்கின்றேன்.

1983 ஜூலை மாதத்தில் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தமிழருக்கெதிரான வன்முறையும், இனப்படுகொலையும் என்னைப்போன்ற பலரை தாயகமான யாழ்ப்பாணம் நோக்கி இடம்பெயர வைத்தது. தாங்கமுடியாத மன உளைச்சலோடு மீண்டும் யாழ்ப்பாணவாசியான நான், அங்கு முதலில் 'ஈழமுரசு' என்ற தினசரியையும் (1984 - 1986), பின்னர் 'முரசொலி' (1986-1989) என்ற தினசரியையும் ஆரம்பித்து நடத்தியவேளையில் பெறுமதிமிக்க பெரும் ஆளுமை கொண்ட நண்பர்கள் பலரைச் சொந்தமாக்க முடிந்தது.

ஒருவகையில் இதனை '1983 ஜூலை' தந்த வரமாகவே நான் ஏற்றுக்கொண்டேன். இவ்வாறு எனக்குக் கிடைத்த நல்ல நண்பர்களில் ஒருவரே இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்.

1954ம் ஆண்டில் பிறந்து, 1972ல் எழுத ஆரம்பித்து, 1984ல் எனக்கு அறிமுகமானபோது அவருக்கு வயது முப்பது. இப்போது மேலும் முப்பது வருடங்கள் சேர்ந்து அவருடைய வயதை அறுபதாக்கிவிட்டது. காலம் தான் எவ்வளவு வேகமாக ஓடுகிறது. காலம் ஒருபோதும் பொய் சொல்லாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால், நண்பருக்கு அறுபது வய தாகிவிட்டதென்பதை ஏற்றுக்கொண் டேயாகவேண்டும். இவரது முழுப்பெயர் மூன்று பெயர்களின் கலப்படமில்லாத கலவை. இணுவில் இவரது பிறந்த ஊர் சிதம்பரநாதன் இவரது தந்தையார் பெயர். திருச்செந்திநாதன் இவருக்கு பிறப் பின்போது சூட்டப்பட்டபெயர். மொத் தத்தில் இடப்பெயர், குடும்பப்பெயர், பிறப் பில் இடப்பட்டபெயர் ஆகிய மூன்றை யும் இணைத்து இலக்கிய உலகில் நான்கு தசாப்தங்களை வெற்றிகரமாக நிறைவு செய்த சாதனையாளர் இவர்.

நான் ஆசிரியராகவிருந்த 'ஈழமுரசு', 'முரசொலி' பத்திரிகைகளில் இவரது சிறு-கதைகள் நிரம்பவே பிரசுரம் பெற்றுள்ளன. தேசியத்தை நேர்மையாக நேசித்து, பிறந்த மண்மீதான பற்றை மக்களின் வாழ்வியலோடு இணைத்து வாசிப்புக்கு ஏற்றதாக விதைத்த இவரது எழுத்துகளே இதற்கு அடிப்படை யான காரணம்.

வர்த்தக நோக்கின்றி, பிரசார உத்தி யின்றி இவரால் படைக்கப்பட்ட ஒவ்வொன் றும் சாகாவரம் பெற்றவை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக 1986 பெப்ர வரியில் வெளியான 'ஈழமுரசு' இரண்டாவது ஆண்டுமலரில் இவரால் எழுதப்பட்ட 'நீங் களும் நாங்களும்' என்ற சிறுகதையை குறிப் பிடுவேன். பிறந்து வளர்ந்த சொந்த மண்ணில் உறவுகள் அகதிகளாக்கப்படும் அவலத்தை 'வெள்ளத்தாலான அகதிகள்' என்ற குறியீட் டில் தமது பேனாவை ஓடவிட்ட இவரது உத்தி, அவலமான நாட்கள் ஆரம்பமான அந்தக் காலத்தில், எதிர்காலத்தை முற்கூட் டியே உணரவைத்த ஒரு படைப்பு.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலுமுள்ள பிரதேச செயலகங்களில் கால்நூற்றாண்டு காலம் பணியாற்றிவிட்டு, இறுதியில் வன்னி மண்ணில் கடமையாற்றி முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்ட போராட்டத்தில் இவர் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் ஈழ வரலாற்றில் முக்கியமான ஒரு பாகமாக என்றோ ஒருநாள் இவரது எழுத்தில் இடம்பெறுமென நம்பலாம்.

எப்போதும் சிரித்த முகம், ஆழமாக யோசித்து அமைதியாக வெளிவரும் வார்த் தைகள், எவரையும் நோகடிக்க விரும்பாத மனம், தமிழின விடுதலையை வேண்டி நிற் கும் சிந்தனை, எங்கும் எதிலும் மென் மையான சுபாவம் என்பவற்றின் சொந்தக் காரராக எனக்குத் தெரிந்த சிதம்பர திருச் செந்திநாதன், இன்றும் அப்படித்தான் இருக் கிறார் என்பதை பத்தாயிரம் மைல் களுக்கப்பால் இருந்து அவருடனான தொலை பேசி உரையாடல்கள் ஊடாக உணரு கின்றேன்.

அவரது அன்புத் தந்தை சிதம்பரநாதன் அவர்கள் எனது நீண்டகால நண்பர் என்று இங்கு குறிப்பிடுவதை பெருமையாகக் கருது கிறேன். நடிகர், நாடக ஆசிரியர், கதாப் பிரசங்கி, வில்லிசைக் கலைஞர் என்று பன் முக ஆளுமைகள் கொண்ட சகலகலா வல்ல வரான சிதம்பரநாதனின் மகனல்லவா திருச் செந்திநாதன்! புலிக்குப் பிறந்தது எலியாகுமா?

நோயற்ற நல்வாழ்வை எவ்வளவுக்கு நண்பர் சிதம்பர திருச்செந்திநாதன் விரும்பு கிறாரோ அது அவருக்குக் கைகூடவும், கலை, இலக்கிய உலகில் மேலும் பல சாதனைகளை நிலைநாட்டவும் மனதார வாழ்த்துகிறேன். இவரது பணிகளுக்குத் துணையாக விளங்கும் அவரது அருமை மனைவிக்கும் அன்புப் பிள்ளைகளுக்கும் தமிழ் கூறும் நல்லுலகு சார்பில் நிறைவான நன்றிகளைத் தெரிவிப்பது கடமையெனக் கருதுகிறேன். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.வே. பஞ்சாட்சரம்
கவிஞர்
கனடா.



பிரபல சிறுகதை நாவல் எழுத்தாளர் ஊடகவியலாளர் திரு. இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் 1970 களின் பிற்பகுதியிலிருந்து இலக்கியப் படைப்புத் துறையில் பணியாற்றி வருபவர். இணுவைச் சிவகாமி அம்மன் திருக்கோவிலுடன் அடிநாளிலிருந்து நெருங்கிய தொடர்புகொண்டு விளங்கி வரும் இணுவில் கிழக்கைச் சேர்ந்த சைவப் பாரம்பரிய பரம்பரையின் வழித் தோன்றலான இவரது தந்தையார் அமரர் சிதம்பரநாதன் சிறந்த சமயப் பிரசங்கி இசைவல்லுநர், நாடக நடிகர் தமது தந்தையாரைப் போலவே இவரும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு முதலிய நகரங்களில் பணியாற்றியதோடு, இலக்கிய ஊடகப் பணிகளிலும் தீவிரமாகச் செயற்பட்டு வந்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் எழுத்தாளர்கள் பலரை ஒன்றுதிரட்டி எழுகலை இலக்கியபேரவை எனும் ஓர் அமைப்பை நிறுவி அதனூடு பல இளம் எழுத்தாளர்களை ஊக்கியும் உருவாக்கியும் வந்தவர்.

அடக்கமானவர், ஆழமானவர், இனம், மொழி, தேசம், இலக்கியம் என்பவற்றில் உறுதியான பற்றுக்கொண்டவர். இவர் படைக்கும் இலக்கியங்கள் நூல்களாக வெளிவந்து ஆவணப்படுத்தப்பட்டு ஈழத்தமிழ் இலக்கியக் களஞ்சியத்தை வளப்படுத்தவேண்டும். இவருக்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டும் என்று அன்னை சிவகாமியின் மலர்ப்பாதங்களை அழுத்துகிறேன்

வாழ்க பல்லாண்டு வண்ணத்தமிழ் வளஞ்சேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் செ.யோகராசா
கிழக்குப் பல்கலைக்கழகம்



தமிழ்த்துத் தமிழ்ச் சிறுகதையுலகிலே ஏறத்தாழ எழுபதுகளில் பிரவேசித்த இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அதிகமெழுதியவரல்லர். அதிகமெழுதாதுவிடினும் கவனிப்பிற்குரிய எழுத்தாளர் என்பதற்கு அவரது மூன்று சிறுகதைத் தொகுப்புகளும் சான்று பகர்கின்றன. எனினும் என்னுடையதும் அம்மாவுடையதும் (1995) என்ற ஒரு தொகுப்பினை அடிப்படையாகக் கொண்டே அதனை நிறுவ முடிகின்றது.

மேற் குறிப்பிட்ட தொகுப்பிலே 1985தொடக்கம் 1994 வரை எழுதப் பட்ட 13 சிறுகதைகள் உள்ளடங்கியுள்ளன. இச் சிறுகதைகள் எழுதப்பட்ட எண்பதுகள் தொடக்கமான காலப்பகுதி, இலக்கிய ஆர்வலர் பலருமறிந்தது போன்று முற்றிலும் புதிய மூன்று போக்குகள் வெளிப்பட்ட காலப்பகுதியாகும். (i)போர் இலக்கியம் (ii)புகலிட இலக்கியம் (iii) பெண்கள் இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவற்றை தெளிவாக இனங்காண முடியும். இவற்றின் முதலிரு போக்குகளையும் பிரதிபலிக்கின்ற சிறுகதைகள் இத் தொகுப்பிலேயுள்ளன. அவ்விடயங்கள்பற்றிப் பலருமெழுதியிருப்பினும் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் பார்வை தனித்துவ இயல்புகள் பலவற்றைப் பெற்றுள்ளது.

ஈழத்தில் இலக்கியத்தின் பரப்பு அகலமும் ஆழமும் கொண்டது. போர்க்கால அவலங்கள் (சுற்றிவளைப்பு, காணாமற் போதல், அகதிமுகாம் இடப்பெயர்வு, பொருளாதாரத் தடை முதலியன) போராட்டச் செயற்பாடுகள் முதலான விதங்களில் பன்முகப் பரிமாணம் கொண்டது. இத்தியாதி சிறுகதைகள் பலவும் அதிர்ச்சி சம்பவங்கள், நிகழ்வுகள் முதலானவற்றிற்கே முதலிடம் கொடுப்பனவாகவுள்ளன. வாழ்வின் அன்றாட இயல்பான விடயங்களாக இவை எழுதப்படுவது அரிது. இவரது சிறுகதைகள் அவ்விதத்திலானவை என்பதே இவரது தனித்துவமாகின்றது.

மேற்கூறிய விதத்தில் இத் தொகுப்பிலுள்ள முக்கியமான சிறுகதைகளுளொன்றாக என்னுடையதும் அம்மாவினுடையதும் (1995) அமைகின்றது. அம்மாவிற்கும் மகனிற்குமிடையிலான பாச உணர்ச்சிகளினாலேற்படும் பரவசம் போலமைந்த சிறுகதையின் முடிவுதான் கவனத்திற்குரியது.

"அம்மாவின் கடகத்தினையும் பையையும் சைக்கிள் பின்புறம் கட்டிக் கொண்டு அம்மாவையும் சைக்கிளின் முன்புறம் ஏற்றிய போது வாழ்க்கையில் கிடைக்காத பேறு கிடைத்தது போல இருந்தது/ ஏண்டா மோனை ஏலாத காலோடை" என்னும் போதே அம்மாவின் கவலை புரிந்தது/ "நீங்கள் என்ன பாரமே" என்னும் போதே விசில் அடிக்க வேணும் போல இருந்தது/ எங்கட ஒழுங்கைக்குள் இறங்கிய போது இடிந்து போன பள்ளிக்கூடம் தெரிந்தது/ அம்மா எனது வலது பக்க ஜெய்ப்பூர் காலையும் இடிந்து போன பள்ளிக்கூடத்தையும் பார்த்தாள். இரண்டையும் தாக்கியது ஒரே 'செல்' தானே" பாசமும் போரும் அன்றாட வாழ்வும் ஒன்றோடொன்று கலந்து விட்டமை இச்சிறுகதையூடு சிறப்பாக வெளிப்படுகின்றது. 'ஐடென்றிக்காட்'டை மறந்துவிட்டுச் செல்லும் சம்பவத்தை அடிச்சரடாகக் கொண்ட சமகாலம் (1998) சிறுகதையும் அத்தகையதே இவ்வாறு இன்னும் பல சிறுகதைகள் உள்ளன!

போர்க்கால ஆரம்ப நிலையில் வாடகை வீட்டிலே குடியிருக்கின்ற குடும்பமொன்று கஷ்ரப்பட்டுக் காணி வாங்கி நிம்மதி காண்கின்ற பின்புலத்தில் எழுந்த "இன்று நாளை" (1985) சிறுகதையின் முடிவு ஆச்சரியமளிப்பதுடன் கதாசிரியரின் தூர நோக்கும் புலப்படுத்தி நிற்பது குறிப்பிடத்தக்கது.

"வீட்டைப் பராமரிப்பதிலும் வளவை வளப்படுத்துவதிலும் ஈடுபாடு காட்டிய நாங்கள் பனைவடலிக்கு ஊடாக மிகப்பதிவாகப் பறந்து போகும் விமானங்களையும் ஹெலிகொப்டர்களையும் பார்ப்பதில் அக்கறை காட்டினோம். விமான நிலையத்திற்கு சமீபமாக வளவு இருந்தபடியால் இது இலகுவாயிற்று. இந்த வளவுக்கு வந்த புதிதில் இது தான் எங்களுக்குப் பொழுதுபோக்கு அப்போதெல்லாம் எப்போதாவது தான் விமானங்கள்தெரியும். அவைகூடபிரயாணிகள்போகும் விமானங்கள்தான்.

ஆனால் இப்போது அதிகம் வித்தியாசம் வித்தியாசமான விமானங்கள் வந்து போகின்றன. இரைச்சலும் காதைப் பிளக்கின்றது. என்னடா செய்யிறது என்று அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க. நான் பதில் சொல்லாமல் அம்மாவை பார்த்தேன். "மோட்டுத்தனமாய் எயாப் போட்டுக்குக்கிட்ட காணி வேண்டி வீடு கட்டினமே எயாப்போட்டை பெருப்பிக்கினம் எண்டு சொல்லி..." என்று சொல்லி முடிக்காமல் அம்மா அழத் தொடங்கினாள்.

எனது கண்களும் கனத்தன. ஆனால் அழவில்லை நாளைக்கு எங்கள் வளவில்கூட ஒரு யுத்த விமானம் நிற்கும். நாங்கள் எந்த இடத்திற் பதுங்க வேண்டிவருமோ தெரியாது?"

இடப்பெயர்வுகள், அகதிமுகாம் வாழ்க்கை, புலம்பெயர்வுகள் என்பன சார்ந்த சிறுகதைகளிலும் முற்கூறிய சிறப்பு அவையாவும் இயல்பாகிப் போன அன்றாட வாழ்க்கைச் சூழலுடன் தொடர்புபடுவது- வெளிப்படக் காணலாம்!

புலப்பெயர்வு வாழ்க்கையோடு தொடர்புபட்டுள்ள சிறுகதைகள் இங்கும் அங்குமாக அதாவது ஈழத்துடனும் புகலிட நாட்டுடனும் தொடர்புபட்டதாக அமைவது கவனத்திற்குரியது. இங்குள்ள பெற்றோரும் அங்குள்ள மகனும் அகதிமுகாம்களிலே இருப்பது பற்றிய அகதிகள் முகாம் (1985) தீர்வுகள் (1989) காட்சி மாற்றம் (1994) முதலியனவும் புலம்பெயர்ந்தோர் வாழ்நிலையை – புலப்பெயர்வால் இங்கு ஏற்படும் பாதிப்புகளை – அநாயாசமான முறையில் வெளிப்படுத்துகின்றன. பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை வித்தியாசமான முறையில் இவை (இருப்பு, தீர்வுகள்) எடுத்துரைப்பதும் கவனத்திற்குரியது.

மேற்குறிப்பிட்ட இரு சிறுகதைகளோடு, காலங்கழிப்பமடி (1986) சிறுகதையும் பெண்ணின் மனக் காயங்களை மனப்போராட்டங்களை சிறப்பாக வெளிப்படுத்துவது என்ற யாழ்ப்பாணத்திலிருப்பதற்கான சமூகவியற் காரணங்கள் அழகான முறையில் அலசப்படுகின்றன. முதிர் கன்னியருள் பலர் ஆசிரியைகளாக இருக்கின்றனர் என்பதான எனது அவதானிப்பை இச் சிறுகதையும் மெய்ப்பிப்பது மனநிறை வளிக்கின்றது.

ஆக, போர்க்கால, புகலிட இலக்கியஞ்சார் அனுபவங்கள் சம்பவக் கோர்வைகளாக தொகுப்புக்களாக உற்பத்திகளாக அமைந்துள்ள சூழலில் அவற்றை கலாபூர்வமான முறையில் கோர்க்கும் போக்கின் முகிழ்ப்பு நிலையை இவரது சிறுகதையினூடே தரிசிக்க முடிகின்றமை பற்றியும் பாராட்டியாக வேண்டும்.

இன்னொரு புறத்தில் ஈழத்துச் சிறுகதைப் பரப்பு அதிகளவு பிரச்சினைகள் சிலவற்றையும் இவரது சிறுகதைகள் வெளிப்படுத்தி நிற்பதும் அவதானிப்பிற் குரியது யாழ்ப்பாணச் சமூகத்தின் வகைமாதிரி பாத்திரமாகிவிட்ட பென்சனியரொருவர் பற்றி யாரை நோவது (1986) சிறுகதையும், அரச அலுவலகங்களில் பணிபுரிகின்ற பெரும்பாலோரது நடத்தைகளை சுவையாக வெளிப்படுத்தும் என்றும் தங்கள் நினைவில் வாழும் (1988) இத்தகையனவற்றிற்கு சிறந்த உதாரணங்களாகின்றன.

பலவும் இழந்துவிட்ட இன்றைய சூழலில் இருமடங்கு பயன்படும் இத்தொகுப்பிலுள்ள மாற்றங்கள் சில மாற்றங்கள் செய்யின் ஒரு காலகட்ட யாழ்ப்பாண மக்களது வாழ்க்கையின் ஒருவெட்டு முகமாக அமையக் கூடிய நாவலொன்று உருவாகின்ற வாய்ப்புள்ளது. அவ்விதத்திலன்றி, புதிதாக அவ்வாறான நாவலை இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதவும் முடியும். "என்னுடையதும் வாசகருடையதும் எதிர்பார்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு. திருமுருகன்
தலைவர் துர்க்கா தேவஸ்தானம்,
தலைவர் சிவபூமி அறக்கட்டளை.



எமது சிறுபராயத்திலிருந்து இன்றுவரை யான் நேசித்த அமைதியான படைப்பாளி இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்களின் சிறப் புக்குறித்து கருத்துக் கூறுவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். இவரது தந்தையார் கம்பீரமான தோற்றம் உடையவர். கச்சேரியில் உத்தியோகம் பார்த்தவர். மிக அழகாக வேலைக்குப் போய் வருபவர். அவர் நடித்த நாடகத் தையும் வில்லுப்பாட்டையும் சிறு பராயத்திலேயே கண்டு இரசித்தவன் யான்.

மருதனார்மடம் சந்தியில் உள்ள வைரவர் கோவிலில் வெள்ளிக் கிழமைகளில் நாம் ஒன்று கூடுவோம். கோவிலில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையை விட அங்கு வழங்கும் குழைசாதத்திற்காக நாம் காத் திருப்போம். படையலைப் பார்த்த வண்ணமாக பாலர்களாகிய நாம் பஜனை பாடுவோம். திருச்செந்திநாதன் அவர்களின் சகோதரர் கதிர்காமநாதனும் எங்களுடன் பஜனைக் குழுவில் அங்கம் வகித்தார்.

எங்களை விட வயதில் மூத்தவர்கள் தத்தம் பருவ நண்பர்களோடு கோவில் வாசலில் கூட்டம் கூட்டமாக நிற்பர். நாற்பது வருடங்களுக்கு முன் நடந்த வியடங்கள் இன்னும் பசுமையாக உள்ளன. இலங்கை வானொலி யில் நேயர் விருப்பத்தில் திருச்செந்திநாதன், பாஸ்கரன், சச்சி, குகன், ... என்று ஒரு தொடர் நாமங்கள் உச்சரித்து ஊர்ப் பெயரும் உச்சரிக்கப் பட்டது. அச் செய்தி அப்போது பெருமைப்படக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குழுவில் இருந்தவர்கள் எழுத்து லகில் காலடி எடுத்து வைத்தனர். சில நாடகங்களையும் உருவாக்கி அரங்கேற்றினர். பின்பு அவரவர் அசாதாரண சூழலைக் கருத்திற்கொண்டு புறப்பட்டு விட்ட னர். அக் குழுவில் இருந்தவர்கள் அக்கால நாக ரீகத்திற்கு அமைய தலைமுடிகளை வளர்த்து பருவச் சூழலிற்கு ஏற்ப பவனி வந்தனர்.

அன்று எழுத்துலகில் காலடி எடுத்து வைத்த இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் மண்ணில் நின்று மண்ணை நேசித்து தன் அகத்து பதிந்த, பாதித்த விடயங்களை சிறு கதைகளாக தொடர்கதைகளாகப் படைக் கத் தொடங்கினார். என்ன ஆச்சரியம் ஒரே நாளில் சகல வாரமலர்களிலும் திருச்செந்தி நாதனின் சிறுகதைகள் ஆக்கிரமிக்கத் தொடங் கின. ஈழத்து எழுத்துலக ஜாம்பவான்கள் என்று பிரகாசித்தவர்களோடு ஒரு புதிய அலை மெல்ல மெல்ல தம் ஆற்றலை வெளிப் படுத்துகிறது என திருச்செந்தி போன்ற எழுத் தாளர்களை சிலர் விமர்சித்தனர்.

எழுபதுகளின் பிற்பகுதியில் பத்திரி கைகள், சஞ்சிகைகள், அனைத்திலும் திருச் செந்திநாதன் படைப்புக்கள் பரிணமிக்கத் தொடங்கின.

சூழலை யதார்த்தத்தை சமூகப் பிறழ்வு களை இவரது பேனா பேசத் தொடங்கியது. திருச்செந்திநாதனின் இன்றைய கதை எதைச் சொல்லப்போகிறது என்ற ஆதங்கம் இலக்கிய ஆர்வலர்களிடம் மட்டுமன்றி சமூக நேசம் உடையவர்களாலும் அவதானிக்கப்பட்டது.

திருச்செந்திநாதனின் ஆற்றல் கண்டு மண்ணை நேசித்தவர்களும் மதிப்புக் கொடுத் தனர். தன் எழுது கருவியை புகழுக்காகவோ தன் சுயலாபத்திற்காகவோ பிறரைப் புகழ்ந் துரைத்துப் பயனைத் தேடவோ விரும்பாத இம் மனிதன் தன் பாதையை தனிப் பாதையாக பயணம் செய்தார். பொற்கிழிகளையோ பொன்னாடைகளையோ விருதுகளையோ இந்தப்படைப்பாளிதேடவும்இல்லை. வழங்க வந்தவர்களிடம் வாங்கவும் இல்லை. வித்தியா சமான இந்தப் படைப்பாளியின் வாழ்வு பல ருக்கு இன்னும் சரியாகத் தெரியாது. வல் லமை இல்லாத பலர் பிறரை வாழ்த்தி சில வளங்களைப் பெற்று வாழ்வது எல்லோருக் கும் தெரியும்.

மக்களின்சூழலைக்கருப்பொருளாக்கி யவன் மக்களோடு மக்களாக நின்று மக்கள் பட்ட அவலங்களைத் தானும் அனுபவித்து குற்றுயிர் நிலையிலும் தன் கூற்றினை மாற் றாமல் உண்மைக்கு மாறாக தன் பேனா ஊற் றுக்களை பயன்படுத்தாத இந்தப் படைப் பாளியை வாழ்த்தும் தகுதி எவருக்குண்டு.

அண்ணன் திருச்செந்திநாதனுக்கு அகவை அறுபது நிரம்பிவிட்டது. அன்றைய அழகு வதனம் நீண்ட முடி எல்லாம் அவர் வயதை மட்டுமல்ல எங்கள் வரலாற்றையும் (தோற்றம்) விளக்கி நிற்கின்றன. இடப் பெயர்வுக்குப் பின்பு பல வருட இடை வெளிக்குப் பின் கண்டு அதிர்ந்தேன். அவர் சிரிப்பு மட்டும் தான் அவரை அடை யாளப்படுத்தியது.

வார்த்தைகளும் மௌனித்தது. நிர் வாக அதிகாரியாக பதவிவகித்து ஓய்வு பெறும் வேளையிலும் அதிகாரங்கள் எதுவுமில்லா ஞானத் தோற்றத்தில் அமைதியாகக் காட்சி யளித்தார். பள்ளிப் பருவத்திலேயே இவர் படைப்பையும் இவர் அழகையும் இர சித்த யான் இன்னும் ரசிக்கின்றேன். இவர் ஆரோக்கியத்துடன் மீண்டும் எழுந்து நின்று அனுபவப் படைப்பாளியாக இலக் கிய உலகை வலம்வர வேண்டி வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.ஆர். டேவிட்
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் இலக்கியப்பரப்பில் 1972 இல் அறிமுகமானவர் இவர் நான்கு நாவல்களையும், ஒரு குறு நாவலையும், மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் வெளியீடு செய்துள்ளார். இவர் ஒரு வர்த்தகப் பட்டதாரியாவார். இவர் தனது உத்தி யோகம் காரணமாக நீண்டகாலம் யாழ்மாவட்டத்துக்கு வெளியே கடமை யாற்றியதால் இவரது இலக்கியப்பிரபல்யத்தில் ஒரு நலிவு நிலையைத் தோற்றுவித்துள்ளது. இவரது மூன்று சிறுகதைத் தொகுதிகளும் 1993-2002ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே வெளி யீடு செய்யப்பட்டிருப்பினும், இதிலுள்ள முப்பத்தியைந்து சிறுகதைகளும் 1980-2000 காலத்துக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலேயே எழுதப் பட்டுப் பிரசுரமான சிறுகதைகளாகும். எண்பகுதிகளில் இவரது இலக்கியப் படைப்புகள் பற்றிய விமர்சனங்களும், விதந்துரைப்புக்களும் நிறையவே இருந்தன. இவரது 'மீண்டும் புதிதாகப் பிறப்போம்' என்ற நாவல் பலரின் பாராட்டைப் பெற்ற நாவலாகும்.

இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான 'என்னுடையதும் அம்மாவினுடையதும்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கி யுள்ள பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் தனது உரையில் திருச்செந்தி நாதனிடம் தான் அவதானித்த முக்கியமானதொரு விடயத்தைக் குறிப்பிட்டுள் ளார். "இந்த மண்ணில் நடைபெறும் வாழ்க்கைச் சிதறல்களுக்கு, அதற்குள் நின்று கொண்டே முகங்கொடுக்கவேண்டும் என்ற துணிவு திருச்செந்தி நாதனிடத்து துல்லியமாகத் தென்படுகின்றது" எனக் குறிப்பிட்டுள் ளார். திருச்செந்திநாதன் பற்றிய இந்தத் துணிவை அவரிடம் பல ஆண்டு களுக்கு முன்பே நான் அவதானித்து எனக்குள் நானே ஆச்சரியப்பட்டி ருக்கிறேன். இலக்கியப் பரப்பில் இலக்கியத்துக்காகத் தன் சொந்த வாழ்க் கையை மனமறிந்து கைநழுவவிட்ட சிலரில் முக்கியமான ஒரு எழுத்தாள ராகவே நான் திருச்செந்திநாதன் அவர்களைப் பார்க்கிறேன்.

"சமூக யதார்த்தத்தை எடுத்துரைப்பது மட்டுந்தான் ஒரு எழுத் தாளனின் பணியன்று. சமூகமாற்றத்துக்கான கருவியாகவும், விசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் இலக்கியத்தைப் படைக்கவேண் டும்" என இலக்கியத்தில் துறைபோனவர்கள் இலக்கியத்தை வரையறை செய்துள்ளனர். மேற்கூறப்பட்ட இலக்கிய வரையறைக் குள் தன்னை முழுமையாக உள்ளடக் கிக்கொண்ட ஒரு எழுத்தாளராகவே நான் திருச்செந்திநாதன் அவர்களை இனங்காண் கிறேன்.

"இலக்கியம் என்பது, தனிமனிதனின் அல்லது ஒரு சமூகத்தின் நனவிலி மனத்தின் சூட்சுமமான உணர்வுக் கூறுகளை 'நீர் மட்டம்' தவறாமல் இனங்கண்டு, அந்த உணர் வுகளுக்கு மொழிமூலம் ஸ்த்தூல வடிவத் தைக் கொடுப்பதே இலக்கியமாகும்" என இலக்கியத்துக்கு வரைவிலக்கணம் கூறப்பட் டுள்ளது. 'சமூக இயங்கியல்' என்பது சமூக விஞ்ஞானப்படி மாற்றமற்றதொரு விதி யாகும். இலக்கியப் படைப்பிற்குச் சமூகம் மையப்பொருளாக அமைவதனால் இலக்கி யக் கோட்பாட்டு மாற்றங்களும் தவிர்க்கமுடி யாததாகின்றன என்பதில் யாருக்குமே கருத்து முரண்பாடுகள் இருக்கமுடியாது.

இதில் நாம் ஒரு விடயத்தை அவதா னிக்கவேண்டும். தனிமனிதனாக இருந்தா லென்ன அல்லது மனித குழுமத்தை உள்ளடக்கிய சமூகமாக இருந்தாலென்ன அவைகள் தனித்தியங்குகின்ற சக்தி அற்றவை களாகவும், இவைகளுக்குப் பின்னால் அரசியல் பொருளாதார சக்திகளின் சூட் சுமமான விசைகளே இவைகளுக்குப் பின்னா லிருந்து இவைகளை இயக்குகின்றன என்ற மையக்கருத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இன்னும் அழுத்திக்கூறினால் ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, ஜனநாய கத்தின் 'பிரதிகளாகவே' அந்தச் சமூகம் காணப்படுகின்றது. எனவே, ஒரு படைப் பாளனுக்கு தீர்க்கதரிசனக் கூர்மைமிக்க தொரு தெளிவான 'இயங்கு தளம்' அமைந் திருப்பது அவசியமாகும்.

திருச்செந்திநாதனின் 'வெட்டுமுகம்', 'என்னுடையதும் அம்மாவினுடையதும்', 'மணல் வெளிஅரங்கு' ஆகிய மூன்று சிறு கதைத் தொகுதிகளிலும் மொத்தமாக முப் பத்தைந்து சிறுகதைகள் உள்ளடங்கியுள்ளன. இந்த முப்பத்தைந்து சிறுகதைகளுக்கும் தனித்தனியாகப் பேசுபொருட்களும், பேசப் படவேண்டிய விடயங்களும் இருப்பி னும் முப்பத்தைந்து சிறுகதைகளையும் தொகுத்து நோக்கும்போது திருச்செந்தி நாதன் அவர்களின் ஆழ்மனத்தில் தேங்கி யுள்ள 'இயங்கு தளக்குவிமையத்தை' இனங் காணமுடிகின்றது.

'சமூக நீதி' என்ற இயங்குதளத்தில், சுயநலமற்ற நிலையிலும், சுயவிளம்பரத் தன்மையற்ற நிலையிலும், அதேவேளை வெறித்தனமோ, அல்லது பிரச்சாரத்தன் மையோ அற்ற நிலையிலும் இவர் இயங்கி வருவதை இவரது படைப்புகள்மூலம் உணர முடிகின்றது.

இவரது மூன்று சிறுகதைத் தொகுதி களிலும் இடம்பெற்றுள்ள முப்பத்தைந்து சிறுகதைகளும் 1980ஆம் ஆண்டுக்கும் 2000 ஆண்டுக்கும் இடைப்பட்ட இருப தாண்டுகளில் எழுதப்பட்ட சிறுகதைகளா கும். யுத்தகாலத்தில் நடந்த அத்தனை சம்பவங் களையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந் துள்ள மூன்று சிறுகதைத் தொகுதிகளும் தமிழர்களின் வாழ்வியல் அவலங்களையும், வாழ்வுச் சிதறல்களையும் வெளிப்படுத்தும் வரலாற்று ஆவணங்களாகவே அமைந்துள் ளன. இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான 'என்னுடையதும் அம்மாவி னுடையதும்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார். 1983க்குப் பின்வந்த பத்தாண்டு காலத்தில் யாழ்ப்பாண வாழ்க்கையில் ஏற் பட்ட 'இடிபாடுகளை'ச் சித்திரிக்கும் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணமாக இத்தொகுதி அமைந்துள்ளது. என்ற அவரது குறிப்பு கவனத்துக்குரியதாகும்.

'வெட்டு முகம்' திருச்செந்திநாதனின் மூன்று சிறுகதைத் தொகுதிகளில் முதலாவது தொகுதியாக வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒரு சிறுகதையின் பெயரே இத்தொகுப்பின் பெயராக அமைந்துள்ளது. சிறுகதைத் தொகுதியில் இடம்பெறும் சிறுகதைகளின் பெயர்களில் ஒன்றை சிறுகதைத்தொகுதியின் பொதுப் பெயராக வைக்கின்றதொரு வழமை சிறுகதைத்தொகுப்பு வெளியீட்டில் இருந்து வருகின்றது.

சிறுகதைத் தொகுதியாக இருந்தாலென்ன, அல்லது தனிச்சிறுகதையாக இருந்தாலென்ன, படைப்பு இலக்கியக்கூறுகள் எதுவாக இருந்தாலென்ன, அல்லது அதற்குப் பெயரிடும்போது அதில் ஒரு கவர்ச்சி இருக்க வேண்டுமென பொதுவாகவே எதிர் பார்க்கப்படுகின்றது. இந்த எதிர்பார்ப்பு உளவியல் சார்ந்ததொரு எதிர்பார்ப்பாகும். ஏனெனில், சமூகத்தில் பெரும்பாலான நிகழ்வுகள் 'கவர்ச்சி' என்ற முதற் புள்ளியிலிருந்தே ஆரம்பிக்கப்படுகின்றன. உளவியல் அடிப்படையில் மனிதமன எழுச்சிகளுக்கு கவர்ச்சியே அடிநாதமாக அமைவதை அவதானிக்கமுடியும்.

இத்தொகுப்புக்கு அமைந்துள்ள 'வெட்டுமுகம்' என்ற பொதுப்பெயர் மிகப் பொருத்தமானதொரு பெயர் என்பதே எனது அபிப்பிராயமாகும். ஒரு திண்மப்பொருளின் சதையும், சாறும், விதைகளும் நிறைந்த 'வெட்டுமுகத்தை' மனதில் வைத்தே திருச்செந்திநாதன் அவர்கள் சமூகத்தைக் கற்பனை செய்துள்ளார் என்றே கருதுகிறேன். ஒரு இலக்கியப் படைப்பிற்கு மிகப் பொருத்தமான தலைப்புகளில் இதுவும் ஒன்றென்பதே எனது அபிப்பிராயமாகும். ஏனைய இரண்டு தொகுப்புக்களின் பெயர்களான 'என்னுடையதும் அம்மாவினுடையதும்' 'மணல் வெளி அரங்கு' இவ்விரு தலைப்புகளிலும், 'என்னுடையதும் அம்மாவினுடையதும்' என்ற தலைப்பிலுள்ள சொற்களும், அச்சொற்கள் உணர்த்துகின்ற கருத்துக்களும், உணர்வுகளும் இலகுவாகப் புரியக் கூடியளவிற்கு அமைந்துள்ளன. இருந்த போதும், பெயரின் நீளம் அதிகரித்துள்ளதாகவே தெரிகின்றது. ஆக்கத்தின் பெயர்கள் சுருக்கமானதாக இருப்பதில் ஒருவித கவர்ச்சி உண்டென்பதை மறுப்பதற்கில்லை. அடுத்துள்ள 'மணல் வெளி அரங்கு' என்ற தலைப்பில் 'மணல் வெளி' என்பது புரிதலுக்குரியதாகவும், 'மணல் வெளி' யுடன 'அரங்கு' என்ற சொல் இணையும்போது புரிதலில் மிகக் குழப்பமான நிலையுமே தென்படுகின்றது. முதற்பார்வையிலேயே குழப்பநிலை தோன்றும்போது அங்கே கவர்ச்சிக்குப் பதிலாக வெறுப்புணர்வு தோன்றுவதற்கு வாய்ப்பேற்படுகின்றது. அதேவேளை, கதையின் நகர்வுப்படியும் இப்பெயர் கதையின் கருவூலத்தோடு நீக்கமறப் புணரவில்லை என்றொரு உணர்வே தோன்றுகின்றது.

'வெட்டுமுகம்' என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பில் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டிய பல கதைகள் உண்டு. உதாரணத்துக்கு 'வெட்டுமுகம்' என்ற கதையை எடுத்துக்கொண்டால், இக்கதை ஒரு சமூகத்தின் ஆழ்மனக்குமுறலை வெளிப்படுத்தும் ஒரு கதையாக அமைந்துள்ளது.

ஒருவனுக்கு அவனது இளமைக்காலத்தில் அவனுக்கென்று ஒரு நண்பர்கள் குழாம் இருக்கும். இவர்கள் பிற்பகல் வேளைகளில் விளையாட்டு மைதானத்திலோ, அல்லது கோவில் வாசலிலோ, அல்லது மரத்தடிகளிலோ கூடுவார்கள். கூடி இரவு வெகு நேரம் வரை கதைத்துச் சிரிப்பார்கள். இப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்த ஒருவன் குறிப்பிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கால இடைவெளியின் பின் அவர்கள் சந்திக்கின்ற அந்த இடத்துக்கு வருகின்றான். சிதறுதேங்காய்போல் நண்பர்கள் கூட்டம் சிதறி, அவர்கள் சந்திக்கின்ற அந்த இடம் வெறுமையாகக் கிடக்கின்றது. ஒரு சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்கின்றார் கள். இன்னும் சிலர் காணாமல் போய்விட் டார்கள். இன்னும் சிலர் அகாலமரண மாகிவிட்டார்கள், இன்னும் சிலர் 'அஞ்ஞாத வாசம்' செய்கின்றார்கள். அவர்கள் சந்திக் கின்ற அந்த இடம் வெறுமையாகக் கிடக்கின் றது. அந்த நண்பர்கள் குழு சந்திக்கின்ற இடத்தை எழுத்தாளர் பின்வருமாறு கூறுகின் றார். நண்பர்களின் பிரிவுக்கான காரணத்தை எழுத்தாளர் கூறுகின்ற உத்திமுறை அற்புத மாகவுள்ளது.

"...நித்தம் வந்து போவதால் புற்கள் இருந்த பகுதியில் புற்கள் இல்லாமல் வெறுமை யான தரையாகத் தெரியும்... இப்போது பசிய புற்கள் தலைகாட்டி நிற்கின்றன... கற்களில் சில சிதறிப்போயிருக்கின்றன... வேறு இரண் டில் துளைகள்... அண்ணாந்து பார்த்தால்... பனைகளில்கூட இரத்தமில்லாக் காயங்கள்... அட கற்கள் கூடத் தப்பவில்லை..."

அந்த நண்பர்கள் கூட்டம் எப்படிக் கூடு கலைந்த பறவைகளாயினர் என்பதை எழுத் தாளர் பூடகமாகக் கூறியிருக்கும் யுக்திமுறை தொங்கலாக உள்ளது.

இந்த மண்ணில் திட்டமிடப்பட்ட தொருகல்விமுறைஇருந்திருந்தால்அவர்களுக் கேற்ற கல்வி வழங்கப்பட்டிருக்கும், அவர் கள் தங்களுக்கும் இந்த நாட்டுக்கும் பயனுள் ளவர்களாக வளர்க்கப்பட்டிருப்பர். அல்லது, அவர்களது 'வாழ்க்கை இருப்பாவது' அச்ச மற்றிருந்தால் அவர்கள் தங்களைத் தாங்களே வளப்படுத்திக்கொள்வாவது முடிந்திருக்கும்.

திட்டமிடப்பட்டகல்விமுறையோஅல் லது, அச்சமற்றதொரு வாழ்க்கை முறையோ இந்த மண்ணில் இல்லையென்பதை எழுத் தாளர் செந்திநாதன் இக்கதைமூலம் அற்புத மாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஒருநாட்டின்கல்விமுறையானது 'கல்வி பொருளாதாரத்தை அணைத்துச் செல்ல வேண்டும், பொருளாதாரம் கல்வியை அணைத்துச் செல்லவேண்டும்' அப்போது தான் நாடு அபிவிருத்தித்துறையில் முன்னேற முடியும். இரண்டாவது ஒரு மனிதனின் வாழ்க்கையில் அச்சமற்ற இருப்பு உறுதிப் படுத்தப்படவேண்டும். ஒரு மனிதனின் வாழ்க்கை அச்சமுள்ளதாக இருப்பின் அவ னால் ஒரு அடிகூட முன்னேறமுடியாது.

'என்னுடையதும் அம்மாவினுடைய தும்' என்ற இவரது இரண்டாவது சிறு-கதைத் தொகுதியின் மூன்றாவது கதையாக இடம்பெற்றுள்ள 'இன்று-நாளை' என்ற சிறு கதை சராசரிக் குடும்பம் ஒன்றைப் பற்றிப் பேசுகின்ற கவனத்துக்குரியதொரு கதை யாகத் தென்படுகின்றது. பலாலி விமான நிலை யத்தை அண்மித்து அமைந்துள்ள ஒரு வீட் டில் குடியிருப்பவர்களின் மன அவலங் களை மிக யதார்த்தமாக இக்கதை வெளிப் படுத்துகின்றது.

இக்குடும்பத்தின் தலைவன் ஒரு அரச-ஊழியன். இவன் பதவியிலிருந்து ஓய்வு பெறும்வரை தனக்கென்று ஒரு துண்டு நிலத்தை அவனால் வாங்கமுடியாமல் போகி றது. இவனது மூத்த மகன் தனது குடும்பத் தின் துயரநிலையைக் கண்டு வேதனைப்பட்டு தனது படிப்பை இடையில் நிறுத்திக் கொண்டு கப்பலுக்கு வேலைக்குப் போகி றான். கப்பலில் அவன் வேலைசெய்து சிறு கச் சிறுகச் சம்பாதித்த பணத்தில் அக்குடும் பத்தினர் பலாலி விமானநிலையத்துக் கண்மையில் ஒரு காணியை வாங்கி ஒரு வீடு கட்ட ஆரம்பிக்கின்றனர். கப்பலில் வேலை செய்தமகன்எதிர்பாராதநிலையில்வீடுதிரும்பு கிறான். அவனால் திரும்பவும் வேலைக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமுடியவில்லை. பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக அரசாங்கத்தின் உடமையாக்கப்பட்ட எல்லைக்குள் இவர்களது குடியிருப்பும் உள்ளடங்குகின்றது. இதனால் அவர்கள் மீண்டும் இரவல் குடியிருப்பை நோக்கிச் செல்கின்றனர். இதுதான் கதையின் சுருக்கம்.

இக்கதையில் யுத்தகாலச் செய்திகள் நிறையவுண்டு. அந்தச் செய்திகளைத் தவிர்த்து ஒரு 'அரச ஊழியனின் வாழ்க்கை' என்பதை மட்டும் இங்கு பார்வைக்குட் படுத்தப்படுகின்றது. இந்தக் கதையில் இரண்டு செய்திகளை எழுத்தாளர் திருச்செந்தி நாதன் அவர்கள் பேசுகின்றார். ஒன்று, உயர்ந்த கதிரைகளில் குந்தியிருப்பவர்களின் சுகபோக வாழ்க்கையும் இந்த அரசுக்காக வாழ்க்கை முழுக்க உழைக்கின்ற ஒரு அரச ஊழியனின் வாழ்க்கை அவலங்களும். இரண்டாவது, இதுமிக முக்கியமானது, தான் பிறந்த மண்ணில் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரு அந்நிய முதலாளியிடம் வேலை செய்ய வேண்டி ஏற்படுவதற்கான அவனது அரசியல் தளம்.

ஒரு மனிதனின் அத்தியாவசிய தேவைகளாக உணவு, உறைவிடம், உடை என்பன அமைகின்றன. இந்த மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்த மூன்று தேவைகளையும் இந்த மண்தான் உறுதிப்படுத்தவேண்டும். ஏனெனில் அவன் இந்த மண்ணில் பிறந்தவன். இந்த மண்ணுக்குரியவன். ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாறு அவனது 'முகவரி' என்கின்ற அவனது இருப்பில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. இந்த மண்ணில் பிறந்த ஒருவன் - ஒரு அரச-ஊழியன் இறுதிவரை தனது வாழ்விடத்தை உறுதிப்படுத்த முடியாமல் போனமைக்கும், அவனது மூத்தமகன் தனது கல்வியைக் குழப்பிக்கொண்டு, அந்நிய மண்ணில் வேலை செய்து தனது மண்ணில் தனது வாழ்விடத்தை உறுதிப்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தமைக்கும் இந்த மண்ணின் ஜன நாயகப் பிறழ்வுதான் காரணமென்பதை எழுத்தாளர் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்த சிறுகதைத் தொகுதியில் 'அகதிகள் முகாம்' என்றொரு சிறுகதையும் இடம்பெற்றுள்ளது. இக்கதையும் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் ஒரு கதையாக அமைந்துள்ளது.

இக்கதையில் வருகின்ற குடும்பத்தின் இரண்டாவது மகனான கணநாதன் வெளி நாட்டுப் பயணத்தை அடியோடு வெறுக்கிறான். ஆனால் இந்நாட்டிலுள்ள வாழ்க்கை அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டி அவனது பெற்றோர் அவனை வெளிநாட்டுக்குச் செல்லுமாறு வற்புறுத்தியதன் காரணமாக அவன் வெளிநாடொன்றுக்குச் செல்கிறான். வெளிநாட்டுக்குச் சென்ற அவன் வழமை போல அகதிமுகாமில் அடைக்கப்படுகிறான். இவன் அகதிமுகாமில் இருந்த அதே காலப்பகுதியில் இலங்கையிலும் கலவரம் ஏற்பட்டு இவனது பெற்றோரும் அகதிமுகாமில் இருக்கின்றனர். பெற்றோர் அகதிமுகாமில் இருப்பதைக் கேள்விப்பட்ட கணநாதன் ஒரு கடிதம் எழுதி அக்கடிதத்தை அவனது நண்பர்கள்மூலம் பெற்றோருக்கு கிடைக்கச் செய்கின்றான்.

அக்கடிதத்தின் பிற்பகுதி இப்படி அமைகிறது.

"... ஒரு ஒற்றுமை பாருங்கோ... நானும் இஞ்சை அகதிமுகாமிலை இருந்துகொண்டு அவர்கள் தாற கொஞ்சக் காசிலை சமைச்சுச் சாப்பிடுகிறன்... நீங்களும் உங்கை அகதிமுகாமிலை எண்டால்..." அவனது கடிதம் இப்படிமுடிகிறது.

திருச்செந்திநாதன் இக்கதைமூலம் என்ன செய்தியைச் சொல்ல நினைத்தாரோ அந்தச் செய்தியைக் கூறுவதற்கு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாண்ட உத்திமுறை வெகு அற்புதமாக வுள்ளது. நான் மாணவனாக இருந்த எழுப தாம் ஆண்டுக் காலப்பகுதியில் 'இரு கோடு கள்' என்ற சினிமாப்படம் ஒன்று வெளி யிடப்பட்டது. அப்போதைய படங்களில் நிச்சயமாக இரண்டு விடயங்கள் உள்ளடங்கி யிருக்கும். ஒன்று கதை, இரண்டாவது நடிப்பு, அதில் வருகின்ற கதாநாயகி வாழ்க் கையில் தோற்றுப்போகின்றாள். அந்தக் கதாநாயகி படும் துன்பத்தைப் பார்த்த அவளது தந்தை அவளுக்கு ஒரு தத்து வத்தை விளக்கமுற்படுகின்றார். ஒரு கற்பலகை யையும், ஒரு சோக்கையும் (கற்பலகை என் பது ஐம்பது, அறுபதுகளில் பாலர் வகுப்புப் பிள்ளைகள் எழுத்துப் பயிற்சிக்குப் பயன்படுத் திய கற்றல் உபகரணம்) எடுத்து, அந்தக் கற்பலகையில் சோக்கினால் சிறியதும் பெரிய துமாக இரண்டு கோடுகள் போடுகின்றார். போட்டவர் மகளைப் பார்த்துக் கூறுகின்றார் "மகளே... இந்தச் சின்னக்கோடுதான் நீ... இந்தப் பெரியகோடுதான் உன்னை ஏமாற்றிய உனது காதலன்... நீ எப்பவுமே சின்னக்கோடாக இருக்கக்கூடாது. நீ பெரிய கோடாக வந்து அவனைப் பழிவாங்க வேண்டும்" எனக் கூறுகின்றார். "அது எப்படி யப்பா முடியும்" என்று மகள் கேட்கின்றாள். "அது முடியும்" என்று கூறிய தகப்பன், கற்பலகையில் போடப்பட்டிருந்த இரண்டு கோடுகளில் சிறிய கோட்டை நீட்டி இரண் டாவது கோட்டுக்கு மேலால் உயர்த் திக்கீறுகிறார். கீறிவிட்டு மகளுக்குக் காட்டு கின்றார், சின்னக்கோடு பெரிதாகவும், பெரிய கோடு சிறியதாகவும் மாறியிருப்பதைப் பார்த்து அவள் ஆச்சரியப்படுகின்றாள் (கதை தொடர்கிறது. ஆனால் இதற்கு மேல் நமக் குத் தேவையில்லை. மேற்கூறப்பட்ட கதை யில் உள்ள செய்தி என்னவெனில், ஒரு கற் பலகையையும், ஒரு சோக்கையும், இரண்டு கோடுகளையும் வைத்துக்கொண்டு அந்தத் தகப்பனால் ஒரு தத்துவத்தை மிக இலகுவாக விளங்கவைக்க முடிந்திருக்கின்றது என்ப தாகும்.

இங்கு, எழுத்தாளர் திருச்செந்திநாதன் அவர்கள் தனது சிறுகதையில், தனித்து இங்குள்ள அகதிமுகாம் பற்றிக் கூறாமல், வெளிநாட்டிலுள்ள ஒரு அகதிமுகாமைத் தொடர்புபடுத்தி விளக்கியிருப்பது, இன்னும் எத்தனையோ செய்திகளைக் கூறுகின்ற விளைநிலமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. திருச்செந்திநாதன் அவர்களின் உத்திக் கையாழ்கையும், கற்பனை விரிவும் தான் எடுத்துக்கொண்ட கருப்பொருளை வலி தாக்குகின்ற கதை நகர்த்தலும் பாராட்டுக் குரியதாகும்.

அந்த நாட்டின் 'குடியியல் உரிமை-களைப்' பெறாமல் வெளிநாட்டு முகவர் மூலம் கள்ளத்தனமாக அந்த நாட்டுக்குள் நுழைந்த குற்றத்துக்காக கணநாதனை அகதிமுகாமில் வைத்துள்ளார்கள். இங்கு தான்பிறந்து வளர்ந்த மண்ணில் 'குடியுரிமை' கேட்டதற்காக கணநாதனின் பெற்றோர் அகதி முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

"ஒரு சிறுகைத்துப்பாக்கியிலிருந்து ஆரம்பிக்கப்படுமானால் அக்கதையின் முடி வில் அந்தத் துப்பாக்கி வெடிக்கவேண் டும்" என்று சிறுகதையின் வளர்ச்சி பற்றிக் கூறப்படுகின்றது.

"சமூகத்திலிருந்து கற்று, திரும்பவும் அதே சமூகம் கற்கும் படியான வடிவத்தில் இலக்கியங்கள் அமையவேண்டுமென" டானி யல் அவர்கள் கூறியது இங்கு நினைவுக்கு வருகின்றது. திருச்செந்திநாதன் அவர்களின் இலக்கியப் படைப்புகளில் சமூக இயங்கி யல் யதார்த்தங்கள் பிசகாமல் இடம்பெறு வதற்கான இரண்டு காரணங்களை இனங் காணக்கூடியதாகவுள்ளது. ஒன்று, இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுதியான 'மணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி அரங்கு' என்ற நூலில் இடம்பெற்றுள்ள இவரது உரையில் அவர் தனது வாழ்க்கை பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார். "1995 ஒக்ரோபரில் எல்லோரையும் போல நாங்களும் இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்தோம். இங்கு வந்து பல்வேறு 'முள்முடிகளைச்' சுமந்தோம்... இனி எத்தனை இடர்கள் வந்தாலும் தாங்கக்கூடியளவிற்கான மனோபலத்தை அது அளித்துள்ளது" இடப்பெயர்வால் தாங்கள் அனுபவித்த துயரச்சுமைகளை இவ்வாறு சுருக்கமாக அவர் கூறியுள்ளார். இது அவரது 'அனுபவத்திரட்சியைக்' காட்டுகின்றது.

அதே உரையின் தொடர்ச்சியில் இலக்கியம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார். "வெறுமனே விரக்தியும், புலம்பலும், இருப்புத் தொடர்பான அச்சமும் அதனால் எழுகின்ற அகமனத்து உணர்வுகளுமே நல்ல இலக்கியங்களாக அமைந்துவிடுவதில்லை... வாழ்வு பற்றிய தேடலும், அக்கறையும், எதிர்கால நம்பிக்கையுமே இலக்கியத்தின் கருப்பொருளாக அமைவது சிறப்பானதல்லவா? இவையே மனிதனைச் சூழலுடனும், சகமனிதர்களுடனும் பிரக்ஞை பூர்வமான உணர்வுகளைப் பேணத் தூண்டுகின்றன" எனவும் கூறுகின்றார். இது அவரது 'இலக்கியத் திரட்சியைக்' காட்டுகின்றது.

இவரது மனதிலுள்ள சமூக வேதனைகளின் 'அனுபவத்திரட்சிக்' கூடாக, இவர் புரிந்து வைத்திருக்கின்ற 'இலக்கிய அறிவுத் திரட்சி' பயணிக்கும்போது அர்த்தபுஷ்டியான இலக்கிய வடிவங்கள் பிரசவிக்கின்றன.

இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுதி 2002இல் வெளிவந்துள்ளது. இதில் 1995-2000ஆம் அண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட சிறுகதைகள் உள்ளடங்கியுள்ளன. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கதைகளில் ஒரு மாற்றத்தை அவதானிக்கமுடிகின்றது. இம்மாற்றம் 1997 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்திலிருந்து இவரது இலக்கிய நகர்வில் இம்மாற்றம் இடம்பெற்றுவருவதை அவதானிக்கமுடிகின்றது.

சிறுகதைகளைக் 'குறியீட்டு' வடிவில் கூறுகின்ற இவரது உத்திமுறை பற்றியே இங்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'தேவர்கள்' என்ற சிறுகதை வரலாற்று முக்கியத்துவம் பெற்றதொரு காலப்பகுதியை நினைவுபடுத்துகின்ற முக்கியமானதொரு சிறுகதையாகும். இக்கதையை திருச்செந்தி நாதன் அவர்கள் குறியீட்டு வடிவில் தந்துள்ளார்கள். அக்கதையின் சிறியதொரு பகுதி கீழே உதாரணத்திற்காகத் தரப்படுகின்றது.

"...இலைகுழை சமிபாடு அடையாத நேரத்தில் மாத்திரம் கொஞ்சம் பச்சை இறைச்சி சாப்பிடும். இறைச்சிக்காக அவை யாரையும் வெளிப்படையாகக் கொல்வதில்லை என்பது அவனைப் போலவே பலருக்கும் ஆறுதல் என்றாலும், அவை எப்படியோ இறைச்சியைத் தேடிக்கொள்கின்றன. எலும்புகளை மாத்திரம் யாரும் அறியாமல் மேய்ச்சலுக்குப் போகும்தங்கள் மேய்ச்சல்தரைகளில் புதைத்துவிடுகின்றன."

இதேபோன்று இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள 'அம்மாவாக அல்ல' என்ற சிறுகதையின் இறுதிப்பகுதியையும் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்.

"...அம்மா பிரமிப்பில் ஆழ்ந்தாள். மகன் அம்மாவின் கைகளில் எதையோ திணித்தான். உணர்திறனால் அம்மா அதனை மலர்களென உணர்ந்துகொண்டாள்... பிறகு அவன் காணாமல்போனான். மின்னற் பொழுதுக்கிடையில் அவன் மாயமானான். அம்மாவின் கண்கள் இருண்டன. கண்ணீர் மிக நீண்டகாலத்தின் பின்னர் இப்போதுதான் எட்டிப்பார்த்தது... அம்மா ஓவென அழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தாள். அக்கம், பக்கம் நின்றவர்கள் அவளை அழைத்துச்சென்று அவளின் மகனின் நடுகல்லுக்கு முன்னால் விட்டார்கள்...

அம்மா மகனின் நடுகல்லில் பூக்களைச் சொரிந்தாள்... கண்களைத் துடைத்தாள். விளக்கேற்றினாள்..." இப்படிக் கதை முடிக்கப்படுகிறது. இக்கதையின் உயிர்மையமே இப்பந்திக்குள்தான் உள்ளடங்கியிருக்கின்றது.

உலகப் பந்தின் இயங்கியல் மாற்றங்களில் இதுவரை மாற்றமற்றிருப்பது இந்த மாற்றம் ஒன்றுதான். எழுத்தாளன் சமூகமாற்றங்களை உள்வாங்கி வாழ்பவன். அவனிடம் மாற்றங்கள் ஏற்படுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. "மாற்றங்களுக்குள்ளாபவைகள் சீவிக்கும், மற்றவைகள் மரணிக்கும்" என்று கூறுவார்கள். அதேவேளை, இந்த மாற்றங்களின் பின்விளைவுகள் பற்றிய தீரக்கதரிசனங்கள் இருக்கவேண்டும் என்ற கருத்தில் யாருக்குமே முரண்பட்ட கருத்துக்கள் இருக்காதென்றே நம்புகிறேன்.

இப்படிக் குறியீட்டு வடிவில் எழுதுவதற்கு திருச்செந்திநாதன் பக்கம் இரண்டு காரணங்கள் இருந்திருக்கலாம். ஒன்று, தனது இலக்கியப் போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த இவர் நினைத்திருக்கலாம். இரண்டு, அதிகார வர்க்கங்களின் அச்சுறுத்தல்களைத் தவிர்ப்பதற்காக குறியீட்டு வடிவ 'முக்காட்டை' போட்டிருக்கலாம். இவரால் இதற்கு முன் வெளியீடு செய்யப்பட்ட இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் நமது மனங்களில் ஏற்படுத்தியுள்ள நம்பிக்கைத் தளம் பலமானதாக இருப்பதால், இவரது நடவடிக்கைக்குள் ஏதாவதொரு நியாயம் உள்ளடங்கியிருக்குமென்றே எண்ணத் தோன்றுகின்றது.

இந்த மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் தொகுத்து ஒரு தொகுப்பாக வெளியிடுவது காலத்தின் தேவையாகும். நடந்து முடிந்த யுத்தத்தின்போது ஏற்பட்ட இடப் பெயர்வுகளினால் ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகளுக்கு மேலால், எத்தனையோ வரலாற்றுப் பதிவுகளும் அழிந்துபோய்விட்டன. நமது எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிக்க இப்போதிருக்கின்ற வரலாற்றுப் பதிவுகளையாவது நாம் காப்பாற்ற வேண்டும்.

'வெட்டுமுகம்' என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு பேராசிரியர் சுப்பிரமணியன் அவர்களும், 'என்னுடையதும் அம்மாவினுடையதும்' என்ற இரண்டாவது சிறுகதைத் தொகுதிக்கு பேராசிரியர் சிவத்தம்பி அவர்களும், 'மணல்வெளி அரங்கு' என்ற மூன்றாவது சிறுகதைத் தொகுதிக்கு பேராசிரியர் சிவசேகரம் அவர்களும் அணிந்துரைகள் வழங்கியுள்ளனர். மூவருமே இலக்கியத்தில் துறைபோன பேராசிரியர்கள் மட்டுமல்ல, தமக்கென ஒரு இலக்கியக் கோட்பாட்டை வரையறை செய்தவர்கள். இவர்கள் மூவரினதும் அணிந்துரைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது, எழுத்தாளர் திருச்செந்திநாதன் பற்றிய இரண்டு விடயங்களில் மூவரின் கருத்து நிலைகளில் உடன்பாடுகள் காணப்படுவதை அவதானிக்கமுடிகின்றது. ஒன்று திருச்செந்திநாதன் அவர்களின் 'சுயஆளுமை' இரண்டாவது அவரின் 'இலக்கிய ஆளுமை', கால இடைவெளிகளோடு வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதிகளின் அணிந்துரைகளில் காணப்படுகின்ற கருத்துடன்பாடானது, திருச்செந்திநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட அவரின் படைப்புகளுக்கான 'சான்றிதழாகவே' பார்க்கமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. தேவராஜா
தேசிய கலை, இலக்கியப் பேரவை



நினைப்பது, பார்ப்பது, உரையாடுவது, தேடுவது, பிரிவது; மீண்டும் நினைப்பது, மீண்டும் பார்ப்பது, மீண்டும் உரையாடுவது, மீண்டும் தேடுவது, மீண்டும் பிரிவது... மீண்டும் மீண்டும் இவ்வாறாக நடப்பதும் நினைப்பதும் இனிமையானது. இவ்வாறாக ஓர் இலக்கியன் இலங்கையில் எங்கள் மண்ணில் எங்கள் ஊரருகில் இருக்கிறான் என்பது இனிமையானது.

தூரத்தில் எங்கோ இலக்கிய முகட்டில் இருப்போரை நினைப்பதும், போற்றுவதும், நட்புரிமை பாராட்டுவதும் எமது உறவின் பகட்டை விசாலிக்கலாம். நான் ஒரு பெருமைக்குரிய விஷயகாரன் என வீம்பு காட்ட உதவலாம். தூரத்து உறவிலும் இறந்த காலப் பெருமையிலும் வாய் சப்புக்கொட்டுவது இன்றைய இக்கணத்தின் இலக்கிய வாழ்வுக்கு உவப்பாகாது.

மக்களுக்கு மேலால் மகத்துவங்களைக் கண்டு பிரமை கொள்வது, மண்ணைக் கடந்து விண்ணில் சிகரங்களைத் தடவுவது, இல்லாதவை பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிக்க இனிக்க வாய் நுரை வடிய வடிய விளாசித் தள்ளுவது எனப் பொழுதைத் தள்ளும் இலக்கிய வீணர்கள் நடுவில் எங்கள் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் என்னும் இலக்கிய நெஞ்சின் இனிமையைப் பகிர்ந்து துன்பத்தைத் துரத்தும் துளி நேர மகிழ்வைத் தரலாம்.

மீடியா மேனியாவில் பேனையுடன் பேப்பர் முன் போஸ் கொடுப்பது, முகத்தை நிமிர்த்திக்காட்டி சிந்திப்பவர்போல் பாசாங்கு பண்ணும் சினிமாப்பாணி சேற்றில் மூழ்கித் திளைக்கும் எழுத்தர் காலத்தில் மக்களுடன் மக்களாக நெருப்புக் கடலில் நீந்தி தப்பிப் பிழைத்த நண்பன் இணுவையின் மெலிந்த தோற்றம், சிரித்த முகம், பிரகாசிக்கும் கண்கள் இன்னும் இன்னும் வாழ்வின் மீதான நம்பிக்கையை தருவனவே.

"முடிவல்ல ஆரம்பம்" என்பது இவரின் நாவல் ஒன்று. 2010ன் பின் விதேச வல்லூறுகளின் நுகத்தடியில் நுகர் வுப் பண்பாட்டுச் சுனாமிச் சுழியில் சிரிப்பை இழந்து நெருக்கத்தை மறந்த கடன் விரக்தியில் கழிவிரக்கம் கொள்ளும், கருவின்றி காசுச் செலவின்றி பிறந்த றோபோக்களாய் வாழும் சனத்தின் உயிர்ப்பை எப்படி கௌவிக் காப்பது என்பது இன்றைய வினாவாகும். இப் போதைக்கு நாம் அனைவரும் தெளிந்து கொள்ளவேண்டிய விடயம் "இருள் இரவில் அல்ல" என்பது மட்டுமே. "முள்முடி மன் னர்கள்" ஆக சிறையுண்ட மக்களின் விடி விற்காய் இலக்கியகாரர் துணிவுடன் செய்ய வேண்டிய சபதம் "மீண்டும் புதிதாய் பிறப் போம்" என்பதே.

எழுத்து என்பது கடதாசியில் பதி யும் நிழல் மட்டுமே. எனவே எழுத்தாளன் அந்த நிழலுடன் நிம்மதியாக நித்திரை கொள்ளமுடியாது. விழுந்து கிடக்கும் மக்களுடன் நிஜத்தில் கைகோர்த்து நடக் கும் திறன் வாய்க்கப்பெறும்போது மட்டுமே எழுத்தாளன் மக்கள் சார்பைப் பெறுகின் றான். மக்களிடமிருந்து கற்றுக்கொள் கிறான். "மனிதர் எத்தனை உலகம் அத்தனை" எனும் மக்களின் ஒவ்வோர் உலகத் தையும் ஊடுருவிப் பயணம் செய்து மனி தனைக் காண்பவனே இலக்கியக்காரன் எனும் யோக்கியவான்.

"நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்" எனும் எழுத்து வேள்வியில் மக்கள் மகிழ்வு டன் வாழும் காலத்தை கண்முன்னே கொண்டு வரும் மாற்றத்தை சாத்தியமாக்கும் சத்திய சோதனையில் தன்னைப் புடம் போடுகின்ற வனே இலக்கியன் எனும் விருட்சமாகிறான்.

02. தேசிய கலை இலக்கியப் பேரவை இணுவையூரானின் மூன்று சிறுகதை நூல்களைப் போர்க்காலத்தில் வெளியிட் டது. அவையாவன, வெட்டுமுகம், என்னு டையதும் அம்மாவுடையதும், மணல் வெளி அரங்கு என்பன.

"தாயகம்" சஞ்சிகை ஆரம்பத்திலிருந்து முழு இலங்கைப் படத்தையும் தனது அட்டை யில் பிரசுரித்து வந்தது. ஈழத் தமிழர் அரசியலில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் முனைப்புப் பெற்ற வேளையிலும் "புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" என்ற கோசம் எழுச்சி யுற்ற காலத்திலும் "தாயகம்" சஞ்சிகை அக் கோசத்துடனும் கொள்கையுடனும் வேறு படாது நின்றது. எனினும் 1984களில் இலங்கை அரசியலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் "தமிழீழம்" என்பதை ஏற்க வில்லை எனச் சத்தியப்பிரமாணம் செய்தால் தான் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கலாம் என அரசியல் அமைப்புக்கு 6வது திருத்தம் கொண்டு வந்தவேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அவ்வாறு சத்தியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாணம் செய்யமுடியாதெனத் தீர்மானித்து இந்தியா சென்றனர். அப்போது "தாயகம்" சஞ்சிகையின் ஆசிரிய தலையங்கத்தில் அத்திருத்தம் நீக்கப்படவேண்டுமென எழுதப்பட்டது. இன்று வரை எந்தச் சஞ்சிகையோ பத்திரிகையோ 6வது திருத்தம் பற்றி அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. (தமிழ்த் தேசியவாதிகள் 6வது திருத்தத்தை ஏற்றுக்கொண்டே பாராளுமன்றத்தை அலங்கரிக்கின்றனர் என்பது வேறு விடயம்).

"தமிழீழம்" வாக்குவாங்கி அரசியலாக முகிழ்த்த போதே தமிழீழம் தற் கொலைக்கு ஒப்பானதென்ற கருத்துடன் நாம் இருந்தபோதும், தமிழீழம் பற்றிய கருத்தை எவரும் வைத்திருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு என்பதனை நாம் மறுதலிக்க வில்லை. இரத்தம் சிந்தாத அரசியலாக முளைத்த தமிழீழ சுலோகம் இரத்தம் சிந்தும் யுத்தமாக வெடித்தபோதும் நாம் நாமாக மக்களுடன் இருந்தோம். அவர்கள் அவர்களாகவிருந்து போராடினர்.

இத்தகு இக்கட்டான காலத்தில் இரு துருவங்கள் எனினும் இணுவையின் மூன்று நூல்களையும் வெளியிடும் அனுமதியை அவர் தந்தார். நாமும் ஒப்புக்கொண்டு மகிழ்வுடன் வெளியிட்டோம். அவரது நூலின் வெளியீடுகளில் நாம் பங்குபற்றினோம்.

எமது மாறுபட்ட கருத்துக்களை வெளியிடும் களமாக அதைப் பயன்படுத்தினோம். இணுவை முகம் சுழிக்கவில்லை. அவ் வேளைகளிலெல்லாம் முகமலர்சியுடன் அமைதியாகவிருந்தார். எமது உறவு வெளிப் படையானதாகவும் ஒளிவுமறைவற்றதாகவும் இருந்தமையால் எமது நட்பு நீடித்தது, நீடிக்கிறது. மாற்றுக் கருத்துக்களை மகிழ்வுடன் மதிக்கும் மாண்பு இணுவையிடம் இவ்வளவு தூரம் இருந்தது.

யாழ் பல்கலைக்கழகக் கூட்டமொன்றில் "தமிழீழத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் வெளியேறுங்கள்" என்று இலக்கிய ஜாம்பவான்கள் ஒருசிலர் உத்தரவிட்ட வேளையில் தாயகம் ஆசிரியர் அதற்கு மாற்றுக் கருத்தை வைத்துவெளியேறமறுத்தநேரம்முஸ்லீம்பிரதிநிதிகள் வெளியேறினர். குறுந்தமிழ் தேசிய அரங்கில் பொதுவுடமை அறத்தில் பற்றுக் கொண்டோரை துரோகிகள் அல்லது தீண்டத்தகாதவர்கள் எனப் புறங்கூறி ஒதுக்கும் தசாப்தத்தில் இணுவையூரான் எங்களுடன் வெளிப்படையான நட்புப் பூண்டவர் என்பது மிகவும் நெகிழ்ச்சிக்குரியது. பொதுவுடைமைப் போராளிகள் என்று புறப்பட்டவர்களே புறமுதுகிட்டுக் குறுந்தமிழ்த் தேசியத்தில் மூழ்குண்டு எங்களுடன் உறவுண்டு என்றே காட்டாமல் ஒளித்திருந்த வேளையிலும் எங்களை அங்கிருந்து கொண்டே எங்களுடன் நட்பைப் பராட்டியது மட்டுமல்லாமல் எம்முடன் நிதானமாக தோழமையுடன் உறவு பூண்டு ஒழுகிய நண்பர் இணுவை.

03. 1984-1987களில் "மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்" என்ற அமைப்பின் செயலாளராகவும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாட்டாளராகவும் நான் இயங்கிய காலத்தில் 1986இல் அவரது முதல் நூலாக வெளிவந்த "என்றாவது ஒரு நாள்" என்ற குறுநாவல் வெளியீட்டின் விமர்சகராக என்னையும் அழைத்திருந்தார். போற்றிப் புகழும் பொய்யுரைகளே விமர்சனமாகிப் போயுள்ள பொழுதிலும் அவரின் நூல் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை நெஞ்சார துணிவுடன் எதிர்கொண்டார். விமர்சனங்களை விருப்புடன் வரவேற்கும் பரந்த இலக்கிய நெஞ்சுரம் வாய்க்கப்பெற்றவர் திருச்செந்திநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீட்டு நிறுவனமான வசந்தம் புத்தக நிலையம் என்ற ஸ்தாபனத்தை நாம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் யுத்தகாலமான 1990-2002 வரை யில் இயக்கிக்கொண்டிருந்த வேளையில் புத்தகப்பித்தராக புத்தகங்களில் மோகங் கொண்டு முதலாந்தர வாடிக்கையாளராக புத்தகங்களைக் கொள்வனவு செய் வதில் தீவிர ஆர்வங்காட்டினார். ஏனைய நண்பர்களுக்கு நூல்களை அறிமுகப்படுத் துவார். தமிழ் நாட்டில் வெளிவரும் புதிய புதிய நூல்கள் பற்றிய விபரங்களை உடனுக்குடன் எமக்கு அறியத்தந்து அவற்றை பெற்றுவருமாறு அவ்வப் போது ஆலோசனைகள் வழங்குவார். "புத்தகப் பண்பாடு" பற்றியே பேசிப் பேசிப் புளகாங்கிதம் அடைவார். நண்பர் நகுலேஸ்வரனுடனும் இவருடனும் அக் காலத்தில் நடத்திய சந்திப்புக்களில் "புத் தகம்" என்பது எமது பொதுமொழியாக நட்புப்பரிமாற்றமாக மக்கள் தேவையா-கப் புரியப்பட்டு நாம் மகிழ்ந்திருந்தோம்.

05. எழுத்தாளன் என்பவன் எழுத்துடன் மட்டும் ஒதுங்காது, அவ்வெழுத்துக்கு இலக்கணமாக தன் வாழ்வை அமைத் துக்கொள்ளும் வல்லமை சிலருக்குத் தான் வாய்க்கும். அந்த வகையில் மக்கள் ஒடுக்கலுக்குட்பட்ட வேளைகளிலெல் லாம் அம்மக்கள் செல்லுமிடமெல்லாம் சென்று அவர்களுடன் வாழுவதே தனக்கு அயோத்தி என காடு, கரம்பை, கடல் எங்கும் நோயுடனும் பொருளாதார நெருக்கடிகளுடனும் பல ஆண்டுகள் அலைந்தார். அக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 2007-2009 வரை இடம் பெற்ற பாரிய இடப்பெயர்வுக் காலத்தில் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நிர்வாக அலுவலராக இயங்கி மக்களுக்குப் பல தொண்டுகள் புரிந்தார். அரச அதிகாரி என்பவன் மக்களை மேய்க்கும் மேய்ப் பனாக அரச இயந்திரத்தின் ஒடுக்கு வோனாக உலாவரும் உத்தியோகஸ் தர்கள் பல்கிப் பெருகியுள்ள நிலமானிய கொலனிய நீசத் தனத்தினிடையில் பண்புள்ள மக்கள் சேவகனாக நெருக்கடி நேரத்தில் தன்னை அர்ப்பணித்துத் தலை தாழ்த்திப் பணிபுரிந்தார்.

06. ஈழத்தமிழ்ச் சமூகம், கலை இலக்கியம் - பண்பாடு - பொருளாதாரம் - அரசி யல் - இராணுவம் எனப் பல முனைகளில் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றது. தோல்வியில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளும் துணிவு அச்சமூகத் துக்கு அவசியம். சமூகத்தில் புதிய பண்பாட்டை நோக்கிப் பயணம் செய்யவேண்டுமெனில் சுயவிமர்சன ரீதியில் சுய விசாரணை செய்யத் தயங்கக்கூடாது. அதுவே எழுத்தாளனின் இன்றைய முதன்மைப் பணி. பிற்போக்குப் பழமைவாதப் புதைகுழியிலிருந்து தமிழ்த் தேசியத்தை மீட்கும் பணி யில் எழுத்தாளர்கள் முனைப்பாகச் செயற் படவேண்டிய தருணம் இது.

எங்கள் பாட்டனுக்குப் பல்லக்கும் யானை குதிரைகளும் இருந்தனவென்றும் முடியுடை மூவேந்தர்களின் பாட்டன் பரம் பரையின் வழிவந்த ஆண்ட பரம்பரை யென்றும் இமயம் முதல் குமரிவரை ஆண்ட தமிழர்களின் வாரிசுகள் நாம் என்ற போலிப் பிரமைகளிலிருந்து எம்மை நாமே விடுவித் துக்கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் சகல வழிகளிலும் இன்று ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுகின்றனர். எனவே இன்று தமிழ்ச் சமூகம் ஓர் "ஒடுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட சமூகம்" என்பதை நாம் விரும் பியோ விரும்பாமலோ ஒப்புக்கொண்டே யாகவேண்டிய யதார்த்தத்தை புரிந்து ஏற்கும் பக்குவத்தைப் பெறவேண்டும்.

தமிழர்களை வர்க்க ரீதியில் ஆராய்ந்து மேன்மக்களை வர்த்தக மேலோங்கிகளை வேறுபடுத்திப் பார்க்கும் பார்வை பெற வேண்டும். தமிழர் தாயக மண்ணில் உட லாலும்உள்ளத்தாலும்உதிரத்தாலும்வியர்வை யாலும் உழைப்பில் ஈடுபட்டு வாழும் மக் களையே "தமிழ்மக்கள்" என்று வரையறுக்கப் பழகுதல் வேண்டும்.

"சாதித் திமிருடன் வாழுந் தமிழ னோர் பாதித் தமிழனடா" என்ற சிந்தனையில் ஒன்றுபட்ட தமிழ்ச் சமூகம் என்ற பரந்த ஐக்கியத்தை வலுப்படுத்தி வளப்படுத்தும் வல்லமை பெறவேண்டும்.

"பெண்ணடிமை தீரும்வரை மண்ண டிமை தீராது" எனும் பெண் விடுதலைச் சிந்தனைக்கு முதன்மை வழங்கும் துணிவைப் பெறவேண்டும்.

தமிழ் மக்கள் என்போர் ஒடுக்கப்பட் டோர் என அடையாளம் கண்டுகொண்டால் எமக்குரிய சர்வதேசத்தை தெரிந்துகொள்ளல் இயலும். கொலனிய நவகொலனிய ஆங்கிலத் தலைமை நாடுகளான பூமிப்பந்தின் வடக் கையோ-மேற்கையோ "சர்வதேசம்" எனக் காணும் மாயை களையப்படவேண்டும். ஐநூறு வருடங்கள் ஐரோப்பிய கொல னிய ஆளுகைக்குட்பட்டமையால் அமெ ரிக்க-ஐரோப்பிய விசுவாசம் எங்களைத் தொற்றியுள்ளது. அதனால் அவர்களே "ஈழத் தமிழர்களின் இரட்சகர்கள்" என்னும் மாயையிலிருந்து எம்மை விடுவித்து, ஆசிய ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்கப் பரந்த கண்டங்களினதும் மக்களினதும் வரலாறு, பண்பாடு, அரசியல், பொருளாதாரம், கலை இலக்கியங்கள் என்பவற்றைத் தெரிந்து கொள்ளவும் அம்மக்களுடன் நட்புப் பாராட் டவும் எமது சர்வதேச வியூகத்தை மாற்றவும் வல்லமை பெறவேண்டும். சர்வதேச சமரசம் எனும் அடிமை விசுவாசமும் ஆங்கில மோக மும் விடுபட்டு, அமெரிக்க - ஐரோப்பிய பாச நோயிலிருந்து நீங்கவேண்டும்.

சனநாயகம், மனித உரிமை ஆகிய வற்றை தமிழர் தமது விழுமியங்களாக வரித்துக்கொள்ளவேண்டும். இவற்றை தமிழ்ச் சமூகத்தின் வாழ்வுடன் பிணைக்கும் எழுத்தும் பயிற்சியும் எமது வாழ்வில் பிரயோகிக்கும் முயற்சியும் செயற்திறனும் வாய்க்கப்பெறல் வேண்டும்.

உலகத் தொழிலாளர்களுடனும் ஒடுக் கப்பட்ட தேசங்களுடனும் உறவைப் பேணும் பக்குவமான பயிற்சி வேண்டும்.

அப்போதுதான் "பள்ளத்தில் வீழ்ந்தி ருக்கும் குருடரெல்லாம் விழிகள் பெற்றுப் பதவி கொள்ளும்" காலம் கனியும். தமிழ்ச் சமூகத்தில் பண்பாட்டுப் புரட்சியும் பலிக்கும் தினம் வரும்.

மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற் றுவதில் எழுத்தாளர்களின் பணி தலை யானது. நண்பர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் இப்பணியை முன்னெடுப் பதில் முதன்மை ஸ்தானம் பெறவேண்டும் என்பது என் பேரவா. அவரது இலக்கியப் பணிகள் பற்றி விரிவாக தனியாக ஆய்வு முயற்சி மேற்கொள்ளப்படவேண்டியதும் நமது கடனாகும்.

முற்போக்குத் தேசிய முனைப்பை நோக்கித் தமிழ்ச் சமூகம் மலர்ச்சி கொள்ளும் வழியில் நாம் அனைவரும் ஒன்றாக ஊர் கூடித் தேரிழுப்போம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் ச. முருகானந்தன்
கொழும்பு



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனும் நானும் ஒரே காலத்தில் எழுத்துலகில் கால்பதித்தவர்கள். போருக்கு முந்தைய எழுபது களின் பிற்பகுதியில் நண்பரும் நானும் அறிமுகமானோம். யாழ்ப் பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நான் உதவி வைத்திய மாணவனாக பயின்றுகொண்டிருந்த காலத்தில் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டபடி அரசசேவையில் லிகிதராக கடமையாற்றிக்கொண்டிருந்தார். எழுபதுகளில் தோன்றிய எழுச்சிமிக்க இளைய எழுத்தாளர் அணியின் எழுத்தாளர்களிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. இந்த நெருக்கத்திற்கு அச்சாணியாக இருந்தவர் எமது தலைமுறை இளம் எழுத்தாளர் அணியைச் சேர்ந்த அசுர எழுத்தாளர் நண்பன் காவலூர் ஜெகநாதன் தான். மிகக் குறுகிய காலத்தில் வேகவேகமாகவும் காத்திரமாகவும் ஈழத்து பத்திரிகை சஞ்சிகைகளில் எழுதிக்குவித்த காவலூர் ஜெகநாதன் மிகக் குறுகிய காலத்தில் இளமையிலேயே அகாலமாக அமரராகிவிட்டார்.

காவலூர் ஜெகநாதன் பிரதானமாக சிறுகதைகளையே எழுதினாலும் இளம் எழுத்தாளர்களான என்போன்ற சக எழுத்தாளர்களை தேடிச் சந்தித்து பத்திரிகைமூலம் எம் இலக்கிய முகத்தை அறிமுகப்படுத்தி கட்டுரைகளும் எழுதினார். ஈழநாடு பத்திரிகையில் வாரா வாரம் ஒவ்வொரு இளம் எழுத் தாளரின் குறிப்புகளை புகைப்படத்துடன் அறிமுகப்படுத்தியபோது இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனை முதலாவதாகவும் என்னையும் அடுத்த அடுத்த வாரங்களில் அறிமுகப்படுத்தினார். அன்றைய ஜெக நாதனின் கட்டுரை எம்மை ஊக்குவித்தது என்றால் அது மிகையாகாது. இணுவையூரானுக்கும் எனக்கும் இடையிலான நட்புக்கும் வித்திட்டவர் ஜெகநாதன்தான். காலப்போக்கில் ஜெகநாதனின் சில விடயங்கள், இணுவையூரானுக்கும் எனக்கும் ஒத்துப்போகாதபோது அதுபற்றி நாம் இருவரும் உரையாடியதாக ஞாபகம்.

சிதம்பரதிருச்செந்திநாதன் பழக இனியவர். அதிகம் பேசாவிட்டா லும் ஆழமாக உரையாடுவார். இலக்கிய உலகம் பற்றி காத்திரமான கருத்துக்களை முன்வைப்பார். ஈழத்து முன்னோடி இலக்கியவாதிகளைப் பற்றியும் அவர்களது படைப்புகள் பற்றியும் உரையாடுவார். உலக இலக் கிய மொழிபெயர்ப்பு நூல்களையும் தேடித் தேடி வாசித்து இவை பற்றி யும் கூறுவார். அன்றைய புதியதலைமுறை எழுத்தாளர்களில் யாழ்ப் பாணத்திலிருந்து எம்மூவருடன் கோப்பாய் சிவம், வடகோவை வரதராஜன், சுதாராஜ், இராஜேந்திரன், கோகிலாமகேந்திரன், விக்கினேஸ்வரன், ரவி, இரத்தினவேலோன், சிவமலர், தமிழ்பிரியா, கண மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிட்ட சிலரும் எழுதுபதுகளில் எழுத்துல கில் காலடி பதித்தார்கள். ஜெகநாதனுக்கு அடுத்தபடி சிதம்பர திருச்செந்திநாதன், கோகிலா மகேந்திரன் இவர்களுடன் நானும் கூடுதலான சிறுகதைகளை எழுதினோம். ஜெகநாதன் சகல பத்திரிகை, சஞ்சிகை களிலும் கொடிகட்டிப் பறந்த அதேவேளை, சிதம்பர திருச்செந்திநாதன், சுதாராஜ் ஆகி யோர் வீரகேசரி, சுடர், சிரித்திரன், மல்லிகை என்பவற்றிலும் அதிகம் எழுதினர். எனது படைப்புகள் தினகரன், ஈழநாடு, மல்லிகை என்பவற்றில் அதிகபட்சம் வெளியானது.

அன்றைய எழுத்தாளர்கள் தாம் சந் திக்கும் வேளைகளில் மற்றவரது படைப்பு களைப் பாராட்டுவதுடன் குறை, நிறை களை பரஸ்பரம் எடுத்துரைப்பார்கள். எம் மிடையே பொறாமையற்ற போட்டி மறை முகமாக இருந்தது. எண்ணிக்கையில் ஜெக நாதன் எட்டமுடியாத இடத்தில் இருந்த போதும் காத்திரமான படைப்புகள் என்று பார்க்கும்போது திருச்செந்திநாதன், சுதா ராஜ், கோகிலா மற்றும் நான் அதிக கவனிப் பைப் பெற்றோம். தமிழகத்தில் தீபத் தில் என் கதை பிரசுரமானபோதும், நண் பர்கள் வட்டத்தில் முதலாவது தொடர் நவீனத்தை எழுதிய வகையிலும் நான் முந்திக்கொண்டபோது சிதம்பரதிருச்செந்தி நாதன் எனைத் தட்டிக்கொடுத்து பாராட்டி யது இன்றும் பசுமையாக என் மனதில் இடம்பிடித்துள்ளது. தகவல்வட்டத்தில்திருச் செந்திநாதனின் சிறுகதை முதலாம் பரிசைப் பெற்றபோது நான் அவரை பாராட்டியது போலவே, சென்னை இலக்கிய சிந்தனைப் பரிசு கிடைத்தபோது என்னையும் அவர் பாராட்டினார்.

அப்போது பத்திரிகைகள் நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெறு வோரில் ஜெகநாதன், சுதாராஜ், சிதம்பர திருச்செந்திநாதன் என்போருடன் நானும் இடம்பெறுவேன். எங்களது சந்திப்புகள், இலக்கிய பரிவர்த்தனைகள் அனைத்திற்கும் யாழ் நூலக எரிப்பு, 77, 83 இன ஒடுக்கு வன்முறை என்பன முற்றுப்புள்ளி வைத்தன எனலாம்.

நீண்ட இடைவெளி செந்திநாதனுக்கும் எனக்கும் இடையில் ஏற்பட்டுவிட்ட போதி லும் படைப்புகளிலும், நூல்களிலும் பரஸ் பரம் ஒருவரை ஒருவர் தரிசிப்போம். யாழ்ப் பாண மக்கள் இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்துவந்தபோது நான்வன்னியில்மருத்து வராக பணியாற்றினேன். போராளிகளின் கட்டுப்பாட்டுள் இருந்த காலத்தில் மருத்து வர்களையும் இலக்கியவாதிகளையும் அவர் கள் அரவணைத்தே சென்றனர். நாதனும் நானும் வன்னியின் இருவேறு மாவட்டங் களில் பணியாற்றியபோதும் இருவரும் சந்திக்கமுடியாதபோதும் ஒருவரை ஒருவர் அறிந்து வைத்திருந்தோம். ஒரு எழுத்தாளன் என்ற நிலையிலிருந்த நாதன் பின்னர் பத்தி ரிகையாளனாக, பத்திரிகை ஆசிரியராகசெயற் பட்டபோது நானும் எழுதினேன். இடைப் பட்ட காலத்தில் எம் இருவரது நூல்களும் வெளியாகின.

இணுவையூர் திருச்செந்திநாதன் பத்திரி கையானாக மாறிய பின்னர் அவர் படைப் பிலக்கியத்தில் ஈடுபடுவதை குறைத்துக் கொண்டார். இலக்கிய உலகில் தோன்றிய பிளவுகள், நேர்மையற்ற தன்மை, பரஸ்பர நட்புறவின்மை என்பவற்றிற்கு மேலாக போருக்குள் வாழ்ந்தபோது ஏற்பட்ட துன் பங்கள் எனப் பல்வேறு காரணங்களு டன் இடப்பெயர்வும் அவர் ஆக்க இலக்கி யத்திலிருந்து சற்று ஒதுங்கியதற்கு காரண-மாக இருக்கலாம்.

காலத்தால் அழியாத, காலத்தின் வடுக் களை கலைத்துவத்தோடு கதைகளாக்கிய திருச்செந்திநாதனுடைய படைப்புகள் விதந் துரைக்கத் தக்கன. எமது தலைமுறையில் தோன்றிய எழுத்தாளர்களில் தனி முத்திரை பதித்தவர் இவர். அவரை மனதார வாழ்த் துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்



தம்பி, அறுபது வயதாகிறதாமே உமக்கு? உண்மையா? அதிசயமாக இருக்கிறது எனக்கு! நேற்றுமாதிரி இருக்கிறது நாம் ஓடித்திரிந்து விளையாடிய நாட்கள்! கதை, கவிதைகள் பற்றிக் கலந்துரையாடியதும், விவாதித்ததும் கோயில் திருவிழாக்களில் இளம்பெண்களைப் பார்த்துக் கிண்டலடித்ததும் நேற்று மாதிரி இருக்கிறது! எமது மொழி பற்றி, இனம் பற்றி, சமயம் பற்றி, நாடு பற்றி, எதிர்காலம் பற்றி எத்தனை எத்தனை கனவுகள் கண்டிருப்போம் இளவயதில்! அத்தனையும் விழலுக்கிறைத்த நீராயினவே இப்போது! எமது இலட்சிய அரசியலும் கைகூடவில்லையே? கவலைதான்! என்ன செய்வது? உமது தந்தை சிறந்த நாடக நடிகர்; எனது தகப்பனாரோ நாடறிந்த நல்ல பேச்சாளர். இருவரும் ஒரே ஊரவர்கள்; இணுவில் அவர்களது கிராமம்; நல்ல நண்பர்கள்! அந்த இருவரது நட்பும் எங்களது சினேகிதத்தை மேலும் வளர்த்தது! ஆனால் தொழில் வாய்ப்பு எங்களைப் பிரித்தது; எனினும் நட்பு தொடர்ந்தது. திருமணமாகி வெவ்வேறு இடங்களில் குழந்தைச் செல்வங்களுடன் எல்லாம் பெற்று நல்லிறைவன் திருவருளால் நலமே வாழ்கிறோம்! அதிலும் ஒரு ஒற்றுமை பார்த்தீரா? இருவருமே காதல் திருமணம்! அதுவும் பெற்றோரின் நல்லாசியுடன்! உனது முதற் சிறுகதை" பிரசுரமானபோது மிகவும் மனம் குதூகலித்தவன் நான்! பாராட்டுத் தெரிவித்திருந்தேன்! தொடர்ந்து எழுதினாய்! ஈழத்து இலக்கிய உலகில் ஒரு விடிவெள்ளி முளைத்துவிட்டது எனப் புளகாங்கிதம் அடைந்தோம்! ஆனால் விதி சதி செய்தது! காலத்தின் கோலம்! உன் எழுத்து சற்று முடங்கிவிட்டது இனி எழுதுங்கள்! விடாது எழுதுங்கள் தொடர்ந்து எழுதுங்கள்! வெற்றிக்கனி உங்களுடையதாகட்டும்! பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.திருநந்தகுமார்
அதிபர்,
ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம்
சிட்னி, அவுஸ்திரேலியா.



எழுபதுகளின் முற்பகுதியில் செந்தில் சிறுகதைகள் எழுத ஆரம்பித்துவிட்டார். அப்போது எனது கவனம் கவிதையின் பால் இருந்தது. கவியரங்கக் கவிதைகளில் நான் ஈடுபட்டவேளையில் எழுபதுகளின் நடுப் பகுதியில் செந்திலின் சிறுகதைகள் இலக்கியவாதிகளின் கவனத்தைக் கவர ஆரம்பித்துவிட்டன.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் என்ற நீண்ட பெயருடன் வீரகேசரி வாரஇதழில் ஒன்றரைப் பக்கத்தை நிரப்பி நிற்கும் அவரின் சிறுகதையின் அமைப்பே வித்தியாசமாக இருக்கும். என் நினைவு சரியாக இருக்குமாயின் ஒரு சிறுகதையினை ஆரம்பித்து ஒரு கட்டத்தில் நட்சத்திரக் குறியீடுகளை வரிசைப்படுத்திவிட்டு இன்னொரு உரையாடல் தொடங்கும். இப்படியே மாறி மாறி கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு அதுவரை நான் இலங்கையில் பார்த்திராத ஒன்று.

இளவயதிலேயே செந்திலுக்கு இளையோர் மத்தியில் நல்ல பேரும் புகழும் இருந்தது. குறிப்பாக இளம்பெண்கள் மத்தியில் அவர் எழுத்தாளராக நல்ல புகழோடு விளங்கினார். எழுபதுகளிலேயே நாடகங்களை எழுதவும் ஆரம்பித்துவிட்டார். அப்போது யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் பெருமளவில் பங்கெடுத்த சுக்கிராச்சாரியார் என்ற நாடகம் வீரசிங்கம் மண்டபத்தில அரங்கேறியது. மண்டபம் நிறைந்த காட்சியாக இடம்பெற்ற அந்நாடகத்தை எழுதியது சிதம்பர திருச்செந்திநாதன்தான். இணுவிலிலிருந்து யாழ்ப்பாண நகர் வரைக்கும் காங்கேசன்துறை வீதியெங்கும் "இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் சுக்கிராச்சாரியார் நாடகம்" என்ற சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது எனக்கு நல்ல நினைவில் உண்டு.

எண்பதாம் ஆண்டளவில் செந்தில் அரச தொழிலுக்குச் சென்றுவிட்டார். நானும் ஒரு தொழிலில் இணைந்துகொண்டேன். அப்போது ஒரு நாள் என்னிடம் வந்த செந்தில் வீரகேசரியில் ஒரு பேட்டியை பிரசுரிக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதனை வித்தியாசமான முறையில் வடிவமைக்கவிருப்பதாகவும் சொன்னார். கலை இலக்கிய நாடகத் துறையில் துறைசார்ந்த இளையோர்களை வைத்து தொடர் பேட்டியை நடாத்துவது அவரின் எண்ணம். எழுத்தாளர், கவிஞர், நாடகக் கலைஞர், நர்த்தகி, பாடகர் என அந்தப் பட்டியலை உருவாக்கினோம். நடனத்திற்கு இணுவிலில் புகழ்பெற்ற நடன ஆசிரியை கௌசல்யா பஞ்சாட்சரமும் நாடகத்திற்கு க. சிதம்பரநாதனும் எழுத்திற்கு திருச்செந்திநாதனும் பாடகர் சிவசக்தி சிவப்பிரகாச பிள்ளையும் கவிதைக்கு நானும் என முடிவானது. நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புகளின் சாத்தியங்கள் குறைவாக இருந்தமையினால் கேள்விகளை எழுதி அவர்களிடம் கொடுப்பது என்றும் குறித்த காலத்தில் பதில்களைப் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து பிரசுரத்துக்கு அனுப்புவது என்றும் முடிவாயிற்று. கேள்விகளைச் சேகரித்துக் கொடுப்பதும், பதில்களைப் பெறுவதும் செந்திலின் பொறுப்பாயிற்று.

என்னிடம் கேள்விகள் கேட்டவர் நாடகக் கலைஞர் நண்பர் க. சிதம்பரநாதன் கேள்விகளைப் பார்த்து எனக்குத் தலை கிறுகிறுத்துவிட்டது. பாரதியின் வசன கவிதையில் தொடங்கி அசரவைக்கும் கேள்விகள் அவை. நான் யாரிடம் கேள்விகள் கேட்டேன் என நினைவில் இல்லை. ஆனால் நடனம் பற்றியே என் சிந்தனை அப்போது இருந்தது யாழ். இந்துவில் என் ஆசிரியர் தேவன் - யாழ்ப்பாணம் அவர்களின் உறவினால் அவர் அறிவிப்பாளராகச் செல்லும் நடன அரங்கேற்றங்கள் பலவற்றிற்கும் நான் செல்வ துண்டு. போய்வரும் வழியில் தேவர் உதிர்க்கும் அற்புதத் தமிழும், தத்துவ முத்துகளும் என் சிந்தனைக்கு விருந்தாகும். அவரிடமே சென்று என் மனதில் உதித்த கேள்விகளுக்கு வடிவம் கொடுக்க துறைசார்ந்த வார்த்தைகளைத் தேடிய நினைவு உண்டு.

எனினும் அக்காலத்தில் எனது வேலைப் பளுவும், ஏனைய இலக்கிய முயற்சிகளும் எனக்குக் கிடைத்த கேள்விகளுக்கு உரிய பதிலைசெந்திலிடம்கொடுக்கமுடியவில்லை. இரண்டு மூன்று தடவைகள் செந்தில் என்னைத் தேடி வீட்டுக்கு வந்ததாகச் சொன்னார்கள். அப்படி வீட்டுக்கு வந்த ஒரு நாள் நான் வீட்டில் இல்லையென்றதும் ஒரு கடித உறையைக் கொடுத்துவிட்டுச் சென்று விட்டார். அன்றிரவு அந்த நாலுவரிக் கடிதத்தைப் படித்தேன். மன்னித்துக்கொள் நந்தா இனியும் தாமதிக்க முடியாது என்பதனால் நாற்கோணப் பேட்டியாக அமைத்து விட்டேன். உன் பதில்கள் கிடைக்காமையினால் இந்த ஏற்பாடு என்பதாகச் சொல்லியது கடிதம். எனக்கு சற்று ஏமாற்றமாக இருந்தாலும் எந்த வருத்தமும் இல்லை. அந்தச் சூழலில் என்னால் செய்யமுடியாது என்பதும் அதற்குரிய நேரம் எனக்கு இல்லை என்பதும் எனக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

நாற்கோணப் பேட்டி வீரகேசரியில் வந்தபோது சற்றுக் கவலையாக இருந்தது. எத்துணை ஒரு வாய்ப்பை இழந்து விட்டோமே என்பதுதான் வருத்தம். அப்பேட்டி இணுவிலில் மிகப்பரவலாகப் பேசப்பட்டது. இணுவில் கோவில் வாசல் சந்தியில் உள்ள மார்க்கண்டு கடையில் பகல் வேளையில் நாம் சாமியார் என அழைக்கும் பெரியவர் வீரகேசரிப் பேட்டியை உரத்த குரலில் வாசிக்க மற்றவர்கள் அதனைக் கேட்டுக் கொண்டிருந்தது எனக்கு நினைவில் உண்டு.

இளமைக்காலம் கரையக் கரைய எம் தொடர்பும் குறைந்து போயிற்று. அப்போது செந்தில் குடும்பத்தினர் மருதனார்மடம் மாமி வீட்டுக்கு முன்புறமாகவுள்ள தோட்டத்தின் அருகில் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தனர். மிகப்பெரிய வீடு அது. அதுவே செந்திலுக்கு இலக்கியச் சந்திப்புக்கான களமாக இருந்திருக்கும். செந்திலின் திருமண வரவேற்புக்கு அங்கு சென்றமை இன்னமும் நினைவில் உண்டு. இந்திய அமைதிப்படைக் காலத்தில் எண்பத்தொன்பதாம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கு முந்தைய காலத்தில் செந்தில் தினமும் பத்துப் பன்னிரண்டு மணி நேரத்திற்கும் மேலாக கடமை புரியவேண்டியிருந்தது. அப்போதெல்லாம் செந்திலைக் காண்பது மிக அரிது.

தொண்ணூற்றைந்தாம் ஆண்டு ஜப் பசியில் இடம்பெற்ற மாபெரும் இடப் பெயர்வோடு நான் நியூசிலாந்துக்குக் குடிபெயர்ந்துவிட்டேன். அங்கிருந்து மீண்டும் சிட்னிக்கு இன்னொரு இடப்பெயர்வு இரண்டு நாடுகளில் மூன்று நகரங்களுக்கு இடம் பெயர்ந்தபோதும் என் மனம் என் மண்ணை விட்டு மாறவில்லை. வேறு எதற்கும் மயங்கவில்லை. அந்த மண்ணின் மணத்தோடு என் மன வானில் சிறகு விரிக்கும் என் நண்பர்கள் வட்டமே என்னை இன்னமும் இணுவிலில் இருத்தியுள்ளது.

அந்த நண்பர்கள் வட்டத்தின் புகழ் பூத்த பெருமகன், எழுத்தாளன், நாடக ஆசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் இன்று போல் என்றும் பேரோடும் புகழோடும் வாழ்ந்து இன் தமிழுக்கும், இணுவை மண்ணுக்கும் தொண்டாற்றவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வணங்குகிறேன்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லையா சண்முகப்பிரபு

நோர்வே,



அன்றுபோல என்றும் வாழ்க! அன்புமிக்க நண்பா நீ நீடுவாழ்க!
தென்றல் போல இலக்கியத்தில் தேனாக இனித்தாய் வாழ்க!
நன்றாக இலக்கியத்தில் நல்ல முத்திரை பதித்தாய் வாழ்க!
என்றும் உன் கதைகள் பார்த்து பரவசம் உற்றேன் யானும்!

எம்மவர் தமிழர் வாழ்க்கை எல்லாம் படமாக பிடித்துக்காட்டி!
எழுதிய உன் ஆக்கம் யாவும்! எதிர்கால தமிழ் உலகம் போற்றும்!
நம்மவர் வரலாறு உலகிலே பதிவாக உன்போன்றோர் நீடு வாழ்க!
நம்மவர் மூத்தகுடி! நீண்ட வரலாறும்! நற்பண்பாடும் நீடு வாழ்க!

அறுபதின் நன்முதிர்வும் பெற்று! அன்புடன் சிவன் அருளும் பெற்று!
அறுசுவை உணவுபோல எழுதுக மேலும்! நன்றாய் ருசித்திடவே!
நறுமணம் வீசும் பூவின் வாசமும், நல்ல மாங்கனி ருசியும்போல!
எழுதுக எழுதுமட்டும்! எம்மவர் வாழ்வு என்றும் சிறக்கவே எழுதும்! வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. க. பரமநாதன்
டென்மார்க்,
மஞ்சத்தடி,
இணுவில்.



எழுத்தாளன் தன் படைப்புகள் மூலமாகத் தான் வாழும் காலத்து நிகழ்வுகளை, சமூகமுரண்பாடுகளை, வாழ்வியலை கதை மாந்தர்களூடாக எடுத்துக்காட்டுகிறான். திருச்செந்தி இப்பணியினைத் தனது முதல் சிறுகதையிலிருந்து இன்றுவரை சரியாகவே செய்துவந்துள்ளார் என்பதே எனது கருத்தாகும். இந்திய இராணுவம் ஈழத்தில் நிலைகொண்டிருந்தபோது மக்கள் பட்ட துயரங்கள், இவரின் கதைகளில் தீப்பிளம்பாக வெளிக்கிளர்ந்தன என்றே சொல்லலாம்.

காலமாற்றத்தால் இவர் சுமந்த வலிகள் ஏராளம். அவற்றை வெளிக் கொணரும் சூழல் இப்போது இவருக்கு இல்லை என்பதையும் பதிவு செய்ய விரும்புகின்றேன். திருச்செந்திநாதனும் நானும் 1970களில் மிதிவண்டியில் பயணித்த காலத்திலிருந்து 1988வரை மிகவும் நெருங்கிப் பழகிவந்திருக்கி றோம். இடப்பெயர்வு என்னை நாட்டிலிருந்து தூரவிலகியிருக்க வைத்துவிட்டது.

ஓர் இக்கட்டான சூழலில், அதாவது 1987இல் திருச்செந்திநாதனைச் சந்தித்தபோது, தான் உயிர்மீண்ட நிகழ்வினை என்னோடு பகிர்ந்துகொண்டது இன்னும் பசுமையாக என்னுள் இருக்கின்றது. இவரின் வாழ்க்கையில் எல்லாம் வந்துபோயின. அவற்றை எழுதும் சூழல் இப்போ இல்லை என்பதே உண்மை. இவரோடு கடந்த 28 ஆண்டுகளாகத் தொடர்பற்று இருந்துவிட்டேன். ஓர் எழுத்தாள நண்பனைக் கண்டு பேசிக்களிப்படைய முடியவில்லையே என்ற ஏக் கம் என்னுள் இன்னும் இருந்துகொண்டேயிருக்கிறது. இளமையில் தனது தந் தையைப் பறிகொடுத்து வீட்டுப் பொறுப்பினைத் தோளில் சுமந்தபோதும் எழுத்துலகை விட்டு ஓடாமல் சாதனைகள் புரிந்துள்ளார். விரல்விட்டு எண்ணக் கூடிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவந்த காலத்தில், அனுபவம்மிக்க வயதில் பெரியவர்களான எழுத்தாளர்களின் ஆக்கங்கள் பத்திரிகைகளை ஆக்கிரமித்த காலத்தில், 18 அகவையுடைய இளைஞனான இணுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் சிறு கதை 1972இல் வீரகேசரியில் பிரசுர மாகியது. இவர் இந்த இலக்கை அடைய எழுத்துப் போராட்டமே செய்யவேண்டி யிருந்தது. திருச்செந்திக்கு சிறுவயதி லேயே இலக்கியத் தேடலில் அதிக ஆர் வம் இருந்ததை அவருடன் நெருங்கிப் பழகி யவர்கள் நன்கு அறிவர்.

"தந்தை மகற்காற்று நன்றி வையத்து முந்தியிருப்பச் செயல்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைவாக திருச்செந்தியின் ஆர் வத்தை அடையாளம் கண்டு ஊக்கமளித் தவர் இவரின் அன்புத் தந்தை அமரர் சிதம்பர நாதனாவார். திருச்செந்தியின் எழுத்துலகச் சாதனைகள் அவரின் தந்தையின் ஆசியுடனே நடந்தேறுகின்றன என நம்புகிறேன்.

நாம் 1974களில் இலக்கியப் படைப் பாளிகள் பற்றி உரையாடும்போது திருச் செந்தி இயல்பாகவே புன்னகையுடாகக் கொட்டிய கருத்துக்களை எண்ணிப்பார்க் கின்றேன். ஒருமுறை எழுத்தாளர்கள் பண்பு என்ன என்ற எமது உரையாடலில் திருச்செந்தி கூறிய கருத்துக்களை பதிவு செய்ய விரும்பு கின்றேன்.

"சராசரி மனிதனுக்குரிய பண்புகள் ஓர் எழுத்தாளனுக்கும் இருக்கவேண்டும். இல்லை யேல் அவன் படைப்பில் எவ்விதமான பய னும் இல்லை"

"படைப்பால் சமூகமாற்றம் நிகழுமோ, இல்லையோ சமூகத்தில் அவன் கொண்ட அக் கறை அதில் பிரதிபலிக்க வேண்டும்" இப்ப டிப் பல கருத்துகளை அன்றே சொன்னவன் திருச்செந்திநாதன். இதனால் இவரின் கதை களில் சமூகநலன் சார்ந்த கருத்துக்கள், இயல் பான கதை மாந்தர்கள் மூலமாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன என்றால் மிகையாகாது. எமது வாழ்வோடு ஒன்றிப்போன கோவில் கள், சங்கீதக் கச்சேரிகள் போன்ற நிகழ்வுகளை மையக்கருத்தாகக் கொண்ட சிறுகதைகளை எழுதி வெற்றியும்கண்டார். விளம்பரம் தேடும் தொழிலதிபர்கள், மற்றவர்களை மட்டம் தட்டிப் பிழைப்பவர்கள், வேலிச்சண்டை இப்படிப் பல சமூக அவலங்களையும் உரிய நோக்கோடு படம்பிடித்துக் காட்டத் தவறிய தில்லை என்பதே எனது கருத்து.

சிறுகதை, நாவல் என்பதற்கு அப் பால் மேடை நாடகம், வானொலி நாடகம் போன்றவற்றை எழுதி அதிலும் வெற்றி கண்டார். "சுக்கிராச்சரியார்" என்னும் மேடை நாடகம் 1978 களில் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு பாராட்டினைப் பெற் றது. தேவயாணி, அரங்கேற்றம் போன்ற வானொலி நாடகங்கள் இலங்கை ஒலிபரப் புக் கூட்டுத்தாபனத்தினரால் மூன்றுதடவை களுக்கு மேல் ஒலிபரப்பப்பட்டதும் சுட்டிக் காட்டப்படவேண்டியதாகும்.

இலக்கிய ஆர்வம் கொண்டவர் களை ஊக்குவிக்கும் பண்பு திருச்செந்தியி டம் நிறையவேயுண்டு. இதனை எடுத்துக் காட்டுவது சிறப்பு என்றே எண்ணுகிறேன். நான்கவிஞர்ச. வே. பஞ்சாட்சரத்திடம்கவிதை கற்று கவிதைகள் எழுதத் தொடங்கிய காலம் எனது கவிதைகள் பத்திரிகைகளில் வெளி-வரப் போராடவேண்டியிருந்தது. போராட முடியாது சோர்ந்திருந்தபோது 1974களில் ஒரு சில கவிதை வீரகேசரியில் பிரசுரமாகி யது. இவை பிரசுரமாவதற்கு திருச்செந்தி எனக்குத் தந்த ஊக்கமே காரணம் என்று குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்பு நண்பா! அன்றைய நினைவு-களை இங்கு ஆங்காங்கே பதிவு செய்ய முற்பட்டிருக்கிறேன் எழுத்தாளனே! உன் கைகளின் கட்டுக்கள் அறுக்கப்படும். அப் போது உன் எழுதுகோல் தடையற்ற பாதை யில் பயணிக்கும் என்று வாழ்த்துகின்றேன்.

தமிழ்வாழ நின் பணி தொடரட்டும் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. கணேசலிங்கம்
ஓய்வுநிலை அதிபர்,
நீர்/ விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி,
நீர்கொழும்பு



இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் என்ற பெயரை உச்சரிக்கின்றபோது "இவர் ஒரு எழுத்தாளனாக இருக்கவேண்டும்". என்கின்ற எண்ணம் உள்ளத்தில் உதயமாகின்றதல்லவா! அவ்வளவு தூரத்துக்கு அவரது ஆக்கங்கள் பத்திரிகை, எழுத்துத்துறையில் ஆளுமை செலுத்தியிருக்கின்றதெனலாம்.

அவரைப்பற்றி அவரது நண்பனாகவிருந்து சொல்வதென்றால் - எம் நண்பன் - எம்மூரான்-இணுவிலான் நாடறிந்த எழுத்தாளன் - நாவல் ஆசிரியன் - நகைச்சுவையாளன் - இசைப்பிரியன் - கலைஞன் - நல்ல ரசிகன் - இயல் பூக்கம் கொண்டவன் - சிறுவயதில் இருந்தே சிறுகதைகளை எழுதிக் குவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவன் - கலை கலாசார விழுமியங்களை மதிப்பவன். இறைபக்தியாளன் - சிறந்த ஆளுமைமிக்கவன்என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

நாம் இருவரும் வெவ்வேறு பாட-சாலைகளில் கல்வி கற்றபோதும் ஒரே ஊரில் வசித்த காரணத்தால் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அதிகரித்தது. ஊரின் உறவு உள்ளத்தைப் பிணைத்தது. நட்பும் மலர்ந்தது.

அந்த இளமைக்கால நினைவுகளை ஒரு கணம் திரும்பிப்பார்க்கின்றேன். 1970/80 காலப்பகுதியில் ஆக்கிரமித்திருந்த இந்திய "தமிழ்சினிமா கலாசாரங்கள்" யாழ். இளை ஞர்கள் மீது ஆதிக்கம் செலுத்தியது.சினிமாப் பாணியில் பெல்பொட்டம், பூப்போட்ட இறுக்கமான சேர்ட், கிப்பி, தொப்பி, கூலிங்கிளாஸ் அணிந்து துவிச்சக்கரவண்டி களில் கூட்டம், கூட்டமாக நகரை வலம் வரும் காலம் அது. அவ்வாறே மாணவி களும் மினிஸ்கேட் அணிந்து சைக்கிள்களில் வலம்வருவர் நண்பன் திருச்செந்திநாதன் "பதி னாறு வயதினிலே" படத்து கமல் பாத்திர மேற்று கதாநாயகனாகிவிடுவான்.

எங்கள் ஊரிலும் அயல் ஊரிலும் நடக் கும் கோவில் திருவிழா, அரசியல் கூட்டம், கதாப்பிரசங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், கலைவிழா, இசைவிழா, பெரியமேளம், சின்னமேளம், நாடகவிழா, இல்லவிளை யாட்டுப்போட்டி, உதைபந்தாட்டம், துடுப் பாட்டம் போன்ற நிகழ்வுகளில் பங்காளர் களாவும் பார்வையாளர்களாகவும், எங்களது நண்பர்கள் கூட்டம் பிரசன்னமாகி ஆக்கிர மித்துவிடும். அவ்வாறே திருமணவீடு மரண வீடுகளிலும் எங்கள் கைங்கரியங்கள் தொட ரும். அங்கெல்லாம் திருச்செந்திநாதன் சிரித் திரன் பத்திரிகையில் வெளிவரும் "மைனர் மச்சான்" ஆக பிரசன்னமாவான். நகைச்சுவை யும் சிரிப்பும், லொள்ளும், கலகலப்பும் கும்மாளமும் அவன் இருக்கும் இடத்தில் நர்த்தனமாடும். நாங்கள் பக்கவாத்தியம் இசைப்போம். விடியவிடிய நடைபெறும் இசைக்கச்சேரி மேளக்கச்சேரிகளில் பச்சை, சிவப்பு கனவுகள் படமாக்கப்படும். அங்கெல் லாம் திருச்செந்திநாதன் கதாநாயகனாக இருப்பான். நாட்கள் நகர அவை சிறு கதைகளாகி பத்திரிகைகளை நிரப்பும். உண் மைகளும் பொய்மைகளும் சேர்ந்து இலக் கியமாகிவிடும். குதூகலிப்பு ஒருபுறம் இருந் தாலும் கல்விக்கு நாம் எப்போதும் முதலி டம் அளிப்பவர்கள். கல்வியும் குதூகலிப்பும் எங்குள்ளதோ அதைநோக்கி எங்கள் துவிச் சக்கரவண்டிகள் காந்தமாகி விரையும். எங் கள்நட்பும்பிணைப்பும்சுதந்திரக்காற்றைசுவா சிக்கும் பறவைகளாக பறந்தன. அந்த வசந்த காலத்தை, பொற்காலத்தை 1980க்கு பிறகு யாழ். இளைஞர் சமூகம் யுத்தகாரணமாக தொலைத்து விட்டிருந்தது.

"நட்டுவன் பிள்ளைக்கு சொட்டிக் காட்டவேண்டுமா?" "மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா என்ன?" அக் காலத்தில் திருச்செந்திநாதனுடைய தந்தை திரு சிதம்பரநாதன் அவர்கள் சிறந்த, நாடக வில்லிசைக் கலைஞர், சிறந்த மேடைப் பேச் சாளர், இதனையொற்றி இணுவையென்ற ஊர்ப்பெயரையும் சிதம்பர என்கின்ற தந்தை பெயரையும் இணைத்து, "இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்" என்ற பெயரில் தனது ஆக்கங்களுக்கு உரிமைபதித்து முத் திரை பொறித்தான். தரம் பத்தில் படிக்கும் காலத்திலேயே சிறுகதைகள் வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் வெளிவந்தவண்ணம் இருந்தன. சகமாண வர்கள் மத்தியில் அவரது கதைகளின்மேல் விழுந்த விமர்சனங்கள் அதிகரிக்க அதிகரிக்க ஆக்கங்களும் அதிகரித்தன. கதைகளும் கட்டு ரைகளும் மேலும் செழுமைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வசந்தகால தென்றலுக்குள் புய லொன்று வீசி எங்கள் நட்புக்குள் இடி இடித்தது. தந்தை சிதம்பரநாதன் அமரராகி விட்டார். குடும்பப் பொறுப்பு தலை மேல் விழுந்தது. சகோதரியை கரைசேர்க்க வேண்டிய நிலையில் யாழ்-கச்சேரியில் எழுது வினைஞராக பணியேற்றார். ஆயிரம் சுமைகள் தலைமேல் விழுந்தாலும் காணும் போதெல்லாம் "மச்சான்" என்று அழைக்கும் சுபாவம் என்றுமே மறைவதில்லை. நான் உயர்கல்வி நோக்கி பல்கலைக்கழகம் புகுந் தேன். வடக்கில் சூழ்ந்த யுத்தமேகத்தால் நண்பர்கள் சிதறுண்டோம். பலர் வெளி நாடு சென்றனர். ஈற்றில் 2002ல் எனது தகப்பனாரின் மரணச்செய்தியை பத்திரி கையில் பார்த்து எனக்கொரு அனுதாபச் செய்திமடல் வந்தது. பிரித்தபோது முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் திருச்செந்திநாதன் திட்டக்கிளையில் பிரதம லிகிதராக பணிபுரிவது எனக்குத் தெரிய வந்தது. இரண்டு தசாப்த இடைவெளிக்குள் திருமணம், பிள்ளைகள் என விரிந்துவிட்ட உறவுத் தொல்லைகளுக்கு மத்தியிலும் தேசிய கலை இலக்கிய பேரவையூடாக மூன்று சிறுகதைத் தொகுப்புகளையும் மீரா வெளியீட்டின்மூலம் நான்கு நாவல்களையும் பிரசுரித்து தான் ஒரு இலக்கியவாதி என்பதை பறைசாற்றியிருந்தான். நான் அவரைப் பாராட் டுகின்றேன், பெருமையடைகின்றேன்.

இந்நீண்ட இடைவெளிக்குப்பிறகு 2009ல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர் பாராதவிதமாக இருவரும் சந்தித்தோம். அதே நகைச்சுவைக்குரல், சுவாரஸ்யமாக உரை யாடும்பாங்கு என்னை மீண்டும் மாணவப் பருவத்திற்கு இழுத்துச் சென்றது. அன்றைய தினம் எமது நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் தேசியரீதி யில் தங்கம் வென்ற நாடகத்தை அரங் கேற்ற கொழும்புத் தமிழ்ச்சங்கத்திற்கு சென்றி ருந்தேன். அதன்போது அவரது பாராட் டுக்கள் எங்கள் மாணவர்களுக்கு மிகவும் ஊக்கமருந்தாக இருந்தது. வயதால் பணியி லிருந்து ஓய்வுபெற்றாலும் மனத்தாலும் உள் ளத்தாலும் ஊக்கத்தாலும் இன்னமும் இளமை யாகவே இருக்கின்றார் என்ற உறுதிப்பாடு எங்களது உரையாடல்களில் வெளிப்பட்டது. இப்பேற்பட்ட ஒரு இலக்கியவாதிக்கு ஒரு மனிதன் எப்பேற்பட்ட வாழ்க்கை வாழ்ந் தாலும் அவரவர் செய்யும் பணியும் புகழும் மாத்திரம் என்றென்றும் நிலைத்திருக்கும். புகழ்வந்தால் போகாது என்பர்.

இங்கு நாம் இருவரும் பணி ஓய்வில் இருக்கும் அரச பணியாளர்கள் என்ற வகை யில் எங்களுக்கு எதிரில் இருக்கின்ற தேவை களும் சேவைகளும், நோக்கங்களும் இந்த மக்களுக்கும் மண்ணுக்கும் என்றும் உதவுவன வாக இருக்கும் என்பதில் சிறிதும் எனக்கு ஐயமில்லை. மேலும் நண்பன் திருச்செந்தி நாதனுக்கு கிடைத்திருக்கும் இந்த ஓய்வு நிலையில் மிகக் காத்திரமான படைப் புக்கள் எதிர்காலத்திலும் வெளிவரும். வெளி வரவேண்டும் என்ற நயமாக வேண்டி ஈழத்துத் தமிழ்இலக்கியவரலாற்றுக்குள் அவரது பெயர் மேன்மேலும் சிறக்கவேண்டும் என வாழ்த்தி எனது வாழ்த்துச் செய்தியை இம் மலருக்குள் பதிக்க மனமுவந்த மலர்க்குழுவினருக்கும் நண்பன் திருச்செந்திநாதனுக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது நன்றி யைத் தெரிவித்து வாழ்த்திநிற்கின்றேன்.

இவ்வரிய பணி மேன்மேலும் தொடர எல்லாம்வல்ல இறைவன் அவருக்கு மனவுறுதி யையும், உடல் வலிமையையும், ஊக்கத் தையும், ஆயுளையும் அருளவேண்டுமென ஆசிக்கின்றேன். "வாழ்க தமிழ் வளர்க இலக்கியம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் லிகோரி
மீரா வெளியீட்டகம்
யாழ்ப்பாணம்.



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் இந்த மலரில் எழுதுவதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். நினைத்துப்பார்த்துப் பெருமைப்படுவதற்கும் நெஞ்சுக்குள்ளே வைத்துச் சந்தோஷப்படுவதற்கும் சில விஷயங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன்.

1988ம் ஆண்டு மீரா பிரசுரங்கள் வெளிவரத்தொடங்கின. அச்சிடும் காகிதங்கள் கிடைக்காமையால் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் நீலம்-மஞ்சள்-பச்சை-ஊதா என்று பைல் மட்டைகளில் வெளிவந்தன. சஞ்சிகைகளும் கோடிட்ட அப்பியாசக் கொப்பிக் காகிதங்களில் வெளிவந்தன. பல மீரா பிரசுரங்களும் அப்பியாசக் கொப்பிக் காகிதங்களில் வெளிவந்தன. மீரா பிரசுரங்களை மக்கள் விரும்பி வாங்கிக்கொண்டிருந்தகாலம். 10.08.1988 "முரசொலி" பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் பிரச்சினைகள், நெருக்கடிகள் அதிகரித்துக்கொண்டு வருகின்ற இவ்வேளையிலும் கூட, யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மீரா வெளியீட்டகம் மூன்று படைப்பிலக்கிய நூல்களை வெளியிட்டுள்ளது. அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது என்று எழுதியிருந்தனர். இருபத்தியேழாவது மீரா பிரசுரம் பிரசுரமாகிக்கொண்டிருந்தபோது 1995ல் இடப்பெயர்வோடு மீராபிரசுரங்கள் வெளிவருவது நின்றுவிட்டது.

மீரா பிரசுரங்கள் முழுவதையும் வாசித்த ஒரு வாசகர் 1998ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி கொழும்பு தினக்குரல் ஞாயிறு வாரமலரில் "நான் இலக்கிய ஆய்விற்காக தேர்ந்தெடுத்திருக்கும்... 1988ம் ஆண்டு முதல் 1995ம் ஆண்டுவரை "மீரா பிரசுரமாக" ஒரு காலத்தில் பெட்டகமாக வெளிவந்த ஈழத்து எழுத்தாளர்களின் இருபத்தியேழு (27) வாழ்வியலுடன் இணைந்த நாவல்களை வெளியிட்ட..." என்று எழுதியிருந்தார்.

"எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் மட்டக்களப்பு" அவர்களினால் 2010ம் ஆண்டின் சிறந்த வெளியீட்டுத் துறைக்கான விருது "தமிழியல் விருது" 2010 மீரா பிரசுரத்திற்கு வழங்கப்பட்டது. மீரா பிரசுரத்திற்கு கிடைத்த விருதுக்கும் பாராட்டுகளுக்கும் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் எழுதிய "முடிவல்ல ஆரம்பம்" (1988) இருள் இரவில் அல்ல (1990) முள்முடி மன்னர்கள் (1991) மீண்டும் புதிதாய் பிறப்போம் (1992) என்ற நான்கு நாவல்களும் பங்களிப்பு செய்திருக்கின்றன. அவருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவர் யாழ்ப்பாணம் செயலகத்தில் பணிபுரிந்தபோது அடிக்கடி சந்திப்போம். புத்தக வெளியீட்டு விழாக்கள், இலக்கிய விழாக்களிலும் சந்திப்போம். தன்னுடைய புத்தகங்களைப் போலவே சகல எழுத்தாளர்களின் புத்தகங்களும் அழகாக வெளிவரவேண்டும் என்ற உயர்வான மனப்பாங்கு கொண்டவர். தொடர்ந்தும் நல்ல நாவல்களை எழுதவேண்டும். உங்கள் இலக்கிய பணி தொடரவேண்டும்.

நல்ல உடலாரோக்கியத்துடன் மகிழ்வாக பல்லாண்டு வாழவேண்டும் என வாழ்த்துகின்ற இனிய நண்பர்களுடன் இணைந்து வாழ்த்துவதில் நான் எல்லையற்ற மகிழ்ச்சியடைகிறேன். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு. ராஜன்
ஓவியர்



கலைஞர்களில் சிறந்தவன் யார்? எழுத்தாளன் தான் கலைஞர்களிலேயே சிறப்பானவன் என்று கண்டுகொண்டேன். பிக்காஷோவின் ஓவியங்களை விடவும்; பீதோவனின் இசைக்கோலங்களை விடவும்; ஹியூகோவின் ஒரு சொல்; கதேயின் ஒரே ஒரு சொல் உலக மக்களை எல்லாம் ஆட்டிப்படைத்து விட வல்லது என்ற ஜெயகாந்தனின் பொன் வரிகள் நிதர்சனமானவையே!

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்றும் தெள்ளு தமிழ் வள்ளுவன் அள்ளித் தந்த அருள் வாக்கியத்துக்கமைய இவ்வையகத்தினிலே புகழோடு தோன்றி புகழோடு மறைந்து போன வர்கள் வெகு சிலரே! அவர்களில் ஒரு சிலர் என்றென்றும் மக்களின் மனங்களை விட்டு அகலுவதில்லை. அப்படிப்பட்டவர்களில் ஒருவராக திரு இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் எம்முடன் இனிதே வாழ்ந்துகொண்டு, பெரும் எழுத்தாளனாக எழுத்துத்துறையில் மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருக்கும் சேவைகள் மக்களின் மனக்கண்களிலே தோன்றிக்கொண்டே இருக்கின்றன; இருக்கும்.

பரந்த இவரது நெற்றி இவரது பரந்த அறிவுக்கு ஒரு சான்று. துரு, துருவென்ற விழிகள் இவரது சுடர்விட்டுப் பிரகாசிக்கும் கருத்துக்களுக்கு இரு சுடர்கள். ஒரு கண்ணில் கண்டிப்பு, மறுகண்ணில் கனிவு, எந்தச் செயல் செய்தாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நிதானம் எதையும் தவறவிடாத உள்ள உறுதி, பிறர் மனம் புண்படாத புன்சிரிப்புடன் கூடிய வார்த்தை. ஜெமினி கணேசன் நடிகரைப்போல் கறுத்த கண்ணாடியுடன் அழகிய ஆடைகள் அணிந்து மிடுக்கான தோற்றம் இப்படி அமைவது ஒரு சிலருக்கே!

இப்பெருங்கலைஞனை எனக்கு திரு யோகரத்தினமும் (ராதேயன்) திரு. சௌந்தரமும் 1986ம் ஆண்டு முதல் அறிமுகம் செய்து வைத்தனர். இவரது சிறுகதைகள், பத்திரிகை தொடர்கதைகளுக்கான ஓவியங்களை வரைந்து கொடுத்தேன். "மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்" என்ற அவரது தொடர்கதை புகழ்பெற்றது. இன்றுவரை எங்கள் நட்பு நகமும் சதையும்போல் இணைந்திருக்கிறது.

இத்துறையில் பல பரிசுகளும், பாராட்டுகளும் பெற்று நிலைத்திருக்கும் இவர் மென்மேலும் வளர்ந்து எதிர்காலத்தில் அதிஉயர் விருதுகளும், பட்டங்களும் பெற்று மண்ணுக்கு பெருமைசேர்த்து புகழ்பூத்த கலைஞனாக மிளிர்வார் என்கிற அசையாத நம்பிக்கை எனக்கு உண்டு.

வாழ்க்கையின் ஆரம்பகாலத்தில் நமக்கு வேண்டியது எது? நம்பிக்கை.
வாழ்க்கையின் முதிர்ச்சிக்காலத்தில் நமக்கு வேண்டியது எது?
நம்பிக்கை! நம்பிக்கை!! நம்பிக்கை மட்டுமே!!!
வாழ்க அவர்! தொடரட்டும் அவர் பணி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் பாஸ்கர்

இடை மேற்கு மாநிலத் தமிழ்ச் சங்கத் தலைவர்.

சிக்காக்கோ, அமெரிக்கா.



ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன. எவ்வளவு மாற்றங்கள் புதிய இடங்கள் புத்தம்புதிய உறவுகள், ஏற்றங்கள், தாழ்வுகள், நினைவுகள், பதிவுகள் இன்னும் எத்தனையோவற்றை எமது வாழ்க்கைப் பாதையில் சந்தித்திருக்கிறோம். ஆனாலும் மனதில் என்றும் அழியாது நிலைத்து நிற்பது வாலிபப் பருவமும், அந்தக் காலகட்டத்தில் நாம் ஏற்படுத்திய நண்பர்கள் என்ற உறவுகளுமேயாகும். அந்த நினைவுகளையும் பதிவுகளையும் அடிக்கடி இரைமீட்டுப் பார்ப்பதில் ஒரு ஆனந்தமும் இனம்புரியாத திருப்தியும் மட்டுமல்ல, நாம் வாழ்க்கையின் பல காலகட்டங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கும் துன்பம், துயரம், வேதனை, மன அழுத்தம் போன்றவை வரும்போதெல்லாம் அந்த நினைவுகளின் பதிவுகள் மனதில் ஒரு புத்துணர்வையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன.

நான் வாழ்க்கையில் சந்தித்த நண்பர்கள் பலர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம் ஒவ்வொரு குணாதிசயங்களைக் கொண்டவர்கள். வெவ்வேறு கருத்து வேறு பாடுகளைக் கொண்டவர்கள். சாதனை செய்யத் துடித்தவர்கள். சாதித்தவர்கள். அறிவுள்ளவர்கள். ஆழமாகச் சிந்திப்பவர் கள். சிரிக்கவைப்பவர்கள். சிந்திக்கச் செய்பவர் கள், கல்வியால் மேம்பட்டவர்கள், கல்வி போதித்தவர்கள், வேதாந்திகள், நாஸ்திகர்கள், ஞானிகள், காலத்தால் உயர்ந்தவர்கள், கலை ஞர்கள், இரசிகர்கள், அரசியல் வாதி கள், சமூகத்தின் கட்டுப்பாட்டால் ஒதுக்கப் பட்டவர்கள், ஒதுங்கியவர்கள், செல்வத் தில் மிதந்தவர்கள், செல்வாக்குடன் வாழ்ந்த வர்கள், இவர்கள் எல்லோரும் நட்பு என்ற ஒரே ஒரு உறவினால் மட்டும் இணைந்தவர் கள். எங்களுக்குள் எந்த ஒரு பாகுபாடுமே இருந்ததில்லை. வேற்றுமை பாராது, நட்பு என்ற குறுகிய வட்டத்திற்குள் எம்மைத் இணைத்துக்கொண்டு வாழ்ந்தவர்கள். இவர் களை அன்று எடைபோடவோ, அல்லது ஆழமாக இவர்களைப் பற்றிச் சிந்திப்பதற்கோ நேரம் இருக்கவில்லை. அந்தச் சிந்தனையும் வரவில்லை. ஆனால் பிற்காலத்தில் ஒவ்வொரு வரையும் மனதில் நிறுத்தி அலசி ஆராய்ந்து பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கிறது.

வாழ்வில் பணம் சேர்ப்பதைவிட மன-தில் நல்ல நினைவுகளை சேமித்துவைப்பது அவசியம் என்பார்கள். ஏனென்றால் அந்த பசுமையான நினைவுகள்தான் வாழ்வின் கடை சிக் காலத்தின் தனிமையையும், வெறுமை யையும், ஆசாபாசங்களையும் ஒரு கைத் தடியைப்போலத் தாங்கி, நகர்த்திவைக்கின் றன என்று நினைக்கின்றேன். எனவே எனது நண்பர்களையும் அவர்களோடு களித்த, கழித்த இனிய நாட்களையும் அசைபோட்டுப் பார்க் கிறேன். அரிசியைப் போல களைந்து பார்க் கிறேன்.

அரிசியில் இருக்கும் கற்கள் நீர் விட்டு களையும்போது கைகளில் தங்குவது போல, மனதில் கல்லாகப் பதிந்து, பொதிந்திருக்கும் நண்பர்களில் ஒருவர்தான் திருச்செந்தி. இவர் ஒரு மிகச் சிறந்த பண்பாளர். எங்கள் நண்பர் கள் கூட்டத்தில் சிகரெட் குடிப்பவர்கள், தண்ணி அடிப்பவர்கள், கோழி பிடிப்பவர் கள், சமைப்பவர்கள், காதல்கடிதம் எழுதுபவர் கள், பெண்களுக்குப் பின்னால் அலைபவர் கள், அடிவாங்குபவர்கள், பொலிஸ் நிலையத் திற்குப் போனவர்கள், என்று பலவிதமானவர் களும் இருந்தார்கள். மேற்குறிப்பிட்ட எந்த ஒரு பலவீனங்களும் இல்லாத நல்லதொரு நண்பர்தான் திருச்செந்தி. எதையுமே ஒரு புதிய கோணத்தில் சிந்தித்துப் பார்ப்பவர். நல்ல தையும் கெட்டதையும் ஆராய்ந்து செயற்படு பவர் அவர் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு தெளிவான அர்த்தம் இருக்கும். நண் பர்களுக்கு வெறும் நண்பனாக மட்டுமல்ல ஒரு ஆசிரியரைப்போல அறிவுரை வழங்கு வதைப் பார்த்திருக்கிறேன். சில சந்தர்ப் பங்களில் இவருக்குத் தெரிந்த விடயங்கள் பற்றி என்னிடம் கூறி, அவற்றின் விளைவுகள் எந்த மாதிரி இருக்கும் என அறிவுரை மட்டு மல்ல, எச்சரிக்கையும் செய்திருக்கிறார். இத னால் நான் பல பிரச்சனைகளில் மாட்டிக் கொள்ளாமல் தப்பி இருக்கின்றேன். மற்ற வர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை, தனக்கு வந்ததாகக் கருதி, தன்னையும் இணைத் துக்கொண்டு, அவற்றிற்கேற்ற விதமாக இக் கட்டான நிலைமைகளைச் சமாளிக்க ஆலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனை வழங்குவதில் மிகத் திறமையான வர். இதுவே அவர் பிற்காலத்தில் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதற்கு ஆதாரமாக இருந் திருக்கும் என்று நம்புகிறேன். ஆலோ சனை வழங்குவதில் ஆசிரியராக மட்டுமல்ல கதாசிரியராகவும் இருந்ததனால் இவருக்கு "ஆசிரியர்" என்ற பட்டப்பெயரைச் சூட்டி மகிழ்ந்தோம். செந்தில் அன்று குடியிருந்த வீட்டு வாசலில் இருந்த மாமரங்கள், கே.கே.எஸ். வீதி, இணுவில் புகையிரத நிலை யம், மெயில் வண்டி, கல்லுடைக்கும் ஆலை, மணிவீட்டு விறாந்தை, மானிப்பாய் வீதி, பழைய திரைப் பாடல்கள், திருவிழாக்கள், திரை அரங்குகள் போன்றவை எங்கள் நட் பிற்கு சாட்சியாக இன்றும் என்றும் விளங்கு பவை.

இவரது முற்போக்குச் சிந்தனை எனக்கு மிகவும் பிடிக்கும். நேர்மையாக சமூகத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதிலும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறை களையும் எளிதாக விரிவாக விளக்குவதும் இவரது படைப்புகளின் சிறப்பு. வீரகேசரி வார வெளியீட்டில் இவரது முதற் கதை பிரசுரமாகியிருந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமை அந்தப் பத்திரிகையோடு முதலா வதாக என்னைத் தேடி வந்து காண்பித்தார். மிகவும் பெருமிதமும், சந்தோசமும் அவரி டம் காணப்பட்டது. அவரை விட எனக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. அந்தப் பத் திரிகையோடு மற்ற நண்பர்களிடம் சென்று காண்பித்து மகிழ்ந்தோம். வீரகேசரியில் இவர் சிறுகதைகள் வெளிவந்தபோது நாம் எல்லோரும் நாங்கள் எழுதிய கதைகளே பிர சுரமானதைப்போல மகிழ்ந்தோம். இவ ரது படைப்புகளில் நாம் அன்றாடம் சமுதா யத்தில் காணக்கூடிய பாத்திரங்கள் புனையப் பட்டிருக்கும். அவர்களுடைய நிதர்சனமான வாழ்க்கை. பிரதிபலிக்கப்பட்டிருக்கும் குறிப் பாக வாசிப்போரை அந்தக் கதையின் ஒரு அங்கமாக மாற்றக்கூடிய ஈர்ப்பு இருக்கும்.

நான் பிறந்த இணுவில் மண்ணின் கலை, கலாச்சாரங்கள், அறிவு, ஆற்றல், மதம், ஞானம் போன்ற பல்வேறு துறை களை அன்று மட்டுமல்ல இன்றுவரை தொடர்நது வளர்த்துக்கொண்டிருப்பவர்கள் பலராவர். நாடகக் கலைஞராக, சிறந்த பாடகராக அன்று பிரபலமாகத் திகழ்ந்த வர் திரு.த.சிதம்பரநாதன். அவரது கம்பீர மான குரல்வளத்தைப் பார்த்து வியந்திருக்கி றேன். இன்று அவரது புதல்வர் திருச்செந்தி நாதனின் சிந்தனையில் கருக்கட்டிப் பிரசவிக் கும் படைப்புகளை இரசிக்கின்றேன். திருச் செந்தி தனது எழுத்தாற்றல் மூலம் சமூகத்தின் குறைநிறைவுகளைசுட்டிக்காட்டிவருவதுடன் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றி வருகி றார். இவர்களைப்போல பலர் இந்த மண்ணை அலங்கரிப்பதால்தான் நாங் களும் இந்த மண்ணில் பிறந்ததற்காகப் பெரு மைப்படுகிறோம். சில வருடங்களுக்கு முன் பாக அமெரிக்காவில் நடைபெற்ற தமிழ் விழா நிகழ்ச்சிக்குச் சென்றபோது, அங்கிருந்த விற்பனை நிலையத்தில் இவருடைய புத்தகம் இருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்வுற்றேன். கடல்கடந்து வந்த இணுவையூர் சிதம்பர திருச்செந்தில் நாதனின் படைப்பில் உருவான அந்த புத்தகத்தைப் பார்த்து பெருமிதம் கொண்டேன். திருச்செந்தியின் படைப்புகள் மேலும் பல வரவேண்டும் பத்திரிகை உலகில் அவர் மிகவும் பிரசித்தி பெறவேண்டும் என்று எல்லாம் வல்ல சிவகாமி அம்மனை பிரார்த்தனை செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. செல்வராஜா

ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்.



பல கலைஞர்களும், எழுத்தாளர்களும் கொஞ்சம் பிரபலமானதும், தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென நெஞ்சை நிமிர்த்தித் திரிகின்ற வேளையில், நீண்டகாலமாக - மிக நீண்டகாலமாக எழுத்துலகில் மிளிரும் திரு. சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் அமைதியாக - மிக அமைதியாக எழுத்துப் பணி ஆற்றி வருவது அனைவரும் அறிந்ததே.

ஈழத்தின் மிகப் பிரபலமான அனைத்து சஞ்சிகைகள் பத்திரிகை களிலும், குறிப்பாக சிறப்பிதழ்களின் போது இவரது ஆக்கங்கள் இடம் பெறாமலிருப்பதில்லை. அவர்கள் இவரிடம் கேட்டுப் பெற்று பிரசுரிக் கின்றனரா அன்றேல், சிறப்பிதழ்கள் வரப்போகின்றதெனத் தெரிந்து இவர் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்கின்ற வழமை இருக்கின்றதா யானறியேன். ஆனாலும் அவ்வாறு இதழ்களில் வரும் இவரது ஆக்கங்களை நான் வாசிக்கத் தவறுவதில்லை.

'மல்லிகை' வெள்ளி விழா மலரில் இவர் எழுதிய "எழுதுகிறவனெல்லாம் எழுத்தாளரல்ல என்பதுபோல, வாசிக்கின்றவரெல்லாம் வாசகர் அல்ல' என்றவாறாக 'எழுத்து, எழுத்தாளன், விமர்சனம்' என்கின்ற இவரது கட்டுரை ஒன்றின் தொடக்க வரிகள் இதனை எழுதும்போது எனது ஞாபகத்திற்கு வருகின்றமை தவிர்க்கமுடியாதுள்ளது.

இதில் எழுத்தாளர்களைப் பற்றி மிக விரிவாக ஆய்ந்து எழுதியமை, எழுத்தாளர்கள் தமது இப்போதைய நிலையை ஒரு முறை தம்மைத்தாமே மீள் பார்வைக்கு உட்படுத்த வைக்கின்றதோ இல்லையோ, வாசகன் என்கின்ற வகையில் இவரது கட்டுரையின் தொடக்க வாக்கியம் என்னைச் சிந்திக்க வைத்த வரிகளாகும். அந்த வகையில் இவர் ஒரு நல்ல வாசகனாகவும் தொடர்வதே அவரது எழுத்துக்களும், சிந்தையும், ஏன் தோற்றமும் இளமையோடு இருப்பதற்கான இரகசியமாக இருக்கலாம்.

நா. சோமகாந்தனின் 'சரவணன்', டானியலின் கந்தன், கோகிலா மகேந்திரனின் பூரணி, அருள் சுப்பிரமணியத்தின் அரியம், ஆகிய பாத் திரங்களுடன் சிதம்பர திருச்செந்திநாதனின் ராகினி பாத்திரப் படைப்புப் பற்றி ஆய்வாளர் ஒருவர் தமது கட்டுரை ஒன்றில் தொட்டுக் காட்டியமை இவர் எழுத்தாளர், விமர்சகர்களின் பார்வைக்கு உட்பட்டவர் என்பதற்கான ஒரு சிறு உதாரணம் ஆகும். இவரது ஆக்கங்களும் விசேட பார்வைக்கும் ஆய்வுக்கும் உட்படுகின்றமை இவரை ஒரு அங்கீகரிக்கப்பட்ட எழுத்தாளனாக இலக்கிய உலகம் பார்க்கின்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக வெளியீடான "தொன்மையின் மூலங் கள்" என்கின்ற நூலிலும், எழுத்தாளர்களைப் பற்றிய கட்டுரை எழுதிய ஆய்வாளர் ஒருவர், சிதம்பர திருச்செந்திநாதன் பற்றியும் விரிவாக ஆய்ந்து எழுதி யுள்ளார்.

அவரது ஆக்கங்கள் தொடராக வெளிவரவேண்டும். தமிழர்களின் இருப்பிற்கு அவை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை எங்கரசு
கல்விப் பணிப்பாளர் [ஓய்வுநிலை]
சங்கானை கல்விக்கோட்டம்.



நண்பனாய், சகோதரனாய் மொத்தத்தில் மனிதம் நிறைந்தவனாய் சிறு கதை, நாவல், நாடக இலக்கிய படைப்புக்களோடு ஒன்றித்தவனாய் இளமை தொட்டே வளர்ந்து வந்தவர், தனது அறுபது வயதை நிறைவு செய்துள்ளார். அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். இந்நிலையில் எனக்கும் அவருக்குமான உறவை இணுவில் கிராமத்தில் 1978ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கலை இலக்கிய வட்டம் சார்ந்து தொட்டுக்கூற ஆசைப்படுகிறேன்.

ஏனெனில் வட்டத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் பங்களிப்பிலும் அவரின் பங்களிப்பு பிரதானமானது.

அன்றைய அரசியல் சூழல் நெருக்கடியுள் சிக்கியருந்தது. இளைஞர்கள் தனித்தனியே ஒதுங்கி வாழ்ந்த நிலை. கிராமத்தின் புவியியல் பண்பு, விவசாய முயற்சிகள் ஓய்ந்த வேளையில் குறிப்பாக மாலையில் நண்பர்களைச் சந்திப்பார்கள். தொடர் சந்திப்புக்கள் இலக்கியம் பற்றி பேசும் வாய்ப்பைக் கொடுத்தது. இலக்கியம் பற்றியதோடு அல்லாமல் கதைகள், பத்திரிகை பற்றியும் பேசும் வாய்ப்பை வசதியை உருவாக்கியது. இதன் பலனாக சந்திப்பும் பேச்சும் இலக்கிய அமைப்பு உருவாக வசதியானது. இதுவே ஆரம்பத்தில் இணுவில் கலை, இலக்கிய வட்டம் என்ற அமைப்பின் தோற்றமாகும். இவ்வட்டத்தின் பெயரில் இளைஞர் என்ற சொல்லை தவிர்க்கவேண்டும் என்ற முன்மொழிவை இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் முன்வைத்தார். அப்பெயர் பின் நீக்கப்பட்டு இன்றுள்ள பெயர் நிலை பெறலாயிற்று.

இணுவில் கலை, இலக்கிய வட்டத்தின் தோற்றத்தின் போது இலக்கியத்தினூடாக மக்களின் தேவைகள், அரசியல் அபிலாசைகள் என விழிப்புணர்ச்சியை ஊட்டும் வகையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற பலமான கருத்துக்கள் தயா லோகநாதன், சு.விவேகானந்தன் போன்றோரால் முன்வைக்கப்பட்டன.

அன்றைய ஆரம்ப சூழலில் எல்லாக் கருத்துக்களும் உள்வாங்கிய நிலையில் என்னை தலைவராகவும் விவேகானந்தன் உபதலைவராகவும் தயா லோகநாதன் செயலாளராகவும் ஐந்து பேர் கொண்ட நிருவாக உறுப்பினர்களுடனும் பல உறுப்பினர்களைக் கொண்டதாக வட்டம் உருப்பெற்றது.

ஆரம்பத்தில் இலக்கியம் பற்றியும் கலைகள் பற்றியும் பத்திரிகை பற்றியும் அறிவுசார்ந்த எண்ணங்களை அங்கத்தவர்களிடையே வளர்க்கும் பொருட்டு கலை, இலக்கியங்களிலும் பத்திரிகைபற்றியும் அனுபவமிக்கவர்கள் வரவழைக்கப்பட்டு கருத்துரைகள் கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இக்கருத்தரங்குகள் வட்டத்தின் வளர்ச்சிக்கு சிறந்த அத்திவாரமாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் அரசியல் சார் புடைய கலை, இலக்கிய சிந்தனைகள் இறுக் கமாக உட்பாய்ச்சவேண்டும் என்ற முன் னெடுப்புக்கள் கருத்துப்பரிமாற்றங்கள் எல் லாம்பேசப்பட்டன. இச்செயற்பாடானது எம் மவரின் இலக்கை வேறு திசைக்கு திருப்பி விடுமோ என்றும் எம்மில் சிலர் ஐயுறவுற் றனர். இதுபற்றி சரியான கவனம் செலுத் துவதில் நாம் தவறக்கூடாது என திருச் செந்திநாதன் குறிப்பிடுவார். தலைவர் என என்னை விளித்து சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் என்ற படைப்புக்களினூடே பய ணத்தை தொடருவோம். அதற்கான ஒழுங் குகளை செய்யுங்கள் என்பார். அவர் துணை எனக்கு பலம் சேர்த்தது. நிதா னமாக நான் செயற்படலானேன்.

மாதத்துக்கு இரண்டுமுறை கூடி இலக் கியம் பற்றி பேச பாடசாலை மண்டபத்தை ஒழுங்குசெய்வோம். சமகாலத்தில் வெளி யீடு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் சிறு கதைகள், நாவல்கள்மேடையேற்றப்படும்நாட கங்கள் பற்றி கூடிப் பேசுவோம், கலந்துரை யாடுவோம். திருமதி கோகிலா மகேந்திரன் வெளியீடு செய்த இரண்டு சிறுகதை நூல் களை விமர்சனம் செய்யக் கூடினோம். நூலா சிரியர் அழைக்கப்பட்டு வாசகர்களது கேள்வி களுக்கு பதிலுரை பெறவும் வழிசெய்தோம். செங்கையாழியானது நாவல்ஒன்று விமர்சனத் துக்கு எடுக்கப்பட்டு அந்நாவலிலுள்ள நுட்பப் பிழைகளை அவர் தெளிவுபடுத்தியதையும் தனது எழுத்தின் பண்பையும் வெளிப் படுத்தி கருத்துரைத்தார். இத்தகைய ஆரோக் கியமான அரங்குகள் வெகுவாக பலரை யும் கவருவதாயிற்று. காலப்போக்கில் இணு வில் கிராமத்துக்கு அப்பால் அயல் கிரா மத்து இலக்கிய ஆர்வலர்கள் இளையோர் பலர் இணையவும் வாய்ப்பைக் கொடுத் தது. கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளின் ஒழுங்கு பாடசாலை மாணவர் பலரையும் கவர்ந்து இளைஞர் வட்டத்துடன் இணையத் தூண்டி யது. மொத்தத்தில் எல்லோருக்கும் பயனுள்ள லாபகரமான பொழுதுபோக்காகவும வளர லாயிற்று.

வட்டத்தின் சிறப்பான அம்சமாக சமகாலத்து சமூக நாடகங்கள் வரவழைக்கப் பட்டுவட்டத்தினருக்காகமேடையேற்றப்பட் டது. நாடகங்களது கதை, சமூகப்பின்னணி, அரங்க அமைப்பு, ஆற்றுகை, ஒப்பனை முதலான பல விடயங்களும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படும். நடிகர்கள் இயக்குநர் அதற்கான பதிலை வழங்குவார்கள். வி.எம். குகராசாவின் புதியவர்கள், சோ. தேவ ராசாவின் புதியபாரதி, சிதம்பரநாதனின் 'மண்சுமந்த மேனியர்' போன்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். நாடகங்கள் பற்றிய சிறந்த கருத்துக்களை திருச்செந்திநாதன் முன்வைப் பார்.

இவ்வட்டத்தின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு இலக்கிய கருத்தரங்கு, பத்தி ரிகை, சஞ்சிகைகள் பற்றிய பார்வை, கவிதை, கலைகள் என்ற அடிப்படையில் புதிய அணுகு முறையில் கருத்துரைகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இலக்கிய கர்த்தாக்கள், பத்திரிகை ஆசிரியர்கள், கலை இலக்கிய சான் றோர் என பலர் அழைக்கப்பட்டு முழுநாள் கருத்துரை ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. பலரையும் கவரும் வகையிலும் ஆரோக்கிய மாக நடைபெற்ற இந்நிகழ்வை பத்திரிகைகள் பலவும் வெகுவாக பாராட்டி சிறப்பு செய்தன. முக்கிய செய்திகளாகவும் இடம்பெற்றன.

கால ரீதியில் தளர்வடையாது திட்ட மிடப்பட்ட கலை இலக்கியம் பற்றிய பேசு பொருள் முன்வைக்கப்பட்டு மாதம் இருமுறை யேனும் வட்டத்தினர் கூடி பேசும் நிகழ்வுகள் தவறாது இடம்பெற்றுக்கொண்டே இருந் தது. இவ்வகையில் சுமார் பத்து வருடங்கள் என் தலைமையில் கூடிய வட்டத்தினர் பின் அன்பர் இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் அவர்களை தலைவராகக்கொண்டு சிறப்புற இயங்கலாயிற்று. மிக இள மைக்காலத்திலேயே குறிப்பாக பாட சாலை மாணவனாக இருந்தபோதிலே வானொலி, பத்திரிகைகளில் இலக்கிய நட வடிக்கைகளை படைத்து வந்த ஆர்வம் மிக்க இளைஞர் தலைமை ஏற்றதும் உற்சாகம் மிகையாகி சிறப்பாக தொழிற் படலானார். இவரது சிறப்பையும் தொழிற் பாட்டையும் வட்டத்தை கொண்டு நடத்தும் திறனையும் இலக்கிய வட்ட நண் பர்கள் எனக்கு கடிதமூலம் அவ்வப்போது எழுதுவார்கள். அரச தொழில் நிமித்தம் நீர் கொழும்பில் கடமையாற்றியபோது இவர் கள் எழுதும் கடிதங்கள் மனதை உவகை யடையச்செய்யும். நண்பர், வாழ்வும் உழைப்பும் வளர்ந்து செல்ல வாழ்த்துகின் றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானியல் சௌந்திரன்
நாவாந்துறை



1980 களின் பிற்பகுதியில் சிதம்பர திருச்செந்திநாதன் அண்ணனுடனான அறிமுகத்தொடர்பு ராதேயன் அண்ணன்மூலம் ஆரம்பமாகியது. எனது அண்ணாவின் (டானியல் அன்ரனி) தோழமைக்குரியவர்களாக விளங்கிய ராதேயன் அண்ணா, திருச்செந்திநாதன் அண்ணா, கவிஞர் புதுவை இரத்தினதுரை, சசிகிருஷ்ண மூர்த்தி மற்றும் அப்போது பிரபலமாக விளங்கியவர்களான செம்மலர்கள் இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த இளம் படைப்பாளர்கள் பலருடனும் எனக்கும் நட்பு ஏற்பட்டமையானது ஒரு அற்புதமான அர்த்தமுள்ள அனுபவமேயாகும்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிமாணம் கொள்ளத் தொடங்கிய வேளையில் தமிழர்களின் மத்தியிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, இலக்கிய செயற்பாடுகளும் மானிட விடுதலை பற்றிய கருத்தியல் தளத்தில் பல முரண்பாடுகளுக்கு இடையிலும் புதிய இலக்கு நோக்கிய வளர்ச்சியில் பயணிக்கத் தொடங்கிய வேளையில்தான் மேலே குறிப்பிட்ட பலரும் தமக்குரிய வரலாற்றுக் கடமையில் இயங்கத் தொடங்கினர்.

அண்ணன் சிதம்பர திருச்செந்திநாதன் எனக்கு மிகவும் நெருக்கமான அன்புக்குரிய ஒருவராக மாறியதும் எனக்கும் கலை இலக்கியம் எழுத்து போன்ற துறைகளில் ஆர்வம் முனைப்புக்கொண்டதும் இந்த காலகட்டத்தில்தான்.

குறிப்பாக அண்ணன் திருச்செந்திநாதனை நான் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பும் பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் சூழ்நிலையும் அச்சமயத்தில் ஏற்பட்டமையானது ஒரு குறிப்பிடத்தகுந்த விடயமாகும். அது எனக்குள் ஏற்படுத்திய பன்முகத்தேடல் கலை இலக்கியம் விமர்சனம், அரசியல், சினிமா என்ற பன்முக இலக்கு நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க வைத்தது.

இக்கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ஈழமுரசு, ஈழநாதம் போன்ற பத்திரிகைளிலும் வெளிச்சம் போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்த இலக்கிய அரசியல் சார்ந்த படைப்புக்களுடனான தொடர்பாடலுக்கும் காரணமாகியது.

அத்தகைய படைப்பாளிகளுக்குள் என்னைப் புரிந்துகொண்டவராக என்னுடனான தொடர்புகளை நட்பு என்ற இறுக்கமான தளத்தில் பிணைத்துக்கொண்டவர் அண்ணன் செந்திநாதன் அவர்கள். அந்த நட்பு இன்று மூன்று தசாப்தங்களைத் தாண்டி ஆரோக்கியமான அர்த்தமுள்ள பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடிய உறவாக நிலை கொள்வதை இந்தக் கணத்தில் நினைத்துப்பார்க்கின்றேன்.

ஒரு படைப்பாளியாக பல்துறை ஆளுமை கொண்ட இலக்கியவாதியாக, கொள்கைப்பிடிப்புடன் கூடிய செயற் பாட்டாளராக, சிறந்த நிர்வாகியாக, ஆர்வம் செறிந்த பத்திரிகையாளனாக, அவர் தன்னை ஈழத்து இலக்கிய பரப்பிலும், சமூகத்தளத்திலும் அழுத்தமாக பதிவு செய்துள்ளார் என்றால் அது அவரது ஆளுமையின் வெளிப்பாடேயாகும். இவை எல்லாவற்றிற்கும் அப்பால் அவர் நல்ல குடும்பஸ்தர் சமூக அக்கறை கொண்ட நல்ல மனிதர் என்பதே கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

கொள்கைப்பிடிப்பு கருத்தியல் நேர்மை தன்னம்பிக்கை வெளிப்படையாக பேசும் தன்மை போன்ற பல குணாம்சங்களை நான் பார்த்து வியந்திருக்கின்றேன். பரபரப்பற்ற ஆனால் அர்த்தம் செறிந்த சமூக அக்கறையும் கொண்ட இவரது சிறுகதைகள், நாவல்கள் இலக்கிய விமர்சனங்கள் போன்றவை மனிதாபிமானத்தின் பாற்பட்டவை என்பதில் இருவேறு கருத்துக்கள் கிடையாது. இத் தகைய தன்மைகளை இவர் தன் படைப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளில் தீவிரத்தன்மையை நான் கவனித்திருக்கின்றேன். இதுவே சந்தர்ப்பவாதம் மிக்க சுயநல நோக்குமிக்க கலை இலக்கிய வாதிகளிடமிருந்து தனித்துவமிக்க படைப்பாளியாகவும் இனங்காட்டி பெருமைப்பட வைக்கிறது என்றால் மிகையில்லை.

இந்த மனிதரின் நட்புக்கு பாத்திரமானவன் நான் என்பதில் நிரந்தரமான பெருமையும் மகிழ்ச்சியும் எப்போதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.கதிர்காமநாதன்
அரியாலை.



திருச்செந்திநாதன் அவர்களை1983ம்ஆண்டு யாழ்மாவட்டசெயலகத்தில் ஓய்வூதிய கிளையில் நான் கடமையை ஏற்றகாலத்தில் இவரும் அக்கிளையில் கடமைபுரிந்துவந்தார். அக்காலத்தில் பணிபுரிந்த பலருள் இவரது கடமையுணர்வும் இவரது வேலைத்திறமையும் எவ்வளவு வேலைப் பளுவை வழங்கினாலும் மனம் சோராமல் திறம்பட குறிக்கப் பட்ட காலப்பகுதிக்குள் முடிவுறுத்தி கொடுக்கும் திறனை நான் அவதானித்து வந்ததால் எனக்கு இவரின்மேல் ஒரு தனிப்பட்ட விருப்பு ஏற்பட்டது.

இவரின் வேலைத்திறனை அவதானித்த நாம் இவருக்கு ஒதுக்கப்பட்ட வேலையிலும் பார்க்க அவசரமாக முடிக்கவேண்டிய முக்கியமான வேலை களையும் இவரைக்கொண்டு செய்துமுடிப்போம். இவ்வாறாக மேலதிக வேலையை வழங்கினாலும் மனம் சளைக்காமல் செய்துதருவார். இவரின் நற்குணங்களை கவனித்ததால் என்னை அறியாமல் கொஞ்சமாக நண்பனாக்கிக்கொண்டேன். என்னுடன் பலர் வேலை செய்தபோதும் நல்ல நண்பர்களாக இருந்தவர்கள் மிகவும் குறைவு. எவ்வாறாயினும் என்னிலும் வயது குறைந்த என்னிடம் உள்ள எந்த பழக்கவழக்கங்களும் அற்ற இவர் எனது நெருங்கிய நண்பனாக இன்றுவரை பேணப்பட்டு வருகின்றார். அப் படியான இவரைப்பற்றி சில விடயங்களை வெளிக்கொணர ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமைப்படுகிறேன்.

வேலை நேரத்தில் ஓய்வு கிடைக்கும்பொழுது ஏதோ எழுதிக் கொண்டோ அல்லது படித்துக்கொண்டோ இருப்பார். மற்றவர்கள் சிரித்துக் கும்மாளம் அடிக்கும்பொழுது இவர் ஒதுங்கியிருந்து என்ன எழுதுகிறார் என்ன படிக்கிறார் என்று என்னால் அவதானிக்கப்பட்டபொழுதுதான் இவர் கதை எழுதுவதையும் வெளிவாரிபட்டப்படிப்பு சம்பந்தமான பாடங்கள் படிப்பதையும் என்னால் அறியமுடிந்தது. இதை அறிந்ததும் இவ்வளவு வேலைப்பழுவிலும் மேலதிகமாக இவ் இரு விடயங்களையும் செய்து வருகிறார் என்பதால் இவர் மேல் எனக்கு என்னை அறியாமல் ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. என்றாலும் இவரது பட்டப்படிப்பை விடவும் கதை எழுதும் விடயம் என்னை மிகவும் கவர்ந்தது. எனவே அதையிட்டு ஆராய்ந்ததில் பல விடயங்கள் தெரியவந்தன.

இவர் எனக்குத் தெரிந்த எமது செயலகத்தில் கடமையாற்றிய ஒரு கலைஞர் ஆன அமரர் சிதம்பரநாதன் என்பவரின் மூத்த மகன் என்றும் அறிந்துகொண்டேன். இவர் எழுதுபவைகள் வேறு எந்த எழுத்தாளரின் நடையையோ முறையையோ பின்பற்றாமல் ஒரு தனி நடையாக தனி கருத்தாக சமூகத்திற்கு காலத்திற்கு ஏற்றதாக காலத்திற்கு ஏற்ற கருத்துக் களை வாசகர்களுக்கு மறைமுகமாக விளங்கிக்கொள்ளத்தக்கதாக எழுதுவதில் வல்லவர். இவரது நடைமுறை வாசகனான எனக்கு மிகவும் பிடித்திருந்தது. என்னில் ஒரு கெட்ட குணம் எவரின் எழுத்தை வாசித்தால் அல்லது ஒரு காட்சியை பார்த்தாலும் அதில் குற்றம் காண்பதே. ஆனால் இவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துகளில் என்னால் ஒரு பிழையையும் கண்டுகொள்ளமுடியவில்லை.

ஓய்வூதிய கிளையில் அக்காலத்தில் கடமையாற்றுவது என்றால் மிகவும் கடினம். எவரும் இக்கிளையில் கடமையாற்ற விரும்பு வதில்லை. இன்றைய காலம் போல கொம் பியூட்டர், கல்குலேட்டர், கூட்டும் யந்திரம் இல்லாது எல்லா வேலைகளையும் மனித வளம் கொண்டே நிறைவேற்றவேண்டும். ஓய்வூதியக் கிளையில் மாதாந்த கொடுப் பனவு பகுதிக்குரிய வேலையில் ஈடுபட்டுக் கொள்ளும் எழுதுனர்களுக்கு மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்களின் தொகையை சரிசமனாக பிரித்து அவர் களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் வழங்கல் சம்பந் தமான வேலை மாதம் 1ம் திகதி தொடங்கி 10ம் திகதிக்குமுன் முடிவுறுத்தவே ஒவ் வொருவரும் அவர்களுக்கு ஒதுக்கப் பட்டவர்களின் கொடுப்பனவுப் பட்டி யலை கையினால் எழுதி தயாரிக்க வேண்டும். அவர்களிற்கு உரிய ஓய்வூதியம் அதற்குரிய அலவன்ஸ் போன்றவை யானது ஒவ்வொருவருக்கும் வேறுபடும். எழுதி கூட்டி, முடிவுறுத்தி அதற்குரிய ஓய்வூ தியத்தின் வவுச்சர்கள் எழுதி, என்வலப் பில் இட்டு விலாசம் எழுதி தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும். இவ் வளவு வேலையும் முதலாம் திகதியில் இருந்து பத்தாம் திகதிக்குள் முடிவுறுத்த வேண்டும். ஆகையால் இந்நாட்களில் ஒரு முக்கிய தேவைக்கும் விடுமுறை எடுக்க முடியாது. இந்தக் கிளையிலேயே திருச்செந்திநாதன் பலவருடங்கள் பணியாற் றியிருந்தார்.

இவர் செயலகத்தில் கடமையாற்றி தனக்கு ஏற்ற ஒரு பெண்ணையே விரும்பி குடும்பத்தினரின் பூரண சம்மதத்துடன் திருமணம் செய்தார். இவரின் திருமணத் துடன் இவரது கொள்கைகள் நடவடிக்கை கள் சினேகங்கள் மாறிவிடும் என்று எண்ணி னேன். ஆனால் இவர் எவ்வகையிலும் மாற வில்லை. அவரது மனைவியும் இவருக்கு ஏற்றமுறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். திருணமத்திற்கு முன் வேறு ஒருசில நண்பர்களுடன் தேனீர் அருந்தச் செல் வதுண்டு. திருமணத்துக்குப்பின் இவர் இவ் வாறு எம்முடன் தேனீர் அருந்த வரமாட் டார். மனைவியுடன்தான் செல்வார் என்று நாம் எண்ணியிருந்தோம். ஆனால் இவரின் போக்கில் எவ்விதமாற்றமும் இல்லை. தேனீர் கூட்டத்துக்கு ஒரு அங்கத்தவர் கூடி யதுதான் மிச்சம் இவர் மனைவியும் எம்மு டனேயே வருகைதருவார். இதனால் எமது நண்பர் கூட்டத்தில் ஒரு பெண் உறுப்பினர் மட்டும் கூடிவிட்டார்.

காலத்தின் போக்கால் 1995ம் ஆண் டும் இடப்பெயர்வுடன் இவர்கள் என்னை விட்டு பிரிந்து வன்னிக்கு சென்று முல்லைத் தீவு செயலகத்தில் கடமையாற்றி வந்தனர். அக்காலத்தில் என்னுடன் தொடர்புவைத்தி ருந்தார்.

2004இல் நான் கிளிநொச்சி செயலகத்திற்கு மாற்றம் பெற்று சென்றேன். முல்லைத்தீவிலிருந்து கிளிநொச்சிக்கு மாறி வருமாறு அறிவுறுத்தி அழைத்து அவர் கிளிநொச்சிக்கு மாற்றம்பெற்றுவந்தார்.

நிம்மதியாக கிளிநொச்சியில் இருக் கலாம் என்று எண்ணியிருந்த எமது எண் ணம் பிழைத்துப்போய் 2008ம் ஆண்டு கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து ஒவ்வொரு இட மாக மாறிமாறித் திரிந்து எமது சகல உடைமை களையும் இழந்து செட்டிகுளம் முகா மிற்கு சென்றடைந்தோம். ஆனால் நாம் எல்லாம் எமது சொத்துகளை இழந் தாலும் செந்தில் இழந்தது மாபெரும் இழப் பாகும். அவர் தேடிவைத்தது பல அரிய புத்தகங்கள், பத்திரிகைள் யாவும் முற் றாக இழந்தார். அவரது உழைப்பின் சேமிப்பே அதுதான். இவ் இழப்பு அவராலேயோ அல்லது மற்றவர்களாலேயோ தேடிக் கொடுக்கமுடியாது.

இவர் பின்னும் யாழ்ப்பாணம் வந்து கடமையாற்றும்பொழுதும் ஓய்வு பெற்ற பின்னும் தனது கொள்கையில் எவ்விதமாற்ற முமின்றி வாழ்ந்துவருகிறார். அவரது சேவை எமது சமூகத்திற்கு என்றும் தேவை. அதற்கு இறைவன் அருள்புரிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. கதிரமலை
சமூகசேவை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
தெல்லிப்பளை.



திரு திருச்செந்திநாதன் அவர்களை நான் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் 2000ம் ஆண்டு கடமையாற்றியபோதுதான் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அச்சந்திப்பானது தொடர்ந்து 2014 ம் ஆண்டு வரை அவர் கடமையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும்வரை நீடித்திருப்பது பெரும் மகிழ்ச்சியளிக்கின்றது.

முதலில் சந்திக்கும்போது அவரை ஓர் அலுவலகராகக் கண்டேன். நாட்கள் செல்லச் செல்ல அவரின் பல்பரிமாணங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அவர் ஓர் அரசசேவையாளராக, ஓர் எழுத்தாளனாக, ஓர் இலக்கிய வாதியாக இருந்தார். காலத்தின் உண்மை நிகழ்வுகளைத் துணிவுடன் வெளிக் கொணர்வதிலும் தன்னுடைய கருத்தினை முன்வைப்பதில் எப்போதும் பின் நிற்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவருடன் பல விடயங்களைப் பகிர்ந்துள்ளேன். அவர் புதுக்குடியிருப் பில் கடமையாற்றியபோது அவருக் குரிய இடத்தினை வழங்காதபோதிலும் அது தொடர்பாக கவலைப்படாமல் தன்னால் முடிந்த பணியினை ஆற்றிய செம்மல்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றும்போது அவர் உடல்நிலை யையும் பொருட்படுத்தாது பகல், இரவு 12 மணிவரையும் நின்று எமது மக்களின் துயர் களைய அளப்பெரிய சேவையாற்றி னார். அன்றைய நிலையில் 2002ல் எமது மக்கள் படும் துயரங்களையும் வலியினை யும் வெளிக்கொணர்வதற்காக அவர் "மணல் வெளியரங்கு" என்ற சிறுகதைத் தொகுதியை பல சிரமங்களின் மத்தியில் பல தடைகளையும் தாண்டி வெளிக்கொண்டு வந்தவர்.

2005ம் ஆண்டு நான் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் மாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் அவர் கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றினார். கிளிநொச் சியில் நிர்வாக உத்தியோகத்தராக கடமை யினைப் புரியும்போது சிறந்த நிர்வாகியா கக் காணக்கூடியதாக இருந்தது. ஒருமுறை அவரைச் சந்திக்கச் சென்றபோது அவர் என்னுடன் நடந்துகொண்ட விதம் அவரை ஒரு பண்பாளனாகக் காணக்கூடியதாக இருந் தது. எப்போதும் எளிமையான நடத்தையுள்ள ஓர் நல்ல மனிதருடன் பழகிய சந்தோசம் என்னுள் இன்றுவரையுள்ளது.

மீண்டும் நான் 2013ம் அண்டு மாசி மாதம் தெல்லிப்பளை பிரதேச செயலகத் திற்கு மாற்றம் பெற்றுச் செல்ல முற்பட்ட வேளையில் தெல்லிப்பளை பிரதேச செயலக நிர்வாக அலுவலர் திருச்செந்திநாதன் மிக வும் கடுமையானவர். எப்படி வேலை செய் யப்போகின்றாய் எனச் சிலர் கேட்டார்கள். நான் கூறினேன் அவர் எப்படியானவர் என்று அறிந்திருக்கிறேன். நான் அவரி டம் மிகவும் நேசிப்பது தனது கடமையில் அவர் காட்டும் அக்கறை. உடனுக்குடன் வேலையை முடித்துக்கொடுக்கும் பண்பு, அப்படி மறுப்பவர்களும் வேலை செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவரிடம் உண்டு. நாங்கள் அரச சேவையில் இருப்பவர் கள் மக்களுக்கு சேவைபுரிபவர்கள் அவர்கட் கான தேவைகளை எவ்வளவு சீக்கிரம் முடித் துக் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு விரை வாகச் செய்துமுடிக்கவேண்டும். திருச்செந்தி நாதன் கடுமையானவர் என விமர்சிப்பவர் களால் அவர் தன்னுடைய இருக்கையை விட்டு வேறு ஓரிடத்தில் சென்று கதைப்பதை கண்டதேயில்லை. D.S. அழைத்தால் மட் டும் சென்று கதைப்பார். மற்றும்படி தன்னு டைய இடத்திலேயே இருந்து வேலையில் மூழ் கியிருப்பதைக் காணமுடியும்.

எனக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களுக்கு வேலை விடயத்திலேயும் சரி தனிப்பட்ட முறையிலும் சரி சரியான ஆலோசனை வழங்கும் பண்புடையவர். அலுவலகத் தில் ஏதாவது பிரச்சினை என்று அறிந்து கேட்டால் ஓர் சிரிப்பு சிரிப்பார். எவ்வளவு தான் ஒருவரைப் பற்றியும் புறம் பேசாத மனிதராக காணப்பட்ட நல்ல நண்பர். பண்பானவர். அவருடன் கடமையாற்றிய காலம் ஓர் உன்னதமான காலம் என்று கூறவேண்டும்.

ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவரது எழுத்துலகச் செயற்பாடுகள் தொடரவும் அவரின் குடும்பமும் அவரும் சீரும் சிறப்பு மாக அமைய எல்லாம் வல்ல முருகப்பெரு மான் துணைநிற்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரபோஸ்
"போஸ்கோ"
நல்லூர்.



நீண்ட நாட்கள் கண்ணில் படவில்லை - ஆனாலும்
நீண்டு நிறைந்த நினைவுகள் மறையவில்லை!
மூடிய கண்களுக்குள்ளே தூங்கிக்கிடக்கும்
வெள்ளைச் சிரிப்புகளோடு
சுகங்களை விசாரிக்கும் விழிப்பும்
சொற்களில் ஊறிக்கிடக்கும்
சுடச்சுட ஓடும் உதிரமும்
உயிரின் மெய்மையை உணர்விக்கும்!

இவண் எழுதிய கதைகளும் கட்டுரைகளும்
தேடலுக்குத் தெரிவானாலும்
என்னிடம் என்னுள்ளே என்னை
மகிழ்வித்துக் கொண்டிருக்கும் உணர்வுகள்...
இவண் நட்பு மட்டும்தான்.

எங்கிருந்தாலும் சுகமாகவே இருப்பான் என்கின்ற நம்பிக்கையும்
நிறைவோடு வாழ்வான் என்ற வாழ்த்துக்களோடும்
காலம் மறந்து சொரிந்துகொண்டிருக்கும் மலர்களாக
வாழ்த்திக்கொண்டிருக்கும் என் இதயம்.

பல்லாண்டு சொல்லி வாழ்த்த வருகுதில்லை
காலாவதியாகும் காலமென்பதால்

உயர்ந்து உயர்ந்து உயரவேண்டும்
நின்று நிமிர்ந்து நிலைக்கவேண்டும்
கால்தடங்கள் காற்றில் கலைந்து போகாமல்
தூசியால் கறை படியாமல்
இன்றும் என்றும் நின்று வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. சீவரத்தினம்
நிர்வாக அலுவலர்
பிரதேச செயலகம்
பருத்தித்துறை



அன்புக்கும் மதிப்பிற்குமுரிய நண்பர் திரு.சிதம்பர திருச்செந்தி நாதன் அவர்களும் நானும் யாழ். செயலகத்தில் கடமையாற்றிய நாட்கள் நமது சந்தோஷமான காலங்கள், உயிருக்கே பயந்த காலங் கள் போன்ற சம்பவங்களை இன்று சுமார் 26 வருடங்களின் பின்னர் தற்போது மீட்டுப் பார்க்கின்றேன்.

ஞாயிற்றுக் கிழமைகளில் வீரகேசரி வாரவெளியீடு வருவது வழக்கம், அப்படி வருகின்ற பத்திரிகையில் வெளிவரும் சிறுகதைகளில் எழுதியவர் 'இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் என்ற நீண்டபெயருடன் வெளி-வரும் சிறுகதைகளை நான் விரும்பிப் படிப்பதுடன் அவற்றை பாதுகாப்பாக வைத்திருப்பதுமுண்டு. அக்கதைகளில் தெளிவான சிந்தனைகளும் சமுதாயத் தில் புரையோடிப்போயிருக்கும் பிரச்சினைகளையும் ஆராய்ந்து எழுதப்பட் டிருக்கும்.

1984 ஆம் ஆண்டின் பின்னர் நான் யாழ் செயலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடமாற்றம் பெற்று யாழ். செயலகத்திற்கு நண்பர் செந்தில் வந்தான். முதல் பார்வையிலேயே நமக்கிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டதுடன் நல்ல நண்பர்களாக பழக முடிந்தது. சிரித்த முகம் கோபப்பட்டுப் பார்க்க முடியாத சுபாவம் எந்த விடயத்தையும் ஆழமாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்திக்கும் ஆற்றல், எமது பிரச்சினைகள் பொருத்தமான தீர்வுகளைக் கூறி வழிகாட்டல் முதலிய நற்பண்புகளைக் கொண்டவர். நாம் மனம் திறந்து எமது பிரச்சினைகளை கூறி கதைக்கக்கூடிய நல்ல நண்பராக செந்தில் விளங்கினார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளும், பிரச்சினைகளா லும் அவர் தனது சொந்த இடத்தை விட்டு இடம்பெயர நேர்ந்தது. இருந்த போதும் தனது எழுத்துப்பணியையும் இலக்கியப் பணியையும் தளர்வின்றி செய்துவந்தார். ஈழத்தில் இந்திய அமைதிப்படையினர் அமைதி காத்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அலுவலகத்திலும், வெளியிலும் பல நெருக்கடிகளை எதிர்கொண்டோம். இந்திய அமைதிப் படையினருடன் இருந்த உள்ளூர் போராட்டக் குழுவினரால் பெரும் நெருக்கடிகளையும் உயிராபத்தையும் நண்பர் செந்திலும் ஏனையவர்களும் எதிர்கொண்டோம்.

நண்பர் செந்தில் பற்றியும், எமது அலுவலக வாழ்வு பற்றியும் நினைக்கும்போது ரமணன் கடையை மறக்கமுடியாது. யாழ். செயலக வளவினுள் சிற்றுண்டிச்சாலை இருந்தபோதும் செயலகத்திற்கு வெளியே இருக்கும் ரமணன் கடைக்கு செந்திலும் நமது நண்பர் குழாமும் செல்வது வழக்கம். ரமணன் கடை ரீ அத்துணை சுவையானது. அங்கே சென்று ரீ குடிப்பதுடன் சமகால அரசியல் விடயங்கள், அலசல்கள் பத்திரிகைகளில் வெளிவராத செய்திப் பரிமாற்றங்கள் நடைபெறும். இடையில் ரமணனுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பு எங்களையும் மிகவும் கவலையடையவைத்தது. எமது செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய திரு.மரியநாயகம், இன்னொரு சிற்றாசிரியர் ஆகியோரின் படுகொலை நிகழ்ச்சிகள் எங்களை மிகவும் கவலையடையவைத்தன. எந்தநேரம் என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் கலங்கினோம். காரணம் அந்தக் கால கட்டத்தில் அப்படியான நிர்வாகம் இருந்தது. இந்திய அமைதிப்படை இங்கிருந்த காலத்தில் நடந்த நிர்வாக நடைமுறைகள் விசித்திரமானவை. இரண்டு வரவுப் பதிவேடுகள் பேணப்பட்டன. ஒன்று கீழ்த்தளத்தில் ஒன்று மேல் தளத்தில். மேல் தளத்தில் ஒரு நிழல் நிர்வாகத்தடை என்ற பெயரில் இரண்டு நாட்கள் அலுவலகம் திறந்து வேலை செய்வது மூன்று நாட்கள் அலுவலகம் திறந்து வேலை செய்வது. நண்பர் செந்திலைப் பொறுத்தவரையில் அவை மிகவும் பயங்கரமான நாட்கள்.

எமது ஈழத்தமிழ் இனத்திற்கு இன்றுள்ள மிகப்பெரிய துரதிஸ்டம் எமது ஆரம்பகால வரலாறுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு எழுத்து மூலமான ஆதாரங்கள் இல்லாத குறை. இனிவரும் காலங்களிலும் இதே தவறு ஏற்படாதிருக்க எமது தமிழினத்தில் வரலாறுகள் ஆக்கங்களாக வெளிவந்து அவை தொகுக்கப்பட்டுப் பேணப்படவேண்டும். இச் செயற்பாட்டிற்கு எல்லோருடைய பங்களிப்பும் தேவையாகும்.

இவற்றைச் செய்வதற்கு நண்பர் செந்தில் போன்றவர்களால் முடியும். அதற்கு நாம் பக்கபலமாக நின்று ஆக்கமும் ஊக்கமும் வழங்கி ஊக்குவிக்கவேண்டியது எமது கடமையாகும்.

நண்பர் செந்தில் காதலித்து திருமணம் முடித்தவர். அந்த அம்மையாரும் எங்களுடைய செயலகத்தில் கடமையாற்றினார். எந்நேரமும் சிரித்துக்கொண்டு உரையாடுவார். அமைதியானவர். கணவரின் எழுத்துத் துறைக்கு மிகவும் உறுதுணையாக இருந்து ஊக்குவிப்பவர். கணவரின் கிறுக்கல் எழுத்துக்களை ஒழுங்காக எழுதித் தொகுத்து வழங்குவதில் அவரின் பங்கு அளப்பரியது.

இங்கிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் வாழ்ந்த காலத்திலும் தன் உடல் ஆரோக்கியத்தைப் பொருட்படுத்தாமல் எழுத்துக்கு மிகப்பெரிய சேவை செய்தார் என்று நான் அறிந்தேன். அதற்காக நான் அவருக்கு எனது தனிப்பட்ட பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை நண்பர் செந்தில், அவரது குடும்பமும் நீண்டகாலம் ஆரோக்கியமாகவும், சுகமாகவும் வாழ்ந்து அவரது எழுத்துப்பணி மென்மேலும் மேம்பட்டு சிறப்புற வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகிறேன். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. கமலேஸ்வரன்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்
மன்னார்.



மிக நீளமான பெயர்" இது நமது நண்பரைப்பற்றி பேசும்போது குறிப் பிடும் வாசகம். இக்காலத்தில் தமது பெயர்களை சில எழுத்துக்களில் அல்லது மிகக்குறைந்ததாக ஒரு எழுத்தில் குறுக்கி பெயரை மட்டு மல்லாது தம்மையும் குறுக்கும்போது இவர் தன் மண் மணம், குடும்ப விலாசத் துடன் தனக்கும் அடுத்த தலைமுறைக்கும் பெயர் சூட்டி வருவது இவரது பரந்த சிந்தனையைக் காட்டுகின்றது.

பல்கலைக்கழக புகுமுகத்திற்கான நுழைவுத் தகைமையினை எட்ட முடியாத நாமும் பட்டத்தினைப் பெற்றுவிடவேண்டுமென்ற பேரவாவில் எண்பதுகளை அண்டிய காலப்பகுதியில் தனியார் கல்விநிலையத்தில், ஜெய வர்த்தனபுர பல்கலைக்கழக வணிகமானி பட்டப்படிப்பிற்காக சந்திக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். நான் கல்வியாண்டில் 2 வருடம் இளையவன். 120 பேருடன் 1ம் ஆண்டில் ஆரம்பித்து இறுதிப்பரீட்சையை பூர்த்தி செய்தது 4பேர் மட்டுமே. இந்த நிலை தான் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்பின் நிலை.

பட்டப்படிப்பின் முன் உயர்தரப் பரீட்சைக்காக தமிழும் ஒரு பாடமாகப் படித்தபோது தனியார்கல்வி நிறுவனத்தில் 'குழந்தை' அவர்கள்தான் எமது தமிழ் ஆசான். 1977இல் சிறுகதை பற்றி படிக்கும் போது அவர் விளக்கிய, விமர்சித்த முக்கிய சிறுகதைகளுள் இணுவையூரானின் 'இருட்டு வீரர்கள்' உம் ஒன்றாகும். இச்சிறுகதை 1977ல் வீரகேசரி வாரவெளியீட்டில் வெளிவந்திருந்ததாகும்.

நாம் கற்கின்ற கல்வி மற்றையோருக்குக் குறிப்பாக அடுத்து வரும் மாணவர்க்கு இலகு முறையில் எவ்வாறு கற்றுச் சிறந்த பெறுபேறாக்கலாம் என்பதுடன் நமது அறிவு, மற்றும் அனுபவச் சான்றினைக் கொடுக்க வேண்டும் என்ற பரந்த சிந்தனையோடு வாழ்பவர்களில் நண்பரும் ஒருவர். இதனை இதே சிந்தனையுடடைய எமது சமகால நண்பர் நாகேஸ்வரன் (விரிவுரையாளர்) திருச்செந்தி நாதனைப்பற்றி கூறிப் பெருமைப்படுவார்.

அரச உத்தியோகத்திற்கு முதல் விண்ணப்பித்த நாளிலிருந்து ஒன்றும் கிடைக்காது ஒரு தசாப்தம் ஓடிவிட்டபோது வந்த நேர்முகப்பரீட்சைக்கு செயலகத்திலிருந்து ஒரு சான்றிதழ் தேவைப்பட்டிருந்தது. முப்பதாண்டுகளுக்கு முன் இந்த வேலையில்லாப் பட்டதாரிக்கு. சாதாரணமாக பொது அலுவலகத்திலிருந்து வெகு இலகுவாகப் பெற்றுவிடமுடியாததை சில நிமிடங்களில் இவர் மூலம் பெற்று எனது வேலையின் முதல்படியினுள் நுழைய முடிந்தது.

தனது தகைமையை விட உயர்ந்தவரும் தன்னைவிட உயர்ந்துவிடக்கூடாது என்றகுறுகிய எண்ணமுடையவர்களிற்கு மத்தியில் வாழும் நாம் தனது தகைமையைக்கொண்ட நாம் மேலுயர்ந்துவர ஊக்குவித்து, அதில் உள மாறச்சந்தோசிக்கும் இவரது பரந்துவிரிந்த மனத்தினை வேறு இடங்களில் காண்பது அரிதாகிவிட்டது. ஏனெனில் உயர்ந்து செல்ப வரினை கைகொடுத்து உயர்த்தாது காலில் பிடித்து இழுத்து விழுத்திவிடும் சிந்தனையும் நடைமுறையும்தான் இன்று அதிகமாகி வருகின்றது. ஆரம்பத்திலிருந்தே எனக்கு இவரில் மிகவும் பிடித்த விடயம் இவரது சிரிப்பு. எப்போதும் சிரித்தமுகம், சத்தமான சிரிப்பொலி இவருடையது. இப்போதும் தொலைபேசியில் கதைக்கும்போது இவரிடம் நான் கேட்பது 'ஒருக்கால் சிரித்துவிட்டுக் கதையுங்கள்' என்பேன். திருவிளையாடலில் வரும் தெய்வீகச் சிரிப்பு போன்றது. இவரது சிரிப்பை தொலைபேசியின் ஒலிபெருக்கி பட்டனை அழுத்தி நாம் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் கேட்டு அச்சிரிப்பில் நாமும் மகிழ்வோம்.

இவரது சிரிப்பு என்றபோது நான் யோசிப்பதுண்டு. இது எப்பச் சாத்தியமாகின்றது? இவருக்கு. ஒரு வேளை வள்ளுவனார் சொல்லிவைத்த குறளின்படி சிரிக்கிறாரோ? ஏனெனில் இவரது எழுத்துப் பாதையில் இருட்டு வீரர்களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும்வரை நடந்த நிகழ்வுகள் அனைத்தும் இன்பியலாக இருக்கமாட்டா. எனினும் அனைத்தையும் கடந்த இவரதில் வாழ்வு, சிந்தனை, மகிழ்வுக்குக் காரணம் இவர் அர்த்தநாரீஸ்வரராக இருப்பதுதான் உண்மை. இந்த அர்த்தநாரீஸ்வரன் பல்லாண்டு நலமாக வாழ வேண்டுகின்றேன்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி கோகிலா மகேந்திரன்
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்.



நூல்கள் சுதந்திரத்தின் பொக்கிஷங்கள்
நூல்கள் அமைதித் தேசத்தின் வாயில்கள்
நூல்கள் மேல் நோக்கிக் கொண்டு செல்லும் பாதைகள்
நூல்கள் நண்பர்கள் -வாருங்கள் படிப்போம்.

என்பார் எமிலி போல்சன்.

நூல்களைத் தருபவர்கள் எழுத்தாளர்கள். இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் ஒரு எழுத்தாளர். சிறுகதை, நாவல் மேடை நாடகம், வானொலி நாடகம் எனப் பல தளங்களில் நின்று எழுதிய ஆக்க இலக்கியகாரர். இலக்கிய விமர்சகராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் கூடத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இருந்தாலும் சிறுகதை எழுத் தாளர் என்ற அவரது முகந்தான் தூக்கலாகத் தெரிவது.

அவரது தந்தை வழிக் கிராமமாகிய இணுவிலைத் தனது பெயரோடு ஒட்ட வைத்துக் கொண்டார். இணுவில் மக்கள் பொதுவாகக் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிகள். நேரத்துக்கு நேரம் நிறம் மாறும் பச்சோந்திகளில்லை. கிறிஸ்தவ சமயம் அயல் ஊர்களாகிய மானிப்பாயிலும், உடுவி லிலும் வேகமாகப் பரவிய காலத்திலும் தமது பாரம்பரிய சைவ சமயக் கொள்கையில் நின்று மாறாதிருந்த பாரம்பரியம் கொண்டவர்கள். அந்த இயல்பு சிதம்பர திருச்செந்திநாதனிலும் தெளிவாகத் தெரிவது அவரது எழுத்தில்!

எழுத்தாளன் என்பவன் யார்? அவன் ஏன் எழுதுகிறான்?" காசேதான் கடவு ளடா" என்று வெளிப்படையாகச் சொல் கிற உலகமயமாதல் போக்கில் எமது நாட் டில் வருமானமே வராத, சிலவேளை இருக்கிற காசையும் அள்ளிக்கொண்டு போகிற எழுத்து முயற்சிகளில் ஏன்தான் சிலர் ஈடுபடுகிறார்கள்? எழுத்தாளன் வெறும் பொழுதுபோக்குக்காக எழுதுகிறானா? வாசிப்பாளர்களும் அதற்காகத்தான் வாசிக் கிறார்களா? நல்ல ஆக்க இலக்கியம் ஒன்றில் ஒரு பொழுது போக்கு அம்சம் இருக்கும் என்பது உண்மைதான். ஆனால் அதுக்கும் அப்பால் எழுத்து என்பது பல சமூகப் பெறுமானங்களைக் கொண்டது. வாசகனுக் கும், எழுத்தாளனுக்கும் இடையில் ஒரு "ஒன்றிய வாழ்வு" சார் உறவு ஏற்படுவது முக்கியமான விடயம். அது இருவருக்கும் நன்மை பயப்பது – மாடும் காகமும் போல! அந்த உறவுக்கான தேடல் வாசகர் மட்டத்திலிருந்து எப்படி உருவாகிறது என்று பார்த்தால், மற்றையவர்களால் முடியாத ஒன்றை எழுத்தாளர் செய்கிறார். அது வாசகரைக் கவர்ந்து இழுக்கிறது. தான் வாழுகின்ற அல்லது வாழ்ந்த யுகத்தின் நேரம், இடம், மாந்தர்கள் ஆகியவற்றை எழுத்தாளர் அழகாக மீள் உருவாக்கம் செய்கிறார். நேரம், இடம், மனிதர் பற்றிய விபரங்களை ஒரு "என்சைக்கிளோ பிடியா"வும் தரும். ஆயினும் எழுத்தாளரின் எழுத்தில் அந்தக் காலத்தின் மணம் வீசும். மிக முக்கியமான மனிதக் குரல்கள் அந்த எழுத்தினூடு கேட்கும். "சொல்லை எடுத்தருமை ஓவியம்" செய் வார்கள். அந்தச் சமூகத்தின் செயல்பாடுகளி லும் நடத்தைகளிலும் பின்னணியாகக் காணப் பட்ட ஆழ்மனப் பயங்களை வெளிக் கொண்டு வருவார்கள். அந்த சமூகத்தின் முகம் ஒரு கோணத்தில் தனித்துவத்துடன் தெரியும். அந்தக் குழுமத்தின் விஞ்ஞான எழுத்தாளர் அந்தக் காலத்தின் தொழில் நுட்ப வளர்ச்சி பற்றி எழுதுவார். ஆனால் இலக்கிய எழுத் தாளர் அந்தக் காலத்தின் நாளாந்த வாழ்வு எப்படி இருந்தது என்று ஆவணப் படுத்துவார். இதைத்தான் இணுவை யூர் சிதம்பர திருச்செந்திநாதன் செய்தார். நாம் வாழும் இந்தக் காலத்தைப் பின்னுக்கு வரும் சந்ததியினருக்கு உயிருடன் தந்தார். எங்கள் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், பூட்டப் பிள்ளைகளும் நாங்கள் யார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். புலம் பெயர்ந்து சென்று விட்ட எங்கள் இனத்தாரின் எதிர் கால சந்ததியினருக்கும் நாங்கள் எதற்கு வாய் திறந்தோம் என்று தெரிய வேண்டும். இதனை ஒரு எழுத்தாளர் உணர்வு பூர்வமாகச் செய் கிறார். இதைத் தவிர எழுத்தாளர் ஒரு ஆசிரி யர். உலகத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு அவரி டம் ஏதோ இருக்கிறது. கற்பிப்பதற்கு ஒரு பாடம் இருக்கிறது. அந்தப் பாடம் அந்த எழுத்தாளரைப் பொறுத்த வரை மிக மிக முக்கியமானது. அது அறிவியல் பாடமாக இருக்கலாம். உளவியல் பாடமாக இருக் கலாம். விழுமியம் சார்ந்த பாடமாக இருக் கலாம். கொள்கை சார்ந்த பாடமாக இருக்கலாம். சிதம்பர திருச்செந்திநாதனைப் பொறுத்தவரை அது பெரும்பாலும் கொள்கை சார்ந்த பாடமாக இருந்தது.

எழுத்து என்பது இன்னொரு வகை யில் சமூகத்தின் பல மட்டங்களிலுமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி வருகிற காட்சி. சமூகத்தில் அதற்கு முன்னர் இருந்திருக்காத ஒரு விழிப்புணர்வை அது கொண்டு வந்தால் அது பெரிய வெற்றி அல்லது முன்னர் அந்த விடயம் சமூகத்திற்குத் தெரிந்திருந்தாலும் கூட அதிகம் ஆழமாக உணரப்படாது இருந்த விடயம் இப்போது பல முனைகளிலும் இருந்து சிந்திக்கத்தக்க விடயமாக ஆக்கப்பட்டிருந்தாலும் அது வெற்றிதான். பொதுவாக யதார்த்த வாதம், இயற் பண்பு வாதம் போன்ற தளங்களில் நின்று எழுதும் எழுத்தாளர்கள் எதையும் புதிதாகக் கொண்டு வருவதில்லை. அவர்கள் தாம் வாழும் சமூகத்தைத் திருப்பி அந்த சமூகத்திற்கேதான் காட்டுகிறார்கள். ஆனாலும் கலை உணர்வுடன் அதை அந்தச் சமூகத்தினுள் எறியும் போது அந்தச் சமூகத்தின் முன்னைய நிலை எப்படி இருந்தது. எதிர் கால நோக்கும் போக்கும் எப்படி இருக்க வேண்டும். இப்போதிருக்கும் நிலை எப்படி மாற வேண்டும். போன்ற பல விடயங்கள் பலருக்கும் தெளிவாகும்.

இவை எல்லாம் இப்படி நடப்பதனால் தான் எழுத்தாளன் சமூகத்தால் பாதிக்கப்படுகிறான். மதிக்கப்பட வேண்டும். இன்றைய தலைமுறையின் மத்தியில் வாசிப்பு மிகவும் குறைந்து விட்டது. அவர்கள் எந்த நூலையும் வாசிப்பதாக இல்லை. மிக அண்மையில் க.பொ.த சா/தரம் படிக்கும் மாணவர் குழு ஒன்றின் மத்தியில் "உங்களுக்குப் பிடித்த ஒரு தமிழ் எழுத்தாளரைக் கூறுங்கள்" என்று கேட்டேன். ஒருவருக்கும் குறைந்தது ஒரு எழுத்தாளரின் பெயர் கூடத் தெரிந்திருக்கவில்லை. இலங்கையிலும் தெரியவில்லை. தமிழ் நாட்டிலும் தெரியவில்லை புலம் பெயர் நாட்டிலும் தெரியவில்லை. நான் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போனேன். ஆனால் என்ன செய்வது? அதுதான் யதார்த்தம் பிள்ளைகள் டி.வியுடனும், கணணியுடனும் எப்படியோ பொழுதைப் போக்குகிறார்கள். டி.வியில் போகின்ற நிகழ்ச்சிகளுக்கும் எமது சமூகத்தின் பிரச்சினைகளுக்கும் ஒரு தொடர்புமில்லை. ஒரு வேளை நாம் முப்பது வருடத்திற்கு மேலாக அனுபவித்த அனர்த்தங்களின் தாக்கத்திலிருந்து விடுபட அல்லது அதை முற்றாக மறந்து போக இப்படி ஒரு வேறு உலகத்துக்குள் மறைந்து போகின்றார்களோ தெரியவில்லை. ஆனால் அது சரியான வழி இல்லை பிரச்சினைகளை யாதார்த்தமாக எதிர் கொள்ள வேண்டும். இந்தக் காலத்தில் தான் முன்னர் எப்போதையும் விட அதிகமாக எழுத்தாளர்கள் எழுத வேண்டும்.

உலகத்தை முன்னே செல்ல விடாமல் தடுக்கும் விடயங்களை அவர்கள் சுட்ட வேண்டும். வாழ்வின் அர்த்தத்தை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். சமூகத்தின் அநீதிகள் எடுத்துக் காட்டப்பட வேண்டும். சமாதானத்துக்கான போராட்டத்தை அவர்கள் முன்னின்று இழுத்துச் செல்ல வேண்டும்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் வேறு பல இளம் எழுத்தாளர்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணராய் இருந்தார். அந்தப்பணி தொடர வேண்டும். அவரை நாம் வாழ்த்துவதோடு தமிழ் உலகம் என்றும் பேசக் கூடிய பணிகளை அவர் இன்னும் ஆற்ற இறையருள் கைகூடப் பிரார்த்திப்போம்.

இவரது 'முடிவல்ல ஆரம்பம்' என்ற நாவல் எமது பெண்களின் திருமணப் பிரச்சினையை ஆழமாக எடுத்துக் கூறுவது. "பூவோடும் பிஞ்சோடும் வாழ்விழந்த எலுமிச்சை மரங்கள்" என்று நாவலின் முதலாம் பக்கத்திலேயே அவர் விபரிப்பது, எமது சராசரிக் குடும்பங்களின் நிலையை மனதைத் தொடும்படி சுட்டும் குறியீடு. முப்பது வயதுக்கு மேல் திருமணமாகாமல் இருக்கும் பெண்களிடம் மிகச் சகஜமாகக் காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவது ஒரு வெடுவெடுப்பு. ஒரு கோபம் உளவியல் ரீதியாகப் பார்த்தால் மற்றைய பெண்களை விடச் சற்று முன்னரே தோற்றம் காட்டுகிற "மத்திய வயது நெருக்கடி" (Middle age crisis)" சில வேளைகளில் இந்த வெடுவெடுப்புப் பதிலடி தேவையாக இருக்கிறது. இல்லாவிட்டால் சுய பாதுகாப்புத் தேடிக்கொள்வது மிகக் கஷ்டமாகிவிடும்" என்ற எழுத்தாளரின் விளக்கம் சிந்திக்கும்படி அமைகிறது.

"பெரும் பதவிகளையும், தங்கள் ஆண்மைகளையும் பல லட்சங்களுக்கு, விற்று விட்ட மணவாளர்கள்" என்று நாவலில் வரும் இடம், சீதணத்தின் கோலோச்சுதல் பற்றி அழகாகவும் உண்மையாகவும் பேசும் இடம்.

"மற்றவை என்ன நினைப்பினம், பிழையாய்க் கதைப்பினம், மரியாதை இல்லை எண்டதாலும் தான் கன குடும்பங்கள் சந்தோஷமாய் இருக்கிறதாய் நடிச்சுக் கொண்டு இருக்கு" என்ற அவரது அவதானம் உண்மையானது. அது பெண்கள் பலரின் அவல வாழ்வை வெளிச்சம் போட்டுக் காட்டுவது. அது திருமணம் ஆன பெண்கள் பலரின் பிரச்சினை!

"புருஷன் இல்லாத பொம்பிளையள் அல்லது புருஷனை விட்டுப் போட்டு இருக்கிற பொம்பிளையள எல்லாம் எதற்கும் ரெடியான பொம்பிளையள் எண்டு இவர் களைப் போல ஆக்கள் நினைக்கினம்" என்று பேசும் இடம் அந்தக் கூட்டத்தின் சவால் நிறைந்த சிக்கலைத் தொட்டுக் காட்டும் இடம்.

பெண்களின் பிரச்சினையின் ஒரு பகுதி வெளியில் இருந்து வருகிறது. ஆயிரம் முக்கிய பகுதி அவர்களின் மனம் சார்ந்தது. அவர்களின் எண்ணங்களில் திருப்தி வருவதில்லை. "கலியாணம் சரிவந்த பின்னரும் அவளது அக மனம் திருப்திப்படவில்லை" என்று நாவலின் நாயகி ராகினி பற்றி எழுதுவார் செந்தி.....

மணவாளன் பற்றித் திருப்தி வந்தாலும் பின்னர் காசு, பணம், நகை, நட்டு, வீடு, வளவு என்று பெண்களின் ஆசை அளவின்றிப் பெருகுவதும் அவர்களின் மகிழ்வின்மைக்குக் காரணங்கள். "தேர்வடம் போன்ற கொடி. இரட்டைப் பட்டுச் சங்கிலி" என்று ஓரிடத்தில் எழுத்தாளர் வர்ணிக்கிறார்.

கந்தசாமி போன்றவர்களின் கருத்தை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல என்றாலும் ராகினியின் அந்தத் துணிவும் உறுதியும் நாவலின் முடிவை வாசகர் அங்கீகரிக்கும்படி ஆக்கியுள்ளன.

இந்தப் பணியை அவரது சிறுகதைகள் பல சிறப்பாகச் செய்தன. 'மணல்வெளி அரங்கு' என்ற தொகுதிக்கு மதிப்புரை எழுதிய பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்கள், "கதாசிரியரின் அரசியலுடனோ, உலகநோக்குடனோ முற்றாக உடன்பட வேண்டிய தேவை இல்லாமலே அவரது கதைகள் அவர் வாழும் சமூகச் சூழலை நேர்மையாக அடையாளப்படுத்துவதை நாம் அறிய முடிகிறது". என்று தெளிவாக முன் வைத்தார். 2000ம் ஆண்டு சரிநிகரில் வெளிவந்த 'சமாதானம்' என்ற கதை எமது நாட்டில் சமாதானத்தின் நிலையை கலை அழகுடன், முன் எறிந்தது. 'சமாதானம்' அங்கு ஒரு பாத்திரமாகச் சித்திரிக்கப்படுவதே அதன் தனித்துவ அழகு இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனை எழுத்துவதில் நிலை நிறுத்திய மற்றொரு சிறந்த சிறுகதை "தேவர்கள்" தேவர்களையும் தேவனையும் அவர் ஒப்பிடும் முறை அந்தக் காலத்து நிஜத்தை அச்சொட்டாய் அள்ளி விசிறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. நகுலேஸ்வரன்
தொழிற்துறை ஆலோசகர்



இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அறுபது ஆண்டுகள் நிறை வான வாழ்வு கண்டு நிற்கின்றார். அவரது வாழ் நாள் சமூக இலக்கியப் பணிகளை நினைவில் நிறுத்தும் ஆவணமாக இம் மலர் வெளிவரு கின்றது. நூற்றுக் கணக்கான, கல்விமான்கள் இலக்கிய புலமையாளர்கள் அவருடைய மிக நீண்ட கால சமூக இலக்கிய பணி பற்றிய தங்களது மனப் பதிவுகளைப் பதித்துள்ளார்கள்.

எனக்கும் திருச்செந்திநாதனுக்குமிடையிலான அந்நியோந்நிய மான உறவும் பரிச்சியமும் கால்நூற்றாண்டுகளுக்கு மேலானது. கடந்த கால யுத்த சூழ்நிலைகள்தான் எங்களிருவரது உறவுக்கும், மிக நெருக்க மான நீண்டகால நீடிப்பிற்கும் காரணமாக இருந்துள்ளது. இன்று யுத்தம் ஓய்ந்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின் றோம். எம்மில் பலருக்குள்ள மனோநிலை, இன்று எதுவுமே நடக்காதது போல, யாழ்குடாநாட்டிலிருந்து வன்னி வரை நீட்சியுற்ற பேரழிவுகளை துக்க துயரங்களை மறந்து எவருடனுமே அதைப்பற்றிப் பேச, பகிர விருப்பமின்றி வாழப் பழகி விட்டோம்.

1990ம் ஆண்டின் நடுப்பகுதி, இந்திய அமைதிப்படை எமது மண்ணிலிருந்து வெளியேறிய பின்னர் தற்காலிகமான குறுகிய கால அமைதியை நாங்கள் அனுபவித்த காலம் எங்களுக்கான தேவை-கள் அதிகமாக இருந்தகாலம். சமூகப்பணிகளில் அக்கறை கொண்ட வர்கள் ஒன்றிணையத் தொடங்கினார்கள். அன்றைய அந்த கால நிலையும், தேவையுமே திருச்செந்திநாதனையும் என்னையும் ஒன்றிணைய வைத் தது. திருச்செந்திநாதனுக்கும் எனக்குமிடையேயான முதற் சந்திப்பு நேற்று நடந்தது போல இன்னும் நினைவில் நிற்கின்றது.

1980ம் ஆண்டுகளில் யாழ் மண்ணிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த மல்லிகை மற்றும் தமிழ் தினசரிகளில் திருச்செந்திநாதனின் இலக்கியப் படைப்புக்கள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றின் மூலம் நான் திருச்செந்திநாதனை அறிந்திருந்தேன். அவரது மிக நீண்ட பெயர் மன-தில் நன்கு பதிந்திருந்தது.

சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் எமது முதற் சந்திப்பு அமைந்தது. என்னிடத்திற்கு அவர் வந்த வேளையில், ஆரம்ப உசாவல் வழமை போல நீங்கள் யார்? எந்த இடம்? என்றதுமே இணுவில் என்ற உச்சரிப்பினை கேட்டவுடனேயே நான் இணுவையூர் திருச்செந்திநாதன் எனத் தொடர்ந்தேன். "அது நான் தான்" என அவர் பதிலளித்தார்.

தொழில்நுட்ப துறை சார்ந்த என்னை தேடி ஒரு எழுத்தாளன் வந்திருப்பது சற்றுத் திகைப்பாக இருந்தது. தொழில்நுட்பமும், எழுத்தும் ஒன்றுபட வேண்டிய காலத்தின் தேவைபற்றி எனக்கு விளக்கமளித்தார். "ஆதா ரம்" என்கின்ற சமூக பொருளாதார ஏடு ஒன்றினை வெளியீடு செய்ய வுள்ளது பற்றி குறிப்பிட்டு அதில் தொழில் விடயங்கள் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் பரவலாக்கப்பட வேண்டும் என்கின்ற சமூக சிந்தனையை வெளிப் படுத்தினார். அதற்காக அவர் இன்னும் பல பல்கலைக்கழக பேராசிரியர்கள், தொழில் துறை வல்லுனர்கள் தொழில்நுட்பவிய லாளர்களையும் ஒன்றிணைத்திருந்தார்.

அன்றைய கால கட்டத்தில் ஆட்சியி லிருந்த அரசு மக்கள் மீது படுமோசமான பொருளாதார தடைகளை விதித்திருந்தது. மனிதாபிமானமற்ற இந்த ஈனச் செயல்கள் மக்களது அடிப்படை வாழ்வியலையே முடக்கிவிட்டன.

கொடூரமான அடக்குமுறைகளை கண்டு அஞ்சி ஒடுங்காமல் கடைகளைத் தகர்த் தெறிவதில், பல்வேறு மாற்று வழிகளைக் கண்டறியும் முயற்சிகளில் பலரும் முனைப் புடன் செயற்பட்டார்கள்."ஆதாரம்" சமூக பொருளாதார அபிவிருத்தியின் அடி நாதமாக முழுவீச்சுடன் வெளிவரலாயிற்று.

திருச்செந்திநாதன் தன்னுடைய அலு வலக பணிச்சுமையுடன், சமூகப் பணி களையும் பொறுப்பேற்று, "ஆதாரம்" சஞ் சிகை பதிப்பு வேலைகளுக்காக ஓய்வு ஒழிச்சலின்றி ஆக்கங்களை எழுதுவதற்கு துறை சார்ந்தவர்களைத் தேடி அலைவது, எழுதியவற்றை அச்சுப் பதிப்பதற்கு, பதிப் பகங்களுக்கு அலைவது என்ற காரியங் களில் கண்ணாயிருந்து செயற்பட்டார். துவிச்சக்கரவண்டியைத் தவிர போக்கு வரத்து வசதிகளற்ற காலச் சூழலில், உடல் நலக் குறைவினையும் பொருட்படுத்தாது உடலை வருத்தி ஓடி அலைந்து திரிந்தது இன்னும் கண்களில் நிழலாடுகின்றது.

இத்தனை நெருக்கடிகளுக்குள்ளும் தனது வழமையான நாவல், சிறுகதை எழு-துவதிலும் அக்கறையாக இருந்தார். யுத்த கால உள நெருக்கடிகள் ஒரு பக்கம், வேலைச் சுமைகள் இன்னொரு பக்கமென அத் தனை நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அன்றும் இன்றும் தொடர்ந்தும் எழுதிக் கொண்டேயிருக்கின்றார்.

இனவிடுதலைப் போராட்டம் முனைப்பு பெறத் தொடங்கிய 1980ம் ஆண்டு காலங்களிலிருந்து திருச்செந்திநாதனின் சிறு கதை, நாவலிலக்கிய எழுத்தும் முனைப்பு பெற்று வருகின்றது. இவரது சிறுகதைகள், நாவல்கள் தமிழ் விடுதலைப் போராட்ட கோலங்களையே கருவாக கொண்டிருப் பவை.

புத்தகங்கள், சஞ்சிகைகளை எழுது வது என்பது வேறு வெளியிடுவது என்பது வேறு இது ஒரு சுலபமான விடயமல்ல. திருச்செந்திநாதன் எண்ணுக்கணக்கான நூல் களை வடிவமைத்து வெளியிடுகின்ற இவ ரது பண்புகளும் அறியப்பட வேண்டிய ஒன் றாகும். திருச்செந்திநாதனது மற்றவர்களை நேசிக்கும் இனிய பண்புகள் பலரது நட்பையும் இவருக்குத் தேடிக் கொடுத்துள்ளது. புத்தக வெளியீட்டைப் பொறுத்தளவில் இங்கே இருவரது நட்பு இங்கு விசேடமாக குறிப்பிடப்பட வேண்டும். ஒருவர் திருச் செந்திநாதன் மற்றவர் குடாநாட்டில் இத் தனை நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு புதிதாக வெளியீட்டினை செய்தவரான திரு.சோ.தேவராசா சட்டத் தரணி, திருச்செந்திநாதனது எழுத்துக்கள் நூல் வடிவில் வெளிவருவதற்கும் காரணமா-னவர் இவர்தான்.

திருச்செந்திநாதன், தானுண்டு தனது எழுத்துக்கள் உண்டு என தனித்திருப்பவ ரல்ல. கூட்டு முயற்சியை ஊக்குவிப்பவர். துடிப்பான பல இளம் எழுத்தாளர்களை எழுத ஊக்குவிப்பவர். இவருடன் இணைந்து ஒரு துடிப்பான இளம் எழுத்தாள வட்டம் துடிப்புடன் இயங்கிக் கொண்டே இருக் கின்றது. பலரையும் எழுத வழிப்படுத்து வதுடன் நின்று விடாமல் படைப்பாக நான் கூட சில கட்டுரைகள், கதைகள் எழுத இவரே காரணம். என்பதை இங்கு சொல்ல விரும்பு கின்றேன்.

1990களின் குடாநாட்டு இடப் பெயர் விலிருந்து யுத்தத்தின் இறுதி எல்லை 2009 முள்ளிவாய்க்கால் வரை ஒன்றாகப் பயணித் திருக்கின்றோம். உலகின் சிறந்த நல்ல புத்தகங் களை அவர் வழியாக அறிமுகங் கொண்டி-ருக்கின்றேன். இது தான் நான், இது தான் என் வழி என பற்றுறுதி கொண்டவர், சுயம் என்பதன் சாராம்சம் இது தான் என்பதை அவரிடத்திலிருந்து நான் அறிந்து கொண் டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. ஐ. வரதராஜா (அமரர்)
அரியாலை



அது நான் மாவட்ட செயலகத்தில் பணிபுரிந்த காலம். 1980 யூலை பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பின்னர் பணியில் மீளவும் இணைந்தநேரம். மாவட்ட செயலகம் முழுவதும் இளம் ஆண்களாலும் பெண்களாலும் நிரம்பி வழிந்தது. ஒரு காலை நேரம் ஏதோ அலுவலக அலுவல் காரணமாக ஓய்வூதியக் கிளைக்குச் செல்லவேண்டி நேர்ந்தது. காலை நேரம் ஆகியபடியால் அலுவலகம் பரபரப்பான சூழ்நிலையில் மிதந்துகொண்டிருந்தது. நான் சென்ற அலுவலை முடித்துக்கொண்டு எனது அலுவலகத்திற்குத் திரும்பும் வழியில் கணக்குக் கிளையில் கடமை-புரியும் இணுவிலைச் சேர்ந்த நண்பர் ஒருவர் வழிமறித்து ஓய்வூதியக் கிளையில் பணிபுரியும் திருச்செந்திநாதன் பற்றிக் கூறினார். அதோடல்லாமல் என்னை நேரடியாக அழைத்துச்சென்று திருச்செந்திநாதனுடன் அறிமு-கம் செய்துவைத்தார். ஏற்கனவே எனக்கு சிதம்பர திருச்செந்திநாதனுடைய படைப்புக்களுடன் பரிச்சயமுண்டு. வீரகேசரி, மல்லிகை, சுடர், சிரித்திரன் ஆகியவற்றில் வந்த சிறுகதைகளை வாசித்திருந்தேன். அதன் பிற்பாடு எமது அலுவலகக் கடமைகளில் தடங்கல் ஏற்படாதவிதத்தில் நாங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக்கொண்டோம். பரஸ்பரம் வாசித்த நூல்களைப்பற்றிய இரசனைகளையும் பரிமாறிக்கொண்டோம்.

அக்காலத்தில் எங்களை ஈர்த்த மிக முக்கியமான எழுத்தாளர்களான ஜானகிராமன், சுந்தரராமசாமி, கு.ப.ரா., புதுமைப்பித்தன், அசோகமித்திரன் ஆகியோரது படைப்புகள் பற்றிய உரையாடல்கள் மகிழ்வினைத்தந்தன. இதன்வழியே நாங்கள் வாசித்த சஞ்சிகைகள், நூல்கள் மூலம் இலக்கியத்தில் உள்ள காத்திரத்தன்மையை உணர்ந்துகொள்ளக்கூடியதாயிருந்தது.

திருச்செந்திநாதன் இயல்பாகவே மென்மையான சுபாவம் உடையவர். எந்நேரமும் இவரது வதனத்தில் புன்முறுவல் மலர்ந்திருக்கும். அந்த அகத்தின் அழகினை இவரது படைப்புக்களிலும் இனங்காணலாம். பிரதேசத்தின் அழகினையும், சமூகத்தில் நிலவிவந்த பிரச்சினைகளையும், உட்புகுத்திப் பல படைப்புக்களைத் தந்துள்ளார். இவர் கதைகளில் வரும் கதா மாந்தர்களையும், சம்பவங்களையும், நாளாந்தம் நிஜவாழ்வில் தரிசிக்கமுடிகிறது.

சாதிமுறைமை, சீதனக் கொடுமை, பொய்மை, பொறாமை என்பன சமூ கத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய படைப்புக்கள் தந்த பதிவுகள் மனதில் அழியாச் சித்திரங்களாக நிலைபெற்றுள்ளன. "கோஷமும் வேஷமும்" "முகமூடி மனிதர்கள்" "குட்டையும் மட்டைகளும்" போலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான மனிதர்களை இனங்காட்டும் படைப்புக் களாக மிளிர்கின்றன.

இணுவையூர் மண்ணின் செழிப்புக்கூட, இவரது பல கதைகளில் அழகாகச் சித்திரிக்கப்படுகின்றது. "காணிக்கு வேலி யுண்டு" என்ற கதை யாழ் பிரதேசத்தின் சொத்துடமை பற்றிப் பேசப்படுவது டன், வெளிநாட்டுப் பணத்தினால் உருவா கிய அந்தஸ்த்தினையும் இயல்பாகப் பதிவு செய்துள்ளார்.

திருச்செந்திநாதனைப் பற்றி பேராசிரி யர் சிவசேகரம் "மணல் வெளி அரங்கு" தொகுப்பில் கூறும்போது; "அவரது கதை கள் ஒவ்வொன்றும் கவனமாகச் செதுக் கப்பட்டிருப்பதை அவதானிக்கும்போது தான் சொல்வது வாசகரைத் தெளிவாகச் சென்றடைய வேண்டும் எனக் கருதுகிற படைப்பாளிகள் நடுவே அவரை அமர்த்து கிறது. கதாசிரியரின் அரசியலுடனோ உலக நோக்குடனோ முற்றாக உடன்பட வேண்டிய தேவை இல்லாமலே அவரது கதை கள் அவர் வாழும் சமூகச் சூழலை நேர்மை யாக அடையாளப்படுத்துவதை நாம் அறிய முடிகிறது என்பது நிதர்சனமாகும். 1983ம் ஆண்டிற்குப் பின்னர் எழுதிய கதை களில போர் தந்த அச்சம், சூழ்நிலையின் யதார்த்தம், என்பன கச்சிதமாகப் பதிவு செய் யப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். "பின் னால் வந்தவன்", "ஓட்டம்" போன்ற கதை களும் "மணல் வெளி அரங்கு" தொகுதியில் வந்த பல சிறுகதைகளும் இவற்றிற்குச் சான்று பகர்கின்றன.

"மல்லிகை" ஆசிரியர் டொமினிக் ஜீவா வும் இவரது இலக்கிய ஆளுமையைக் கௌர விக்குமுகமாக 2005- நவம்பர் மாத மல்லிகை இதழில் இவரது புகைப்படத்தினை அட்டைப் படமாகப் பிரசுரித்தமை பாராட்டிற்குரிய தாகும்.

திருச்செந்திநாதன் சிறுகதை ஆக்கங்கள் மட்டுமன்றி பத்தி எழுத்துக்களிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். "ஈழநாதம்" பத்திரி கையில் வாரம்தோறும் அழலாழக் குட்டன் என்னும் பெயரில் "இலக்கியத்தடம்" என்ற பகுதியில் இலக்கிய விடயங்களை எழுதினார். "ஈழமுரசு" பத்திரிகையில் நடராஜமைந்தன் என்னும் பெயரில் இலக்கியச் சாளரம் பகுதி யிலும் இலக்கிய விடயங்களை எழுதினார்.

1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி நான் அவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி யில் - மாவட்ட செயலகம் தற்காலிகமாக இயங்கி வந்த இடத்தில் சந்தித்தேன். அன்று தான் எனது தந்தையார் (கவிஞர் வே. ஐயாத்துரை வடமராட்சியில் இயற்கையெய் தினார். எனக்கு வந்த செய்தியினை அவசர அவசரமாகத் திருச்செந்திநாதனுக்குக் கூறி விட்டு சென்றுவிட்டேன். அவர் தனது அனு தாபத்தையும் தெரிவித்திருந்தார். பின் னர், அவர் அன்றே கிளிநொச்சிக்குச் சென்று விட்டதாகத் தெரியவந்தது. அதன்பிறகு இரு வரும் நேரடியாகச் சந்தித்திராதுவிடினும் படைப்புகள் மூலம் இணைப்பு இருந்து வந்தது.

சேவைக்காலத்தில் பலபேருடன் பழகும் வாய்ப்புக்கள் உருவாகியிருப்பினும், அவை யாவும் நீடிப்பதில்லை. ஆனால் திருச்செந்தி நாதனுடனான நட்பு ஆத்மார்த்தமானது. சொல், செயல், ஒருங்கேயமைந்த நேர்மையாள னாக அவரை இனம்கண்டநாள்முதலாய் என் உள்ளத்தே இலக்கிய வாசனையுடன் உலா வருகின்றார்.

இவர் 60 வயதிற்குப் பின்னான ஓய்வு காலத்தில் ஆரோக்கியத்துடன் தனது அனு பவம்சார்படைப்புக்களை அஞ்ஞாதவாசத்தை முடிவுறுத்தி வெளிக்கொணர வேண்டி மன- மார வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி க. சிதம்பரநாதன்
யாழ். பல்கலைக்கழகம்



1980களின் முற்பகுதி என்று நினைக்கிறேன். சிதம்பர திருச்செந்திநாதன் இளம் கலைஞர்களை ஊடகம் மூல மாக வெளிக்கொணரும் வேலையில் ஈடுபட்டிருந்தார். சதுரங்க பேட்டி என்ற பெயரில் இலக்கியம் நாடகம், நடனம், இசை ஆகிய கலை, இலக் கிய துறைகளை சேர்ந்த நால்வரை வீரகேசரி பத்திரிகை மூலம் வெளிக் கொணரும் ஒரு செயற்பாட்டில் இவர் ஈடுபட்டிருந்தார். நாடக துறைசார்ந்து எனது கருத்துக்களை வீரகேசரியில் வெளிக்கொணர்வதற்கு இவர் வழிசமைத்திருந்தார். எனினும் 1978 முதல் எனக்கும் அவருக் குமான தொடர்பு இருந்தது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஒரு வணிகமாணி பட்டதாரி ஒரு நிர்வாக உத்தியோகத்தர். ஆனால் இவரது படிப்பும், உத்தியோகமும் இவரை ஒரு இயந்திரப்பாங்கான ஆளாக மாற்றிவிடும் ஆபத்திலிருந்து தப்பி இவர் ஒரு கற்பனைத் திறன் மிக்க ஒரு கலை இலக்கியவாதியாக மேற்கிளம்பினார்.

இன்று எமது சமூகத்தில் மேற்கத்தேய கல்வியின் இயந்திரத் தன்மையால் உணர்ச்சி நீக்கம் செய்யப்பட்டு ஆனால் கல்வியில் ஏதோ ஒரு வகையில் (அநேகமாக நெட்டுருச்செய்து) 'உயர்ந்த பெறுபேற்றை' பெற்று பெரிய பதவிகளில் உட்காருவோர் சமூக சிந்தனையற்று கற்பனை திறன் அற்று இயந்திரப்பாங்கான வேலைகளில் ஈடுபட்டு வரும் துர்பாக்கிய சூழல் நிலவி வருகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிதம்பர திருச்செந்திநாதன் கற்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் மிக்க ஒரு நிர்வாக அதிகாரியாக கடமையாற்றியது நிர்வாகத் துறையில் ஒரு முன்னுதாரணமான செயற்பாடாகும்.

இவர் சிறுகதை, நாவல், வானொலி நாடகம், விமர்சனம், பத்திரிகை, எழுத்து என பல துறைகளில் பணி செய்துள்ளார். இவரது இலக்கிய படைப்புக்கள் வெறுமனே அழகியல் இரசனைக்கு உரியவையாக மட்டுமல்லாமல் அதாவது கலை கலைக்காக மட்டுமல்லாமல் கலை மக்களுக்கானவையாக விளங்கி மக்கள் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவனவாக விளங்கியிருந்தன. ஒரு மக்கள் கலைஞன் சமூகத்தில் நிலவும் அநியாயங்கள், அக்கிரமங்கள் கண்டு வெகுண்டெழுவான் அத்தகைய ஒருவராக சிதம்பர திருச்செந்திநாதன் விளங்கினார். தமிழர்களின் தேசிய விடுதலை போராட்டம் கூர்மையடைந்தபோது தனது கலை இலக்கிய செயற்பாட்டை போராட்டத்தை உந்தித் தள்ளும் ஒரு கருவியாகப் பயன் படுத்தினர். இன்று போராட்டம் அழிக்கப்பட்டதன் பின்னர் மக்கள் மத்தியில் நச்சுக்கருத்துக்களைப் பரப்பும் கலை இலக்கிய செயற்பாடுகள் பெருகிவருவதை நாம் கவலையுடன் நோக்க வேண்டியுள்ளது.

இவரது கலை இலக்கியப் பணி மக்களை சமூக அரசியல் விழிப்புணர்வூட்டுவது என்பதற்கு அப்பால் மக்கள் தம்மீது திணிக்கப்பட்ட பொருளாதார தடைக்கு முகம் கொடுத்து சுதேசிய உற்பத்திகளில் ஈடுபடும் உணர்வெழுச்சி கொண்டவர்களாக நிலை மாற்றம் பெறுவதற்கும் பணி செய்தது. அன்று 'நாமிருக்கும் நாடு நமது' என்ற அரங்க நிகழ்ச்சி ஒன்று யாழ் குடாநாடெங்கும் நிகழ்த்தப்பெற்றது. இந்நிகழ்ச்சி மக்கள் மத்தியில் 'நாம் நமது தேசத்தை கற்பனை காண வேண்டும் நாம் காணுகின்ற கற்பனையின் அடிப்படையில் மனம் வைத்து எமது நிலத்தில் உழைக்கும் போது எமது நிலம் செழிக்கும் என்ற உறுதியை தோற்றுவித்தது எழுச்சியடைந்த மக்கள்.

"எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும் ஒவ்வொரு பூவையும் பாடுகின்றோம்.

இங்கே தோன்றும் ஒவ்வொரு பிள்ளையும் இறைவன் ஆவதை நாடுகின்றோம்

இறைவியாகவும், இறைவனாகவும் இயங்கும் சூழ்நிலை தேடுகின்றோம்". என்று பாடினார்கள். இந்த நாடகத்தின் தயாரிப்புக்கு இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் பெரிதும் துணையாக இருந்து எம்மோடு முழுமையாக உழைத்தார். பொருண்மிய மேம்பாட்டிற்காக பணிபுரியும் வகையில் ஆதாரம் என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து மக்கள் மத்தியில் பொருண்மிய மேம் பாட்டிற்கான அறிவெழுச்சியை ஏற்படுத்துவதில் இவர் விடாமுயற்சியுடன் பணி ஆற்றினார்.

இவர் ஒரு சாய்மனைக் கதிரை கலை இலக்கியவாதியாக வாழவில்லை. மக்களோடு வாழ்ந்து மக்களிடம் கற்று மக்களுக்கு பணிபுரியும் ஒரு நேர்மையான கலை இலக்கியவாதியாக வாழ்ந்தார். இதனால் தான் யுத்த பிரதேசத்தில் மக்களோடு மக்களாக நின்று பணிபுரிந்தார்.

இத்தகைய அர்ப்பணம் மிக்க கலை இலக்கிய சமூக இயக்கம் ஒன்றில் முன்னணி வகிக்கும்போது தான் சமூக முன்னேற்றம் சாத்தியமாகும். இன்று நமது சமூகத்தில் நிலவும் எதிர் மானுட சூழலில் சிதம்பர திருச்செந்திநாதன் போன்ற கலை இலக்கிய வாதிகள் ஒதுங்கிவிடாமல் முயற்சியுடன் முன்செல்ல முயல்வதுதான் நமது சமூகத்திற்கு எதிர்காலம் பற்றிய ஒரு சிறு நம்பிக்கையாவது தரும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜநாயகம் பாரதி
பிரதம ஆசிரியர்
தினக்குரல் வாரவெளியீடு



எழுத்தாளர் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனுடனான எனது உறவு 1980களின் பிற்பகுதியில் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் முர சொலி பத்திரிகையில் நான் ஒரு செய்தியாளராகப் பிரவேசித்த காலத்தில்தான், இணுவையூரைச் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அமைதி யான ஆர்ப்பாட்டம் இல்லாத ஒருவர். ஆனால், ஆழமான இலக்கியப் பணி யைச் செய்துகொண்டிருந்தார். அவருடனான சந்திப்பு ஆரோக்கியமான விவா தங்களுக்குக் களம் அமைத்துக்கொடுப்பதாக எப்போதுமே அமைந்திருந் திருக்கிறது.

போர், இடப்பெயர்வு என்பன அவரை ஒரு திசையிலும், என்னை மற்றொரு திசையிலும் கொண்டுசென்றபோதிலும்கூட, எமக்கிடையிலான தொடர்புகள், உறவுகள் ஏதோ ஒரு வகையில் தொடர்ந்துகொண்டிருந்தன. அவருடைய நலன்கள் தொடர்பில், அவருடைய எழுத்தாக்கங்கள் குறித்து அவ்வப்போது தகவல்கள் கிடைத்துக்கொண்டிருந்தன. போர் முடிந்த பின்னர்தான் நீண்ட இடைவெளியின் பின்னர் அவருடன் தொலைபேசி யில் பேசமுடிந்தது.

இணுவையூரின் பணிகள் போற்றப்படவேண்டியவை. கௌரவிக்கப்பட வேண்டியவை. ஒரு காலத்தின் பிரதிபலிப்பாக உள்ளவை. இந்த வேளையில், அவருடைய இலக்கியப்பணிகள் எவ்வாறாக இருந்துள்ளன என்பது மீண்டும் ஒருதடவை மீள மதிப்பிடப்படவேண்டும்.

வணிகத்துறைப் பட்டதாரியான இணுவையூர், அரசாங்க சேவை யில் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்திலேயே எழுத்துத் துறையிலும் ஆழ மாகக் கால் பதித்தவர். தமிழர்களின் உரிமைக்கான கோரிக்கை, ஆயுதப் போராட்டமாக வேகமடைந்து, போருக்குள் வாழ்வு அல்லது சாவு என தமி ழர்கள் இருந்த ஒரு காலகட்டத்தில்தான் அவருடனான தொடர்பு எனக்குக் கிடைத்தது. ஒரு எழுத்தாளன், நாடகக்காரன் என்பவற்றுக்கு அப்பால் ஒரு ஊடகவியலாளராக அவர் பரிணமித்ததும்தான் எமக்கிடையிலான உறவு-களை வலுப்படுத்தியது என நினைக்கிறேன்.

அரசாங்க சேவையில் பணிபுரிந்தபோது, வடக்கில் பல பகுதிகளி லும் சேவையாற்றிய அனுபவம் அவருக்குள்ளது. இதன்மூலம் பல்வேறு தரப் பட்ட மக்களுடனும் நெருங்கி உறவாடி, அவர்களுடைய பிரச்சினைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்க்கையின் ஏக்கங்களைப் புரிந்து கொண்டவர். குறிப்பாக போர், இடப்பெயர் வுகள்மக்களின்வாழ்க்கையைநிர்க்கதியாக்கிய போது, மக்களுடன் மக்களாக இருந்து செயற் பட்டவர்.

நிர்வாகத்துறையில் பல்வேறு தரப்பின ரையும் சந்தித்துப் பேசுவதற்கும், அவர்களு டைய பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு தீர்வைக் காண்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்து அவர் பணியாற்றியுள்ளார். பணி நிமித்தம் மக்களுடன் பழகி அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள்கூட, அவரது எழுத் துத் துறையில் பிரதிபலித்தன.

தன்னுடைய சிறுகதைத் தொகுதி ஒன்றுக்கான முன்னுரையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"என்னுடைய சுற்றாடலை, சமூகத்தை, இனத்தைப் பாதிக்கும் ஒவ்வொரு விடயமும் என்னை எழுதத் தூண்டுகின்றது. பொது வாக எழுத்தாளர்கள் சிறுமைகண்டு பொங்கி யெழும் இயல்பினராக இருக்கவேண்டும் என் பதே எனது கருத்து."

இணுவையூர் இந்தக் கருத்தை அழுத்தி உரைத்திருக்கின்றார். அவரது ஆக்க இலக் கியங்களும் இதனைப் பிரதிபலிப்பதாகவே இருப்பதை அவரது சிறுகதைகளைப் படிக்கும்போது புரிந்துகொள்ளமுடியும்.

தன்னைச் சுற்றியுள்ள சமூகத்திலிருந்து, அந்த சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளி லிருந்தே தன்னுடைய ஆக்க இலக்கியங் களுக்கான கருவை இணுவையூர் பெற்றுக் கொள்கின்றார் என்பது அவரது முன்னுரை யிலிருந்து மட்டுமன்றி, சிறுகதைகளும் எமக்கு உணர்த்துகின்றன. ஒரு எழுத்தாளன் மக்களிடமிருந்துதான் படித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு உதாரணமாக அவர் இருந்துள்ளார்.

"எழுத்தினால் சமூக மாற்றமோ வேறு எத்தகைய மாற்றமோ ஏற்படுகிறதோ இல் லையோ ஒவ்வொரு எழுத்தாளனும் தன் னைச் சுற்றியுள்ள விடயங்கள், சமூகம், இனம் போன்றவற்றில் அக்கறையுள்ள வனாக அவற்றின் மேம்பாட்டில் அக்கறை யுள்ளவனாக இருத்தல் அவசியம்" என்பதை வலியுறுத்தும் இணுவையூர், தானும் அவ்வாறே சமூக அக்கறையுள்ள ஒருவராக இருந்துள்ளாரென்பதை அவருடன் நெருங் கிப்பழகிய அனைவரும் தெரிந்திருப் பார்கள். அவருடைய எழுத்துக்களும் அவ்வாறே அமைந்திருந்தன.

அவருக்குள்ள இந்த சமூக அக்கறை யும், அர்ப்பணிப்பும்தான் பல துறை களில் அவர் பிரகாசிக்கக் காரணமாக இருந் துள்ளது. சிறுகதை, நாவல், மேடை நாட கம், பத்திரிகைத்துறை என பல்வேறு பரி மாணங்களில் தன்னுடைய திறமையை அவர் வெளிப்படுத்தினார். அவர் சார்ந்த மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் இவற்றின் மூலமாக வெளிக்கொணரப்பட்டன.

எழுத்தாளர் ஒருவர், ஒரு துறையில் மட்டும் முடங்கிக் கிடக்கக்கூடாது. பல பரி மாணங்களில் அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். அதற்கு ஏற்றவாறு பல துறைகளிலும் தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்தியவர் இணுவையூர்.

இலக்கியத்துறையில் தன்னுடைய பங் களிப்பை அவர் தொடர்ந்தும் வழங்க வேண்டும். அவரிடமிருந்து ஆரோக்கியமான பல விடயங்களை தமிழ் சமூகம் தொடர்ந் தும் எதிர்பார்த்திருக்கின்றது. அதனை அவர் சாதிப்பார் என்ற எதிர்பார்ப்புக்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. ராதேயன்
மூத்த ஊடகவியலாளர்.



நினைத்துப் பார்க்க பிரமிப்பாக உள்ளது. எல்லாமே நேற்று நடந்தாற்போல் இருக்கிறது. ஆனால் மூன்று தசாப்தத்திற்கும் மேலாக எம்மைக் கடந்துசென்றுவிட்டது.

மௌனமாக ஒரு பொழுதில் தனிமையில் எல்லாவற்றையும் நினைவில் மீட்டுப்பார்க்கும்போது வாழ்வின் மகத்தான பொழுதுகளின் அர்த்தங்களும் அதன்போதான நிகழ்வுகளும் இன்னமும் இளமையாக, சுவாரஷ்யம் குன்றாமல், இருப்பதை உணரவும் முடிகிறது.

இதுவும் இயற்கை அளித்த ஒரு கொடையாகவே எண்ணத்தோன்றுகிறது. மலரும் நினைவுகளில் ஊறித் திழைத்தலை விடவும் மகத்தானது வேறு உண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய சுகமான தருணங்களை மனதில் மீண்டும் சிலிர்க்க வைத்த நண்பர் சிதம்பரநாதனுக்கு (எல்லாரும் அவரை திருச்செந்திநாதன் என அழைத்தாலும் நான் அவரை சிதம்பரநாதன் என்றே அழைப்பது வழக்கம்) நன்றி.

மிக நீண்ட பெயருடைய எழுத்தாளராக முதலில் அவரை அறிந்திருந்தாலும், அவரை விடவும் அவரது தந்தையாரை நான் நன்கு தெரிந்து பேசிப் பழகும் வாய்ப்பினைக் கொண்டவனாக இருந்தேன்.

படித்துவிட்டு, இலக்கியம் பேசி, சினிமா பார்த்து, வீறாப்பு அரசியல் சமூகத்தை விமர்சித்து, திரிந்த எழுபதுகளின் கடைக்கூறுகளில் புரட்சிகரமான மாற்றுச் சிந்தனை கொண்ட கொள்கையாளராக எம்மை நாமே கற்பிதம் செய்துகொண்ட காலப்பகுதியில் அறிமுகமான நண்பர்களில் நண்பர் சிதம்பரநாதனும் ஒருவர்.

அப்போதைய நாட்களில் சிலவருடங்கள் நான் யாழ். மருத்துவமனையில் அமைந்திருந்த வைத்திய பதிவாளர் அலுவலக பிறப்பு இறப்பு பதிவுப் பிரிவில் பணியாற்றிய காலத்தில், யாழ் செயலகத்தில் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் உயர் அதிகாரியாக இருந்தவர் மதிப்பிற்குரிய சிதம்பரநாதன் ஐயா அவர்கள்.

கம்பீரமான, ஆளுமைமிக்க, அதே சமயம் கலகலப்பான சுபாவம் மிக்கவரான அவரிடம் நான் அலுவலக விடயங்கள் சம்பந்தமாக சந்திக்கும் வேளைகளில் நான் கற்றுக் கொண்ட விடயங்கள் அநேகம். பரிமாறிக் கொண்ட விடயங்கள் மிக அதிகம்.

அத்தையை ஒரு சந்தர்ப்பத்தின்போது தான் அவர் தனது மகன் தான் திருச்செந்திநாதன் எனக் கூறினார். அதன்பின்னர் நான் கீரிமலை சென்றுவிட்டு பஸ்ஸில் திரும்பும்போது என்னுடன் வந்த இலக்கிய நண்பர் அதே பஸ்ஸில் பயணித்து வந்த ஒருவரைக் காட்டி 'இவர்தான் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்' எனக் கூறினார்.

அவரை நேரில் பார்த்தது அன்று தான். அவர் அரச செயலகத்தில் பணியாற்றுவதாகவும் அறிந்துகொண்டேன்.

அதுமுதல் அவரது படைப்புகளில் இருந்து அவரது கலை இலக்கிய ஆளுமை குறித்து அடிக்கடி மதிப்பீடு செய்து கொள்பவனாகநானும்அப்போதையஎனதுஇலக்கியத் தோழர்களான சசிகிருஷ்ணமூர்த்தி, டானியல் அன்ரனி, பாலகிரி, ஜெயபாலன், புதுவை இரத்தினதுரை போன்ற பலரும் இருப்போம்.

அப்போது நாவலர் வீதியில் அமைந்திருந்த சிரித்திரன் பத்திரிகை அலுவலகம் எமது இலக்கியச் சந்திப்பிற்கான ஒரு பல்கலைக்கழகமாக விளங்கியது. பேராசிரியர்கள், பெரும் எழுத்தாளர்கள் முதல் அத்தகைய இளம் எழுத்தாளர்கள் என அனைவரும் அங்கு கூடுவோம்.

அப்போது ஒரு தடவை... கே.ஆர். டேவிட், திருச்செந்திநாதன் ஆகியோரின் சிறுகதைகள் குறித்து ஒரு நீண்ட கலந்துரையாடலுடன் கூடிய விமர்சனம் நடைபெற்றது எனக்கு நல்ல ஞாபகம். அதில் அமரர்கள் கெ. யோகநாதன், செம்பியன் செல்வன், குமார் தனபால் ஆகியோரும் கலந்துகொண்டமையும் நினைவில் உள்ளது. தொடராகவரும் எல்லா நினைவுகளையும் எழுதி மாளாது.

அப்போது நான் உட்பட பலர் முற்போக்கு இலக்கிய அணியுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்த போதிலும், திருச்செந்திநாதன் முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்கு என எந்த 'இஸத்'துக்குள்ளும் சிக்காமல் தனக்கு என ஒரு தனித்துவத்தை கடைப்பிடித்தார் என்பது நானறிந்த நிஜம். அமைதியான எந்தவித ஆர்ப்பாட்டமுமற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது படைப்பிலக்கிய முயற்சிகள் அவரை அவர் வழியில் அடையாளப்படுத்தி இன்று வரை நிலைத்திருக்க வைத்தமைக்கு அதுவே காரணம்.

70 முதல் 80 களின் நடுப்பகுதி வரை யான காலப்பகுதிக்கு நிறைய எழுதிய அவ ரது படைப்புகள் அவரை ஈழத்தமிழ் இலக் கிய பரப்பில் ஒரு தவிர்க்கமுடியாத அழுத்த மானபன்முகப்படைப்பாளியாகநிரந்தரஸ்தா னத்தை உருவாக்கிக் கொடுத்தது என்றால் மிகையல்ல.

1980களின் நடுப்பகுதியின் பின்னர் ஈழ விடுதலைப் போராட்டம் உத்வேகம் கொள் ளத் தொடங்கிய காலத்தில் எல்லா கலை இலக்கிய படைப்பாளிகளுக்கும் தமது கலை இலக்கிய கோட்பாடுகளை இலக்குகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய தவிர்க்கவே முடியாத சூழலை ஏற்படுத்தியது.

இந்த மாற்றம் குறித்து விரிவாக இங்கு குறிப்பிடமுடியாது விட்டாலும் அதை ஒரு வரலாற்று திருப்பு முனை என்று மட்டும் கூறிவிடலாம்.

அந்த திருப்புமுனைக் காலகட்டத்தில் தான் நானும் திருச்செந்திநாதனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் பணியாற்றும் அவசியமும் ஏற்பட்டமையை குறிப்பிட்டேயாகவேண் டும்.

சமூகப் பொறுப்புடனும், இன உணர் வுடனும் மானுடநேய விடுதலைச் சிந்தனை யுடனும் கலை இலக்கிய படைப்புக் கட மையை மேற்கொள்ளவேண்டிய காலக்கட் டளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புடன் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்த தருணம் அதுதான்.

'சாற்றும் கவின்கலைகள் யாவும் - சமு தாய ஏற்றத்தை முன்னெடுக்கும் ஏவுகணை களாகட்டும்' என்று பாடிய ஓர் கவிஞ னின் பாடல் வரிகளுக்கமைய ஒடுக்கப்பட்டு அழிக்கப்படும் மக்களுக்காக அவர்களின் விடிவிற்கான கலை இலக்கியப் பணியினை மனிதநேயமும் சுதந்திரச் சிந்தனையும் கொண்ட படைப்பாளிகள் மேற்கொள்ளத் தொடங்கிய வேளையும் அது.

அந்தப் படைப்பாளிகள் கலைஞர்கள் மற்றும் ஏனைய பல்துறைசார் அறிஞர்கள் அனைவருடனும் தோழமையுணர்வுடன் ஒரு இலட்சிய இலக்குடன், கடமையாற்றிய காலம் அது.

நெருக்கடிகள், கஷ்டங்கள், அழுத்தங் கள் எனப் பல்வேறு காலத்துயர் சுமக்க நேரிட்டபோதும், காலச்சுமையை எண்ணி அமைதியாக இயங்கிய மக்களுடன் மக்களாக வாழ்ந்த அனுபவமென்பது ஒரு ஒப்பற்ற வரலாற்று இலக்கியமாகும்.

அந்த வரலாற்று அனுபவத்தை முழுமை யாகப் பகிர்ந்து கொண்ட அனுபவப் பட் டறிவுக்கும் மூன்று தசாப்தத்திற்கும் மேலான வயதாகிவிட்டது.

ஒரு கலை இலக்கிய படைப்பாளிக்கு அத்தகைய பட்டறிவு அனுபவம் என்பது மிகப் பெரிய பலமாகும். அது திருச்செந்தி நாதனுக்கு கிடைத்த மிகமிகப்பெரிய ஆத்ம பலமாகும். கடந்துபோன சில காலங்கள் அவர் மௌனம் காத்து தன்னை ஸ்திரப்படுத்த எடுத்துக்கொண்ட தருணமாகவே எடுத்துக் கொள்ளமுடியும். இனி அவர் தன் மௌனத்தை கலைப்பதும் ஒரு வரலாற்று அவ சியமே! அதனை அவர் செய்யவேண்டும். செய்வார் என்றே நம்புகிறேன்...

ஈழத்தமிழ் கலை, இலக்கிய உலகம் நண் பர் திருச்செந்திநாதனின் மீளெழுச்சியை வர வேற்க காத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவைவளவன்
அறிவியல் நகர்
கிளிநொச்சி



ஒரு மனிதன் தனது வாழ்நாளில் தான் எதையாவது ஒரு நற் செயலைச் செய்தவன் என்று சக மனிதர்களால் பேசப்படுவதையோ அல்லது மற்றவர்கள் விரல்மடித்துக் குற்றம் கூறாது வாழ்ந்துகொண்டோமே! என்ற வகைக்குள் எனது வாழ்வு அடங்கியுள்ளதா? என்று தனக்குள் தானே கேள்வியை எழுப்பி வாழ்ந்துகாட்டினானா? அதனிலும் மேலாக எல்லோராலும்விதந்தோதற்கரியவனாகவாழ்ந்தும்எடுகோளாகமற்றவர்க்கு இவனைப் போல நீயும் வாழக்கற்றுக்கொள் என்று ஒவ்வொரு மனிதரும் "தன்னை மற்றவர்க்கான உதாரண மனிதனாகக் கைக்கொள்ளுமாறு வாழமுடிந்ததா?" என்று தனக்குத்தானே கேள்வியாகவும் பதிலாகவும் வாழ்ந்தால் வாழ்ந்து கொண்டிருந்தால் அவன்தான் மனிதம் நிறைந்த ஒரு மனிதனாக முடியும். இதுவே எனது மனிதம் பற்றிய அசைக்கமுடியாத பெரும் நம்பிக்கையாகும். உறுதியுமாகும்.

இக்கருத்துரையை நான் எழுதி என்பேனாவை நிறுத்தியபோது என் பேனா எதையோ முத்தாய்ப்பு வைப்பது போன்ற உணர்வு எனக்குள் எழுவதை உணர்ந்தேன்.

"மனிதன்" "ஆகா... எவ்வளவு மகோன்னதமான ஒரு சொல்" என்று உலக மகா கவிகளில் ஒருவராகிய மாயாகோவ்க்கி கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம். மனிதன் என்ற பதம் எந்த ருசியக் கவிஞனால்தான் சிறப்புற்றதா? என்றால் இல்லை... இல்லை என்றுதான் என்னால் கூறமுடியும். ஏன் என்ற கேள்வி உங்களில் பலரிடமிருந்து எழுவதும், என்ன இது இப்படி ஒரு பூடகமான சொல்லுக்குள் வளவைவளவன் நுழைந்து துளாவுகிறார் என்று மூக்கிலே விரலை வைக்கவேண்டாம்.

ஏன்? இன்று இந்த இதழில் இப்படி எழுத நேர்ந்துவிட்டமைக்கான காரணத்தை ஒரே ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். இத்தனை சிறப்புக்கள் பொருந்திய அல்லது சிறப்பைத் தாங்கிய ஒருவராக நிமிர்ந்து நிற்பவர்தான் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் என்ற உருவம். இவரிடம் அப்படி என்ன சிறப்பு? அல்லது பெருமிதம்? அதற்கு மேலாகவும் இவருக்கென என்ன பீடு என்று மண்டையைக் குழப்பிக்கொள்வதிலும் பார்க்க இந்தச் சிறிய பெயர்க்காரரான இணுவையூர் திருச்செந்திநாதனின் அறுபது வயதுச் சாதனை என்ன? அதையேதான் நான் கேள்வியோடு முன்வைத்துத்தேட, புரிந்துகொள்ளவும் தெரியாதவர்க்குச் சிறிதாவது புரியவைக்கவும் முயல்கின்றேன்.

மனித வாழ்வியலில் 25வது வெள்ளி விழா 50வது பொன்விழா 60வது வைரவிழா 75 பவளவிழா எனக் கொண்டாடப்படும் விழாக்கள் மனிதனுக்குள் பொதிந்துள்ள திறன்களை வெளிப்படுத்தக் காரணமான வயதுகளாக அல்லது ஆண்டுகளாக சிறப்புறுகின்றனவென்றால் அந்தச் சிறப்பு யாருக்கு? ஓ... அதுதான் "மனிதன்" மனிதனுக்கே அச் சிறப்பு எனவே அந்தச் சொல்லின் மகத்துவம் மனிதனோடு இயல்பாகவே ஒட்டிக் கொண்டே இருக்கின்றது. நாம் அதைச் சட்டைசெய்யாததால்தான் அந்த ருசியக் கவிஞன் "மனிதன்" மகத்தான் சொல் என்றான் என்பதை இடித்துரைத்து அந்தவகையில் இந்த அறுபது அகவைக்கார மனிதன் என்ன சாதித்தான்?

இந்த இணுவையூர் திருச்செந்திநாதன் ஒரு அரச ஊழியர். இளைப்பாற்றுச் சம்பளம் அல்லது ஓய்வூதியம் பெறும் ஒருவர். இதில் வேறு எதை இவர் சொல்ல விண்ணாணம் பேசுகிறார் என சில வாய்கள் முணுமுணுக்கும். அதில் ஏதோ ஒன்று இருப்பதை எண்ணியா பார்க்கின்றனர்...?

ஆங்கிலேயருக்குப் பின்னரான சமூக வாழ்வியலில் மலாயன் பென்சனியர், சிங்கப் பூர்ப் பென்சனியர் என்று கூறி மிகப் பெருமையாக தடாலடித்தவர்கள் தமிழர்கள். அந்தக் காலங்களில் அறுபது வயதுப் பென்சன் போல அறுபதாம் கல்யாணம் எனத் தமதான மணநாள் நினைவை கொண்டாடும் மரபும் தமிழ் மக்களிடையேதான் இருந்தது என்பதை பழைய இலக்கியங்கள்மூலம் அறியலாம். அந்த வழக்கம் மருவி இப்போது அறுபதாம் அகவை விழா... என மாற்றம் பெற்றுள்ளது என்பது மறுதலிக்கமுடியாத உண்மை. அது இப்போது நினைவு தெரியாதவர் போலாகி உறங்குநிலை. ஆனால் இந்தப் பென்சனியரான செந்திநாதன், அரச ஊழியத்தையும், பென்சனையும் தனது பேசு பொருளாக்கிக்கொள்ளாது இவன் ஒரு படைப்பாளி - ஒரு எழுத்தர் - ஒரு கதாசிரியர் - ஒரு பத்திரிகையாளன் - விமர்சகன் - எனப்பலதடங்களில் தன்னைப் பதித்து எடுத்து நிமிர்ந்தவன். (அவன் எனச் சொல்வது பெரியோர் - பெருமைக்குரியோரை அழைக்கும் மரபைக் கருத்தேந்தவேண்டும்) அந்தப் பதிப்பின் தடங்களின் தன்மை, வண்மை, வாண்மைகளை, இவன் தனது பென்சன் கூட்டை மூடும் அல்லது மூடிமறைக்கும் கூடாரமாக ஆக்கிக்கொண்டு அந்தக் கூடாரத்துக்குள்ளே குடிபோனான். வாழ்ந்தான், வாழ்ந்து கொண்டிருக்கின்றான். பிறரையும் துணையாக்கித் தொடர்ந்துகொண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுக்கு அழகோடு வளமான வாழ்த் கைத்துணைவி அழகான குழந்தைகள் அமைந்த அமைதியான நிம்மதியான வாழ்க்கை. உத்தியோகம் புருச இலட்சணம் மட்டுமன்றி மனைவி இலட்சணமுமாகிப் போன ஒருவன். கைகொட்டி பலே பலே என்று வாழ்ந்து விட்டுப் போகவேண்டியது தானே. "ஏபோட்டிக்காரொன்று வாங்கவும் வேணும் சோக்கான படத்துக்குப் போக வும் வேணுமென்று" அந்நாளைய பலே வாழ்க்கை முறைப் பாடல் கூறுவதுபோல வாழ்ந்து அனுபவித்து மகிழ்ச்சியின் உச்சி யில் வாழ்ந்து திழைத்து விட்டுப் போக வேண்டியதுதானே. வேறென்ன தேவை உனக்கு? இப்படி யார் யாரோவெல் லாம் கேட்டிருக்கலாம் பேசி இருக்கமுடியும். கேட்டுக்கொண்டும் இருக்கலாம். ஆனால் இந்தக் கேள்வி வரம்புகளுக்குள் அடங்கி நில்லாத வெள்ளமாக இவன் வரம்பை மீற அணைகடந்த வெள்ளமாய்ப் பாய்ந்து கொண்டான். இதுதான் அவனுக்கான தனித்துவச் சிறப்பு.

ஏனிந்தப் பாய்ச்சல். காலத்தின் கட் டாயமா? அல்லது தேவையா? அழகியற் கோலமா? இப்படிப் பலகேள்விகள் ஒன்று டன் ஒன்று மோதி எழுந்து விடைதேடிய போது அந்தத் தாடிக்காரக் கிழவன் "பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்" (குறள் 975) என ஒரு தமி ழர் வாழ்வியல் விதியை பெருமை என்ற பிரிவிற்குள் எழுதி வைத்து விட்டுப் போனாரே... சே... அந்த வள்ளுவக்கிளவனும் குறைஞ்ச ஆளில்லை... "பணியுமாம் என் றும் பெருமை" இப்படியும் ஒரு துணைச் சட் டத்தைக் கட்டளைபோல் எழுதியும் வைத்துவிட்டார். ஒருவகையில் உசார்குன் றிய தோற்றமாக இவன் உரு தெரிவது இல் லையா?!

என்ன இப்படிப் பெருமை, வள்ளுவர் என்றும் ஏதேதோ கூறிப் புளுகிறாரே இந்த வளவன் என்றும் குசுகுசுக்கலாம். இங்கே இந்தச் சம்பரி தன் பென்சன் வாழ்வுவளம் பெண்டில் பிள்ளை என்ற அளவில் நில்லாது ஏன் வேறு தடங்களுக்குள் கூடாரம் அடித் தார். அதுதான் அருமை உடைய பெருமைக் குரியவர் செயல் என்று அந்த வள்ளுவப் பெருந்தகையே கூறிப்போந்தார். அதை எப்படி நான் மறைக்க. மறைத்தால் சிதம்பர நாதனின் சிரிப்பே மதுரை எரித்த கண்ணகியின் சிரிப்பாகி என்மீது சீறாதோ? இவரது சிரிப்பு வெற்றுச் சிரிப்பல்ல. அழலாடிக்குண்டனாகி நின்று தீமைக்குப் பதில் கூறிய பெருஞ்சிரிப்பு. பசுமை நிறைந்த பண்பாட்டுச் சிரிப்புமாகச் சிந்தும் புன்னகையை அந்தச்சிரிப்பின் மகத்துவத்தை:

"புன்னகை மன்னா பொழுதெல்லாம் பூட(ப்)
பொன்நகை திருடர் கொள்வாராதலாலே
நன் நகையாய் நான் கொண்டேன் அந்தோ!
புன்னகை ஒன்றே போதும் எனக்கு" என்று

புன்னகைக்கள் புகுந்தனையோ? எனப் பாடவைத்த இந்த இணுவையூர் திருச்செந்தி நாதனை "முடிவல்ல ஆரம்பம்" என்ற குறு நாவலோடு சந்தித்துக் கொண்ட நட்பு ஆண்டாண்டுகாலம் எம் மண்ணிலெங்கும் இடம்பெயர்ந்த வாழ்வு இடர்சுமந்த வாழ் வாய் நோய் பற்றித் தாக்கிய காலமாகவும் தடம்பதித்துத் தடம்பதித்து வாழந்து நிறைந் தோம் எனத் தன் எழுத்துலகப் பணியோடும் பெருமையோடும் அகவை அறுபதை அடைந் தார்.

அவரது எழுத்தில் தேவர்கள் வந் தார்கள்... மிதவாதிகள் வந்தார்கள், சமூகத் தின் அடித்தள மனிதன் முதல் மேல்தட்டு மனி தர் வரை எவரையுமே விட்டுவைக்காத இந்தத் திருச்செந்திநாதனுக்கு திராவிடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியர் பேதங்களில் அதிக ஈடுபாடு இல்லாத போதும் "அச்சமென்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா" என்ற பாடலை வெகுவாக ரசித்துப் பேசுவார். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல் வரிகளும் சில இவர் குறிப்பிட் டுப்பேசியதுண்டு. "எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கு இல்லாமை இல் லாத நிலை வேண்டும். என்ற கண்ண தாசனின் அடிகளைக்கூட அதிகம் நேசித்துப் பழுத்த அரசியல் வாதிகள்போலவும் பேசி விட்டு இல்பான தன் புன்னகைக்குப் பங்கு கொடுத்துவிடுவார். இப்படியாக இவரது கைகளால் மனதால் தடம்பதித்த தடயங்களி லெல்லாம் என்றென்றும் பிரிக்கமுடியாது வாழ்ந்து கொண்டே இருக்கும் இந்தத் திருச் செந்திநாதன் அகவை அறுவதில் மீட்டிப் பார்த்தும் கேட்டும் தொடர்ந்து சென்று தன் வாழ்நாட் பயணத்தை அவர் தொடர நாம் அதனைப் பார்த்து மகிழ்வோம். அம்மகிழ்வை நிறைவேற்றிட அவர் புன்னகையே பதி வேடாய்ப் புரட்டிக்கொள்ள நிறையட்டும் ஒரு முற்றுப்புள்ளி. அதெப்படி முடியும்? மனித வாழ்வென்பது தொடர்கதைதானே. அப்படியானால் அடுத்த பவளவிழா நூற்றாண்டு விழா அனைத்தையுமே நிரா கரித்துவிடாத இந்த முற்றுப்புள்ளி? இப்படி யும் ஒரு கேள்வி எழுந்து நிற்கிறது. என்னால் அதற்கெல்லாம் முடியாதப்பா என்றா செந்தி நாதனால் சொல்லமுடியும்.

அறுபது வயதின்பின்தானே அறளை வருகிறது என்று அடிமட்டப் புத்தி சாலிகளும் முட்டாள் தனத்தின் முதல்வர் களும் கூறித்திரிகிறார்களே. இதுவும் உண்மை தானா? என்ற கேள்வி எழுந்தாலும்... உலகைப் பாருங்கள் நாட்டுத்தலைவர்கள் பிரதமர்கள் சனாதிபதிகள் என்ற அனைத்து முதன்மைப் பதவிகளிலும் இன்று இருப்பவர்கள் (60) அறுபது வயதின் மேற்பட்டவர்களாகவே உள்ளனரே. அப்படியானால் (60) அறுபது என்பது மிகமிகப் பெறுமதி மிக்கதென்பது முடிந்தமுடிவுதான். அதனால்தானேஉலகோர் அதற்கு வைரவிழா, முதிர்ச்சி அல்லது முதுமை என மதிப்பேற்றி உயர்த்திப் பேசு கின்றனர். எனவே முட்டாள் தனத்தனி முதல்வர்களின் முணுமுணுப்பு முற்றத்திற்கு வராத முடத்தெங்கு என விட்டுவிடுவோம். இங்கே மீண்டும் ஒரு முறைபாருங்கள் திருச்செந்திநாதனின் இந்த அறுபது வயதுத் தோற்றம், அதே புன்னகை எளிமை யான கம்பீரம்மிக்க நடை கெடுபிடி களற்ற, விதண்டாவதமற்ற மேதகு சிந்தை யும் தெளிவான பேச்சும் அவருக்கான தனித் துவச் சிறப்பாகச் சுட்டி நிற்பதை நான் கூறா விட்டாலும் புரிந்துணர்வுடையோர் புரிந்து கொள்வரன்றோ? எனவே இந்தக் கொடையை இயற்கை எல்லோருக்கும் கொடுத்தாலும் புன் னகையும் பீடுநடையம் தெளிவும் எவரை யும் அனைத்துவக்கும் பண்பும் அறிவியற் செழுமை மிக்க பார்வையும் ஒருங்கே திருச் செந்திநாதனிடம் குடி இருப்பது மறுதலிக்க முடியாத உண்மை. அத்தோடு அவர் தலை யில் இடையிடையே மின்னலடிக்கும் வெள்ளிக் கேச வெளிப்பாடு அடுத்தகட்ட நகர்விற்கான கட்டியம் கூறி மேலும் அவரை பெருமைப்படுத்த விரும்புவதையும் கண்டு கொண்டு நாம் அறுபதாவது வயதினை மேன்மைக்குரியதாக்கிக்கொண்ட இணுவை யூர் சிதம்பர திருச்செந்திநாதன் புன்னகை மாறாத பீடும் பெருமையும் குன்றா இளமை யோடும் எல்லோர்க்கும் எல்லாத்துறை யினராலும் இவன்போல யாருளர்? எனக் கேட்க வைத்து இல்லறத்துணையோடு வாழ் வாங்கு வாழ வேண்டுமென வாழ்ந்தொளிர வாழ்த்துகின்றோம் வாழ்க வளமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.கே. துரைசிங்கம்
பிரான்ஸ்



இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்களை அவரது படைப்புகள்தான் மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்த்திருக்கிறது. யாழ். அரசசெயலகத்தில் அவர் கடமையாற்றுவதால் அடிக்கடி எண்பது தொண்ணூறுகளில் சந்தித்திருக்கிறேன், பேசியிருக்கிறேன், பழகியிருக்கிறேன். அவரது படைப்புகளை படித்து சிறுகதைகளின் நெளிவு சுளிவுகளை அறிந்திருக்கிறேன். படைப்புகளை வாசித்த பின்னர் அவரை நேரிலே கண்டு பேசி பாராட்டுவதுண்டு. ஒரு புன்சிரிப்புடன் அதனை ஏற்றுக்கொள்வார். நான் இப்பொழுது பிரான்ஸில் வாழ்ந்தாலும் அவர் போன்ற நண்பர்களை நினைத்துப் பார்ப்பதுண்டு. இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனை நினைக்கும்போதும் பழகிய நாட்களை அசைபோட்டுப் பார்க்கும் போதும் அவரது சிரித்த முகமும் அமைதியான வார்த்தைகளும்தான் என்மனக் கண்முன் வந்துநிற்கும்.

சமகாலப் பிரச்சினைகளை யதார்த்தமாக எழுதுவதில் அவர் வல்லவர். நான் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் அரச திணைக்களங்களுக்கு அடிக்கடி செல்வது வழமையான கடமையாக இருக்கும். சாதாரண ஊழியரிலிருந்து உயிர் அதிகாரிகள் வரை அனைவருடனும் பழகியிருக்கிறன். ஆமி எங்கை நிக்குது, பொடியள் என்ன செய்யிறாங்கள், யுத்தநிறுத்தம் வருமா, பேச்சுவார்த்தை நடக்குமா என்றெல்லாம் கேள்விகள் கேட்டுக் குடைந்துகொண்டேயிருப்பார்கள். இதற்கும் மேலாக சிதம்பரதிருச்செந்திநாதன் போன்ற படைப்பாளிகள் சிலருடன் பழகும் சந்தர்ப்பங்களும் கிடைக்கும்பொழுதுகளில் ஆக்க இலக்கியங்கள் பற்றி உரையாடுவோம். சிறுகதைகளில் ஆவர்வமும் ஈடுப்பாடும் இருப்பதால் நீரும் எழுதலாமே என்று என்னையும் உற்சாகப்படுத்துவார். ஏற்கனவே கதைகள் எழுதும் பழக்கம் என்னிடம் இருந்தபோதும் அது பற்றி அவரிடம் கூறவில்லை. ஏனெனில் அவரது கதைகளுக்கு முன்னால் எனது சிறுகதைகளை ஒப்பிட்டுப்பார்க்க முடியாது. அவரது கதைகள் எல்லாம் தெளிந்த நீரோடைபோலிருக்கும். தேவையற்ற வார்த்தைப் பிரயோகம் இருக்காது. எடுத்துக்கொண்ட கருவை புரிந்துகொள்ளும் வகையில் வாசகர்களுக்கு வழங்குவதில் வல்லவர். இந்த அற்புதமான மனிதனை நீண்டகாலம் சந்திக்கமுடியவில்லை என்று கவலைப்பட்டன். எனது சிறுகதை தொகுதிக்கு முன்னுரை எழுதியதன் மூலம் மீண்டும் அவரது எழுத்துக்களை தரிசித்தேன். அவரை நேரில் சந்தித்தது போலிருந்தது. யுத்த நெருக்கடியால் வன்னிப் பிரதேசத்தில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டபோதும் எழுத்துடனே அவரது பயணம் தொடர்ந்தது. இணுவையூர் தந்த இளவலை வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணைந்து வளர்ந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி வ. மகேஸ்வரன்
பேராசிரியர், துறைத்தலைவர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் - என்ற நீண்ட பெயர் கொண்ட என்னூரான் நல்ல கதை சொல்லி ஒருவர் மீதான அனுபவப் பதிவும், அவன் புனைவு வெளியின் மீதான அவதானிப்புமாக இந்தக் குறிப்பை எழுத முனைகிறேன்.

இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் (இனி திருச்செந்தி) என்ற பெயர் ஒரு பண்பாட்டுப் பதிவு - ஊர்ப்பெயர், தந்தையின் பெயர், இயற்பெயர் என மூன்று பகுதிகளைக் கொண்டது. அப் பெயர், ஊரபிமானம், தந்தைப் பாசம், மதிப்பு, தன்னடையாளம் என்ற பல தளங்களைக் கொண்டது அப்பெயர். பண்டைக்காலத்து ஆவ ணங்களிலும், கல்வெட்டுக்களிலும் இவ்வாறான பெயர்கள் இடம் பெற்று, அன்றைய பண்பாட்டுச் சுட்டிகளாக அவை இன்றும் விளங்கு கின்றன.

நமது ஊர் இணுவில் (இணுவை) வலிகாமம் தெற்கிலுள்ள ஒரு சிறு விவசாயக் கிராமம். சிறு விவசாயம், சுருட்டுக் கைத்தொழில் எனப் பொருளியல் முயற்சிகளும் எண்ணிலடங்காத கோயில்களும் என ஆத்மிகப் பண்பாடும் கொண் டது அது. மேலாக இசை, கூத்துக் கலைஞர்களின் தாயகமும் அதுவே. அநேகம் படித்தவர்கள் ஆத்மஞானி களும், பண்டிதர்களும் தான். இந்தவகையில், ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் என்போரை விரல் விட்டு எண்ணிவிடலாம். இணு வைச் சின்னத்தம்பிப் புலவர், அம்பிகைபாகர், சதாசிவ ஐயர், கணபதிப்பிள்ளை, சிற்றம்பலம் பண்டிதர் சபா ஆனந்தர், பண்டி தர் திருநாவுக்கரசு என அந்தப் புலமைத்துவப் பரம்பரை நீளும். எனினும், சுமார் ஐம்பது வருடங் களுக்கு முன்னர் எமக்கு விருத் தெரிந்த காலங்களில் எழுதியவர்கள் ச.வே.பஞ்சாட்சரம், க.செ. நட ராசா, கே.எஸ். ஆனந்தன் ஆகி- யோரே. இவர்களுள் ச.வே.ப. கவிதை வெளியிலும் க.செ.ந. கவிதை, ஆய்வு வெளியிலும் கே.எஸ்.ஆ. புனைவு வெளியிலும் பிரகாசித்தனர். ஜனரஞ்சகப் பத்திரி கைகளில் அவர்களது எழுத்துக்கள் பிரசுரமாயின. அவர்கள் நாடறிந்த வர்களாக விளங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைத் தொடர்ந்து புனைவு வெளியில் தன்னை தமது ஊரின் அடையாளமாக இனங்காட்டியவர்தான் திருச்செந்தி, முதிரா இளைஞனாக, அவரது கதைகளில் வரும் பெல்பொட்டம், நீண்ட தலைமுடி, துவிச்சக்கரவண்டியில் திருவிழா, சினிமா என ஊர் அளப்பு, அந்த வயதுக்கேற்ற பாலியல் இனக்கவர்ச்சி, காதல் இளமையின் சில குறும்புத்தனங்கள், இத்தியாதி. இத்தியாதி நிறைந்த அந்த விடலைப்பருவத்திலேயே எழுத்துலகில் பிரவேசித்தவர் அவர். அந்த வகையில், திருச்செந்தி மீது அக்காலத்தில் வடபுலத்தில் ஏ.எல். மாணவர்களாக இருந்த எமக்கு ஒரு கிரேஸி இருந்தது. எம்மை, எமது எண்ண அலைகளைத் திருச்செந்தி பிரதிபலித்தார். முதிரா இளமையில் நாம் கொண்ட அழியாத கோலங்களை திருச்செந்தியில் நாம் கண்டோம். அகவே, எம்மத்தியில் திருச்செந்திக்கு ஒரு ஹீரோவுக்குரிய மதிப்பு இருந்தது.

ஆனால் திருச்செந்தி மாறாத புன்னகையுடன், துவிச்சக்கரவண்டியில், நீண்ட தலைமுடியுடன் அமைதியாக வலம் வந்தான். திருச்செந்தியின் விம்பம் அவ்வாறுதான் என்னுள் முதலில் விழுந்தது. (என்ன ஆச்சரியம் இன்றுவரை பல தளங்களில் நான் அவனைத் தரிசித்திருக்கிறேன். அதே மாறாத சிரிப்பு, அமைதி. அதுதான் அவனது பலம் என நினைக்கிறேன்.) அந்த பண்பாட்டின் வேர் அவனது தந்தை வழி வந்தது என நினைக்கிறேன்.

திருச்செந்தியின் தந்தை - சிதம்பரநாத பிள்ளை அரச உத்தியோகத்தர், கம்பீரமான தோற்றம் கொண்டவர் கோயில், குளம் என பக்தியோடு அலைந்தவர், அவர் சிவகாமி அம்மன் கோயிலில் அல்லது இணுவில் கந்த சுவாமி கோயிலில் கணீரென்ற குரலில் புராணம் பாடினால் அது இணுவில் முழுக்க இனிக்கும். (அவர் ஒரு நடிகரும் கூட) யாழ்ப்பாணத்துக் கிராமம் ஒன்றில் கிளறிக்கல் வேலை பார்க்கும் அரச உத்தியோகத்தர்கள் குட்டி இளவரசர்களாக உலா வந்த காலமது. ஆயின், திரு சிதம்பரநாதபிள்ளை லோங்ஸ் போட்டு வந்தாலென்ன, பளீரென்ற வெள்ளை வேட்டி சால்வை கட்டிக் கோயிலுக்கு வந்தாலென்ன, அந்தச் சிரிப்பு, அனைவரையும் மதிக்கும் பண்பு வெறும் வார்த்தையில் அடங்காதது. அந்தச் சிரிப்பும் எளிமையும் திருச்செந்தியிலும் தொற்றிக்கொண்டது என்பேன். தந்தை மீது தனையன் கொண்ட உறவை, மதிப்பை தனது முன்னுரைகளின் வழி அவர் பதிவு செய்வதன் மூலம் அறியமுடிகிறது. மாறாக - அவரது 'என்னுடையதும் அம்மாவினுடையதும்' - என்ற சிறுகதைத் தொகுதியின் முதற்கதையான 'நல்ல மேய்ப்பனும்' என்ற கதையில் நான் சிதம்பரநாதபிள்ளையையும் திருச்செந்தியையும் நெகிழ்வுடன் தரிசிக்கிறேன். திருச்செந்திக்கு ஞாபகம் இருக்கக் கூடும் அவரது தந்தை எமது ஊரிலுள்ள ஒரேயொரு சினிமாத் தியேட்டரான காலிங்கன் தியேட்டரை அவருடைய மாமனார் குத்தகைக்கு எடுத்து சில காலம் நடத்தினார். அப்போது மாலை வேளைகளில் வெள்ளை வேட்டி, நஷனல் (வாலாமணி) அணிந்து திருச்செந்தியின் அப்பா மருதனார் மடத்திலிருந்து காலிங்கன் தியேட்டர் வரை கே.கே.எஸ். வீதியோரமாக நடந்துவரும் அந்தக் கம்பீரமான காட்சி என் கண்முன் இன்றும் விரிகிறது. ஆனால் அவர் அப்போதும் புன்னகை மன்னனாகவே வலம் வந்தார். திருச்செந்தியின் உருவாக்கத்தில் அவர் பல தளங்களிலும் மிகப் பெரும் பலமாக விளங்கினார் என்பேன்.

திருச்செந்திக்கும் எனக்குமான உறவு ஆரம்பநாட்களில் வெறும் அறிமுகப் புன்னகை மட்டுமே. ஏ.எல். முடிந்து நான் பேராதனை வந்துவிட்டேன். அவர் அதற்குள் நாடறிந்த இளம் எழுத்தாளராகி அரச உத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தராகியும்விட்டார். எண்பதுகளின் முதற் கூறில் நான் பேராதனையில் இருந்து பட்டதாரியாகி வெளிவந்து சில காலம் ஊரில் 'சும்மா' இருந்தபோது, இளம் நண்பர்கள் எல்லோரும் கூடி 'இணுவில் கலை இலக்கிய வட்டம்' என்ற அமைப்பை அங்குரார்ப்பணம் செய்தோம். துரை எங்கரசு, திருச்செந்தி, ஸ்ரீகணேசன், மகாலிங்கம், சிவசிதம்பரம் எனப் பலர் அதில் இணைந்தோம். பெரும்பாலும் இடதுசாரிச் சிந்தனை உடையவர்களே அதில் இணைந்தோம். இலக்கியக் கூட்டங்களை நடத்தினோம். புதிய நூல்களைப் பரிமாறி வாசித்தோம். கோகிலா மகேந்திரனின் முதல் சிறுகதைத் தொகுதியின் விமர்சனக் கூட்டம் தான் முதலில் நடந்தது. நானும், விமர்சன உரை நிகழ்த்தினேன். சேரனின் கவிதைத் தொகுதி ஒன்றின் கலந்துரையாடலும் இடம் பெற்றது. பாரதி விழாவை மிகப்பிர மாண்டமான முறையில் நடத்தினோம். அவ் வாறாக இயங்கிய பொழுது தான் திருச் செந்தியுடனான இணைப்பு நெருங்க நேர்ந் தது. பின் நீடித்தது. மீண்டும் நான் தொழில் நிமித்தம் கொழும்பு, பேராதனை என வாழிட மாற்றம் கொண்டேன். இடையில் உலகறிந்த யுத்தமும் நெருக்கடிகளும் ஏற்பட்டபோது தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. திருச் செந்தி மண்ணுடனும் மக்களுடனும் வாழ்ந் தார். எழுத்துப் பங்காளியானார். அவர் தனக் கான ஒரு தடத்தை வரையறை செய்து கொண்டு பயணித்தார். அவரது 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும்' என்ற சிறுகதை 1985இல் வீரகேசரியில் பிரசுரமான போது அவுஸ்திரேலியப் பண்ணை ஒன்றின் சித்திரிப்பின் நேர்த்தியை வாசித்துவிட்டு திருச்செந்தி அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்துவிட்டார் என்று கூட நான் நினைத்தேன். ஆனால் அவர் பெயரவில்லை என்பதை பின் அறிந்தேன்.

திருச்செந்தியை இடைப்பட்ட இக்கால வெளியில் சந்தித்த தருணங்கள் குறைவு. சந் தித்த போதெல்லாம் அவன் மாறாத புன்னகை யுடன் தனக்கான கருத்துநிலைத் தளத்தைக் கொண்டிருந்தான். நோயின் தாக்கத்தால் சற்று மெலிந்து இருந்தான். என்னுள் என்றும் கனன்றுகொண்டிருந்த எனது இலட்சியத்தை அவன் அடிக்கடி நினைவுபடுத்தினான். அந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்று ஆர்வமூட்டினான். நெருக்கடியான யுத்தச் சூழல் ஒன்றில் நான் ஆசிரியர்களுக்கான பாட விதானம் தொடர்பான ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ள கிளிநொச்சி சென்றபோது, அப்போது பிரபலமாயிருந்த 'பாண்டியன் உணவகத்தில்' அவனைச் சந்தித்த வேளை யும்என்நிலைகண்டுமகிழ்ந்து, இதையேஅவன் வற்புறுத்தினான். தன் எழுத்து முயற்சிகள் பற்றியும், கடமைச் சுமைகள் பற்றியும் விபரித் தான். இப்போ எல்லாம் ஓய்ந்துவிட் டது. திருச்செந்தியும் - நமது தாலாட்டுப் பாடல்களில் 'ஓடு மட்டும் ஓடி ஓய்ந்த இடத்தேபள்ளி கொண்டான்' என்று கூறுவது போல - அவன் ஓடு மட்டும் ஓடினான். ஓய்ந்த இடத்தும் உயிர்த்தான். ஓர் அமைதியான சூழலில் நான் அவனை அவனது இல்லத்தில் நண்பன்சோதிலிங்கத்துடன்சந்தித்தேன். அனு பவங்களின் பெட்டகமாகத் திருச்செந்தி மனைவி மக்கள் புடை சூழ ஆனந்தமான சம் பாசனை. பிள்ளைகள்கல்வியில்தேறிவிட்டார் கள். அவர் ஓய்வு நிலையில், மனைவி மட் டும் இன்னமும் தொழிலில்... திருச்செந்தி யின் உரையாடலில் பல தகவல்கள் கொட் டிக்கிடந்தன. கொள்கை, இடப்பெயர்வு, அவ லம், யுத்த தரிசனம், அகப்புற முரண்நிலை கள் என அவை விரிந்தன. நான் கூறினேன் - திருச்செந்தியிடம் பல நூறு கதைக் கருக்கள் உள்ளன. நீர் எழுத வேண்டும். 'சகல தையும்' என்றேன். அவன் அந்த மாறாப் புன்னகையுடன் நான் ஆதரவு தந்த கொள்கை தோற்றுவிட்டது என்பதற்காக, அதனைக் காட்டிக்கொடுப்பதும்விமர்சிப்பதும்துரோக மல்லவா? என்றான். அதிகாரங்களை அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவிக்கும் அளவிற்கு அனுபவித்துவிட்டு சந் தர்ப்பம் வந்தபோது - கொள்கையை மாற்றி யவர்களை நானறிவேன். ஆனால், திருச்செந்தி கொள்கைப்பிடிப்பாளன். எழுத்துப் போராளி மட்டுமே. அன்றும், என்றும் நிதானம் தவற வில்லை. மடியில் கனமில்லை, அதனால் அவ னுக்குப் பயமும் இல்லை. திருச்செந்தி இது வரை ஐந்து நாவல்கள், மூன்று சிறுகதைத் தொகுதிகள் என எழுத்து அறுவடை செய் துள்ளார். எனினும் எழுத்துலகப் பிர வேசம் முதல் இன்றுவரையான காலநீட்சிப் படி பார்த்தால் அவர் எழுதிக் குவித்திருக்க வேண்டும். நல்லவேளை அவர் அவ்வாறு செய்யவில்லை. நிதானமாக அவரது எழுத்து முயற்சிகள் நடந்தேறின. ஆயின், காலவரை யறை செய்து அவரது எழுத்துக்களை பரி சீலனை செய்யும்போது, காலமாற்றங்களும், கருத்து மாற்றங்களுமாக அவை பல பதிவு களைக் கொண்டுள்ளன என்பதை அறிய முடி யும். முதிரா இளைஞன் ஒருவனின் எழுத்துல கப் பிரவேசம் பல தளங்களில் மாற்றம் பெற்று அவை அனுபவங்களாகி முதிர்ச்சியுற்றதன்மை யையும் அவதானிக்கமுடியும். எனவே இவற் றைச் சற்று விரிவாக நோக்குவது அவசிய மாகின்றது.

திருச்செந்தி சிறுகதையூடாகத்தான் எழுத்துலகில் பிரவேசம் செய்தார். எனி னும், அவரது நாவல்களே முதலில் அச்சுருக் கொண்டன. அதுவும் யாழ்ப்பாணத்துப் பத் திரிகைகளில் தொடராக வந்த பின்பே அது நிகழ்ந்தது. அந்த வகையில்,

என்றாவது ஒரு நாள் (1981)
முடிவல்ல ஆரம்பம் (1988)
இருள் இரவில் அல்ல (1990)
முள்முடி மனிதர்கள் (1991)
மீண்டும் புதிதாய்ப் பிறப்போம் (1992)
எனக் கால ஒழுங்கில் வெளிவந்தன.

தாரமிழந்த நேர்மையான ஆசிரியன் ஒருவருக்கும் அறியாப் பருவத்தில் பாலியல் வன்மத்துக்கு உட்படுத்தப்பட்டு வாழா வெட்டியாக வாழும் பெண்ணுக்கும் இடையி லான காதல் பற்றியது. 'என்றாவது ஒருநாள்'

யாழ்ப்பாணச் சமூகத்தின் அவலங்களில் ஒன்றான சீதனக் கொடுமை, முதிர்கன்னிகள் இளைஞர்களின் இரண்டுங் கெட்டான் நிலை பற்றிப் பேசுவது 'முடிவல்ல ஆரம்பம்'

காதலித்து, உறவுகள் துறந்து ஓடிப் போனபெண், பின்வாழாவெட்டியானபோது அவள்எதிர்கொள்ளும்வன்மம்நிறைந்தசவால் கள் பற்றியது 'இருள் இரவில் அல்ல'

சீரான கல்வி, நல்ல வேலைவாய்ப்பு என அமையாத முதிரா இளைஞன் ஒருவனின் நடத்தைக் கோலம் பற்றியது 'முள்முடி மனி தர்கள்'

இலங்கையில் போர்ச்சூழலை முகங் கொண்டு அவலப்படும் குடும்பங்களின் பிரச் சினைகளும், அதில் பெண்கள்படும் அவலங் கள் பற்றியதுமான விபரிப்புச் சார்ந்தது. 'மீண் டும் புதிதாய்ப் பிறப்போம்'

மேற்குறித்த ஐந்து நாவல்களையும் அதன் கால ஒழுங்கில் வைத்து நோக்கும் போது நாவல்களினதும், நாவலாசிரியரதும் வளர்ச்சியும் தொடர்ச்சியும் பற்றி அறியமுடிகி றது. அதாவது நாவல்கள் யாழ்ப்பாணத்துச் சமூக அசைவியக்கத்தின் போக்கைப் படம் பிடித்துக் காட்டுவனவாகவும் எழுத்தாளரது எழுத்தாளுமையின் வளர்ச்சியை இனங் காட்டுவனவாகவும் அமைகின்றன.

முதல் நாவல் ஒரு கற்பனாவாதம் கலந்த கருத்தியல் சார்ந்தது. அதில் தர்க்கம் இல்லை. ஆனால் சமூக யதார்த்தம் இருந்தது. பாத்திரங் களும், அவற்றின் போக்குகளும் பெரும் பாலும் அதீத தன்மை கொண்டன. எனவே செங்கையாழியான் குறிப்பிடுவதுபோன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முதிரா இளமையின் அனுபவக் குறைப் பாட்டின் வெளிப்பாடு என்றுதான் கூற வேண்டும்.

'இருள் இரவில் அல்ல' என்ற மூன்றா வது நாவலிலும் இதே சாயல் காணப்படு கின்றது. 'கதை கட்டுதல்' (சிலவேளை வாரப் பத்திரிகையின் விற்பனை உத்திக்காக எழுத் தாளர்கள் இவ்வாறு எழுதுவதும் உண்டு. அது 'கல்கி'யில் இருந்து தொடர்வது) என்ற போக்கை இதில் அவதானிக்கலாம். வாழா வெட்டியான விதவைப் பெண் படும் அவலங் களைக் கூற வந்த ஆசிரியர் அவள்மீது கண்கொத்திப் பாம்புகளாக ஆண்களும், ஆண் களுக்கு மேலாகப் பெண்களும் இழைக்கும் வன்மங்கள் சார்ந்ததாக அக்கதை அமைகி றது. மகன் காமுகனாகவும், தந்தை நேர்மை யானவராகவும் சம்பந்தமில்லாமல் உலவுகின் றனர். மேலாக தங்கலட்சுமி என்ற பெண் ணின் குடும்பத்தின் ஒழுக்கக் கேடுகள் பற்றி யும்விலாவாரியாகவிபரிக்கின்றார். ஒரு பெண் ணைக் காப்பாற்றப் பல பெண்கள் காவு கொள் ளப்படுகின்றார்கள். சில இலட்சிய புருசர் களும் வந்து போகின்றார்கள் அவ்வளவே. இதனால் பத்திரிகையின் விற்பனைச் சுழற்சி அதிகரித்திருக்கும் என நம்பலாம். ஆயின் திருச்செந்தியை அது இனங்காட்டவில்லை.

'முடிவல்ல ஆரம்பம்' என்ற நாவலே திருச்செந்தியின் இருப்பை இனங்காட்டு கின்றது எனலாம். யாழ்ப்பாணச் சமூகத்தின் தொடர்ச்சியான அவலங்களுடன், போராட் டச்சூழலும்இணைந்துவிட்டநிலையில்நடை பெற்ற சம்பவங்களே இதன் கரு.

யாழ்ப்பாணச் சமூகத்தின் ஆழமான குடும்ப உறவுகள், பாசம், யாழ்ப்பாணக் கன்னிகளது திருமணங்களுக்கான தடைகள், போராட்டச் சூழலின் ஆரம்பநிலை முதலி யவை மிகவும் துல்லியமான பாசவலையினு டாக நுணுக்கமாகப் பின்னப்பட்டுள்ளது.

ஒரேஒரு தம்பி போராளியாகிவிட்டால் அக்காவுக்குச் சம்பந்தப்பேச்சு நிகழ்கிறது. தம்பியின் ஞாபகம் அக்காவுக்கு அடிக்கடி வருகிறது... அதுவும் தம்பி அக்காவின் திருமணத்தில் மாப்பிள்ளைத் தோழனாக வர பெரு விருப்புக் கொண்டிருந்ததை அக்கா அடிக்கடி நினைத்துப் பெருமூச்சு விடும் போது நாமும் அதனுள் இணைந்து கலங்க வேண்டியுள்ளது. 'மாப்பிள்ளைத் தோழன் கனவு' யாழ்ப்பாணத்துச் சம்பிரதாயத்தில் ஒரு நெகிழ்வானதும் மரபு சார்ந்ததுமான நிகழ்வு என்பதை யாரும் அறிவர். போராட்டச் சூழலை சமூக யதார்த்தமாக்கி, அதனை மக் கள் மயப்படுத்தும் போக்கு அதில் தலை தூக்குகின்றது. கதையின் முடிவும் அவ்வா றாகத்தான் அமைகின்றது.

முள்முடி மனிதர்களில் தனிப்பட்ட ஒரு முதிரா இளைஞனின் விரக்தியான வாழ்வு சித்திரிக்கப்படுகின்றது. படிப்பு நிறைவேற வில்லை; மூத்த அண்ணர் வெளிநாட்டில்; வீட்டில் மூன்று சகோதரிகள்; நல்ல தொழில் வாய்கவில்லை இதனால் விரக்தியின் விளிம் பில் தள்ளப்படட இளைஞன், மதுவில் தஞ்ச மடைவதாக அது அமைகிறது. வெளிநாடு களின் கதவுகள் அகலத்திறக்காது போயி ருந்தால் ஒவ்வொரு யாழ்ப்பாணத்து இளைஞ னும் இவ்வாறான விரக்தி நிலைக்கே தள்ளப்பட்டிருப்பான் என்பது தான் உண்மை. மேலும், யாழ்ப்பாணச்சமூகத்தின்மேலோங்கு நிலையில் நல்ல தொழில்கள் என மதிக்கப் படுபவை டாக்டர், எஞ்சினியர் எனத் தொடங்கி அது ஆசிரியர் என்று இறுதியில் நிறைவுபெறும். ஆயின் ஒரு கடைச்சிப்பந்தி என்பது மிகவும் கீழ்நிலைத் தொழில் தான் (அதனை நமது சமூகம் அவ்வாறுதான் மதித்தது. அதனால் பெறுகின்ற வருமான மும், இதர சலுகைகளும் காரணமாக இருக்கலாம். எனினும் இவை ஒரு வகையில் ஒதுக்கு நிலைத் தொழில்களாகவே சமூகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் மதிக்கப்பட்டன.) ஆயின், திருச் செந்தி அவ்வாறான ஓர் இளைஞனை அனுதாபத்துடன் நோக்குகின்றார். அவனது தனிமனித அவலத்தை மிக நெருடலுடன் விபரிக்கின்றார். வீட்டில் என்றால் வெளிநாடு போன அண்ணன் பெரிது; கடையில் முதலாளி யின் கெடுபிடிகள்; குறைவான சம்பளம், அரசியல் நெருக்கடிகள் இந்த அழுத்தங்களின் வெளிப்பாடுதான் அவனை மதுவை நாட வைக்கின்றது. அவன் பொறுப்பற்ற இளைஞ னாக வலம் வருகின்றான். இந்திய அமைதிப் படையின் கெடுபிடிகளும் கதையோட் டத்தினூடாகப்புலப்படுத்தப்படுகின்றன. பல இளைஞர்கள் மீது திணிக்கப்பட்ட இவ்வா றான சமூக அழுத்தங்கள் காரணமாக இளை ஞர்கள் இரண்டுங்கெட்டானாக, அல்லது இன்னோர் முடிவைத் தீர்க்கமாக எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் என் பதை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றவதுபோல சொல்ல முனைகிறார்.

'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்' என்ற நாவல் போர்ச்சூழலால் ஏற்பட்ட சமூக அவ லங்களை நேரடியாகவே பேசுகின்றது. அமை திப்படை போய் இலங்கை இராணுவம் மீண் டும் தலைதூக்கிய காலத்தைய நிகழ்வுகள் இதில் பதிவாகியுள்ளன. குண்டுவெடிப்புக் கள், விமானத் தாக்குதல்கள், செல்லடிகள் என யுத்த அனர்த்தங்கள் நிகழ்ந்தபோது உள்ளூர் இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. அந்த இடப் பெயர்வுகளை மையப்படுத்தியே கதை நகர் கின்றது. மூன்று குடும்பங்களை இந்த நாவலில் இணைத்துக் காட்டுகின்றார் அவர். ஒன்று, யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பில் தொழில் முறையாலும், வெளிநாட்டுப் பண வரவாலும் பொருளியலில் மேம்பட்ட குடும்பம், மற் றையது விவசாயப் பின்புலமுள்ள ஏழ்மைக் குடும்பம். இவர்களுடன் இடம்பெயர்ந்து வந்த குடும்பமும் இணைந்து விடுகிறது. இந்த முக்கூட்டுக் குடும்ப நிகழ்வுகளுடன் கதை நகர்ந்து செல்கிறது. ஏழ்மை, தொழில்வாய்ப்பின்மை, சீதனப் பிரச்சினை, யுத்தம், இடப்பெயர்வு சிதைவுகள்எனக் கதை நகர்கிறது. கதையோட்டம் பிரச் சினை மையங்களைத் தாண்டி நிறைவுறும் போது இரண்டு தீர்மானங்கள் முன்னெடுக் கப்படுகின்றன. ஒன்று, எவ்வளவு தான் பிரச் சினை என்றாலும் அதனை உள்ளிருந்தே எதிர் கொள்வது. (சுபத்திராவின் முடிவு) மற்றையது, சாந்தி, சிவானி, சுகுணா முதலிய பெண் பாத்திரங்கள் தாமாகவே போராட்டத்தில் இணைவதாக முடிவுகொள்வது. இவ்விரண்டு தீர்மானங்களும் கதையோட்டத்தினூடாக மெல்ல நகர்த்தப்பட்டு, அதன் தேவையையும், போராளிகளின் பதிவுகளையும் அவர்களது தியாகத்தை முதன்மைப்படுத்துவதாகவும் அமைகின்றது.

போர்ச்சூழலில் வாழும் ஒருவன், தன் மீது திணிக்கப்பட்ட அவலங்களை தொடர்ந் தும் அனுமதிப்பதில் நியாயமில்லை என்ற உணர்வும் இந்த அவலங்கள் மீண்டும் மீண்டும் திணிக்கப்படும்போது தவிர்க்கவியலாது வச மாவதும் (Assimilation) இயல்பானதே என் பதும் தான் இந்த நாவல் நமக்குப் புலப் படுத்தும் செய்தி.

iii

திருச்செந்தியின் எழுத்துலகப் பிரவே சம் சிறுகதைகளுடாகவே நிகழ்ந்துள்ளது. எனினும், அவரது நாவல்கள் வெளிவந்ததன் பின்னரே சிறுகதைகள் தொகுப்புகளாக வெளிவந்தன. இதுவரை மூன்று தொகுப்புகள் அவ்வாறு வெளிவந்துள்ளன.

வெட்டுமுகம் (1993),

என்னுடையதும் அம்மாவினுடை யதும் (1995),

மணல்வெளி அரங்கு (2002)

என்பவை ஒரு கால ஒழுங்கில் வெளி வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்தியின் எழுத்து ஆளுமை நாவலை விட சிறுகதைகளிலேயே பிரதிபலிக் கின்றன என்பதற்கு இந்த மூன்று தொகுதி களும் சாட்சி. அவரது முதலாவது தொகுதி யில் அக்காலத்தைய யாழ்ப்பாணச் சமூ கத்தின் இயல்பு நிலையும், அதன் முரண் நிலை களுமே கருக்களாக அமைகின்றன. அவர் எழுதத் தொடங்கிய எழுபதுகளில் யாழ்ப் பாணச் சமூகத்தினைப் பிரதிபலித்த எழுத் துக்கள் பலவும் அவ்வாறான நிலைகளையே பிரதிபலித்தன.

"எழுத்தினால் சமூக மாற்றமோ... வேறு எத்தகைய மாற்றமோ ஏற்படுகின்றதோ இல் லையோ ஒவ்வொரு எழுத்தாளனும் தன்னைச் சூழவுள்ளவிடயங்கள், சமூகம், இனம் போன்ற வற்றில் அக்கறையுள்ளவனாக அவற்றின் மேம் பாட்டில் கரிசனையுள்ளவனாக இருத்தல் அவ சியம்"

என அத்தொகுப்பில் அவர் குறிப்பிடு வது போலவே அவரது கதைக்களங்களும் கருவும் அமைந்துள்ளன.

"பொய்மை, பொறாமை, பொருளாசை, சீதன வழக்கம், இனப்பிரச்சினையின் கொதி நிலைச் சூழலின் அவலங்கள், முதலியன சமூ கத்தில் நிகழ்த்தி வந்துள்ள பாதிப்புக்களை சிதம்பர திருச்செந்திநாதனின் இக்கதைகள் சித்திரிக்கின்றன."

என கலாநிதி நா. சுப்பிரமணியன் அணிந்துரையில் குறிப்பிடுவது சாலப் பொருத்தமுடையது.

இந்தத் தொகுதியின் சில கதைகள் மிக வும் சிலாகித்துப் பேசக்கூடியன. குறிப்பாக 'சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம்' என்ற கதை யில் சீதனக் கொடுமையின் அகோரமுகம் சித்திரிக்கப்படும் அதேவேளை, அது மா பெரும்வன்மம்சார்ந்தது. பெண்களைப்பெற்ற பெற்றோரைப் பல வழிகளிலும் இம்சை செய்வது என்பதை அறிந்திருந்தும் பெண் பிள் ளைகள் சமரசம் (compromise) செய்து கொண்டு ஒத்துப்போக நினைக்கும் முரண் நிலைச் சித்திரிப்பு அன்றைய (ஏன் இன்றை யும்) சமூக அவலத்தின் ஒரு வெட்டுமுகக் காட்சி எனலாம்.

இதுபோலவே போர்மேகம் யாழ்ப் பாணத்து மக்கள்மீது படிந்தவேளையில் புலம்பெயர்வுகளும் அவலங்களும் நிகழ்ந்த வேளையில் உள்ளூரில் காணிச்சண்டைகள் நிலவிய சூழலையும் இரு நிலைகளில் சித் திரிக்கின்றார். ஒன்று, நிலமானியச் சமூக அமைப்பின் ஆணி வேராக அமைந்த நிலம் பற்றிய யாழ்ப்பாணத்துக் கரிசனை பற்றியது. (காணிக்கு வேலியுண்டு) மற்றையது, போரி னால் ஏற்பட்ட உள்ளூர் (வீட்டை மட்டு மல்ல) வெளியூர் (எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது) புலம்பெயர்வு பற்றி யது. மேலாக, தொடர்கைதுகளால் காணாமற் போன அல்லது கைதான பிள்ளைகளைச் சந்திக்கச் சிறைச்சாலை அல்லது தடைமுகாம் வாசலில் தவமிருக்கும் உறவுகள் பற்றியது. (என்று மடியும் எங்கள்...) சம்பவங்களையும் அவர் பதிவு செய்யத் தவறவில்லை.

இந்தத் தொகுதியின் மகுடக் கதை யாக அமைந்த 'வெட்டுமுகம்' என்ற சிறு கதை அன்றைய காலச் சூழலையும், அவ லங்களையும் மிகத் துல்லியமாக தனித் துப்போன ஒரு யாழ்ப்பாணத்து இளைஞ னைப் பனைவெளி அரங்கில் நிறுத்தி நன விடைத் தோய்தல் உத்தியில் அவனது தனி மைத் துயரையும், நாட்டையும் வீட்டையும் தன்னையும் பற்றியதான விவரணமாக அமைத்துவிடுகின்றார்.

ஒரு நல்ல கதை சொல்லியாகத் திருச் செந்தி இங்கே முகங்காட்டுகின்றார். இக் குறிப்பில் ஏற்கனவே குறிப்பிட்ட விடலைப் பருவத்து யாழ்ப்பாண இளைஞர்களின் தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைச் சோகம் எவர் மீதும் தொற்றலாம். அந்த அகமனச் சோகம் நம்மில் பலருக்குத் தொற் றியும் உள்ளது. 'என்னுடையதும் அம்மாவினு டையதும்' என்ற இரண்டாவது தொகுதி இன்னோர் களத்தை நம்முன் விரிக்கின்றது. ஆயின் மிகவும் கனதியாக அது விரிகின்றது. முதற் தொகுதியில் காணப்பட்ட சமூக சீர் திருத்தம் என்ற எண்ணக்கரு இப்போ சமூக அவலங்களில் நிலைகொள்கின்றது. வெளிப் படையாக நோக்கும்போது போரின் அவலங் கள் என ஒற்றைச் சொல்லில் அடையாளப் படுத்த முடியுமெனினும் அதன் உபபிரிவு களின் பல்பரிமாணத் தன்மையை இத்தொகுப் பிலுள்ள கதைகளூடாக அறியலாம்.

"திருச்செந்திநாதனின் கதைகளின் மனப்பதிவு நிலை அவதானிப்பின் அடியாகத் தோன்றும் எடுத்துக்கூறல் முறையைச் சுட்டி நிற்கின்றன. நடந்தனவற்றையும், நிகழ்ந்து கொண்டிருப்பனவற்றையும் வாசகனுக்கு எடுத்துச் சொல்கிற ஒரு முறைமை இங்கு காணப்படுகின்றது."

என பேராசிரியர் கா. சிவத்தம்பி இத் தொகுப்பிற்கான முன்னுரையில் குறிப்பிடு வது போல வாழ்வின் அவலங்களை விண்டு காட்டும் முறைமை இத்தொகுப்பின் தனித்த அம்சம் எனலாம்.

'என்னுடையதும் அம்மாவினுடை யதும்' என்ற மகுடக் கதை மேற்குறித்த விமர் சனத்துக்கு நல்ல சாட்சியாக அமைகின்றது... யுத்த அனர்த்தத்தால் ஒரு காலை இழந்து, ஜெய்ப்பூர் காலுடன் சயிக்கிள் ஓடி, சாவகச் சேரி போய் தேங்காய் வியாபாரம் செய்யும் ஓர் இளைஞன் பற்றியதே அக்கதை. அவனுக் கும் அவன் அம்மாவிற்கும் உள்ள பாசப் பிணைப்பு, ஒருவரில் ஒருவர் கொண்டுள்ள அக்கறை, தனக்குக் கிடைத்த அன்றைய வருமானத்தில் தாய் விரும்பிச் சாப்பிடும் மோதகம் வாங்கிக் கொடுத்து அவளைத் தனது சயிக்கிளில் ஏற்றிக்கொண்டு போகும்போது அவனடையும் மனமகிழ்ச்சி சொல்லில் அடங்காதது. அது தன் அனுபவம் சார்ந்தது. இது சினிமாத்தனமான தாய் சேய் உறவல்ல; யதார்த்தமான பாச உணர்வின் வெளிப்பாடு. இதற்கும் மேலாக இந்தக் கதைச் சித்திரிப்பில் அன்றைய பொருளா-தாரத் தடைகளால் ஏற்பட்ட அவலங்கள் முகம் கொள்கின்றன. குன்றும் குழியு-மான வழித்தடங்கள், மரக்கறி மற்றும் மண் எண்ணெயில் வாகன ஓட்டம், மின்சாரம், தொலைபேசி யாவும் அற்ற நிலை. யாவும் நடைமுறை வாழ்வின் அவலங்கள். எனினும் "சில சில பிரச்சினை எண்டாலுமடாப்பா இப்பதான் சந்தோசமாயிருக்கிறம்" என்ற கூற்றுடன் அக்கதை நகர்கிறது. கதையின் சுவாரஸ்யம் என்னவென்றால் அவற்றை ஒரே சீரான முறையில் பதிவுசெய்துகொண்டுவந்து, அந்த இளைஞன் ஒரு காலை இழந்தவர் என்று இறுதியில் கூறும்போது தான் அது நம்மில் அதிர்வை ஏற்படுத்துகிறது அல்லது சோகத்தைத் தொற்றச் செய்கின்றது. ஒரு நல்ல கதை சொல்லியின் உத்தியது.

'தீர்வுகள்' என்ற இன்னொரு கதை உறவுகளின் நலனுக்காக காதலைத் துறந்து வெளிநாடு சென்று, அங்கு ஒரு வெள்ளைப் பெண்ணை மணந்து இரண்டுங்கெட்டான் நிலையில் வாழும் யாழ்ப்பாணத்து இளை ஞன் பற்றியது. கதையின் யதார்த்தம் சற்று வினாவுக்குள்ளானபோதும் அந்த இளைஞ னும், அவள் உள்ளூர்க் காதலியும் கோயில் வீதியில் சந்தித்த தருணங்கள், காதலியின் உரையாடல், அவளது இலட்சியம்... முதலான வற்றை நினைக்கும்போது இந்தக் காதலனான இளைஞனை விட வாசகர் மனதிலும் அந்தக் காதலி பற்றிய கழிவிரக்கம் மெல்லிதான துயரக்கோட்டில் மேற்கிளம்புகின்றது.

'இருப்பு' என்ற கதை வெளிநாட்டு மாப் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்ட ஒரு பெண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடையது. ஒரு பெண் சந்தோஷமாக வாழ் வதற்கு, பணமும், ஆடம்பரப் பொருட்களும் பக்கத்திலிருந்தால்தான் போதுமா? கணவ- னது அணுக்கம் வேண்டாமா? என்ற யதார்த் தத்தைப் போட்டுடைக்கிறது அக்கதை. கண வன் வெளிநாட்டிலும் மனைவி ஊரிலும் கணவனது தாய்க்குக் காவலாகவும் இருக்கும் போது அவளுக்கு ஆசை வார்த்தைகள் அடங் கிய தொடர்புகள் மட்டும் போதாது. இது அவளின்நடத்தைக்கோலத்திலும்முரண்களை அல்லது அபத்தங்களைத் தோற்றுவிக்கும் என் பதுதான் அதன் உட்பொருள். கமலா என்ற அந்தப் பெண்ணின் மன அவசத்தை வெளிப் படுத்தும் உத்தி மிக அலாதியானது. கமலா வீட்டில் வேலை செய்யும் கன கம்மா என்ற பாத்திரத்தின், குடியும் அடா வடித்தனமுமுள்ள தனது கணவன் எரு அள் ளப்போய் மூன்று நாட்கள் திரும்பி வர வில்லை. இப்போது கனகம்மா கமலா வீட் டுத் திண்ணையிலிருந்து

"உழைப்புப் பிழைப்பு இல்லாட்டியும் அவர் பக்கத்திலை இருந்தால் காணும்... என்ன நடந்ததோ? என்ரை அம்மாளே... என அழத் தொடங்கினாள். அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் கமலா அழத் தொடங்கினாள்."

என்று அக்கதை நிறைவுறுகின்றபோது கமலாவின் அழுகையில் புதையுண்ட சோகத் தில் மூழ்கி கமலா மாத்திரம் அழமுடியாது வாசகரும்தான். இவ்விடத்தில் திருச்செந்தி நல்ல படைப்பாளியாக நிமிர்கிறார்.

இந்தத் தொகுதியில் இன்னும் இரு கதைகளைக் குறிப்பிடுவது அவசியமானது. ஒன்று, 'அகதிமுகாம்', மற்றையது, 'காலம் கழிப்பமடி' அகதி முகாம் ஒரு யதார்த்தத் தைப் பேசுகிறது. வெளிநாடு சென்ற மகன் அனுப்பும் பணத்தில் இங்கே வீடு, வாசல் எனக் கொழிக்கின்றது. ஆயின் போர்ச்சூழல் காரணமாகப்பெற்றோர்அகதிகளாக்கப்பட்டு அகதி முகாமில், மகன் வெளிநாடொன்றில் அகதி முகாமில் இரண்டுக்குமான சம நிலையை வற்புறுத்துவதாக அக்கதை அமை கிறது. ஆயின் 'காலங்கழிப்பமடி' என்ற கதை திருமண வயது தாண்டிய முதிர் கன்னி பற்றியது. திருமணப் பேச்சு நீண்டு போகிறது. ஒரு பெண்ணின் மனோ விருப்பை அறிந்து கொள்ளாத பெற்றோர், உறவுகள், சாதி, சனம், பிரிவு, ஊர் என்ற வரையறையுள் மாப்பிள்ளை பார்த்துச் சலித்து இப்போது வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவரைத திருமணம் முடிக்க வேண்டுகின்றனர். ஆயின் அவள் அதற்கு மறுத்து

"நீங்கள்சொல்லுறமாதிரிஅந்தப்பொடி யன்ரை சாதி, சமயம், குலம், கோத்திரம் என்ன மாதிரி? பெரியக்கா, சின்னக்கா, அண்ணைமார், அத்தான்மார், அண்ணிமார், அவையின்ரை பிள்ளையள் எல்லாரும் சம் மதிப்பினமோ? அதுகள என்ன மாதிரி...?"

என்று கேட்கும் வினாவிற்கு எதிர்வினை ஆற்ற அவளை இவ்வளவு காலமும் சம்பிரதா யங்களால் கட்டிப்போட யாருக்கு முடியும்? அவளின் முடிவு இவ்வாறாக அமைகிறது.

"வாறவன் எந்த விசரனாக இருந்தாலும் பறவாயில்லை. வேலையில்லாட்டியும்எனக்கு ஒண்டுமில்லை. இஞ்சை வந்து இந்த ஊரிலை என்னோடை குடும்பம் நடத்துவன் எண்டால் நான் சம்மதிக்கிறன். இல்லை எண்டால் என்னை என்ன செய்தாலும் சம்மதிக்க மாட்டன்."

என்ற நெற்றிப்பொட்டில் அறைந்தாற் போன்ற அவளது முடிவுக் கூற்று இலட்சிய வாதமாக இருப்பினும் அல்லலுற்று ஆற்றாத ஒரு பெண்ணின் திறந்த மனவெளிப்பாடு என்று அடையாளப்படுத்தலாம்.

மூன்றாவது சிறுகதைத் தொகுதியில் திருச்செந்தி இன்னோர் தளத்தில் விஸ்வரூபம் கொள்கிறார். சுமார் ஐந்தாண்டு கால உள் ளிருப்பு அனுபவம் மிகத்திடமான தீவிரங் கொண்ட படைப்பாளியாக அவரை மடை மாற்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எதுவரை' என்ற சிறுகதை பிரச்சினை களின் தொடக்ககால நிகழ்வைப் பதிவு செய்ய, தொடர்ந்துவரும் கதைகள் போர்க்காலச் சூழலின் பல்வேறு பரிணா மங்களை வெளிப்படுத்துகின்றன. 'எனக்காக' உள்ளகப்புலப்பெயர்வையும், 'தேவர்கள்'சுற்றி வளைப்பையும், 'மணல்வெளி அரங்கு', 'பயம் வேண்டாம்', 'காணாமல் போனவன்' அதிகார வர்க்கத்தின் மனிதப்படுகொலைகளையும், 'சமாதானம்' போலித்தனங்களையும் 'அம்மா வாக அல்ல' தனையனைத் தொலைத்த தாயின் துயரத்தையும் பகிர்கின்றன. எது எவ்வாறாயினும் போர்க்கால அவலங்களைப் பேசுவன அவை. ஆனால் பல கதைகள் நேரி டையாக அவற்றைப் பேசவில்லை. பூடக மாகப் பேசுகின்றன. மணல்வெளி அரங்கு, சமாதானம், பயம் வேண்டாம் முதலிய கதைகள் அவ்வாறானவையே. அதிகார வர்க்கத்தின் நெருக்கடிகள் வன்மங் கொள்ளும்போது, எழுத்தாளர்களது குரல் வளைகள் நெரிக்கப்படும்போது, பேனாக் களுக்கான சுதந்திரம் பறிக்கப்படும்போது, உலக அரங்கில் இவ்வாறுதான் இலக்கியக் காரர்கள் தமது கருத்துக்களை மறைமுக மாகப் பதிவுசெய்தனர். அந்த வகையில் இவ ரது எழுத்து முறை, மொழி நேர்த்தி மாறியது மட்டுமன்றி, அதன் கனதியும் வேற்றுரு கொண்டது எனலாம். அவரது கதைகளின் இறுதி வாசகங்கள் அத்தகைய பூடகத் தன் மையை வெளிப்படுத்துவன.

தேவர்களைக் கண்டால் சொல்லக் கூடாது. தேவர்களை மட்டுமா? தேவனையுந் தான். (தேவர்கள்)

அணிவகுத்து வந்தவர்கள் கைக்கருவி களுடன் அரைவட்டம், முழுவட்டம், தீபோட்டு ஆடத் தொடங்கினர். மணல் வெளி ஒரு பெரிய அரங்கமாக மாறியது.

(மணல்வெளி அரங்கு)

மனிதர்கள் சேரச்சேர விளையாட்டு மைதானத்துக்கு மாத்திரம் பயம் வலுக் கத்தொடங்கியது. என் கொள்ளவு இவர் களைத் தாங்குமா? இடம் காணாவிட்டால் என்னை ஆழமாக அல்லவா வெட்டும் (பயம் வேண்டாம்)

அம்மா மகனின் அந்த நடுகல்லில் பூக் களைச் சொரிந்தாள், கண்களைத் துடைத் தாள், விளக்கேற்றினாள். (அம்மாவாக அல்ல)

நடந்துமுடிந்த போரையும், அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களையும், அதிகாரப் பயங்கரவாதம் எதிர்கொண்ட நடவடிக்கை களையும் அறிந்தவர்களுக்கு மேலே குறிப் பிட்ட வாக்கியங்களின் தார்ப்பரியம் தெளி வாகும். இத்தொகுதியிலுள்ள மணல்வெளி அரங்கு, பயம் வேண்டாம் ஆகிய சிறுகதை கள் அதன் செய்நேர்த்தி பற்றியும் பேசத் தக்கன. குறிப்பாக பயம் வேண்டாம் என்ற கதையின் சமூக யதார்த்தம் யாருக்கும் உறைக் கக்கூடியது. மரணங்கள் மலிந்த பூமியில் யமனின் தொழிற்பாடுகளும், அவனது மன நிலையும் இதில் பதியப்பட்டுள்ளன. 'காலனும் கிழவியும்' என்ற தலைப்பில் புதுமைப்பித்தன் ஒரு கதை எழுதினார். கண்தெரியாத ஒரு கிழவி தனது உயிரைக் கவர வந்த காலனை தனது பேரன் என நினைத் பாசக்கயிற்றால் எருமைக் கடா வைக்கட்டிவிடுகிறாள். இங்கே யமன் தோற்று விடுகிறான். பௌராணிகக் கதை மரபின் போலித்தனங்களை, கற்பனையை எள்ள நினைத்த புதுமைப்பித்தன் அவ்வாறு எழுதி னார். ஆயின் திருச்செந்தியின் கதை யில் யமனின் மனச்சாட்சி அவனை உறுத்தியே அவன் எடுக்கவந்த உயிரை விட்டு ஓடுவதாகக் கதை முடிகின்றது. காலன் என்றால் காலமறிந்து தானே உயிரைப் பறிக்கலாம். கிழவனின் பேரனின் உயிர்பறிப்பு 'அகாலப்பறிப்பு'. எனவே, நேர் மையான காலனது மனச்சாட்சியே அவனை உறுத்துகிறது. விளைவு, காலன் காணாமற் போய்விடுகிறான். காலத்துக்கேற்ற உத்தியும் படைப்பும் காலம் அகாலமானதன் கதையிது.

இதுபோலவே 'அம்மாவாக அல்ல' என்ற கதையும் கவனத்திற்குள்ளாகின்றது. மாவீரனாகிவிட்ட மகனின் நினைப்பில் அம்மா, அம்மாவின் கனவு மனதில் மகனின் ஊடாட்டம், அந்த ஊடாடத்தினூடே மகன் தன்னை தான் சார்ந்தவர்களை நியாயப் படுத்துகின்றான். மீண்டும் தொடங்கிய வசந்தத்தில் மகிழ்வு கொள்கின்றான். அம்மா நனவுலகில் பிரவேசிக்கும்போது மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருப்பூசலில், மாய்ந்து, நட்டபோலும் நடாதுநெடுங்கல்லா, கல்நின்றவனாகின்றான். அம்மாவால் சங்கப் பெண்டிரைப் போல் மலர்தூவி, விளக்கேற்ற மட்டுமே முடிகிறது கண்ணீருடன்.

இந்தத் தொகுதியில் மதிப்புரை எழுதிய பேராசிரியர் சிவசேகரம் இந்த இரு கதைகளுமே திருச்செந்தியின் கதை சொல்லும் நேர்த்தியின் ஆதாரங்கள் என்கிறார். அதுவே சாசுவாதமான கூற்றுமாகும்.

iv

நிறைவாக, திருச்செந்தியின் எழுத்துக்களின் ஆரம்பநிலை யாழ்ப்பாணத்து சமூக அசைவியக்கத்தை அச்சு அசலாகப் பதிவு செய்யவதாக அமைகிறது. அதற்கு அக்காலத்தைய மக்களும், அவர்தம், நடவடிக்கைகளும் சான்றாக அமைந்தன. கூட்டுக் குடும்பம், உறவு, பாசம் என அவை நெகிழ்ச்சித் தன்மையுடையதாகவும் சமூக நடவடிக்கைகளுடன் இணைந்தவையாகவும் கோலம் கொள்கின்றன. ஒரு முதிரா இளைஞனின் சமூகம் குறித்த பார்வை அதனுள் இழையோடிய போதும் யதார்த்தவாதச் சித்திரிப்பில் அவை உயிர்ப்புக்கொள்கின்றன.

இரண்டாவது தளத்தில் அவர் சமூக நடவடிக்கைகளை மிக ஆழமாக அவதானித்துப் பதிவுசெய்ய முனைகிறார். அதனால் படைப்புக்களின் கனதி கூடத்தொடங்கி விட்டது. அத்துடன் போர்ச்சூழலும் ஒன்று சேர்ந்தபோது அலைவும் உலைவும் கருத்துக்களங்களின் விரிவுக்குத் துணைபோயின.

பெண்கள் மீதான அவரது கரிசனை அலாதியானது. அது முதல் நாவலில் இருந்து மூன்றாவது தொகுதி இறுதிச் சிறுகதைவரை நீள்கிறது. பெண்கள், காதல், சீதனம், முதிர் கன்னிகள், வேண்டாத திருமணங்கள், இழப்புக்கள் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகளை அவர் அலசுகிறார். அவர்களை அனுதாபத்துடனும், வெறுப்புடனும் சோகத்துடனும் அவர் பதிவு செய்துள்ளார். இவ்வாறான பதிவுகள் பற்றித் தனியான ஆய்வினை நிகழ்த்தக்கூடிய களங்களும், கதைகளும் அவரது கதைகளில் உண்டு. ஆரம்ப காலங்களில் போராட்டச் சூழலையும், போராளிகளையும் மறைமுகமாக ஆதரித்து வந்தார், அவர்களுடைய செயற்பாடுகளை மதிப்புடன் நியாயப்படுத்தியவர். மூன்றாம் காலகட்டத்தில் நேரடியான பங்காளியாக மாறிவிடுவதை அவதானிக்கலாம். இந்த மாற்றம் திடீரென்றுஓரிரவில்ஏற்பட்டிருக்கமுடியாது. பல நாள் அனுவம் அவரை அவ்வாறான கருத்துத் தளத்திற்கு இழுத்துச் சென்றுள்ளது. அதுவே யதார்த்தமானதுமாகும். அவரது மூன்றாவதுசிறுகதைத்தொகுதிஇவ்வாறானபங்களிப்பின் வெளிப்பாடுகள்தான். இவை அரசியல் சாயம் பூசப்பட்ட, பக்கச்சார்பான கருத்துக் கொண்டவைஎனப்புறந்தள்ளிவிடமுடியாது. திருச்செந்தியின் கதைகளின் தொடர்வாசகன் ஒருவன் அவ்வாறான தீர்மானத்திற்கு வரவும் முடியாது. ஏனெனில், போரினால் விளைந்த பல அவலங்களை அவர் பதிவு செய்துள்ளார். அமைதிப்படைகளையும் ஆக்கிரமிப்புப் படைகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் அவர் பதிவுசெய்துள்ளார். ஆயின் அவற்றில் அவர் நிதானம் தவறவில்லை. சில சொற்பிரயோகங்களைத் தவிர யாரையும் அவர் துவேசத்துடன் விமர்சனம் செய்தது இல்லை. எனவே, பக்கச்சார்பு என்ற பதத்திற்கு அப்பாற்பட்டவை அவரது படைப்புக்கள். ஆயின் அரசியல் இல்லை என்று கூறமுடியாது. எதில்தான் அரசியல் இல்லை. நாடு பற்றி எரியும்போது "பிடில்" வாசிக்கவா முடியும்? எழுத்தாளன் சமூகப்பிராணி அவன் சமூக நடத்தைகளின் மனச்சாட்சி. அந்த மனச்சாட்சி பதிவாகின்றபோது தவிர்க்கவியலாது. அது அரசியல் வாடையும் பெறுகிறது. ஆயினும், திருச்செந்தியின் எழுத்து நிதானம் தவறவில்லை. அது பேராசிரியர் சிவசேகரம் குறிப்பிடுவது போல் விடுதலையையும் சமூக விமோசனத்தையும் நாடும் படைப்பாளிகளின் நிதானம் தவறாத படைப்பாற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி சி. ரகுராம்
சிரேஷ்ட விரிவுரையாளர் – தொடர்பாடல் கற்கைகள்
தொடர்பாடல் மற்றும் வணிகக் கற்கைகள் பீடம்
திருகோணமலை வளாகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



தான் எடுத்துக்கொண்ட பணிகளை எந்தத் தடைகள் வரினும் அவற்றைக் கடந்து, சிறப்பான வெளிப்பாடுகளை ஈட்டித் தருவதில் திருச்செந்திநாதன் அண்ணனுக்கு நிகர் அவர் மட்டுமேதான். ஒரு எழுத்தாளனாக மாத்திரமல்லாது, ஒரு சஞ்சிகையாளனாக, ஊடகவியலாளனாக வளங்கள் மிக அருகிய நிலையிலும் பெரும் இடர்ப்பாடுகள் மத்தியிலும் அவர் பெற்ற வெற்றிகளையும் பாராட்டுக்களையும் 'வெளிச்சமும்', 'ஈழநாடும்' இந்த வகையில் இன்றும் எடுத்துச் சொல்வன.

நெருக்கடிகள் நிறைந்த காலகட்டங்களில், காத்திரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் படைப்புக்கள் ஒரு தனி மனிதனின் படைப்பாற்றலுக்குச் சவாலாக விளங்கியதை யாழ். இடப்பெயர்வும் அதனைத் தொடர்ந்த வன்னி வாழ்வும் திருச்செந்திநாதன் அண்ணனுக்கும் எடுத்துக்காட்டியபோதும், அந்த அழுத்தங்களிலும் தனது படைப்பாற்றலை வெவ்வேறு பரிமாணங்களினூடாக மடை திறந்துவிட அவரால் முடிந்ததை எண்ணிப் பார்க்கிறேன்.

குறிப்பாக, தொடர்ந்த இடப்பெயர்வில் பல்வேறு நிலைகளினூடாகவும் நகர்ந்து, மக்களோடு தானும் இடம் பெயர்ந்த 'ஈழநாடு', புதுக்குடியிருப்பில் நாளிதழாக தினமும் வெளிவரும் வாய்ப்புக்கள் அற்றுப்போன நிலையில், அதனை வார இதழாகவேனும் தக்கவைத்துக்கொள்ள திருச்செந்திநாதன் அண்ணன் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்கள் ஒரு பத்திரிகையின் போர் சார்ந்த வரலாற்றுப் பக்கங்களில் தளராத உறுதிக்கு எடுத்துக்காட்டாக அமைபவை.

ஒரு எழுத்தாளன் என்ற நிலையிலும் மேவி, ஒரு பத்திரிகை ஆசிரியராக, ஊடகவியலாளனாக மிகுந்த தொழில்சார் நேர்த்தியுடன்இதழியற்களத்தில்அவர்கடமையாற்றிய காலங்கள் அவை. தனது பணிகளின் ஒரு பேறாக, மறைந்த பு.சத்தியமூர்த்தி போன்ற அதீத வீச்சும் திறமையும் கொண்ட இளம் ஊடகவியலாளர்களை தனது பட்டறையில் உருவாக்கிட அவர் வழங்கிய பகிர்வும் பயிற்சிகளும் மறக்கமுடியாதவை.

அவரது துறைசார்ந்த பணிகளை அறிந்தவனாக மாத்திரமல்லாது, அவரது அயலவனாகவும் வாழ்ந்த எனக்கு, அவரது வாழ்வாகவும் பேசுபொருளாகவும் எப்போதுமே இலக்கியமும் ஊடகப்பணிகளும் மாத்திரமே இருந்துவந்ததை எண்ணி நான் வியந்ததுண்டு.

குறிப்பாக, இடம்பெயர்ந்து வாழ்ந்த பொழுதுகளில், தான் பெற்றெடுத்த சிறு பிள்ளைகளையும் கடந்து, கவனிப்பும் முக்கியத்துவமும் தந்து, தனது காலங்களில் சேகரித்துவந்த நூல்களையும் ஆவணங்களையும் தனது குடும்பத்தின் புழக்கத்துக்கு என இருந்த ஒரேயொரு அறை முற்றுமுழுதாக நிறைந்திருக்க, அவற்றைப் பேணிய திருச்செந்திநாதன் அண்ணனின் ஆர்வமும் அக்கறையும் அவரை ஒரு 'ஞானக்கிறுக்கன்' என என்னைச் சிந்திக்கவைத்ததும் உண்டு.

தான் கொண்டிருந்த கொள்கைகளின் பற்றுக்கோட்டால், அவரே தீர்மானித்து வாழ்ந்த விழுமியங்கள் நிறைந்த வாழ்வால் அவர் இழந்த தனிப்பட்ட, தொழில்சார் உயர்வுகளும் முன்னேற்றங்களும் அவரை இன்றும் தொடர்ந்துவரும் நிலையிலும், தலைநிமிர்ந்து வாழும் திருச்செந்திநாதன் அண்ணனை பெருமையுடன், நிறைவுடன் வாழ்த்தி வணங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி க.ஸ்ரீகணேசன்
இணுவில் கலை இலக்கிய வட்டம்

இணுவில் கிராமத்தைப் பற்றி எழுதும்போது இணுவில் சின்னத்தம்பி புலவர் பற்றிய நினைப்பு தவறாமல் வந்து சேரும். ஒரு சமூகம், நாடு எனப் பார்க்கும்போது அதன் இலக்கிய கர்த்தாக்கள் அச்சமூகத் தின் அக்காலகட்டத்தின் அடை யாளம் ஆகிவிடுவர். இன்று எம் கைகளில் கிடைக்கும் தமி ழரின் பழைமைமிகு இலக்கியச் செல்வம் சங்கக் கவிதைகளே. அக் கவிதைகளில் மணம் வீசும் அக் காலத்து வாழ்வு, பண்பாடு, ஊர், ஊரின் வாழ்வு முறைமைகள் எல் லாம் நமக்கு ஊட்டுவது அக்காலப் புலவர் கொண்டிருந்த சமூக மனப்பாங்கும், சமூக உறவும்.



பின்னாளில் சங்கமருவிய காலத்து திருக்குறள் முதலிய பல நூல்கள் ஊடாகவும் சமூகம், பண்பாடு, அறநெறி எனப் பல வற்றை பார்க்கமுடிகிறது. ஆக படைப்பாளி ஊரை, உறவை பண்பாட்டை பதிவு செய்பவன் அதனால் அவன் முக்கியத்துவம் பெறுகிறான்.

இணுவில் மண் இலக் கியத்துக்கும், இந்துமதம் - சைவம் வளர்த்த கோவில்கள் சார்ந்த விட யங்களுக்கும் சிறப்பான இடம் கொடுத்து வருவது. கிழக்கு இணு வில் மண் தந்த புதல்வராக நாடக கலைஞர் கிதம்பரநாதனின் சிரேஸ்ட புதல்வராக நமது எழுத் தாளர் திருச்செந்திநாதன் விளங்கு கிறார். தந்தை சிதம்பரநாதன் இணுவில் சிவகாம சுந்தரி அம் மன் கோயிலில் திருஊஞ்சல் திரு வெம்பாவை பாடும்போது அவ ரது நாடகப்பாணி பக்தர்களுக்குத் துலங்கும்.

இணுவில் அம்மன் கோயில் வீதியில் எத்தனை இசைநாடகங் கள், கூத்துகள் கடந்த நூற்றாண்டில் அரங்கேறி இருக்கும். எமது சிறுபரா யக் காலமான 60 களின் இறுதியில் வடக்கு வீதியில் பார்த்த ஸ்ரீவள்ளி நாடகம் தான் எமது காலத்திற்குள் மேடை ஏறிய இசைநாடகம். இதைவிட நாம் மேடையேற்றிய வசன நாடகமான முல்லைமணியின் பண்டாரவன்னியன் மேலும் கிழக்கு இணுவிலின் இசைச்சூழலுக்கு இசை வழங்கிய தவில் நாதஸ்வர வெள்ளத்துடன் தியாகராச சுவாமி கள் அம்பலத்தார், இரத்தினம் அண்ணன், சிங்கம் போன்றோரின் பஜனைகளும் மார்கழி மாத கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்தனைகளும் திருவெம்பாவைப் பாடல்களும் வளம் சேர்த்தன என்றால் மிகை யாகாது.

இத்தகையசூழலுடன்நவராத் திரிகால சூரன்போருக்கும் மானம்பூ எனப்படும் வாழைவெட்டுக்கும் அம்மன் எடுக்கும் திருக்கோலங் களும் எம்மவர் மனதைக் கொள்ளை கொள்ளும் சிங்க வாகனத்தில் ஜடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு வில்லும் உடை வாளும் தாங்கி கம்பீரமாக அம்மன் எழுந் திருக்கும்போது தலையாட்டிவரும் மகிடா சூரன் 9 தலைகளைப் பொருத்தி வந்து ஆடி னாலும் (பிரம்மாவின் 4ம் தலையில் பூட்டப்படும் ஆணி சுத்தி குடிப்பது போல் இருப்பது மேலதிக சுவை) ஆட்டுவிப்போர் ஆடினாலும் அழகு சொல்லி மாளாது. சூரனின் வில்லும் முறிபட்டுத்தொங்க வீசி வந்த வாளின் அழகை இரசிக்க முன்னரே சூரனின் கை வெட்டுப்பட்டுத் தொங்கும் காட்சியும் பின்னர், அடுத்த சுற்றில் தலை முடி சரிவதும், ஈற்றில் வயிறு பிளந்து சிவலிங்கம் தெரிய தலைவெட்டுப்படுவதும் சமநேரத்தில் சிங்கத்தின் வாயில் சூரனின் குடல் சப்பப்படுவதும் (சைக்கிள் ரியூப் செந்நிற வர்ணம் பூசித் தொங்குவதும்) சிங்கத்தின் வாய் சப்பும் விதமாக தாடை ஆடுவதும் சிங்கத்தின் காலடியில் சூரனின் தலை துடிப்பதும் (துடிக்கவைக்க சகடையின் உள்ளே இருந்து ஒருவர் ஆட்டுவார்) எமக்கு இன்னும் புல்லரிக்கும் காட்சிகள். இந்தக் கலை அழகு நாம் சிறுவராக இரசித்தது.

மறுநாள் மானம்பூ வேட்டைக்கு அம் மன் வெண்குதிரையில் சவாரி கோலமாக இருந்தபடி வாளுடன் பவனி வருவதும் குதிரையின் ஆட்டத்தோடு பொம்மைகளின் ஆட்டமும் (அந்த நாளில் தம்பையர் குழு இன்றைய இளைஞர் தொடர்வதும்) கண் கொள்ளாது.

இத்தனை விலாவாரியாக எங்கள் ஊரின் கலை வாழ்வை சமயத்துடன் கூடிய சகவாழ்வை எழுதுவதன் நோக்கம் இணுவில் கிழக்கின் மக்கள் ஒன்றிக்கும், ஒன்றிணையும் ஆலயத்தின் விழா சூழல் கலாபூர்வமான இலக்கியச் சூழல் எங்கள் எழுத்தாளர் திருச்செந்திநாதனையும் தாக்கமான முறை யில் பாதித்திருக்கும். தந்தையார் சிதம்பரநாத னின் இலக்கிய - சமய இலக்கிய நாடக ஈடுபாடு தனயனிடத்தில் மடைமாற்றம் பெற்று சிறுகதை, நாவல் வடிவில் இலக்கிய முகம் கொள்கின்றது.

எண்பதுகளில் பெயர் சொல்லக்கூடிய வீரகேசரி புகழ் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் 1972இல் எழுத்துலகில் காலடி எடுத்து வைக்கிறார். எங்கள் ஊரில் காணப்படும் தில்லுமுல்லுகள் கோயில் சார்ந்த சிக்குப்பாடுகள், புலம்பெயர் வாழ்வின் மறுபக்கங்கள், செம்பாட்டு மண்ணில் மக்கள் இடும் உழைப்பு மூலதனம் எனப் பலவா- றாக அவரது எழுத்துலகம் தரிசித்து நிற்கும் காதல் திருமணம், குடும்ப உறவுகளும் விதிவிலக்கல்ல. "என்றாவது ஒரு நாள்" எனும் தலைப்பில் வெளிவந்த முதல் குறுநாவல் இணுவில் கலை இலக்கிய வட்டத்தினரின் அனுசரணையில் யாழ். இந்து விடுதியில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது நாம் ஞான சூரியர் சிவகுமார் சிவசிதம்பரம், அருணகிரி வாசன் ஆகியோர் ஒன்றிணைகிறோம்.

முன்னதாக பரமதயாளன், ஆனந் தன், முரளிதரன், திருஞானம், திருச்செந்தி நாதன், வ. மகேஸ்வரன் (பேராசிரியர்) இணுவை துரை எங்கரசு, மகாலிங்கம், தங்கராசா எனப் பலரின் இணைவில் இணுவில் கலை இலக்கியவட்டம் தோற்றம் பெற்றது. பல இலக்கிய அறிமுக நிகழ் வுகள், கருத்தரங்குகள் எனத் தொடங் கிய வட்டம் 1982இல் பெரிய அளவில் பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி யது. அன்று அடியேன் ஒரு பார்வையாளனே. சிறந்த நாடகம் ஒன்றையும் (திருவிழா) மேடையேற்றியிருந்தனர்.

தொடர்ந்த காலங்களில் செங்கை ஆழி யானின் நாவல் ஒன்று விமர்சன அரங்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அன்றைய கலந் துரையாடலின்போது நமது குறிப்புகளும் நாவலாசிரியரின் கவனத்தை மட்டும் ஈர்க்க வில்லை; வட்ட நண்பர்களையும் கவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வைத்தமையால் வட்டத்தின் உள் வீட்டுப்பிள்ளையானேன். துரை எங்கரசுதலை வராக அருணகிரிநாதன் செயலாளராக திருச் செந்திநாதன் உபதலைவராக என வட்டம் பெருவட்டம் ஆகியது. கோகிலா மகேந்திரன், மௌனகுரு, சிதம்பரநாதன், சேரன், யேசு ராசா, ரமணி ஐயா எனப் பலரும் வட்டத் துக்கு வருகைதந்தனர். தொண்ணூறுகளில் திருச்செந்திநாதன் தலைவராகிறார். அடியேன் செயலாளர் ஆகி பல கூட்டங்களை நூல் வெளியீடுகளை நடத்தினோம்.

பெண்கள் சுதந்திரம் பேசும் அரங்கு, கோகிலா மகேந்திரனின் "துயிலும் ஒரு நாள் கலையும்" விமர்சன அரங்கு வாகரை வாணனின் கடற்பூக்கள் கவிதை நூல் வெளி யீடு, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, எழுத் தாளர் டானியல் அஞ்சலி நிகழ்வுகள், மண் சுமந்த மேனியர் விமர்சன அரங்கு, கசிப்பு, நாடக விமர்சனம் எனப் பல நிகழ்வுகள் அரங்கேறின.

துரை எங்கரசு எழுதிய "வாழ்க்கை ஒரு தேவை' (சிறுகதை) திருச்செந்திநாதனின் "என்றாவது ஒரு நாள்" (குறுநாவல்) என நூல் வெளியீடுகள் தொடர்ந்தன. தொண்ணூ றுகளின் பிற்பகுதியில் எமது யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு வெளியீடு 2000ம் ஆண்டளவில் எனது நிதர்சனத்தின் புத்திரர் கள் வெளியீடு, 2005இல் கவியரசு முருகை யனின் அஞ்சலி நிகழ்வு என வட்டம் களை கட்டும் நிகழ்வுகளை நடாத்தியது. 2003இல் குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதிய "நாடக வழக்கு" வெளியீடு (தொகுப்பு அடியேன்) போன்றவை திருச்செந்திநாதனின் தலைமை யிலேயே நடைபெற்றன.

அண்ணன் அவர்களின் எழுத்து ஆற்றல் ஒரு முதிர்ச்சியை அவருக்கு வழங்கியிருந்தது. நாமெல்லாம் அவர் கூட்டில் சுகவாழ்வு பெற் றிருந்தோம். இலக்கிய நிகழ்வுகளுக்கு புறம்பாக 'இலக்கிய உலாத்து' நிகழ்வுகளும் அவ்வப்போது அண்ணரின் தலைமை யில் நடந்தேறியது. அதில் உச்சமான நிகழ்வு 90இல் சிவராத்திரியன்று நாம் மேற்கொண்ட திருக்கேதீச்சர யாத்திரை இடையில் நமது பயணம். நான் படிப்பித்த பாடசாலையான வேரவில் இந்து தமிழ்கலவனில் தங்கிச் செல்லும் வண்ணம் ஒழுங்கு செய்யப்பட்டது. அங்கு நாம் கமராவுடன் அண்ணனின் நூலொன்றுக்கு முகப்பு அட்டைப் படம் எடுக்க மரங்களின் முன்னாலும் ஆடு, மாடு, பறவைகள் பின்னாலும் குளம், குட்டை, கடல், நீர் நிலைகள் காட்சிகளின் அரு-கையும் தொடுவானத்து அழகுக் கோலங்களின் மருங்கேயும் ஓடிஓடிப் படம் பிடித்தோம். பாடசாலை ஆசிரியர் வழங்கிய இரவுணவும், மறுநாள் சமைத்து கட்டித்தந்த பொதிசோ-றும் திருக்கேதீச்சர யாத்திரையோடு மட்டும் நின்றுவிடவில்லை. இன்று வரை தொடரும் நினைவுகள் மலரும் நினைவுகள். மஞ்சு விரட்டும், மாடுபிடிக்கும் நினைவுகளே. சூரி, சிதம்பரம், தாடிச்சிவா, திருச்செந்திநாதன் என எமது வட்டம் தொடர்ந்தது. அண் ணரின் தம்பி கதிர்காமநாதனும் எழுதத் தொடங்கிவிட்டார். அண்ணன் எவ்வழி, தம்பி அவ்வழி. அவர் எழுத்து சனத்தைக் குடையும். எம்மைக் கடிக்கும். பலரை வயிறு குலுங்க சிரிக்க வைக்கும்.

சமூகத்தின் பல்வேறுபட்ட மன அழுக் குகளை பாத்திர அலசல்கள் ஊடாக கதை நகர்த்தும் பாங்கு அண்ணனுக்குரிய எழுத்துக் கலை, சம்பவங்களை தொகுத்துக் கூறுவதும் ஒரு கட்டம் கட்டமாக நர்த்துவதும் இன் னொரு கலை. அவரது சிறுகதைகள் 'வெட்டுமுகம்' 'என்னுடையதும் அம்மா வினுடையதும்' 'மணல் வெளி அரங்கு' என மூன்று தொகுப்புகளாக பதிவு பெற்றுள்ளன. "முடிவல்ல ஆரம்பம்" எனத் தொடங்கி இருள் இரவில் அல்ல மீண்டும் புதிதாய்ப் பிறப்போம். முள் முடி மன்னர்கள் ஆகிய நாவல்களும் அவர் படைப்பாற்றலைப் பறை சாற்றுவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். அக்கல்லூரியின் கலை இலக்கிய சங்கத்துள் ஆழ்ந்து முத்துக் குளித்தவர். எழுத்தாளர் சு. வேலுப்பிள்ளை, வித்துவான் க.ந. வேலன், சமூக சிந்தனையாளர் பேராயிரவர் (அதிபர்) எனப்பல அறிஞர் வழிகாட்டலில் வளர்ந்து வந்தவர் கணிதம் - வர்த்தகம் எனும் துறையில் பயின்று வணிகப் பட்டதாரி ஆகி அரசாங்க செயலகங்களில் எழுதுவினைஞர் அரச தொழில்வாய்ப்புப் பெற்று மக்கள் சார்ந்த பிரச்சினைகளை நேரடியாகக் கண்டு அனுபவித்து அறியும் சூழலில் வாழ்ந்து வந்தமை எழுத்துக்கு சிறப்பு சேர்த்தவைதான். நிர்வாக அதிகாரியாக பதவி உயர்வு கண்ட நம்மவர் ஒரு பிரதேச செயலகத்துக்குரிய ஆளுமை கொண்டவர். பதில் கடமையும் ஆற்றியுள்ளார். எட்டுப்பேர் கொண்ட குடும்பத்தின் மூத்த பிள்ளை பொறுப்புடன், தந்தையின் இறப்புக்கு பின் குடும்பப் பாரத்தையும் சுமந்தாலும் தனது கனவு வாழ்வுக்கு உறுதுணையாக காதல் திருமணத்தில் ஒன்று கூடினார் இராஜநாயகி அம்மையாருடன்.

எழுத்துலக வாழ்வுக்கும் விருந்தோம் பலுடன் கூடிய வாழ்வில் மிகவும் உறுதுணை யாக மற்றவர் பொறாமைப்படும் அளவில் எப்போதும் தோற்றாத்துணையாக மிளிர்ந் தார். திருமணநாள் அன்று ஈழத்தின் குறிப் பாக யாழ்ப்பாணத்தின் பிரபல எழுத்தாளர் பலரும் கலந்துகொண்டிருந்தனர். ஓடி ஓடி எல்லோருடனும் அடியேன் திருமணத் தம் பதியினருடன் சேர்ந்து படம் பிடிக்க எனது நண்பர்கள் என்னைக் குடைந்து எடுத்தனர்.

காலநிலைமைகள் அரசியல் போக்குகள் மாறின. கஷ்டகாலங்கள் தொடர்ந்தன. அண்ணரின் இலக்கிய வாழ்வு கடுமையாக தொடர்ந்தது. வட்ட நண்பர்களுக்கு வழி காட்டியதோடு யாழ் மாவட்ட இளம் எழுத் தாளர்கள் அணணரை மொய்த்தனர். கொக் குவில் வளர்மதி இளைஞர்களின் 'உள்ளம்' சஞ்சிகை அண்ணரின் வழிகாட்டலில் மலர்ந் தது. இந்த இலக்கிய ஆற்றுப்படுத்தல் ஈழநாதத்தில் இலக்கியப் பத்தி எழுத்தாகவும் பின்னர் ஆதாரம், ஈழநாடு வாரமலர் போன்ற பல சஞ்சிகைகளின் ஆசிரிய தலையங்கங்கள் ஊடாகவும் உள்ளங்களை கொள்ளை கொண்டார். இடப்பெயர்வுக் காலங்களிலும் இலக்கிய தாகம் கொண்ட உள்ளங்களை தம்மோடு ஈர்க்க அண்ணன் தவறவில்லை. அதுபற்றி எழுத காலம் எமக்குத் துணை செய்யவேண்டும். எமது காலத்து 80 முதல் 2010 வரையான அரசியல் போர் காலத்து சகல நிலைமைகள் ஊடாகவும் 88 இந்தியப் படை நகர்வுகள், 1990களின் யாழ்ப்பாண முற்றுகைக் காலம், சைக்கிள் ஓட்டம், ஜாம் விளக்குப் பாவனை, பனங்களி சுவர்க்காரம், பங்கர் வெட்டும் வாழ்வு, 1996 வன்னிக்கான இடப்பெயர்வு. 2006 முதல் 2009-2010 வரையான தொடர் இடப்பெயர்வுகளும் ஷெல், பொம்பர் வீச்சுகளினூடாக அகதி வாழ்வு, செட்டி குளம் முட்கம்பி வாழ்வு அத்தனையும் சலரோக நோயின் வேதனை யுடன் தாங்கி குடும்பத்தினரையும் மீட்டெ டுத்து, உறவுகள், நண்பர்கள் நிலைமை களுக்காக இரங்கி மீண்டும் யாழ். இணுவில் மண் நாடி வந்து தொடரும் வாழ்வு இலக் கிய வாழ்வு புதியதொரு உலகை தோற்று விக்கட்டும்.

வெறும் போலி, பகட்டு, ஆடம்பர வாழ்வை யாசிக்காது. ஆழமான, அறிவார்ந்த, சமூக மனிதரை மதித்து சகலருக்கும் தன்னா லியன்ற உதவி அளித்து, சமூக, அரசியலின் தார்ப்பரியத்தைப் புரிந்து காலத்தின் தேவை அறிந்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் நடைமுறைக்கு புறம்பான முறைகளில் ஈடுபட்டு பண்பாட்டில் கட்டிஎழுப்பப்படும் அன்பு, நேசம், புரிதல் கொண்டு, சிறுமை கண்டு பொங்கும் உள்ளத்தினால் தொடரும் நல்வாழ்வு இன்று புதிய இலக்கினைப் படைக்க இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் அவர்களுக்கு அருள் காட்ட வாழ்த்துவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்
பிரதம நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



அன்பும் அறநெறியும் ஆன்மீக வாழ்வும் இணைந்ததோர் அற்புதமான ஊர் இணுவையூர். போட்டதெல்லாம் பொன்னாக மிளிரும் வளங்கொழிக்கும் செந்நிறப் பூமி... மனிதனதும் மண்ணினதும் தாகம் தீர்க்கும் வற்றாத இனிக்கும் கிணறுகள்... பணம் பண்ணுவதற்கு புகையிலைக் கண்டு... பதமாக உண்பதற்கு மரவள்ளிக் கிழங்கு.... முகங்கழுவி உடுத்த உடுப்புடனேயே கும்பிட்டு வந்து தேத்தண்ணி குடிக்க வாகாய், வீட்டு வளவுக்குள் கையொழுங்கைகளின் முகப்பில், தெருவோரங்களில் என்று தடுக்கி விழும் இடமெங்கும் கோவில்கள்... வீட்டு நிகழ்வோ ஊர்ப் பொது நிகழ்வோ அடுத்த ஊருக்கு உதவி தேடிப் போகத் தேவையில்லை என்னுமளவிற்கு தொழிலுக்கொரு தெரு... ஒரு காலத்தில் தூர இடங்களில் இருந்து வந்து பிள்ளை பெற்றுத் துடக்குக் கழிவும் செய்துவிட்டும் திரும்பும் வசதி படைத்த புகழ்பூத்த மகப்பேற்று ஆஸ்பத்திரி, பண்ணிசையோ பாட்டிசையோ என்று தூங்கி எழுந்தால் கலைகளின் சங்கமம், இயல் இசை, நாடகம் என முத்தமிழ் சார்ந்த அறிஞர்கள், கலைகளைக் கற்பிக்க ஒரு நுண்கலைப்பீடம், கலைகளை வளர்க்க கோவில் விழாக்கள், ஒரு ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் என்பதை போதிக்காமல் செயற்படுத்திக் காட்டுமளவிற்கு வேட்டியும் நாசினலுமாக இன்றும் உலாவிக்கொண்டிருக்கின்ற எமது அன்றைய வாத்தியார்கள்...

இந்த மண் பற்றி இத்தனை பீடிகை ஏன்?ஒரு மனிதனைச் செதுக்குவதில் அவன் வாழும் சூழல் மிகமுக்கியமானது. இந்த மண்ணுக்குரிய சகல அம்சங்களதும் வார்ப்பாகத் தான் நான் இருக்கின்றேன். இருக்கவும் விரும்புகின்றேன். நீங்களும் கூடவிரும்பியோ விரும்பாமலோ உங்கள் சூழலிடமிருந்து தப்பிக்கவே முடியாது. பொதுவாகவே தமிழ்ச் சமூகத்தில் போதனைகள் எடுபடுவதில்லை. முக்கியமாக இணுவை மண்ணில் இந்த எடுபடாத தன்மை சற்று அதிகம். இங்கு ஒவ்வொருவரும் தாம் நடந்து கொள்ளும் முறையினூடாக அடுத்தவருக்கு வழிகாட்டலை மேற்கொள்ளலாமே தவிர வேறு எந்த வகையிலும் அறிவூட்டலை மேற்கொள்வது சாத்தியமில்லை. நான் பிறந்து வளர்ந்த இச்சூழல், இச்சூழலுடன் அடிக்கடி நான் முரண்படும் சந்தர்ப்பங்கள், இந்த முரண்பாடுகளை எதிர் கொள்ளப் பயன்படுத்தும் தந்திரோபாயங்கள், மீண்டும் இந்தச் சூழல் என்னை தன்னுள் உள்வாங்கிக்கொள்ளவேண்டும் என்ற உந்துதலுடன் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளும் முயற்சிகள் எல்லாமே இன்னொருவர் பற்றிய எமது பார்வையில் செல்வாக்கு செலுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏனெனில் அடுத்தவரை அளப்பதற்கு நாம் தேர்ந்தெடுக்கும் அளவுகோல் நாமேயன்றி வேறெதுவும் இல்லை. இணுவையூரில் அதிகம் பார்த்து வன்னி மண்ணில் அதிகம் பழகிய ஒரு இலக்கியவாதி, ஊடகவியலாளன், திறனாய்வாளன் என்ற பல்பரிமாணத் திறன் மிக்க சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களைப் பற்றிய எனது மதிப்பீடும் கூட இவற்றை அடிப்படையாகக்கொண்டே அமையும் என்பது தவிர்க்கமுடியாதது.

ஜேம்ஸ்பொண்ட் பாணியில் அல்லது அன்றைய முன்னணி நடிகர் ஸ்ரீகாந்தை நினைப்பூட்டும் வகையில் டிங்டொங் பெல்பொட்டம், சஹிகட்டோ, ஹிப்பியோ... இந்திய பாஷையில் சொல்வதானால் பாகவதர் கால கிராப்பு முடி. பெரிய கறுத்தக் கண்ணாடி என இணுவில் சூழலுக்கு முற்றிலும் பொருந்தாத ஒரு உருவமாகவே எழுபதுகளின் பிற்பகுதியில் இவரைப் பார்த்திருக்கின்றேன். இவரது தந்தையுடன் ஸ்நேகம் கொண்ட அளவிற்கு இவரைப் பார்த்து சிரிக்கக்கூட எண்ணாத பருவம் அது. எழுபதுகளின் ஆரம்பத்திலேயே எழுத்துத் துறையில்இவர்பிரவேசித்துவிட்டபோதும், கதைப் புத்தகமே கண்ணாக எனது பருவம் இருந்த போதும் இவரை இலக்கியவாதியாக அறிவதற்கான எந்தவொரு சூழலும் எனக்கு இருக்கவில்லை என்பதை நான் ஒத்துக் கொண்டேயாகவேண்டும். சிறுகதை உலகில் இவருடன்பழகக்கூடிய வாய்ப்புதொண்ணூறுகளின் ஆரம்பத்தில்தான் ஏற்பட்டது. எனினும் இவரை ஒரு ஊடகவியலாளனாகவே முதலில் சந்தித்திருக்கின்றேன். இந்தச் சந்திப்பானது இவரது வாரிசுகளில் முதன்மையானவர் என்று சொல்லக்கூடிய பு. சத்திய மூர்த்தியால் மேலும் வலுவூட்டப்பட்டது. கிராமம் கிராமமாகச் சென்று அறிவூட்டல் நிகழ்வுகளை மேற்கொண்ட அந்தக் காலப் பகுதியில் இவரின் சமூகப்பணிகளை இவருடன் இணைந்து பணிபுரிந்த பல இளம் படைப்பாளிகள் ஊடாக இனங்கண்டிருக்கின்றேன்.

எல்லாச் செயற்பாடுகளிலும் மூக்கை நுழைத்து தனக்குத் தானே கிரீடம் சூட்டிக் கொள்ளும் பண்போ அல்லது தனது வால்களை தூண்டிவிட்டு தனக்கு முகமன் தேடும் பண்போ இவரிடம் நான் கண்டதில்லை என்பதற்கு நானே சாட்சியாக அமைந்திருப்பது விந்தைதான். மூன்று சந்தர்ப்பங்கள் இவரை எடைபோடுவதற்கு போதுமானது என நினைக்கின்றேன். முதலாவது சந்தர்ப்பம் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் மக்கள் பிரச்சனைகளை இனங்காணுமுகமாக எனது நொண்டிக் காலுடன் துவிச்சக்கரவண்டியில் கிராமம் கிராமமாக திருச்செந்திநாதனுடன் கலந்துரையாடலில் பங்கேற்ற அந்த ஆரம்ப காலம் இன்றும் நினைவில் பசுமையாக இருக்கின்றது. பணத்தால் உயர்ந்து இணுவிலின் குட்டி ஜமீன் எனச் சொல்லக்கூடிய ஒரு குடும்பத்தில் பிறந்து போதாக்குறைக்கு கைநிறையசம்பளமும்எடுக்கக்கூடியதொழில் உள்ள சுட்டுப்போட்டாலும் சமூகப் பணிக்குரிய சிந்தனை வராத உயர் நடுத்தரவர்க்கப் பிரகிருதியான எனக்கும் படிப்பால் உயர்ந்து குடும்பத்தின் அநேகம் பேர் அரச உத்தியோத்தில் இருக்கின்ற அதே வர்க்கத்தைச் சார்ந்த திருச்செந்திநாதனுக்கும் சமூகப்பணியில் ஆர்வம் வந்ததற்கு குடும்பச் சூழலுக்கு மட்டுமன்றி இணுவை மண்ணின் சூழலுக்கும் பெரும்பங்குண்டு. தாம் முன்பே அறிந்திராத மனிதர்களின் ஆற்றலை ஒருவருக்கு எடுத்துரைத்து அவரை அம்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்களிடம் சுயமாக அணுகச் செய்து அவர் களை ஒரு நிகழ்வில் பங்கேற்கச் செய் வது பொதுவாக சராசரி மனிதரிடம் காண முடியாததொன்று. சமூகப் பணி ஆற்று வதற்கும் 'பெரிசுகள்' வந்துதான் அழைக்க வேண்டும் என்ற வர்க்கத்தில் நான் இல்லை என்பதை உணர்ந்து சிறிசுகளை என்னிடம் அனுப்பினாரா அல்லது சிறிசுகளிடம் தலைமைத்துவப் பாங்கை வளர்த்துவிடுவது என்ற நோக்கில் திரைமறைவில் இருந்து கொண்டே அனைத்தையும் செயற்படுத்தி னாரா என்பதை மதிப்பிடும் முதிர்ச்சி அந்த நேரத்தில் என்னிடம் இருக்கவில்லை. எனி னும்கூட முகத்துக்குப் புன்னகைத்து முதுகுக் குப் புறங்கூறும் பண்பினராக அன்றி இன்று வரை என்னுடன் அதே அன்புடனும் மதிப் புடனும் இருக்கக்கூடிய ஒரு இளைய தலை முறையொன்று அவரால் வளர்க்கப்பட்டிருப் பது அவர் இந்த மண்ணுக்கு விட்டுச்செல்லப் போகும் சொத்து என்பதில் எனக்கு மிகுந்த மனநிறைவு உண்டு.

மற்றிரு சந்தர்ப்பங்களும் தொண்ணூறு களின் பிறபகுதியில் ஏற்பட்டவை. பொது வாகவே இலக்கியச் சூழலில் பல கட்சிகள் இருப்பது தவிர்க்கமுடியாதது. ஒரே கட் சியைச் சேர்ந்த இருவர் சந்திக்கும் சந்தர்ப் பங்களிலெல்லாம் மாற்றுக்கட்சியைப் பற் றிய பிரலாபமே மேலோங்கியிருக்கும். புதுக்குடியிருப்புக்கு வரும்போதெல்லாம் அவருடன் அடிக்கடி கலந்துரையாடும் சந் தர்ப்பம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எந்த வொரு சந்தர்ப்பத்திலும் அடுத்தவரை விமர் சிக்கும் பண்பை நான் இவரிடம் கண்ட தில்லை. பார்த்தவுடன் ஒரு சிரிப்பு. மாத மலருக்குரிய படைப்பை நேரத்திற்குள் தந்து விடுமாறு பணிவான ஒரு வேண்டுகோள். அத் துடன் நாம் திரும்பவேண்டியதுதான். மாத மலரை விமர்சிப்பவர்கள் தொடர்பாக ஏதா வது கேட்டால் ஒரு சிறுசிரிப்புடன் பதில் முடிந்துவிடும். மனிதர்களை விமர்சிப்பதை விடுத்து விவகாரங்களில் மட்டும் கவனம் செலுத்தும் எனது பண்பை உணர்ந்து தான் இத்தகைய போக்கை இந்த இலக்கியவாதி பின்பற்றுகின்றார் என்று தான் ஆரம் பத்தில் நினைத்திருந்தேன். ஆனால் இவர் பற்றிய எனது தேடலில் நான் சந்தித்த அனை வரிடமும் இக்கேள்வியை எழுப்பியிருந்த போதும் அடுத்தவர் பற்றி பெரிதாக அலட் டிக்கொள்ளும் பண்பு இவரிடம் இல்லை என்பதை அனைவருமே வலியுறுத்தியிருந் தனர். நான் பார்ப்பது, நினைப்பது அனைத் தையும் தனது படைப்பில் புகுத்தி விடுவதாலோ என்னவோ இவரிடம் அலட் டல் குறைவு அல்லது இல்லை.

என்னை ஒரு இலக்கியத் திறனாய் வாளராக சமூகத்திற்கு இனங்காட்டிய நிகழ்வின் பின்னணியிலும் திருச்செந்தி நாதனது பங்கு அளப்பரியது. தனது கவி தைத் தொகுதிக்கு மதிப்பீட்டுரை தர வேண்டும் என்ற வேண்டுகோளுடன் என்னி டம் வந்த அந்த இளைஞனை இப்போதும் நினைவு கூருகின்றேன். உணவு, உடை, உறை யுள் என்ற மூன்றும் அரைகுறையாகத் தன் னும் கிடைக்கப்பெற்றவனுக்குத்தான் கலை இலக்கியத்திற்கு நேரம் இருக்கும் என்ற ஆழ மான நம்பிக்கை உடையவளாகத்தான் இன்றும் இருக்கின்றேன். இந்த எண்ணத்தை எனக்குள் உருவாக்கியவர் இணுவி லிலேயே மிக வசதி படைத்தவர்களில் ஒருவ ராக இருந்த எனது தந்தைதான். 'புக்கை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பவன்தான் தேவாரம் பாடுவான். இல்லையேல் தனது வயிற்றுப்பாட்டுக்கு வழியைத் தேடுவதே அவன் முதல் பணியாக இருக்கும்' என்று நகைச்சுவையுடன் சொல்லிக்கொண்டே அடுத்தவருக்கு உதவுவதில் முன்னிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பு இத்தகைய ஒரு சிந்தையை எனக்குள் ஏற்படுத்தியதோ தெரியவில்லை. இலக்கியத்தை சுவைப்பது என்ற ஒன்றைத் தவிர ஏழ்மையில் உழல்வோருக்கு என்ன செய்யலாம் என்று பெண்கள் புனர்வாழ்வு நிலையம் ஒன்றின் தலைவராக இருந்து அவர்களின் அடிப்படை வசதிகளுக்கு எங்கே போய் எப்படி இறைஞ்சலாம் அங்கலாய்த்துக்கொண்டிருந்த அந்தக் காலப்பகுதியில் வந்ததுதான் முல்லைக்கமல் என்ற அந்த இளைய கவிஞனின் இந்த வேண்டுகோள். வந்தாரை வரவேற்கும் வன்னி மண்ணில் எங்கள் அனைவரையும் முகஞ் சுழிக்காது உள்வாங்கிய அந்த மண்ணின் வாரிசு ஒன்றை ஊக்குவிக்கவேண்டிய அனைவருமே கைவிரித்த நிலையில் முகம் தெரியாத அந்த கவிஞனுக்கு நம்பிக்கையூட்டி தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமலேயே அவனை என்னிடம் அனுப்பியவர் இந்த மனிதர். போராட்ட சூழல் ஒன்றில், வயிற்றுப்பாட்டுக்கு வழியற்றவர்களுக்கு வழிதேடுவதிலேயே முழுநேரத்தையும் செல விட்டிருந்த எனக்கு இலக்கிய விமர் சனத்தில் எனக்கு இருந்த ஆர்வமின்மையை எடுத்துக்கூறினேன். 'கவிதை சரியில்லை என் றால் மேடையிலேயே வேண்டிக்கட்டுவாய்' எனப் பயமுறுத்தியும் பார்த்தேன். அவன் மசிந்து கொடுக்காமல் நீங்கள் வந்தாற் போதும் என சிறுபிள்ளைபோல் கண் கள் கலங்க வேண்டியது இன்றும் பசுமை யாக இருக்கிறது. இறுதியில் வேறு வழி யின்றி சம்மதம் தெரிவித்துவிட்டு யார் உன்னை என்னிடம் அனுப்பியது எனக் கேட்டேன். 'மிஸ்லிடம் போ அவர் சம்மதிக்காவிட்டால் யார் போய்க்கேட்டா லும் சரிவராது. அவரைச் சம்மதிக்கச் செய் வது உனது கெட்டித்தனத்தில்தான் உண்டு' எனக் கூறி 'அண்ணை' தான் அனுப்பிவர் என்று சிறு புன்னகையுடன் கூறினான். அந்த வெளியீட்டு நிகழ்வில் எவ்வளவிற்கு அவனது கவிதை வெற்றியீட்டியதோ அதைவிட மேலாக நடுநிலைவாய்ந்த ஒரு திறனாய் வாளராக சமூகம் என்னைக் கொண்டாடியது. அந்தத் தருணத்தில்கூட 'என்னால் தானே எல்லாம்' என்ற மிடுக்கோ, மிதப்பான பார்வையோ இன்றி அல்லது 'எப்படி என்ரை விளையாட்டு' என்று இன்றைய இலக் கியவாதிகளின் பாணியில் தனது காலில் விழுந்து கும்பிடப்பண்ணும் மனிதராக அவரது வாரிசுகள் அவரை இனங்காண வில்லை என்றே படுகின்றது. பள்ளிப்பருவத் தில் நான் படித்த முதல் நாவலான பார்த்த சாரதியின் பொன்விலங்கில் தொடங்கி, ஜானகிராமன், ராஜம்கிருஷ்ணன் போன் றோரின் சமூக எழுத்துக்களில் மனதைப் பறிகொடுத்து மேத்தாவின் கவிதைகளில் முக்குளித்து, மாப்பசான், அன்ரன் செக் கோவ், லாவ்சா, போதாக்குறைக்கு ரஷ்யாவின் புரட்சிகர எழுத்துக்கள் என வெறும் வாசகி யாக சிறுவட்டத்துக்குள் திருப்திப்பட்டுக் கொண்டிருந்த என்னை ஒரு பெரிய வட்டத் துக்குள் தள்ளி உலக இலக்கியத்தின் நெழிவு சுழிவுகளை விமர்சன நோக்கில் ஆழ ஆரா யத் தூண்டிய ஒரு நிகழ்வாகவே இதனைப் பார்க்கின்றேன்.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் தங் கள் படைப்புகளுக்குச் சரியான தளமின்றி வாய்ப்புகள் கிடைக்காது விரக்திநிலையில் இருந்த இளைய தலைமுறைப் படைப் பாளிகளின் விரக்தியும் சமூக எழுத்துக்களைப் புறந்தள்ளி தன்னுணர்வு எழுத்துக்களை மோகிக்கும் சூழலுக்கு ஒரு எதிர்ச்சூழல் உருவாகவேண்டும் என்ற வேகமும் இணைந்து தோற்றம் பெற்ற 'எழு' கலை இலக்கி யப் பேரவையின் காப்பாளர்களில் ஒருவ ராக நான் இருக்கவேண்டும் என்ற இவரது விருப்பத்தைக்கூட இவரது வாரிசுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டே செயற்படுத்திய பண்பு இன்றும் வியப் பிற்குரியது. நெருக்கடி மிகுந்த கால கட்டத்திலும் மனந்தளராது ஆற்றல்மிக்க புதிய படைப்பாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவந்த எழு சிறுகதைகள், முல்லைக் கமலின் 'மனதும் மனதின் பாட லும்' கவிதைத் தொகுப்பு இந்த எழு கலை இலக்கியப் பேரவையின் வெளியீடுகளே.

'ஒருவனின் எழுத்து, அவனது செயற் பாடு, சமூகம் மீதான அவனது கரிசனை எல்லாவற்றுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவற்றில் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரித்துப் பார்க்கமுடியாது' என வெட்டுமுகம் சிறு கதைத் தொகுப்பின் முன்னுரையில் இவர் கூறிய கூற்றுக்கு முரணாக இவரது எந்த வொரு படைப்பும் இல்லை என்பதை இவ ரது படைப்புகளை வாசித்தவர்கள் ஏற்றுக் கொள்வர் என நினைக்கின்றேன். தனது சுற்றா டலை, தனது சமூகத்தை, தனது இனத்தைப் பாதிக்கும் ஒவ்வொரு விடயமும் தன்னை எழுதத் தூண்டுகிறது என்ற இவரது கூற்றுக் கமையவே இவரது படைப்புகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆழ்ந்த அவதானிப்பும் அனைத்து நடவடிக்கைகளில் கைகொடுக்கும் மனப்பான்மையுமன்றி மக்கள் எழுத்து சாத்தி யப்படாது.

'நவீன தமிழிலக்கியத்துறைகளில் சமூ கப் பொறுப்புணர்வுடனும் அயரா ஊக்கத் துடனும் செயற்பட்டு வரும் ஈழத்து எழுத் தாளர்களில் தனிக் கவனத்துக்குரியவர்களுள் ஒருவராக திகழ்பவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எனக் கூறும் கலாநிதி நா. சுப்பிரமணியன் (வெட்டுமுகம் அணிந் துரை), திருச்செந்திநாதனின் படைப் பாற்றலின் முனைப்பு தன்னைச் சூழ உள்ள மக்கள் திரளின் நலனை முதன்மைப் படுத்தும் ஒன்று என்பது பற்றி யாருக்கும் ஐயத்துக்கு இடமில்லை எனக்கூறும் பேரா சிரியர் சி.சிவசேகரம் (மணல்வெளி அரங்கு மதிப்பீட்டுரை), இந்த மண்ணில் நடை பெறும் வாழ்க்கைச் சிதறல்களுக்கு இதற்குள் நின்றுகொண்டே முகங்கொடுக்கவேண்டும் என்ற ஒரு எண்ணத்துணிபு திருச்செந்தி நாதனிடத்து துல்லியமாக காணப்படுகின்றது எனக்கூறும் பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகிய மூன்று திறனாய்வாளர்களது கூற் றுக்களுக்கிடையிலான ஒற்றுமை இதற்கு மேலும் வலுவூட்டுகின்றது.

கதைகளில் மட்டும் தன்னை ஒரு 'திரு சுத்தம்' எனக் காட்டிக்கொள்ளும் பண்பு இவருக்கு இருந்ததில்லை. இவரது வாழ்வு தெளிந்த நீரோடை போன்றது. இவரது வெற் றிக்குப்பின்னால் இவரது மனைவி மட்டு மல்ல, இவரை சமூகப்பொறுப்புமிக்க படைப் பாளியாக உருவாக்குதலில் இவரது தந்தை யின் பங்கும் பண்புமிக்க மனிதனாக உரு வாக்குவதில் தாயின் பங்கும் நெருக்கடி காலத்து தோழியாக மாறி தோளோடு தோள் நின்று சமூகத்திற்கு உதவியதில் இவரது மனைவியின் பங்கும் அளப்பரியது. நெருக்கடி மிகுந்த சூழலில் சமூக மாற்றத்திற்கான எழுத் துக்களை மிக அதிகளவில் எழுதிக் குவிப் பதற்கு எந்தவொரு பிசிறலுமற்ற அன்பு, பண்பு, ஆதரவு, சமூகப்பற்று அனைத்தையும் தன்னுள் பூரணமாகக் கொண்ட ஒரு குடும்பச் சூழலே உறுதுணையாக அமையமுடியும் என்பதற்கான நடமாடும் சான்று இவர். தான் ஒரு 'தேடுபொருளாக' இருந்த காலத்தில் கூட தனது குடும்பத்தின் ஆதரவே தனது பல மாக இருந்திருக்கின்றது என்று இவர் கூறு வதிலிருந்து ஒரு மனிதனை சமூக மனித னாகச் செதுக்குவதில் ஒரு குடும்பத்தின் பங்கு எத்தகையது என்பதை புரிந்துகொள்ள முடிகின்றது.

கிட்ட இருந்து பழகியவர்களுக்கு திருச் செந்திநாதன் ஒரு மனிதத்தன்மை மிக்க மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர். அளவோடு பேசி அன்போடு உபசரித்து அதிகமாக ஊக்குவிக்கும் ஒரு பண்பாளர். இலைமறை காயாக இருந்து இளைய தலை முறையின் படைப்பாற்றலை ஊக்குவித்தது மட்டுமன்றி அதற்கு களமமைத்தும் கொடுத்த ஒரு பண்பாளர் என்பது வன்னி மண்ணில் இவரோடு பழகும் வாய்ப்புக் கிட்டிய 'பெரி சுகள்' பலரினதும் ஒருமித்த கருத்து.

'காய்தல்' இன்றி 'உவத்தலை' மட் டும் மூலமாகக் கொண்டு இவரால் உருவாக் கப்பட்ட இளைய தலைமுறைப் படைப் பாளிகள் மிக அதிகம். சிறுகதை என்றால் இது தான் இலக்கணம். கவிதைக்கு இலக் கணம் இது என்று குருகுலக் கல்வியின் மனப்பாடம் செய்விக்கும் போக்குக்கு மாறாக இன்றைய குழந்தைக்கல்வி போல் எதை யும் எந்த வடிவத்திலும் உருவாக்குவதை ஊக்குவிப்பவர் இவர் என்பது இவரால் வளர்த் தெடுக்கப்பட்ட படைப்பாளிகளின் ஒருமித்த கருத்து.

சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் இணுவை மண்ணின சராசரி வார்ப்பில் ஒன்று. என்னைப் போன்றே இவரது வாழ்நிலை யிலும் இவர் பிறந்து வளர்ந்த இணுவை மண்ணின் சூழல், இச்சூழலுடன் அடிக்கடி இவர் முரண்படும் சந்தர்ப்பங்கள், இந்த முரண்பாடுகளை எதிர்கொள்ளப் பயன்படுத் தும் தந்திரோபாயங்கள், மீண்டும் இந்தச் சூழல் இவரை தன்னுள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற உந்துதலுடன் இவர் மேற் கொள்ளும் முயற்சிகள் போன்றன அதிக செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை இவரது படைப்புகள் வெளிக்கொணர் கின்றன. கோவில்களால் நிரம்பப்பெற்ற இணுவை மண்ணின் கோவில் உற்சவங்களில் இறை நம்பிக்கை அதிகம் உள்ள இவரைக் காண்பது மிக அரிது. சமூக ஒன்றிணைப்பு மையங்கள் என்ற பணியிலிருந்து விலகி சமூகத்தின் செல்வாக்கு மிக்க ஒருசிலரின் ஆட்சி மையங்களாக கோவில்கள் இருப்பதில் இவருக்குச் சம்மதமில்லைப்போலும். எனி னும் 'யதார்த்தவாதி வெகுசனவிரோதி' என்ற வகையில் இவர்களுடன் வரிந்து கட்டிக்கொண்டு மல்லுக்கட்டாமல், மேடை களில் நின்று விளாசித் தள்ளாமல், தனக்கு மிக வும் கைவந்த கலையான எழுத்தை ஆயுதமா கக் கொண்டு தட்டிக்கேட்க முனையா மல் மௌனமாக ஒதுங்கிவிடும் சுபாவம் இவருடையது. மதம் 'மதமாக' வளர்ந்து வியாபிப்பதை தனிமனிதனாக நின்று எதிர்ப்பது சாத்தியமற்றது என்ற மனமுதிர்ச்சி இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். அதே சமயம் ஆயுதத்தை விட பேனா முனை வலு வானது என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு மாற்றம் ஏற்படும் என இவர் நம்பிய விடயங்களிலெல்லாம் தனது எதிர்ப் புணர்வை தனது எழுத்துக்களினூடாக வெளிப்படுத்தியிருக்கின்றார் என்பதற்குச் சான்றாக இருப்பவை மதவடி, குப்பைக்கூடை எண்பதுகளின் பிற்பகுதியில் உருவான இவரது பத்தி எழுத்துக்கள்.

படைப்புலகம் என்று வரும்போதுகூட தனிமனித ரீதியில் எதிரும் புதிருமான இலக் கியவாதிகள் அனைவருடனும் ஒரேமாதி ரியான உறவு பேணும் மனிதராக இனங் காணப்படுகின்ற சிதம்பர திருச்செந்திநாதன் படைப்பாளி என்ற ரீதியில் வாழ்க்கை - படைப்பு, சொல்-செயல், தனிமனித ஆர்வம், சமூக ஆர்வம், தனிநபர் பொறுப்பு - சமூகப் பொறுப்பு போன்ற அம்சங்களில் எதிரும் புதிருமானவர்களை இனங்கண்டு அவர் களது எழுத்துக்களுக்கிடையில் இருக்கும் முரண்பாடுகளை தனது எழுத்துகளால் சுட் டிக்காட்டவும் பண்பான முறையில் தட் டிக்கேட்கவும் முடிந்திருக்கிறது என்பதற்கு மிகச் சிறந்த சான்றாக உள்ளவை எண்பது களின் பிற்பகுதியில் இவரால் படைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட 'இலக்கியாவின் இலக்கியப்பக்கங்கள்' பல்வேறு பிரச்சினைகளுடன் கூடிய சமூகத்தின் வெட்டுமுகத்தைக் காட்டும் சிதம்பர திருச்செந்திநாதன் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கும் போதகராக தம்மைக்காட்டிக்கொள்ளவில்லை. இவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள் என வாசகர்களை அழைக்கும் அளவோடு நிற்கின்றார் என வெட்டுமுகம் சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கிய அணிந்துரையில் நா.சுப்பிரமணியன் கூறுவதில் மிகையேதுமில்லை.

படைப்பாளியாக உருவாகுவதற்கு சமூகம்பற்றிய ஆழ்ந்த அவதானிப்பு, அக்கறை, மொழியறிவு ஆகியவற்றுடன் ஏற்கனவே சமூகம் சார்ந்து படைக்கப்பட்ட பல்லின, பல்மொழி இலக்கியங்கள் தொடர்பான சிறு வாசிப்பும் அவசியமானது. ஆனால் ஒரு திறனாய்வாளனாக உருவாகுவதற்கு சிறுவாசிப்பு போதுமானதல்ல. ஆழ்ந்த தேடல் இன்றி எதனையும் காய்தல் உவத்தல் இன்றி விமர்சிப்பது சாத்திமற்றது. திறனாய்வு என்பது ஒரு படைப்பின் தன்மையை சரியாக இனங்கண்டு அதன் சமூகப் பெறுமானத்தை அளவிட்டு, தனிமனித ரீதியில் தமக்குச் சரி என்று படுவதை அல்லது சமூக ரீதியல் சமூகத்திற்கு பொருத்தமானவற்றை எவ்வித தயக்கமுமின்றி வெளிப்படையாக தைரியமாகச் சொல்வது ஒரு படைப்பை படைப்பாளியின் முன்னே கூறுபோடுவதற்கு படைப்பாளி விரும்புவானா, அல்லது படைப்புச் சூழலில் முதுகு சொறிந்தால் மட்டுமே தனது இருப்பை நிச்சயப் படுத்திக்கொள்ளமுடியும் என்ற யதார்த்தத்தை எதிர்த்து தனக்குச் சரி என்று படாத படைப்புகளை விமர்சிப்பதற்கு உடன் படாத நேர்மையை திறனாய்வாளன் கொண்டிருக்கின்றானா என்பதெல்லாம் திறனாய்வுக்கு தேவையான மிக அடிப்படையான விடயங்கள். விமர்சனம் செய்வதற்கு கவிஞர் சிவசேகரத்தின் 'விமர்சகனுக்கான பத்துக் கட்டளைகள்' மிக மிக அவசியமானது என்பதையே தற்போதைய தமிழ் இலக்கிய சூழல் எமக்கு புலப்படுத்துகின்றது. இக்கட்டளைக்கு உடன்படாததன் ஏற்படும் இலக்கியச் சூழலின் எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் மனோதிடம் விமர்சகனுக்கு மிக அவசியமானது. தனது படைப்பாற்றலுக்கு தனது வாசிப்பே அடிப்படை என தனது முதலாவது சிறுகதைத் தொகுப்பின் முதல் வரியிலேயே இவர் தெளிவாகக் கூறிவிட்டார். 'இலக்கியக் குழுக்களாலும், கொள்கைகளாலும், வாதங்களாலும், அதனூடாக எழுந்த சர்ச்சைகளாலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இல்லாமல் தனிமனித காழ்ப்புணர்வுகளின் அடிப்படையிலேயே இவர்களின் விமர்சனங்கள் அமைந்துவிடுகின்றன' என்ற இவரது நியாயமான கவலையும் (மல்லிகை 1990), இவரது திறனாய்வுகளும்கவிஞர்சிவசேகரத்தின்'விமர்சகனுக்கான பத்துக் கட்டளைகள்' என்ற கவிதையின் இறுதிப் பகுதியில் சொல்லப்பட்டவற்றுக்குள் நின்றுகொண்டு அடுத்த வரைப் பற்றியோ, அடுத்தவைகளைப் பற்றியோ வருந்தாமல் நடுநிலையில் தனது திறனாய்வைத் திறம்பட மேற்கொள்ளும் ஒருவர் இவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

இவரின் ஊடகவியல் பங்களிப்பு என்பது காலத்தால் ஈழத்தமிழ்ச் சமூகத்திற்கு இவர் செய்த உதவியாகவே கொள்ளத்தக்கது. எழுபதுகளும் எண்பதுகளும் படைப்பிலக்கியத்தில் முழுக்கவனமும் செலுத்திய தாக இருக்க தொண்ணூறுகளில் வெளியீட்டு முயற்சிகளே இவரது பிரதான செயற்பாடாக இருந்திருக்கிறது. நெருக்கடி மிகுந்த காலப் பகுதியில் இலாபநோக்கத்தை அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகக்கொண்டு உள்ளடக்கத்தைவிட வடிவமைப்புக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய மேலைத்தேய பாணியிலான வெளியீட்டு முயற்சிகளுக்கான வாய்ப்புகள் நொடிந்து போன நிலையில் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி உள்ளடக்கத்துக்கு முதன்மை கொடுத்து வெளியீட்டு முயற்சிகளை மேற் கொண்ட ஒருசிலரில் சிதம்பர திருச்செந்தி நாதனின் பங்கு அளப்பரியது. 80களிலேயே வெளியீட்டு முயற்சிகளில் இணைந்து பணி யாற்றிய அனுபவத்துடன் 90களில் வெளி வந்த ஈழத்து வெளியீடுகள் அனைத்தினது வடிவமைப்பிலும் முற்றுமுழுதாக இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. கற்றறிவை மட் டும் அடிப்படையாகக் கொண்டு வெளியீட் டின் உருவமைப்பில் அக்கறை செலுத் திய ஊடகவியலாளர்கள் உணவு மருந்து மட்டுமன்றி புத்தகத் தயாரிப்பிற்கான மூலப் பொருட்களுக்கும் தடைவிதிக்கப்பட்ட நெருக்கடி காலத்தில் சோர்ந்து ஒதுங்கிய போது கொப்பித் தாள்களில் உள்ளூர் கறுப்பு மைகளையும் மரக்கட்டையில் உரு வாக்கப்பட்ட அச்சுக் கட்டைகளைப் பயன் படுத்தி ஏராளமான வெளியீடுகளை உரு வாக்க அயராது பாடுபட்டவர் என்ற பெரு மையை ஈழத்தின் கடந்த முப்பது ஆண்டு கால போராட்ட வாழ்வியலை ஆவணப்படுத்த முயலும் எவருமே பதிவர்.

இவரது இலக்கியப் பயணத்தினூடாக இவரைப் பார்க்க முனையும்போது தனது சூழல் மீதான ஆழ்ந்த அவதானிப்பு இவரது படைப்புகளுக்கு ஆதாரம். அடுத்தவர் பிரச் சினைகளை தனது பிரச்சினைகளாக நினைத்து அதனை அனுபவித்து சேர்த்த அனுபவங்கள் இன்னொரு முதலீடு. பொய்மை, பொறாமை, பொருளாசை, சீதன வழக்கம், இனப்பிரச் சினையின் கொதிநிலைச் சூழலின் அவலங்கள் முதலியன சமூகத்தில் நிகழ்த்தி வந்துள்ள பாதிப்புகளைச் சிதம்பரநாதனின் கதைகள் சித்தரிக்கின்றன என்ற நா. சுப்பிரமணியன் அவர்களின் கூற்றில் மிகையொன்றும் இல்லை என்பதற்கும், 'சூழலும் வாழ்வியல் தொடர் பான பல்வேறு நெருக்கடிகளும் பொருண் மியச் சுமைகளும் இருந்தாலும் எங்கள் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுள் ஒருவனாக நானும் இருப்பதையிட்டு சந்தோசப்பட முடிகின்றது என என்னுடையதும் அம்மா வினுடையதும் என்ற சிறுகதைத் தொகுப் பின் முன்னுரையில் இவரது கூற்றின் எதிரொலிகளுக்குமான ஓரிரு எடுத்துக் காட்டுகள் இவை.

'நிவாரண வெட்டால் ஒடுங்கிப்போன பொதுசனம் போல விளக்கு வெளிச்சம் துடித் துக்கொண்டிருந்தது'.

'மேலே பார்த்தால் வானம் எங்கள் எதிர்காலம்போல் இருக்கவில்லை. துலக்க மாகப் பிரகாசித்தது'.

'சமகால நிகழ்வுகைள் போலவே வெய்யில் அகோரமாக எறித்தது' என்றெல் லாம் எழுதுவதற்கு சூழலுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தால் மட்டுமே உண்டு. அக்கறையின்றி சீர்கெட்டுப்போன வளவுப் பயிர்களை ஆட்சி யில் உள்ளவர்கள் மறந்துபோன தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒப்பிடவும், 'வேலைக்குப் போட்ட அப்ளிகேஷனை கவனிப்பாரற்றுக் கிடக்கும் அரசாங்கத்துக்கு அனுப்பும் மகஜருக்கு ஒப்பிடவும் முடியும். 'நகரத்து அழுக்கினை கையில் தாங்கிக் கொண்டிருந்த பெண்மணி' என பிச்சைக்காரியை வர் ணிப்பதற்கும் நமது செம்பாட்டு மண்ணை 'ரத்தம் ஊறிய மண்' என்று சொல்வதற்கும் சூழல் தொடர்பான சமூகப் பிரக்ஞை அவசியமானது. மினிபஸ் நெரிசலிலிருந்து விடுபடும் குதூகலத்தை பாடசாலை முடிந்து வெளியேறும் சிறுபிள்ளைகளின் குதூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலத்திற்கு ஒப்பிடுவதற்கு அது தொடர்பான ஆழ்ந்த அனுபவம் வேண்டும். 'உடல் களைக்க, மனம் களைக்க, தாகமும் பசியும் இணைந்து இம்சைப்படுத்த கிளாலிக் கடற்கரையில் படகுக்காகக் காத்திருந்த வன்னி இடப்பெயர்வைக்கூட இனிமையான பயணம் என்று சொல்வதற்கு முதிர்ச்சியற்ற சிறுபிள்ளைகளுக்கோ பருவ வயதினருக்கோ பொருந்தலாம். நான்கு தசாப்தங்களைக் கடந்த ஒருவருக்கு இது முடிகிறது எனில் சூழலுடன் பொருந்தி வாழும் மனப்பாங்குக்கும் மேல் சூழலை நேசிக்கும் தன்மையால் மட்டுமே சாத்தியமாகும்.

'எதிரில் வருவோர் எல்லோரையும் விழியாலே எறிந்து கலைத்து, அந்தக்கணத்தில் அவர்களிடம் ஏற்படும் அதிர்வுகளை ரசிக்கும் பெண்ணின் பருவத்தை வெறும் அவதானிப்பால்மட்டும்வெளிக்கொண்டுவரமுடியாது. அந்த அவதானிப்பை தனக்குள் போட்டுப்பார்த்து தனது அனுபவமாக்கினால் மட்டுமே அவ்வாறு எழுதவரும். 'செம்மண் தரை தோசைக்கல்லாய் சுட்டது' என்று எழுதுவதை அம்மாவிற்கு கூடமாட ஒத்தாசை புரியும் மகனின் அனுபவமாகவோ அல்லது வேலைக்குப் போகும் மனைவிக்கு ஒத்தாசை புரியும் வேலைக்குப் போகும் ஒரு கணவனின் அனுபவமாக எடுத்துக்கொள்ளமுடியாது. சூழலை தனக்குள் முழுமையாக உள்வாங்கி, அதனுடன் ஒன்றிணைந்து அதனுடன் இரண்டறக் கலந்து அதனை அனுபவித்து வாழும் தன்மையின் ஊடாக மட்டுமே இத்தகைய உவமைகளை எழுத்தில் படைக்கமுடியும்.

'வெறுமனே விரக்தியும் புலம்பலும், இருப்புத் தொடர்பான அச்சமும் அதனால் எழும் அகமனத்து உளைவுகளுமே நல்ல இலக்கியங்களாக அமைந்துவிடுவதில்லை. வாழ்வு பற்றிய தேடலும், அக்கறையும், எதிர்கால நம்பிக்கையுமே இலக்கியத்தின் கருப்பொருளாக அமைவது சிறப்பானது என்பதுடன் இவையே மனிதனை சூழலுடன் சக மனிதர்களுடனும் பிரக்ஞை பூர்வமான உறவுகளை பேணத் தூண்டுகின்றன' என்பது இலக்கியம் தொடர்பான சிதம்பர திருச்செந்திநாதனது கருத்தியல். நான் வேறு எனது படைப்பு வேறு என்றோ, ஒரு இலக்கியவாதியின் படைப்பை மட்டும் மதிப்பிடுங்கள் அவரின் பின்னணியைப்பற்றி ஏன் அலட்டிக்கொள்கின்றீர்கள் என்றோ கோஷமெழுப்பும் இலக்கியப் பரம்பரையினராக சிதம்பர திருச்செந்திநாதன் இருந்திருப்பாராயின் இந்த எழுத்துக்களை எழுதவேண்டிய தேவையே எனக்கு இருந்திருக்காது. ஓரிரு எழுத்துக்களைப் படைத்தவுடனேயே முதுகு சொறிவதற்கும், முகஸ்துதிக்கும் ஆள் தேடி அலையும் வேகத்தில் உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற சத்தியவாக்கை காற்றில் பறக்கவிடும் பச்சோந்தி எழுத்தாளர்கள் மத்தியில் இவர் மிக வித்தியாசமானவர். எழுதின ஒரு எழுத்துக்கு சுவிப் அடித்த மாரி பவுசு வந்த கையுடனேயே தம்மைத் தாமே மூத்த எழுத்தாளராக பிரகடனப்படுத்தி இளைய தலைமுறையை தமக்கேற்ற வகையில் முதுகு சொறிவதற்குப் பழக்கும் எழுத்தாளர் வட்டத்துக்குள் அடங்காமல் எழுதத் தொடங்கி மூன்று தசாப்தங்களைக் கடந்துவிட்ட பின்னரும் குடத்திலிட்ட விளக்காக ஆரவாரமின்றி அணையாத தீபமாக இன்றும் இருப்பவர். எனது எழுத்தும் எமது தனிப்பட்ட வாழ்வியலும் ஒன்றிலொன்று பிரிக்கமுடியாதளவிற்கு நெருக்கமாகப் பிணைந்திருப்பவை எனத் தீர்க்கமான முடிவுடன் வாழும் இந்த மனிதரை இவரது எழுத்துக்கள் தான் அறிமுகப்படுத்துகின்றது. இவரின் வாழ்வியலுக்கும் எழுத்துக்குமிடையிலான பிணைப்பை ஊரவள் என்ற முறையில் உறுதிப்படுத்தவேண்டிய அவசியமில்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. லோகதயாளன்
ஊடகவியலாளர்



எல்லோருக்கும் தொழில் அல்லது கல்வியில் மட்டும்தான் ஆசான்கள் அமைவது வழமை. ஆனால் எனக்கு மட்டுமே தொழில், கல்வி, மண வாழ்க்கை அனைத்திற்குமே ஒரே ஆசானாய் விளங்கியவர் மட்டுமன்றி ஓர் சகோதரனால் வழங்கக் கூடிய அனைத்து உதவிகள், ஆலோசனைகளையும் வழங்கியவர் எங்கள் உடன்பிறவா சகோதரர் அண்ணன் திருச்செந்திநாதன்.

கடந்த 1993 ஆம் ஆண்டில் அறிமுகமான எம் நட்பு இன்று இருதசாப்தங்களையும் தாண்டி வளர்வதற்கு காரணம் எதிலும் நேர்மை. பல இடர்காலத்திலும் சரி இன்னல் காலத்திலும் சரி தனது சுய கௌரவத்தை எதிலும் என்றுமே விட்டுக் கொடுக்காது மலர்ந்த புன்னகையுடன்மட்டுமேகாட்சிதருவார். அவ்வாறேநாமும்நடக்கவேண்டும். எதற்கும் எவரிடமும் விலைபோய்விடக் கூடாது என சகலதிலும் வலியுறுத்துவார்.

இறுதி இடப்பெயர்வு காலத்திலும் இறுதிவரை ஒன்றாகவே பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தோம். பலருக்கும் இடப்பெயர்வு காலத்தில் இருப்பிடம் அமைப்பதும், இடம்தேடுவதுமே பெரும் சுமையாக இருந்தது. அதில் ஓர் சுமை மட்டும் இவருக்கு இருந்ததே கிடையாது. ஏனெனில் இவரின் குணத்தை அறிந்த அனைவரும் உங்கள் வசிப்பிடம் இடம்பெயர வேண்டி வரும் சூழல் ஏற்படின் உடனே எமது இடத்திற்கு வந்து விடுங்கள் என்று முற்பதிவு செய்து விடுவர். இது இவர் பிறரிடம் பழகும் தன்மையின் எடுத்துக்காட்டு.

இன்று நானும் பத்திரிகைத் துறையில் ஓர் சிறியவனாக வருவதற்கு முதன் முதல் என்னை உந்தியவர் என்றால் அது மிகையாகாது. இன்றைக்கு 7 வருடங்களுக்கு முன்பு இத்துறையை முதலில் என்னுள் புகுத்தியவரும் இவரே. அப்போது எனது பணி வேறாக இருந்த போதும் இதைப் பகுதிநேரமாக பணியாற்றிய என்னை நீ முழுநேரமாக மாறி இதனைப் புரியமுடியும் என்று கூறியதற்கமைய இதனை முழுநேரப் பணியாகத் தொடர்ந்தேன்.


இவ்வாறு நான் சிறுவனாக இருந்தபோது ஆரம்பமான உறவு கல்வியைத் தாண்டி தொழில், பணி மற்றும் இல்லறம் என நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் செந்திநாதன் அண்ணனின் பாதம் பதிந்திருந்தது. இதன் வெளிப்பாடாகஎமதுதிருமணப்பதிவுச்சான்றிதழிலும் ஓர் சாட்சி முகதாரராக ஒப்பமிட்டமை ஆவணமாக நிற்கின்றது.

இவ்வாறு என் ஆரம்பம் முதல் தொழில், வாழ்க்கையென சகலவிதத்திலும் வழிகாட்டியாக திகழும் எனது உடன்பிறவா அண்ணனுக்கு 60 ஆவது அகவையில் அவர் பெரிதும் விரும்பும் ஓர் பொருள் புத்தகமே வெளியிடப்படுவதனால் இம்மலரும் பெருமைகொள்கின்றது.

இவ்வாறு பல வழிகளிலும் எமக்கு உதவியது போல் பலருக்கும் பலவழிகளிலும் வழிகாட்ட 60 ஆவது அகவையைத் தாண்டி 100 ஆவது அகவை அடையும்வரை இணுவையூர் தந்த இவ் மைந்தன் மண்ணில் வாழவேண்டி விடை பெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.சிவகுமாரன்
முகாமையாளர்,
ஆசிரியர் வள நிலையம், மானிப்பாய்.



நான் உயர்தரவகுப்பினை நிறைவு செய்தகாலம் எண்பதுகளின் தொடக்கம், நண்பர்களுடன் சேர்ந்து கலை இலக்கியச் செயற்பாடுகளை தேடும் அசைவுகள் மெல்ல மெல்ல என்னுள்ளும் துளிர்விட்டிருந்தன. ஊர்க்கோயில் திருவிழாக்கள் பரபரப்பைத் தந்திருந்தாலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை இப்போ நினைத்தாலும் இனிமைதான். அப்போ அதை பல நிகழ்ச்சிகளில் ஒன்றாகத் தான் பார்த்திருக்கின்றோம். இப்போ தான் விளங்குகின்றது வில்லிசையின் சிறப்பார்ந்த ஆற்றுகையாக இருந்தது என்று.

எங்கள் ஊரில் 1980களில் கலை இலக்கியவட்டம் என்ற ஒரு அமைப்பை ஆரம்பித்திருந்தார்கள். புத்தக வெளியீடுகள், சிறப்புரைகள், விவாதக் கலந்தாய்வுகள், புத்தகக் கண்காட்சிகள், புத்தகங்களின் வாசித்த அனுபவக் கருத்துப் பரிமாறல்கள், என்றவாறு ஏதாவது ஒன்று நடக்கும். ஜானகி ராமனின் 'மோகமுள்', ராகுலசங்கீர்தியானின் 'வால்காவில் இருந்து கங்கைவரை'. மார்க்சிம் கோர்க்கியின் 'தாய்' போன்ற நல்ல புத்தகங்களின் வாசனைமிக்க அறிமுகங் கிடைத்ததும் அங்கேதான். குடா நாட்டிலுள்ள எழுத்தாளர்கள், விமர்சகர், ஆர்வலர்கள் நிகழ்வுகளுக்கு வந்துபோவார்கள். இவர்களுடன் கதைக்க ஆர்வம் மேலிடும் என்றாலும் பருவ இயல்புத் தயக்கம் மேலிட்டு இறுதியில் தனித்துக் கதைப்பதை மெதுவாக விட்டுவிடுவோம். தொடர்ந்துவந்த காலங்களில் நண்பர்கள் இந்த வட்டத்தினுள் உள்ளீர்க்கப்பட நானும் வட்டத்தினுள் வந்து சேர்ந்தேன்.

இணுவில் கலை இலக்கிய வட்டம் உயிர்ப்புள்ள அமைப்பாக இயங்கிக் கொண்டிருந்தபோது அதன் பணிகளின் மூலமந்திரமாக இருந்துகொண்டு இயங்கியல் ஈர்ப்புப்புலம்போல இருந்தவர்களில் ஒருவர் நம்பிக்கை தரும் தொடர்புகொள்ளும் முறை கொண்டு என்னையும் எனது நண்பர்களையும் தன்னுடன் கதைக்க வருமாறு கேட்டிருந்தார். நாங்கள் மூவர்மட்டும் சென்றோம். ஒருநாள் மாலைநேரம், தோட்டவெளிகடந்த எல்லையில் பிரதானதெரு ஓரமாய் அமைதியாக இருந்த வீட்டின் நுழைவாயிற்கதவைத் திறந்து உட் செல்ல, வீட்டின் உள்ளிருந்து ஒரு குரல் எங்களின் பெயர்களை ஒழுங்காக வாசித்ததுபோல் உள்வருமாறு அழைத்தது. அண்ணையின் குரல் தானென எண்ணமுன் அவர் வெளியே வந்துவிட்டார், அவருக்கே உரித்தான சிரிப்புப் பரவிய முகத்துடன், பின்னால் அவருடைய அக்காவுடன் ஏனையோரும் சிரிப்பும் கதையுமாக, இவர்கள் அனைவரினதும் முக ஓவியங்கள் வெளியிடும் செய்திகள் வெளிப்படையானவை. எனது உணர்வுவெளி, அறிகைவெளி எங்கும் நம்பிக்கை துளிர்விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிறையவாசியுங்கோ, எழுதுங்கோ அதைத் திருப்பியும் எழுதுங்கோ, எழுதியவை பற்றிக் கதையுங்கோ அதை என்னிடமும் ஒருக்கா தாங்கோ, நானும் வாசிக்கிறன்... 'கலந்துபேசிக் கொண்டிருக்கும்போது இடை வெளி நிரப்பலாக வந்து எம்மை அர வணைத்தபடி செல்வது மட்டுமல்லாது, கையில் பிடித்து எங்களைத் தூக்கி விட்டது போலிருந்தது. சிலவேளைகளில் அவர்கள் எங்களைத் தேடுவார்கள். எமக்குத் தேவையான தரவுகள் கிடைக்கும்போது எமது முன்னேற்றங்களை எதிர்பார்த்தபடி காத்திருப்பது. அவர்களுடன் இணைந்து நாங்கள் அறிவுப்புல எல்லைகளைத் தரிசிக் கின்றோம்.

இவர்களைப்போன்று மனிதர்கள் முக் காலமும் இருந்தார்கள். இருக்கின்றார்கள் இருப்பார்கள். இது ஒரு சமூக இருப்புக்கான ஆதாரந்தான். சூழ்நிலைப் பயங்கரம் தோன் றும்பொழுது நம்பிக்கையின் நலிவு. மறை நிலையான எண்ணங்கள், சக்தியிழப்பு... போன்றவற்றால் மனிதர்கள் பாதிப்படைய நேரும்பொழுது ஒத்துணர்வுள்ள மனித உறவு களின் தேவை உணரப்படுகின்றது. இந்த வேளைகளிலும் அவர்களின் வழிகாட்டல்கள் பெறுமதி மிக்கவை. எம்மைப்பற்றிய முழுமை யான விளக்கத்தைப் பெறமுயல்வதுடன் எங்களிடம் உள்ள விசேட நுண்மதியை எமக்கு சரியான நேரத்தில் அறிவிக்க முயற்சிப்பார்கள். இவை அனைத்தும் எங்களு டன் எப்போதும் ஒருவர் கூட இருப்பது போன்ற உணர்வைத் தரும்.

ஒவ்வொரு செயற்படிநிலைகளிலும் எல் லைப்படுத்திய, எல்லையில்லாத வெளிகளின் வழியேபயணத்தின்போதுஇருக்கின்றமட்டுப் பாடுகள், சவால் நிலைகள், என்ப வற்றை எதிர்கொள்ள வேண்டி வருகின்றன. இந்நிலையில் முன் அறிவும் உளஆதரவும் தேவைதான். இது ஒவ்வொருவருக்கும் வேண்டியவை. இவ்வழியே சென்றவர்களும் சென்றுகொண்டிருப்பவர்களும் பின்னே வரு கின்றவர்களை கவனித்தபடியே தேவையின் அடிப்படையில் உதவுவதற்கு சந்தர்ப்பங் களை உருவாக்க முயன்றுகொண்டும் மேலும் இயல்பாக உருவாகும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக்கொண்டும் இருக்கிறார்கள். நாங்களும் முன்னே செல்பவர்களை எமக்கு உரியவர்களை இனங்கண்டுகொள்ள முயன்று சந்திக்கவேண்டும். அவர்களைச் சந்திப்பதற் கான ஒத்த அதிர்வுகளை உருவாக்க வேண்டும். அதன்போதுதான் ஒன்றாகப் பயணித்தல் அர்த்தமுடையதாகும். புதியபடைப்பு நிலை களும் சாத்தியமாகும். உலகப்பொதுவாக அமைந்த ஆதார அதிர்வலைகளும் ஒன் றிணையக்கூடிய சாத்தியங்கள் அதிகரிக்கும்.

பாராட்டுதல், வாழ்த்துதல், போற்று தல், வழிகாட்டுதல், ...போன்றன பெரி யோர்களின் கடமையாக தமிழர் சமுதாயத் தில் பாரம்பரியமாக இருந்துவந்திருக்கின் றன. கால ஓட்டத்தில் பெருந்தன்மை கொண்ட மனிதர்களின் இச்சீரிய சிந்தனை கள் பலப்படுத்தப்பட்டும் பலவீனப்படுத்தப் பட்டும் வந்திருக்கின்றன. இச்சிந்தனைகள் நலிவுற்றிருந்த காலங்களிலும் பெரியோர்கள் தாங்கள் அதைப் பொறுப்பேற்று சமூக அக்கறைகொண்டு சீர்செய்யும் செயற் பாட்டிற்காக போராடினார்கள். மீட்டெடுத் தார்கள். இதன்பின்பு பெரியவர்கள் மதிக்கப் படக்கூடிய கருத்துவெளிப்பாடுகளைக் கொண்டிருந்தார்கள். இளம் சமூகத்தினர்க்கு ஆறுதல் தந்தார்கள், அரவணைத்தார்கள், அறி வேற்றினார்கள், சவால்களை எதிர்கொள்ள முன்மாதிரிகளாக இருந்தார்கள். இவற் றிற்கான காலப்பதிவுகள் ஒருசிலதான் இருக் கின்றன. மற்றயவை ஆய்வுவழிவந்த ஊகங் கள் அவை உறுதிப்படுத்தப்பட்டும் உள்ளன. ஒரு சமூகம் பல்நிலைசார் விழுமிய அடை யாளங்களை விளங்கிக்கொண்டு அவற்றை ஒருகையளிப்புப் பரிமாற்றத்தினூடான மரபுப் பரிமாற்ற முறைகளால் பரப்பி வரு கின்றன. இது எல்லா சமூகத்தளநிலைகளிலும் தவிர்க்கமுடியாதவைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்இயக்கநிலைச் சக்திகளுக்கு மூல விசை தருபவர்களாகவும், இம்மூலவிசைகளை நகர்த்தும் அறிவியல்வெளிகளை இனங் கண்டுகொள்பவர்களாகவும் இருப்பவர்கள் பெரியவர்கள்தான். இவர்களைக் கண்டு கொள்வதும் அவர்கள் உருவாக்கிவைத் திருக்கும் அர்த்தமுள்ள வெளிகளை அறிந்து கொள்வதும் அவற்றைப் பயன்படுத்தும் ஒழுங்குவழிமுறைகளை தெரிந்துகொள்வதும் சமூகத்தின் கடமைகள்தான். இதில் முக்கிய பங்காற்றுபவர்கள் பெரியவர்கள். மேலும் தாமாகவே முன்வந்து சமூகப் பணிகளை இனங்கண்டுகொள்ளும் அனுபவ முடையவர்கள். பொருத்தமானவர்களை இனங்கண்டு இணைத்துக்கொண்டு உரிய நேரத்துக் கருமங்களை ஆற்றும் சக்தி உரு வானவர்கள். எழுவது வீழ்வது மீண்டும் எழுவது எனச் சக்கரத்தை விளங்கிக்கொண்டு வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

கைபிடித்து நடக்காதிருப்பவர்களை கைதூக்கி முன்னேவிட தேடித்திரிபவர் களைக் கண்டிருக்கிறேன். தனக்கென இருக் கும் அற்பசொற்பங்களுக்கு அப்பால் நின்று சமூகத்திற்கான கட்டுமானங்கள் பற்றிய உலகத்தில் தமது பெருமளவான வாழ்வியல் புரிதல்களைத் தரிசிப்பவர்கள், படைப்புலக ஆளுமைகள், பல்நிலை நுண்மதியாளர்கள், ஊடுருவிப் புரிந்துகொள்பவர்கள். இவர்கள் ஏனையோர்களிடமுள்ள திறமைகளை இலகு முறையில் இனங்கண்டுகொள்வார்கள்.

இவ்வகையான கருத்துக்களின் புரிதல் களுக்குள்ளும் அப்பாலும் சென்றுபார்க் கக்கூடியவர்கள் எம்முடனும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். எங்கள் ஊரவர் இணு வையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் எனது நண்பர்களுடன் சேர்த்து எனக் கும் நன்கு அறியப்பட்டவர். மனம்விட்டுச் சிரிக்கும் தோற்றம், துரிதமான இயல்பு, தேடித் துருவும் பார்வை, ஓய்வின்றிய உழைப்பு, இடையறாத வாசிப்பு, ஓய்வுநிலை நட் பார்ந்த சொல்லாளுமை, ஓய்வின்றிய சிந் தனைக் கருத்து வெளிப்பாடு, முன்செல் லுதல், அரவணைத்தல் ஊடான நம்பிக்கை உருவாக்கம் இவை எனது அனுபவங்கள். அவ ரின் தந்தையார் மூலம் இவருக்குக் கிடைத் தவை அனேகம். இவரின் படைப்பிலக்கி யங்களிலும் தெரியும். இவருடன் கூடிப்பிறந்த வர்களும் இலக்கியம் படைக்கின்றார்கள். விமர்சகர்களாக இருக்கின்றார்கள். திருச் செந்தி அண்ணையிடம் மரபார்ந்து வரும் உள்ளுணர்வுத்தூண்டலுடன் தேடி அறி யும் தீவிரமும் சூழ்நிலைத் தாக்கங்களும் அதிக மாக இருந்தன. சமூக நிலையிலும் தொழில் நிலைகளிலும், குடும்ப நிலைகளிலும் இவர் தாங்கி நடந்தவைகள் அதிகம். தன்னால் தாங்கி நடக்க முடிந்தவற்றிலும் அதிகமா- கவே இயங்கிக்கொண்டிருக்கின்றார்.

இவரும் இவரது துணைவியாரும் அரச உத்தியோகம் பார்ப்பவர்கள். திருச்செந்தி அண்ணை தனது சேவையிலிருந்து ஓய்வு பெற் றது சிலமாதங்கள் தான். சேவை ஓய்வு அவ ருக்கு மேலும் வாசிப்புச் சுதந்திரத்தைத் தந் துள்ளது. இலக்கியச் சுயம் மேலும் வலு மிக்கதாக உள்ளது. நான்கு பிள்ளைச் செல்வங்கள்.

இவரை திருச்செந்தி அண்ணை என்று அழைப்பது எங்களின் வசதி, எங்களை என் னடாப்பா என விழிப்பது அவரின் வசதி. அவ ருடன் நாங்கள் கதைப்பது என்ற நினைப்பு அதிகம்தான். ஆனால் கதையாது விட்ட வைகள் அதைவிட அதிகமானவை. எங் களின் சந்திப்புகளின்போது உருப்பெற்ற கதைக்கட்டுமானங்கள் சிறப்புற்று வளரும் வேளைகள் மனதைவிட்டு அகலாதன. உண் மையில் சந்தித்த சந்திப்புகளும் சந்தித்த நேரங்களும் மிகக் குறைவானவையே. இருந் தும் ஒவ்வொரு சந்திப்புகளிலும் பரிமாறிக் கொண்ட விடயங்கள். அவை எம்முள்ளே தோற்றுவித்த கலை இலக்கிய அதிர்வுகள் அனேகம். அன்று இணுவில் கலை, இலக்கிய வட்டத் தலைவராக இருந்தவர் இன்று காப் பாளராக இருக்கின்றார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை. சரவணன்
ஆசிரியர்
யாழ். ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம் வடக்கு.



வன்னியும் மாதமிருமுறையாயினும் உறவாடும் மலேரியாவும் நன்குபழக்கப்பட்டிருந்த இயல்பாயாகி விட்டிருந்த 98ன் இறுதிப்பகுதி. இரு நாட்கள் நடந்த கலைபண்பாட்டுச் செயலமர்வொன்றின் இறுதி மணித்தியாலங்களில் வியர்வையில் குளித்தபடி ஓடியாடிக்கொண்டிருந்தவர் பு. சத்தியமூர்த்தி என்றும் மிக மெலிந்த தோற்றத்துடன் நிகழ்வுகளை உள்வாங்கிக்கொண்டிருந்தவர். ஈழநாடு ஆசிரியர் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் என்றும் இலக்கியத்தளத்தில் இயங்கிக்கொண்டிருந்த கருணைரவியால் அடையாளப்படுத்தப்பட்டவர்கள்தான் பின்னாளில் நெருக்கமாகி என் பயன்மிகு மாற்றங்களில் செல்வாக்கு மிக்கவரானார்கள் என்பதை நினைக்க ஆச்சரியமாயுள்ளது.

ஈழநாடு ஆசிரியர்... பெரிய எழுத்தாளர்... என்ற செவிபடு அறிமுகமொன்றையும் அதனோடிணைந்த என் கற்பிதங்களாலான படிமங்களுடனும் மட்டுமே இருந்துவந்த திரு. இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் எனக்குப் பெரும்திகைப்பாக இருந்தார். 90களின் முற்கூறுகளில் காங்கேசன்துறை வீதியின் நெருக்கடிமிகுந்த காலைகளில் எம்மை முந்தி எம்.டி.90யில் மகனோடு செல்லும் பரபரப்பில்லாத நேர்த்தியான ஒருவராக கண்ட அவரா இவர்? என்னால் எனக்குள்ளாக கட்டியிருந்த படிமக்கோட்டை அழியத்தொடங்கியது. ஜோல்னாப்பை... தடித்த கண்ணாடி... சிக்குப்பிடித்த பாகவதர் பாணித் தலை... கண்டபடி வளர்ந்த தாடி... கசங்கிய நசனல்... வெற்றிலை வாய்... குறிப்பேடு... எனும்படியாக படங்களில் பரிச்சயமாயிருந்த (சலங்கையொலி கமல காசன்போல) ஒரு எழுத்தாளனோ... பத்திரிகைக் காரனோ அங்கே இல்லை. நேர்த்தியான மெலிந்த ஒரு மனிதர்மட்டும் இருந்தார். முன் கண்டதை விடவும் நன்றாக மெலிந்திருந்தார்.

ஈழநாடு வாரச் சிறுகதையாக எனது ஒரு கதையும் கவிதையும் ஈழநாடு மாதமலரில் குறுங்கதையும் பிரசுரமாயிருந்ததை துணைக்கொண்டும் அவரருகே வெறுமையாயிருந்த கதிரையைச் சாதகமாகக்கொண்டும் அருகமர்ந்து மெதுவே என்னைச் சொன்னேன். நிமிர்ந்தமர முயன்றபடி இன்றுவரை புரிந்துகொள்ள முடியாதிருக்கிற புன்னகையுடன்... "சிறுகதை நல்ல முயற்சி... தொடர்ந்தும் எழுதும்" என்றதன் பின்னாக தனிப்பட்ட அறிமுக விசாரணைகள் நடந்தன. மிகமிகச் சுருக்கமாக, வழமையான சம்பிரதாய விசாரணைகளை விட வித்தியாசமாயிருந்தது எனக்கு புதினமாயிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. பிடித்திருந்தது. நிகழ்வுகள் நீண்ட உரை யாடலுக்கான அனுமதியைத் தரமறுத்தன. "நிறைய வாசியும்... தொடர்ந்தும் எழுதும்" என்பதோடு அன்றைய அறிமுகம் முடிந்தாலும் இன்றுவரை காணும்போதெல்லாம் அவர் இதையே சொல்வது தொடர்கிறது.

ஆசிரியபீடம் படைப்பாளியை அறிந்து கொண்ட பின்னேதான் படைப்பைப் பிர சுரிக்கும் வழமையொன்றிருந்த நாட்களில் படைப்பாளியை அறிந்துகொள்ளாமலேயே படைப்பை பிரசுரிக்கும் இவரது பண்பை அனுபவவாயிலாகப் பெற்றவனென்பதில் இன்றுவரை பெருமைப்படும் ஒருவனாக நானும் இருக்கிறேன். "இது என்ன?... காசி ஆனந்தனெண்ட நினைப்போ??" என்று ஓரி டத்தில் தூக்கிவீசப்பட்ட எனது உருவகக் குறுங்கதைப் பிரதி கீழே விழமுன் தாங்கி ஈழநாடு மாதமலரில் பிரசுரித்தபோதும் என்னை இவருக்குத் தெரியாது. பின்னர் தொடர்ந்தும் அவ்வடிவில் எழுதத் தூண்டி யதுடன் வலிந்து கேட்டுப் பிரசுரித்தும் பின்னாட்களில் தூக்கியெறிந்தவராலேயே பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்றுத் தந்தவர். என் எழுத்து முயற்சிகளில் இன்று வரை உந்துசக்தியாயும், ஊக்கசக்தியாயும் இருந்து வருகின்றார் என்பதில் பெருமை யடைகிறேன்.

குடும்ப வாழ்க்கை... சமூக உறவுநிலை... எழுத்து... அரசியல்... என்பவற்றை உரிய முறையில் ஒழுங்கமைந்து ஒன்றுட னொன்று முட்டிமோதி பிரச்சனைகளை யுண்டுபண்ணாத வகையில் இயங்கும் இவ ருக்கேயுரித்தான பாங்கு வியப்புடன் எம் மையும் பின்பற்றும் முடிவை இன்றுவரை எம்முள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. முன் னர் ஏற்படுத்திவைத்து மலைத்துப்போயி ருந்த படிமங்களின் தகர்வு இவ்வழியேயும் நிகழ்ந்திருக்கிறது. இது என்போன்ற எழுத் துத்துறையுள் நுழைந்த பலருக்கும் எவ் வித எதிர்பார்ப்போ அச்சமோ இல்லா மல் உற்சாகமூட்டி வளப்படுத்த வழிசெய் திருக்கலாம். இதுவே அவரறிந்தோ அறியா மலோ நாம் அவரை வகைமாதிரியாகக் கொண்டு இயங்கும் நம்பிக்கையையும் வலு-வையும் எமக்குள் தோற்றுவித்திருக்கலாம்.

அரசியலில் வெளிவேடமணிந்து நடித்து கோசமிடுவதும் போடப்படும் தாளங் களுக்கெல்லாம் கூத்தாடுவதும் புறவய மாக எழுதித் தள்ளுவதும் அதை யதையே காரணமாகவும் ஆயுதமாகவும் கொண்டு செல்வாக்குத் தேடுதல் செல் வாக்குச் செலுத்துதல் போன்ற ஈனச் செயல் களில் ஈடுபடுவதும் இவரிடத்தில் காணக் கிடைக்காதன. இவை முற்றுமுழுதாக இவ ருக்கு ஒத்துப்போகாதவை என்பதை நெருங்கி உடனிருந்த பல சந்தர்ப்பங்களில் காண முடிந்திருக்கின்றது. உண்மை... நேர்மை... கொள்கைப்பற்று என்பவற்றில் இவருக்கிருக் கும் தயக்கமேதுமற்ற நம்பிக்கையும் செல் நெறியும் இதைச் சாத்தியமாக்கியிருக்கலாம். இவை சிலவேளைகளில் சிலசலிப்புகளை பக்கு வமடையாத ஒருவருக்கு ஏற்படுத்தலாம் என்பது எனது பட்டறிவு.

மேலும் "எழுத்து ஒரு தவம்" என்பதில் எந்தளவு நம்பிக்கை கொண்டவரோ அதை விடவும் எழுத்தின் உண்மை... யதார்த்தம் "மக் களிடமிருந்து மக்களுக்கே" என்பதில் அசை யாத உறுதியோடு அதை ஒரு கோட் பாடாகவே கொண்டியங்குபவர். மக்களின் அன்றாட வாழ்வியலின் யதார்த்தம் கலைத் துவமாக பிரதியில் முன்னிறுத்தப்படுவதில் அதீத கவனத்துடன் இயங்குவதிலும் வழிப் படுத்துவதிலும் கவனம் செலுத்துபவர். ஆயி-னும் "ஒருவன் வெறுமனே எழுத்தாளனாக மட்டும் இருந்துகொண்டு கற்பனையில் வாசம் செய்வதும் சார்ந்திருந்து எழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் ஆபத்தானவை. எழுதுவதற்கு ஒருவன் தான் சார்ந்து சுயமாக இருப்பதுடன் தான் சார்ந்தவர்களை நிறைவாக்குவதும் முக்கிய மானது." என்பதை அடிக்கடி சொல்லி எனக் கான உறுதியான நிலைப்படுத்தலைச் செய்ய வற்புறுத்தியபோது உணரமுடியாதிருந்த பல விடயங்களை இப்போது உணரமுடிந்திருக் கிறது. வயிறு வளர்ப்பதற்காக எழுத்து விபச் சாரிகளாயிருக்கும் பலரைக் கண்டு வேதனைப் படும்பொழுதெல்லாம் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் சிதம்பரக்குடிலில் தென்னை மரக்காற்றில் குறுகுறுக்கும் மணல் முற்றத்தில் நிலவுகசியும் பொழுதுகளின் ஆலோசனைகள் உபதேசமாகவே இப்போது எதிரொலிப்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாததாயே இருக்கிறது.

எழுத்து என்று வந்தால் காலதாமதம் ஒத்திப்போடுதல் காரணமாக இதழ்களுக்குப் படைப்பு வறுமையேற்படுவதும் அதை ஈடு செய்ய அவசரத்தில் இடத்துக்கேற்ப இட்டு நிரப்புவதும் வழமையானது. எனினும் இவரிடத்தில் இவ்வியல்பு இல்லை யென்பதுடன் எம்மிடமும் இதை இவர் எதிர் பார்ப்பது தொடக்க நாட்களில் எனக்குச் சில சந்தர்ப்பங்களில் எரிச்சலை வரவழைத் திருக்கிறது என்பதை இக்கணத்தில் வெட் கத்துடன் குறிப்பிடவேண்டியுள்ளது. ஒரு நாள் பத்து மைல்களுக்கும் மேலாக துவிச் சரக்கர வண்டியில் பயணம் செய்து ஈழநாடு அலுவலகம் சென்றபோது வழ மைக்குமாறாக இறுகியிருந்தது அலுவ லகம். சத்தியமூர்த்தி... கமல்... மயிலை தர்மராஜா... இன்னும் சிலர் எழுது வதும் வெட்டுவதுமாக வியர்த்துக் கொண்டிருந்தார்கள்... என்னைக் கண்டதும் பரிதாபமா? நக்கலா? என வேறுபடுத்த முடி யாதிருந்த சிரிப்பால் வரவேற்று எனக்கும் கடதாசி தந்து எழுதச் சொன்னார்கள். காரணம் அடுத்த மாதமலருக்காக வழங் கப்பட்டிருந்த விடயங்கள் எம்மால் ஒப்படைக்கப்படாமையும் திருப்தியின்மை யுமே. அங்கேயே வைத்து எழுதும் படி யாகிற்று. அவர்களோடு நானும் வியர்த்து வெட்டியும் திருத்தியும் சரியாக அமையும் வரை எழுதவேண்டியதாகிற்று. "இஞ்ச... அவசரமெண்டதுக்காக எழுதவேண்டாம்... விசயந்தான் முக்கியம்... உண்மையும் யதார்த் தமும் இருக்கவேணும். பிழைவந்திடக் கூடாது..." என்று அடிக்கடி இவர் சொல்லிக்கொண்டிருந்தது எரிச்சலாயிருந் தாலும் அச்சில் வந்து வசிட்டர்களால் வியக் கப்பட்டபோது எல்லாம் மறந்து பெருமைப் படமுடிந்தது. அன்று கண்டதையுமிட்டு இதழை நிறைத்தல்... அவகாசமெடுத்து தாம தமாக வெளியிடுதல்... போன்ற தெரிவுகளி ருந்தும் உரிய காலம்... விடய நேர்த்தி என்ப வற்றை மட்டும் குறியாக்கி எம்மையும் அதற்குப் படிஎனப்படுத்திய விதம் இன்று வரை இவர் தொடர்பாக மட்டுமல்ல ஏனைய வெளியீடுகள் தொடர்பிலும் கவன மாயிருக்கப் பழக்கியிருக்கிறது.

இவரது இவ்வியல்பே பின்னாட் களில் முல்லைக்கமலின் "மனமும் மனத்தின் பாடலும்" கவிதைத் தொகுதியிலும் "எழு சிறுகதைகள்" தொகுப்பிலும் பிரயோகிக் கப்பட்டு நடைமுறை வழியாகப் பயிற்று விக்கப்பட்டோம். நெருக்கடிமிக்க சூழ லிலும் எழு இவ்விரு வெளியீடுகளையும் சாத்திமாக்குவதற்கும் "இதழியல்" கற்கை நெறியொன்றை கல்வித் திணைக்கள முறை சாராக் கல்விப் பிரிவினூடாக செயன் முறை வாயிலாக நிறைவாக பலர் வியந்து பாராட்டும்படி நடாத்தியதுடன் அப்பயிலுநர்களின் செழுமைப்படுத்துதலிற் காக "பூராயம்" எனும் சஞ்சிகை வடிவ பல்சுவை இதழ்கள் நான்கினை 2001இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிமிகு சூழலை வென்று வெளியிட்டு பெருவியப்பாக எழுந்துநிற்பதற்கும் இவரது கண்டிப்பானவழிநடத்துதல்திட்டமிடலுமே காரணங்களாயின என்பதும் பு. சத்தியமூர்த்தி இவருடனிணைந்த இயங்குசக்தியாக இருந்தார் என்பதும் அப்போது நெருக்கமாக எம்முடன் சேர்ந்தியங்கியவர்களால் மட்டுமே முழுவீச்சில் உணரப்படக்கூடியது.

இவ்விடத்தில் "எழு கலை இலக்கியப் பேரவை" பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிட்டேயாக வேண்டும். மலேரியா பொருளாதார நெருக்கடி யுத்த அழுத்தம் போன்ற சூழலில் அக்கராயனுக்கும் புதுக்குடியிருப்புக்குமான தகவல் தூரம் நாட்கணக்கினுள் அடங்குவதில் நம்பிக்கையற்றிருந்த காலத்தில் தான் இலக்கிய செயற்பாடுகளிற்காக சார்புநிலையற்ற வாழ்வியலின் ஆத்மார்த்தமாக தளம்பலற்ற ஒரு தளத்தின் தேவையுணரப்பட்டது. பு.சத்திய மூர்த்தியின் ஒருங்கிணைப்பில் "எழு கலை இலக்கியப் பேரவை" பிறந்தது. இது தவறான வாசிப்புகளுக்கும் தப்பான எடுத்துரைப்புகள் அழுத்தங்களுக்கெல்லாம் தனித்தே முகங் கொடுத்து வெற்றிகண்டது. ஏற்கனவே வலிந்து திணிக்கப்பட்டிருந்த சிந்தனை மற்றும் செயற் தளங்களுக்கெல்லாம் "எழு" பெருஞ்சவாலாகவே இருந்ததென்பது மறுக்க முடியாதவொன்று. "எழு" வின் தோற்றத்திற்கும் செயற்பாடுகளுக்கும் போசகர் என்ற அடையாளத்துடன் கவசமாகவும் சுவாசமாகவும் இருந்தவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களே. "அண்ணை" எனும் அழைப்புக்கு உண்மை அண்ணனாகவே அரவணைத்துச் செயலாற்றும் இவரது உள்ளன்பை நெருக்கமாகப் பழகத் தொடங்கிய நாட்களிலிருந்து உணர்கிறேன். இவரது வெளித்தோற்றம் இவ்வியல்பை அதிகம் வெளிக்காட்டுவது மிகக்குறைவே. அறிமுக நாட்களின் கருத்துகளில் இவர் தொடர்பில் மாற்றவேண்டியிருந்த என் கருத்துக்களில் இதுவும் ஒன்று.

"ஈழநாடு" களம் தந்து உற்சாகமூட்டி பலரை எழுத்துலகுள் ஈர்த்தது என்பதிலும் "எழு" பல்துறை அனுபவங்களுடாக செயற்றிறனை வளர்த்தது என்பதிலும் தவிர்க்க முடியாத மூலம் இவரே. ஒரு நூலினை பிரதியுருவாக்கத்தில் தொடங்கி வெளியீட்டு விழா வரை நுட்பமாகவும் வினைத்திறனுடனும் செயலாற்றுவதற்கு எம்மை தயார் செய்தவர். இலக்கிய நிகழ்வுகளில் பேச்சாளர் தெரிவின் அவசியத்தையும் சபையோரை சலிப்பின்றி விழா நிறைவில் வழியனுப்புவது வரை ஏற்பாட்டாளருக்குள்ள தலையாய கடமைகள் பற்றியும் கூறி எம்மை நெறிப்படுத்தியதை இப்போதும் பிற இலக்கிய விழாக்களின் சீரின்மைகளில் நினைத்துப் பெருமையுற முடிகிறது. சீண்டல்களுக்கும் எம்மீதான அழுத்தங்களுக்கும் நாங்கள் கொதித்தபோதெல்லாம் மிகமிகப் பொறுமையாக "பொறுங் கோடாப்பா... ஆத்திரப்பட்டோ அவசரப்பட்டோ ஒண்டுமே நடக்கிறதில்லை... ஒண்டுக்கும் யோசிக்கத் தேவையில்லை... உவை சரியில்லாதவை... அதாலை எல்லாம் தன்னால சரிவரும்... நாங்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை..." என்று முட்டிமோதுவதிலிருந்து எங்களைத் தடுத்து எமது செயற்பாடுகளை நேர்த்தியாக்கும் வித்தை கைவரப்பெற்றவர் என்பது நன்றாக நெருங்கியவர்களுக்கு மட்டும் தெரியக் கூடியது. "தன்னால சரிவரும்" எனும் வார்த்தைகளின் பெறுமதியை பின்னாட்களில் நேரில்கண்டு சிலாகித்திருக்கிறோம். இவர் எவரையும் பகைத்து ஒதுக்கியதில்லை. பட்டும்படாமலும் ஒட்டியும் ஒட்டாமலும் தனதேயான தன்வழியில் ஒரே சீராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னகர்வது இவரின் இன்னோரியல்பு. எம்மையும் அப்படியே பழக்கப்படுத்தப் படாத பாடுபட்டவர். எம்மீது அழுத்தம் போட்டு அடக்க முயன்றவர்களே உண்மை யுணர்ந்து தோள்பற்றியபோது "தன்னால் சரிவந்ததை" தொட்டுணர்ந்தோம்.

பல நூல்களை வெளியிட்டவர்... பல செயற்பாடுகளின் தோற்றுவாயாகவும் செயற் படுபவராகவும் இருப்பவர். இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் எனும் அடை யாளம் தவிர பட்டங்கள் விருதுகள் என வேறொன்றும் இல்லையே? என தொடக் கத்தில் நினைத்ததுண்டு. இவருக்கு அவை கிடைக்காமைக்கு இவர் அவற்றைத்தேடி அலையாமையே காரணமெனக் கண்டு வியக்க முடிகிறது. இவருக்கு அவற்றிலும் நம்பிக்கை யில்லை. அதனைவிட அவற்றை வழங்கு பவர்கள் மீதும் நம்பிக்கை இல்லை. அத னால் விருது பெறுவதற்காக தப்புத் தாளங்களுக்கெல்லாம் ஆடவேண்டியது மில்லை. முதுகு சொறியவும் வேண்டிய தில்லை. மாறி மாறி தமக்குத்தானே பொன் னாடை போர்த்துதல் பட்டங்கள் சூட்டுதல், விருதுகள் பரிமாறிக் கொள்ளுதல் என நீளும் உலகில் வாழும் அவற்றை இனங்கண்டு புறந் தள்ளி வைத்துள்ளவர். எமக்கு நாமே மேடை போட்டு மாலைக்கும் மைக்கிற்கும் தவித் தலையும் சில கோயில் மேளங்களின் அபசுரக் கச்சேரிகளுக்குள்ளால் பிரபலம் தேடுவதிலும் வெறுப்புள்ளவர். இவ்விருதுகளின் வழங்கு நர்கள் பெறுநர்களினுடைய இயங்குதளம்... ஆளுமை... கொள்கை... என வரிசைப்படுத்தி உணரமுடிகிற இந்நாட்களில் இவர் தொடர் பான மதிப்பு உயர்வது இயல்பானதுதானே. ஆனாலும் நாம் இவ்வாறான கேலிக்கூத் துகள் தொடர்பில் விமர்சிக்கத் தலைப்படும் போதெல்லாம் "அது அது அதைத்தான் செய்யும்... நாங்கள் எங்கட சோலியள் பார்க்கவே காலங்காணாமலிருக்கு... காலம் முக்கியமானது. தேடவேண்டியதும்... செய்ய வேண்டியதும் நிறையவேயிருக்கு... அதை முதல்ல பாப்பம்..." என தனக்கேயுரிய பாணியில் முற்றிடுவது எமக்குப் பெறுமதி மிக்கதுமாயிருப்பதாகவே படுகிறது.

தன்னை முன்னிலைப்படுத்துவதை இவர் விரும்பாவிட்டாலும் ஒரு காலத்தில் வாழ்ந்து வளம் சேர்த்துக்கொண்டிருக்கும் ஒருவர் தொடர்பான பதிவின் தேவையு ணர்ந்து இம்மலர் வருகிறது. உண்மையும் அதுதான். அறுபது ஆண்டு வாழ்வனுபவம் என்பது இலேசானதல்ல. அதிலும் ஈழத் தமிழினம் சந்தித்த அத்தனை எழுச்சிகள்... வேதனைகள்... சாதனைகள்... சோதனைகள்... வீழ்ச்சிகள் அத்தனையுள்ளும் ஒரு குடும்பத் தலைவனாய்...அரச உத்தியோகத்தனாய்... எழுத்தாளனாய்... சமூகத்தில் ஒருவனாய்... என பல்வேறு முகங்களில் அவற்றை ஏற் றும்... சகித்தும் புரிதலோடும் வாழ்ந்து கொண்டிருப்பவர். தனக்கென ஒரு கூட மைத்து எதிலும் முட்டிக்கொள்ளாமல் வாழக் கூடிய அத்தனை வசதிகளும் வாய்ப்புகளு மிருந்தும் அவற்றைப் புறந்தள்ளி வாழ் பவர். இவ்வாறான வாழ்பனுபவம் உபதேசிக் கக்கூடிய தகைமையை அவருக்களித்திருந் தாலும் உபதேசிப்பதில் நம்பிக்கையற்று வாழ்ந்துகாட்டுவதிலும் அரவணைத்து இணைந்து நடப்பதிலும் முனைப்புட னிருக்கும் அண்ணன் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் எமக்கு முன் நடக் கும் வழித்துணையாக என்றும் இருக்க வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்
வேலணையூர் சுரேஸ்



அண்ணா!
என்பதற்கு
அடுத்த சொல் அறியோம்
இந்நாள் வரையில்
அப்படித்தான்
முன்னால் சென்று
நிற்பதென்றால் கூட
சரீரம் ஒடுங்குமாற் போல்
ஒருவித மரியாதை
ஐம்புலன்களும் அடக்கி
எம்பிரான் முன் நிற்போமே
அப்படியான ஓர் பயபக்தி
எம்மை அறியாத உணர்வு
கல்லுக்குள் ஈரம் கசியுமாற் போல்
உள்ளுக்குள் ஏதோ கசிவு
எங்கிருந்து வந்தது
இந்தப் பரிவு... பாசம்... பணிவு

அண்ணா...
இவ்வளவு தான்
அட்டகாசம் இல்லாத ஆள்
யாரையும்...
சீண்டிப் பார்க்காத சீவன்
பிறருக்கு ஒன்றென்றால்
பதறும் ஆன்மா
தீங்கெண்ணாமலே
மேனி வருடும் மெல்லிய காற்று
எல்லோர்க்கும் இரங்கும் தாயுள்ளம்
எப்போதும் இயங்கும் பிரபஞ்சம் போல்
அண்ணரும்
சும்மா இருப்பது அரிது
இயந்திரம் போல் தான் அவர்
அன்றாட ஜீவிதம்

அண்ணா
நேற்று வரைக்கும்
நாம் நாமாகவிருந்தோம்
இன்றும் அப்படித்தான்
காற்றும் கூட எம்மை
விலத்தித்தான் வீசியதே தவிர
குறுக்கே வீசி பிரிக்க நினைக்கவில்லை
ஒருவிதமான உறவது
ஒரு சுகமான வாழ்வது
ஆக்கிய சோறு அக்கா தந்ததும்
இலக்கியச் சாறு நீங்கள் தந்ததும்
தேக்கிய நினைவாய்த்
தேங்கிக் கிடக்குது நெஞ்சில்
பாக்கியாய் இருப்பது இப்போ
நன்றிமட்டும்தான்
அஞ்சாறு குஞ்சுகளை
அடைகாத்தபோதும் அண்ணருக்கு
நெஞ்சார ஓர் ஆறுதல்
தன் வளர்ப்பென்று
விட்டுச் செல்வதற்கு
ஒன்றுமின்றிப் போயிடுமோ என்று
கண் கலங்கியிருப்பார் அண்ணர்
எத்தனை தரம்
எங்களையெல்லாம்
பெத்த பிள்ளைகளாய் எண்ணிப்
புலம்பி அழுதிருப்பார்
இத்தனைக்கும் அவர் அண்ணர்
இருந்தும் எண்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டணைக்கும் தாயாய்
தோள் தூக்கித் தழுவும் தந்தையாய்
எப்படியெல்லாம் எம்மைத்தன் கைகளால்
பொத்திப் பொத்தி வளர்த்திருப்பார்
அந்தி சாமத்திலும் எம்மைப்பற்றிச்
சிந்திக்காமல் தூங்காத சீமான்
ஒருவேளை எம்மைக் காணவில்லை என்றால்
செவ்வேளைக்கூட அனுப்பித் தேடுவார்.

அண்ணர் வீட்டு
முற்றத்திற்குச் சென்று
முகம் காட்டாமல் - நாம்
பக்கத்தில் இருக்கும் எம்
வீட்டுக்குக் கூட செல்வதில்லை
மாலையானால் பட்சிகள்
கூடும் திரும்பும் - அந்த
வேளையிற் தான் அண்ணர்
வீடு குலுங்கும்
எல்லோரும் கூடுவோம்
ஏதேதோ பேசுவோம்
இப்படியே
வழமைப்படுத்தி எங்கள் எங்கள்
வாழ்வைச் செதுக்கினோம்
ஆரோக்கியமான சூழலில் நாமும்
சாணக்கியரானோம்.

குறும்புத் தனங்கள் நிறைந்த
விடலைப்பருவத்திலும் எம்மில்
கெட்டித் தனங்கள் கோலோச்சின
வீசும் பொருளாக
விளங்காமல் இன்று பலரும்
பேசும் பொருளானோம் யாரால்
இலக்கிய வானில் ஒளிரும் உங்கள்
வழித்தடம் தொட்டு வளர்ந்தவர் தானே
நாங்கள்
விசைகொண்டு பாயும்
வில்லம்பு போல்
திசையெல்லாம் பாயும்
திறன் வந்தது எப்படி எமக்கு
இருக்கும் இடத்தில்
இருந்ததால் அல்லவா
சிறக்கும் வாய்ப்பு சித்தித்தது எமக்கு.

எழுதுங்கள் எழுதுங்களென்று
எழுத வைத்து எம்மை
எழுத்தாளர்கள் ஆக்கினீர்கள்
பழுத்த இலக்கியப்
பிதாக்களெல்லாம்
விழுத்த நினைத்தபோதிலும் - எம்மை
வளர்க்க உழைத்தவர்களில் ஒருவர் அண்ணர்
வெளிவராத கவிதைகளால்
வெளிவராத கவிஞர்கள்
வெளியில் பலரிருக்க
வெளிச்சம் ஆதாரமென
வெளிவந்த படைப்புக்களால்
வெளிச்சமானவர் நாமாகினோம்.
உந்து சக்தியாய்
இருந்து எமக்குத்
தந்த சக்தியால்
தலை நிமிர்ந்தோம்
படைக்க ஒளி தந்தீர்
படைக்கின்றோம்
பறக்கச் சிறகு தந்தீர்
பறக்கின்றோம்.
அருவியென ஓடிவருமெம்
அத்தனை படைப்புக்கும்
கருவியெனத் தாங்களே
கருத்தினில் இருக்கின்றீர்,
அது போதாதா தங்களுக்கு
முளையோடு கிள்ளும்
இலக்கிய உலகில்
முளையிலும் வெல்லும்
முதிர்ச்சியும் பெற்றோம் யாரால்

வேரோடு மண்ணில்
விளங்கிடும் பொருளாய்
பேரோடு வாழும்
பெரும் பேறு பெற்றோம் யாரால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் என்று எம்மை இன்று
யாருக்குத் தெரியாது
வேர் தாங்கும் மண்ணை
வெளியுலகம் அறியாது
சொந்த வீடு போல்
உங்கள் வீடன்றி
எந்த வீடும் எமக்கு
நிழல் தர வில்லை.
ஆறி அமர இடம்தந்தீர்.
ஆன அனைத்தும் நீர் தந்தீர்.
மாறி மாறி உம் வீட்டுப்படலையைத்
திறப்பவர் ஆனோம் நாமெல்லாம்.
சுக துக்கம் விசாரித்துக்
குடும்ப நலன் காக்கும்
சக மனிதத்திற்கும் அப்பால்
சகோதரத்துவம் இருந்தது எமக்குள்.

பொழுதுகளை கருக்கிய
பெரு வெளியில் எங்கள்
விழுதினில் ஒன்றை
விலை கொடுத்து வந்தோம்.
எழுதாத சோகம் எம் தலைகளில்
எழுதிய நாள் அன்று
சின்ன ரவையின் கீறல் பட்டு
சிரித்தபடி விழுந்தாயே
சத்திய மூர்த்தி உன்னை
என்ன விலை கொடுத்து
எங்கு பெறுவோம்?
ஒற்றைக் கண் இழந்ததால்
மற்றக் கண்ணும் இல்லாத மாதிரி
நீ இல்லா வெளி
இட்டு நிரவ முடியா இடைவெளி
அழுவதென்றால் இன்றும் நாம்
அழுவது அந்த ஆத்மாவுக்காகத்தான்.

அண்ணா எழு கலை இலக்கியப்
பேரவையாய் எழ வைத்தீர்
எழுத்திலும் பேச்சிலும்
உச்சங்கள் பெற வைத்தீர்
பழம் தமிழ்ப் பண்டிதர்கள்
பலரிருந்தும் என்ன
இளம் தமிழ் இரத்தங்களால்
இலக்கியம் வளர்த்தீர்கள்
தளம் கொண்டு தமிழ் விருட்சம்
தளைத் தோங்க அரிய
களம் தந்து எம்மைக்
கைதூக்கி விட்டீர்கள்.
இளம் சிங்கங்களாய்
இலக்கிய உலகில்
வலம்வர வைத்தீர்கள்
நலமோங்கும் உங்கள்
நற்பணி வாழ
சிரம் தாழ்த்துகின்றோம் அந்த
சிதம்பர வாசலில்!
நீங்கள்
இலக்கியவாதி மட்டுமா
இலட்சியவாதியும் தான்
வளைந்து நெளிந்து
வாழாப் பெரியோன்
பேரம் பேசி யாருக்குமே
சோரம் போகாத புனிதன்
மனிதன்
கனகச்சிதமாய்ப் படைக்கும் படைப்பாளி
கைதேர்ந்த 'கர்த்தா'க்கள்
புதியவர்களுக்குக்
கைவரிசை காட்டுவார்கள்
ஆனால் நீங்களோ
கைகோர்த்துப் பயணிப்பவர்.
ஆதலாற்தான் சொல்கிறேன்
நீங்கள் சேர்த்து வைத்த
செல்வத்தைவிடவும்
பெறுமதி மிக்கது
உங்கள் பெயர்சொல்ல
நான்குபேரை அணைத்திருப்பதுதான்!
அதுபோதும் உங்களுக்கு!
உங்கள்
நிழல் போதும் எங்களுக்கு
வாழ்க நீடு வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.ரி. குமரன்
எஸ்.ரி. அருட்குமரன்
இயக்குனர்கள், புத்தாக்க அரங்க இயக்கம்





பிடிவிலியாக ஓடிக் கொண்டிருக்கும் காலம் தனக்கான ஆளுமைகளை வரலாற்றின் வழி உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது. காலத்தின் குரலாய் கலைஞனே காணப்படுகின்றான். சமூகத்திற்காய் தன்னை அர்ப்பணிப்பதுடன் பிரதிபலன் பாராது செயல்படுகின்றான். தன்னுடைய படைப்புக்களின் மூலம் சமூகத்தினை பதிவு செய்துகொள்வதுடன் சமூகத்தின் குரலாய் ஒலிக்கின்றான். மனிதன்மனிதனாகவாழ்வதில்பெருமிதம் கொள்கிற ஒரு அழகிய உலகமே அவன் கனவு. அந்தக் கனவு நனவாக அவன் தன் கலையின் மூலம் புதிய வெளிச்சம் பாய்ச்சுகிறான்.

மனித மன இருளை, இருட் குகையினுள் அடைந்துகிடக்கும் மனவக்கிரங்களை தன் படைப்புகளில் ஆராய்ச்சி செய்கிறான். நாமே அறியாத நம் மனதின் அத்தனை மூலைமுடுக்குகளிலும் அவன் பயணிக்கிறான். கலையின் பொன் னொளியால் அன்பெனும் சுடரை ஏற்றுகிறான். இந்த பிரபஞ்சத்தை நேசிக்கும் கலைஞன் அதற் காகத் தன்னையே விலையாகக் கொடுக்கின்றான். இத்தகைய கலைஞர்களை காலத்தின் பிரசவிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்களாகக் கொள்ளமுடியும். ஈழத்தாய் காலம் தோறும் இத்தகையவர்களினை பிரசவித்துக்கொண்டிருக்கின்றாள் என் பதினை காலவோட்டத்தில் நாம் தரி சனம் கொள்ளக்கூடியதாக உள்ளது. இப் பிரசவிப்புக்களில் எமது மதிப்புக்குரிய கலை ஞர்தான் சிறுகதை, விமர்சனம், பத்தி ரிகை, நாடகம் என பலதுறைகளிலும் தனது முத்திரையினை பதித்த சிதம்பரதிருச் செந்திநாதன் அவர்கள். ஈழத்து படைப் பாக்க உலகில் முக்கியப்படுகின்ற படைப் புலக சக்தியாக பல்துறை ஆளுமையாளனாக இவர் விளங்குகின்றார்.

தான் கால்தடம் பதித்த அனைத் துத் துறைகளிலும் தனக்கென தனித்து வமான பாணியில் தன்னுடைய சமூ கம் மீதான தாக்க வன்மையான பார்வையின் மீதான கரிசனையுடன் அவற்றினை துணிந்து வெளிப்படுத்தியவகையில் இவருக்கு நிகர் இவராகவே விளங்குகின்றார். தான்மட்டும் வாழாது தன்சார்ந்தவர்களையும் கலைப் படைப்பாக்க உலகிற்கு பிரவேசிக்கச் செய்து அவர்கள்மீது அக்கறைகொண்டு அவர் களின் வளர்ச்சியில் கண்ணும் கருத்து மாக தனது பார்வையினை செலுத்தி நட்புரி மையுடன் வழிகாட்டி உயர் நிலைக்கு இட்டுச்செல்கின்ற பெருந்தகையினுடைய உயர்ந்த தன்மையினை அனுபவரீதியாக எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்துள்ளது. இவர் "தனக்கென வாழாபிறர்க்கென வாழும்" பெரும் படைப்பாளியாக விளங்குகின்றார்.

இவரது படைப்புக்கள் காலத்தின் பதிவு கள், சமூகத்தினை தரிசனம் கொள்வதற் கான களவெளிகள் என்பது மறுக்கவியலா தது. அவற்றினை தாண்டி கலைஞன் தான் படைக்க நினைப்பதினை போன்று வாழ்ந்துகாட்டவேண்டும். அவ்வாழ்க்கையே அர்த்தமுள்ளதாகவும் இளையதலைமுறை யினருக்கு வழிகாட்டுவனவாகவும் அமை யும். இவற்றிற்கு பிசிறல் இல்லாமல் செயல் முனைப்புள்ளவராக இவர் காணப்படு கின்றார். இவ்வாழ்வின் இலக்கணத்திற்கு உரித்துடையவராக இக்கலைஞன் விளங்கு கின்றார். இவருடனான உறவும், புரிதலுடன் கூடிய நட்பும் "நாளைய தலைவர்" என்கின்ற தெருவெளிஆற்றுகையினை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினருக்காக தயாரித்த களவெளியுடன் ஆரம்பித்தது. ஆற்றுகையின் தயாரிப்பு கணங்கள் ஒவ்வொன்றிலும் பிர தேச செயலகத்தின் நிர்வாக அலுவலராக இருந்த அவரது வழிப்படுத்தலினையும் பிரச் சினைகளினை கையாளுகின்ற உத்திகளி னையும் அருகிலிருந்து கற்றுக்கொள்வதற் கான வாய்ப்புக் கிடைத்தது.

நேரமுகாமைத்துவம் என்பது இவரி டம் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த சிறப்பான விடயமாகும். இன்று பலரும் கடைப்பிடிக்கத் தவறுகின்ற விடயங்களி லொன்றாக நேர முகாமைத்துவம் காணப் படுகின்றது. மாறாக இவர் நேரத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தினை அனுபவரீதி யாக கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது. நேரமுகாமைத்துவத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவமே படைப்பின் வெற்றிக்கும் காரணமாக அமைந்து விளங்கியமையை எம் மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சான்றாக ஆற்றுகைகளிற்கான ஒத்திகை களினை ஆரம்பிப்பதற்கான நேரம், முடி வுறுத்துவதற்கான நேரம் என்பன திட்ட மிடப்பட்டவகையில் குறித்தொதுக்கப்பட்ட வகையில் அமைக்கப்பட்டிருந்தமை சிறப் பான விடயமாகும். அத்துடன் ஆற்றுகைக் கான ஒத்திகைகளில் மிகவும் திட்டமிடலு டன் கூடிய பருவரையான செயற்பாடே இவரி டம் காணப்படும். இது எமது இயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியுடன் இணைந்ததாக காணப்பட்டது. எப்போதும் நேர்ப்பாடானவகையில் கருத்துக்களினை பகிர்ந்துகொள்வதுடன் நம்பிக்கை தருகின்ற வகையில் கருத்துக்களினை பகிர்ந்து உற்சாகப்படுத்துகின்ற தன்மையினை இவருடன் உரையாடுகின்ற ஒவ்வொரு கணங்களிலும் உணரக்கூடியதாக உள்ளது. இவருடைய உற்சாகமூட்டல்கள் நாடகத்துறையில் மேலும் துணிவோடு முன் நோக்கி பயணிப்பதற்கும் எம்மால் கால் தடம்பதிப்பதற்கு கால்கோளாக அமைந்துள்ளது. இளைய தலைமுறையினரை தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துகின்ற போக்கு பலரிடம் காணப்படுவதில்லை. மாறாக எமது செயற்பாடுகளினை ரசிப்பதுடன் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துகின்றமை இவரிடம் காணப்படுகின்றது. இவ் உற்சாகப்படுத்தல்கள் மேலும் அடுத்த கட்ட வளர்ச்சி நோக்கி நாடகத்துறையில் பிரவேசிப்பதற்கு அடிப்படைத்தளமாக அமைந்து விளங்கியது. "நாளைய தலைவர்கள்" எனும் ஆற்றுகையின் தயாரிப்பு எமக்கு வித்தியாசமான அனுபவமாகக் காணப்பட்டது. காரணம் எம்மைவிட மூத்தவர்களினை கையாளவேண்டிய பொறுப்பு அப்பொறுப்பினை லாவகமாக கையாள வேண்டிய சூழ்நிலை இருந்தபோதிலும் நாம் இயல்பாக கையாளுவதற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கி வழிகாட்டியாக செயற்பட்டார். இவ் வழிகாட்டல்கள் நாடக ஆற்றுகையினை முழுமைப்படுத்துவற்கும் வெற்றி நோக்கி நகர்த்துவதற்கும் காரணமாக அமைந்திருந்தது.

குழுச்செயற்பாட்டில் ஒவ்வொரு வரது அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடே வெற்றியினைப் பெறுவதற்கான வாய்ப்பாக அமைகின்றது. இவ்வகையில் குழுச் செயற்பாட்டின் முக்கியத்துவத்திற்காக ஒவ்வொருவரினையும் அவர்களது உணர்விற்கு ஏற்றவகையில் கையாள்கின்ற உத்தியினை இவர் சிறப்பாக கையாள்கின்றமையும் கலந்துரையாடல்கள் நடக்கின்றபோது முரண்பாடுகள் ஏற்படாத வகையில் ஒவ்வொரு வரினையும் புரிந்துகொண்டு அவர்களது கருத்துக்களிற்கு முக்கியத்துவம் கொடுத்து தேவையானவற்றினை தேவையான சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக்கொள்கின்ற சிறப்பினை இவரிடம் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் எடுக்கப்பட்ட மாபெரும் சிறுவர் தின விழாவில் இவ்வாற்றுகை தெல்லிப்பழை பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் ஆற்றுகை செய்யப்பட்டபோது அவையோரிடம் இருந்து பெரும் வரவேற்பு பெற்றுக் கொண்டதுடன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களினால் சிறந்ததொரு படைப்பு எனப் பாராட்டப்பட்ட தன்மையினையும் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது. இதற்கெல்லாம் வழிகாட்டியாக நல்லாசிரியராக நல்ல நண்பராக விளங்கியவர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள். இவருடைய வழிகாட்டல் என்றுமே நல்ல பாடங்களைக் கற்றுத்தந்துள்ளது என்பது நெஞ்சகத்தே பசுமையாக நிறைந்துள்ளது. தனது சிந்தனையினை செயற்படுத்துவதற்கு அவர் கையாண்ட உத்திகள் சிறப்பானவை ஆகும்.

இவரது கலைச்சேவை மேலும் தொடர்வதுடன் சமூகம் சார்ந்து சமூகப்பிரச்சினை சார்ந்து இளைய தலைமுறையினருக்கு மேலும் உற்சாகம் தரும் வகையில் இயங்குகின்ற பணி தொடரவேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி கமலநந்தினி சத்தியமூர்த்தி

சுவிற்சர்லாந்து



இணுவையூர் சிதம்பரதிருச் செந்தில்நாதன் நீண்ட பெயரையுடைய மனி தரைப் பற்றி எழுத்தில் எழுதி விடவோ அல்லது வார்த்தைகளில் சொல்லிவிடவோ முடியாத ஒரு வராவார். அவருக்கும் எனக்கு மான அறிமுகம் கடந்த பதினெட்டு வருடங்கள் ஆகும். எனினும் அது இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. கடைசிவரை இருக்கும் என்பதிலும் அசைக்கமுடியாத உறுதியுடையவள் நான். எனக்கு அண்ணையாக எனது மகளுக்கு அன்பு ஆச்சிப் பெரியப்பாவாக எங் களின்நல்லவைகெட்டவைஅனைத் திலும் பங்கெடுப்பவராக அவர் எனது குடும்பத்தின் முதன்மை யானவராக இருந்தார். இருக்கிறார், என்றும் இருப்பார்.

அவர் ஈழநாடு பத்திரிகை யில் பிரதம ஆசிரியராக பணி யாற்றிக்கொண்டிருந்தார். அப் போது நான் எந்தவித வேலையும் அற்றிருந்தகாலம் 1997 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பகுதியில் நானும் அம்மாவும் வசித்திருந்த காலப் பகுதி. அப்போது முறைசாரக் கல்விப் பிரிவால் இதழியல் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டிருந் தது. நானும் அதில் படிக்கச் சென்றுகொண்டிருந்தேன். அங்கு கறுத்தக்கண்ணாடி போட்ட மெல் லிய ஓரளவு உயரமான ஒருவர் எமக்கு வகுப்பெடுக்க வந்திருந்தார். எனக்கு அப்போது அவர் யார் என்றே தெரியாது. எமது வகுப்பில் சத்தியமூர்த்தி, முல்லைக்கமல், செவ் வேள் இன்னும் பலர் படித் துக்கொண்டிருந்தோம். இவர்கள் அனைவரும் ஈழநாடு பத்திரிகை யில் இவருக்குக்கீழே வேலை செய்துகொண்டிருந்தனர். இவர்கள் இவரைக்கண்டதும் கடும் மரி யாதை கொடுத்தனர். இவரின் வகுப்பு ஒன்றிரண்டு தடவைதான் நடந்திருக்கும். ஆனாலும் எமக்கு ஞாபகமிருந்ததோ என்னவோ தெரி யாது. அவர் ஒவ்வொருவரையும் கணக்கிட்டு வைத்திருக்கிறார். வகுப்பு முடிந்துவிட்டது. எங்களுக் கான புத்தகமும் குழுக்குழுவாக பிரிக்கப்பட்டு அதையும் செய்து கொடுத்துவிட்டோம். சேட்டிபிக் கேற்றும் தரப்பட்டுவிட்டது. அப் போது ஈழநாடு போன்ற பத்திரி கைகளில் வேலை செய்தவர்கள் தான்கூட எனது வீட்டுச் சூழல் பொருளாதார நெருக்கடி யில் இருந்ததால் வேலை தேட வேண்டிய கட்டாயம். நான் அடிக்கடி முல்லைக்கமலிடம் ஈழ நாட்டில் வேலைவாங்கித் தரு மாறு கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் இன்று கேட்கிறேன் நாளை கேட்கிறேன் என்று என்னைப் பலமுறை அலைக்கழித்ததால் நானே நேரடியாக களத்திலிறங்கும் முடிவோடு சரியாக 11.30 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் ஈழநாடு வாசலில் சைக்கிளை விட்டு விட்டு உள்ளே போகப்போனபோது அண்ணை வீட்டுக்கு போக வெளியில் வந்துகொண்டிருந்தார். நான் அவரைக் கண்ட சந்தோசத்தில் "எனக்கு ஒரு வேலை வேண்டும் சம்பளம் இல்லா விட்டாலும் பறவாயில்லை முதலில் பழகு கிறேன் பின்பு தொடர்ந்து வேலை செய் கிறேன்" என்றேன். அவர் என்னிடம் எதுவும் கேட்கவில்லை நாளை காலை அங்கு வரச் சொல்லிவிட்டு உடன் போய்விட்டார்.

நான் அடுத்தநாள் காலையில் வேலைக்குப் போனேன். போனதும் ஒப்பு நோக்குநர் வேலையை செய்து பழகும்படி சொன்னார். எப்படிச் செய்யவேண்டும் என் பதை சத்தியமூர்த்தி சொல்லித்தருவார். சத்திய மூர்த்தி அப்போது சிரேஷ்ட உதவி ஆசிரி யராக இருந்தார். இவ்வாறே எனக்கு வழி காட்டியாக துணிந்து என்னுடைய காலில் நான் நிற்கக்கூடிய தைரித்தை ஊட்டியவராக, நிர்வாகத்தை எப்படியெல்லாம் நடத்த வேண்டும், மற்றவர்களோடு எப்படிப் பழக வேண்டும் பாசம் என்றால் எப்படி இருக்கும், எதையெல்லாம் வாசிக்கவேண்டும், எப்படி எழுதவேண்டும் என்றெல்லாம் துணை புரிந்தார். எனது எழுத்தை முதன்முதலில் ஈழநாடு பத்திரிகையில் பிரசுரித்து என்னை உலகுக்கு காட்டியவர் இவர். நற்பண்பு கள் அனைத்தையும் தந்து எல்லா எழுத்தாளர்களிடமும், என்னை அறி முகப்படுத்தினார். என்னைக் கண்டாலே எலி யும் பூனையுமாக இருந்த என்னுடைய அன் பான கணவர் சத்தியமூர்த்தியை எனது வாழ்வில் இணைத்த பெருமையும் எல்லாருக் கும் தெரிந்த நந்தினியை சத்தியமூர்த்தியின் மனைவியாக அறிமுகம் செய்துவைத்தவர் என்னுடைய அண்ணைதான்.

அண்ணை தரமான எல்லாருக்கும் விளங்கக்கூடியவாறு சிறுகதை எழுதுவார். சிறுகதை, விமர்சனம், கட்டுரை என நீண்ட எழுத்துக்களை தந்தவர் இவர். இவர் எழுதும் எழுத்தை வாசிப்பவர்கள் அச்சில் வந்தபின் நல்லாக இருக்கிறது என்பார்கள். ஆனால் இவரது கையால் எழுதும் எழுத்தைப் பார்த் தால் மருத்துவர் மருந்துச்சிட்டையில் எழுது வதுபோல இருக்கும் கிறுக்கல்தான். வாசித்து மொழிபெயர்ப்பவர்கள் மூன்றுபேர் மட் டுமே ஒன்று அண்ணையின் மனைவியான .... அக்கா மற்றது சத்தியமூர்த்தி, அடுத்தது நான். ஆரம்பம் தொட்டு சத்தியமூர்த்தியே அண் ணையின் எழுத்தை பிரதி செய்து வந்தார். என்று நான் ஒப்புநோக்க பணியேற்றேனோ அன்றிலிருந்து என்னால் இயன்றமட்டும் பிரதி எடுத்து பின் சத்தியமூர்த்தியிடம் உதவி கேட்டு எழுதியே பின் அச்சுக்கோக்க கொடுப் போம். வேலை என்ற எங்கள் உறவு நிலை படிப்படியாக வளர்ந்து அவருக்கும் அக்காவுக்கும் ஒரு தங்கையாக, பிள்ளை களுக்கு ஒரு அக்காவாக எங்கள் தொடர்பு நீண்டுகொண்டேயிருக்கிறது. எனக்கு ஏதா வது மனக்குறை கவலை ஏற்படும்போதெல் லாம் அவர்கள் இருவரினதும் அன்பான வார்த்தைகள் மருந்தாக ஒத்தடம் கொடுத் திருந்தது.

பின்னாளில் ஈழநாடு பத்திரிகை நிறுத்தப்பட்டபோது நான் வேறு பத்திரிகை யில் வேலை செய்துகொண்டிருந்தேன். அப்போது 'எழுகலை இலக்கியப் பேரவை' என்ற அமைப்பு ஒன்றை அமைத்து அதி லிருந்து பலபேரின் சிறுகதைகளை சேர்த்து 'எழுசிறுகதைகள்' என்ற தலைப்பில் ஒரு புத் தகம் வெளியிட்டிருந்தோம். அந்த அமைப் புக்கு அவரே ஆலோசகராக இருந்து எம்மை எல்லாம் கலைந்துவிடாதபடியும் விழுந்து விடாதபடியும் போர்ச்சூழலிலும் நல்ல படைப்புகளை வெளிக்கொண்டுவர வைத்த வர். அவரின் வீட்டிலேயே எங்கள் சந்திப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். அப்போது அண்ணையின் ஒழுங்கமைப்பில் அக்காவின் அன்பான கவனிப்பு அலாதியானது.

அண்ணையின் வீட்டில் என்ன நிகழ்வென்றாலும் அவர் தனித்து செய்ததில்லை. நாம் அனைவரும் அங்கிருப்போம். (சத்திய மூர்த்தி, யோசப் மாஸ்ரர், செவ்வேள், முல்லைக்கமல், பயஸ், வேலணையூர் சுரேஷ், அகிலாபசுபதி, பூங்குழலி, தாசன், கை.சரவணன், பிரபா, மயூரரூபன், ஆவரங்கால் சுதன், மற்றும் நான்.) இவர்கள் அனைவரும் தான் அப்போது வன்னியில் ஒரு குடும்பம். யாரின் வீட்டில் என்ன நடந்தாலும் எல்லோரும் ஒன்றாகவே நின்ற காலம். இவர்கள் எவருக்குமே வன்னியில் சொல்லிக்கொள்ள பல சொந்தங்கள் இருந்ததில்லை. அங்கு அன்று சாதி, மதம் என்பவற்றுக்கும் அப்பால் நட்பா அல்லது சகோதரத்துவமா எதுவோ ஒன்று பிணைத்திருந்த காலம். அதன் தலைவர் அல்லது வழிகாட்டியாக எங்கள் அண்ணை இருந்தார். போரின்போது இருந்த எங்கள் சத்தியமூர்த்தி, ஆவரங்கால் சுதன், பயஸ் இன்று எங்களுடன் இல்லை. எனினும் ஒன்றுகூடி அன்று வாழ்ந்த கூட்டுக்குருவிகள் அனைத்தும் திக்கொன்றாக திசை ஒன்றாக எங்கெங்கோ வீதிகளில் இன்று... வேலை காரணமாக புதுக்குடியிருப்பென்னும் அழகான பசுமையான இடத்தைவிட்டு கிளிநொச்சிக்கு நகர்ந்தபோது அவர்களும் வேலை இட மாற்றத்தால் அங்கு வந்திருந்தனர். அப்போது வீடு திருத்திக்கொடுக்க நாளானதால் எனது சிறிய வீட்டிலேயே அவர்களும் வசிக்க வேண்டியதாயிருந்தது. அவர் வேலையை யாழ்ப்பாணத்துக்கு மாற்றிக்கொண்டு போய் சொகுசாகவோ அல்லது நிம்மதியாகவோ வாழ்ந்திருக்கமுடியும். அவரது மண்பற்றோ அல்லது விடுதலை உணர்வோ அவரை வன்னியிலேயே நிறுத்தியிருந்தது.

அப்போது அவர்களுடன் இன்னும் நெருக்கமான உறவு ஏற்பட்டது. இது 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியாகும். அவரின் இரண்டு பெண்பிள்ளைகளை நான் சிறியவர்களாக 1997ஆம் ஆண்டு பாடசாலையிலிருந்து கைபிடித்து பத்திரமாக கூட்டிவந்து அவர்களின் ஒவ்வொரு வளர்ச்சியையும் பார்த்து மகிழ்வேன். ஆனால் ஒன்றாக சாப்பிட்டு ஒன்றாக பிள்ளைகளுடன் படுத்துறங்கி வாழும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. அப்போது அண்ணையின் பொறுமை, கோபம், கட்டுப்பாடு, நிர்வாகத்திறமை, வைத்தபொருட்களை வைத்த இடத்தில் வைத்து எடுப்பது, சரியான நேரத்துக்கு அனைத்தையும் செய்வது வீட்டுக்கு நண்பர்கள் வந்தால் செலவைப் பார்க்காது உபசரிப்பு என இன்னும் பல சொல்லிக்கொண்டே போகலாம் இவற்றையெல்லாம் அவர் மட்டும் செய்தாரில்லை அக்காவையும் பிள்ளைகளையும் சேர்த்து செய்வித்தார். இவை அனைத்தையும் நானும் கண்டு பழகினேன் அல்லது கொப்பியடித்தேன் என்று சொல்வேன். அண்ணையின் மனைவியான ராஜ நாயகி அக்கா அவரின் பெயர் யாரும் சொல்வதில்லை. அன்பாக அனைவரும் 'அக்கா' என்றே அழைப்பார்கள். நான் சிலநேரங்களில் நினைப்பதுண்டு அக்கா இல்லாது இருந்தால் அண்ணை எப்பவோ இல்லை என்று அண்ணை நினைப்பதை அக்கா செய்து முடிப்பார். அக்கா தனது விருப்பு வெறுப்புகள்இருந்தாலும்அனைத்தையும்அண்ணைக் காகவும் பிள்ளைகளுக்காவும் அர்ப்பணித்து வாழுபவர்.

நல்லநிறம் எப்பவும் நெற்றி நிறைய பெரிய குங்குமப்பொட்டு வைத்து, அழகான கொண்டை போட்டு சாறிகட்டி பார்ப்பவர்கள் 'மகாலஷ்மியை' போல இருக்கிறார் என்று சொன்னவர்கள் பலர். அவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச உத்தியோகம் பார்க்கும் பெருமைத்தன மில்லாது யார் உதவி கேட்டுப்போனாலும் சிரித்தமுகத்துடன் செய்துகொடுக்கும் பக்கு வம். குடும்பத்தலைவி, சரியான மனைவி, பிள்ளைகளுக்கு அன்பான அம்மா, எங்களுக் கெல்லாம் அன்பையும் பாசத்தையும் அளவு பார்க்காது தரும் அக்கா தான் அண்ணையின் மனைவியாக இருக்கும் அக்கா. இவரைப்பற்றி நிறையவே எழுதிக்கொண்டு போகலாம். அவரை விடுத்து அண்ணையை என்றும் யாரும் பதிவுசெய்துவிடமுடியாது. ஏனெ-னில் காலை 4.00 மணிக்கெல்லாம் எழும்பி காலை மதியச் சமையல் செய்து உடுப்புத் துவைத்து எல்லா வீட்டு வேலைகளையும் முடித்து 8.00 மணிக்கு சரியாக அண்ணையின் அந்த மண்ணெண்ணை மோட்டச்சைக்கிளில் ஏறியமர்ந்து அலுவலகம் சென்று அங்கு அவர் அனைத்து வேலையிலும் திறமையாக செய்து முடித்து பின் மதியம் வீட்டுக்கு வந்து அண்ணையின் உடலுக்கு இதுதேவை அது தேவை என்று பார்த்து கவனித்து பின் மீண்டும் வேலைக்குச் சென்று மாலை 4.30 மணிக்கு வீட்டுக்கு வரும்போது சந்தைக்கு சென்று சாமான் வாங்கிவந்து இரவு சாப்பாடு செய்து அதற்கிடையில் அண்ணையின் எழுத் துலக நண்பர்கள் வந்தால் அவர்களைக் கவனித்து இரவு அவர்கள் சாப்பிட்டுவிட்டுப் போனதும் பாத்திரம் கழுவி இரவு 11.00 மணிவரை இவரின் நாளாந்தக் கடமையை நான் நேரில் கண்டவள்.

அண்ணைக்கு எழுத்துலக நண்பர்கள், அலுவலக நண்பர்கள் என ஏராளம் பேரின் அனைத்து நல்ல நிகழ்வுகளிலும் சரி துக்க நிகழ்வுகளிலும் சரி அக்கா இல்லாது அண்ணை சென்றதும் இல்லை அவர்கள் ஒரு வரை விட்டு ஒருவர் கலந்து கொண்டது மில்லை. நாங்கள் அனைவரும் பேசிக் கொண்டோம் வாழ்ந்தால் இவர்களைப் போல வாழவேண்டும் என்று 2004ம் ஆண்டு அண்ணைக்கு 50வது பிறந்தநாள். அப்போது சத்தியமூர்த்தி மட்டக்களப்புக்கு வேலையை மாற்றிக்கொண்டு போயிருந்தார். அவர் அங்கு இருந்தாலும் அடிக்கடி தொடர்புகொண்டே இருப்பார். நான் அவருக்கு ஒரு வாழ்த்துமடல் செய்வதற்கு சத்தியமூர்த்தியிடமிருந்து கவிதைவாங்கி அதை ஒரு அழகான வாழ்த்துமடலாக செய்து 'எழுகலை இலக் கியப்பேரவை' சார்பாக வழங்கினோம். அதையும் அண்ணை கவனமாக வைத் திருந்தார். ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் நான், நாம் அனைவரும் வாழ்த்துவோம் நேரில் சென்று. அன்று அக்காவின் அற்புத மான சாப்பாடு எமக்காகவே காத்திருக்கும். கடந்த 6 வருடங்களாக அண்ணை யின் பிறந்தநாளை சத்தியமூர்த்தி இல்லாது விட்டாலும் நானும் அவரின் ஆச்சியுமாக நேரவித்தியாசமான நாடுகளில் வசித்தாலும் காலை முதல் வேலையாக வாழ்த்திவிட்டே எமது வேலைகளைச் செய்வோம். அவரும் எமது தொலைபேசிக்காக காலைமுதலே காத்திருப்பார்.

2005ஆம் ஆண்டு எங்களுக்கு திரு மணம் நடந்தது. எனதும் சத்தியமூர்த்தி யினதும் பெற்றோர்கள் வன்னிக்கட்டுப் பாட்டுக்கு வெளியில் வசித்து வந்தனர். அத னால் எமது திருமணத்தை நேரில் நின்று ஒழுங்குபடுத்த முடியாத சூழல். இரண்டு குடும்பத்தின் சார்பாக தனது தங் கைக்கு அல்லது தம்பிக்கு முன் நின்று எப் படியெல்லாம் செய்யவேண்டுமோ நாள் பார்த்து தாலிக்கு பொன்னுருக்கி, முதல் முதல் கூறைச்சேலை எடுப்பதிலிருந்து யார் யாருக்குச் சொல்லவேண்டும் என்ன சாப்பாடு செய்யவேண்டும் எவ்வளவுபேர் வருவார்கள் எவ்வளவு செய்யவேண்டும், யார் யாருக்கு என்ன வேலையைப் பிரித்துக்கொடுத்து செய்விப்பதுவரை இவர்கள் இருவருமே நின்று செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண நாளுக்கு மூன்று நாளுக்கு முன்பே எமது வீட்டாரும் முதல் நாளே சத்திய மூர்த்தியின் அப்பா, அம்மாவும் வந்திருந் தனர். வந்தவர்கள் வாயடைத்து பிரமித்து நின்றிருந்தனர். எல்லாருமே, தனது வீட்டை மாப்பிள்ளை வீடாக ஒழுங்குபடுத்தியும் எங்கள் வீட்டை பெண்வீடாகவும் ஆயத்தப் படுத்தி முன் நின்று செய்துவைத்தவர். எனக்கு சிறுவயதிலேயிருந்து அப்பாஇல்லாதகாரணத் தால் அம்மாவும் சகோதரிகளும், சகோ தரர் ஒருவருடனும் வாழ்ந்த எனக்கு 'கன்னிகா தானம்' செய்ய யாருமில்லை என்ற நிலை யில் தாம் இருவருமே என்னை தமது மக-ளாக எண்ணி அம்மா அப்பாவாக எனது கைப்பிடித்து கன்னிகாதானம் செய்து வைத் தார்கள் இவர்கள் இருவருக்கும் இரண்டு ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்பிள்ளை களுமே. இரண்டு பெண்பிள்ளைகள் மட் டுமே இவர்களுடன் இருந்தனர். சிறியவர்கள், பூப்படையும் வரை வளர்ந்துநின்றனர். மூத்தவள் வானதி பூப்படைந்ததும் நாமே முன் னின்று எல்லாமே செய்யவேண்டும் என்று சொல்லி செய்யவைத்தவர். அடுத்தவள் பாரதியும் பூப்படைந்தபோது அப்போ எல்லோருமே வரமுடிந்த சமாதானக்காலம் அது. அவரது சகோதரி யாழ்ப்பாணத் திலிருந்து வந்தே செய்திருக்கலாம். ஆனா லும் உடனும் எங்கள் இருவரையும் தமது வீட்டுக்கு வந்து கூட்டி வந்து எம்மையே அனைத்து காரியங்களையம் செய்வித்ததோடு மட்டுமல்லாது இவர்கள் யார் என்ற பல பேரின் கேள்விகளுக்கெல்லாம் எனது தம்பி யும் தங்கையும் என்று ஒரே வார்த்தையில் முடித்து வைத்தவர். அவர்கள் இருவரது நிகழ்வையும் மிகவும் சிறப்பாக நடத்தி முடித்தவர்.

எங்களின் மகள் சிந்து பிறந்தபோது போர்ச்சூழல் கருட்கட்டத் தொடங்கிய காலம் அது. அதனால் எமது எந்தச் சொந் தங்களும் அருகிலில்லாத அவலம். தனது மக ளது பிரசவத்தை தாய் தந்தையர் எப்படி யெல்லாம் செய்வார்களோ அதேபோன்று அக்காவே இரவுபகலாக வைத்தியசாலை யிலிருந்து பார்த்து வீடுவரை வந்து அவளது ஒவ்வொரு வளர்ச்சியிலும் அவர்களே முன் னிற்பவர்கள். என்றும் அவளை அண்ணை 'ஆச்சி' என்றே கூப்பிடுவார் அவளும் இன்று வளர்ந்துகொண்டிருக்கிறாள் எங்கோ கண்காணாத தேசமொன்றில். ஆனாலும் தொலைபேசியூடாக இருவரும் அவள் பெரியப்பா எனவும் அவர் ஆச்சி எனவும் உரையாடும் விதமே தனியானது. இடப் பெயர்வு எம்மை துரத்தியடிக்கத் தொடங் கிய காலம் அது. அண்ணையின் வீட் டில் எந்தவொரு பழைய சாமான்களும் பத்திரமாக பாதுகாக்கப்படும் இடமாக இருந்தது. என்ன புத்தகம் வேண்டு மென்றாலும் பத்திரமாக அடுக்கி வைத் திருப்பார். யார் கேட்டாலும் கொடுப்பார். ஆனால் மிக கவனமாக படித்து முடித்து திருப்பி கொடுக்காவிட்டால் கண்டிப்பைத் தாங்கவே முடியாதிருக்கும்.

மக்கள் அனைவரும் பாதுகாப்புத்தேடி சாமான்களோடு ஓடத்தொடங்கினர். அண் ணையும் சாமான்களுடன் விசுவமடுவை நோக்கி தனது குடும்பத்தினருடன் நகர்ந் திருந்தார். பின் அங்கிருந்தே அவர்களது அலு வலகம் போகத் தொடங்கியிருந்தனர். அப் போது நாம் மூங்கிலாறில் இடம் பெயர்ந்து இருந்தோம். சிலவேளைகளில் அங்கு நாம் சென்று வருவதுண்டு. அவர்கள் மிகவும் கஸ்ரப்பட்டே இருந்ததை நாம் கண்டோம். பின்பு அங்கும் இருக்கமுடியாத நிலை உருவாகி பாதுகாப்பு வலையம் என அறிவிக்கப்பட்ட சுதந்திரபுரத்துக்கு சென்றி ருந்தனர். நாமும் அங்குதான் சென்றி ருந்தோம். ஆனால் சென்று சந்திக்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதபடி நிலைமை மோசமாக இருந்தது. இருப்பினும் சத்தியமூர்த்தி சென்று சந்தித்த போது புதுத் தறப்பாள் ஒன்றைக் கொடுத் தாராம் அண்ணை.

"கவனமாக வைத்திரு இனி இதுதான் உதவும் போற இடங்களில் எமக்கு வீடு ஒன்றும் இருக்காது" என்று சொன்னதாக சொன்னார். இதுதான் அண்ணை கடைசி யாக சத்தியமூர்த்தியோடு கதைத்தது. அந் தத் தறப்பாளை இவரும் கவனமாக தனது சைக்கிள் பின்பகுதியில் கட்டிவைத்திருந்தார். 11.02.2009 அன்று எல்லாருமே திக்கொன்று திசையொன்றாக சாமான்களையும் விட்டு விட்டு ஓடியபோது நாம் புதுக்குடியிருப்பு பகுதியில் வந்திருந்தோம். அப்போது அண்ணை குடும்பம் எங்கே என்று சத்திய மூர்த்தி தேடியபடியிருந்தார். ஆனால் விதி அடுத்தநாள் அவரை எம்மைவிட்டு பிரித்த போது அவரது இழப்பு பற்றி வானொலி யில் தொடர்ச்சியாக அறிவித்துக்கொண்டு இருந்தனர். அதைக்கேட்ட பலபேர் எம்மிடம் வந்து சத்தியமூர்த்திக்கு அஞ்சலி செய்தனர். ஆனால் வரவேண்டிய அண்ணை வரவில்லை.

நிலைமையோ கடும் மோசமாக இருந்தது. நாலாபக்கமும் செல்வந்து விழுந்த வண்ணமிருந்தது. மிக முக்கியமானவர்கள் பாதுகாக்கப்படவேண்டியவர்கள் எல்லா ருமே அங்கு திரண்டிருந்தனர். உடலை கன-நேரம் வைத்திருக்கமுடியாது. இருப்பினும் நான் அவர்களிடம் ஒரு மணிநேரம் கேட்டி ருந்தேன் எப்படியாவது அண்ணை வந்து விடுவார் என்று சத்தியமூர்தியை அவரது அப்பா அம்மா அல்லது நான் நேசித்ததை விட பலமடங்கு அண்ணை நேசித்தார். அவரில் லாது எப்படி இவரது உடலை அனுப்பு வது? நான் கேட்ட அந்த நேரமும் ஓடிய தைத் தவிர அவரில்லாமலே சத்தியமூர்த் தியை மண்ணுக்குள் விதைத்தோம். அந்த நிகழ்வை அவர் அன்று அறிந்திருக்கவில்லை. காரணம் அவரது வானொலிப்பெட்டியை இடம்பெயர்ந்து வரும்போது தவறவிட்டு விட்டார். தவறவிட்டாரா அல்லது அதையும் விதியே தவறவிடவைத்ததா என்று தெரி யாது ஏனெனில் சத்தியமூர்த்தியின் உடலை பாக்கும் சக்தி அண்ணைக்கு இல்லை என்பதே உண்மை.


பின் எம்மை சந்திக்கும்போது அவரை தேற்றப் பட்டபாடு கடுமையாக இருந்தது. இடப்பெயர்வு பலவிதமான எழுத்தில் வடித்துவிடமுடியாத வேதனையை, கண் ணீரை, துயரத்தை, கசப்பான அனுபவத்தை, இழப்புகளை அனைவருக்கும் கொடுத்தது. அதில் அண்ணையின் குடும்பமும் விதி விலக்கல்ல. இந்தபந்தியில்சொன்னதை அனை வருமே அனுபவித்தோம். கடைசிவரை நம் பிக்கையோடு ஏதோ ஒரு நற்செய்திக்காக தாங்கினோம். ஆனால் நடந்தது அறிந்ததே... பின்புஇடப்பெயர்வால்அகதிமுகாமில்பட்ட பாடுகள் கஸ்ரங்களிலும் அண்ணை உடல் பிரச்சினைக்கு முகம்கொடுத்து தற்போது யாழ்ப்பாணத்தில் வாழுகிறார்.

இன்று அறுபது வயதுக்குச் சொந்தக் காரர். இவர் செய்தவைகள், சாதித்தவைகள், நல்லவைகள், அனைத்தையும் பட்டிய லிடவோ தராசுகொண்டு நிறுத்திவிடவோ என்றைக்கும் யாராலும் முடியாதவைகள். உடல்நலத்தோடு இன்னும் பலகாலம் எமக்கு எல்லாம் வழிகாட்டியாக இருந்து எம்மை யெல்லாம் நல்வழிப்படுத்தவேண்டும் என்று வாழ்க வாழ்க என வாழ்த்தியபடி இருப்போம் நாம் அனைவரும்.

எனினும் முகம் பார்க்கமுடியாத இடத் தில் இன்று இருந்தாலும் எங்கள் அண்ணை யின் குரல்மூலமான தொடர்பும் அவரது ஆசீர் வாதமும் அன்பான வார்த்தைகளும் எம் முடனே இருக்கவேண்டுமென இறைவனி டம் நான் தினமும் வேண்டுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.அருணகிரிவாசன்
பிரதி அதிபர்
யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரி



துடிப்பும், செயற்றிறனும் மிக்க எனது நண்பன் பரம தயாளன் அவர்கள் என்னை இணைத்துவிட்ட நிறுவனம் "இணுவில் கலை இலக்கிய வட்டம்" இதில் இணைந்து கொண்டவர்கள் ஏற்கனவே எனக்கு அறிமுக மானவர்கள்தான். ஆனால் அங்கு தான் அவர்களைப் புரிந்துகொண் டேன்.

அவர்தான் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன். பத்திரி கையில் சிறுகதையை நோட்ட மிடும் அனைவர் வாயிலும் உச் சரிக்கப்படும் பெயர் இது. எந் நேரமும்ஒருபுன்சிரிப்புடன்தன்னை வெளிப்படுத்தி நிற்பார். பெரிய வர், சிறியவர், கற்றவர், பாமரர் எல்லோருடனும் நேரிய பார்வை யுடனும், நட்புடனும் பழகி சீரிய வழியில் நகர உதவுவார்.

இணுவில் சிவகாமசுந்தரி அம்மன் கோவில் வீதியில் இலக் கிய வட்டக் கூட்டங்கள் நடை பெறுவது இன்னும் பசுமை யாக உள்ளது. இங்கே எடுக்கும் தீர்மானங்களை செயல்வடிவிற்கு இட்டுச் செல்வதில் விற்பன்னர்.

இணுவில் மத்தியகல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் பல இலக்கியக் கருத்தரங்குகள், புத்தக வெளியீடுகள், நூல் விமர்சனங்கள் என இலக்கியம் சார் நிகழ்வுகள் நடைபெறும் இவற்றிற்கெல்லாம் மூலவராக இருந்து உழைத்து வெற்றிகரமாக நிறைவேற்றுவார்.

சாதாரண வாழ்வியல் நிகழ்வு களின் விம்பமாக இவரது சிறுகதை கள் காணப்படும். பத்திரிகைகளில் இவர் பெயரில் வரும் சிறுகதைகளை நண்பர்களுடன் சேர்ந்து வாசித்து எம்முள் விமர்சித்து மகிழ்வோம். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, ஊர்ப்பற்று நிறைந்த இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அண்ணா அவர்கள் தன் இலக்கியத் தொண்மை மேலும் நலமுடன் தொடர வேண்டும் என்று எல்லாம் வல்ல இணுவில் சிவகாமி சுந்தரி அம் பாளை வேண்டி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் நாக. சிவசிதம்பரம்



நேற்றுப்போலுள்ளது - என்
நினைவுகளில் - நீங்கள் எமை
ஆற்றுப்படுத்திய நாள்
ஆரம்பம் - கவிதை என...
கைவிரலில் தொட்டு
காலடி மண் நடை பழகும்
சின்னக் குழந்தையெனச்
சிரித்த மன நினைவெனக்குள்...!

மீட்கிறேன்... முன்னை... அந்நாள்!
வெயில் - மழையில் பனி இரவில்...
தோட்ட வெளியில் - உளம்
தோயும் நிலவொளியில்... எதிர்க்
காற்றில்... மிதிவண்டிக்...
காலம் எனினும்
களையறியா தெம் கதைகள்...!
வீடுவந்தும்... தேநீர்...
வீண்பொழுதென் றெண்ணாத
காலநிமிர்வில் - உங்கள்
கடமைகளை எண்ணுகிறேன்...!

இடர்வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன்பிறந்தவர் போல்
(உங்களைப் போல்) மாந்தர்
உறவு கொள்வாரென்றெம்
*கவிமணி வாழ்வும் - உம்
கடமையில் கண்டேன்


ஏற்கின்றேன்... ஐய! உங்கள்
எழுத்துலக இடர்களில்... ஓர்
தேற்றுதலாய் தானும்
துணைநின்று உதவிதராக்
காலச் சூழலினில் - நான்
காணாமல் தானிருந்தேன்!
காட்சிகளின் ஈரக்
கவலை உணர்வலையில்
தோற்றுப்போனேனோ!

இடரினும் தளரினும்
இயங்கிடும் மனிதம்...!
மனமுயர் அழகு! முகம்
மலர்வுறும் நிமிர்வு... உம்
இயல்பென முயன்றீர்...
ஆலம்வேர் விழுதுகளின்
'ஆழம்' நிலைப்பது போல்...
காலமும் வாழும் - உங்கள்
கதைகள்

*கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.செல்வகுமார்
கனடா



இந்திய ஆக்கிரமிப்பில் ஈழ மண் உட்பட்டிருந்த காலம். போர் ஓய்ந்தபின்னும் இராணுவ நெருக்கடிக்குள் சிக்கி மக்கள் தத்தளித்துக்கொண்டிருந்த காலம். ஊடக சுதந்திரம் பெரும் அச்சுறுத்தலை சந்தித்தது. பத்திரிகை அலுவலகங்கள் தீயிடப்பட்டன. அச்சியந்திரங்கள் அடித்து நொருக்கப்பட்டன. படைப்பாளிகள் பலரும் மௌனித்து இருந்த நேரம். இந்தவேளையில் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 1989ம் ஆண்டிற்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். முன்பு வளர்மதியின் கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த "உள்ளம்" என்ற இலக்கிய சஞ்சிகையை அச்சில் மீண்டும் வெளிக்கொண்டு வருவதென முடிவெடுத்தோம்.

முழுக்க முழுக்க உள்ளூர் எழுத்தாளர்களின் திறமையை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இச்சஞ்சிகை இரண்டாவது இதழில் போதிய தரமான ஆக்கங்களின்றியும், வெறும் ஆர்வத்தைத் தவிர இலக்கிய அறிவோ, அனுபவமோ அற்ற எமது தன்மையினாலும் தள்ளாட ஆரம்பித்தது.

அப்போது எமது ஊரில் வசித்த பிரபல எழுத்தாளரும், சண்டிலிப்பாய் உதவி அரச அதிபருமாக இருந்த து. வைத்திலிங்கம் அவர்களது ஆலோசனையின்படி சஞ்சிகையின் எல்லையை விரிவுபடுத்த எண்ணி யாழ் குடாநாட்டின் மூலை முடுக்கெங்கிலும் துவிச்சக்கரவண்டியில் எழுத்தாளர்களை சந்தித்து எமது சஞ்சிகைக்கான ஆக்கங்களைக் கோரினோம். அப்போ திருந்த சூழலில் பலரும் எங்களை சந்திக்கவே தயங்கினர். எங்களை சந்தேக கண்கொண்டு நோக்கினர். சிலர் "நாங்கள் எழுதிறதை இப்ப விட்டிட்டம்" என்றனர். மற்றும் சிலர் முடிந்தால் தருகிறோம் என்றனர். இலக்கியம் பற்றிய எந்தவித பின்னணியோ, அறிமுகமோ இல்லாமல் இருந்த இளைஞர்களான எங்களைப் பார்த்து அவர்கள் பயந்ததிலோ, தயங்கியதிலோ எவ்வித பிழையும் இருக்கவில்லை.

மருதனாமடம் சந்தியில் பெரியதொரு இராணுவ முகாம். அதற்கு அண்மையில் ஒரு எழுத்தாளரின் வீடு. அவரை சந்திக்க முகாம் தாண்டியபோது இந்திய ராணுவத்தால் மறிக்கப்பட்டோம். சிறிய விசாரணையின் பின்னர் எழுத்தாளர் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டோம் யாரென்று தெரியாத எங்களை வாசலில் நின்று வரவேற்று, வீட்டில் கொண்டுபோய் இருத்தி வைத்து குளிர்பானம் தந்து குடிக்கவைத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகை வெளியிடும் எங்கள் ஆர்வத்துக்கு சபாஷ் சொன்னவர் மதிப்புக்குரிய எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள். "உள்ளம்" சஞ்சிகையை புரட்டிப்பார்த்து வடிவத்திலும், உள்ளடக்கத்திலும் தரமற்ற சஞ்சிகையாக இருந்ததை சுட்டிக்காட்டி எம்முடைய உழைப்பிற்கு மதிப்பு தந்து இதனை ஒரு தரமான சஞ்சிகையாக மாற்றுவதற்கு தன்னாலான உதவிகளை செய்வதாக கூறி எம்மை வழி அனுப்பி வைத்தார்.

உதவி செய்வதாக கூறியதோடு மட்டுமல்லாது எழுத்துத் துறையிலும் பத்திரிகை துறையிலும், வடிவமைப்பிலும் பிரபலமான அவருடைய நண்பர் திரு ராதேயன் அவர்களை எங்களுடன் தொடர்புபடுத்தி இருவருமாக சேர்ந்து எம்மை ஊக்குவித்து சஞ்சிகை புதுப்பொலிவுடன் வருவதற்கு வழிசமைத்தார்கள். எமது சனசமூக நிலைய கட்டுப்பாட்டிற்கு அமைய நேரடி அரசியல் மற்றும் சமய ஆக்கங்களை தவிர்த்து உள்ளதில் மிகவும் தரமான ஆக்கங்கள் வெளிவந்தன. பல வேறு புனைபெயர்களைப் பயன்படுத்தி சிதம்பர திருச்செந்திநாதன் ஒரு தொடர்கதை உட்பட சிறுகதைகள், கட்டுரைகளை எழுதினார். "இலக்கியா" என்ற பெயரில் இவர் எழுதிய இலக்கியப் பக்கங்கள் அன்று நிலவிய இலக்கிய போக்குகளை பாரபட்சமின்றி விமர்சித்தது. "வாகுலேயன்" என்ற பெயரில் நாட்குறிப்பு ஒன்றையும் எழுதினார். வேறு மொழிகளில் வெளிவந்த நல்ல சிறுகதைகளை தேடி, தேடித் தந்தார். அப்படி பிரிசுரித்த வைக்கம்முகம்மது பஷீரின் உலகப்புகழ் பெற்ற "மூக்கு" என்ற சிறுகதை அண்மையில் இங்கு கனடாவில் நான் சார்ந்த நாடக அமைப்பு (மனவெளி கலையாற்றுக்குழு) மூலமாக நாடகமாக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. அதுமாத்திரம் அல்ல பல்வேறு இலக்கிய கட்டுரைகள், ஓவியங்கள் என பலவற்றை சேகரித்து பிரசுரிக்க உதவினார்.

உள்ளம் சஞ்சிகைக்கு ஆசிரியர் குழு ஒன்று இருந்தபோதிலும் நான் முன்பு சொன்னது போலவே எமக்கு எந்தவிதமான இலக்கிய அறிவோ அனுபவமோ இருக்கவில்லை. ஆனால் உண்மையில் சிதம்பர திருச்செந்திநாதனும், ராதேயனுமே இதன் ஆசிரியர்கள். தரமான ஆக்கங்களைக் கொண்டு பிரபல ஓவியர்களின் ஓவியங்கள் அட்டைகளை அலங்கரிக்க இலங்கையின் பிரபல தமிழ், முஸ்லீம் எழுத்தாளர்களின் படைப்புகளை தாங்கி தரமானதொரு சஞ்சிகையாக வெளிவந்தது. ஒவ்வொரு மாதமும் பிரபல விமர்சகர் கே.எஸ்சிவகுமாரன் "உள்ளம்" இதழ் வெளிவந்தவுடன் ரூபவாகினி தொலைக்காட்சியில் அதனை அறிமுகப்படுத்தி வைத்தார். கிட்டத்தட்ட நாலாயிரம் பிரதிகள் வரை அந்தநேரம் அச்சிட்டோம்.

சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் சிறந்த எழுத்தாளர் மட்டுமல்லர். தீவிர வாசகரும் கூட, இலக்கியம் மீது ஆர்வம் ஏற்படவும், வாசிப்பதற்கும் எனக்கு மிகவும் தூண்டுகோலாக இருந்தவர். ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போகும் வழியிலும், திரும்பிவரும் வழியிலும் என்னை சந்தித்து உள்ளம் தொடர்பான வேலைகள் எப்படிப் போகிறது என்பதை அறிந்து செல்வார். இவருடன் கூடவே இவரது துணைவியாரும் இவருக்குப் பக்கபலமாக இவரது இலக்கிய வாழ்வில் பயணிப்பது என்பது எல்லோருக்கும் வாய்க்கப்பெறாது. மிகவும் பொறுமையோடு இவருடன் கூடவே பயணிக்கும் இவரது துணைவியாரான ராஜநாயகி அக்காவையும் வியந்து பார்க்கிறேன்.

அண்மையில் பல ஆண்டுகளின் பின்னர் இவரைச் சந்தித்தபோது வாசிப்பதில் இன்னமும் தீவிரமாக இருக்கும் தேடல் என்னை ஆச்சரியப்படவைத்தது. வடுக்களும் துயரங்களும் நிறைந்த ஒரு இனத்தின் வாழ்வியலை பதிவு செய்ய இந்த எழுத்தாளர் இன்னும் பல்லாண்டு வாழவேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிலட்சுமி சிவகுமார்
சுவிற்சர்லாந்து



எங்கள் வீடு காங்கேசன்துறை வீதியின் அருகில் அமைந் திருந்தது... அதனால் அவ்வீதியில் தொடர்ச்சியாக செல்பவர்களை ஓர ளவு தெரியக்கூடியதாக இருந்தது... அப்படித்தான் ஒரு கணவனும் மனைவியும் மோட்டார் சயிக்கிளில் காலையில் அந்தவீதியூடாக யாழ்ப் பாணம் நோக்கி செல்வார்கள். மாலையில் அப்படியே இரு வரும் எதிர்த்திசையில் போவார் கள்... தொடர்ச்சியாக இருவரும் போய்வருவதாலும் அந்த மனைவி மிக அழகாகவும் எங்கள் ஊர்ப் பண்பாட்டுக்கு அமைவான தோற்றத்தில் இருந்ததாலும் அவர் களை நான் பார்ப்பேன்... பார்த்துப் பார்த்து அந்தப்பெண்போலநானும் இருக்கவேண்டும் என நினைப் பேன்... ஒருநாள் அவர்கள் போவதை பார்த்த என் நண்பி ஒருத்தி, "அவ ரைத் தெரியுமா?... அவர் கதை எல் லாம் எழுதிறவர்..." என்று சொல்ல... அப்போதுதான் எழுத ஆரம்பித்திருந்த நான் ஆச்சரியப் பட்டுப்போனேன்... அதன்பிறகு... என்னோடு படித்த பிறேமா என்கிற இன்னொரு நண்பியிடம் இதைச்சொல்ல... அதிகம் கதை களை படிக்கின்ற அவள் அவரின் முழுப்பெயரைக்கூறி அவர் எழுதிய "முடிவல்ல ஆரம்பம்" நாவலை யும் எனக்கு படிக்கத் தந்தாள்... அவர் எங்கள் ஊர் என்பதில் எனக்கு இரட்டிப்பு சந்தோசம்... அன்று எனக்கு அறிமுகப் படுத்தப் பட்டவர் தான் எங்கள் மரியாதைக்குரிய சிதம்பர திருச்செந்திநாதன் அண்ணை... அவர் சிறுகதை கள் மட்டுமன்றி நாவல்கள், மேடை நாடகங்கள், வானொலி நாடகங் கள் என்பனவும் எழுதியுள் ளார். அவருடைய கதைகள் அடிக் கடி பத்திரிகைகளில் வரும்... அவற்றையும் படிப்பேன்... 1980 களின் முற்பகுதியில் எனது சிறு கதைகளும் வெளியாகத் தொடங் கின... 1990இல் எனது முதல் சிறுகதைகளின் தொகுப்பு வெளி வந்தபோது, அதற்கான மதிப் புரையை ஆற்றுமாறுகேட்டு அவரது வீட்டுக்கு சென்றிருந்தேன். மிகவும் உள்ளன்போடு வரவேற்று உபசரித்ததுடன் விழாவிற்கு வந்து கனதியான விமர்சனத் தையும் வழங்கியிருந்தார். பின்னர் சில இலக்கிய கூட்டங்களிலும் அவருடன் பங்கேற்றேன்...

பல பத்திரிகைகளில் வரும் விமர்சனங்களை படித்துவிட்டு பிரமித்த நாட்கள் உண்டு. பின்னாளில் அது எங்களுடைய திருச்செந்தி அண்ணை எழுதி யது என அறிந்து பரவசப் பட்டிருக்கிறேன். உதாரணமாக "ஈழமுரசு வாரமலர்" ஒன்றில் வெளியான எனது "ஒரு கடமை கைலஞ்சம் கேட்கிறது" என்ற சிறுகதைக்கு அவர் விமர் சனம் எழுதியிருந்தமை மறக்கமுடி யாதது. நடராஜன் மைந்தன், இணுவிலான், சிதம்பரன், அழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாடிக்குட்டன் உள்ளிட்ட பல்வேறு புனைபெயர்கள் அவருக்கு சொந்தமானவை. அதேபோல் இலங்கையில் வெளிவந்த எல்லா பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் சிற்றிதழ்களிலும் தன் எழுத்துக்களால் தனிமுத்திரை பதித்தவர் திருச்செந்தி அண்ணை. வீரகேசரி தொட்டு மல்லிகை ஈறாக எந்தப் பழைய பத்திரிகையை விரித்தாலும், எந்தப் பழைய சஞ்சிகையை விரித்தாலும் அவரது கதைகள் இருக்கும். அவருடைய எழுத்துக்களில் இருக்கும் மண்வாசனை அழகானது. பாத்திரங்களின் படைப்புகளை அவர் தான் வாழும் சமூகத்தில் இருந்து தேர்வு செய்து உயிரோட்டமாக படைப்பவர்.

பிற்பாடு கை. சரவணன், பு.சத்திய மூர்த்தி, வேலணை சுரேஷ், முல்லைக்கமல், தயாளன், ரமணன், மயூரரூபன் உள்ளிட்ட எங்களுக்கும் அவருக்கும் இடையே நெருக்கமான உறவும் தொடர்புகளும் ஏற்பட்டன. 1998காலப்பகுதி வேகமும் விவேகமும் கொண்ட இளம் படைப்பாளிகளின் கூட்டுறவாக "எழு" கலை இலக்கிய அமைப்பு ஒன்று உருவாக்கம் பெற்றது. இந்த அமைப்பு படைப்புத்திறன் கொண்டிருந்த பல போராளிகளை வியக்க வைக்கும் ஆளுமைகளாக ஆக்கியது. அதனை உருவாக்கி வழிநடாத்தியதில் திருச்செந்தி நாதன் அண்ணனின் பங்கு அளப்பரியது.

"எழு" இன் வெளியீடாக பல இளம் படைப்பாளிகளின் சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுதி ஒன்றும் வெளியிடப் பட்டது. அதிலும் திருச்செந்தி அண்ணையின் பங்களிப்பும் வழிகாட்டலும் இருந்தன. தமிழ் மக்களுடைய பயணத்தில் அவருக்கும் கணிசமான பங்களிப்பு இருந்தது. அந்தப் பங்களிப்பை அவர் விளம்பரப்படுத்திய தில்லை. அரச உத்தியோகத்தில் இருந்த போதும் பங்களிப்பை இலக்கியவாதிக்கே உரிய இறுமாப்போடு செய்த துணிச்சல் மிகுந்தவர்.

இலக்கியத் துறையின் நுணுக்கங்கள் பலவற்றை பட்டறிந்திருந்த அவர் எல்லோருக்கும் ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டினார்... எல்லோருடனும் அன்பாக எளிமையாக பழகுபவர். அவருடைய எழுத்துக்கள் சமூகம் சார்ந்து பலகோணங்களை வெளிப்படுத்தின... முற்போக்கான தன் எண்ணங்களை தன் எழுத்துக்களில் பதித்தவர்.

பெண் மன உணர்வுகள் தொடர்பாக அவர் சஞ்சிகைகளில் எழுதிய கதைகள் சிலவற்றை நான் வியந்து அவரிடம் மகிழ்ச்சி தெரிவித்த சந்தர்ப்பங்களும் உண்டு. வெளிச்சம் இதழ் ஒன்றில், வறுமை காரணமாக சீதனமின்றி தவித்த குடும்பத்தின் மகள் ஒருவர், தன் குடும்பத்தின் நிலை காரணமாக வயதில் அதிகமான குடிகார மாப்பிள்ளையை திருமணம் செய்து கணவனுடன் செல்வது பற்றி அவர் எழுதிய கதை. அதன் படைப்புத்திறனை நான் இப்போதும் நினைத்து வியப்படைகிறேன். அது போல் இன்னும் பல கதைகளை பல்வேறு தடைவைகள் நான் படித்துப்படித்து வியந்திருக்கிறேன். தூக்கமற்று அவர் படைத்த பெண்களுக்காக துயர் சுமந்திருக்கிறேன்.

"எப்படி இப்படி எழுதுகிறீர்கள்:" என அதுபற்றி அவரிடம் கேட்டும் இருக்கின்றேன். எல்லாவற்றுக்கும் அவர் சிரிப்புத்தான் பதிலாக அமையும்... அவர் எப்போதுமே தன் எழுத்தைப்போல எளிமையானவர். விளம்பரங்களை விரும்பியவரல்ல. எழுத்தால்வருமானம் தேடியவருமல்லர். எழுத்தாளராகவும் சிறந்த விமர்சகராகவும் இருப்பவர். அவரின் விமர்சனங்கள் மிகமிக காத்திரமானவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. கதிர்காமநாதன்
உளவளத்துணையாளர்



லருக்கு ஒரு ஆக்கம் தேவை யென்று சொன்னபோது, அட! அதற்குள் இவ்வளவு ஆண்டு கள் ஓடிவிட்டனவா? காலம் வேக மானது. விரைவில் எம்மை மூப்பு நிலைக்கு தள்ளிவிடுகின்றது. தடுக்க முடியாது. அவருக்கு எப்படியான ஆக்கத்தை எழுதிக்கொடுப்பது? அது எவ்வாறு அமைந்தால் படிப் பதற்கு நன்றாக இருக்கும்? வழமை யாக எனக்குத் தெரிந்த துறை யில் சிறுகதை, நகைச்சுவை போன்ற கருப்பொருளில் எழுதுவது சுலப மானதாக இருக்கும். பிரச் சனையில்லை.

சரி! பெரிதாகக் குழப்ப மடையத் தேவையில்லை. சரி அவருக்கும், எனக்குமான உறவு எப்படியானது? சகோதர உறவா? அல்லது அதைவிட எழுத்தாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் என விரிந்து செல்கின்றதா? எனக்கும் அவருக்கும் வயது வித்தியாசம் ஐந்து வருடங்களே. இளம்பராயத்தில் ஏற்படும் அனைத்து செயற்பாடுகளிலும் இருவரும் இணைந்தே செயற்பட்டோம். இப்போதைய அரசியலில் வரும் சந்தர்ப்பவாதக் கூட்டணிபோல் அல்லாமல், இடையில் முறித்துக்கொள்ளும் தன்மை இல்லாமல் வாழ்க்கையில் பல பிரச்சனைகளில் முகம்கொடுத்து வெற்றிகரமான கூட்டணியாக இருந்துள்ளோம்.

அப்பாவின் வேலை காரணமாக, எமது இளம்பராயம் வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் ஆரம்ப காலங்கள் கழிந்தன. எமக்கு சொந்தங்கள்... உறவுகள் இருப்பதை வேறு விஷயமாக எமது ஊருக்கு வரும்போது தான்நாம்அறிந்தோம். இளமைக்காலம்அப்பா தனது அரசபணியில் இருக்கும் நண்பர்களோடு சேர்ந்து நடிக்கும் நாடகங்களைப் பார்த்து அதுவும் மேடையில் திரைச்சீலைக்குப் பின்னால், நின்று பார்த்து ரசித்துள்ளோம்.

அப்பா இடமாற்றலாகி சொந்த ஊருக்கு (இணுவில்) வந்த பின்னர்தான் மேலும் எமக்கு நெருங்கிய உறவுகளை அறியக்கூடியதாக இருந்தது.

மெல்ல மெல்ல நாங்கள் வளர்ந்து கொண்டிருந்தோம். அப்பாவுக்கு எல்லாத் துறைகளிலும் ஈடுபாடு இருந்தது. எழுத்தில் இருந்து பாட்டு, நடிப்பு என அவர் கால் பதித்திருந்தார். எனவே சகோதரரும் அவற்றை இலகுவாகப் பற்றிக்கொண்டார். படிக்கும் காலத்திலேயே கதை, நாடகம் போடுவது என இலக்கியப் பாதையைத் தொடங்கிவிட்டார்.

எழுத்துத் துறையில் முக்கியமாக சிறுகதை, கட்டுரை பக்கம் அவர் கவனம் அதிகம் செலுத்தும்போது அவர் எழுதிய சிறுகதை, கட்டுரையை முதலில் படிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர் வீட்டில் நடைபயின்று, பின் வெளியே வந்து யோசித்துக்கொண்டிருக்கும்போதே எனக்குத் தெரியும் "அண்ணை கதை எழுதப்போறார்".

எனவே நான் ஆவலாய் இருப்பேன். எப்போது அவர் கதை எழுதி முடித்து என்னிடம் தருவார். ஏனென்றால் அவரின் படைப்பின் முதல் வாசகர் நானே. அவர் எழுதும் சிறுகதையானது குறைந்தளவு 16 பக்கங்களுக்குக் குறைவாக இருக்காது. அவர் கதை சொல்லும் பாணி வித்தியாசமானது. "சமூகக் கதை" தளமாக இருந்தாலும், கதை சொல்லும் முறையில் "சஸ்பென்ஸ்" இருக்கும்.

சிறுகதையின் முதல் பிரதியைப் படித்து முடித்திருப்பேன். ஆனால் கதையின் தலைப்பு போட்டிருக்கமாட்டார். கதையின் தலைப்பானது உடனே வராது. நானும் யோசிப்பேன். அவரும் யோசிப்பார். பின்னர் இருவரும் இணைந்து ஒரு தலைப்பு உருவாகும். இப்படியாகக் கதை படிக்கும் பழக்கம், பின்னர் எனக்கும் கதை எழுதலாம், கதை எழுதவேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. நானும் எழுத்துத் துறையில் கால்பதிக்கத் தொடங்கினேன்.

நானும் கற்பனையில் தோன்றும் கருவை வைத்துக் கதை எழுதத் தொடங்கினேன். கதையினை எழுதி, அவரிடம் வாசிக்கக் கொடுப்பேன். அவர் வாசித்துத் திருத்தங்கள் சொல்வார். பெரிய பெரிய பந்திகளாக எழுதியவற்றைக் குறைத்து சிறு பந்திகளாக மாற்றம் செய்வார். தேவையற்ற வசனங்களை நீக்கிக் கதையின் முடிவை நீட்டி முடிக்காமல், பட்டென முடிக்கச் சொல்வார். கதையினை இறுதியில் நன்கு செழுமைப்படுத்திவிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் எழுத்துத் துறை சிறுகதை, கட்டுரையோடு அடங்காமல் நாவல், மேடை நாடகம், வானொலிநாடகம் எனக் கிளை பரப்பி இருந்தது. தீபாவளி, பொங்கல் நாட்களில் வெளியாகும் கொழும்பு, யாழ் பத்திரிகைகளில் அந்தந்தப் பண்டிகை பற்றி தவறாது கட்டுரைகள் பிரசுரமாகி இருக்கும். நாடகம்என்றால்அவரால்உருவான "சுக்கிராச் சாரியார் (புராண நாடகம்), மேடை இசை நாடகமும் வீரகேசரியில் வெளியாகி பலரது பாராட்டைப் பெற்றது. "அரங் கேற்றம்" சிறுகதையானது பின்னர் நாடக கமாக எழுத்துருவாக்கம் பெற்று, வானொலி நாடகமாக ஒலிபரப்பாகிப் பல ரசிகர்களை மகிழ்வுறச் செய்தது.

அந்தக் காலங்கள் மிகவும் ரசனை மிகுந்த சந்தோஷ காலகட்டமாகும். "சுக்கிராச் சாரியார்" இசை நாடகப் பாடல்கள் மறைந்த இணுவில் மைந்தன் "இயலிசை வாரிதி வீரமணி ஐயர்" அவர்களால் எழுதப்பட்டது. நாடகமும் பாடல்களும் இப்போது நினைத்தாலும் சுக அனுபவத்தை உண்டாக் கும். காலமானது எமது தமிழர் வாழ்க்கை யில் பல இடர்களைத் தந்துள்ளது. இனப் பிரச்சனை பல்வேறு வடிவங்களாலான போராட்டங்களைச் சந்தித்து இப்போது பிரச்சனை முடிவு பெறாமல் எட்டிப் பார்த் துக்கொண்டு நிற்கின்றது.

சகோதரரும் இடப்பெயர்வினைச் சந்தித்து ஊர் திரும்பும்போது, அவர் சேகரித்து வைத்திருந்த உடைமைகள், புத்த கங்கள் எல்லாவற்றையும் இழந்து வெற்று மனிதராகத் தான், தனது குடும்பத்தோடு திரும்பியிருந்தார். அவர் சேகரித்து வைத் திருந்தபலதொகையானபுத்தகங்களைஇழந்து விட்டார்.

இப்போதும் அவர் இல்லம் போனால், அவர் இருக்கும் மேசையைச் சுற்றிப் புத்தகங் கள் நிரம்பி வழியும். தொடர்ந்தும் அவர், புத் தகங்கள், சஞ்சிகைகள் வாங்கிப் படிப்பதி லும் நிற்காமல், சளைக்காமல் எழுதிக் கொண்டே இருக்கிறார். படிப்பது, எழுது வது, எழுதுவது படிப்பது... அவரால் கைவிட முடியாத விடயமாக உள்ளது. எப்போதும் எங்கள் வீடு, இலக்கிய நண்பர்களது "வாசி-கசாலையாக" இருந்து வந்துள்ளது.

அவரிடம் இலக்கிய நண்பர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். இளைய தலை முறைப் படைப்பாளிகள், அவரோடு நெருக் கமாக இருந்தார்கள். ஆலோசனைகள், விவா தங்கள், சிரிப்புகள் இவற்றுக்குப் பஞ்சமேது. அவர் தனக்குத் தெரிந்த கருத்தைத் தெளிவாக எழுதினார், பேசினார். எழுதத் துடிக்கும் அனைவருக்கும் ஆக்கத்தை, ஆதரவை, அன்பை வெளிப்படுத்தினார். அவரால் வளர்க்கப்பட்ட பலர் இப்போது எழுத்துத் துறையில் பிரகாசித்துக்கொண்டிருப்பதைக் காணலாம். நான்தான்எழுத்துலகின்கொம்பன் என மார்பு தட்டியதில்லை. யாரையும் வீணா கப் பகைத்துக்கொண்டதுமில்லை.

"செந்தி அண்ணா... நிக்கிறாரா"? என்று வாசலில் இப்போதும் அவர் நண் பர்கள் பேர் சொல்லி அழைப்பது கேட் கும். அட அவர் தான் "இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்". எனது சகோதரர். இந்த ஆக்கம் அவருக்காகத்தான். நீங்கள் மேலும் நலமாய் வாழ இறைவனை வேண்டுகின்றேன். மேலும் எனக்கு ஆதரவு அளிப்பீர்கள் என நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிதம்பரபாரதி
மாணவி



பொதுவாக எங்கள் பெயரைப்போல் யாருக்கும் இல்லை எனலாம். நாங்கள் ஆரம்பத்தில் அப்பாவிடம் நச்சரித்தபடி இருப்போம் "அவ்வளவு நீளமான பெயர், ஏன் இப்படி வைத்தனீங்கள்? என்போம். எல்லாவற்றிற்கும் ஒரு சிரிப்பு சிரிப்பார். அவ்வளவுதான். கொஞ்சம் வளர்ந்த பிறகு தான் அந்தப் பெயரின் அருமை புரிந்தது. அவ்வளவு தனித்துவமான பெயர் எங்களை மறந்தவர்கள் கூட எங்கள் பெயரினை மறப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயது முதலே எங்கள் வீட்டில் புத்தகங்கள்தான் அதிகம். அப்பா என்ன வாங்குகின்றாரோ இல்லையோ தவறாமல் இலக்கியச் சஞ்சிகைகள் புத்தகங்கள் என வாங்கி விடுவார். ஏன் வெளியாகும் அத்தனை பத்திரிகைகளுமே வீட்டில் இருக்கும். யாவும் ஓர் ஒழுங்கில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். யாராயினும் எடுத்துப் பார்த்தால் கண்டு பிடித்துவிடுவார். அவரைப் பொறுத்த வரை புத்தகத்தை எடுத்துப் பார்க்கலாம். ஆனால் இருந்த இடத்தில் வைக்கவேண்டும் கசக்கக்கூடாது எந்தப் பழுதுமே ஏற்பட்டு விடக்கூடாது. அவ்வளவு கவனம் எடுப்பார்.

அவர் புத்தகம் அல்லது ஏதாவது பத்திரிகை எதுவாயினும் வாசிக்கத் தொடங்கி விட்டால் யாரும் குழப்பக்கூடாது. தனக்கென ஓர் அமைதியான இடத்தை தேர்ந்தெடுத்து வாசிக்கத் தொடங்கிவிடுவார்.

கால காலத்திற்கும் பெறுமதியான பல புத்தகங்கள் வீட்டில் இருக்கும். அவற்றையெல்லாம் எவ்வளவோ கவனமாக வைத்திருப்பார். அதேபோல் வந்து 2,3 மாதங்கள் சென்ற பத்திரிகைகளைக் கூட எங்கள் வீட்டில் இலகுவாக எடுத்துவிடலாம்.

காலச்சூழ்நிலை காரணமாக நாங்கள் உடைமைகளை இழந்து யாழ்ப்பாணம் வரும்போது அப்பா அதிகமாக கவலைப்பட்டது புத்தகங்களை நினைத்துத்தான். அவரது முழுப்புத்தகங்களையும் அவர் இழந்துவிட்டார். அதில் அப்பா எழுதிய புத்தகங்களும் இல்லாமல்போனதுதான் அதிக கவலை.

எழுதவென உட்கார்ந்தால் எழுதி விடுவார். ஆனால் எழுத உட்காரமுதல் யோசித்துக்கொண்டிருப்பார். என்ன எழுத வேண்டும்? எப்படி எழுதவேண்டும்? என்று யோசிப்பார் என நினைக்கின்றேன். ஆனால் எழுதவென உட்கார்ந்தாரென்றால் வேகமாக எழுதி முடித்துவிடுவார். அப்பாவினது எழுத்து எல்லோருக்கும் விளங்காது. பின்னர் அம்மாதான் அதனை வாசித்து மொழி பெயர்ப்பார். பின்னர் எங்களிடமும் அதனை வாசிக்கத் தருவார்.

அப்பாவினது கதைகள் பத்திரிகைகளில் வரும்போது சந்தோசமாக இருக்கும். அவரது கதைகள், நாவல், கட்டுரை எல்லாவற்றையும் வாசித்தால் எங்களிற்கும் எழுத வேண்டும்போல் இருக்கும். பொதுவாக அப்பா எழுதுகின்ற கதைகளுக்குப் பின்னால் நிறைய விடயம் இருக்கும். அதனோடு ஒரு தகவலும் இருக்கும்.

அதிகமாகக் கோபப்படுவார். ஆனால் அதற்குப் பின்னால் ஒரு வலுவான காரணம் இருக்கும். ஒன்றையுமே இலகுவில் முடிவெடுக்கமாட்டார். கொஞ்சம் கண்டிப்பானவர், தேவையில்லாமல் கதைக்கவும் மாட்டார். அப்பாவினை பொறுத்தவரை பிள்ளைகளிடம் எதையுமே மறைக்கக் கூடாது. எல்லா விடயமும் தெரிந்திருக்கவேண்டும் என்று நினைப்பார். அதனால் எதையுமே எங்களோடு வெளிப்படையாகக் கதைப்பார். அதேபோல் அதிக கட்டுப்பாடுகள் போடுவார். சிலவேளை எங்களிற்கு கோபம்கூட வரும். ஆனால் அது எங்களது நன்மைக்காகத்தான் இருக்கும்.

அப்பாவிடம் எங்கேயாவது கூட்டிக் கொண்டு போவதற்கு கேட்டோமென்றால் தயாராகி நிற்க ஓர் நேரம் சொல்வார். அந்த நேரம் தயாராக நிற்காவிட்டால் பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். நேரத்திற்கு அவர் அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பார்.

ஒருவருக்கு எழுதுகின்ற ஆர்வம் இருந்தால் அதனை நன்றாக ஊக்கப்படுத்துவார். எங்களையும் ஊக்குவிப்பார். "வாசிப்பு என்பது பொழுதுபோக்கு என்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அதனால் பலதரப்பட்ட விடயங்களைக் கற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். அத்தோடு நல்ல இலக்கிய நூல்களையும் வாசிக்கவேண்டும். அப்போதுதான் இலக்கிய அறிவும் வளரும் என்று அடிக்கடி கூறுவார். அதோடு இன்னும் இரண்டு விடயமும் அடிக்கடி கூறுவார். "சொத்துச் சுகம் சேர்ப்பதல்ல முக்கியம் முதலில் சமூகத்தில் மரியாதையாக வாழவேண்டும். நாலுபேர் எங்களை மதிக்கவேண்டும். படிப்புத்தான் எங்களிற்கு கடைசிவரையும் கைகொடுக்கும். படிப்பினை ஒருபோதும் கைவிடக்கூடாது. அதுவும் முக்கியமாக பெண் பிள்ளைகள் கட்டாயம் படிக்கவேண்டும் எதிர்காலத்தில் ஏதாவது பிரச்சினை வந்தாலும் சொந்தக்காலில் நிற்கலாம்" இதனை எங்களிற்கு மட்டுமென்றில்லை பொதுவாக எல்லோரிற்கும் சொல்வார். அதுவும் யாரைக் கண்டாலும் "பிள்ளைகள் என்னசெய்கினம்என்படியாவதுபடிப்பித்துப் போடுங்கோ" என்பார்.

அப்பா பலதரப்பட்ட விடயங்களையும் அறிந்து வைத்திருப்பார். அதற்கு அவரின் வாசிப்பு அனுபவம் தான் முக்கிய காரணம் என்பார். அப்போதுதான் எங்களிற்கும் வாசிப்பின் முக்கியத்துவம் விளங்கும்.

அப்பா எழுத்தாளராக உருவாக அப்பப்பா பெரிய காரணமாக இருந்தார் என்றுஅப்பா சொன்னதுண்டு. முதல் முதலில் அப்பா கதையை எழுதி அப்பப்பாவிடம் தான் கொடுத்தாராம்.பின்னர் அப்பாவும் அப்பப்பாவுமாக ஓர் பத்திரிகையாசிரியரிடம் கொடுக்க அவர் திருத்தி வருமாறு கூறினாராம். அவ்வாறு பலதடவை திருப்பி திருப்பி அனுப்பினாராம். அவ்வாறுதான் அப்பாவினது முதல் கதை பத்திரிகையில் வந்ததாம். இதை எங்களிடம் அப்பா சொல்லித்தான் தெரியும். "அன்று திருப்பி திருப்பி முயற்சி செய்திருக்காவிட்டால் நான் இவ்வளவு தூரம் வந்திருக்கமுடியாது. முயற்சி தான் வாழ்க்கையை முன்னேற்றும் அதை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும்" என்பார்.

அதேபோல எங்களின் அம்மாவும் அப்பாவிற்கு நல்ல பக்கபலம். எங்கே சென்றாலும் அப்பாவும் அம்மாவும் சேர்ந்துதான் போவார்கள். எங்களது கல்லூரி பெற்றோர் சந்திப்பிற்கு வருவதுகூட இரண்டுபேரும் தான் வருவார்கள். சிலபேரிற்கு அது வித்தியாசமாக இருக்கும். ஆனால் மற்றவர்களுக்காக அப்பா தன் நடைமுறையை மாற்ற மாட்டார்.

நாங்கள் யாழ்ப்பாணம் வந்து 5 வருடம் ஆகிவிட்டது. இங்கு வந்து அப்பா தனது அரசசேவையிலேயே முழுக்கவனமும் செலுத்தியமையால் பெரிதாக எதுவும் எழுதவில்லை. தற்போது ஓய்வு பெற்றுவிட்டார் என்பதால் அப்பாவிடம் இருந்துவரும் காலங்களில் கதைகளினை எதிர்பார்க்கலாம் என்று நம்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. மயூரரூபன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரத்தியேக செயலகம்
கரவெட்டி.



ஒரு மனிதன் உலகம், பாரபட்ச கருத்து தத்துவசார்பு என்ப வற்றினைத் தவிர்த்து அவ னது உணர்வுபூர்வமான அனுபவங் களால் நிறைந்ததுதான் அந்தத் தனி மனிதன் தான் சார்ந்த உலகைப் புரிந்துகொள்ளும் இயல்பு. இது ஒவ்வொருவரினதும் ஒவ்வொன்றி னதும் உறவு நிலைசார்ந்தது. அனு பவங்களும் உறவுகளும் ஒவ் வொரு தனியனுக்கும் தனித்துவ மானது. ஒத்தவார்ப்புடையன அல்ல. எனினும் பொதுவெளியில் ஒரு தனியன் தொடர்பான பொதுக் கருத்துருவங்கள் கட்டமைக்கப் படுகின்றன. பொதுவெளியும் சுய வெளியும் எப்போதும் முரண் கோலிலேயே கொழுவப்பட்டிருக் கும். எப்போதும் ஒரு தனியன் தொடர்பான இன்னொருத்தனி யனின் அனுபவம் என்பது தனி வெளிக்கானதே.

எனினும் திருச்செந்திநாதன் அவர்களுடனான தொடர்பு மற் றும் உறவு அனுபவங்களின் அடுக்குகளிலிருந்து ஒரு பகுதியினை இங்கு பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு இந்தத் தொகுதி மூலம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இணுவையூர் சிதம்பரதிருச் செந்திநாதன்!

தோற்றத்திற்கும் பிம்பத்திற் கும் இடையிலான வெளியைப் பேசுவதனூடாக திருச்செந்திநாதன் அண்ணையினுடனான எனது அனுபவத்தை திரும்பிப் பார்க்க முயற்சிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி 1

திருச்செந்திநாதன் அவர்களுடனான அறிமுகம்

கை.சரவணன் என்பது எனது அறி முக உறவுப்பாதை. இங்கு சரவணன் சத்தியமூர்த்தியண்ணை திருச்செந்தி நாதண்ணை என மூன்று பேருடனான எனதுஉறவுவெவ்வேறுஅடுக்குகளால்ஆனது. வெவ்வேறு அனுபவங்கள், வெவ்வேறு உணர்வுகள், வெவ்வேறு வார்த்தைகள் கொண்ட வெளியது. இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் எனும் பெயர் அந்நேரத்தில் எனக்கு இலக்கியவாதி ஒரு-வரினது என்கிற பிரமிப்பைத் தந்திருந்தது. ஆளைக்காணாத வெறும் பெயரது. நெருங்க முடியாத அல்லது மேற்றட்டு இலக்கிய காரர் என்கிற பிரமிப்பையும் ஏற்படுத் தியிருந்தது. ஆனால் அவரை நெருங்கிய போது எனக்குள்ளிருந்த இந்த பிம்பம் உடைந்துபோனது. மிகச் சாதாரண ஒரு சராசரிக் குடும்பத் தலைவனாக, இயல்பான இலக்கியகாரனாக அவரை நான் உணர்ந்து கொள்ளமுடிந்தது. இது அவரை நெருங்கி உறவாடுவதற்கும் இலக்கிய தனிப்பட்ட விடயங்களைப் பகிர்ந்துகொள்வதற்குமான வெளியை உருவாக்கித் தந்தது.

வெளி - 2

முக்கிய மூத்த எழுத்தாளராக இருக் கின்ற திருச்செந்திநாதன் அவர்கள் எனக்கு அறிமுகமான பொழுதில் ஈழநாடு 'வாரமலர் ஈழநாடு மாதமலர் ஆசிரியராகச் செயற்பட்டு வந்தார்.

பொதுவாக எல்லாக் காலங்களிலும் எமது இலக்கியச் சூழலில் மூத்தபடைப் பாளிகள் தமது சிஷ்யர்களாக மாறிக் கொண்டவர்களை அல்லது தமது கருத்தியல் களைப் பிரசாரம் செய்பவர்களை இலக்கியச் சூழலுக்கு அறிமுகம் செய்யும் மரபு இருந்து வருகிறது. தொன்மைப் பண்புகளில் இதுவு மொன்று. புதுக்குடியிருப்பில் மையங் கொண்டிருந்த இலக்கியச் சூழலிலும் நான் இதனையேஇனங்கண்டிருந்தேன்.திருச்செந்தி நாதன் அவர்களும் இந்த வகையறா என நினைத்துமிருந்தேன். ஆனால் எனது முத லாவது எழுத்துச் சூழலுக்கான காலடியாக ஈழநாடு மாதமலரில் எனது கவிதையொன்று பிரசுரமானது. எனக்கு மட்டுமல்ல அச்சூழ லில் பல இளம் எழுத்தாளருக்கான வாய்ப் புகள் இவராலேயே உருவாக்கப்பட்டன.

சுதந்திரமான கருத்தியல் சூழலுடன் வளர்வதற்கான மனச்சூழலை திருச்செந்தி நாதண்ணை கொண்டிருக்கிறார். அதனையே மற்றவர்களிடமிருந்து எதிர்பார்த்தார். அவ் வாறானவர்களே அவருடன் தொடர்ந்தும் இணைந்துமிருந்தனர்.

வெளி - 3

குடும்பப் பிணைப்பில் அதிக ஈடுபாடு கொண்டுள்ள ஒருவர் எந்தவொரு கொள் கைப் பிடிப்புடனும் செயற்படுவது சாத்திய மில்லையென்பது பொதுவான அபிப் பிராயமாக இருந்து வருகிறது. நானும் அத னையே எமது சூழலில் கண்டிருக்கிறேன்.

எனினும் திருச்செந்திநாதன் அவர்கள் தனது வாழ்க்கையின் பலமுனைகளில் வேத னைகளைச் சந்தித்திருந்தபோதும் தனது தேசியம் தொடர்பான கருத்தியலில் தளர் வற்று பற்றுறுதிகொண்டவர்.

அவரது மனைவி பிள்ளைகளுடனான அவரது உறவும் இலக்கியத்துடனான உறவும் கொள்கையுடனான உறவும் எவ்வாறு ஒத்த சமாந்தரக் கோடுகளில் பயணிக்கின்றன என் பது புதிர்தான்.

குடும்பத்தின் ஒவ்வொரு அசைவுகளி லும் இதனைக் கண்டுகொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்புவட்டத்திலும் அதுவே மிளிர்கிறது. எல்லாவற்றிலும் பாசம் என்பது சற்றுத் தூக்கலாகவே துருத்தித் தெரிகிறது.

வெளி -4

ஒரு இலக்கியகாரனின் உறவு என்பது தனியே இலக்கியத்துடன் மட்டுமே மடிந்து போய்விடுகிறதா? ஆம் என்பதற்குப் பல உதாரணங்கள் எம்மத்தியில் இருந்தாலும் இல்லை என்பதற்கு திருச்செந்திநாதன் அண்ணையே சான்று. தன்னுடன் பிணைப்பிலுள்ள ஒவ்வொருவரின் தனிப்பட்ட வளர்ச்சியிலும் எதிர்காலத்திலும் அக்கறைகொண்டவர் இலக்கியம், கொள்கை என்பவற்றுக்கப்பால் வாழ்க்கையின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் யதார்த்தமாக உணர்ந்தவர். அதற்கான ஆலோசனைகளையும் உந்துதல்களையும் தந்துகொண்டிருப்பவர்.

தனது குடும்பத்தைப் போலவே தன்னோடு நெருங்கி நிற்கின்ற உறவுகளின் எதிர்கால நலனில் அதீத அக்கறை கொண்டமனிதர்.

வெளி - 5

சமூக அக்கறை என்பது பலருக்கு எழுத்துருக்களில் மட்டுமே சொட்டுவதுண்டு. திருச்செந்திநாதன் அவர்களின் எழுத்துகளிலும் சமூக அக்கறை இன - மொழிப்பற்றுஎன்பனவெளிப்பட்டாலும்ஒரு செயற்பாட்டாளராக அறியப்பட்டவர் 'எழு" கலை இலக்கியப் பேரவையின் சமூக, இன, மொழி சூழல் மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகளில் முதுகெலும்பாய் நிமிர்த்தியவர் இவர்.

சமூக முன்னேற்றத்தையும் சமூக மாற்றத்தையும் அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை அதிகம் கொண்டு அதனை மற்றவர்களிடமும் எதிர்பார்ப்பவர் அதற்கான செயற்பாடுகளில் முனைப்புக்கொண்டவர்.

வெளி - 6

தோற்றத்தில் சிறிய ஒரு மனிதனிடம் ஒரு சாதாரண குடும்பகாரனிடம் எந்த அளவுக்கு அறச் சீற்றத்தினை எதிர்பார்க்க முடியும். எல்லோரிடமும் இருக்கக்கூடிய அறச் சீற்றவிகிதம் சில பற்றுகளினால் சமரசம் செய்யும் இயல்புகளையே கொண்டன.

ஆனால் திருச்செந்திநாதன் அவர்கள் தமது குடும்பம், தொழில், எதிர்காலம் என பற்றுகளைத் தக்கவைத்திருந்தாலும் எவ்வித சமரசத்திற்கும் உட்படாதவர். சமரசத்திற்குட்பட முடிந்தால் அவர் திருச்செந்திநாதன் அல்ல.

இந்த ஆறு வெளிகளும் அவரது தோற்றத்தை அது தரும் பிம்பத்தை அனுபவ மறுவாசிப்பினூடாக எனக்குள்ளான மன வெளியை உருவாக்கியிருந்தது. சமூகபிம்பம் தருகின்ற பொதுவெளி தகர்ந்திருந்தது.

தோற்றம் அது தரும் மென்னுணர்வு இயல்பு, வழமையான குடும்ப சம்பிரதாய எல்லைகள் என்பன வரையும் வரைபடத்திலிருந்து திருச்செந்திநாதன் எனும் எனது வரைபடம் வேறானது.

ஒரு தனிமனிதன் தனது சுயம் கட்டமைத்த இயல்புகளிலிருந்து தனது ஆளுமையை வெளிப்படுத்துகின்ற போது அவனது உருவம் இயல்பான தன்னிச்சையான கோடுகளால் வரையப்படுகிறது.

பொதுவான நியதிகள் பொருந்திப் போகாதவர்களில் இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதனும் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்
முல்லைக்கமல்
பிரான்ஸ்



எங்கிருந்து தொடங்குவது எமது காலத்தை என்ற சந்திரபோஸ் சுதாகரின் கவிதைவரிகள் காலத்தை தாண்டியும் மனதுக்குள் நிற்கிறது. எமது கடந்தகாலம் ஒவ்வொரு நொடிப்பொழுதும் ஏராளமான நினைவுகளையும் மனிதர்களையும் எண்ணவோ நினைவசை போடவோ வைக்கிறது. எமது பாடசாலைக்காலம் தாண்டிய பொழுதுகள் பொதுவாக நான் படிப்பகங்களில் தான் இருந்தேன். யுத்தம் எங்களைப் பீடித்திருந்தது. ஆனாலும் வாழ்க்கை மிகவும் ரசனைமிக்கதாகவே இருந்தது எமக்குத் தெரிந்த காலத்திலிருந்து யுத்தச் செய்திகளையே எமது செவிகளில் கேட்டுக்கொண்டிருந்தோம். 1995 யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் புத்திஜீவிகளுமாகப் பலர் வன்னிக்கு வந்தனர். நான் அப்போது முத்தையன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிளைமுகாமையாளராக இருந்தேன்.

வாசிப்பு மீதான ஈடுபாடு காரணமாக நான் கவிதைகளையும், சிறுகதைகளையும் அனுப்பிக்கொண்டிருந்தேன். எந்தவிதமான சலனமும் தென்படவில்லை. பத்திரிகைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது படைப்பைத் தவிர எல்லாமே வந்துகொண்டிருந்தன. திடீரென்று ஒருநாள் ஈழநாடு மாதமலரில் நான் எழுதி நீண்ட கால மாகிப்போய்விட்ட ஒரு கவிதை பிரசுரிக்கப் பட்டிருந்தது. இது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இது எனக்குள் எழுதவேண்டும் என்ற உத்வேகத்தையும் தந்தது. அக்காலப்பகுதியில் முல்லை வலயக்கல்விப் பணிமனையில் கல்விப்பணிப்பாளராக திரு.குருகுலராஜா அவர்கள் இருந்தபோது திரு.வல்வை ந.அனந்தராஜ், திரு.செல்வராசா ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் ஓர் இதழியல் வகுப்பு ஆரம்பமாகி இருந்தது. எனது வாசிப்பு அறிவை மட்டுமே மூலதனமாகக் கொண்டு அதற்கு விண்ணப்பித்திருந்தேன். ஐம்பதுக்கு மேற்பட்ட பயிலுநரைக் கொண்ட கற்கை நெறி அது. தகுதிவாய்ந்த விரிவுரையாளர்கள் பலர் அதற்கு வந்தனர். அதன் மாணவர்களாக பு.சத்தியமூர்த்தி, செவ்வேள், செல்வராசா போன்ற பலர் ஊடகங்களிலிருந்து வந்திருந் தனர்.

கற்கைநெறி முடிவதற்கு முன்பே நண்பர் சத்தியமூர்த்தி என்னிடம் ஈழநாட் டுப் பத்திரிகைக்கு வேலைக்கு வரமுடியுமா எனக்கேட்டார். இவ்வாறு அழைப்பு வந்ததும் உடனடியாகவே பத்திரிகையில் சேர்ந்தேன். அப்போது அதன் ஆசிரியராக திரு.இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் இருந்தார். உதவி ஆசிரியர்களாக பு.சத்தியமூர்த்தி, சந்திரபோஸ் சுதாகர், ஆ.தி. றொபேட், போன்றோர் இருந்தனர். புதுக்குடி யிருப்பு வேணாவில் பகுதியில் அச்சகமும் ஆசிரியர் பீடமும் இயங்கியது. இரவு இரண்டு மணிவரை கடமையாற்ற வேண்டியிருந்தது. மிகவும் கடின உழைப்பாளியாக சத்திய மூர்த்தி இருந்தார். ஆசிரியர் கூறியவற்றை சரியாக உள்வாங்கி வெளிப்படுத்துபவராக இருந்தார்.

கட்டுரை பெறுதல், கட்டுரை தொடர் பான விவாதங்கள், செய்தி சேகரிப்பு, முக்கிய சந்திப்புகள் செந்தில்நாதண்ணை, சத்திய மூர்த்தி இவர்களுடன் நானும் இருந்தேன். இவைதவிர சுயமான படைப்பாக்க முயற்சி களில், உரையாடல்களில், நட்பின்ஒரு ஆரோக் கியமான சூழ்நிலை இருந்தது. அது ஒரு காற்றோட்டமான இலக்கிய நட்பு என்பேன். செந்தில்நாதண்ணை சரியாக என்னை வடி வமைத்துக் கொண்டிருந்தார். எனக்குச் சரி யான ஞாபகமிருக்கிறது முதன் முதலில் இந் திய அரசியல் தொடர்பான கட்டுரைத் தலைப்பைக் கொடுத்து எழுதச் சொன்னார். நான் திகைத்துத்துப் போய் விட்டேன். சத்தியமூர்த்தியிடம் சென்றேன் அவர் பேப்பர்க் கட்டுகளுக்கு மத்தியில் நடுவில் இருந்தார். என்னையும் தன்னு டன் வந்து தேடச் சொன்னார். இருவரு மாகச் சேர்ந்து தகவல்களை எடுத்துக் கொண்டு கட்டுரையை எழுதினேன். சத்திய மூர்த்தி சரிபார்த்தார். மறுபேச்சு இல் லாமல் அண்ணை பிரசுரித்தார். எனக்கு எண்ணிலடங்கா மகிழ்ச்சி ஏற்பட்டது. தொடர்ந்தும் பலபத்திகளை தொடராக எழுதினேன்.

நானும் தி.ஆ.றொபேட்டும் சேர்ந்து கண்காட்சிகள், பாலா அண்ணையின் கலை ஞர்கள் குடியிருப்பு தொடர்பான கட்டுரை. உள்ளூர் கலைஞர்கள் தொடர்பான நேர் காணல்கள் எனப் பலவற்றை எழுதினோம். வாரமலரில் முன்பக்க இடதுபக்க மேல் மூலையில் கட்டம் கட்டப்பட்டு அதற் குள் வெண்பா எழுதிவந்தேன். ஒவ்வொரு கிழமையும் அது வந்தது. அரசியல் நையாண் டித்தனத்தைக் கொண்டதாகவே அது இருந் தது. மிகுந்த வரவேற்பையும் அது கொண்டி ருந்தது. 'மோகவலை' என எனக்கு அண்ணை பெயர்சூட்டியிருந்தார். இதுபோன்ற பல பரீட்சார்த்த முயற்சிகளுக்கு அண்ணை ஊக் கமும் இடமும் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்திநாதண்ணையின் நடை முறை வாழ்வு எனக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது. அவரின் வீட்டுக்கு 'சிதம்பரக் குடில்' எனப் பெயர் சூட்டியிருந்தார். சிறிய ஓலைவீடு, தனியாக அமைந்த குசினி முன் னுக்கு ஒரு சிறியமால் (வன்னியில் வழங்கி வரும் தனியான சிறிய கொட்டகை) நாங் கள் அவரின் வீட்டுக்குச் சென்றால் 'கொம்மா தேத்தண்ணி போடப்பா' என்பார். உள்ளுக் குளிருந்து வெளியில் எட்டிப்பாத்து ஒரு புன் முறுவலுடன் கையில் தேநீரோடு வருவா அக்கா, எமது இலக்கியச் சம்பாசனைக்குள் அதிகம் தலை வைக்கமாட்டார். ஆனால் அது குறித்த பார்வைகளை அவர் புரிந்து வைத் திருந்தார். அதனால்தான் நானோ சத்திய மூர்த்தியோ 'என்னக்கா நீங்கள் சொல்லு றியள்" என்போம். நிச்சயம் அதற்கொரு முத்தாய்ப்பான பதிலிருக்கும். அந்த வீட்டின் தம்பிகளானதில் எமக்கோர் மகிழ்ச்சி இருந் தது. எல்லாவிதமான கலாசார நாட் களுக்கும் நாங்கள் அங்கு இருந்தோம். அவர் களின் திருமணநாள் அண்ணையின் அப்பா வின் திதி, பிள்ளைகளின் பிறந்தநாள், எல்லாம் ஒரு இலக்கிய திருவிழாபோலவே இருக்கும். அவரின் வீட்டின் அறுசுவை உணவை எங்களால் மறக்கவே முடியாது. பின்நாளில் ஈழநாடு பத்திரிகையிலிருந்து நான் விலகிய போதும் பத்திரிகைக்கு எழுதுவதையோ, பத்திரிகை அலுவலகத்துக்குச் செல்வதையோ நான் நிறுத்தவே இல்லை.

இலக்கியரீதியான சச்சரவுகள் மிகுந்த காலகட்டம் அது. இலக்கிய முன்னெடுப் புக்களுக்கு ஊக்கத்தை விடத் தடைகளே அதிகம் இருந்தது. இந்நிலையில் நாம் ஒரு இலக்கிய அமைப்பை உருவாக்குவது பற்றிச் சிந்தித்தோம். சத்தியமூர்த்தியுடன் அதுபற்றி விவாதிக்கத் தொடங்கினேன்.

அது ஓர் மாலைநேரம் ஈழநாடு பத்திரி கைக்குள் சத்தியமூர்த்தி தொடர்ந்தும் இருந் தார். என்னைக் கண்டதும் எழுந்து வந்தார். முன்னாள் உள்ள மணற்பாதையில் சைக் கிளைத் தள்ளிக்கொண்டுபோய் பிரதான வீதியில் ஏறினோம். என்னிடம் அவர் கேள்வி களைக் கேட்டுக்கொண்டே வந்தார். எம்மைப் போன்ற இலக்கிய முயற்சியாளர்களுக்கு இலக்கியப் பேரவையை உருவாக்குவது என்ற முடிவுக்கே வந்தோம். 'மதிஉணவகத்தி லிருந்து சத்தியமூர்த்தி பெயர்ப்பட்டியலைத் தயாரித்தார். நான் திருச்செந்தில்நாதன் அண்ணையின் பெயரை முதலில் பிரேரித் தேன் குறைந்தது பன்னிரெண்டு பேர் வரை அந்தப் பட்டியலிலிருந்தனர்.

அன்று இரவே அண்ணையின் சிதம் பரக்குடிலில் 'எழு கலை இலக்கியப் பேரவை' என்ற தீர்மானத்துக்கு வந்தோம். குறுகிய கால அறிவித்தலின்படி முதலாவது கூட்டம் ஈழநாடு பத்திரிகை அலுவலக முன் பகுதி யில் நடந்தது. இக்கூட்டத்தில்தான் அண்ணை புத்தகம் ஒன்றை வெளியிடுவோம் என்றார். எனது கவிதைகளைத் தொகுத்துப் போடு வோம் என்று சத்தியமூர்த்தி கூறினார். (மனமும் மனத்தின் பாடலும் கவிதைத் தொகுப்பு1999) அக்காலத்தில் மிகுந்த பொரு ளாதாரத் தடை இருந்தது அச்சு எழுத் துக்களுக்கும் சிரமமாக இருந்தது. சத்திய மூர்த்தியே அச்சுத்தாள்களைத் தனது சம்பளத் திலிருந்து வாங்கிக் கொடுத்தார். அகிலா பசுபதி ஒப்புநோக்குநராக இருந்தார். அப்புத் தகத்துக்கான வடிவமைப்பு, அணிந்துரையை திருச்செந்தில்நாதன் அண்ணை தந்தார். அட் டைப்படத்தை ஓவியர் பயஸ் வரைந் திருந்தார். யுத்த காலத்தில் வன்னியில் வெளி யிடப்பட்ட முதலாவது கவிதைத் தொகுப் பாக அது இருந்தது. பொதுவில் மரணத்தில் வாழ்ந்துகொண்டு நாங்கள் படைப்புகளைச் செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகலை இலக்கியப் பேரவைக்கு போஷகர்களாக இணுவையூர் திருச்செந்திநாதன் அண்ணையும் அருளானந்தம் சிறிகாந்த லட்சுமி அவர்கள் (நூலகர் யாழ். பல்கலைக் கழகம்) தலைவராக நடா கருணாகரன் செயலாளராக முல்லைக்கமல், உப தலைவராக அகிலாபசுபதி, பொருளாளராக நத்தினியும் உறுப்பினர்களாக கருணை ரவி, மயிலை தர்மராசா, செவ்வேள், தமிழ்மாறன், அருளாளன், இனியவன், ஆவரங்கால் சுதன், கை.சரவணன், மயூரரூபன், ஆறுமுகம், நிலாதாசன், பயஸ், பூங்குழலி, பிரபா, வாமகாந் போன்றோர் இருந்தனர்.

எழுகலை இலக்கியப் பேரவையின் அடுத்த முயற்சியாக 'சிறுகதை" தொகுதி ஒன்றை வெளியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டபோது அதன் பின்புலத்தில் அண்ணையும் சத்தியமூர்த்தியும் இருந்தனர். 'எழு சிறுகதைகள்" என்ற தொகுதி வெளியிடப்பட்டது. திருச்செந்தில்நாதன் அண்ணை எமது தொகுதிகளை பல்வேறு தளங்களுக்கும் எடுத்துச்சென்றார். உள்ளூர் வெளியூர் பத்திரிகை, சஞ்சிகைகளுக்கும் அதன் பிரதிகளை அனுப்பி வைத்தார். திரு.சிவசேகரம், திரு.யோகராசா போன்றோர் விமர்சனங்களை எழுதினர். தமிழ் இலக்கிய குவிமையம் கொண்டிருக்கின்றது என விளித்தனர்.

மேலும் எழுகலை இலக்கியப் பேரவை ஊடாக இலக்கிய கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தது எழுகலை இலக்கிய வட்டம் மூலம் உடையார்கட்டு, விசுவமடு, தேராவில், வள்ளிபுனம் போன்ற இடங்களில் செய்தோம். சந்திரபோஸ் சுதாகரின் நிலம் சஞ்சிகையின் அறிமுகவிழாவை நடத்தினோம்.


2002 இற்கு பிற்பட்ட காலத்தில் முல்லைத்தீவு, கச்சேரியால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வொன்றில் குமுழமுனையைச் சேர்ந்த உதயசீலனின் நெறிப்படுத்தலில் 'நல்ல தோர் வீணை செய்தே" என்ற நாடகம் நடாத்தப்பட்டது. இதற்கு செந்தில்நாதன் அண்ணையே எம்மை நெறிப்படுத்தியிருந்தார். குணபாலன், நடன சபேஸ், ஜெயந்தி, உதயசீலன், முல்லைக்கமல் போன்றோர் சேர்ந்து நடித்திருந்தனர். பின்னர் அந்நாடகம் தேசியவறுமை ஒழிப்பு மாநாட்டுக்காக திருகோணமலை, கொழும்பு பண்டார நாயக்கா மாநாட்டு மண்டபம் போன்ற இடங்களுக்கு கொண்டு சென்று மேடையேற்றப்பட்டது.

2003 ஆம் வருடம் 10 ஆம் மாதம் 23 ஆம் திகதி கொழும்பு கலாச்சார மண்டபத்தில் 'கிரு" என்ற அமைப்பு ஒழுங்கு செய்து நடத்திய தமிழ் சிங்கள கலாசார நிகழ்வுக்கு வன்னியிலிருந்து சென்றவர்களில் செந்தில் நாதன் அண்ணையும் நானும் கலந்து கொண்டோம்.

எனது அடுத்த தொகுப்பை (வெறும் பகல்) அண்ணையும்சத்தியமூர்த்தியும்படித்து விட்டு தந்திருந்தனர். அதன் வெளியீடு சம்பந்தமாக கலந்துரையாடிக்கூட இருந்தோம். யுத்தத்தில் செந்தில்நாதன் அண்ணை தான்சேர்த்துவைத்திருந்தபுத்தகங்களைமட்டுமல்ல தான் எழுதிய எழுத்துக்களையும் உயிர்தம்பி சத்தியமூர்த்தியையும் இழந்து விட்டார் (சந்திரபோஸ் சுதாகர், ஆவரங்கால் சுதன், சசிகரன், வாமக்காந், வளநாடன், பயஸ், சத்தியமூர்த்தி எனப் பலரை நாம் யுத்தத்தில் இழந்து அவர்களின் நினைவுகளுடன்... நாங்கள் தூரதேசங்களில் இருந்தாலும் நிசாகரன் சொல்லுவது போல் என்றும் அண்ணைக்குதம்பியாகநெருங்கியஉறவோடு இருந்தோம். எப்போதும் இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.பீஷ்மன்
தொழில்திறன் மேம்பாட்டு உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
உடுவில்.



அண்ணை சிறுவயதிலேயே எனக்கு உறவினராக அறி முகமான ஒருவர். என் இள மைப்பருவத்தில் சிலகாலம் அவரு டன் வாழும் சந்தர்ப்பம் கிடைத் திருந்தது. நிதானம் என்பது அவர் நடையில் மட்டுமன்றி அவரது ஒவ்வொரு செயலிலும் வெளிப் படும் ஓர் விடயமாகும். ஒவ்வொரு செயலையும் அது சிறிதோ பெரிதோ திட்டமிட்டு செயற் படுத்துவதில் நிகரற்றவர்.

சிறுவயதிலிருந்தே அவரு டைய இப்பண்புகளைப் பார்த்துத் தான் வையத்துள் வாழும் முறை பற்றிய என் அபிப்பிராயங்கள் ஆரம்பமாகின. அதற்கும் மேலாக தமிழ்த்தேசியம் பற்றிய பார் வையை என்னுள் ஏற்படுத்தியவரும் அவரே.


திட்டமிட்ட சீரான வாழ்க் கையோட்டத்தில் நல்ல குடும்பத் தலைவனாய், இயலபான உறவின- னாய், நல்லதோர் வழிகாட்டியாய், குறித்துரைக்கக்கூடிய இலக்கிய வாதியாய், நிர்வாகியாய் பல முகங்களை வெளிப்படுத்தியிருந் தாலும், சிறந்த நிர்வாகியாய் நிமிர்ந்து நிற்கும் அவர் முகமே அவர் பெயர் சொல்லும் பொழு தெல்லாம் மனதுள் எழும்.

இன்றைய காலத்தில் பல் வேறு முறைகளிலும், பல்வேறு வழிகளிலும் தலைமைப் பதவி- களையும், அதிகாரக் கதிரைகளை யும் பலரும் அடைந்து நின்றாலும் நிர்வாகக் கலை அனைவருக்கும் இயல்பாவதில்லை. ஒரு சில- ரே சிறந்த நிர்வாகிகளாகத் தடம் பதித்து நிலைத்து நின்றுள்ளனர். அந்த வகையில் நான் கண்டறிந்த மிகச் சிறந்த நிர்வாகி அண்ணையே நேரந் தவறாமையையும் ஒழுங்கு முறையில் வேலைகளை வகைப் படுத்திச் செய்வதையும் இயல்பாகக் கொண்டவர்.

அகவை அறுபதில் ஓய்வு காலத்தைத் தொடரும் இவர் நிச்சயமாக ஓய்வாக இருக்கமாட் டார் என்பது உலகறிந்தது. எனி னும், தனது பதவிப்பழுவிலிருந்து விடுபட்டு தன் சொந்த வாழ் விற்கென அதிலும் விசேடமாக இலக்கியவாதியெனும் தன் மற் றொரு முகத்துடன் ஓய்வுகாலத்தை மகிழ்வுடன் கழிக்கவும் உத்வேகத் துடன் இன்னும் பல உரமுள்ள இலக்கியப் படைப்புக்களை எம் சமூகத்திற்கு வழங்கவும் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரகாசம் ராஜ்குமார்
கனடா.



ஏதேனாளில்உங்களுக்குள்உள்ள நிலைமைகளை இன்னொரு வரால் எப்படி வெளிக் கொண்டுவர முடியும்?

மலையைக்கூடஎவ்வாறுமுட்டித்தள்ளிவிடலாம் என்ற அதீத நம்பிக்கையை ஊக்குவிப்பது எல்லோராலும் சாத்தியமில்லைத்தான். அதுவும் யாரும் அறிந்திருக்காத மௌனத்தை மட்டுமே பேச்சாயுதமாகக் கொண்ட என்னைப் போன்றவர்களைத் தட்டி விடுவது அவ்வளவு சுலபமானதல்லவே. ஆனால் எழுது... எழுது... என்ற கூற்று வரிகளைக் கொண்டே எனக்குள் செத்துக்கிடந்த அந்த பீனிக்ஸ் பறவையைத் தட்டி எழுப்பிப் பறக்க விட்ட வித்தைக்கு சொந்தக்காரன் திருச்செந்திநாதன் அண்ணை. முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு சந்திக்கு அருகாமையில் ஒரு சிறிய கொட்டகைக்குள் அமர்ந்திருந்து பத்திரிகை நடத்துவது பற்றிச் சிந்திப்பதே கடினம். அதுவும் *1998 -1999* களின் இருண்ட காலப்பகுதி வேறு. தொடர்புகொள்ளும் வசதிகள் என்பது அறவே கிடையாது. அச்சுத்தாளில் இருந்து அதை அச்சுக்கோர்ப்பு செய்வது வரை சிக்கல்கள் மட்டுமே எஞ்சியிருக்கும். அச்சேற்றியதை வாசிப்பதற்கு தரமான மூக்குக்கண்ணாடியோடு கொஞ்சம் மூளைத்திறனும் ஒரு வருக்கு கட்டாயம் அவசியமானது.

இருந்தும் சரியானவற்றை நேர்மையாக அச்சில் வடிக்க வேண்டும் என்ற எழுத்தார்வம் மிக்க இளைஞர் குழுமம் ஒன்று அந்த கொட்டகையின் சிறிய அறைக்குள் எப்போதும் சிறப்புடனேயே இருந்தனர். அனுபவம், ஆற்றல், திறமை, முயற்சி எனப் பல தளங்களில் அவர்களின் சிந்தனையோட்டங்கள் இருந்தன. எழுத்துக்கோட்டின் ஆரம்பப் புள்ளியின் கடைக்குட்டியாய் அவர்களோடு நான். முடியும் என்ற நம்பிக்கையை தன்னகத்தே மூச்சாகக் கொண்டிருந்த அந்த வயதான இளைஞனுக்கு நாங்கள் இருந்தால் எதுவுமே சாத்தியம் தான்.

கொஞ்சம் கோபம், நிறையக் கண்டிப்பு எப்போதும் நேரம் தவறாமை, எதற்கும் தயாராக இருத்தல் அவருக்கு பிரதானம். முதல் சந்திப்பிலேயே அவரிடம் நான் இதனைக் கண்டு கொண்டேன். மெல்லிய புன்னகையோடு ஆரம்பமாகிய கைகுலுக்கல்தான் அவரோடு அறிமுகம் தன்பெயரைச் சொல்லி என்னைக் குழப்பத்திற்குள் தள்ளிவிடாமல் இருக்க அதனையும் அவர் தவிர்த்திருந்தார்.

மறைந்த பத்திரிகையாளரும் என்னைத் தன் தோளோடு முட்டி நடக்கவிட்டநண்பருமானபு.சத்திய மூர்த்தி அண்ணன் தான் முதலில் கேட்டார். அவரின் பெயர் தெரியுமா என்று. அதைத் தெரிந்திருந்தால் எப்படிச் சிரித்திருக்க வேண்டும். ஆனால் ஆந்தை முழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு முல்லைக்கமல் அடுத்த கதிரை யில் இருந்ததும் நல்ல நினைவு. பெரிசா நீளமான பெயர் இல்லை கொஞ்சம் கஸ்ரப் பட்டா உடனே எழுதிவிடலாம் என்று பு.சத்தியமூர்த்தியால் அறிமுகப்படுத்தப் பட்டவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் (ஏதோ வரலாற்றுப் பாடம் போன்றி ருந்தது பின்னாளில் இதனைப் பாடமாக்க நான் பட்டபாடு).

அன்றைக்கு மாறத் தொடங்கியது எனது சிந்தனையோட்டம். அது ஒரு மரண மாற்றம். பத்திரிகையாளனாக மாறுவதும் ஒரு கலைதான். ஆனால் நல்ல எழுத்தாளனாக மாறத் தொடக்கம் அதிஷ்டத்தோடு அட்ட காசமாக வாய்க்க வேண்டும். எனக்கு அது உச்சந்தலையில் வந்து இயல்பாகக் குந் தியது போல் அமைந்தது. சத்தியமூர்த்தி, முல்லைக்கமல் என்று எழுத்தார்வம் சிறுத்தை வேகம் கொண்டவர்களோடு இணைந்து என்னையும் உள்வாங்கிக் கொண்ட திருச்செந்திநாதன் அண்ணையின் அன் றைய நம்பிக்கை இன்றைவரைக்கும் எனக்குள் உயர் வியப்புத்தான்.

தமிழக ஜனரஞ்சக சஞ்சிகைகளைத் தவிர தீவிர வாசிப்புப் பழக்கம் அதுவரை நான் கொண்டிராத விடயம் அத்தனை வாசிப் புக்களோடு என் சூழலுக்குள் எனக்கு யாரும் வாய்த்திருக்கவும் இல்லை. ஆனால் திருச் செந்திநாதன் அண்ணை அவற்றுக்கு எல் லாம் சேர்த்து வைத்தாப்போல் எனக்கு வந்து கிட்டியிருந்தார். வாசிப்பின் மேம்பட்டதள நிலைகளை நான் அடைவதற்கு அவரின் ஆரம்ப தூண்டுதல்களே வழிகோலின என் பேன்.

பத்திரிகைக்கு கட்டுரை எழுதுவது தான் எனது முதற்பயணம். அந்த முதற் கட்டு ரைக்கே இன்னும் இன்னும் என்று என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தி அதில் என்னை வெற்றிபெறவும் செய்தவர் அவர். அதே தூரத்தில் இன்றைவரைக்கும் அவரிடம் அப்படியேதான் தொடர்கிறது.

அவருக்கு அது அலுப்பது இல்லை எனக்குத்தான் களைப்பு வந்துவிட்டதாக நினைப்பு. இருந்தும் அந்த ரம்மியமான காலம் இனிக் கிடைக்கப் போவதில்லைத்தான். இலங்கையின் மைய அரசியலின் கொடிய விசக் கிடங்கு தொடக்கம் சிம்ரனின் இடுப்பு வரைக்குமான நீண்ட பேச்சுகள் அருகி விட்டன. பழையதை மீட்டிப்பார்க்க மட் டுமே இப்போது முடிகிறது.

இலக்கியத் திறமைகள் எல்லாம் கொட்டிக் கிடந்த உஞ்சந்தலைகள் யாவும் தடம்புரண்டிருந்த காலம் அது. பக்கங்கள் தாவி குத்துக்கரணம் அடித்த அரசியல் சித்து விளையாட்டுக்களில் இலக்கியவாதிகள் நடு-நிலைமை என்ற போர்வைக்குள் ஒழிந்து கொண்ட பச்சோந்திக் காலமது. நடுநிலைமை என்பதை நிராகரித்து அதன் தார்ப்பரியத்தை எனக்குள் உடைத்தெறிந்தவர் திருசெந்தி நாதன் அண்ணைதான். அதற்கேற்பவே தன் னையும் அவர் கட்டுக்குள் கொண்டிருந்தார்.

தங்களது எழுத்துக்களைப் பிரசுரத் துக்கு முன்பே வாசிப்புக்குத் தந்து கருத் துக் கேட்கும் பழக்கம் பழம்பெரும் இலக்கிய வாதிகளிடம் கூட நான் கண்டிராதது சிறு-கதை, பத்திரிகை ஆசிரிய தலையங்கம் என்று எதுவானாலும் அண்ணையின் எழுத்துக்களை முதலில் படிக்கும் வாய்ப்பு எங்களுக்குத்தான் வந்து சேரும். நாங்கள் ஒன்றும் பெரும் இலக் கியச் சிந்தனையாளர்கள் கிடையாது தான். சிறுகதைகளின் அளவுகோல் பற்றிய மதிப் பீட்டில் நான் அடிமட்டத்திலேயே இருந் தவன். ஆனாலும் அவர் அவ்வாறு செய்ததன் விளைவு பின்நாள் என்னையும் சிறுகதை நோக்கி நகரத் தூண்டியது.

அதுவும் நான் எழுதிய முதல் சிறு கதையே வேறொரு பத்திரிகைப் போட்டியில் முதலிடம் பெற்றது திருச்செந்திநாதன் அண் ணையின் ஊக்குவிப்பினால் நிகழ்ந்ததாகும். அந்தப் பெருமைக்கு அவரை மட்டுமே என்னால் சுட்டிநிற்க முடியும். உண்மையில் கட்டுரை கூட கட்டுக்கடங்காமல் நான் எழுதுவதற்கு அவர் தான் என்னைத் துரத்தி யடித்தார்.

நான் ஒரு வாரத்தில் சினிமா, அரசியல் விளையாட்டு, விஞ்ஞான என நான்கு வெவ் வேறு கட்டுரைகள், பத்திரிகைகள் வெளி யிடும் அளவிற்கு ஓயாமல் எழுதக் கற்றுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தவர் அவர். முல்லைக்கமலுக்கு அதிர்ச்சி தரும்படியாகக் கவிதைகள் நோக்கி நான் களமிறங்கியதும் அவரால்தான். வீடு நிரம்பிய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என நான் தேடித்தேடி வாங்கிப் படிக்கவும் அவரது வீடுதான் காரணமாகியது.

கால் தவறுப்பட்டால் புத்தகங்கள் கொட்டுப்படும் அவரது வீடு. அவ்வளவு அலாதியானது வாசிப்புப் பிரியர்களிற்கு அது ஒரு சொர்க்கமாகவே இருக்கும். இருந்ததை வாசிப்பவர் இறுகிய மனதோடு இருப்பவராக இருப்பாரா என்றால் அதற்கு அவர் நேர்மாறுதான் வார்த்தை ஜாலங்கள் காட்டி அவரிடம் அதிகம் கடிபட்ட முல்லைக்கமலுக்கு அதில் இன்றும் அதிக வெளிச்சம்.

எழுத்தின் மீதான மோகம் அவரோடு கூட இருக்கும் வரைக்கும்தான் என்னிடம் உச்சத்தில் இருந்தது. பின்நாளில் நீண்ட இடைவெளிக்குப் பின் சத்தியமூர்த்தி அண்ணனின் கொடுமையான இழப்புக்குப் பின்னர்தான் காலம் எங்களை ஒன்றாக்கியது. அவசரப்பட்டு ஓடிச்சென்ற அச்சந்திப்பில் கொடிய வலிகளைத் தாங்கிக்கொண்டவராக எலும்புக் கூடாக நான் கண்ட அண்ணை என்னைத் திகிலடையச் செய்தார். சந்தித்திருக்கக் கூடாதோ என்ற எண்ணங்களைத் தோற்றுவித்த ரணமான பதிவுகள் அவை.

உடல் பூராகவும் எழுத்துக்களைச் சுமந்து திரிந்தவர் வீடு நிரம்பிய புத்தகக் குவியல்களோடு எப்போதும் இருந்தவர் வாசிப்பைத் தனது தேசத்துக்கு நிகராக நேசித்தவர். கஸ்டங்களோடு மோதுண்டு மீண்டெழுந்து வந்திருந்தார். உயிரை மட்டுமே தாங்கிக்கொண்டு குத்தி எடுக்க குருதியே இல்லாமல் வற்றிக் கிடந்தது அவர் இரத்தநாளங்கள். மிச்சம் இருந்தது என்னவோ எலும்பு மட்டுமே! எல்லாவற்றையும் தொலைத்தவராக அவர் மாறியிருந்தார். அந்த எல்லாவற்றுக்குள்ளும் அவர் குடும்பம் தவிர்த்து எல்லாமும் அடங்கிப் போனது.

இந்த வலிகளை அவர் முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கலாம் சாகித்தியச் செம்மல்கள் வரிசையில் தன்னையும் இணைத்து சாதனை ஏட்டிலும் பதிவாக்கியிருக்கலாம். மாற்றுக் கருத்துக்கள் என்று தீட்டியே தன்னை மகிழ்வான வாழ்வோடு பிணைத்திருக்கலாம். மாறாக பேச்சையும் மூச்சையும் தன் வாசிப்பையும்கொண்டு தரம்தாழ்த்த அவர் அனுமதித்திருக்கவேயில்லை.

தன் வற்றிய உடலோடு மீள் எழுச்சிக்காக அவர் காலத்தோடு சண்டைபிடிக்க வேண்டியிருந்தது. வயிற்றுப்பசியும் எழுத்துப் பசியும் அவரை கரைசேர்க்கும் மருந்துகளோடு சேர்ந்து கொண்டது. நம்பிக்கையை எனக்கு அபரிமிதமாக விதைத்த மனிதர் அதே நம்பிக்கையை இழந்திருக்காமல் இருந்ததுதான் அவரின் மீள் எழுச்சியின் புதிய வடிவம்.

அவரை இயங்கச் செய்வது வாசிப்புத்தான் என்பதைப் பட்டறிந்து கொண்டவன் நான். இரத்தமும் சதையுமற்றுக் கிடந்த அந்த மெல்லிய உடலை பழைய நிலைக்கு திருப்பியது பலரின் அன்போடு சேர்ந்த அந்த நிலையிலும் அவருக்கு இருந்த வாசிப்பின் மீதான பற்றுறுதியே. அதுவே மெல்ல மெல்ல அவரைக் கரைசேர்த்துவிட்டது.

பழைய மார்க்கண்டேய மனிதராக மாறியதும் என்னை ஒரு புதிய வாழ்வு நோக்கித் திருப்புவதில் அவர் குறியாகவிருந்தார். சத்தியமூர்த்தி அண்ணரின் இழப்புடன் தன்னைச் சுற்றியிருந்தவர்கள் ஆபத்துக்கு தள்ளப்படுவதை அவரால் ஏற்றுக்கொள்ள சிரமமாக இருந்தது.

எல்லோருக்கும் எல்லாமும் வாய்ப்பதில்லைத்தான் எல்லாமுமாக வாய்க்கும் சிலருக்கு மட்டுமே ஒரு சிலர் அமைந்து விடுகிறார்கள். அண்ணனாக, தோழனாக, ஆசானாக கைபிடித்து கூட்டி நடக்கும் நல்ல மனிதர்கள் கிடைப்பது அதிர்ஸ்டம் தான். இவையெல்லாம் ஒன்றாய் அமைந்து தவறவிட்ட தந்தையின் பிரியங்களையும் தந்தால் அது ஈடு இணையில்லாதது தானே? எனக்கு அந்தகைய மனிதராகத்தான் திருச்செந்திநாதன் என்ற அந்த வயதான இளைஞன் இருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பு.சத்தியமூர்த்தி (அமரர்)
ஊடகவியலாளர்
அவருக்காக வேலணையூர் சுரேஸ்



இது தான் எனக்கும் அவருக்குமான உறவெண்டு வரையறுத்துச் சொல்லுறது மட்டுமில்லை. என்னாலயே புரிஞ்சு கொள்ளமுடியாத ஒரு உறவு, அண்ணனாய், தந்தையாய், தோழனாய், நண்பனாய், விமர்சகனாய், வழிகாட்டியாய் வேகத்தடையனாய் (Breaker) சொல்லிக் கொண்டே போகலாம். என்று ஒரு முறை சத்தியமூர்த்தி கூறும்போதே ஒருவித பக்தி குரலில் இழையோடியது. சத்தியமூர்த்தி கூறிய 'அவர்" தான் எழுத்துலகம் நன்கறிந்த இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்.

அவருக்கும் சத்தியமூர்த்திக்கும் இடையிலான பிணைப்பு தொண்ணூறுகளின் முற்பகுதியில் (அநேகமாக 92 ஆயிருக்கலாம்) ஏற்பட்டது. இயல்பு குழம்பிய ஒரு சூழலே இயல்பாகிக்கொண்டிருந்த காலம் அது. நானும் சத்தியமூர்த்தியும் பல்கலைக்கழக அனுமதிக்கான காத்திருப்புக்காலம். 'வேலையொன்று தேடிச் செய்த படியே படிப்பது" எனும் வலுவான தீர்மானத்தோடு நிறுவனம் ஒனறின் வெளியீட்டு பிரிவுக் கணக்கு எழுதுநர் நேர்முகத் தேர்விற்காகக் கிடைத்த அழைப்பை பயன்படுத்த எண்ணிச் சென்றோம். திருச்செந்திநாதன் அண்ணைதான் நேர்முகத்தேர்வு நடாத்தினார். ஏமாற்றம், அப்பணி பிறிதொருவருக்கானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிதொருநாள் அதே நிறுவனத்தின் வெளியீட்டுக் கிளைக்கு வருமாறு அழைப்புக் கிடைத்தது. சென்றோம். வேலையும் கிடைத்தது. வேலை தந்தார் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்கள் தான். பணியும் அவருடன் தான். கணக்கு எழுதுநர் 'இன்ரவியூவில கதைச்சதுகளை கிரகிச்சுத் தான் கூப்பிட்டவராம் 'சத்தியமூர்த்தி சொன்னான் மேலும் 'பீல்ட் றிப்போட்டிங்கும் செய்து அதை கட்டுரையும் ஆக்கட்டாம் விவசாயப் பண்ணைதான் முதல் வேலை' சொன்னான். பிறிதொரு நாள் அச்சாகியிருந்த அந்தக் கட்டுரையுடன் வந்த சத்தியமூர்த்தி 'ஒரு திருத்தமும் இல்லாம அப்படியே போடச் சொன்னாராம் அண்ணை. எப்பிடி எழுதுறது எண்டோ எதை எழுதுறதெண்டோ சொல்லாம நீர் கண்டதை உணர்ந்ததை எழுதும் அதுதான் நல்லது என்று மட்டும் கூறியதாகச் சொன்னான்.

சத்தியமூர்த்தி மட்டுமல்ல இவரோடிணைந்த சுயதிறனுள்ள அநேகர் வியப்பதும் இவரின் மதிப்போடு ஒட்டுவதும் இதனால் தான். யாழ். பெயர்ந்து பெருநிலம் சென்றோம் அவருடனேயே போன சத்திய மூர்த்திக்கு அவரால் திறந்துவிடப்பட்ட களங்கள் ஏராளம். 'அந்தாள் விடுகுதில்லை ஈழநாடு எடிற்றோறியலைக்கூட சிலவேளை என்னை எழுதச் சொல்லுறார். ஒரு நாள் பெருமையோடு இதைச் சொன்னான். பிறிதொரு அரசியல் கட்டுரை... அதுவும் சிறப்புக் கட்டுரை என்னையே எழுதட்டாம் என்றான்.

இந்தச் சுதந்திரமும் இதற்குள்ளால் ஊடாடுகிற கண்டிப்பும், சிரிப்போடு விமர்சித்து அடுத்த கட்டுரையில் திருத்தினால் நல்லது எண்டு உற்சாகம் தந்தபடியே அடுத்த பணியை இடுவதும் அண்ணையால தான் முடியும். இவர் மட்டும் கிடைக்கேல்லையெண்டா என்னவாகியிருப்பனோ? சத்தியமூர்த்தியின் பத்திரிகைத்துறைப் பிரவேசநாள் பெருமை, எதையும் நுணுகி, தூண்டுதுரும்பு பிடிக்கும் சத்தியமூர்த்தியின் உறுதி இவைக்கெல்லாம் பாத்திரமானவர் அவர் மட்டும்தான்.

இவ்வாறான உறவு நிலைதான் சத்திய மூர்த்தியை தான் சார்ந்த தனிப்பட்ட விடயங்களில் கூட 'பப்பா அம்மா தூர பக்கத்தில இருக்கிற அண்ணைதான் எல்லாம்.. அவரிட்டை ஒருக்கா சொல்லிப்போட்டு ஆலோசனை கேட்டுச் செல்வம்' எனும் பக்குவத்தோடு வழிநடாத்தியது. அண்ணை எனும் ஒற்றைச்சொல் அழைப்பை எப்போதும் மதித்து சத்தியமூர்த்திக்கு எல்லாமானவர்.

அண்ணையின் ஆளுமையே அவரது வாசிப்புத் தேடல் தான். வாசிப்பு சரியான முக்கியம் என்று அவரை முன்னிறுத்தியே தன் சகாக்களின் ஆளுமையை வளர்க்க முயன்றவன். இன்று எம்மோடு இல்லை. இவன் அவர் பற்றிச் சொன்னவை ஏராளம் செய்து காட்டியவை அதனைவிட ஏராளம். சத்தியமூர்த்தி தனக்கான சகலமும் அவரே என மதித்து மதிப்பளித்தது போல அவர் பெயர் சொல்ல யார் இருக்கிறார்கள். 'இனங் காண்பதிலும் உரிமைதந்து சுயமாக வளர்விப்பதிலும் தோள்பற்றி வழிநடப்பதிலும் இவருக்கு இணை இவரேதான்.

இந்த வரைவிலக்கணம் கூட சத்திய மூர்த்தி சொன்னதுதான். அண்ணேன்ரை அரவணைப்பிலையும், வழிகாட்டலிலையும் வளர்ந்தவன் எண்டதில என்டைக்கும் பெருமைப்படலாம். இதுவும் சொன்னது அவன் தான். சத்தியமூர்த்தியை நினைக்கும் பொழுதுகளில் அவனின் இறுதிக்காலத்தில் சொன்ன அந்த வரிகளின் பெறுமதி உணரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.பி. ஜோசப்
மொழிபெயர்ப்பாளர்,
குருநகர்.



அந்நிய மொழிகளுக்கு
அடிமைச் சேவகம் செய்தபின்னே
தொலைந்து விட்ட முகவரிகள் தேடி
தாய்மண் வந்த வேளை...
வரவேற்ற பொருண்மியமும்,
இந்தக் 'கொடுப்புக்குள் சிரிப்பு" நாயகனும்
வரலாறாகிப் போனதென் மனதில்.

இரசிகனாய் மட்டும் இருந்த என்னை
எழுத்துக்குள் மாட்டிவிட்ட 'சகுனி"
'அந்த' கருத்தில் கூறவில்லை யெனினும்
எத்தனை பேர் வந்து
தங்கிப் போனதிந்த ஆலமரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பலூனில் பிடித்து மேலே போதல்'
ஓர் முட்டை போட்டு
ஊர் கூட்டும் கோழி என
எத்தனை வசை தாங்கி
எம்மைத் தூக்கி விட்ட கரம்
"மறுக்கப்பட்ட"....
"மறைக்கப்பட்ட" வேடங்கள்
நந்தியாய் குறுக்கே குந்த
"சற்றே விலகியிரும் பிள்ளாய்"
என்று அடைக்கலம் தந்த மனம்.

செய்தித் தாள் முகப்பில்
சித்து வேலைகள் செய்து
"நக்கல்கள்" "நளினங்கள்" பொடியாக்கி
தலை தூக்கி நின்ற மகன்.

நட்பு மட்டும் என்றாக்க முடியாது
குடும்பத்து நண்பனாய் ஒருநாள்...
ஆலோசனை மூலவராய் இன்னொரு நாள்...
எத்தனை உருவெடுத்த இமயம்.

இன்னா செய்தார் ஒடுங்கவே
"புளுனிக் குஞ்சுகளை" வரவேற்கவும்
100 ஆவதை நிறைவாக்கவும்
எங்களை வடம் பிடிக்க வைத்த மனம்

மனங்களிலே நிலை கொள்ளும்
நிறைகுடமாய் சத்தியமூர்த்தியினை
பண்படுத்தி வனைந்து விட்ட
வலிய கரம்

கட்டுரையாய் நூல்வெளியீடாய் 'எழு'வாய்
நாம் எழுந்த வேளை
பின்னணியில் வந்த குணம்
"வந்திட்டாங்கள் தொடங்கலாம்"
என்றளவுக்கு வளர்த்து விட்ட பெருமான்

பல நூல் தந்த நாயகன்
முன்னுரைக்கு வேந்தனாய் உயர்ந்தவன்
விமர்சனக் குளத்தையும் கலக்கியவன்
எத்தனை துறை சொல்வேன் நான்

முகமூடிகள் தூர வீசிவிட்டு
நேருக்கு நேராய் மோதும் புலி
'என்னடாப்பா' என்பதற்குள்
ஆயிரம் அர்த்தங்கள் தேக்குவார்

புதியன புகுத்தல் எத்தனையாயினும்
சலிக்காது களம் தந்த சீமான்.
'தேய்ந்த எழுத்து காரர்' தான்
கட்டையிலே காட்டுன் தந்தே
வான் முட்ட எழுந்த புத்தாக்கி

இணைப்பு பாலமாய் வந்த
கடைசி ஒடியல் கூழ் குடித்து
மக்களோடு மக்களாய் நிலம் கடந்த
நினைவுகள் நெருடுகின்றன குருதி சிந்தி.

சிந்திய பாலை எண்ணி
அவரும் கலங்கவே போவதில்லை
வாழ்த்த வயது எனக்குப் போதவில்லை
குருவாய் பணியலாம் எனக்கும் அட்டியில்லை
வாழ்கவே இன்னும் சீர்சிறக்கவே என
இறை வேண்டினேன் நீடு வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராசா ரமணன் (தவராஜசேகரம்)
சுகாதாரப் பரிசோதகர்,
இல 230, வரோதயநகர்,
திருகோணமலை.



என்னுள்
தந்தைக்கு முதலிடம்
தங்களுக்கு அடுத்த இடம்.
முந்தைய நினைவுகள் நிழலாட
தங்களையும் என்னையும் இணைத்த
சத்தியமூர்த்தி அண்ணாவும் இடப்பெயர்வும் - துன்பத்துள்ளும்
நல்ல ஆசானையும் ஒரு அண்ணாவையும் எனக்கு தந்தனர்.

வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும்
வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கு
அடுத்த இடம்
அலங்காரப் பொருட்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகப் பொருட்களுக்கு தரப்படும்
நிலை மாறி புத்தகசாலைக்கு அந்த இடம்
தரப்படவேண்டும்.
உணவு, உடை அடிப்படைத்தேவை
அந்த தேவை பூர்த்தி செய்தானதும்
முதல் இடம் வாசிப்புக்கே தரப்படவேண்டும்
என்ற கருத்துக்கே அமைவாக தங்கள் வீடு பலருக்கு
நூலகமாய் இருந்ததை நான் கண்டேன் அங்கே
நானும் பல நூல்களை வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.
கலை ஆர்வம் கொண்ட பல நண்பர்களை
எம்முடன் இணைத்து வைத்து அந்த கலைகளை
வளர்க்க அரும்பாடுபட்டுவரும் தாங்கள்
"கலை மாத்திரம் வாழ்க்கையல்ல"
அன்பு, தியாகம், குடும்ப வாழ்க்கை என்பவற்றையும் எமக்கு கற்றுத் தந்தீர்கள்.
"இருக்கின்ற செல்வம் போதும் என்பது நல்லது
இருக்கின்ற திறமை போதும் என்ற நினைப்பு நல்லதல்ல"
என்று கூறி பல நண்பர்களை படைப்பாளிகள் ஆக்கியுள்ளீர்கள்.

"கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு
இன மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம்
ஆகியவற்றின் எடுத்துக்காட்டு எனவே கலை
இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும்
வருமென்பது நுண்ணறிவினரின் துணிபு என்பதற்கு
அமைவாக தங்களின் கலையுணர்வு
எழுத்துக்களாக வடிவெடுத்து நூல்களாக பிரசவித்துள்ளன
இன்னும் பல படைப்புக்கள் தொடர்ந்தும் வெளிவரும்
என்பது எமது அசையாத நம்பிக்கை.

"எப்படியும் வாழலாம் என்ற இந்த உலகில்
இப்படித்தான் வாழவேண்டும்" எனும்
தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை
எம்மை எப்போதும் இணைத்து வைத்துக்கொள்ளும்.

பழமைக்கும் புதுமைக்குமான ஒரு
உயிரிணைப்புப் பாலமாகி
நடக்கவைத்தீர்கள்.
தங்கள் பேனா முனை திசைகாட்ட
என்றும் முன் நடப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி காயத்திரி பயஸ்ராஜா

ஊடகவியலாளர்



இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் - பல வரலாறு களை உள்ளடக்கிய பெரும் வரலாற்று விருட்சம் காலநதியோடு நீள நீந்தி வரும் பாசிபடியாத அருவி இந்த அருவியில் நனைந்து பலன் பெற்ற பெருமரங்களில் நானும் ஒரு சிறு மரம்.

1999ம் ஆண்டின் பிற்பகுதி யில் எனது எழுத்தாற்றலுக்கும் கலை ஆர்வத்துக்கும் களமிட்டு தந்த ஈழநாடு மாதமலரின் கலை இலக்கியப் போட்டியில் நான் வெற்றியீட்டியதில் இருந்து எனக் கும் மதிப்பிற்குரிய செந்திநாதன் அவர்களுக்கும் அறிமுகம் ஏற் பட்டது. எல்லோரையும் போலவே செந்திநாதன் அண்ண என்றே நானும் அழைப்பேன் ஆர்ப்பரிக்கும் கலைத்திறனை ஆர்ப்பாட்டம் இல் லாமல் வெளிக்காட்டும் திறன் அண் ணன் அவர்களுக்கு கை வந்த கலை.

19 வயதில் எனக்கு பத்திரி கைத்துறையை கைகாட்டி வழிப் படுத்திய முதல் ஆசான் இவரே. ஆதாரம், பொருண்மிய செய்திகள் ஈழநாடு, ஈழநாதம் பத்திரிகையின் பொருண்மிய வாசல் என எனது பத்திரிகை ஆர்வத்துக்கு களமிட்டு வழிகாட்டியவர் மதிப்பிற்குரிய அண்ணன் அவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக எனது கணவர் ஓவியர் பயஸ் அவர் களின் அன்பிற்குரியவராகவும் பய ஸின் மதிப்பிற்குரிய குருவாகவும் அண்ணரே இன்றுவரை இருக்கி றார். எனது கணவர் இன்றைக்கு வரை ஓவிய படைப்புலகில் பேசப் படுவதற்கும் அண்ணர் அவர்கள் மிக முக்கியமானவர், எனது கணவருக்கு எந்தளவுக்கு கலைத்துறைக்கு ஆதர வாக இருந்தாரோ அந்தளவு எனக் கும் என் படைப்புக்களை மதிப் பிட்டு உரமூட்டியவர்.

"கலைஞன் என்பவன் காலத் தின் கண்ணாடி" காலத்தை வெளிப் படையாக காட்டி கருத்தோடு புரியவைக்கும் ஆற்றல் மிக்கவர். அவரது சிறுகதைகள் என்றைக்கும் கால ஓட்டத்தை வெளிப்படையாக காட்டி நிற்கும்.

ஒரு எழுத்தாளனின் பேனா விற்கு இத்தனை பலம் உண்டா? என்ற எனது பெரும் கேள்விக்கு விடைதந்தது மதிப்புக்குரிய செந்தி நாதன் அவர்களின் படைப்புக்களே.

கதாபாத்திரத்தின் உள்ளே நுழைந்த கதையை ரசித்து சிலிர்க்க வைக்கும் பக்குவத்தோடும் தெளி வோடும் சிறுகதை எழுதுவதில் அவ ருக்கு நிகர் அவரே. பல்கலை விற் பன்னராக விளங்கும் எங்கள் ஆசான் என்றும் சீரோடும் சிறப்போடும் நிறை ஆயுளோடும் எம்முன் எமக்கு வழிகாட்டியாக கலை உலகுக்குள் எம்மை அழைத்து செல்ல இறை ஆசி வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைக்ஸ் பரந்தாமன்

புதுக்குடியிருப்பு



படைப்பிலக்கியம் என்பது யதார்த்தத்தின் வெளிப்பாடு. இந்த வெளிப்பாடு எளிய மொழியில் அமைவதோடு அவை பாமர மக்களின் வாழ்வியலையும் அதற்கான வழி வகைகளையும் கூறுவதாக அமைதல் வேண்டும்.

ஒரு படைப்பாளியின் பார்வையில் பதிகின்ற: பாதிக்கின்ற நிகழ்வுகள் மனஉணர்வின் வெளிப்பாட்டோடு படைப்புக்களாக ஏதோ ஒரு வடிவத்தில் வெளிப்படும் போது, அந்தப் படைப்புக்கள் சமூகத்துக்கு என்ன சொல்கிறது என்பதைக் குறித்தே அந்தப் படைப்பும் படைப்பாளியும் மக்களால், வாசகர்களால், விமர்சகர்களால் பேசப்படுகிறது.

அந்த வகையில் -

இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் என்றழைக்கப்படும் எமது மூத்த படைப்பாளி பலரால் அறியப்பட்ட ஓர் எழுத்தாளர். இன்றுவரை அவரது படைப்புக்கள் பேசப்பட்டு வருகின்றமைக்கு அவரிடம் இருக்கும் சமூகம் சார்ந்த வாழ்வியல் பார்வையும் அவரது எளிய இலகு மொழி எழுத்து நடையுமே ஆகும்.

பாமர மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் இவரது படைப்புக்கள் வாசிக்கக் கூடியவை: ரசனை உள்ளவை. வெறுமனே கதைகள் எழுதி எழுத்தாளன் என்று பெயர் எடுத்தவர்களுக்கு மத்தியில் திரு.திருச்செந்தி நாதன் அவர்கள் வித்தியாசமானவர்: அடக்கமானவர் அதே சமயம் அமைதியான வர், ஆழமானவர், ஆளுமை மிக்கவர்!

எனக்கும் இவருக்குமான இலக்கிய உறவு ஒரு தனித்துவமானது. நீண்டகால சகோதர நட்புரிமையோடு கூடியது. இலக்கிய ரீதியாக படைப்பியல் சம்பந்தமான சில விமர்சனக் கருத்துக்கள் மூலம் தர்க்கப்பட்டுக் கொண்டாலும், எனக்கும் இருவருக்குமான 'சகோதர நட்புரிமை' இன்று வரை கெட்டுப் போகாமலே இருக்கின்றது. இதற்குக் காரணம் அவருக்குள் இருக்கும், சக படைப்பாளியின் பலம்-பலவீனம் பற்றிய புரிந்துணர்வே ஆகும்.

எண்பதுகளில் இவரது படைப்புக்களைபத்திரிகைகளில்மற்றும் சஞ்சிகைகளில் படித்து வரும் போது இவர் யார்? இவர் எப்படிப்பட்ட மனிதர்? என்பதெல்லாம் எனக்கு இம்மியளவும் தெரியாது.

ஆயினும் இவர் எழுதும் கதைகளில் ஒருவித "ஈர்ப்பு" இருந்த காரணத்தினால் இவரது பெயருடன் கூடிய படைப்புக்களைப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் போது கட்டாயம் வாசித்துக் கொள்வேன்.

இவ்வாறாக எனது வாசிப்புத்தளம் இயங்கிக்கொண்டிருந்தபோது, இவர் எழுதிய மீரா வெளியீடான முடிவல்ல ஆரம்பம் எனும் நாவல் எனக்கு வாசிக்கக் கிடைத்தது.

இந் நாவலில் இவர் சொல்ல வந்த விடயம் மற்றும் எந்தவொரு அடிமட்ட சாதாரண வாசகனும் புரிந்து கொள்ளக் கூடிய மொழி நடை ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட நான், இந் நாவல் குறித்து என் மனதில் ஏற்பட்ட கருத்துக்களை ஒரு விமர்சனமாக எழுதி இவருக்கு அனுப்பி வைத்தேன்.

அப்போது இவர் தன் குடும்பத்துடன் இணுவில், காங்கேசன்துறை வீதியில் வசித்து வரும் சமயம், நானும் இணுவில் - துரைவீதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தேன். 'முடிவல்ல ஆரம்பம்' நாவலுக்கு விமர்சனம் எழுதி அனுப்பிய மூன்றாம் நாள் தனக்குத் தெரிந்த ஓர் அன்பர் மூலம் தன்னை வந்து ஒரு தடவை சந்திக்கும் படி கூறியிருந்தார். திருச்செந்திநாதன் அவர்கள்,

எனக்கோ ஒரு வித தயக்கமும் மனப் பதற்றமுமாக இருந்தது.

காரணம்-

அப்போது நான் வயதில் குறைந்த வனாகவும், ஒரு வாசகனாகவும், வாசிப்பில் நாட்டம் கொண்டவனாகவும் இருந்தேனேயொழிய, எழுத்தாளனாக இருக்கவில்லை. அப்பொழுதெல்லாம் எழுத வேண்டுமென்ற மன உந்துதல் இருந்தது. பயிற்சிக்களமாகசிலசிறுகதைகளையும்எழுதிவைத்திருந்தேன். ஆனால் பிரசுரத்திற்கு அனுப்பவில்லை. காரணம் அதை நிராகரித்து விடுவார்களோ என்ற பயம்.

இந் நிலையில் ஒரு பின்னேரப் பொழுதில் திருச்செந்திநாதன் அவர்களை அவரது இல்லத்தில் சந்திக்கச் சென்ற சமயம், அவர் சிறிது சுகயீனமான நிலையில் இருந்தார். இருப்பினும், எனை அன்புடன் வரவேற்று உபசரித்தார். அவரிடம் எந்தவித 'மேட்டிமை' யான வெளிப்பாடுகளும் இருக்கவில்லை. அரசாங்க உத்தியோகத்தன் என்ற அதிகாரம் அவரிடத்தில் காணப்படவில்லை. நான் ஒரு சாதாரண பணியாளன் என்பது தெரிந்தும், அவர் இயல்பாகவே என்னோடு உரையாடினார். என்னைப் பற்றியும் எனது தொழில் மற்றும் குடும்ப நிலை பற்றியும் விசாரித்தறிந்து கொண்டார்.

பேச்சோடு பேச்சாக எனது வாசிப்புத்தளம் குறித்துக் கேட்டுக் கொண்ட போது, நான் எழுதி வைத்திருக்கும் சிறுகதைகள் பற்றிக் கூறினேன். அதற்கு அவர் அச்சிறு கதைகளைத் தன்னிடம் கொண்டு வந்து காண்பிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

இதன்பின் ஒரு வாரம் கழிந்த நிலையில், நான் எழுதிய கிறுகதைகளை எடுத்துக் கொண்டு, அவரிடம் சென்றேன். அவர் அந்த நான்கு சிறுகதைகளையும் வாசித்து விட்டு, அவை பற்றிய நிறை குறைகளைக் கூறினார். அதில் இரண்டு சிறுகதைகளை எடுத்து, சில திருத்தங்களுடன் சிறுகதைக்குரிய அமைப்போடு திரும்ப எழுதித் தருமாறு சொன்னார்.

அச்சிறுகதைகளாவன
ஒன்று-ஒரு பிடி அரிசி.
மற்றையது- விளைநிலங்கள்.

இதேவேளை, கொக்குவில்- சம்பியன் லேனில் அமைந்துள்ள வளர்மதி சனசமூக நிலையத்தினர் அப்போது 'உள்ளம்' எனும் கலை இலக்கிய மாத சஞ்சிகையொன்றை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். இந்நிலையில் 89ஆம் ஆண்டு ஐப்பசி-கார்த்திகை மாத 'உள்ளம்' சஞ்சிகையில், நான் ஏறகெனவே திருச்செந்திநாதன் அவர்களிடம் கொடுத்த இரு கதைகளில் ஒன்றான 'ஒருபிடி அரிசி' எனும் சிறுகதை, எனைப்பற்றிய ஒரு சிறு குறிப்புடன் 30ஆம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது.

எனக்கோ இன்ப அதிர்ச்சி! முதற் பிரசவம்! மனசெல்லாம் உவகை உறைந்த நிலை! காரணம்,

"இலக்கியம் என்பது படித்தவர்களால் மட்டுமே படைக்க முடியும்". என்றதொரு கோட்பாடு நிலவிய நேரத்தில், தனியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமொன்றில் நாள் சம்பள அடிப்படையில் சாதாரணதொரு பணியாளனாக பணி புரிந்த என்னை, எனது 'ஒரு பிடி அரிசி' சிறுகதை மூலம் 'உள்ளம்' சஞ்சிகையூடாக அறிமுகப்படுத்தி, படித்தவர்கள் மட்டுமல்ல, பாமரனாலும் எழுத முடியும்.. என்பதை திருச்செந்திநாதன் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார் என்பதே யதார்த்தமாகிறது. அவரால் ஈழநாதம் பத்திரிகையில் மற்றைய சிறுகதையான 'விளை நிலங்கள்' பிரசுரிக்கப்பட்டது.

இதுவே எனது இலக்கியப் பயணத்துக்கான முதல் படியும் வழியும் வாசலுமாக அமைந்து கொண்டது.

எனது இந்த ஆரம்பகால விடயத்தை அவரது பதிவில் எனது பகிர்வாக நான் ஏன் இங்கு குறிப்பிட வருகிறேன். என்றால், இலக்கிய உலகில் 'முதுகுமிதித்து முன்னேறும்' அன்றைய, இன்றைய சூழ்நிலைகளில் எண்பதுகளில் திருச்செந்தி நாதன் அவர்கள் வித்தியாசமானவராக, வேறுபட்ட மனிதராகவே எனக்குத் தெரிந்தார். இன்றும் தெரிகிறார்.

நினைத்துப் பார்க்கும் போது ஆச்சரியமாகவே இருக்கிறது!

மனித வாழ்வியலின் பயணத்தில் நாங்கள்பலரைச்சந்திக்கின்றோம். பழகுகின்றோம். ஆயினும் எல்லோரும் மனதிற்குள் நிற்பதுமில்லை, நிலைப்பதுமில்லை. எங்கோ ஒரு மூலையில் இலை மறை காயாக இருந்த என்னை இனங்கண்ட ஒரே மனிதர் திருச்செந்திநாதன் அவர்களே!

வெயிலிலும் மழையிலும் பனிக்குளிரிலும் உடல் வருத்தி உழைத்துக் கொண்டிருக்கும்என்னை, இனங்கண்டு ஊடகத்துறைக்குள் உள் நுழைந்து விட்ட சிரித்திரன் சஞ்சிகை போன்றே, எனக்குள் ஊறிக்கிடந்த இலக்கிய எழுத்தார்வத்தைப் புரிந்து கொண்டு, "இது தான் வழி! இதிலே நட.." என்று எனக் குரிய பாதையைக் காட்டிவிட்டவர் திருச்செந்திநாதன் அவர்கள்!

காலம் எனைக் கரம்பிடித்துச் சென்ற பாதையில்திருச்செந்திநாதன் அவர்களைநான் சந்தித்திருக்காவிட்டால் 'ஒரு பிடி அரிசி' எனும் சிறுகதையையும், இந்த புதுக்குடியிருப்பு- அலெக்ஸ் பரந்தாமனையும் இங்குள்ள: இன்றுள்ள படைப்பாளிகள் அறியவும்: தெரியவும் வாய்ப்பில்லாமலே போயிருக்கும்.

திருச்செந்திநாதன் அவர்களால் வளர்க்கப்பட்ட: வார்க்கப்பட்ட படைப்பாளிகள் பலர். இந்த விடயம் வெளியே இருக்கும் பலருக்குத் தெரியாதென்றே நினைக்கின்றேன். காரணம் அவர் தன் செயற்பாடுகள் குறித்து பகிரங்கமாக அலட்டிக் கொள்வதில்லை.

அதே சமயம், தன் பெயருக்கு முன்பாக 'புகழாரப் பட்டங்கள்' பலவற்றுக்காகவும், விருதுகளுக்காகவும் அவற்றுக்கான அடுத்தவர்களின் சிபாரிசுக்காகவும் அலைந்து, திரிந்ததுமில்லை: திரிவதுமில்லை. இதுவே அவரது ஆளுமை மிக்க அடக்கமாக ஒரு படைப்பாளிக்குரிய பண்பாக விளங்குகிறது.

மேலும், தன்னடக்கம் - தளராத துணிவு- எழுத்தார்வம் மிக்கவர்களை இனம் காணும் ஆளுமை .. இரக்க உணர்வு.. மன்னிக்கும் சுபாவம்... போன்றவை இவரிடம் இயல்பாகக் குடிகொண்டிருக்கும் நற் குணங்கள்.

இவரிடம் நான் கண்ட இன்னொரு விசேட குணாம்சம் என்னவெனில்,

இலக்கிய உலகில் 'இலக்கியத்தை தாமே கரைத்துக்குடித்தவர்கள்' என்று சொல்லப்பட்டவர்களால் புறமொதுக்கப்பட்டவர்கள் ஓரங்கப்பட்டவர்கள் பலரையும் திருச்செந்திநாதன் இனம் கண்டு எழுத்துத்துறையில் காலூன்ற வைத்த நிகழ்வுகள் பல. இதன் நிமித்தம் இன்றும் கூட கருத்துக்களால் முரண்பட்டாலும், 'வளர்ந்து விட்டவர்' என்ற வாஞ்சையோடு நன்றியுடையவர்களாய் அவர்கள் இருப்பதைக் காண முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நகர்வில் வலிகாம இடப்பெயர் வுக்குப் பின் வன்னியில் (புதுக்குடியிருப்பு) 'ஈழநாடு வாரமலர்' எனும் பத்திரிகைக்கும் 'ஈழநாடு மாதமலர்' எனும் கலை இலக்கிய சஞ்சிகைக்கும் திருச்செந்திநாதன் அவர்கள் பிரதம ஆசிரியராக இருந்து செயற்பட்ட போது, நான் வேறு பத்திரிகை நிறுவனத்தில் ஒப்பு நோக்குநராகவும் பின்பு உதவி ஆசிரிய ராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

இந்நிலையில் முதன் முதலாக நான் எழு திய கட்டுரை ஒன்றை நான் பணிபுரிந்த பத்திரி கையின் ஆசிரிய பீடம் பிரசுரிக்கத் தயங்கிய நிலையில், திருச்செந்திநாதன் அவர்கள் 'உண்மைவரலாறுகள்என்றும்உறங்கிப்போவ தில்லை' எனும் அக்கட்டுரையை தனது ஈழ நாடு வாரமலரில் பிரசுரித்து, தொடர்ந்தும் கட்டுரைகளை எழுதுவதற்கான வழிகளைத் திறந்து விட்டவர் என்பது மிகையான விடய மல்ல.

எப்பொழுதும், எனக்கு மட்டுமன்றி, தன்னிடம் வரும் இளம் படைப்பாளிகளிடம் இவர் அறிவுரை என்னவெனில் "தொடர்ந்து வாசி: நிறைய யோசி.." என்பதாகும். அது மட்டுமல்ல "தவழும் குழந்தை நடக்க முயற் சிக்கும் போது அது பற்றிப் பிடித்து நிமர் வதற்கு அதன் தரத்திற்கு ஏதோ ஒன்று தேவைப் படுவது போல, வளரத் துடிக்கும் படைப் பாளிக்கு அவனது படைப்பாக்கத்திற்கு ஒரு பத்திரிகையின் ஆதரவு நிச்சயம் தேவை.." என்று கூறியவர் அதை தன் பத்திரிகை மற்றும் சஞ்சிகையூடாகச் செய்தும் காட்டினார்.

குறிப்பாக ஒரு சம்பவத்தை இங்கே சுட்டிக் காட்டலாம்.

ஒரு தடவை இவரது அலுவலகத்தில் இவரோடு கதைத்துக் கொண்டிருந்த போது, ஓர் இளைஞன் இவரைத் தேடி வந்தார். வந்தவர், தான் நிறையக் கதைப் புத்தகங்கள் வாசிப்பதாகவும், அதன் நிமித்தம் சில கவி தைகள் எழுதி வைத்திருப்பதாகவும், அதைப் பிரசுரிக்க சிலர் தயங்குவதால் இறுதியாக உங்களிடம் வந்திருப்பதாகவும் அந்த இளை ஞன் கூறினார்.

திருச்செந்திநாதன் அவர்கள் சிரித்து விட்டு, அந்த இளைஞன் கைவசம் வைத் திருந்த ஐந்து கவிதைகளையும் வாங்கிப் படித்துக் கொண்டார். அதில் ஒரு கவி தையை எடுத்து சில திருத்தங்கள் செய்த பின், அதைக் 'கொம்பசிங்' (அச்சுக் கோர்த்தல்) செய் யும்படி பணியாளரிடம் கொடுத்தார்.

ஏற்கனவே சிறுகதையோடு சேர்க்கப் பட்டிருந்த தினமும் எழுதும் ஒரு படைப் பாளியின் கவிதைப் பக்கத்தை எடுத்து விட்டு அந்த இடத்தில் இந்த இளைஞனின் கவிதை யைப் போடுமாறு பணியாளரிடம் கேட்டுக் கொண்டார்.


கவிதை கொண்டு வந்த இளைஞனால் நம்ப முடியவில்லை அக்காரியத்தை. இந்த இடத்திலும் தனது ஆக்கம் நிராகரிக் கப்படலாம். என்று நினைத்திருந்தவனுக்கு அடுத்த ஞாயிற்றுக் கிழமை பத்திரிகையில் தனது படைப்பொன்று வருவது குறித்த மிக்க மகிழ்ச்சியடைந்தான் அவன்.

அன்றைய கால கட்டத்தில் இவருடன் ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிய ஊடக வியலானர் அமரர்.பு.சத்தியமூர்த்தி மற்றும் படைப்பாளி முல்லைக்கமல் போன்றோர் இவருக்கு வலது கரமாக இருந்து செயற் பட்டதோடு, முல்லைக்கமல் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'எழு கலை இலக்கியப் பேரவை'க்கும் திருச்செந்திநாதன் அவர்கள் போசகராகவும் இருந்து செயற் பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கும் எனக்குமான கடந்த கால தொடர் பாடல்களை அவரை ஆவணப் படுத்தும் இந்தப்பதிவில் பகிர்ந்து கொண்டது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அவர் அன்றும் போல: இன்றும் போல என்னுமாய் இலக்கியத்திற்கான தமது பணியை ஆற்றுவதோடு, எழுதுவதற்கும் இலக்கியத் துறையில் வளருவதற்கும் எனக்கும் என்போன்றவர்களுக்கும் வழிகாட்டியது போன்று என்றுமவர் இருக்க வேண்டும்: இருப்பார் என்ற நம்பிக்கையோடு அவரை மனதார வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என். ஞானசூரியர்
உளவளத் துணையாளர்



அண்ணைக்கு வயது அறுபது. அவர் பற்றி வெளிவரப் போகும் நூலில் எனக்கும் எழுத ஓர் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

மன்னர் ஆட்சிக்காலத்தில் இளவரசிக்குச் சுயம்வரம் என்றால் இளவரசர்களைத்தானே அழைப் பார்கள். அதேபோல் எழுத்தாளர் கள் அல்லது பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் எழுதுகின்ற சமூகச் சூழலில், எனக்கும் ஒரு வாய்ப் புக் கிடைத்திருக்கின்றது. பயன் படுத்துகின்றேன்.

அண்ணைக்கும் எனக்குமான உறவு வார்த்தைகளுக்கு அப்பாற் பட்டது. எனது மனம் நினைப்பதை – உணர்வதை என் மொழி அறிவு சரியாக-துல்லியமாகக் கொண்டு வருமோ தெரியவில்லை!

இனி விடயத்திற்கு வருகின் றேன். நான் G.C.E O/L எடுத்து விட்டு ஒன்றையும் எண்ணாது இருந்த காலம்...

ஒரு மாலைப் பொழுதில் சிதம்பரநாத சித்தப்பா எங்கள் வீட்டிற்கு வந்தார். இளையவன் என்ன செய்கின்றான்? அம்மாவைக் கேட்கின்றார். அதற்கு அம்மா S.S.C எடுத்தவன் H.S.C சயன்ஸ் படிக்கப் பத்தாது, சும்மா பெடியளோடை கோயில் திருவிழா, கலியான வீடு என்று சுற்றித் திரிகின்றார் என்றார்.

சித்தப்பா நான் நின்ற தோரணையைப் பார்த்து விட்டு அம் மாவை நோக்கி அவனைப் பார்க்க நல்ல பிள்ளையாக இருக்கின்றான், நீங்கள் இப்படிச் சொல்லுறியள். அதற்கு அம்மா- நான் என்ன கூடாது என்றே சொன்னான் படிப்பிலை கவனம் இல்லை என்றதைத்தான் சொல்லுறன் என்றார்.

சித்தப்பா என்னோடு கதைத் தார். படிப்பு என்ன மாதிரி? ரியூசன் எப்படி? என சில கேள்விகளில் எனது நிலையைப் புரிந்தவர் போல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கு வீட்டை வா, அண்ணையோடை வந்து கதை. நீ படிக்கிற ஒழுங்குகளை அண்ணை செய்யட்டும் என்றார்.

எனது சின்ன வயதில் 8 அல்லது 9 இருக்கலாம். அக்காவை ஒரு நாள் வீரகேசரிப் பேப்பரைப் பார்த்துவிட்டு எங்கடை புளியடிக் குஞ்சியாச்சியின்ரை பேரன், சிதம்பரநாதச் சித்தப்பாவின் பெரியவன் கதை ஒன்று எழுதியிருக்கின்றார் என ஆச்சரியத்தோடு அந்தரப்பட்டு கதை வாசித்தது எனக்கு நினைவுக்கு வந்தது.

எங்களது நெருங்கிய உறவில் அப்போது யாரும் எழுத்துத் துறையுடன் ஈடுபாடு உடையவர்கள் இல்லை. அதனால் பத்திரிகையில் எழுதிக் கொண்டிருந்த திருச்செந்திநாத அண்ணையை உறவினர்கள் எல்லோரும் அறிந்திருந்தார்கள். அவரின் கதைகளைப் பத்திரிகைகளில் வாசித்துவிட்டு கதைப்பவர்களுக்கு அருகில் நானும் இணைந்து கொண்டு, அவர் எனது ஒன்று விட்ட அண்ணன் என்று சொல்லிப் பெருமைப்பட்டிருக்கின்றேன்.

சிதம்பரநாத சீத்தப்பா எனது அப்பாவின் சிறிய தாயாரின் மகன். அப்பாவின் சிறிய தாயாரை குஞ்சியாச்சி என்று தான் வீட்டில் கதைப்பார்கள். குஞ்சியாச்சியின் பிள்ளைகள் தனஞ்செயசிங்கத்திடமும், சிதம்பரநாதனிடமும் அப்பாவுக்குப் பற்று அதிகம். தனஞ்செயசிங்கம் நீதிமன்றில் முதலியார் ஆகவும், சிதம்பரநாதன் கச்சேரியில் கிளாக் ஆகவும் வேலை செய்தார்கள். இவர்கள் லீவில் ஊருக்கு வந்தால் எனது அப்பா தொழிலுக்கும் போகாமல் அவர்களுடனேயே சுற்றித் திரிவாராம். தனது சிறிய தாயாரின் பிள்ளைகள் அரச உத்தியோகம் என்று அப்பாவுக்குப் புழுகம் என அம்மா கூறுவார்.

அடுத்த நாள் மாலை சித்தப்பா வீட்டிற்கு சென்றேன். மருதனார்மடத் இராம நாதன் கல்லூரிக்கு முன் உள்ள தோட்டம் நடுவிலே பெரிய கல்வீடு.

தயங்கித் தயங்கிப் போன எனக்கு சித்தப்பா குடும்பத்தவர்களின் வரவேற்பு உற்சாகமாக இருந்தது. முன் வராந்தாவில் அழகான மரக்கதிரைகளில் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். முன் உள்ள சுவர்கட்டில் அண்ணை அமர்ந்திருந்தார். அரும்பு மீசையை விடக் கொஞ்சம் கூட தலை உச்சி பிரித்து இழுத்து கூந்தல் காதுவரை இருந்தது. இறுக்கமான Full சிலீவ் சேட் நீளக் கையை மணிக்கட்டிலிருந்து இரண்டு மடிப்பு பெல் பொட்டம் அணிந்திருந்தார்.

நான் தேநீர் அருந்திய பின், கௌரி என்று அண்ணை கூப்பிட்டார். சித்தப்பாவின் இரண்டாவது மகள் கௌரி அவரும் O/L படிக்கின்றார். அவர் ரியூசனுக்குப் போகும் இடத்தில் சயன்ஸ் ,மற்ஸ் படிப்பிக்கும் ஆசிரியர்களைப் பற்றிக் கேட்கின்றார். அடுத்த நாள் மருதனார்மட சந்திக்கு அருகிலுள்ள தொல்காப்பியர் கல்வி நிலையத்திற்கு என்னை அழைத்துச் செல்கின்றார். அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களிடம் எனது நிலையை விளக்கி படிக்கச் சேர்த்து விடுகின்றார். பொழுது பட வீட்டை வந்து படிக்கும்படி கூறினார்.

அன்றிலிருந்து ஒழுங்காக சித்தப்பா வீடு சென்று படிக்கத் தொடங்கினேன். கதிரையில் தொடர்ந்து இருந்து படிக்கக் கஸ்ரமாக இருந்தது. நான் படித்துக் கொண்டிருக்கும் போது அண்ணை இடையிடையே வந்து நான் படிப்பதை உறுதிப்படுத்திக் கொள்வார்.

நானும் புத்தகங்களுடன் தொடர்ந்து கதிரையில் இருக்க பாடங்களில் பற்று வரத் தொடங்கியது. அண்ணையின் வழிகாட்டலில் அந்த வருட O/L பரீட்சையில் மற்ஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயன்ஸ் இல் கிறடிற் எடுத்து A/L Bio படிக்கத் தொடங்கினேன்.

திருவெம்பாவைக் காலங்களில் அம்மா வுடன் அம்மன் கோயிலுக்குச் செல்வேன். சிதம்பரநாத சித்தப்பாவின் கணீரென்ற குரல் ஆலயச் சுற்றுப்பிரகாரத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும். சித்தப்பா மனமுருகிப் பொருளுணர்ந்து பாடிக் கொண்டிருப்பார்.

மானம்பூத் திருவிழா அன்று வாழை வெட்டு முடிந்து அம்பாள் ஆலயத்திற்கு அருகில் வந்து கொண்டிருக்கும் போது சித்தப்பாவின் பாட்டும் ஆட்டமும் பார்க்கப் பரவசமாக இருக்கும். அவரைச் சுற்றி சிறு ஓதுவார் கூட்டமும் கூடி விடும்.

அவர் இருக்கின்ற இடம் கலகலப்பாக இருக்கும். நிமிர்ந்த அழகான தோற்றம் அவருடையது. அவரது இசைஞானத்தையும் மொழி அறிவையும் பார்த்து அவரைப் போல் வர வேண்டும் என்று சின்ன வயதில் ஆசைப் பட்டிருக்கின்றேன். ஒரே கால கட்டத்தில் சித்தப்பாவும், திருச்செந்திநாத அண்ணையும் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதும் போது அவற்றைப் பார்த்து ஆனந்தப்பட்டிருக்கின்றேன். சித்தப்பா நல்ல கலைஞர், நல்ல இலக்கியவாதி ஏனைய கலைஞர்களையும் நன்கு மதிக்கத் தெரிந்தவர்.

சித்தப்பா சுகமில்லாமல் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் என்பதனை அறிந்து அவரைப் பார்க்கச் சென்றேன். மூக்கில் வயர்கள் செருகியபடி மெல்லிய சுவாசத்துடன் கட்டிலில் படுத்திருந்தார். நினைவு குறைவாக இருந்தது. சிறிது நேரத்தில் முகமும் நெஞ்சுப் பகுதியும் அசைந்து ஒடுங்கியது. அருகிலுள்ள தாதிய உத்தியோகத்தரிடம் நிலமையைக் கூறினேன்.

Doctor வந்து பார்த்துவிட்டு என்னைப் பார்த்தார். எனக்கு விளங்கி விட்டது. சில நிமிடம் மௌனமானேன். என்ன செய்வது என்று தெரியவில்லை. பிறகு என்னை சுதாரித்துக் கொண்டு கச்சேரிக்கு அண்ணையை காணச் சென்றேன்.

அண்ணை முன் கதைக்க வார்த்தைகள் வரவில்லை. பிரயத்தனப்பட்டு சித்தப்பா ஏலாமல் இருக்கின்றார். Doctor உங்களை வரச் சொல்லியுள்ளதாகக் கூறினேன். (இதனை அண்ணை சிறுகதை ஒன்றில் பதிவு செய்திருக்கின்றார்.) அன்று யாழ்ப்பாணம் கே.கே. எஸ். வீதி ஒரே பதற்றமாக இருந்தது. வாகனங்கள் குறைவு. ஒருவாறு கார் ஒன்று பிடித்து சித்தப்பா உடலை வீடு கொண்டு வந்து சேர்த்தோம். மாலை திரும்பவும் யாழ். பிரதான தபாலகத்திற்கு சென்றேன். சித்தப்பாவின் மரணத்தை வானொலி மூலம் அறிவிப்பதற்காக.

1986ம் ஆண்டு நல்லூர் இந்து விடுதியில் அண்ணையின் 'என்றாவது ஒரு நாள்' நூல் வெளியீட்டு விழா (முதலாவது) அன்றைய நிகழ்வைப் படம் எடுக்க ஒரு போட்டோ கிராபர் தேவை. நான் கூறினேன் வீட்டில் ஒரு கமெரா இருக்கின்றது. நான் கொண்டு வருகின்றேன் என்று. எனக்கு படம் எடுக்கத் தெரியாது. ஆனால் ஆசை.

அன்றும் வரவேற்புரை முடியத்தான் நிகழ்வுக்குச் சென்றேன். சபையோர் முன் கமெராவுடன் நிற்க பயமாகவும் புதிய அனுகூலமாகவும் இருந்தது. பேராசிரியர் சபாஜெயராசா நிகழ்விற்கு தலைமை தாங்கினார். அன்று பேசுபவர்கள் எல்லோரும் எனது மனதுக்குப் பிடித்த இலக்கிய கர்த்தாக்கள். பேராசிரியர் க.சண்முகதாஸ், டாக்டர். நந்தி செம்பியர் செல்வன், பேராசிரியர் மௌனகுரு, செங்கை ஆழியான், டொமினிக் எஸ். திருச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் அன்று தான் அவர்களை நேரில் பார்க்கவும், படமாகப் பதிவு செய்யவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

வெளியீட்டு விழாப் படங்கள் வந்ததன் பின் அதனைப் பார்த்தவர்கள், படங்கள் மிக நன்றாக இருப்பதாக அண்ணைக்கு கூறியுள் ளார்கள். விழா நிகழ்வில் பேச்சாளர்கள் சுவார் சியமாகப் பேசும் போது அக்கா கைதட்டிச் சிரிக்க, அண்ணி நாணத்தோடு தலை குனிந்து சிரிக்கும் காட்சியையும் ஒரு படத்தில் பதிவு செய்திருந்தேன். குறிப்பாக அந்தப் படத் தையும் ஏனைய படங்களையும் பார்த்த சிரித்திரன் சிவஞானசுந்தரம், பேராசிரியர் மௌனகுரு ஆகியோர் camera man காட்சிகளை சிறப்பான முறையில் பட மாக்கியிருக்கின்றார் எனப் பாராட்டியதாக அண்ணை எனக்குக் கூறினார்.

தனது பிள்ளைகள் எல்லோரும் நல்லவர் களாகவும் வல்லவர்களாகவும் அமைந்தால் பெற்ற தாய் எப்படி மகிழ்ச்சியடைவாளோ அப்படி நான் எடுத்த படங்கள் எல்லாம் நன்றாக அமைந்தது எனக்கும் ஆனந்தமாக இருந்தது. ஒரு தன்னம்பிக்கை வளர்ந்தது. தொடர்ந்து அண்ணையின் திருமணம், அவரின் நண்பரின் சகோதரியின் திருமணம் என எனது புகைப்படம் பிடிப்புப் பயணம் தொடர்ந்தது.அண்ணையின் குழந்தைகளை எடுத்த படம் வீரகேசரிப் பத்திரிகையிலும் வெளி வந்தது. நான் Film றோல் அனுப்பும் லாப் முகாமையாளர் தமது நிறுவனத்தில் என்னைஇணைத்துபணியாற்றும்படி வேண்டு கோள் விடுத்தார்.

அண்ணை பத்திரிகைகளில், சிறு சஞ் சிகைகளில் ஆசிரியராக இருந்த நேரம், என்னையும் எனது நண்பர்களான ஸ்ரீகணே-சன் சிவகுமாரன் சிவசிதம்பரம் ஆகியோரை பத்திரிகைக்கு விடயதானங்கள் எழுதும்படி ஊக்கப்படுத்தி களம் அமைத்துத் தந்தார்.

என்னுடைய கவிதைகளும் பத்திரிகை களில் வெளி வந்தன. முதன் முதலில் பத் திரிகையில் எனது கவிதையும் எனது பெய ரையும் பார்த்த போது, எழுந்த ஆனந் தக்களிப்பை வார்த்தைகளால் சொல்ல முடி யாது. அன்றைய தினம் ஐந்து பேப்பர்கள் வாங்கி நண்பர்களுடன் அதனைப் பகிர்ந்து கொண்டேன். அண்ணையின் ஊக்கத்தில் நண்பர்கள் தொடர்ந்து எழுதினார்கள். இப் பவும் எழுதுகின்றார்கள். அவர்களோடு சேர்ந்து ஓட என்னால் முடியவில்லை.

தொடர்ந்து இலக்கிய விழாக்கள், இலக்கிய நண்பர்களுடனான சந்திப்புக் களுக்கு நண்பர்கள் சகிதம் அண்ணையுடன் சேர்ந்து சென்றேன். ஊரடங்குச் சட்டம், பகிஸ்கரிப்பு நாட்களை பயன் உள்ள பொழு-துகளாகப் பயன்படுத்திக் கொண்டோம்.

பேராசிரியர் சுப்பிரமணிஐயர் போன்ற நல்லறிஞர் வீடு சென்று பயன் உள்ள பல விடயங்களைக் கதைப்போம்.

பல நூல்களைச் வாசித்துப் பெற்றுக் கொண்ட அறிவை எம்மோடு பகிர்ந்து கொள்வார்கள். மனதில் உள்ளதை தங்கு தடையின்றிச் சொல்வார்கள். சபைக்கு வராத சங்கதிகள் அந்த முற்றத்து அவையில் வரும் நாம்உற்றப்பார்த்துமுன்நகர்ந்தால்எங்களுக்கு காது கேட்கவில்லை என நினைத்து உரத்துக் கதைப்பார் ஐயர். அவரின் மனைவி அருகில் வந்தால் விடயத்தை நாசுக்காக மாற்றிக் கதைக் கும் வல்லமை அவரிடம் இருந்தது. மற்றவர் கள் என்ன நினைப்பார்கள் என நாம் கதைக் காமல் விட்ட கதைகளை ஐயர் ஆலாபனை பண்ணிக் கதைக்கும் போது கேட்கச் சுவை யாக இருக்கும்.

அண்ணையின் அறை ஓர் அழகான நூலகம். நாலா பக்கமும் சுவரோடு இணைத்து புத்தகங்களால் இன்னுமொரு சுவர் கட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தது. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கொழும்பு வீட்டிற்கு நான் சென்ற போது அண்ணையின் நூலக அறை ஞாபகம் வந்தது. புத்தகங்களால் கட்டப்பட்ட சுவருக்குள் மாபெரும் நூலகமாகக் காட்சி தந்தார் சிவத்தம்பி.

அண்ணையின் அறையில் விதம் விதமான பல வகையான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என நிறைய அடுக்கப் பட்டிருந்தன. சமயம், தத்துவம் இசை, சினிமா, பொருளாதாரம், சிறுகதை, கவிதை, கட்டுரை,நாவல் எனப் பல நான் உள் நுழையும் போது ஒவ்வொரு புத்தகமும் என்னைத் தொட்டுப்பார் என வாஞ்சையுடன் கேட்பது போல இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் எத்தனையோ நல்ல நூலகங்கள் இருந்தும் எந்த நூலகத்திற்கும் நான் பெரிதாகச் செல்வதில்லை. அதே வேளை அண்ணையின் நூலகத்தில் பெற்ற பலன் அதிகம். கா.ந.சு.வின் கலைநுட்பங்கள், சுந்தர ராமசாமியின் 'புளிய மரத்தின் கதை', பாரதியார் கவிதைகள், மற்றும் பாலு மகேந்திரா, சத்யஜித்ரே, மிருணான் சென், அக்ரோ குரோவா போன்றோரின் சினிமா பற்றிய கட்டுரைகள் என எனது மனதுக்குப் பிடித்தவற்றை வாசித்துத் தெளிந்திருக்கின்றேன்.

பல்கலைக்கழகத்தில் நுண்கலை பயின்ற எனது மச்சாளின் பிள்ளைகளிற்கு சினிமா சம்பந்தமான நூல்களைப் படித்து- குறிப்பெடுத்துக் கொடுத்து உதவியிருக்கின்றேன். அவர்கள் இறுதித் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார்கள்.

பல ஆங்கில நாவல்களும் அங்கு இருந்தன. அதனைப் படிக்க விளங்கவில்லை. ஓரளவு ஆங்கில அறிவு வந்ததன் பின் அந்தப் புத்தகம் இல்லை. அண்ணையிடம் இப் போது ஒரு புத்தகமும் இல்லை. இடப்பெயர்வின்போது அண்ணை குடும்பத்துடன் சேர்ந்து அவரது நூலகமும் இடம் பெயர்ந்தது.

திரும்பி யாழ்ப்பாணம் வந்தது அவரது குடும்பமும் அவரது அசையாத நம்பிக்கையும், இடைவிடாத முயற்சியும் தான். இதற்காக மனதுக்குள் ஆயிரம் தடைவ ஆண்டவனுக்கு நன்றி சொல்வேன்.

ஒரு மனிதனுடைய வளர்ச்சிப் படி நிலையில் அவரை கல்வி, தொழில், திருமணம் என முக்கியமான கட்டங்கள் வரும். இவற்றில் முதல் நான் காலடி எடுத்து வைக்கும் வேளையில் அண்ணையுடன் ஆலோசித்தே செயற் பட்டிருக்கின்றேன்.

2002ம் ஆண்டு சமாதான காலம் நான் திருமணம் செய்து கொள்வது பற்றி முடிவெடுப்பதற்கு அணைணையை சந்திக்க புதுக் குடியிருப்புக்குச் சென்று அவருடன் மனம் விட்டுக் கலந்துரையாடினேன்.

என்னோடு அண்ணையும் அப்படித் தான். அவரது வீட்டில் என்ன சிறிய நிகழ்வானாலும் என்னை அதில் கலந்து கொள்ள வைப்பார். சித்தப்பாவின் திவசத்திலிருந்து பிள்ளைகளின் நற்காரியங்கள் வரை.

அண்ணை வீட்டை போகும் போது பிள்ளைகள் 'சூரியப்பா' வந்து விட்டார் என அன்புடன் ஆரவாரிக்கும் போது எனது மனம் என்னை அறியாமல் குதூகலிக்கும்.

மனம் களைக்கும் வேளைகளில் அண்ணை வீட்டை நாடிச் செல்வேன் அவர் எந்த நேரமும் ஒரு புன் சிரிப்போடு வரவேற்பார்.

கடந்த காலங்கள் நினைவுகளாய் மீள மீண்டும் மனதுக்குள் ஆண்டவனுக்கு நன்றி சொல்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.சாம் பிரதீபன்
லண்டன்



வாழ்நாள் முழுவதுமான எமது பயணங்களில் அவ்வப்போது பல மனிதர்களை சந்திக்கின்றோம், பலவற்றைப் பற்றிப் பேசுகின்றோம், பல விடயங்களைப் பரிமாறிக் கொள்கின்றோம், பலரை வளர்த்து விடுகின்றோம், பலரால் வளர்க்கப்படுகின்றோம், புன்னகைக்கின்றோம், உறவாடுகின்றோம், ஒன்றாய் சேர்ந்து உண வருந்துகின்றோம், சிலாகிக்கின்றோம், சிந்திக்கின்றோம், ஆனால் எப்பொழுதும் எல்லோரையும் நினைவில் வைத்துக்கொள்கின்றோம் என்பது சாத்தியமாகாத தொன்றாகவே இருக்கின்றது. இந்த யதார்த்தத்திற்கும் அசாத்தியத்திற்கும் விதிவிலக்காக நின்று எப்போதும் நமது தினசரி நகர்வில் துருத்திக் கொண்டு நினைவில் மீளும் மனிதர்கள் மிக மிக குறை வானவர்களே. அந்த மனிதர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையில் என் நினைவின் முன்னணியில் நிற்கும் நினைவழியா மனிதர்களில் ஒருவர்தான் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்.

சரியாக இருபது வருடங்கள். நான் இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் அவர்களை முதன் முதலில் சந்தித்தது நாற் பது வயது நிரம்பிய மனிதராக நான் சந் தித்த அந்த படைப்பாளி பற்றிய நினைவு களை இன்று என்னுடைய நாற்பது வயதில் நின்று நான் பகிர்ந்து கொள்ளக் கிடைத்ததையிட்டு பெருமையும் மகிழ்ச்சி யும் அடைகின்றேன். காலத்தின் அதிவேகச் சுழற்சியை சற்று நின்று நிதானிக்கும் பொழுது மிக ஆச்சரியமாக இருக்கின்றது. சில மனி தர்கள் வாழும் காலத்தே நாமும் வாழ்ந் தோம் என்று நெஞ்சு நிமிர்த்தி பெருமை கொள்கின்ற சந்தர்ப்பங்கள் ஒரு சிலருக்கே வாய்க்கின்றது. இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களின் மட்டில் அந்தப் பெருமை எனக்கும் வாய்த் திருக்கின்றது என்றே நம்புகின்றேன்.

உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு பல்கலைக்கழக அனுமதிக்கான காத்திருப் புகள் நீண்டிருந்த அந்த காலப் பகுதி யில்தான் சிதம்பர திருச்செந்திநாதன் அவர் களுக்கும் எனக்குமான ஒரு புதிய பய ணம் ஆரம்பமாகியிருந்தது. ஒரு சிறுகதை எழுத்தாளனாகவோ அல்லதுஒருநாவலாசிரிய னாகவோ மட்டுமே பலருக்கும் இவரைத் தெரிந்திருக்கும் என நம்புகின்றேன். ஆனால் பல்துறை சார்ந்த பட்டறிவும், கூரிய தேடலும், பரந்த வாசிப்பு நாட்டமும், சீரிய சமூக சிந்தனையும், நேரிய விடுதலை உணர் வும், ஒடுக்கு முறைகளுக்கு எதிரான செயற் துணிவும், தான் வாழும் சமூகம் பற்றிய நேசிப் பும்.. என நீண்ட பட்டியலில் அடை யாளப்படுத்தப்படக்கூடிய ஒரு படைப்பாளி என்பதாகவே அவர் எனக்குள் பதிவாகிப் போயிருந்தார். அவர் பற்றிய இத்தகைய மனப் பதிவும், ஒரு சமூக மாற்றத்துக்கான படைப் பாளிக்கும், மக்களுக்கும் இடையில் பல மாக கட்டியெழுப்பப்படவேண்டிய ஊடகத் துறை சார்ந்து அவரிடம் இருந்த அபரிமித மான ஆற்றலுமே அவர் பால் என்னை ஆழ மாக ஒட்ட வைத்திருந்தது என்று நம்பு கின்றேன். இன்றுவரை அந்த ஒட்டுதல் நின்று நிலைப்பதற்கும், சார்புச் சிந்தனைகள் அற்று சுய சுதந்திர வெளிகளில் நின்று கருத்துப் பரிமாற்றம் புரிவதற்கும் அதுவே பிரதான அச்சாக இருந்திருக்கின்றது என்றும் நம்பு கின்றேன்.

சிறு வயது முதலே இலக்கியம், நுண் கலைகள் மற்றும் நாடக அரங்கியல் துறை களில் அனுபவமும், ஆர்வமும் இருந்த எனக்கு ஊடகத் துறை சார்ந்த அகலக் கதவு- களை மெல்லத் திறந்து விட்டு, நிதானமாக என்னைப் புடமிட்டுவிட முனைந்தவர் தான் இணுவையூர்சிதம்பரதிருச்செந்திநாதன்அவர் கள். ஊடகத் துறை என்பது மிகச் சாதாரண- மாக எடுத்தாளக்கூடிய ஒரு துறையோ அல் லது மிக எளிமையாக பரீட்சயப்பட்டுவிடக் கூடிய ஒரு துறையோ அல்ல என்பதை இன்று எம்மில் எத்தனை பேர் புரிந்துவைத்திருக் கின்றோம் எனத் தெரியவில்லை. கம்பெடுத் தவன் எல்லாம் வேட்டைக்காரன் என்பது போலவும், சலங்கை தொட்டவன் எல்லாம் நடராஜன் என்பதைப் போலவும், வாய் இருப்பவன் எல்லாம் பேச்சாளன் என்ப தைப் போலவும், இன்று பாசாங்கு சார் ஊடக தர்மமும் விழுமியமும் மட்டுமே எங் களில் பெரும்பாலானவர்களிடம் வந்து ஒட்டிக்கிடக்கின்றது. தகவல் தொழில் நுட்பத்தின் வீரிய வளர்ச்சியும், இணைய வலைப்பின்னலும், இணையத்தளங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுத்தன்மையும் இன்று யார் வேண்டுமானாலும், ஊடகவியலாளன் ஆகிக்கொள்ளலாம் என்றும், எதை வேண்டுமானாலும் எடுத்துரைக்கும் மரபு "ஊடகமரபு" என்றும், எப்படி வேண்டுமானாலும் ஊடக ஒழுங்கு இருந்து விடலாம் என்றும் நாங்கள் எண்ணிக் கொள்ளும் அளவுக்கு இந்தத் துறையினை மலினப் படுத்தியிருக்கின்றது என்றே கூறவேண்டும்.

ஆனால் சிதம்பர திருச்செந்திநாதன் என்ற இந்த படைப்பாளி மிகத் தெளிவான ஊடக சிந்தனையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு படைப்பாளி என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை என நினைக்கின்றேன். தான் வாழும், தான் நேசிக்கும் சமூகத்திற்கு "எதை சொல்ல வேண்டும்" என்ற பிரக்ஞையை விடவும் "எதை சொல்லிவிடக் கூடாது" என்ற தார்மீகப் பொறுப்பு ஒரு தேர்ந்த ஊடகவியலாளனுக்கு அல்லது படைப்பாளிக்கு இருப்பது அவசியம் எனக்கொண்டால், அந்த அவசியத்தைப் புரிந்து செயற்படும் படைப்பாளிகளில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் கோடிட்டு காட்டப்பட வேண்டியவரே.

இத்தகைய சமூகப் பொறுப்புமிக்க ஒரு ஊடகவியலாளனாக என்னையும் செதுக்குவதில் அவர் எடுத்துக் கொண்ட பிரயத்தனம் மிக அபரிமிதமானது. வானொலித் துறை, தொலைக்காட்சித் துறை, பத்திரிகைத் துறை போன்ற மிகப் பிரதானமான ஊடகம் சார் மூலக்கூறுகளுடன் பட்டுத் தேர்ந்தெழுவதற்கு செயற்பாட்டு அனுபவத்தினை மிக அதிகளவாக எனக்கு வழங்கியிருந்தார் என்றே கூற வேண்டும். இப்பொழுதும் நன்றாக நினைவிருக்கின்றது. முதன் முதலில்நான்எழுதியவானொலிநாடகப்பிரதியை அவர் பதின்மூன்று தடவைகள் நிராகரித்து விட்டமை. ஆனால் அதனை நிராகரிப்பதற்கு அவர்கையாண்டமுறைமை, அந்தமுயற்சியை அத்துடன் கைவிட்டுவிட வேண்டும் என்ற முடிவை எடுப்பதற்கு என்னைக் கொண்டு செல்லாது மீள மீள மூளைச்சலவை செய்த படி புதிய நுட்பங்களோடு படைக்கும் புத்துணர்வை தந்திருந்தது. "இப்படித்தான் பார்" என அவர் ஒரு போதும் சொன்னதில்லை. "இப்படியும் பார்க்கலாம்" என்பது போலவே அவருடைய ஒவ்வொரு அணுகுமுறையும் இருந்திருக்கின்றது. இந்த புடமிடுதல் தான் இன்று வரை புலம்பெயர் தேசங்களில் மக்கள் பேசும் அளவுக்கு ஊடகத்துறை சார் பணிகளை நேர்த்தியாக ஆற்றுவதற்கு எனக்கு தெம்பு தருகின்றது என்றே கருதுகின்றேன். என்னைப் போலவே வளர்ந்து வரும் அல்லது வளரத்துடிக்கும் பல இளம் படைப்பாளிகளை இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் உருவாக்கியிருக்கிறார் என்பது அவரது கடந்த கால வழித் தடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு கலைஞனாக, படைப்பாளியாக, ஊடகவியலாளராக செயற்படுவதென்பது வேறு அத்தகைய செயற்பாட்டுக்கு அடுத்த தலைமுறையை உருவாக்குவது என்பது வேறு. இந்த இரண்டு தளங்களிலும் ஒரே காலப்பகுதியில் இயங்கிச் சாதித்தவர்கள் எம்மில் மிக மிக குறைவு. பிரபல்யத் தளங்களில் தம்மை மட்டுமே ஆயட்காலம் முழுதும் தூக்கிவைத்துப் பார்க்க முனையும் எமது முன்னோடிகள், ஜாம்பவான்கள், வித்தகர்கள், வரிசையில் திருச்செந்திநாதன் அவர்கள் தனியாகத் துருத்தித் தெரியும் ஒரு வித்தியாசமான படைப்பாளியும் படைப்பு சார் ஊக்கியும் என்றே நான் கருதுகின்றேன். இந்த அற்புதமான மனிதருக்கு எனது அன்பையும் வாழ்த்துக்களையும் மனதார தெரிவித்து நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. நிஷாகரன்
மாகாண கல்வி அமைச்சு



இலக்கியக் காரர்களுடனான அறிமுகம் எப்போதும் நல்லதொரு பொழுதை நகர்த்திக்கொண்டிருக்கும் அந்த உபயோகமுள்ள பொழுதுகள் சந்தோசிப்புக்களை கொண்டன வாகவே அமையும்.

செந்தி அண்ணையுடனான அறிமுகம் நண்பர் சத்தியமூர்த்தி யின் தொடர்பின்பாற்பட்டது. அதனூடே இராதேயன் அண்ணை, கை.சரவணன், முல்லைக் கமல், வேலணையூர் சுரேஸ், ஜோசப் அண்ணை, இன்னும் பலர்.

இரண்டாயிரங்களின் ஆரம் பத்தில் நான் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் நியமனம் பெற்ற காலம் அப்போது புதுக்குடி யிருப்புத்தான் எமக்கு எல்லாமுமே. இடப்பெயர்வு வாழ்வெனினும் வசந்தமான காலமாகவே அக் காலம் மனதோடு நினைவுகளாய்... எந்தவொரு கஷ்டங்களும் நஷ்ட மாய் தெரியவில்லை. வன்னிப் பெருநிலத்தின் அனேக மக்களின் தேவைகளைநிறைவு செய்யக்கூடிய ஒரு நிர்வாக நகரமாக கொண்டி ருந்தது புதுக்குடியிருப்பு.

முதன்முதலில் ஈழநாடு பத் திரிகை அலுவலகத்தில் அண் ணையை சந்தித்தேன். எனது நண்பர் ஒருவர் ஈழநாடு நடத்திய பொது அறிவுப் போட்டி யில் பரிசு பெற்றிருந்தார். அதைப் பெறுவதற்காக சென்ற போது சத்திய மூர்த்தி இவர்தான் பத்திரிகையின் ஆசிரியர் சிதம்பர திருச்செந்தி நாதன் என்று அறிமுகம் செய்கிறார். பரிச்சயமான பெயர் அறியப்பட்ட எழுத்தாளர்என்னவகையில், ஆனால் அந்த ஊரின் பெயரை அடைமொழி யாக சொல்ல எத்தனிக்கிறேன் அப் போது சத்தியமூர்த்தி இணுவையூர் என்று சொல்லி முடித்தார்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஊரினதும் தந்தையினதும் பெயரை தன் பெயரோடு இணைத்து முத்திரை பதித்திருக்கிறார். மூத்த படைப் பாளிகளின் வரிசையில் எல்லோ ராலும் அறியப்பட்ட ஓர் எழுத் தாளராக இன்னும் வலம் வருகிறார்.

நான் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் "எழு" கலை இலக்கியப் பேரவையின் வழிநடத்தலுடன் வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து ஊட கத்துறை டிப்ளோமா பயிற்சி நெறி இணைந்து நடத்தப்பட்டது. இரண்டு அணிகளிலும் 100 பேர் வரையில் பயிற்சி பெற்றிருந்தனர்.

இந்த பயிற்சி நெறி முழுமை பெற சத்தியமூர்த்தி தீவிரமாக செயற் பட்டார். அலுவலக ரீதியாக என்னு டன் தொடர்புடைய விடயமா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையால் நானும் சத்தியமூர்த்திக்கு பக்கத் துணையாக இருந்தேன். இதற்கு பின்னிற்று உழைத்தவர்கள் செந்தி அண்ணையும் இரா-தேயன் அண்ணாவும்.

இந்த வகுப்பில் செந்தி அண்ணை சிறு கதை, நாவல் தொடர்பான தனது பட்ட றிவுகளை எங்களுக்கு பாடமாக்கினார். பிர-யோசனமான வாசிப்புக்களை எப்படி இனங்காண்பது போன்ற தங்கள் அனுபவத் தின் செல்நெறிகளை எங்களுக்கு சொல்லித் தந்தனர்.எதை வாசிக்க வேண்டும் என்ற ஆரம்ப அறிவே அதிலிருந்தே ஏற்பட்டது.

இங்கே பயிற்சி பெற்ற பலர் புலம் பெயர்ந்து உலகமெங்கிலும் இருக்கின்றனர். அவர்கள் ஊடகத்துறையில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது ஒரு நல்ல செய்தியாக கொள்ள வேண்டும்.

இன்னொரு விடயம் கோடிட வேண் டும். இப் பயிற்சியின் போது எம்மால் வெளி யிடப்பட்ட "பூராயம்" சஞ்சிகை எல் லோராலும் விதந்து பாராட்டப்பட்டது. எம் மிடம் குறைந்த வளத்துடன் ஒரு கணதியான வெளியீடாகவே பார்க்கப்பட்டது. அது கொண்டு வந்த மாற்றமும் கனதியானது.

செந்தி அண்ணையுடன் எனக்கு ஏற் பட்ட உறவு எழுத்துலகம் சார்ந்த தொடர் பல்ல. நான் எழுத்தாளனுமல்ல, விமர்சகனு மல்ல. ஒரு தேர்ந்த வாசிப்பாளன் என்பதற்கு அப்பால் வேறொரு தகுதியுமில்லை. இன் னும் அவருடைய படைப்புக்களை நான் வாசித்ததுமில்லை. ஓரிரண்டு சிறு கதை-களைத் தவிர காலம் சில நல்ல மனிதர்களை எம்மிடம் கைகோர்த்து விடுகின்றது. அந் தக் கைப்பிடியை நான் இறுக்க பற்றிக் கொண்டிருக்கிறேன்.

எழுத்தாளர்களுடன் நாம் பழக வேண்டும் அவர்களிடம் இருக்கும் சரக்குகள் எமக்குக் கிடைக்கும் என்ற அங்கலாய்ப்பு தொடர்கள் இருக்கும் வரை உறவுகள் நீடித்துக்கொள்ளும். அண்ணையுடன் அப் படிப்பட்ட ஓர் எதிர்பார்ப்பு இருந்தாலும் இன் னொரு பக்கமும் அறியக்கிடக்கிறது. அவர் தம் குடும்பத்தை இயக்கும் விதம் அடிக்கடிச் சொல்லுவார் "சமநேரத்தில் எல்லாம் சமாந் தரமாகச் செல்ல வேண்டும். இதற்குள் நிறைய அர்த்தம் கொண்டுள்ளேன். அண்ணையின் குடும்பத்தின் அழகை நான் வெகுவாக இரசித்திருக்கிறேன். நல்லதொரு தந்தையாக பாத்திரமிட்டுக் கொள்ளக் கூடிய உணர்வு என்னுள்ளே பொதிந்துள்ளது.

உண்மைக்கும் பொய்மைக்கும் இடை-யில் போராடி உண்மைகளை அடைய முடி யாமல் பொய்மையிடம் சரணாகதி அடைந்த பலரை நான் அறிந்திருக்கிறேன். மாற்றுத் தெரிவின்றி வீழ்ந்தார்களோ அறியேன். ஆனால் தன்மானத்தை உண்மையின் மேல் வைக்க வேண்டும். அப்போதுதான் சொல்லும் செயலும் ஒரே வழியில் பயணிக்கும். இவ் வாறே பரிணமிக்கக்கூடிய சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு கண்டிராத ஒரு பொறுப்புள்ள மனிதனாக அண்ணையை நான் பார்க்கிறேன்.

இரத்தமும் சதையும் கோரமாக வெளித் தெரியும் படைப்புக்கள் சமூகத்தில் வன்முறைகளை வளர்க்குமே தவிர மாற் றங்கள் எதையும் கொண்டு வராது என்பதை மிகத் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார். எப்போது படைப்புகள் ஆரோக்கியமான சமூக மாற்றங்களை அறுவடை செய்யும் கருவி களாக பயன்பட வேண்டுமென எதிர்பார்த்து காத்திருக்கும் ஒரு படைப்பாளி. அவரு டைய இந்த பகிர்வு எமக்கு அழுத்தமாக பல விடயங்களை சொல்லும் செய்தியாக பதி வாகிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. தே. புரட்சிதாசன்
ஊடகவியலாளர்



பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் நண்பர்கள் நூலகம் எனதிரிந்துகொண்டு இருந்த வேளை அப்போது வன்னி மண்ணில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகள் என்றால் ஈழநாடு, அதில் மூன்று ஈழநாட்டை அன்றாடம் வாசித்துக்கொள்ளும் எனக்கு ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த தகவல் என்னை பத்திரிகை துறைக்குள் செல்லவைத்தது எனலாம்.

பயிற்சி பத்திரிகையாளராக சேர்ந்துகொள்ள விண்ணப்பம் கோரப்படுகின்றது என்றதகவலைப் பார்த்த நான் ஈழநாடு பத்திரிகைக்கு விண்ணப்பம் செய்திருந்தேன். சில நாட்கள் கழித்து ஈழநாடு பத்திரிகையின் காரியாலயத்திற்கு வருமாறு அறிவித்தல் வந்திருந்தது.

அழைக்கப்பட்ட நாள் அன்று பத்திரிகை காரியாலயத்திற்கு சென்ற போது, அங்கு நின்றவர்கள் என்னிடம் வந்த நோக்கத்தினை கேட்டறிந்துகொண்டு, என்னை இருக்குமாறும் "ஆசிரியர் வெளியில் சென்று விட்டார் வந்து சந்திப்பார்" என கூறினார்கள். எனக்கு தரப்பட்ட இருக்கையில் அமர்ந்துகொண்டு அங்கு நடப்பவற்றை அவதானித்துக்கொண்டு இருக்கும்போது ஒருவர் வந்து என்ன விடயமாக வந்திருக்கின்றீர்கள் எனக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் எனது நோக்கத்தினை கூறினேன். நான் கூறியவற்றை எல்லாம் கேட்டவர். பத்திரிகையில் ஏதாவது எழுதியிருக்கிறீர்களா எனக் கேட்டார். அவ்வப்போது சில கவிதைகள், கதைகள் எழுதி இருக்கின்றேன். ஆனால் பெரிய அளவில் பிரசுரமாகவில்லை எனக் கூறினேன். நான் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டு இருந்தவர் சிரித்துக்கொண்டு உங்களின் குட்டி கதை ஒன்று இந்த வாரம் வெளிவரவுள்ளது தெரியுமா? எனக் கேட்டார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆம் அவர் குறிப்பிட்டது சில வாரங்களுக்கு முன் ஈழநாடு பத்திரிகைக்கு நான் எழுதி அனுப்பிய "கோழி குஞ்சு" என்ற குட்டி கதைதான்.

எனக்கு சிறிது நம்பிக்கை பிறந்தது. என்னையும் இங்கே சேர்த்துக்கொள்வார்கள். இருந்தும் அவர் கூறிய தகவல் கலங்க வைத்தது. இருங்கள் அண்ணை வந்தப்பிறகு அழைக்கின்றென் என்று கூறிவிட்டு தனது வேலையில் மூழ்கிவிட்டார். நான் அவர் யாராக இருக்கும் என அறியும் ஆவலில் வெளியில் இருந்த முகாமையாளரிடம் (யோகன் அண்ணாவிடம்) கேட்டபோது அவர் கூறினார் இப்போது வந்து போனவர் தான் இந்த பத்திரிகையின் சிரேஸ்ட உதவி ஆசிரியர். (அவர்தான் எம்மைவிட்டு பிரிந்த ஊடகவியலாளர்பு. சத்தியமூர்த்தி) அப்போது அண்ணை என்று குறிப்பிட்டவர். என வினாவியபோது அவர்தான் இந்த பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எனக் குறிப்பிட்டார். வரப்போகின்றவர் எப்படியிருப்பாரோ தெரியாது குழப்பத்துடன் இருந்தேன். திடீர் என மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கியவர் கை நிறைய பைல்களுடன் உள்ளே சென்றார். இவர்தான் பிரதம ஆசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எனக் கூறினார் முகாமையாளர்.

உள்ளே இருந்து வந்த ஒருவர் என்னை ஆசிரியர் அழைப்பதாக கூறினார். உள்ளே சென்று என்னை அறிமுகம் செய்துகொண்டதை தொடர்ந்து ஆறு மாதம் பயிற்சி பத்திரிகையாளராக இணைந்து கொண்டேன். ஆறுமாதங்கள் நிறைவின் பின் அலுவலக நிருபராக நியமன கடிதத்தினையும் எனக்கு வழங்கினார்.

இவ் ஆறுமாத பயிற்சியின்போது நான் பெற்றுக்கொண்ட அனுபவம் என்கின்ற போது வெறும் பத்திரிகைக்கான பயிற்சி இல்லாமல் சிறந்த ஒரு நிர்வாகத்துக்கள் பணி புரிந்து இருக்கின்றோம் என்ற திருப்தி இப்போது ஏற்படுகின்றது. அலுவலகத்துக்கு கடமைக்கு நேரத்திற்கு வருதல், பிறருடன் உரையாடல் போன்ற ஒவ்வொரு விடயத்திலும் எம்மை உன்னிப்பாக கவனித்து வழிநடத்தி செல்வதில் கவனமாக ஆசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் இருந்து வந்தார். கடமை நேரங்களில் கடுமையாக இருந்தாலும் பின்னர் கூப்பிட்டு அன்பாக கதைப்பதால் அச்சு கோப்பாளர்கள் தொடக்கம் ஆசிரியர் பீடம் வரை அவரினை அன்பாக அண்ணை என்று அழைக்கும் வகையில் அன்பாக நடந்துகொள்வார். ஆசிரியரும் எம்மை விட்டு பிரிந்த சத்தியமூர்த்தி அண்ணாவும் ஈழநாடு பத்திரிகையை நடத்திச் செல்வதில் எடுத்த முயற்சிகள் எழுத்தில் எழுதிவிட முடியாதவை.

ஈழநாடு பத்திரிகைக்கு படைப்புகள் அனுப்பி தரமற்றவை என வைக்கப்படடதை நான் அறியேன். படைப்பாளர்களின் படைப்புகள் தரமற்றவை என்ற வார்த்தையை ஆசிரியர் கூறியதாக நான் அறியமாட்டேன்.

பத்திரிகைக்கு அனுப்பப்பட்ட பல படைப்புக்களில் திருத்தங்கள் இருந்தால் படைப்பாளிகளின் இலத்திற்கு சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் படைப்புகள் திருத்தப்பட்டு பிர சுரம் செய்யப்படட சம்வம் நிறைய இடம் பெற்றன. ஆசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் அவர்களினால் களம் அமைத்துக்கொடுக்கப்பட்டவர்கள் இன்று சிறந்த ஊடகவியலாளராக கவிஞர்களாக எழுத்தாளராக திகழ்கின்றார்கள்.

ஈழநாடு பத்திரிகை வாரமலராக வந்துகொண்டிருந்த நேரம் காலையில் இருந்து மாலைவரை எல்லாம் எல்லா பக்கங்களின் page proof ஆசிரியர் பார்த்துவிட்டுச் சென்று விடுவார். இறுதிப்பக்கம் இரவு 8மணிக் குத்தான் அவருக்கு அனுப்பப்படும். உதவி ஆசிரியர் சத்தியமூர்த்தி அண்ணா இறுதி பக்கத்தினை என்னிடம் எடுத்து தருவார். ஆசிரியரிடனம் காண்பிப்பதற்கு. அப்போது ஆசிரியர் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் இருந்தார். சைக்கிளையும் எடுத்துக்கொண்டு ஆசிரியரின் வீட்டிற்கு செல்வேன். ஆசிரி யர் எந்த விடயத்திலும் மிகவும் கவனம் எடுத் துச் செய்வார். எழுத்தாளர்களை சந்திப்பது கலந்துரையாடல் மேற்கொள்ளல் என்பவற் றுக்காக அழகான கொட்டில் அமைத்திருந் தார். அதற்கு அன்பாக வைத்திருந்த பெயர் "சிதம்பரக்குடில்" குடிலில் எம் வருகைக் காக இரண்டு லாம்புகள் எரிந்து கொண்டு இருக்கும். நாங்கள் கொண்டு செல் லும் பக்கங்களை எல்லாம் பார்த்துவிட்டுத் தருவார். மீண்டும் அலுவலகம் வந்து பிழை கள் திருத்தப்பட்டு இரவு இரவாக பத்திரிகை அடிக்கப்பட்டு விடிய 5 மணிக்கு எல்லாம் விநியோகத்திற்கு அனுப்பிவிடுவோம். பொது வாகவே எல்லோருக்கும் அன்று விடு முறை. அன்று ஆசிரியர் அலுவலகம் வர மாட்டார். நான் சத்தியமூர்த்தி அண்ணா காந்தன், சிறி எல்லோரும் பத்திரிகையை எடுத்துக்கொண்டு ஆசிரியர் வீட்டிற்கு செல்வோம். எம்மைக் கண்டவுடன் சிரித்து வரவேற்பார். அவரின் சிரிப்பும் வரவேற்பும் நாங்கள் இரவு இரவாக உறக்கம் இல்லாமல் வேலை செய்ததின் களைப்பு கூடந்த நாட்களில் வாங்கிய பேச்சுக்குள் எல்லாவற்றையும் மறக்கச்செய்துவிடும். அன்று முழுக்க நாட்டு நடப்பு கலை இலக்கிய செயற்பாடுகள் அடுத்த இதழ் பற்றியதாக இருக்கும்.

ஆசிரியரின் பணியை எழுதிக் கொண்டு இருக்கலாம். வைத்தியரின் ஆலோ சனைக்கு அமைவாக அவரினை ஓய்வு எடுத் துக்கொள்ளுமாறு பல முறை கூறியபோதும் அவற்றினை செவிமடுக்காது தொடர்ந்தும் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு வந்ததையும் சில சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைப் படுக் கையில் இருந்த வண்ணம் கூட அடுத்த வாரத் துக்கான பத்திரிகைக்கான தயார்ப்படுத்தலை ஆசிரியர் செய்ததையும் இங்கே நினைவு படுத்திக்கொள்ளலாம்.

இறுதியாக விவசாயிகளின் மேம் பாட்டை பிரதிபலிக்கும் வகையில் வன்னி மண்ணில் இருந்து பொருண்மியச் செய்திகள் என்ற பத்திரிகையின் ஆசிரியப்பணி இவரி டம் வழங்கப்பட்டபோது என்னையும் இணைத்துக்கொண்டு பல தரமான படைப் புக்களை வெளியிடுவதில் மிகவும் ஆர்வமாக செயற்பட்டார். இவ்வாறாக செயற்பட்டு இன்று அறுபது வயதில் கால்பதித்தும் இன் றும் கலை இலக்கிய செயற்பாட்டில் ஈடு பட்டு வருகின்றார். இவ்வாறான சிறந்த ஒரு பத்திரிகை ஆசிரியரின் வழிநடத்தலில் பணிபுரிந்ததால் இன்று ஊடகத் துறையில் சிறந்த முறையில் ஈடுபடமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்
சிறுகதைத் தொகுப்புக்களுக்கான
முன்னுரைகள்

- **பேராசிரியர் நா. சுப்பிரமணியன்**
- **பேராசிரியர் கா. சிவத்தம்பி**
- **பேராசிரியர் சி. சிவசேகரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் தொகுப்பு

வெட்டுமுகம்

முதற் பதிப்பு

ஆகஸ்ட் - 1993

வெளியீடு

தேசிய கலை இலக்கிய பேரவை.

அணிந்துரை

கலாநிதி நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர் தரம் - 01
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம், இலங்கை.

நவீன தமிழிலக்கியத் துறைகளில் சமூகப் பொறுப்புணர்வுடனும் அயரா ஊக்கத்துடனும் செயற்பட்டுவரும் ஈழத்து எழுத்தாளர்களில் தனிக் கவனத்துக்குரியவர்களுள் ஒருவராகத் திகழ்பவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள். புனைகதைத் துறையில் தனி ஈடுபாடு காட்டிவரும் இவர் 1970 களில் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்தவர். இவரது எழுத்தாக்கங்கள் பல ஏற்கெனவே நூல் வடிவு பெற்றுள்ளன. இப் பொழுது நூல் வடிவம் பெறும் இத்தொகுதி ஈழத்தின் முன்னணி இதழொன்றில் வீரகேசரியில் 1980 -90 காலப்பகுதியில் பிரசுரமான பதினொரு சிறு கதைகளின் தொகுப்பு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெட்டுமுகம்" என்ற தொடர் ஒரு திண்மப் பொருளின் 'குறுக்குவெட்டு"க் காட்சியைச்சுட்டி வழங்குவது இங்கே இத்தொடர் ஒரு சமூகத்தின் - ஈழத்து யாழ்ப்பாணப் பிரதேச சமூகத்தின் உள்ளார்ந்த குணாம்சம்களின் குறுக்குவெட்டுக் காட்சி என்ற கருத்தில் ஒரு குறிப்பிட்ட கதையின் தலைப்பாகவும், நூல் முழுமைக்குமான பொதுத் தலைப்பாகவும் அமைந்துள்ளது. இதில் அமைந்த கதைகள் மேற்குறித்த ஆண்டுகளில் அப்பிரதேச சமுதாயத்தில்நிலவிவந்துள்ளபிரச்சினைகளில்சிலவற்றை அவற்றுக்கு அடிப்படைகளாகவுள்ள உணர்வு நிலைகளுடன் புலப்படுத்த முற்பட்டுள்ளன என்றவகையில்தலைப்பு பொருட் பொருத்தமுடையதாகவே கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாணப் பிரதேசம் என்றவுடன் இன்று எமக்கு முதலில் நினைவுக்கு வருவது அதன்போர்ச் சூழலாகும். இது கடந்த ஏறத்தாழப் பதினைந்தாண்டு காலப்பகுதியில் முனைப்புற்று வந்த ஒரு நிலையாகும். இச்சூழல் உருவாவதற்கு முன்பிருந்தே அம்மண்ணில் பாரம்பரியமாக நிலவிவந்து, இன்றும் தொடரும் சமூகப் பிரச்சினைகள் சில உள. சாதிமுறை, சீதன வழக்கம் முதலியனவாக இவற்றைச் சுட்டலாம். கடந்த ஏறுத்தாழ இருபதாண்டுகட்கு மேலாக இனப் பிரச்சினையின் கொதிநிலைச் சூழலில் உருவாகி முனைப்புற்ற பிரச்சினைகளும் இம்மண்ணில் உண்டு.

கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் ஏற்பட்ட தேக்க நிலைகளால் அயல்நாடுகளை நோக்கிப் புலம்பெயரும் நிலைமைகளால் போர்ச் சூழலில் உடமைகளை இழந்து புகலிடம் தேடி அயல்நாடுகளுக்குத் தப்பிச் செல்லும் அவலம், அழிப்பு முயற்சிகளுக்கு மத்தியில் இந்த மண் எங்களின் சொந்தமண் என்ற பற்றுறுதியுடன் வாழ்வோர் எதிர்கொள்ளும் துன்ப துயரங்கள் முதலியனவாக இவற்றை வகைப்படுத்தலாம். இவ் வாறான பொதுநிலைப் பிரச்சினைகள் மட்டுமன்றி மனித சமூகம் அனைத்துக்கும் பொதுவான தனிமனித குணாம்சங்களான பொய்ம்மை, பொறாமை, பொருளாசை, அந்தஸ்துணர்வு முதலிய வற்றால் எழும் பிரச்சினைகளும் உள.

மேற்குறித்தவாறான பிரச்சினைகளுட் சில குறிப்பாக பொய்ம்மை, பொறாமை, பொருளாசை சீதன வழக்கம், இனப் பிரச்சினையின் கொதி நிலைச் சூழலின் அவலங்கள் முதலியன சமூகத்தில் நிகழ்த்தி வந்துள்ள பாதிப்புக்களை சிதம்பர திருச்செந்திநாதனின் இக்கதைகள் சித்தரிக்கின்றன. முதல் நான்கு கதைகள் பொதுவான தனிமனித குணாம்சங்களான பொய்ம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றின் சித்திரங்கள் ஐந்தாவது கதை சீதன வழக்கத்தின் பகைப் புலத்தினாலான படைப்பு. அடுத்துவரும் ஐந்து கதைகளும் இனப்பிரச்சினை இனக்கொலையாக மாறிவிட்ட சூழலின் பிரசவங்கள். மண்வாசனை என்ற தலைப்பில் அமைந்த இறுதிக்கதை ஏனைய கதைகளிலிருந்து வேறுபட்டு, பொதுவான சில மனோபாவங்களை உணர்த்தி நிற்பது.

கோஷமும் வேஷமும், ஆரோகணம் அவரோகணம், முகமூடி மனிதர்கள், குட்டையும் மட்டைகளும் ஆகிய கதைகள் சமூகத்தில் ஒருவர் அல்லது சிலரிடம் நிலவும் போலித்தனங்களையும் அவர்களால் சமூகம் எய்தும் ஏமாற்றங் களையும் உணர்த்தும் நோக்கின. இவற்றுள் குறிப்பாக 'கோஷ மும் வேஷமும்" கதை தனிக் கவனத்துக்குரியது. சமூகத்தைச் சுரண்டி வாழும் சுயநலமிகளுக்கு சமயம், தத்துவம் முதலிய பண்பாட்டு மூலங்கள் எவ்வாறு துணைபோகின்றன என்பதை இது உணர்த்தி நிற்கிறது. சமயம், தத்துவம், கலை இலக்கியம் முதலிய பண்பாட்டுக் கூறுகள் மனித நேயத்தை வளர்க்கவும் செயலூக்கத் துக்கு வழிப்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஆனால் நடைமுறையில் பெரும்பான்மையும் நேரெதிரான விளைவுகளை நோக்கியே இவை இட்டுச்செல்லப்படு கின்றன. சமூகத்தைச் சுரண்டிவாழும் சிலருக்கு இவை விளம்பர மேடைகளாக அமைகின்ற முரண்நிலையை நாம் நேரடியாகப் பலகாலமாக அவதானித்து வருகிறோம். இத்தகு ஒரு நிலையைத்தான் சிதம்பர திருச்செந்திநாதன் இக்கதைமூலம் நம்முன் காட்சிப்படுத்தியுள்ளார். 'ஆரோகணம் அவரோகணம் கதை வளர்த்து வரும் கலைஞரொருவரை வாழ்த்த மனமற்றுக் குறைகூறும் கலையுலகப் பிரமுகரொருவரின் முகத்திரையைக் கிழித்துக் காட்டுவது. இவ்வாறே முகமூடி மனிதர்கள், குட் டையும் மட்டைகளும் ஆகிய கதைகளும் சமூக மாந்தர் சிலரின் மனக்கோணல்களின் விமர்சனங்களாக அமைகின்றன.

சுவையாக அமையவேண்டிய மணவாழ்வு சுமையாக மாறுவதற் கான சமூகக் காரணிகளுள் முக்கியமான ஒன்று சீதன வழக்கம். அன்புப் பிணைப்பை விழைந்து நிற்கும் பெண்மையுணர்வு கள், சீதன முறையால் சுட்டெரிக்கப்படுவதைச் 'சேர்ந்தோம் வாழ்த்திடுவோம்" கதை சித்திரிக்கிறது.

இனக் கொலைச் சூழலில் எழுந்த கதைகளில் 'எந்தையும் தாயும்', 'வீட்டை மட்டுமல்ல' ஆகிய இரண்டும் உயிருக்கும் உடமை களுக்கும் பாதுகாப்பற்ற அவலநிலையின் சித்திரங்கள், இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறைச் சூழலில், நோயுள்ள தாய்க்கு மருத்துவ வசதி ஏற் படுத்த முடியாத நிலையில், அவளை இழந்து தவிக்கும் ஒரு மகனின் உணர்வோட்டத்தில் எந்தையும் தாயும் கதை அமைகிறது.

வயிற்று வலிக்கு விமானத்தில் மருத்துவர் வந்து மருந்துவம் பார்க்கும் வசதிபடைத்த (அவுஸ்ரேலிய) நாட்டின் பகைப்புலத்தில் இந்த உணர்வு விரிந்து செல்கின்றது. விமானங்களிலிருந்து ஷெல் முதலியவற்றால் அழிவுகள் ஏற்பட்ட நிலையிலும் மனம் கலங்காத பக்குவநிலை 'வீட்டைமட்டுமல்ல' கதையின் உள்ளீடாக அமைந்துள் ளது. காணிக்கு வேலி உண்டு என்ற கதை யாழ்ப்பாண மண்ணில் பாரம்பரியமான சொத்துடைமை மனோபாவம், புதிதாக அயல் நாட்டுப் பணவரவால் உருவான அந்தஸ்துணர்வு என்பவற்றைப் பொருத்திக்காட்டுவது நாட்டுரிமைக்காகப் போராடும் இயக்கங்கள் உருவாகி வளரும் சூழலிலும் அம்மண்ணின் வேலிச்சண்டை முடி யாத நிலை முரண்சுவையுடன் இக்கதைகளில் வெளிப்படைகிறது. போராட்ட இயக்கங்களின்உருவாக்கத்தைமறுக்கும்உணர்வோட்டங் களும் மேற்படி சொத்துடைமை, அந்தஸ்துணர்வு நிலைகளில் உள்ளுறைந்திருந்தமையையும் ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

கடந்த ஏறத்தாழ கால் நூற்றாண்டுக் காலப்பகுதியில் யாழ்ப் பாணப் பிரதேச இளைய தலைமுறையினர் பல்வேறு சந்தர்ப் பங்களில், பல்வேறு நோக்கங்களோடு நாட்டைவிட்டுப் புலம் பெயர்ந்த நிலைமைகள் பற்றிய நினைவோட்டமாக வெட்டுமுகம் என்ற கதை திகழ்கிறது. பிறந்த மண்ணில் மனநிறைவுடன் வாழ முடியாமை என்ற அவலம் இக்கதையின் அடிநாதமாக ஒலிப்பதை உணரமுடிகிறது.

'என்று மடியும் எங்கள்' என்ற கதை பிள்ளைகளைப் பார்க்க பல மணி நேரமாகக் காத்திருக்கும் பெற்றோரின் துயரத்தையும் சலிப்பையும் சித்திரிப்பது. பிள்ளைகள் எங்கே போனார்கள்? எதற்காக எப்படி இந்த வினாக்களுக்கான விடை கதையில் இல்லை. அதை வெளிப்படையாகக் கூறும் சுதந்திரம் ஆசிரியருக்கு அன்று இல்லை. 1988 - 89 காலப்பகுதியில் அமைதிப்படையின் மேலாண்மைச் சூழலில் இளைஞர்கள் பலர் பள்ளிமாணவர்கள் உட்பட திடீர்திடீர் என காணாமற் போயினர். பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர் கட்டாய இராணுவ சேவைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர் அவ்வாறான அவலச் சூழலில் பெற்றோர் சமூகம் எய்திய துயர் இக்கதையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'மண் வாசனை' கதை சமூகத்தில் அபிப்பிராயங்களுக்கும் தனி மனித விருப்புக்கள் உணர்வுகள் என்பவற்றுக்குமிடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்நிலை காட்டும் ஒரு பொதுவான ஆக்கம் என்ற வகையில் ஏனைய கதைகளினின்று வேறுபட்டது.

மேற்படி பல்வேறு பிரச்சினைகளுடன் கூடிய சமூகத்தில் வெட்டுமுகத்தைக் காட்டும் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கும் போதகராகத் தம்மை காட்டிக் கொள்ளவில்லை. இவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள் என வாசகர்களை அழைக்கும் அளவோடு நிற்கிறார். சமூகம் சிந்திக்க முற்படுவதற்கு ஒரு தூண்டுகருவி என்ற வகையிலேயே தனது நிலைப்பாட்டை அவர் புலப்படுத்தியுள்ளார் என்பதையே இக்கதைகள் உணர்த்தி நிற்கின்றன.

கதைகூறும் முறையில் முரண்பட்ட நிகழ்ச்சிகளை அருகருகே பொருத்திக் காட்டல், உரையாடல், நினைவு மீட்டல், கடிதம் முதலிய உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக கதைகள் விவரணத்தன்மையுடையனவாக அமைந்துள்ளன. கதை மாந்தரின் இயல்பு, கதை நிகழ்சூழல் என்பவற்றை வாசகர் மனதில் பதிய வைக்க இவ்வாறான விவரணமுறைமை அவசியம் என திருச்செந்திநாதன் கருதுவதாகத் தெரிகிறது. ஆயினும் விவரண விரிவு கலை ரசனையுடைய வாசர்களுக்குச் சலிப்பூட்டுவதாகவும் அமையக்கூடியது என்பதையும் அவர் மனதிற்கொள்வது அவசியம்.

இவ்வகையில் சிறுகதை என்ற கலைவடிவம் இன்று எய்தியுள்ள கட்டமைப்புச் செம்மையின் பகைப்புலத்தில் நோக்கும் போது இத் தொகுதியிலுள்ள கதைகள் இன்னும் செப்பமாக இறுக்கம் உடையனவாக அமைந்திருக்கலாம் என்ற எண்ணம் எழுகின்றது. இதனையும் அவர் கருத்திற்கொள்வது இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிவதாக அமையும்.

ஈழத்தின் ஏறத்தாழ 60 ஆண்டுகால தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இத் தொகுதிக்குரிய இடம் என்ன என்பதை ஒப்பீட்டு நிலையில எடுத்துக்காட்ட இது சந்தர்ப்பமல்ல. ஆயினும் சமகால ஈழத்தின் ஒரு வெட்டு முகப் பார்வைஎன்ற வகையில் தனிக் கணிப்புக்குரிய ஒரு ஆக்கம் இது எனலாம். சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களின் சமூக அக்கறையும் படைப்பாற்றலும் தமிழிலக்கியத்தையும் அதனூடாகத் தமிழர் சமூகத்தையும் உயர்நிலைக்கு இட்டு வரவேண்டும் என்ற வாழ்த்துரையுடனும் வேண்டுகோளுடனும் இவ்வுரையை நிறைவு செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் தொகுப்பு

என்னுடையதும் அம்மாவினுடையதும்

முதற் பதிப்பு

ஆகஸ்ட் - 1993

வெளியீடு

தேசிய கலை இலக்கிய பேரவை.

அணிந்துரை

கார்த்திகேசு சிவத்தம்பி

நுண்கலைத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம். இலங்கை.

சமகால யாழ்ப்பாண வாழ்க்கையின் சிதறல்கள் இதுவரைகவிதையிற்பிடிக்கப்பட்டுள்ளஅளவுக்குப் புனைகதை வடிவத்தினுள் பிடிக்கப்படவில்லை என்ற கருத்துரை இப்பொழுது குறிப்பாகக் கடந்த 5,6 வருடங்களாக வலுக்குறைந்து வருவதைக் காணலாம். ஈழத்திலக்கியத்தின் புதிய பரிமாணமான புலம்பெயர் இலக்கியத்தில் இந்த மாற்றம் நிகழ்வதை அவதானிக்கலாம். "தொலைந்து" போன வாழ்க்கை பற்றிய 'புலம் பெயர்" நிலை மனப்பதிவுடன் 'ஒழுங்கு சேர்க்கப்படுவது உளவியல் ரீதியாக அதிக செயற்பாட்டு வலுவுள்ள ஒரு பண்பாகும். தூரம் அந்த மனப்பதிவுத் தெரிவுக்கு உதவுகின்றது எனலாம். ஈழத்தினுள்ளே இந்த மண்ணின் சுருதிக்கும் லயத்துக்கும் கட்டுப்பட்டு நிற்க வேண்டிய சூழ்நிலையில் புனைகதைக்கு வேண்டிய விடயநோக்கினை (புறநிலைப் பார்வையையும் பகுப்பாய்வுப் பண்பினையும் ஆக்கத்துக்குள்ளே கொண்டு வருவது என்பது படைப்பாற்றலுக்கான பெரிய சவாலாக இருக்கிறது. ஆனால் இங்கு இந்த வாழ்க்கை முறையின் பத்தாண்டுகாலத் தொடர்ச்சி (1983 முதல் தொடர்ந்து நடந்து வருவன) வாழ்க்கை முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தி வரும் பிரத்தியட்ச மாற்றத்தின் உணர்வுக் கூர்மையும், அவதானிப்பும் கொண்ட படைப்பிலக்கிய கர்த்தாக்களின் இலக்கியப் பதிவுணர்வில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. இதன் காரணமாகப் படிப்படியாக இப் பிரச்சினை பற்றி நேரடியாகப் பேசுகின்ற புனைகதைகள் இங்கு எழத் தொடங்கிவிட்டன. இந்தப் பத்தாண்டு காலத்தைப் பின்நோக்கிப் பார்க்கின்றபொழுது அத் தகைய ஒரு தொகுதி மேற்கிளம்பி வந்துள்ளமையைஅவதானிக் கலாம். அங்கொன்றும் இங்கொன்றாகப் பிரசுரமானவற்றை, தொகுத்துப் பார்ப்பதற்கு வேண்டிய இலக்கிய வரலாற்றுத் தேவை இப்பொழுது ஏற்படுகின்றது. சாந்தன், நந்தி, தெணியான், கோகிலா மகேந்திரன் முதலிய எழுத்தாளர்களின் கடந்த பத் தாண்டுகாலப் படைப்புகளை ஒழுங்கு சேர்க்கும் பொழுது இந்த உண்மை புலப்படும்.

இவர்களின் இளைய சகாவான, இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதனின் இந்தத் தொகுப்பு சமகால யாழ்ப்பாண வாழ்க்கை யின் (1983 முதல் வரும்காலப் பிரிவைச் சமகாலம் எனக் கொள்ள லாம்) மனித நிலைப் பிரச்சினைகளை வெளிக்கொணருகின்றது. இத்தொகுதியில் இடம்பெறும் எல்லாக் கதைகளுமே 1983 இற்குப் பின் வந்த சூழலைச் சித்தரிப்பவையே - சில 1983 இற்குப் பின் ஏற்பட்ட மாற்றங்களைக் கருவாகக் கொண்டுள்ளன. சில இந்த மாற்றங்களின் பின்னணியிலே நிகழ்பவை.

திருச்செந்திநாதனின் கருத்து நிலைத்தளத்தை முதலிற் புரிந்து கொள்ளவேண்டும். இந்த மண்ணில் நடைபெறும் வாழ்க்கை சிதறல்களுக்கு இதற்குள் நின்று கொண்டே முகங்கொடுக்க வேண் டும் என்ற ஒரு எண்ணத்துணிபு திருச்செந்திநாதனிடத்துத் துல்லிய மாகக் காணப்படுகிறது. இந்தப் பண்பு தொகுப்புக்குள் வந்த சிறு கதைகள் யாவற்றுள்ளும் இழையோடி நிற்கின்றது.

இந்த வாழ்க்கைச் சிதறுகை ஏற்படுத்திய மனித நிலைச் சோகங்களை திருச்செந்திநாதனின் இலக்கிய உணர்திறன் மிகச் சுலபமாக இனங்கண்டு கொள்கிறது. 'என்றும் தங்கள் நினை வினில் வாழும்" 'இருப்பு' 'இன்று - நாளை, யாரை நோவது' முதலிய சிறு கதைகளில் அது பளிச்சென்னத் தெரிகின்றது. சில விடயங்களில் கதையின் ஓட்டத்துள்ளிருந்து வராத உணர்ச்சிப் பதிகை தலையங் கத்தின் மூலமாக வெளிவருகிறது. (உதாரணம் யாரை நோவது) சிறு கதையின் ஆற்றலில் அதன் தலைப்புக்குரிய இடம் முக்கியமானது என்பது ஓர் முக்கிய இலக்கிய உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மனித நிலைச் சோகங்களினூடே வாழ்க்கைச் சவால் களை எதிர்நோக்கும் ஒரு தன்மையும் இழையோடி நிற்பதை அவதானிக்காமலிருக்க முடியாதுள்ளது.

தமிழ்ச் சிறுகதையின் இன்றைய வளர்ச்சி நிலையில், வெளி வரும் சிறுகதைகளின் 'அமைவு' எவ்வாறு உள்ளது என்று நோக்கப்படுவது அவசியமாகின்றது. இவ்வாறு நோக்கும் பொழுது கதையின் 'எடுத்துக்கூறல் முறை' (Narrative) என்படி அமைந்துள்ளது எப்படி மிக நுணுக்கமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திருச்செந்திநாதனின் கதைகள் ஆசிரியனின் மனப்பதிவுநிலை அவதானிப்பின் பின்னணியாக தோன்றும் எடுத்துக்கூறல் முறை யைச் சுட்டி நிற்கின்றன. நடந்தனவற்றையும், நிகழ்ந்து கொண்டி ருப்பனவற்றையும் வாசகனுக்கு எடுத்துச் சொல்கின்ற ஒரு முறைமை இங்கு காணப்படுகின்றது.

ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை இலக்கியம் இன்னும் பெரும்பாலும் இந்த எடுத்துக்கூறல் முறைமையையே கொண்டுள்ளது. இதற்கு விதிவிலக்காக எழுதும் சில எழுத்தாளர்கள் உள்ளனர் என்பதையும் பதிவு செய்தல் அவசியம்.

இந்த எடுத்துக்கூறல் முறைமை தொடர்வதற்கு முக்கிய காரணம் யதார்த்தவாதம் ஈழத்திலக்கியத்தின் அடிப்படை இலக் கியக் கொள்கையாக இருந்து வந்துள்ளமையே. ஐம்பது கள் முதல் வெளிவந்து கொண்டிருந்த படைப்புகளை நோக் கினால், அவற்றில் இந்தச் சமூகத்தின் கூற்று நோக்கப்பட வேண்டியனவாகவுள்ள சில அம்சங்களைக் கோடிட்டுக்காட்டும் ஒரு ஆசிரிய நிலைப்பாடு இருந்து வந்துள்ளமையை அவதானிக்கலாம். இன்றைய நிலையிலும் அந்தப் பண்டைய தொடர்ச்சிக்கு ஒரு தேவை இருக்கின்றது. இலக்கியத்தின் சூழமைவு யாது எனும் பிரச்சினை கிளப்பப்படும்பொழுது இதற்கான இந்தப் பதில் தானாகவே மேற்கிளம்பும். கதையின் எடுத்துக்கூறல் முறைமைக்கும் ஆசிரியரின் கருத்து நிலைக்கும் ஒரு தொடர்பு உண்டு. அதுவே ஈழத்துக் கதை களின் எடுத்துக்கூறல் முறைமையினை நிர்ணயித்து வந்துள்ளன.

சிதம்பர திருச்செந்தினாதனிடத்து இந்த யதார்த்த நோக்கின் அடிப்படையில் எழும் எடுத்துக்கூறல் முறைமை (சித்தரிப்பு முறைமை) காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் தொகுப்பு

மணல்வெளி அரங்கு

முதற் பதிப்பு

மாசி 2002

வெளியீடு

தேசிய கலை இலக்கிய பேரவை.

அணிந்துரை

சி.சிவசேகரம்

09.10.2001

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் வழங்கும் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இதுவென எண்ணுகிறேன் மிகவும் சிக்கன மான மொழி நடையில் எழுதப்பட்டுள்ள கதை களின் நீளமின்மைக்கு அவை வெளியாகும் களங் களும் ஒருகாரணமாக இருக்கலாம். கதைகள் ஐந்து வருடகால இடைவெளியில் எழுதப்பட்டவை. ஆண்டுக்கு மூன்றுகதைகட்கு மேல் அவர் எழுத வில்லை என்பது திருச்செந்திநாதன் எழுதிக் குவிக் கிற வகையான படைப்பாளி அல்ல என்பதை உறுதி செய்கிறது. அவரது கதைகள் ஒவ்வொன்றும் கவன மாகச் செதுக்கப்பட்டிருப்பதை அவதானிக்கும் போது தான் சொல்வது வாசகரைத் தெளிவா கச் சென்றடைய வேண்டும் எனக் கருதுகிற படைப்பாளிகள் நடுவே அவரை அமர்த்துகிறது.

1997 இற்குப் பின்பாக அவர் எழுதியுள்ள கதை களின் அமைப்பு அவரது முன்னைய கதைகளின் நேரடியான யதார்த்தப் பாங்கினின்று கணிசமாக விலகியிருப்பதைக் காணலாம். பகுத்தறிவு வாத நோக்கில் ஏற்க முடியாதனவையாகக் கூடச் சில கதைகள் தென்படலாம். கதையை ஒரு குறியீடாகக் கையாள்வதில் கதாசிரியர் கடந்த மூன்று ஆண்டு களில் மிகுந்த தேர்ச்சி பெற்றுள்ளதை வாசகர்கள் தவறவிட இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமன் ஒரு கிழவரின் உயிரைக் கொண்டுபோகத் தயங்கித் தன் கடமை தவறுமளவுக்கு இளம் உயிர்களைப் பறித்துச் செல்லும் யமனிடமே குற்ற உணர்வு ஏற்படுகிறதை ஆழமாகச் சித்தரிக்கும் போதும் (காணாமற்போனவன்) மகனைப் பற்றிய நினைவில் உருவாகிற பிரமை ஒரு தாயை அவனது கல்லறையை நோக்கி அழைத்துச் செல்வதைக் காட்டும்போது (அம்மாவாக அல்ல) நாம் முன்பு அறிந்த ஒரு நல்ல சிறுகதையாளர் இப்போது தன் கதை சொல்லும் ஆற்றலை மேலும் விரிவுபடுத்தித் தனது தரிசனங்களை இலகுவாக நம்முடன் பகிர்வதை நாம் உணரலாம்.


இலக்கியம் என்பது மெய் வல்லுநர் போட்டிகளில் நிகழ்வதை ஒத்துப் படைப்பாளிகள் தமது சொல்லாற்றலையும் கற்பனை வலிமையையும் கொண்டு காட்டும் வித்தை என்ற பார்வை இன்னமும் பல படைப்பாளிகளிடம் உள்ளது. இலக்கியம் என்பது யாருக்காக, எதற்காக என்ற கேள்விகட்கான மறுமொழிகள், வெகுசனங்களின் நலனைச் சார்ந்ததும் மனித இன மேம்பாட்டின் அடிப்படையிலும் அமையும் போது, படைப்பாளிக்கு ஏற்படும் தெளிவே மக்கள் இலக்கியம் என்ற திசையில் படைப்பாளியை நகர்த்துகின்றது. உருவமா, உள்ளடக்கமா, அழகியலின் முக்கியத்துவம் என்ன? என்ற வாறான கேள்விகள் தாமாகவே நல்லதீர்வுகளைக் காணுகின்றன. திருச்செந்திநாதனின் படைப்பாற்றலின் முனைப்பு தன்னைச் சூழ உள்ள மக்கள் திரளின் நலனை முதன்மைப்படுத்தும் ஒன்று என்பது பற்றி யாவருக்கும் ஐயத்துக்கு இடமில்லை.


கதாசிரியரின் அரசியலுடனோ உலக நோக்குடனோ முற்றாக உடன்பட வேண்டிய தேவை இல்லாமலே அவரது கதைகள் அவர் வாழும் சமூகச் சூழலை நேர்மையாக அடையாளப்படுத்துவதை நாம் அறிய முடிகிறது. தமிழ் இலக்கியத்தின் எதிர்காலத்தைச் சமூக வாழ்வினின்று தம்மை அந்நியப்படுத்திக் கொண்டவர்களது சிந்தனைக் குழப்பங்களில் அடையாளங்காட்டியவர்கள் இன்று தமது ஆருடங்கள் ஒவ்வொன்றாகப் பொய்ப்பதைக் காணுகின்றனர். மறுபுறம், தமது இருப்பைத் தம் சமூகத்தின் இருப்புடன் சேர்த்து அதன் நலிவினூடும் விடுதலையையும் சமூக விமோசனத்தையும் நாடும் படைப்பாளிகள் நிதானம் தவறாது உறுதியாக முன்நோக்கி வீறுநடை போடுகின்றனர். என்பதை நமது போராடும் மண்ணின் படைப்புக்கள் உறுதி செய்கின்றன. இந்த இலக்கிய வளர்ச்சிப் போக்கை அடையாளப்படுத்தும் ஆக்கங்களிடையே திருச்செந்திநாதனின் கதைகட்கு ஒரு நிலையான இடம் உண்டு என்பதற்கு இத் தொகுதியும் உள்ளடங்கும் என்ற வகையில் இம் மதிப்புரையை எழுதும் வாய்ப்பையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்
எழுதிய
முன்னுரை,
அணிந்துரைகள்

- **"முல்லைக்கமல்" எழுதிய**
  "மனமும் மனத்தின் பாடலும்"
- **"குழல்" மொழிபெயர்க்க**
  "களத்திலேயே வீழ்வோம்"
- **"சத்தியன் தவராஜா" எழுதிய**
  "செய்தித்துறை ஒரு பார்வை"
- **"கந்தையா ஸ்ரீகணேசன்" எழுதிய**
  "நிதர்சனத்தின் புத்திரர்கள்"
- **"க. இரத்தினசிங்கம்" எழுதிய**
  "மண்ணின் வேர்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முல்லைக்கமல்"
எழுதிய
மனமும் மனத்தின் பாடலும்
நவம்பர் 1999
எழுகலை இலக்கிய பேரவை

கமலும், கமலின் பாடலும்

1

முல்லைக்கமல் வன்னிமண்ணின் ஒரு பதிய கவிஞன். தன்முன்னே விரிந்து கிடக்கும் மூத்த, முந்தைய கவி ஞர்களையும் அவர்தம் கவிதை ஆளுமைகளையும் அறியும் ஆர்வம் உள்ளவன். அவர்களின் உழைப்பின்மீதும், கனவுகளின் மீதும் காதல் கொண்டவன். அவர்களின் வழித்தடத்தில் நடக்க விரும் பினாலும் தன்னளவில் புதிய அடையாளங்களைப் பதிக்கவிரும்புபவன். அது காரணமாக, தன்னைப் பற்றிய அதீத கனவு மிதப்புகளும் நெஞ்சு நிமிர்தலும் இவனுக்கு இருப்பதாகவே படுகிது.

இளம் படைப்பாளி ஒவ்வொருவனுக்கும் இவ்வளவு குணாம் சங்களும் இருப்பது இயல்புதான் என்றாலும் சமகாலத்து சூழலை உள்வாங்கிக்கொண்டு புதிய வீச்சுக்களை, உச்சங்களை தொட்டு விடும் ஆவர்மும் கூடவே இவனுக்கு இருப்பதாகப் படுகிறது. அந்த எழுச்சிதான் முல்லைக்கமலை 'முள்ளந்தண்டு நிமிர்த்திப் பாடுவேன்' எனச் சொல்ல வைக்கிறது. இந்த முள்ளந்தண்டு நிமிர்த்தும் உணர்வு ஏன்வருகிறது? அது ஒரு கவிஞனுக்கு இயல்பாக இருக்கவேண்டியது. அதிலும் ஒரு புதிய படைப்பாளிக்கு மிக அவசியமானதுங்கூட.

'எழுந்தும் விழுந்தும் மீண்டும் எழுந்தும் மெல்ல உங்கள் கைகளில் வருகிறேன்' என்ற திடமான உணர்வு அப்படியானவனுக்குத்தான் வரும். இல்லாவிட்டால், கவிதை உலகில் கீழே விழுந்துகிடக்கின்ற பரிதாபத்துக் குரிய தார்மீகப் பொறுப்பை கவிஞன் ஏற்றுக்கொண்டவனாகிவிடு கிறான். இன்னொரு முன்னோடிக் கவிஞனான மனுஷ்ய புத்திரன்

"எவ்வளவு நேரம்
குப்புறக் கிடந்தாலும்
வேறு வழியின்றி
நாமாகத்தான்
எழுந்து வரவேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறான். எனவே எப்படி விழுந்தாலும் முல்லைக் கமல் எழுந்து நிமிர்வான், நிற்பான் என்று நம்பலாம்.

2.

'மனமும் மனத்தின் பாடலும்' என்னும் இந்தத் தொகுதியின் கவி தைகள் கமலின் மனதின் பாடல்களா? இந்தப் பாடல்களின் பாடுபொருள் என்ன? இக்கவிதைத் தொகுப்பில் சரடாக உள்ளது என்ன?

கமலின் படைப்புகள் புதுக்கவிதைகளா? வெறும் கூற்றுக்களா? சாதாரண எழுத்துக்களா? என்பதையெல்லாம்விட இந்த மண்ணை, மண்ணின் மனிதர்களை நேசிக்கும் மிக மிக அடிப்படையான தகுதி இவனுக்கு இருக்கிறது.

சாதாரண மனிதர்களுக்கு இருக்கக்கூடிய அடிப்படைத் தகு திியை கொண்டிராது. மண்ணை, மக்களை நேசிக்காது கவித்துவச் செழுமையும் ஆற்றலும் உள்ள கவிஞனாக இருந்து என்ன பிரயோசனம். கமலின் பாடல் அவனின் மனத்தின் பாடல், மட்டுமல்ல, இந்த மண் ணின் பாடல், மக்களின் பாடலும்தான். அதுவும் விடுதலை பெறத் துடிக்கின்ற மண்ணினதும் அவதனைப் பெற்றுவிட போராடும் மக்களதும் பாடல்தான்.

"கூனல் விழாத எனது நிலத்தில்
ஆயிரமாயிரம் அக்கினிக் குஞ்சுகள் இருக்கையில் முள்ளந்தண்டு நிமிர்த்திப் பாடுவேன்"
அந்தப் பாடலும் எப்படிப் பாடப்படுகிறது?
"எங்கள் மண்ணில் எங்கள் வெளியில்
எங்களின் மொழியில் நாங்கள் பாடினோம்"
என்றும்
'நிலத்தின் கீதத்தை சேர்ந்து சேர்ந்து பாடுவோம்'
என்றும்
"விடுதலைப் பாடல் பாடி நெகிழ்ந்தோம்"
என்றும் பாடப்படுகிறது.

இவ்விதம் விடுதலைப் பாடல் இசைக்கும் கவிஞன் என்றபடி யால்தான் எத்தகைய துன்பங்களை வரித்துக்கொண்டபோதிலும், தன்னை அழித்துக்கொண்டு தமிழ் மக்களின் விடுதலை ஒளியை வளர்க்கும் போராளிகளைப்போல,

"ஒரு சிலுவையை வைத்துக்கொண்டு
ஒரு சூரியனை பரிசளிப்பேன்"
என்கிறான் மனம் சோராமல்
ஒளிப்பொட்டுக்களாக மின்னும் மின்மினிகளின் ஒளித்தாக்கம் மிகச் சிறியதுதான். இருந்தாலும் மிக நுட்பமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டுக்குள் இருட்டாய் இருப்பதைவிட, மின்மினியாய் மினுமினுப்பது மேல். எந்தப் பெரிய இருட்டையும் துணிச்சலோடு எதிர்கொள்ளும் மின்மினி. அதன் துணிச்சலால் முதன்மை பெறுகிறது. "மின்மினிப்பூச்சி பறக்கும்போதுதான் ஒளிவீசுகிறது. நம் மனமும் அப்படித்தான். நாம் சும்மா உட்கார்ந்திருக்கும்போது, பயந்து இருண்டு துவண்டு போய்விடுகிறோம். எனவே எப்போதும் முன்னேற்றத்துக்கு உதவும் வகையிலான சிறுசிறு செயல்களைச்செய்துகொண்டேஇருப்போம்"என்கிறார்அறிஞர்ஜி.பெய்ஸி.

இந்திய ஞானபீட பரிசுபெற்ற தெலுங்குக் கவிஞர் நாராயணரெட்டி, 'மின்மினிபோதும்' என்ற தலைப்பில் பின்வருமாறு கவிதை சொல்கிறார். 'இருட்டுக்குச் சூடுபோடும் சின்ன மின்மினி அடைமழையைத் தடுத்துவிடும் இருமுடிக் குடை நல்லது எத்தனை சிறியதானாலும் போதும் மாறுதலைக்கொண்டுவர.

துயரத்தை அழித்துவிடும் மழலையின் புன்சிரிப்பு
ஒருவகையில் மின்மினிகளும் எமது மக்களின் குறியீடுதான்.
அதனால்தான் கமல்,
"மின் மினிகளின் பாடல் - எம்
தேசத்தின் பாடல்" என்கிறான்.

இருபத்தைந்து கவிதைகள் கொண்ட இந்தத் தொகுப்பில் இந்த மண்ணின் குரலும் மண்ணின் மக்களின் குரலும் வெளிப்படுவதைப் போலவே மண்ணின் வனப்பும் வெளிப்படுகிறது. அதுமட்டுமன்றி கவிஞனின் அடிமனத்து உணர்வுகளும் சிறிது அருட்டப்படுகின்றன.

ஒவ்வொரு கவிதையாக இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதாகப் படவில்லை. ஆனால் கவிஞனின் மொத்தமனப் பாங்கினை மட்டுமே இங்கு சுட்டிக்காட்ட முனைந்தேன். மிகுதி வாசகர்கள் பொறுப்பில்.

காதல் உணர்வு பொங்க
'கூசிப்பிடித்த உனது கண்களுக்குள் ஆயிரம் கனவுகள் முட்டையிடவும்'
என்றும்
"உனது மின்னல்களின் சொடுக்கில்
எனது இதயம் இடியொலிக்கிறது"
என்றபோதும்
"உன் இடைநாரி எப்படி அவர்க்காகும்!
அறைந் தெழும்பு! எழும்பு!
என அந்தந்தத் தளத்து உணர்வுகளை கவிஞன் கிளப்புகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே "நிச்சயமாய் இவையொன்றும்
நிரந்தரம் அல்ல"
எனவும்
"நாளை
நிலவொளியில்
நிம்மதியாய்க் கூழ் குடிப்போம்"
எனவும் குறிப்பிடும்போது கவிஞனின் நம்பிக்கையும் உறுதியும் வெளிப்படுகின்றன.
ஏனெனில் இக் கவிஞன்
'புரட்சி பூத்த
இரவல் இல்லாத இந்த நிலத்து'
மைந்தன் அல்லவா?

4

கவிஞன் தான் வாழும் சமூகம், சூழல் தொடர்பான பிரக்ஞை உள்ளவன். தனதும் தனது சூழலுக்குமான அனுபவங்களின் மெய்யான சாட்சிக்காரன் அதன் காரணமாக அவன் சமூகத்தின் ஆத்மாவை அதன் அந்தரங்க உணர்வுகளை பதிவு செய்து வெளிப்படுத்துகை செய்கிறான்.

கவிஞனின் படைப்பானது வாழ்க்கையினதும் சூழலின் மீதானதுமான உணர்வு ரீதியான ஆழந்த பார்வையின் வெளிப்பாடு, தன் மனப்பதிவுகளை, தான் வாழுகிற மண்ணுக்கும் மக்களுக்கும் இடையிலான புரிதல்களை, இணைப்புக்களை அவன் வெளிப்படுத்துகிறான்.

கவிதைக்கும் படைப்பாளிக்குமான உறவோ கவிதைக்கும் வாசகர்களுக்குமான இணைவோ எல்லையில்லாதது. பள்ளத்தாக்கை நோக்கிச் செல்லச் செல்ல மேலும் பள்ளத்தாக்கை நோக்கிச் செல்ல வேண்டும் போலவும், மலையுச்சியை நோக்கிச் செல்லச் செல்ல அது உயர்ந்து மேலே மேலே என்றும் திருப்திகாண முடியாதவை.

சூடும் குளிரும் கோபமும் தாபமும், வேட்கையும் வேகமும், ஆழமும் நேசமும் கொண்டது. உணர்வுகளால் பின்னப்பட்டு அடி எது முடி எது என எல்லையிட இயலாதது.

ஒரு தரத்தில் நின்று அதற்கு அடுத்த தரத்தை நோக்கியும் அதற்கு மேலே அடுத்த தரத்தை நோக்கியும் அது தொடர்கிறது. கனவுகளிலும் பூரிப்புகளிலும் ஆழ்ந்து ஏங்கிக் கொண்டிருக்கிறது.

ஒருவகைப் போதையைப்போல இழுக்க இழுக்க இறுதிவரை இன்பம் என்பது போல முடிவில்லாமல் ஆழமான அனுபவங்களாகப் போய்க்கொண்டே இருக்கிறபடியால் எதிலுமே திருப்தி கிடைப்பதோ திருப்பதிப்பட்டுக் கொள்வதோ இயலாத காரியமாகிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞன் ஒருவன் அவன் எந்தத் தளத்தில் அல்லது தரத்தில் இருந்தாலும் கவிதை என்பது ஒரு உணர்வு வெளிப்பாடு. அது சாதாரணமாகவும் வெளிப்படும். கவிஞனின் அறிவு அனுபவத் தளத் துக்கு ஏற்பவும் வெளிப்படுகை மாற்றம் பெறும். உணர்வின் வெளிப் பாடான கவிதை, அதன் வெளிப்பாடு வார்த்தைகளின் மீதேறி வெளி வருகின்றது. உணர்வின் வயப்பட்ட கவிதை அந்த உணர்வினை உயிர்ப் பித்துக்காட்டுகிறது.

அதனால் தான் கவிஞன் அழ, கோபங்கொள்ள, சந்தோசப்பட, வெல்ல, தோற்க, காதல்கொள்ள அதில் தோல்வி கண்டு புலம்ப, பசியால் வெதும்ப, வீராவேசம் கொள்ள, கிண்டல் செய்ய, சபிக்க என்று சகல உணர்வுகளையும் கவிதைகள் அருளிச் செய்கின்றன.

உண்மையில் கவிஞன் எனப்படும் வல்லமைச் சக்தியினை அருட்டும் எந்த ஒரு உணர்வும் கவிதை மின்னலகளைத் தோற்று வித்துக்கொண்டே இருக்கும். இவவிதம் ஒவ்வொரு உணர்வும் மிக நுட்பமாக மிக நுண்ணுணர்வாக தன்னைச் சிதறவைக்கும் எந்த அதிர்வுகளையும் கவிதையாக்கிவிடுவான்.

அவனது ஆழ்மனப்பதிவுகள் தரிசனங்கள் தத்துவங்கள் பொதுமைப் பாடில்லாத அகமனதுப் பிரச்சனைகள் என்று எல்லாமே கவிதை யாகி வரும்போது கவிஞனின் தரத்திற்கு நிகரல்லாத, உணர்திறன் குறை வான வாசகன் அவனது கவிதைகளைப் புரிந்துகொள்வது பிரச்சனையா கிறது.

சிறந்த கவிஞன் தனது அனுபவத்தை வாசகருக்கும் தனது அனு பவந்தான் எனத் தொற்றவைப்பதில் வெற்றியடைகிறான்.

தனக்குரிய கவிப்பொருளைச் சுண்டிச் சுண்டி எடுப்பதில் கவிஞன் எந்தவிதமான நிர்ப்பந்தத்துக்கோ நெருக்கடிக்கோ, ஆட்படாமல் சர்வ சுதந்திரமாக செயற்படக்கூடியவன். தன் சுய அலங்காரத்தில் தானே திருப்தி பட்டுக்கொள்வதைப்போல அவன் திருப்திப்பட்டுக்கொள்கிறான்.

அதனால் தான் எத்தகைய உணர்திறனில் எந்தப் பின்னணியில் தன் கவிதையை வெளிப்படுத்தினாலும் அந்தத் தளத்தினை அதன் வீச்சுக்களை வாசகன் உணர்ந்து, உள்வாங்கி தானும் முழுமையாக ஆழந்து அனுபவிக்கும் கொடுப்பினையைப் பெறமுடிகிறது.

கவிஞனின் கவிதைப் பசியும் - கவலையும், இரத்தமும் - வேதனையும் கலந்த நடப்பியல் உலகிலோ, கற்பனையும் புனைவும் கொண்ட மாயாஜால உலகிலோ புகுந்து தொட்டுத் தடவிப் பார்த்தோ முகர்ந்து பார்த்தோ புணர்ந்து பார்த்தோ புரிந்துகொள்வது அவசிய-மாகிறது. கவிஞன் எந்த முகமூடிகளைப் புனைந்தாலென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சுக்களற்ற சொந்த முகத்தோடு இருந்தாலென்ன? அவன் தலை யிற் சுமப்பது எந்தத் தத்துவமோ கோட்பாடோ தன் கருத்தை தன் கவிதையில் எவ்விதம் வெளிப்படுத்துகிறானோ அதிலேதான் அவனது கவித்துவம் உச்சம் பெறுகிறது! ஆளுமை வெளிப்படுத்தப்படுகிறது. ஏனைய இலக்கிய வடிவங்களை விட கவிதை தனித்தன்மை பெறு வது அதன் வடிவத்தால்தான். ஈரேழு உலகத்து விடயங்களையும் ஒரு சில சொற்களில் கவிதைகொண்டு வந்துவிடுகிறது. பெரிய பஞ்சுப் பொதி யின் சுமையை சிறுதுண்டு இரும்பு சமன் செய்துவிடுவதைப்போல கவிதை இரும்பாகக் கனக்கக்கூடியது.

கவிதையின் வெளிப்பாட்டு அம்சம் இறுக்கமான மொழி நடையாலும் வீரியமிக்க விதைகளைப் போன்ற புடம்போட்டு எடுக் கப்படும் ஒற்றைப் படைத் தன்மையற்ற சொற்களாலும் பொருத்த மான படிமங்கள் குறியீடுகளாலும் உன்னதம் பெற்ற கவிதை பன்முகப் பார்வையுள்ள அர்த்தப்பாடான இன்றைய நிலைக்கு வந்துள்ளது.

இந்த நிலை எப்படி வந்தது? யாரோ சில பட்டியல் போடப் படும் கவிஞர்கள் மாத்திரம் இரவோடிரவாக கடத்திக்கொண்டு வந்த விடயங்கள் அல்ல. வரலாற்றுத் தளத்தில் மாறும் சூழ்நிலைக் கேற்ப ஒன்று மற்றொன்றாக படிப்படியாக ஏற்படும் வளர்ச்சிப் போக்கின் மாற்றத்தால் ஏற்பட்டதுதான்.

உண்மையில் இந்த நிலைக்கு எல்லா ஈழத்துக் கவிஞர்களும் வந்து விட்டார்களா? வன்னிக் கவிஞர்கள் வந்துவிட்டார்களா என்று கேட் பது ஒருவகை அபத்தமான கேள்விதான். சிலர் வந்துவிட்டார்கள்; பலர் வந்துகொண்டிருக்கிறார்கள்; மேலும் பலர் வருவார்கள்; வரப்போகிறார் கள். எப்போதுமே எல்லாக் கவிஞர்களும் ஒரே தளத்தில், தரத்தில் நிற்பது மில்லை, நிற்கப்போவதுமில்லை. விமான ஓடுபாதையில் பறக்கத் தயாராக நிற்கும் விமானங்களைப்போல, 'Takcoff' ஆகும் விமானங்களைப்போல, பறந்துகொண்டிருக்கும் விமானங்களுக்குத் தெரியவேண்டும். நிலையத்தில் பறக்கத்தயாராக நிற்கும் விமானங்களும் பறக்குமென்று.

படிமங்கள், குறியீடுகள் கவிதையில் புகுந்து விளையாடத் தொடங்கி தேவைக்கு மிஞ்சியதாக படிமம் - படிமம் என்று, குறி யீடு-குறியீடு என்று கவிதைகள் அவற்றின் புரிதலில் மயக்கத்தை ஏற்படுத்தும் நிலைக்கு வந்துள்ளது ஒன்றும் புதினமானதல்ல.

நிவாரணம் பெற்று வாழும் சாதாரண குடும்பத்தினரிடம் உள்ள உணவுப் பொருள் இருப்பைப் போலவே அவனிடமுள்ள மொழி - சொற்களின் இருப்பும் படிமம் - குறியீடு அறிமுகமும் ஒவ்வொருவருடைய மொழி இருப்புக்கேற்பவே அவர்களுடைய புரிதலும் இருக்கும். இது தவிர்க்க இயலாததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புதிய படிமத்தை அல்லது குறியீட்டை அறியும்போது, தான் அறிந்து வைத்திருக்கும் படிமத்தோடு பொருத்திப் பார்த்து உணர்ந்துகொள்கிறான். பொருந்தாத போது தேடிப்பார்க்கிறான்; புரிந்துகொள்ள முனைகிறான். புரிந்துகொள்ளமுடியாதபோது அதிர்ச்சியும் குழப்பமும் அடைகிறான். அதிர்வுகளால் கலங்கிக் கொள்கிறான்.

இறுக்கமான மொழிநடை என்று சொற்களை இறுக்கி இறுக்கி கவிதையைப் புத்தூர்க்கிப் புத்தூர்க்கி அதாவது ஒவ்வொரு அறையாக யன்னல்கள் கதவுகளாக வீட்டை முழுமையாகப் பூட்டி, ஒரு முற்றுருவமாக கவிதையை ஆக்கிவிடுகின்றார்கள்.

கடைசி சாவித் துவாரத்தையாவது கண்டுபிடித்து திறந்து ஒவ்வொரு அறையாக - கவிதையின் புதிரை இரகசியத்தை அறிந்து கொள்ளமுடியும். ஆனால் நமது கவிஞர்கள் சாவித்துவாரத்தையும் தெரியாமல் பலகை வைத்து இறுக்கமாக அடைத்துவிட்டு வாசகனை மலைக்கச் செய்துவிடுகிறார்கள்.

முல்லைக்கமலின் கவிதைகள் இவ்விதமான கவிதைகள் என நான் இங்கு குறிப்பிடவில்லை-ஆனால் முற்றுருவகமான, மூடப்பட்ட கவிதைகளாக-இருண்மைக் கவிதைகளாக தன்னாலும் பாட முடியும் என்ற பாவனையில் சில கவிதைகளை எழுதியுள்ளார்.

உச்ச நிலைக் கவிஞர்கள் கமலின் இத்தகைய கவிதைகளை ஒருபுறம் தரமில்லை என்று சொல்லும் அதேநேரம், வேறுபக்கத் திலிருந்து புரியவில்லை என்ற கருத்து முன்வைக்கப்படுவது தவிர்க்க முடியாததே.

வாசகனை உள்ளே நுழைய விடாமல் கவிதையைப் பூட்டும் இத்தகைய இருண்மை நிலை ஒரு கவிஞனின் இடைப்பட்ட நிலையே என சில விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டுவிதமாக இந்த இருண்மை நிலை மாற்றப்பட்டு விடுகிறது. ஒன்று, கவிஞனின் ஆளுமையின் வளர்ச்சிப் போக்கினால் எவ்வளவு பெரிய விடயமும், மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் வலிமையான உணர்வுத் தாக்குதல் திறனுடன் வெளிப்படுத்தப்பட்டு விடுகிறது. மற்றயது இருண்மைப் படைப்பு படைப்பதுதான் கவிஞனின் தனித்துவமாகவும் மாறிவிடுகிறது. முல்லைக்கமல் எந்தப் பக்கம் போகப்போகிறார் என்பதை எதிர்காலந்தான் காட்டி நிற்கவேண்டும்.

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்
"சிதம்பரக்குடில்"
7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
20.10.1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழல்"
மொழிபெயர்த்த
களத்திலேயே வீழ்வோம்
நவம்பர் 2001
குழல் வெளியீட்டகம்

குழல் இறங்கிய சமுத்திரம்

வி.பி.ஜோசப் என்கிற அருளாளன் இங்கு "குழல்" என்கிற பெயரில் அரங்குக்கு வருகின்றார். குழல் என்பது இவரது புனைப் பெயராக இருந்தாலும் அவரது மகளின் பெயரும் அதுதான் என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வன்னியில் இருந்து சுடர் விட்டுக்கிளம்பும் ஒளிப்பிளம்புகளில் இவரும் ஒருவர் என்பது கவனிப்புக்குரியது.

குழல் அவர்கள் பல்வேறு தளங்களில் இயங்குபவர். இலக்கியம் போலவே அறிவியலிலும் ஈடுபாடு உடையவர். கவி புனைவதில் உள்ள அக்கறை சார்ந்ததே அவரது மொழிபெயர்ப்பு முயற்சியு மாகும். அந்த அக்கறையின் ஒரு கட்டமே "களத்திலேயே வீழ்வோம்" என்ற தொகுப்பாகி உள்ளது.

'ஈழநாடு வாரமலர்', ஈழநாடு மாதமலர்' வெளிவந்த பொழுது அதனோடு சேர்ந்து வடம் இழுத்த பல முதிரா இளைய நம்பிக்கைகளில் அவர் முதிர் இளைய நம்பிக்கை யாக இருந்தார். அறிவியல் கட்டுரைகள், கவிதைகள் என்று அவர் எழுதித் தள்ளியவை கணிசமானவை.

மொழிபெயர்ப்புச் செய்து பிரசுரிக்கத் தந்த கவிதைகள் குறிப் பிடத்தக்கவை. இப்போது அவரின் மூன்றாவது கட்டம். அவர் நூலா சிரியராக வெளிப்பட்டுள்ளார்.

குழல் அவர்களின் வேட்கையும் வேகமும் இந்த மண்ணில் அவர்கொண்ட உள்ளார்ந்தமான பற்றின் வெளிப்பாடே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியானது மனிதனுடைய தனித்துவம் மிக்க ஆளுமை யின் வெளிப்பாடே. அவனுடைய சொந்த அனுபவ வெளிப்பாடு கள் ஆளுமை மிக்க அவனது அந்த மொழியினூடாக வெளிப் படுத்தப்படுகின்றன.

உலகத்து எல்லா மொழிகளுக்கும் தனித்தனியே நீண்ட வர லாறுகள் உண்டு. தேய்ந்து உருக்குலைந்த அல்லது வளர்ந்து பெருத்த மாறுபாடுகளும் உண்டு. உயர்ந்து இறங்கிய அல்லது இறங்கி ஏறிய வழிகளில் பல்வேறு வகையான சிறப்புக்களும் பெருமைகளும் சேர்ந்துவிடும்.

அவை அந்தந்த மொழிகளில் கவிஞர்களின் கவிதை வரிகள் ஊடாக புதுப் பொலிவு பெற்றுவிடுகின்றன. புதுப்புது அர்த்தங்களை உருவாக்குகின்றன. மொழியை லாவகமாக பன்முகத்தன்மை கொண்ட அர்த்தத்தில் கவிஞர்கள் பயன்படுத்தும்போது அது சுடச் சுட ஒளிரும் பொன்னாகின்றது. தகிதகிக்கும் நெருப்பு சுட்டுப் பொசுக் குவதோடு வெளிச்சத்தையும் தருகின்றது. இதுவே அம்மொழிக் கவிஞர்களின் வெற்றியாகும்.

இவ்வாறான கவிதைகளையே குழல் அவர்கள் மொழி மொழிபெயர்த்துள்ளார். குழல் அவர்கள் இதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளார் அல்லது வெல்லுவார் என்பதை மூலக் கவிதை களையும் இந்த மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் படிக்கப் போகின்றவர்கள் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்வ தனூடே தான் குழல் அவர்களின் அடுத்த கட்ட நகர்வுக்கு துணை செய்யமுடியும்.

மொழிபெயர்ப்பு என்பது யாரும் செய்துவிட்டுப் போகக் கூடியது அல்ல. ஒரு படைப்பாளியாக யாரும் பாவனை பண்ண முடியும். ஆனால் மொழிபெயர்ப்பாளனாக பாவனை பண்ண முடியாது.

இரத்தமும் சதையுமாக உண்மை இருக்கும்போது வேறொரு காட்சியை வரைந்துகாட்டமுடியாது.

எனவே ஓர் அகராதியை வைத்துக்கொண்டு யாரும் மொழி பெயர்ப்புச்செய்ய முடியாது. மூலக்கவிஞன் எந்த உணர்திறனில் எத்தகைய உள்ளக்கிளர்ச்சியுடன், எந்த பண்பாட்டுத்தளத்தில், வாழ்வியல் சூழலில் தன் படைப்பினை வெளிப்படுத்தினானோ, அதனை, அந்த உணர்திறனில் மொழிபெயர்ப்பாளன் கொண்டு வரவேண்டும். இது ஒரு இலகுவான காரியமல்ல. விடிய விடிய விழித்திருந்து படித்துச் சித்தியடையும் பரீட்சை போன்றதும் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக கவிதையானது விடுதலைக்கான குரலாக வலிமை பெற்றுள்ளது. அது மண்விடுதலையாக இருந்தால் என்ன, பெண் விடுதலையாக இருந்தால் என்ன, சகல கட்டுக்களையும கட்டுடைக்கும் மொழி ஊடகமாக கவிதை வீச்சுக்கொண்டுள்ளது.

உலகத்தில் இதுவரை நடந்த சகல சமூக, பண்பாட்டுப் புரட் சிகளும் விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்களும், உலகப்போர் களும், நாடுகளின் தேசிய இன விடுதலைப் போராட்டங்களும் உலகத்து கவிதையின் பரிணாம வர்ச்சியை புத்துருவாக்கி உள்ளன.

சமூக, அரசியல், பண்பாட்டு, தத்துவப் பின்னணிகளில் கவிதை பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. அதன் வெளிப் பாடே உலகத்துமொழிகளில் கவிதை கொண்டுவந்த பொது மாற்றம் ஆகும். குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் அவ்வவ் மொழி கள் கொண்டிருந்த மரபுசார்ந்த அடிப்படைகளை இக்கவிதைகள் கேள்விக்குட்படுத்தி கட்டுடைத்துள்ளன.

அந்த உடைப்பின் பயனாகவே இன்று சகல நாடுகளின் எல்லைகளை இலகுவாகக் கடந்துகொண்டு கவிதை என்பது ஒரு பொதுமொழியாகி சகல இன மக்களுக்கும் பொருந்தக்கூடிய, சகல இன மக்களுக்கும் அளவெடுத்து தைத்த ஆடையாக வடிவம் பெற்றுள்ளது.

உலகத்தின் எந்தக் கோடியிலும் அடக்கப்படுகின்ற எந்த இன மக்களது அகக்குரலும் ஒரே தன்மையாக இந்தக் கவிதைகள் வெளிப்படுத்துவதை கவிதைகளைச் சுவைக்கும் அனைவரும் உணரு-வர்.

விடுதலைக் குரலாக கவிதை உள்ளபடியால்தான் விடு தலைப் போராட்ட உணர்வுமிக்க கவிஞர்களின் கவிதைகள் உணர் வுத் தளத்தில் ஒன்றுபடுகின்றன. ஒவ்வொரு இனத்திற்கும் நாட்டுக் கும் எத்தகைய வேறுபாடு இருந்தாலும் அவை எதிர்கொண்ட / கொள்ளுகின்ற அடக்குமுறைகளும் அதனை எதிர்கொள்ள அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் பொதுமைப்பாடானவை.

இத்தகைய மேன்மைமிக்க காரணத்தினாலேயே அந்தந்த நாட்டு விடுதலை வேள்வியில் குதித்த குதித்துவருகின்ற கவிஞர் களின் விடுதலைக்குரலும் ஒரே சுருதியில் ஒலிக்கின்றன.

"முன்னூறு ஆண்டுகள் கழிந்தனவாயினும்
நிறந்தான் மாறியது,
மொழிதான் மாறியது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இன்னும்
அடக்குமுறையின் கீழ்"

என்று கவிஞர் அ. யேசுராசா சொன்னது தனியே ஈழத்தமிழனுக்கு மட்டும் பொருந்துவது அல்ல, ஆங்கிலேய, பிரெஞ்சு, போத்துக்கேய, டச்சு காலனித்துவங்களின் கீழ் விழி பிதுங்கிய சகல நாட்டு மக்களுக்குந்தான்.

'பிதாவே அந்த யூதர்கள் அறியாமல் செய்தார்கள்
இந்த யூதர்களும் அறியாமல் செய்கிறார்கள்
இவர்களது இம்சையும் கொடுமையும்
எங்களுக்கு விடுதலையைத் தரும் என்பதை
அறியாமல் செய்கிறார்கள் ஆமென்"

என்று சண்முகம் சிவலிங்கம் என்னும் எங்கள் மூத்த கவிஞர் சொல்லுவதும் எல்லோருக்கும் பொருந்தக்கூடியதே.

"அந்த இருட்டில் இருந்து
எழுந்து நடக்கும்போது
சாம்பல் கலந்த புழுதியில்
முன்னைவிட அழுத்தமாய் பதியும்
என் பூட்ஸ் அடையாளம்"

இவ்வாறு கவிதை பாடினார் எமது மண்ணின் கவிஞர் வினோதினி.

அதனால்தான் வியட்நாம் கவிஞர்கள் பலஸ்தீன கவிஞர்கள், குர்திஷ் கவிஞர்கள், என்று எந்த நாட்டு விடுதலைக் கவிஞர்களும் எங்களோடு ஒன்றிணைந்து போகின்றார்கள். அவர்களின் அக உணர்வுகள் அச்சொட்டாக எம்மோடு பொருந்துகின்றன. எங்களை நாங்களே கண்ணாடியில் பார்ப்பதுபோல உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

பலஸ்தீனக் கவிஞர் மஹ்மூட் ஹர்வீஷ் அவர்களின் கவி வரிகள் பின்வருமாறு அமைகின்றன.

"நீ என்னைச் சுற்றிக் கட்டலாம்
வாசிப்பதற்கும் புகைப்பதற்கும்
நீ தடை விதிக்கலாம்
எனது வாயில் நீ
மண் இட்டு நிரப்பலாம்
ஆயினும் என்ன
கவிதை என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிக்கும் இதயத்தின் குருதி,
என் றொட்டியின் உப்பு
கண்ணின் திரவம்
நகங்களால் கண் இமைகளால்
கத்தி முனையால்
அதனை நான் எழுதுவேன்."

மஹ்மூட்ஹர்வீஷ் அவர்களின் உணர்வுகளுக்கும் எங்கள் கவிஞர் கப்டன் வானதியின் உணர்வுகளுக்கும் ஏது வித்தியாசம்?

வானதி பின்வருமாறு தன் குமுறலை வெளிப்படுத்துகின்றார்.

"எழுதுங்களேன்
நான்
எழுதாது செல்லும்
என் கவிதையை
எழுதுங்களேன்.
ஏராளம்
ஏராளம்... எண்ணங்களை
எழுத
எழுந்துவரமுடியவில்லை
எல்லையில்
என் துப்பாக்கி
எழுந்து நிற்பதால்
எழுந்து வர என்னால் முடியவில்லை
எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்."

இந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகளில் அனேகமானவை எங்கள் மனங்களை எங்கள் கோபங்களை வெளிப்படுத்துகின்றன. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு கவிஞர்கள் கவிபுனைந்தாலும் அவர்கள் எங்கள் வளவுக்கோடியில், எங்கள் வயல்களில், எங்கள் போராட்டக்களங்களில், எங்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்து குரல்கொடுப்பதைப்போல் இல்லையா?

தொகுப்பின் முதலாவது கவிதையே பின்வருமாறு அமைகிறது.

"நாங்கள் செல்வதற்கான நேரம் வந்தது
தூரத்தே எதிரியின் வேட்டுக்கள்.
மெதுவாய் அவனை இறக்கிவைத்தோம்.
அஞ்சலிவரியும் பொறிக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுக் கல்கூட நாட்டவில்லை.
அவன் மகிமையில் அவனைத் தனியே விட்டு
அமைதியாய் எழுந்து நடந்தோம்"

இரண்டாவது கவிதையில் வரும் பின்வரும் வரிகள் எமது போராளிகள் சொல்லும் வரிகள்தானே.

"எனவே
நீதியே!
உனக்கோர் கடப்பாடுண்டு
எதற்காய் அவர்
உயிர் கொடுத்தாரோ
அந்த லட்சியம்
தோற்கவே கூடாது"

கவிதைத் தொகுப்பு இப்படித்தான் முடிகிறது.

"எங்களை நோக்கி
போர் வந்துவிட்டது
எங்களின் குடில்களினுள்ளே
அது வந்தாயிற்று
மனிதரின் புதல்வர்கள்
அதை எதிர்கொண்டாக வேண்டும்
வெள்ளையர் பீரங்கிகள் முழங்கட்டும்.
அதன் புகைமண்டலம்
எங்களைச் சூழந்து கொள்ளட்டும்.
சாகும்வரை
அவர்களுடன் போரிடுவோம்.
களத்திலேயே வீழ்வோம்
வேறு இடங்களில்
எங்களுக்கு
சாவு வரவேண்டாம்"

மண்ணின் மீதும் மண் விடுதலை மீதும் ஆழமான நேசிப்புகொண்ட ஒரு விடுதலைப் போராளியிடமிருந்துதான் இவ் வாறான கீர்த்தி மிகு வரிகள் வரமுடியும்.

வியட்நாமின் நேசிப்புள்ள கவிஞன் ஹோசிமின்.

"எனது
கரங்களும் கால்களும் கட்டப்பட்டுள்ளன.
குன்றுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகள் பாடிக்கொண்டிருக்கின்றன.
மலர்கள் மணம் வீசிக்கொண்டிக்கின்றன.
பறவைகளின் இனிய பாடலை
கேட்டும்
மலர்களின் நறுமணத்தை
நுகர்ந்தும்
மகிழ்வதை யாரால் தடுக்க இயலும்"

என்று கேட்பதைப்போலவே எங்கள் கவிஞன் சு. வில்வரத்தினம்.

"வரண்டமண்ணில் வாழ்வை விளைத்தோம்
வாய்க்கால் ஓரப் புல்லுக்கும்
வாழும் முறைமை காத்திருந்தோம்
வியர்வை சொரிந்த உழைப்பில்
விளைச்சல் முன்றலில் அனைவர்க்கும்
காலம் வண்டிமாட்டின் சதங்கைகளால்
கல கல வெனக் குலுங்க நடந்த
அது ஒரு காலம்."
என்று சொல்லுவதில் என்ன பாகுபாடு உள்ளது.

"களத்திலே வீழ்வோம்" என்னும் இத்தொகுப்பின் அடிச்சரடு இத்தகைய பின்னணியிலேயே முக்கியத்துவம் பெறுகிறது.

விடுதலைப் போராட்டம் நடத்திய நடத்திக்கொண்டிருக்கும் பல்வேறு இனங்களின் விடுதலை உணர்வு பொதுவானது என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி தேவை இல்லை.

மொழி வேறுபட்டாலும் உணர்வுரீதியாக ஒன்றுபட்டுள்ளோம். இந்த உணர்வினைப் புரிந்துகொள்ள இதுபோன்ற மொழி பெயர்ப்புகள் மேலும் மேலும் வளரவேண்டும்.

'குழல்' அவர்களும் அவர் போன்ற மொழிபெயர்ப்பில் காதல் கொண்டவர்களும் இந்த முயற்சியில் ஈடுபடுவார்கள்.

இவ்வாறே எம்மண்ணின் படைப்புகளும் ஏனைய மொழிகளில், குறிப்பாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவேண்டும். இது இன்றைய காலகட்டத்தின் தேவையும்கூட.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
"சிதம்பரக் குழல்"
7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு,
25.10.2001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சத்தியன் தவராஜா"
எழுதிய
செய்தித்துறை ஓர் பார்வை
டிசம்பர் 2001
அருணா வெளியீடு

நீண்ட பயணத்தின் முதலடி

தவராஜா சத்தியன் அவர்களின் இந்த வெளியீட்டு முயற்சி வன்னிமண்ணில் தற்போது வாழும் மக்களின் மனோபலத்தினை வெளிப்படுத்தும் ஒரு குறியீட்டு முயற்சியே.

வன்னியில் எத்தகைய இடர்பாடுகள், பொருண்மியச் சிக்கல்கள், வாழ்வியல் நெருக்கடிகளையும் தாண்டி அற்புதமாய் மலரும் வாழ்வைப் போன்ற செயற்பாடு இது. மனம் தளரா முயற்சியில் மஹாகவியின், மீண்டும் தொடங்கும் மிடுக்கு, விவசாயிக்கு ஒப்பானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பிரதேசத்து, நாட்டு வெளியீட்டு முயற்சிகள் மின்னணுத் தொழில்நுட்பத்தில் வளர்ச்சிபெற்று விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே நுட்பமாய் வலைவிரித்து நிற்கும் சூழலில்;

அத்தகைய பிரமாண்டமான முயற்சிகளைப் பார்த்து வாய் பிளந்து, மலைத்து நிற்காமல் தன்னால் ஆன முயற்சியில், வெளி யீட்டுப் பணியில் சத்தியன் இறங்கியுள்ளார்.

எங்கள் முயற்சிகளைவிட மேலான, வேகங்கொண்ட, தீவிர மான பல முயற்சிகள் எழுத்துலகிலும் சரி, வெளியீட்டு முயற்சியிலும் சரி நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் நாங்கள் எங்கள் தளங்களில் இருக்கக்கூடிய வளங்களின் அடிப்படையில் எங்களாலான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்ற தற்துணிவில் சத்தியன் களம் இறங்கியுள்ளார். இது அவரின் நீண்ட பயணத்தில் முதலடியாகும்.

சத்தியன் ஈழநாடு நிறுவனத்தில் பணிபுரிந்தவர். வேகமும் தாகமும் கொண்ட ஒருவராகக் களத்தில் இறங்கிச் செய்திகள் திரட்டுவதில் ஆர்வமும், கட்டுரைகளை எழுதவேண்டும் என்பதில் அக்கறையுடனும் செயற்பட்டவர்.

இத்தகைய செயற்பாடுகளில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். சத்தியனின் இத்தகைய செயற்பாடுகள் மேலும் வளம் பெறவேண்டும்.

தற்போது வன்னியில் செயலூக்கமும், சிந்தனை வீச்சும், தீராத தேடலும் கொண்ட பல இளைஞர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அவர்களின் சகல முயற்சிகளுக்கும் தோன்றாத் துணையாகச் செயற்பட சகலரும் முன்வருதல் வேண்டும்.

சத்தியனின் முயற்சி வெற்றிபெற எனது ஆசிகள்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
"சிதம்பரக் குடில்"
7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
07.12.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கந்தையா ஸ்ரீகணேசன்"

எழுதிய

நிதர்சனத்தின் புத்திரர்கள்

டிசம்பர் 2001

இணுவில் கலை இலக்கிய வட்டம்

வவுனியா கலை இலக்கிய வட்டம்

கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் "நிதர்சனத்தின் புத்திரர்கள்" என்னும் இந்த நாடக நூலுக்கு வெளியீட்டுரை எழுதும் இந்தப் பணி உண்மையில் எனக்கு ஒரு விதமான மனநிறைவினைத் தருகின்றது.

அதற்குக் காரணங்கள் பல உண்டு. நான் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் படித்துக்கொண்டு இருக்கும் காலத்தில் இருந்து எனக்கு ஸ்ரீகணேசனைத் தெரியும். அதைவிட அவர் எனது உறவினர்.

ஆனால் எங்களுக்கான நெருக்கம் 1980களில் நாங்கள் இணுவிலில் தொடங்கிய கலை இலக்கிய இளைஞர் வட்டத்தின் செயற்பாடுகள் மூலமே.

இலக்கிய வட்டத்தில் ஆர்வத்துடன் செயற்பட்ட பல இளைஞர்களில் ஸ்ரீகணேசன் முக்கியமானவர். இவர்களில் பலர் இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் தம் ஆளுமையினை வெளிப்படுத்திக்கொண்டு இருக்கின்றனர் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியது ஆகும்.

நாங்கள் பல்வேறு கருத்தரங்குகளை, விமர்சன அரங்குகளை, நாடக நிகழ்வுகளை நடாத்தி பல்வகைப் பாடங்களைப் படித் துள்ளோம். அவற்றில் கிடைத்த பட்டறிவு இன்றைக்கும் எங்களுக்குத் தோன்றாத்துணையாகத்தான் உள்ளது.

இது தவிர நாங்கள் பல்வேறு விடயங்கள் தொடர் பாக விவாதித்திருக்கின்றோம். அந்த விவாதங்கள் ஆக்கபூர்வ மானவை. தொடர் அடுக்குகளாகி, பல்வேறு வாசல்களைத் திறக்க வைத்து எம்மைப் பட்டை தீட்ட வைத்துள்ளன.

பேராசிரியர் மௌனகுரு, பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயர் என்று நாங்கள் வார விடுமுறைகளில் சந்தித்து ஐயங்களை தெளிவுபடுத்துவோம். காலச் சூழல் அதில் முழுமை பெறமுடியாமல் செய்துவிட்டதே தவிர அவை பிரயோசனமாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வட்டத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் துறைகளில் தங்களைத் தாங்கள் நுட்பமாக ஈடுபடுத்திக் கொண்டனர். சிலர் அதிகமாகவும் வேறுசிலர் ஓரளவாகவும் தங்கள் பதிவுகளைச் செய்துவருகின்றனர். அதில் ஸ்ரீகணேசன் முக்கியமானவர்.

அதிலும் நாடகம், கட்டுரை, கவிதை, விமர்சனம், மொழி பெயர்ப்பு என்று அவரது ஆளுமை விரிவானது. ஆழமானது. அதற்கு அவரது கல்விசார் பின்புலமும் ஒரு காரணம் என்று எண்ணுகின்றேன்.

நான் இணைந்து பணியாற்றிய பல வெளியீடுகளில் ஸ்ரீகணேசன் பல்வேறு ஆக்கங்களை (சிலவேளைகளில் புனைபெயர்களில்) எழுதியுள்ளார் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

பல்வேறு துறைகளில் தன் ஆளுமையை வெளிப்படுத்திய ஸ்ரீகணேசன் நாடகத்தில் நடிகராக, நெறியாளராக, நாடகப்பிரதி எழுதுபவராக பல அவதாரமெடுப்பவர். அவரது நாடக வெற்றிக்கு இந்த பன்முகப்பட்ட ஆர்வமே பிரதான காரணமாகும்.

எந்தப் படைப்பாளியும் சமூகம் சார்ந்தவன். சமூகத்தின் சகல மட்டங்களுடனும் தொடர்புகொண்டு சமூகத்திற்கு ஏற்படும் அவலங்களை தன்னுடையதாகவும் சமூகத்தின் மேல் இறங்கும் சலக பேரிடிகளும் தன் தலைமேல் இறங்குவதாகவும் உணர்ந்து துடிதுடிப்பான்.

அவ்வாறான ஒருவரால் தான் சமூகத்திற்காக கொடுக்குக் கட்டிக்கொண்டு சண்னதமாடமுடியும். ஆடவும், பாடவும், தோழமை கொள்ளவும், கத்தியையோபொல்லையோ தூக்கிக்கொண்டு சண்டை கூட பிடிக்கமுடியும்.

சமூகப் பிரக்ஞை உள்ள எந்தவொரு தனிநபரும் இவ்வாறு இருக்கையில் அவ்வித பிரக்ஞை உள்ள ஒரு கலை இலக்கியப் படைப்பாளி எவ்விதம் இருப்பான் என்பது ஒரு வித்தியாசமான வினாவாக தலைநிமிர முடியாது.

சிறுகதையாளனோ, கவிஞனோ, நாவலாசிரியனோ, இந்தப் பொதுவிதிக்குள் ஈர்க்கப்பட்டவன்தான் என்றாலும் நாடகக்காரன் இவர்கள் எல்லோரையும் விட மிகத் தீவிரமானவன். போர்க்குணம் கொண்டவனாக இருப்பான்.

ஏனையவைகளைவிட நாடகம் வாசகர்களை, பார்வையாளர்களை சட்டென்று வல்லமையுடன் உள்ளீர்த்துக்கொள்கிறது.

பூட்டப்பட்ட, முடிவில்லாக் குழப்பங்கள் நிறைந்த மன அறைக் கதவுகளைத் திறந்து, பார்வையாளர்களை இழுத்துக்கொண்டு போகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியது. கதவுகளைத் திறக்க முடியாவிடில் அதிரடி அதிர்வுகளை, கலக்கங்களை உண்டாக்கக்கூடியது.

பிறகலைகளைவிட கூட்டுக்கலையாக பரிணமிக்கும் நாடகக் கலை அதிலும் குறிப்பாக எங்கள் பாரம்பரியத்தின் தளத்தில் அதன் தொன்மைகளை உள்வாங்கி நவீனத்துவப் பார்வையுடன் புதுமை பெற்றுள்ள சமகாலத்து நாடகங்கள் விரிக்கும் வலையும் விபரிக்கும் களங்களும் அற்புதமானவை.

அந்தவகையில் அவ்வாறான நவீனபார்வையும், வீச்சும், வேகமும் கொண்ட சமூகப் பிரக்ஞை உள்ள படைப்பாளி நாடகக்காரனாக ஸ்ரீகணேசன் காணப்படுகிறார். நாடகக்காரன் படைப்பாளிகளுக்கு உரிய சிறுமைகண்டு பொறி கிளப்பும் குணாம்சம் அவருக்கு உண்டு. அவரது 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' என்னும் இந்த நாடகத் தொகுப்பு அதனையே அழுத்தமாக வெளிப்படுத்துகிறது.

"இந்த மண்ணில் பற்று வைச்சு இஞ்சை நிண்டு வெல்ல உரம் தரத்தான் எங்கட உடுப்பில மண்காவி படிஞ்சிருக்கு" என மண்சுமந்த மேனியர் நாடகத்தில் மதிப்புக்குரிய குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் குறிப்பிடுவது போன்று இந்த மண்ணின் வாசத்தால் ஸ்ரீகணேசன் ஈர்க்கப்படுகின்றார்.

எந்தவிதமான புனைவுகளும் மாறுவேஷங்களும் இல்லாமல் ஸ்ரீகணேசன் தன் கருத்துக்களை கூர்மையாகவும் காத்திரமாகவும் வெளிப்படுத்துகின்றார். இந்த வெளிப்படுத்துகை ஆற்றல் அவரின் படைப்புக்களில் விரவிக்கிடக்கின்றது.

பல படைப்பாளிகளுக்குள்ள இரண்டகத்தன்மை ஸ்ரீகணேசனிடம் இல்லை. அப்படிப் போலவும், இப்படி போலவும் அர்த்தம் பண்ணக்கூடிய பாவனைகளைக் கண்டு பிடிக்கமுடியாது.

'உறுதி' நாடகத்தில் அவர் பாவிக்கும் மகாகவியின் கவிவரிகள்.

"வெள்ளம் வந்து மண்வெட்டி பற்றி
அதோபார் பழையபடி கிண்டுகிறான்.
சேர்ந்தவற்றை முற்றும் சிதற வைக்கும்
வானத்தைப் பார்த்தயர்ந்து நிற்கும் பழக்க மற்றோன்"

இதுவே யதார்த்தமானது. எமது சமகாலச் சூழலில் எமது அரசியல் சமூக பொருளாதார தளத்தில் நாங்கள் அயர்ந்து சோர்ந்து சுருண்டு போய் இருக்கமுடியுமா?

'கவிஞன்' நாடகம் காலத்தின் தேவையினை உணர்த்தும் படைப்பாகும். ஒரு வீரியம் மிக்க கவிதை போலவே ஈர்ப்புள்ள படைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழியில் எத்தினை துயர் சுமந்தோம்
வாழ்வில் எத்தினை நாம் இழந்தோம்
அழவோ விதி எமக்கு ஐயா
வருவது வரினும் என்ன
வாழ்வை நாம் தொடர வேண்டும்
அழுவது வேண்டாம் ஐயா - நாம்
அனைவரும் உழைக்க வேண்டும்"

'தண்ணீரும் கண்ணீரும்' நாடகத்தின் கருப்பொருளாக இருந்தால் என்ன 'ஒண்டு செய்வம்' என்ற தலைப்பைக் கொண்ட நாடகமாக இருந்தால் என்ன எல்லாமே பிரச்சினைகளைக் கேள்விக்கு உட்படுத்துகின்றன. நியாயத்தின் பக்கம் சேர்ந்து போராடத் தூண்டுகின்றன.

இதுவே இந்த நாடகத் தொகுதியின் உள்ளார்ந்த வெளிப்பாடு 'இதுவே இந்த வெளியீட்டின் சிறப்பும் ஆகும்.

"எங்கள் எதிர் காலத்தில்
எங்களுக்கு சந்தேகமில்லை
நாங்கள் நிதர்சனத்தின் புத்திரர்கள்.
திடசங்கர்ப்பம் பூண்ட
எங்கள் இதயம் எதையும் வெல்லும்"

என 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' நாடகத்தில் பாவிக்கப்படும் கவிஞர் சுபத்திரனின் வரிகள் அதனையே சுட்டிநிற்கின்றன.

இணுவில் கலை, இலக்கிய வட்டத்தின் மூன்றாவது வெளி யீடாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்துடன் இணைந்து இந்த நேரத்தில் இந்த நூல் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கலை, இலக்கிய வட்ட நண்பர்களான துரை எங்கரசு, நாக, சிவசிதம்பரம், ந.ஞானசூரியர், த. சிவகுமாரன் போன்றோர் இப்போதும் அந்த வட்டத்தினை செயல்படுத்தி வருகின்றனர். அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
"சிதம்பரக் குடில்"
7ம் வட்டார்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
29.07.2001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"க. இரத்தினசிங்கம்"

எழுதிய

மண்ணின் வேர்கள்

ஒக்ரோபர் 2006

கிளிநொச்சி மாவட்ட கலை பண்பாட்டுப்

பேரவை

தமிழ் மாவட்டங்களிலேயே கிளிநொச்சி மாவட்டத்திற்கு சிறப்பான இடம் உண்டு. பிரதான சாலைக்கு வழிவிட்டுக்கொண்டு நீண்டு பரந்து இருப்பது மாத்திரம் அதன் காரணமல்ல.

தமிழ் மக்களுக்கு உரிய பாரம்பரியக் குணாம்சமாக வந்தோரை வாழ்த்தி வரவேற்று உபசரிக்கும் பண்பைச் சொல்வார்கள். ஆனால் கிளிநொச்சியானது வரவேற்பதுடன் மாத்திரம் நில்லாது வந்தவர்களை வாழ வைக்கும் மாண்பும் கொண்டதாகும்.

தொன்மைமிகு கிளிநொச்சி மண்வளத்தாலும் குளங்களின் சிறப்பாலும் எங்கள் தாயகத்தின் உணவுக்களஞ்சியமாக இருக்கின்ற காரணத்தால் சகல பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து வந்தோரையும் வருவோரையும் இப்போதும் பாதுகாத்து வருகின்றது.

இத்தகைய மண்ணுக்குரிய பெருமை அந்த மண்ணில் வாழ்கின்ற மக்களால் அவர்களின் பண்பாட்டு விழுமியங்களால் மேன்மையுறுகின்றது.

வன்னி வளநாடு எனப் போற்றப்படுகின்ற வன்னிப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகிய கிளிநொச்சி ஒரு காலத்தில் கல்வி, பொருண்மியச் சூழல் காரணங்களால் ஏனைய பகுதிகளைவிட சற்றுப்பின் நிலையில் இருந்தாலும் பாரம்பரியத்திலும் பண்பாட்டிலும் வாழ்க்கை முறையிலும் ஏனைய பகுதிகளையும்விட முன் நிலையில் நின்றது. நிற்கின்றது. என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த அடிப்படையிலேயே இவ்வாறான புறச் சூழல்களின் மொத்த வடிவமாக அல்லது இத்தகையோரின் ஒரு முன்னிலைப் பிரதிநிதியாக நாங்கள் க. இரத்தினசிங்கம் அவர்களைப் பார்க்கவேண்டும்.

அவருடைய சிறப்பு அவருடைய நடத்தையால், செயற்பாட்டால் வருகின்றது. அவர் ஒரு முதன்மைமிகு பத்திரிகையாளரோ, கவிஞரோ, எழுத்தாளரோ அல்ல. ஆனால் அவர் ஒரு பத்திரிகையாளர், கவிஞர், எழுத்தாளர்.

புறச்சூழல்களின் தாக்கங்களால் நிர்ணயிக்கப்படும் வன்னியின் வாழ்க்கைமுறைகளால் அவர் அடியுண்டு போகாமல் அவற்றினை எதிர்கொண்டு இன்றுவரை தன்னால் ஆன கலை இலக்கிய பத்திரிகைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார் என்றால் அது உயர்வுமிக்கது. முன்மாதிரியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே படைப்புந்தல் மிக்கவர் அல்ல தான்போகும் ஒன்றைத் தடநாருருவிகள் ஏனைய முள்ளுச் செடிகள் கொழுவி இழுக்கும் பாதை-வழியே தன் சகபாடிகளை தோழர்களை நாருருவிகள் முள்ளுச்செடிகள் கொழுவி இழுக்காமல் அழைத்துச்செல்ல வேண்டும் என்ற தீவிரமான மனப்பாங்குமிக்கவர்.

இன்றைக்கும் அவர் எத்தனை கிலோமீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் படைப்பாளிகளாக இருந்தால் என்ன அவர்கள் சம்பந்தப்பட்ட விழாக்களாக இருந்தால் என்ன அழைப்பு வந்தால் என்ன? வராவிட்டால் என்ன? அவர் முதல் ஆளாய் நிற்பார்.

ஏனைய படைப்பாளிகளை சந்திப்பதும் உரையாடுவதும் அவர்களுடைய நூல்களை விற்று துணைபுரிவதில் ஆகட்டும், அவர்கள் எழுதிப்படைத்த நூல்களின் விமர்சனங்களை ஏனையவர்களைக் கொண்டு எழுதி வேண்டி பத்திரிகைகளுக்கு அனுப்பி பிரசுரிப்பதில் காட்டும் அக்கறையில் அவருக்கு நிகர் அவர்தான்.

வன்னியூர்க் கவிராயர் என்று அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்த கவிஞர் அவர்களின் நூல் வெளியீட்டுக்கு எழுபத்து நாலு களில் உதவிபுரிந்த கொடையாளர்களில் ஒருவராக க. இரத்தினசிங்கம் அவர்கள் இருந்துள்ளார் என்பதை தன் நூலின் முன்னுரையில் வன்னியூர்க் கவிராயர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அடிப்படை மன இயல்புகளின் காரணத்தாலே தான் தனது ஏனைய பத்திரிகைத்துறை அனுபவங்களை வைத்துக்கொண்டு அவர் வன்னியின் மைந்தர்களை வன்னியில் வந்து வாழ்வமைத்த கலை இலக்கியப் படைப்பாளிகளை நேர்காணல் செய்து பத்திரிகைகளில் வெளியிட்டார். அவற்றினை தொகுத்து இப்போது நூலாக்கி உள்ளார்.

வெளியீட்டுத்துறைக்கு கணினி அறிமுகமான பின்னர் அது வும் வெளியீட்டு முயற்சிகளில் புலம்பெயர் படைப்பாளிகள் ஈடுபடத் தொடங்கிய பின்னர் பெருந்தொகையாக நூல் வெளியீடுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எனவே இரத்தினசிங்கம் அவர் களின் நூலையும் பத்தோடு பதினொன்றாகக் கணிக்கமுடியாது. ஏனெ னில் எத்தகைய பெறுமதிமிக்க வெளிநாட்டுப் பழங்கள் இருந் தாலும் வன்னிக்காடுகளில் கிடைக்கும் பாலைப்பழம் போன்றது இது.

பல்வேறு நேர்காணல் நூல்கள் எம் மத்தியில் வந்துள்ளன. விரி வும் ஆழமும் கொண்ட அவை பல்வேறு கலை, இலக்கிய சமூகப் படைப் பாளிகளின் பன்முக அனுபவங்களை கருத்துக் குவியல்களை விவாத முன்னீடு களைக் கொண்டு சிறப்புப் பெறுகின்றன.

சுருக்கமாகக் கூறினால் பல்வேறு பாண்டித்தியங்களைக் கொண்ட சங்கீத வித்துவான் நடாத்தும் சங்கீத சமர்களை ஒத்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை. ஆனால் பின் மாலைப்பொழுதில் பறவைகள் மெல்லிசை இசைத்தபடி கூடுகளை நோக்கிச் செல்லும் வேளையில் மாட்டுவண்டி கள் மணல் வலிந்த பாதை வழியே மணியோசை இட்டபடி செல்லும் வேலை முடித்த திருப்தியிலும் களைப்பிலும் "காயாத கானகத்தே நின்றுலவும் காரிகையே" என்று பழைய கூத்துப் பாட்டினை மெய்மறந்து பாடிச் செல்வாரே ஒருவர் அந்த இசைக்கும் அதுதரும் ஈர்ப்புக்கும் நிகர் ஏது. அப்படியான ஒரு நிறைவினை தருவதுதான் இரத்தினசிங்கம் அவர் களின் முயற்சி.

கலை, இலக்கியப் படைப்பாளிகளையும் சமூகவியலாளர்களை யும் அவர் நேர்முகம் கண்டு உள்ளார். கிளிநொச்சி மண்ணின் மைந்தனான கலை, இலக்கியப் படைப்பாளி நா. யோகேந்திரநாதன் அவர்கள் தொடக்கம் கிளிநொச்சியில் தற்போது வாழ்ந்துவரும் சிறப்புமிகு எழுத்தா ளரான ஆதிலட்சுமி சிவகுமார் வரை அவர் நேர்முகம் செய்து திருப்தி அடைந்துள்ளார்.

அவ்வாறே மண்ணின் மைந்தரான கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் அவர்களின் சிறப்பினையும் கிளிநொச்சியின் மூத்த கிராம சேவையாளரான ஆழ்வார் மார்க்கண்டு (அண்மையில் மறைந்துவிட்டார்) அவர்களையும் எமக்கு அறிமுகப்படுத்துகின்றார்.

கிளிநொச்சியிலே இப்போது பல்வேறு திசைகளில் இருந்து பறந்து வந்த பல வர்ணங்களையும் குணாம்சங்களையும் கொண்ட பறவைகள்போல படைப்பாளிகள் ஊடகக்காரர்களும் வேறு கலை, இலக்கிய முயற்சியில் உள்ளவர்களும் உள்ளனர்.

எந்தக் காலம் அல்லது சூழ்நிலை அவர்களை இங்கு கொண்டு வந்து சேர்த்ததோ அதுவே அவர்களை இங்கிருந்த கிளப்பவும் செய்துவிடும். எனினும்,

கவிஞர் அநாமிகன் அவர்களின் வரிகளில் சொல்வதென்றால்,

வரிந்த மூக்கோடும்
அடர்ந்த புருவத்தோடும்
நரைதுருத்திய தாடியோடும்
இருள் அப்பிய களிம்பு முகத்தோடும்
உங்களின் தெருக்களில் மீண்டும் வருவேன்
பூபாளம் பாடிய படி.

என்ற மாதிரியான தன்மையுள்ளவர் க. இரத்தினசிங்கம் அவருடைய சிறப்பும் எழுச்சியும் கூட அதுவே.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்,
கரைச்சி பிரதேச செலயகம்,
11.08.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















பார்போற்ற வைத்தவரே வாழ்க பல்லாண்டு?.
சீராறும் பெருந்துறையில்சிந்தை தெளிந்தோன்
பார் போற்றுமெங்கள் பாசபெருந்தகையோன்
ஊர் விட்டு வந்திருந்து எங்கள் உள்ளம் திருத்தி
சீர் சொல்லி சிந்தை தெளிவித்து
பார்! இதுதானுன் வழி என்று காட்டி பாசமும் காட்டி பரிவு காட்டி
தேரேற்றி எங்கள் திருவை ஊரெல்லாம்
பார்போற்ற வைத்தவரே வாழ்க பல்லாண்டு

செம்மொழியை எங்கள் தமிழ்மொழியை
சீர் பெற வைக்கவேண்டுமென்றுங்கள்
சிந்தைக்கு உகந்ததொரு தீர்வெடுத்து வந்தீர்கள்
வந்திருந்து வாழ்ந்தீர்கள் வரலாற்று வாழ்வுதனை
எந்தவொரு பிசிறின்றி எழுத்துக்கணக்காக
வாழ்ந்தவர்கள் நாங்கள் என்றிருக்க வேண்டும்
என்றுரைத்த நீங்கள்– எந்நாளும்
என்றுமிருக்க வேண்டும் அண்ணை?

இன்றைக்கும் நாங்கள் பல்திக்கும் சென்றோம் தான் ஆனாலும்
அன்றைக்கும் போல வாழ்ந்த நினைவுகளை
என்றைக்கும் நினைக்கும்படியாக வாழ்வுகொடுத்திருக்கு
'இந்தக்குளத்தில் கல்லெறிந்தோர்' எத்தனை பேர் என்று
கணக்கிட்டுக் கொண்டிருக்கும் உம்மனதை
எந்தவொரு வெயிற்பொழுது தாண்டிப்பிடித்தீர்கள்
என்றுங்கள் எழுத்தில் பதியுங்கள் உம்
அன்பு மழைச்சாரலில் நனைந்தபடி வாழ்த்துகின்றோம்?.!
என்றும் உங்கள் பாசத்துக்குரியவர்கள் நாங்கள்??!

எழு கலை இலக்கியப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org